# பெரியார் - அம்பேத்கர் நட்புறவு

**ஒரு வரலாறு**

தொகுப்பாசிரியர் : **கி.வீரமணி**



தந்தை பெரியார் நடத்திய 'குடிஅரசு' - 'விடுதலை' ஏடுகளில் டாக்டர் அம்பேத்கர் பற்றிய செய்திகள், குறிப்புகள், அறிக்கைகள், கட்டுரைகள், தந்தை பெரியாரின் உரைகள்

# பெரியார்-அம்பேத்கர் நட்புறவு

## ஒரு வரலாறு

பெரியார் நடத்திய 'குடிஅரசு' - 'விடுதலை' ஏடுகளில்
டாக்டர் அம்பேத்கர் பற்றிய செய்திகள், குறிப்புகள்,
அறிக்கைகள், கட்டுரைகள், தந்தை பெரியாரின் உரைகள்

தொகுப்பாசிரியர் :
**கி.வீரமணி**

**திராவிடர் கழக (இயக்க) வெளியீடு**
பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி. சம்பத் சாலை,
வேப்பேரி, சென்னை - 600 007.

# நூல் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | **பெரியார் - அம்பேத்கர் நட்புறவு**<br>ஒரு வரலாறு |
| தொகுப்பாசிரியர் | : | கி.வீரமணி |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு : 7 ஜனவரி, 2020<br>இரண்டாம் பதிப்பு : 21 ஜனவரி, 2020 |
| நூல் அளவு | : | டெம்மி (140 mm x 220 mm) |
| அச்சு எழுத்து அளவு | : | 12 points |
| பக்கங்கள் | : | 288 |
| கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| நன்கொடை (குறைந்த அளவு) | : | ரூ.220/- |
| வெளியீடு மற்றும் உரிமை | : | **திராவிடர் கழக (இயக்க) வெளியீடு**<br>சென்னை - 600 007. ☎: 044 - 2661 8161 |
| அச்சிட்டோர் | : | 'விடுதலை' ஆஃப்செட் பிரிண்டர்ஸ்,<br>சென்னை - 600 007. |
| கிடைக்குமிடங்கள் | : | பெரியார் புத்தக நிலையம்<br>● பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி. சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை -600 007. ☎: 044-26618163<br>● பெரியார் மாளிகை, புத்தூர், திருச்சி-620 017 ☎: 0431-2771815<br>www.dravidianbookhouse.com |

# பதிப்புரை

தந்தை பெரியாருக்கும், அண்ணல் டாக்டர் அம்பேத்கருக்கும் ஏற்பட்ட உறவு - நட்புக்கும் மேலான லட்சியப் பூர்வமான கொள்கை உறவாகும்.

ஒருவரை ஒருவர் நேரில் சந்தித்துப் பேசி பழகுமுன்பே, முகிழ்த்த கொள்கை லட்சிய நட்புறவு!

1924 இல் வைக்கத்தில், கீழ்ஜாதியர் - ஈழவர் - வைக்கத்தப்பன் கோவில் உள்ளது. அந்த கோயிலைச் சுற்றியுள்ள முக்கிய வீதிகளில் நடமாட முடியாது என்ற சமூக அநீதியை - மனித உரிமைப் பறிப்பை, எதிர்த்துத் தொடங்கப்பட்ட சத்தியாகிரக அறப்போரை நடத்தியவர்கள் - கைது செய்யப்பட்ட நிலையில், போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த முடியாத நிலை ஏற்பட்டது.

அதனால் போராட்டத்தைத் தொடங்கி சிறையில் அடைக்கப்பட்டவர்கள் சார்பில், அதன் அமைப்பாளர் ஜார்ஜ் ஜோசப் அவர்கள் ஒரு கடிதம் எழுதினார் - தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவரான தந்தை பெரியார் அவர்களுக்கு.

அதனைப் படித்து, வைக்கம் விரைந்து, சத்தியாகிரகத்திற்குத் தலைமை தாங்கி, தொடர்ந்து அறப்போரை தொடங்கினார்; ஏராளமானவர்களை தனது பேச்சாற்றலாலும், செயல் திறத்தாலும் ஒன்று திரட்டி, வைக்கம் சத்தியாகிரகம் ஒரு மனித உரிமைப் போராட்டம் என்பதை தனது இரண்டு முறை சிறைத்தண்டனை மூலம் வரலாற்றில் பதிய வைத்தார்; “வைக்கம் வீரர்” என்று திரு.வி.க.வால் பாராட்டப்பட்டார் தந்தை பெரியார். தெருக்கள் இதன் காரணமாகத் திறந்துவிடப்பட்டன.



அப்போராட்டத்திற்கு திருவிதாங்கூர் சமஸ்தானம் சென்று நடத்திட தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தந்தை பெரியார் ஈ.வெ. ராமசாமி முனைந்ததை, வர்ணாசிரமத்தில் நம்பிக்கை உள்ள காந்தியார் விரும்பவில்லை; 'இது அங்குள்ளோர் தீர்த்துக் கொள்ளவேண்டிய ஒரு பிரச்சினை' என்பது போன்ற கருத்தோட்டத்தை காந்தியார் தொடக்க நாளில் கொண்டிருந்தார். அந்தக் கருத்தையொட்டி அவர் தந்தை பெரியாருக்கு எழுதிய கடிதத்திற்கு, காந்தியாரின் அணுக்கத் தொண்டன் என்ற முறையில் அவருக்கு மரியாதை கலந்த முறையில் எழுதிய பதில் கடிதத்தில் – "காந்திஜி அவர்களே, இங்கே அதே தெருக்களில் நாயும், கழுதையும், பன்றியும் அலைந்து திரிகின்றன – நடமாடுகின்றன. அவை என்ன சத்தியாக்கிரகம் செய்தா அந்த உரிமையைப் பெற்றன? ஆனால், ஆறறிவு படைத்த நம் ஈழவ – இழிஜாதி சகோதரர்களுக்கு அந்த உரிமை கிடைப்பதற்கு அமைதி வழியில் அறப்போர் – சத்தியாக்கிரகம் செய்வதில் என்ன தவறு என்று எனக்குப் புரியவில்லை" என்று எழுதினார் தந்தை பெரியார்.

களத்தில் இறங்கி தன் கடமையை ஆற்றினார்; தான் மட்டுமல்ல, தனது வாழ்விணையர் அன்னை ஈ.வெ.ரா.நாகம்மையார், தனது தங்கை எஸ்.ஆர்.கண்ணம்மாள் மற்றும் தாய்மார்களையும், தனது தொண்டர்கள், தோழர்களையும் ஈடுபடுத்தினார். ஓராண்டுக்குமேல் நடந்த அறப்போராட்டம், அந்த அரசர் இறப்புக்குப் பின் பொறுப்பேற்ற ராணியார் காலத்தில் வெற்றியுடன் முடிவுக்கு வந்தது; தெருக்கள் திறக்கப்பட்டன! சமூக உரிமை, மனித உரிமை மீட்டெடுக்கப்பட்டது!

அந்தக் காலகட்டத்தில் மராத்திய மண்ணுக்கு – மேல்நாட்டுப் படிப்பை முடித்துத் திரும்பிய அண்ணல் அம்பேத்கர் அவர்கள், "**குரலற்றவர்களின் குரல் (அ) ஊமையர்களின் குரல்**" என்ற பொருளில் வந்த மராத்திய ஏடான "மூக்கநாயக்" என்ற ஏட்டில் மராத்தியத்திலிருந்தே இந்த வைக்கம் சத்தியாக்கிரகத்தை வரவேற்றுப் பாராட்டித் தலையங்கம் எழுதினார்!

அதை டாக்டர் அம்பேத்கரின் வாழ்க்கை வரலாற்றை சிறப்பாக எழுதிய தனஞ்செய்கீர் அவர்கள் பதிவு செய்திருக்கிறார்!

"But the most outstanding event of the year concerning the struggle of the Depressed Classes was the satyagraha or the passive resistance sponsored by Ramaswami Naicker, a non Brahmin leader,

at Vaikam in the Travancore State for vindicating the rights of the Untouchables to use a certain road to which they were forbidden entry. Its moral pressure and the spirit of righteous assertion had a tremendous effect, and the orthodox Hindus, for a while, regained their civic sense and sanity, and the road was thrown open to the Untoucables.

Another incident took place at this time. It shook both sensible touchables and self-respecting Untouchables. In March 1926 an Untouchable by name Murgesan entered a Hindu temple in Madras despite the customary ban on the Untouchables. He was discovered, arrested and convicted on a charge of defiling the Hindu temple.

Ambedkar was watching these developments very carefully He referred to the Vaikam struggle, a few months later, very touchingly in one of his editorials, on the eve of the Mahad satyagraha. These were notable events. Coming events cast their shadows before!''

மகத் சத்தியாக்கிரகத்திற்கு வைக்கம் சத்தியாக்கிரகம் முன்னோடியாக மட்டுமல்ல - வழிகாட்டியாகவும் திகழ்ந்தது.

‘‘அண்ணல் அம்பேத்கர் மகத் சத்தியாக்கிரகம் ஒரு சமூகப் புரட்சியை ஏற்படுத்த தந்தை பெரியாரின் வைக்கம் சத்தியாக்கிரகம் ஒரு முன்னோட்டம் செயல் ஊக்கியாக - சிந்தனை என்ற உலைக் கூடத்தில் செயல் வடிவமெடுக்கப் பெரிதும் துணை நின்றது!

மூக்கநாயக்’ பத்திரிகையில் அம்பேத்கர் எழுதிய தலையங்கம் - மராத்திய மொழியில் இருந்ததால், அதுபற்றிய தகவல்கூட தந்தை பெரியாரை எட்டியிருக்கக் கூடிய வாய்ப்பில்லை என்றாலும், கொள்கைப்பூர்வ நட்புறவு எந்தளவு வளர்ந்து கொண்டு வந்தது என்பதற்கு எடுத்துக்காட்டாக அம்பேத்கர் பற்றிய செய்திகளை தனது குடிஅரசு’ வார ஏட்டில் வெளியிட்டுக் கொண்டே இருந்தார்!

கொள்கையால் கொண்ட உறவு வளர்ந்தோங்கியே வந்துள்ளது என்பதற்கான தரவுகளைத் திரட்டித் தந்துள்ளோம்.

1936 ஆம் ஆண்டு லாகூரில் நடைபெற்ற **‘ஜாட்-பட்-தோடக் மண்டல்’** என்ற ஜாதி மறுப்பு சங்கத்தின் மாநாட்டிற்குத் தலைமை தாங்கிட, அந்த



சங்கத்தில் உள்ள சிலரின் எதிர்ப்பையும் மீறி அம்பேத்கர் அவர்களைத் தலைமை தாங்கிட அழைத்தனர்.

டாக்டர் அம்பேத்கர் அந்த அழைப்பினை ஏற்றார்; அவரது ஜாதி - தீண்டாமை ஒழிப்பு - ஒரு அறுவை சிகிச்சை நிபுணரின் அணுகுமுறையாகவே இருக்கும்; ஏதோ புண்ணுக்குப் புணுகு பூசும் வகையில் ஒருபோதும் இருக்காது என்பதை மோப்பம்' பிடித்த உயர்ஜாதி இந்துக்களானவர்கள் (அக்குழுவில் இடம்பெற்றவர்களில் சிலர்) டாக்டரிடம் ஒரு தந்திரத்தைக் கையாண்டு, உங்கள் உரையை அச்சிட்டு நூலாக வெளியிடவிருக்கிறோம்; எனவே, நீங்கள் நிகழ்த்தப் போகும் தலைமை உரையை முன்கூட்டியே எங்களுக்கு அனுப்புங்கள்'' என்று கேட்டனர்; வெள்ளை உள்ளம் கொண்ட டாக்டர் அம்பேத்கரும் அவ்வாறே அவ்வுரையை அனுப்பி வைத்தார்!

அதில், இந்து மதத்தை, பார்ப்பனீயத்தை, கீதை போன்ற மத நூல்களைத் தாக்கிக் கண்டனம் செய்யும் பகுதிகளை நீக்கிவிடுமாறு கேட்டனர். டாக்டர் அம்பேத்கர் மறுத்துவிட்டார்!

அவர்களது தன்மையை - அவர்களைப் பற்றிய உண்மையை டாக்டர் அம்பேத்கர் உணர்ந்து புரிந்துகொண்டார்; ``எனது உரையில் ``எந்த மாற்றத்தைச் செய்தாலும், நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன்'' என்று திட்டவட்டமாகக் கூறி, உரையின் நகலை திருப்பி அனுப்பி வைக்கச் சொன்னார்! அவ்வுரையை ஜாதியை ஒழிக்க வழி!'' எனத் தலைப்பிட்டு 'Anihilation of caste' என்ற நூலாக பிறகு, ஆங்கிலத்தில் வெளியிட்டார்.

அதை அறிந்த தந்தை பெரியார், அந்நூலை தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டுப் பரப்ப அவரிடத்தில் அனுமதி பெற்று, **1936 ஆம் ஆண்டிலேயே ``ஜாதியை ஒழிக்க வழி!'' என்ற தலைப்பில் 'குடிஅரசு' பதிப்பகம் சார்பில் முதன்முதலில் வெளியிட்டார்!**

டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் அந்த உரை ஆங்கிலம் தவிர மற்ற மொழிகளில் வெளிவந்ததில் முதலாவது தமிழில் தந்தை பெரியார் வெளியிட்ட **``ஜாதியை ஒழிக்க வழி!''** தமிழ் நூல்தான் என்பது பெருமைக்குரிய செய்தி மட்டுமல்ல; பலரும் அறிந்திராத செய்தியுமாகும்.

மிகப் படித்த அறிவுலகத்தவர் மட்டுமே அறிந்திருந்த புரட்சியாளர் அம்பேத்கர் பெயர் தமிழகத்தில் பிரபலமாவதற்கு இந்த நூலே ஒரு முரசொலித்த முதல் நூலாகும்!

தந்தை பெரியார் - டாக்டர் அம்பேத்கர் கொள்கை உறவு அதற்கு முன்பே சில பல சுயமரியாதை இயக்கக் கொள்கைபூர்வ நடவடிக்கைகள்மூலம் வளர்ந்து வந்திருந்தது என்பதற்கு இடையில் பல நிகழ்வுகளை தந்தை பெரியாரின் பச்சை அட்டைக் குடிஅரசு' தெளிவாகப் பதிவு செய்துள்ளதன் மூலம் எவரும் புரிந்துகொள்ள இயலும்!

பார்ப்பனர்களும் மற்ற உயர்ஜாதி படித்த கூட்டமும் டாக்டர் அம்பேத்கரின் பெயரை இருட்டடித்த காலகட்டத்தில் தென்னாட்டில் டாக்டர் அம்பேத்கர் வரவேற்கப்பட்டார் - தந்தை பெரியாரின் இதுபோன்ற நடவடிக்கைகள்மூலம்!

சகப் போராளிகளை அடையாளம் கண்டு, அவர்களை திராவிட மக்களுக்குள் பிரபலப்படுத்த தந்தை பெரியார் தயங்கியதே இல்லை!

1929 ஆம் ஆண்டு செங்கற்பட்டில் நடைபெற்ற முதல் சுயமரியாதை மாநாட்டின் காலத்தில், மராத்தியில் சுயமரியாதை மாநாடு நடக்கிறது பம்பாயில் - நாசிக்கில். பரஸ்பர வாழ்த்துகள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. நீதிக்கட்சி ஆட்சியின் கொள்கை சிறப்புகளை உணர்ந்த அவ்வாட்சியின் பலவீனம்பற்றி தந்தை பெரியாருக்கு என்ன கருத்தோ அதே கருத்துதான் டாக்டர் அம்பேத்கரின் கருத்தாகவும் இருந்தது. மனதிற்பட்டதை ஒளிக்காமல், மறைக்காமல் திறந்த மனதோடு எடுத்துச் சொல்பவர்கள் இந்த இரண்டு சமூகப் புரட்சியாளர்களும்!

> இந்து மதம் என்பது ஜாதி, வருணாசிரமம் என்ற பேதத்தின்மீதே கட்டப்பட்ட - சனாதன மதமே! நீங்கள் (தாழ்த்தப்பட்டவர்கள்) தீண்டத்தகாதவராகவும், சமமற்றவராகவும்' நடத்தப்படுவதற்கு ஏதாவது காரணம் இருக்குமானால், அது நீங்கள் இந்துவாக இருப்பதனால் மட்டுமே என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்!'' - இதே கருத்துதான் தந்தை பெரியாருக்கும்.

அதுபோலவே, காந்தியாரின் வர்ணாசிரம பிடிப்புப்பற்றி டாக்டர் அம்பேத்கர் மிக அழகாகப் படம் பிடித்தார்!



வர்ணாசிரமக் கொள்கையை தன்னால் கைவிட முடியாது; தேவையுமில்லை என்று காந்தியார் உறுதியாய் நின்றார். எனவேதான், காந்தியை எதிர்ப்பதுதான் சரியான வழி - ஜாதியை, தீண்டாமையை ஒழிப்பதற்கு வேறு வழி கிடையாது'' என்று திட்டவட்டமாக எழுதினார்.

**(காந்தி - ரானடே நூலில்)**

'அரிஜன்' என்ற பெயரை ஒருபோதும் தந்தை பெரியாரோ, டாக்டர் அம்பேத்கரோ ஏற்றுக்கொண்டதே கிடையாது.

ஜாதி, தீண்டாமை ஒழிப்புக்கு முக்கியமானது பார்ப்பனீய ஒழிப்பு என்பதில் இருவருக்குமே ஒரே நோக்குதான்!

சமத்துவத்திற்காகப் போராடி, அதற்கு எதிராக உள்ள அத்துணைத் தடைகளையும் ஒழிக்கவேண்டும் என்கின்ற சமத்துவப் போரில் - பார்ப்பனீய எதிர்ப்பு - அழிப்பு என்பது தேவையானது - நோயின் மூலமும் அதுதானே!

பார்ப்பனீயமும் எவ்வளவு கொடுமையானது என்பதை **''காந்தியும், காங்கிரசும் தீண்டப்படாத மக்களுக்குச் செய்ததென்ன?''** என்ற நூலில் மிகவும் அறிவியல்பூர்வமாக டாக்டர் அம்பேத்கர் எழுதுகிறார்.

ஆறு அம்சங்களானது பார்ப்பனீயம்

1. பல ஜாதியினரிடையே படிக்கட்டு ஜாதி முறையாக ஒருவர் கீழ் மற்றொருவர் என்று சமத்துவமின்மையில்கூட படி நிலை உருவாக்கம் - தந்திரம் - சூழ்ச்சி (Graded inequality)

2. சூத்திரர்கள், தீண்டாதார்கள்மீது எந்த ஆயுதங்களையும் பிரயோகப்படுத்தத் தயங்காத நிலை.

3. அறவே கல்வி அறிவு இவ்விரு பிரிவினர்களுக்கும் மறுக்கப்பட காரணமாகவும், தடை செய்யும் அதிகாரம் வாய்ந்த, சக்தி வாய்ந்தவர்களால் தடை.

4. பெரும் பதவிகளில் சூத்திரர்களோ, தீண்டத்தகாதவர்களோ அமர முடியாதவாறு தடை.

5. எந்த சொத்தும் அடிமைகளான சூத்திரர்களோ, தீண்டத்தகாதவர்களோ வாங்கும் உரிமைத் தடை

6. பெண்களை அடிமைகளாக்கும் தன்மை!

மனிதத் தன்மையை - மனித உரிமையை அழித்த ஆதிக்கச் சின்னம் பார்ப்பனீயம் என்பதற்கு இரண்டு பழைய நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டுகிறார் (தனது, காந்தியும், காங்கிரசும் தீண்டாத மக்களுக்குச் செய்ததென்ன?'' நூலில்).

1. கேரளத்தில் முன்பு, மண முடித்த கீழ்ஜாதி பெண்களின் முதலிரவுக்கு உயர்ஜாதி பார்ப்பனர்கள் உரிமை கொண்டாடி, நடத்திய அநாகரிகக் கொடுமை.

2. வங்காளத்தில் ஒவ்வொரு நாளும் உயர்ஜாதி பார்ப்பனர்களின் காலைக் கழுவிய தண்ணீரைப் பருகிய பிறகே தங்கள் பணியைத் தொடங்கிய கொடுமை!

தந்தை பெரியாரும் இதுபோன்ற பல நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டி, அடிமைகளே இதனை மனமுவந்து' செய்து மோட்சத்திற்கு வழி இது என்று நம்பிய கொடுமை இது!'' என்றார் - பற்பல மேடைகளில்!

வகுப்புரிமை - சமூகநீதி - இட ஒதுக்கீடு எல்லாவற்றிலும் இருவருடைய கருத்தும், செயற்பாடும் ஒரே வகைதான்!

மனுஸ்மிருதியை எதிர்த்து எரித்தது; அரசமைப்புச் சட்டம், ஜாதியைப் பாதுகாக்கும் தன்மைக்காக அதனை எரித்தது.

எரிப்பேன் என்று முன்பே முழங்கினார் டாக்டர் அம்பேத்கர் - அதன் சூழ்ச்சியை உணர்த்தினார்.

இதுபோல பலவும் தகுந்த சான்றுகள், தரவுகளுடன் எப்படி பற்பல அணுகுமுறைகளில் ஒரே வகையாக இந்த இருபெரும் புரட்சியாளர்களும் சிந்தித்தார்கள்; செயல்பட்டார்கள் என்பதை விளக்குவதாக அடுத்து இதன் தொடர்ச்சிபோல் வெளிவரவிருக்கிறது - (தொகுதி இரண்டு).

ஒருமுனை - இரண்டு புரட்சியாளர்கள் என்ற கருத்தோட்ட நூல் அமைந்துள்ளது!

இருவருடைய திட்டங்கள் பெரிதும் ஒத்த கருத்தும், அணுகுமுறையும் கொண்டவையே!

சமத்துவத்திற்கான சமர் புரிந்துள்ள இந்த இருபெரும் தலைவர்கள் தாங்கள் வாழ்ந்த காலத்தில் பெரிதும் தூற்றப்பட்டவர்கள் - இருட்டடிப்புச் செய்ய நினைத்து, இன எதிரிகள் ஏமாந்தனர்.



இங்குள்ள சிலர் (குறிப்பாக மேனாள் ஆளுநரும், அரசு தலைமைச் செயலாளருமான திரு.ஏ.பத்மநாபன் அய்.ஏ.எஸ். (மாணவப் பருவத்தில்) உள்பட சிலர்) அண்ணல் அம்பேத்கரை சந்தித்தபோது, பெரியார் ஈ.வெ.ரா.வின் வழியைப் பின்பற்றுங்கள்'' என்று கூறியவர் அண்ணல் அம்பேத்கர். (திரு.ஏ.பத்மநாபன் அவர்களின் பேட்டி, 2002, டிசம்பர் 1-15, உண்மை' இதழ்).

சேலம் (1944) மாநாட்டினைத் தொடர்ந்து பெரியாருக்கு எதிராக மேனாள் நீதிக்கட்சித் தலைவர்கள் அம்பேத்கர் அவர்களை விருந்துக்கு அழைத்து, பெரியாரின் முடிவைக் குறித்து குறை சொன்னபோது, பெரியாரைப் பின்பற்றுங்கள்'' என்று அறிவுரை கூறினார்.

இதனை சோறு போட்டு உதை வாங்கிய கதை'' என்று 'குடிஅரசு' இதழ் (30.9.1944) வர்ணித்தது!'

தந்தை பெரியாரைப் பொருத்தவரை அவர் அதிகமான தடவை சந்தித்து கலந்து உரையாடிய தேசியத் தலைவர் ஒருவர் உண்டென்றால், அது பாபா சாகேப் அண்ணல் அம்பேத்கர் அவர்களேயாவார்.

இப்படி பல செய்திகள் அடுத்த தொகுதியில் இடம்பெறுகிறது.

**கி.வீரமணி**

28.12.2019 தொகுப்பாசிரியர்

# ஜாதியை ஒழிக்க வழி.

இப்புத்தகம் தோழர் அம்பேத்கார் அவர்களின் ஆங்கில நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு. இப்புத்தகத்தில் ஜாதி ஒழிப்பு மார்க்கங்களும், ஜாதியினால் விளையும் தீமைகளும், உயர் ஜாதிக்காரர் என்பவர்கள் தாழ்ந்த ஜாதியார் என்பவர்களுக்கு இழைத்துவரும் கொடுமைகளும் மிக நன்றாக விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. சமூக சீர்திருத்தம் வேண்டும் ஒவ்வொருவர் கையிலும் இப்புத்தகம் தவறாதிருக்க வேண்டிய தன்மை வாய்ந்தது. ஜாதி தத்துவங்களையுணர்ந்து அதனை ஒழிக்கவேண்டுமென்று கருதுபவர்களும் தாழ்த்தப்பட்டவர்களும் இப்புத்தகத்தை வாசிக்கவேண்டியது மிக இன்றியமையாததாகும். 120 பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகம்.

இதன் விலை அணா 4.

6 அணா ஸ்டாம்பு அனுப்பினால் அன் ரிஜிஸ்டர் பார்சலில் அனுப்பப்படும்.

கிடைக்குமிடம்:—

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | பம்பாயில் சத்தியாகிரகம் | 06.11.1927 | 15 |
| 2. | பம்பாய் சுயமரியாதை முழக்கம் | 16.06.1929 | 17 |
| 3. | இந்தியாவிலுள்ள தாழ்ந்த வகுப்பார் அனைவரும் எனது குடும்பத்தினராவர் | 13.03.1932 | 21 |
| 4. | டாக்டர் அம்பேத்கர் விளக்கம் | 10.04.1932 | 25 |
| 5. | அம்பேத்கரின் வெடிகுண்டு - ஆலயப்பிரவேசம் சுயமரியாதைக்கு விரோதம் | 19.02.1933 | 29 |
| 6. | அம்பேத்கரும், காந்தியும் | 19.02.1933 | 34 |
| 7. | சபாஷ் அம்பேத்கர்! | 20.10.1935 | 37 |
| 8. | அம்பேத்கரும் இந்து மதமும் | 27.10.1935 | 46 |
| 9. | ஹிந்து சமூகத்தினால் நமக்கு நன்மையில்லை | 27.10.1935 | 52 |
| 10. | காந்தியாரிடம் எனக்கு நம்பிக்கை இல்லை | 30.10.1938 | 55 |
| 11. | பெரியார் பம்பாய் விஜய முழு விபரம் | 15.01.1940 | 57 |
| 12. | பம்பாயில் பெரியாருக்கு பேருபசாரம் | 09.01.1940 | 65 |
| 13. | காங்கிரசை எதிர்க்க கூட்டு இயக்கம் | 28.01.1940 | 69 |
| 14. | அம்பேத்கரின் வெடிகுண்டு - பம்பாயில் தாழ்த்தப்பட்ட மக்கள் விடுதலை நாள் கொண்டாட்டம் | 23.03.1940 | 75 |
| 15. | அம்பேத்கர் பிரிவினைத் திட்டம் | 18.03.1941 | 80 |
| 16. | காங்கிரஸ் பூச்சாண்டி “எதிர்த்து அடக்க வேண்டும்” | 30.07.1942 | 82 |
| 17. | டாக்டர் அம்பேத்கர் எச்சரிக்கை | 26.08.1942 | 86 |
| 18. | அம்பேத்கர் - தந்தை பெரியார் சந்திப்பு | 30.09.1944 | 90 |
| 19. | டாக்டர் அம்பேத்கர் | 30.09.1944 | 92 |
| 20. | சோறு போட்டுஉதை வாங்கின கதை | 30.09.1944 | 99 |
| 21. | அம்பேத்கர் அழைப்பு | 27.07.1946 | 105 |
| 22. | டாக்டர் அம்பேத்கர் கலப்பு மணம் | 10.04.1948 | 106 |
| 23. | டாக்டர் அம்பேத்கர் மாணவர் இல்லத்தின் 2ஆம் ஆண்டு விழா | 05.04.1947 | 107 |
| 24. | அம்பேத்கரைக் கொல்ல ஆரியப் பார்ப்பனர் முயற்சி | 18.05.1948 | 109 |






| | | | |
|---|---|---|---|
| 25. | 90 சதவிகித ‘சூத்திரர்’ மீது 10 பேர் சட்டம் ஆட்சி புரிவதா? | 25.02.1949 | 112 |
| 26. | டாக்டர் அம்பேத்கர் வாழ்க! | 11.04.1950 | 118 |
| 27. | அம்பேத்கரின் குற்றச்சாட்டால் பொறி கலங்கி அலறுகிறது காங்கிரசு | 24.04.1951 | 122 |
| 28. | கம்யூனல் ஜீ.ஓ. பற்றிய சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு திருப்தியற்றது | 19.05.1951 | 126 |
| 29. | அம்பேத்கர் வெடிகுண்டு! | 02.05.1951 | 131 |
| 30. | டாக்டர் அம்பேத்கர் மாணவர் இல்லத்தில் அமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகரன் | 09.01.1954 | 135 |
| 31. | மதத்தின் பெயரால் பணம் திரட்டி சாதுக்களை, சந்நியாசிகளை கொழுக்க வைப்பது கிரிமினல் குற்றமாகும் | 25.01.1954 | 138 |
| 32. | உலக புத்த மாநாட்டில் தந்தை பெரியார் - அம்பேத்கர் - மல்லலசேகரா சந்திப்பு | 09.12.1954 | 140 |
| 33. | எனக்குக் கடவுள் நம்பிக்கை இல்லை - ஆத்மா இல்லை-நான் ஒரு பவுத்தன் | 02.05.1956 | 144 |
| 34. | மதமாற்றம் தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமையை பாதிக்காது | 16.10.1956 | 149 |
| 35. | டாக்டர் அம்பேத்கர் தலைமையில் 3 லட்சம் பேர் பவுத்தநெறியை தழுவினர் | 15.10.1956 | 153 |
| 36. | டாக்டர் அம்பேத்கர் தலைமை அம்பேத்கர் உலகத் தலைவர்களில் ஒருவர் | 07.11.1956 | 160 |
| 37. | அம்பேத்கர் உலகத் தலைவர்களில் ஒருவர் - ஜாதி ஒழிப்பில் தீவிரவாதி! - பெரியார் கருத்து | 07.12.1956 | 168 |
| 38. | டாக்டர் அம்பேத்கர் மறைவு பற்றி பெரியார் ஈ.வெ.ரா. | 08.12.1956 | 174 |
| 39. | அம்பேத்கர் மரணத்துக்கு மறைமுக சதி நடந்தே இருக்கவேண்டும் | 20.12.1956 | 176 |
| 40. | டாக்டர் அம்பேத்கர் புரட்சியின் சின்னமாவார்! | 24.12.1956 | 179 |
| 41. | ஜாதியும் தீண்டாமையும் ஒழியுமா? | 29.12.1956 | 184 |
| 42. | இந்திய அரசியல் சட்டத்தைக் கொளுத்துவேன் - டாக்டர் அம்பேத்கர் | 10.11.1957 | 187 |




| | | | |
|---|---|---|---|
| 43. | பார்ப்பனரின் கடவுள் - மதத்துக்குப் பரம வைரியாயிருந்தவர் டாக்டர் அம்பேத்கர் | 21.05.1959 | 188 |
| 44. | காமராசரும் அம்பேத்கரும் தாழ்த்தப்பட்டோரின் காவலராவர் | 06.03.1961 | 196 |
| 45. | டாக்டர் அம்பேத்கர் உலகறிந்த பேரறிஞர் ஆவார் | 04.05.1961 | 200 |
| 46. | ஜாதி ஒழிப்பில் தீவிரச் செயல் வீரராகத் திகழ்ந்தவர் டாக்டர் அம்பேத்கர் | 08.09.1961 | 206 |
| 47. | பற்றற்ற பகுத்தறிவாளரே சமூகக் குறைகளை நீக்க இயலும்! | 14.04.1966 | 211 |
| 48. | பார்ப்பான் பகிஷ்காரத்தைத் தீவிரப்படுத்துவதே எமது அடுத்த திட்டமாகும் | 22.09.1959 | 220 |
| 49. | அறிவு வளர்ச்சி, இழிவு - மடமை நீக்கம், மக்களுக்காக உழைக்கும் உணர்ச்சி தருவதே கல்வியின் குறிக்கோள் | 04.03.1959 | 231 |
| 50. | மதத்தொண்டு செய்கிறவன் என்றால் மடையனையும் மகாத்மா ஆக்கிவிடுவர் | 19.06.1970 | 238 |
| 51. | மாநில சுயாட்சி வழங்கப்படாவிட்டால் அடுத்து தனி சுதந்திர கோரிக்கைதான்! | 14.09.1970 | 255 |
| 52. | சிந்தனையைத் தூண்டிவிட்டு மனிதனை மனிதனாக்கும் அமைப்புகள் தேவை! | 26.10.1970 | 253 |
| 53. | தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களிடையே கட்சி மாறுபாடு இருக்கக்கூடாது | 27.07.1971 | 258 |
| 54. | கம்யூனிஸ்ட்களால்கூட நிறைவேற்ற முடியாத சட்டத்தை தி.மு.க. அரசு நிறைவேற்றியது | 27.01.1972 | 263 |
| 55. | காந்தியை துரும்பாய் மதித்தவர்; 'வெட்கங்கெட்டவரே' என சாடியவர் | 22.05.1972 | 267 |
| 56. | தாழ்த்தப்பட்டோருக்கான வீடுகள் ஊரின் நடுவே அமைத்திட வேண்டும் | 03.07.1972 | 270 |
| 57. | டாக்டர் அம்பேத்கரே வெளியிட்ட உண்மை | 14.06.1973 | 275 |
| 58. | இழிவை ஒழிக்க கிளர்ச்சி செய்யாமல் பதவிக்குப் போகக் கிளர்ச்சி செய்வதா? | 13.10.1973 | 280 |




# 1
# பம்பாயில் சத்தியாகிரகம்

மகத் என்னும் இடத்தில் உள்ள தாழ்த்த வகுப்பார் எனப்படுவோரின் கூட்டமொன்று நேற்று (05.11.1927) ஜஹாங்கீர் மண்டபத்தில் டாக்டர் அம்பேத்கர் தலைமையில் கூடியது. அக்கூட்டத்தில் அவர்கள் சாதாரணமான மனிதர்களுக்கு அவசியமாக இருக்ககூடிய உரிமைகளுக்காகப் போராடியும் உயர்ந்த வகுப்பார் என்போர் அனுதாபம் காட்டாமல், இனி அவைகளை சகித்துக்கொண்டிருக்க முடியாது என்று தீர்மானித்து அவர்களுடைய உரிமையைப் பெறுவதற்காக சத்தியக்கிரகம் செய்வதென்றும் தீர்மானித்துவிட்டனர். அவர்கள் இந்த நிலைமைக்கு வந்ததற்குக் காரணம் அவர்களுக்கு பொதுக்குளத்திலும் சுதந்திரம் அளிக்காமையே ஆகும். அக்கூட்டத் தலைவர் மனித வர்கத்தைச் சேர்ந்த ஒருவனை ஒரு பொதுக்குளத்திலிருந்து தண்ணீர் பருகுவதை தடுப்பதானது அமானுஷீகத் தனமென்றும் பறவைகளுக்கும், மிருகங்களுக்கும் உள்ள


பம்பாயில் சத்தியாக்கிரகம்.

மகத் என்னுமிடத்திலுள்ள தாழ்ந்த வகுப்பார் எனப் படுவோரின் கூட்டமொன்று நேற்று ஜஹாங்கீர் மண்டபத்தில் டாக்டர் அம்பேதகர் தலைமையில் கூடியது. அக்கூட்டத்தில் அவர்கள் சாதாரணமான மனிதர்களுக்கு அவசியமாக இருக்கவேண்டிய உரிமைகளுக்காகப் போராடியும் உயர்ந்த வகுப்பார் என்போர் அனுதாபங்காட்டாமல் இருப்பதால் இனி அவைகளைச் சகித்துக்கொண்டிருக்க முடியாதென்று தீர்மானித்து அவர்களுடைய உரிமையைப் பெறுவதற்காகச் சத்தியாக்கிரகம் செய்வதென்றும் தீர்மானித்துவிட்டனர். அவர்கள் இந்த நிலைமைக்கு வந்ததற்குக் காரணம் அவர்களுக்குப் பொதுக் குளத்திலும் சுதந்திரம் அளியாமையே யாகும். அக்கூட்டத்தலைவர், மனிதவர்க்கத்தைச் சேர்ந்த ஒருவனை ஒரு பொதுக்குளத்திலிருந்து தண்ணீர் பருகுவதைத் தடுப்பதானது அமானுஷீகத்தனமென்றும், பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் உள்ள சுதந்தரமும் மனிதனுக்கில்லாதிருப்பது நீதியன்றென்றும் கூறினர். தலைவர் வேண்டுகோளின் மீது அந்த இடத்திலேயே 500 ரூபாய்க்கு மேல் வசூல் ஆய்விட்டது. சத்தியாக்கிரகம் செய்வதற்குப் பல தொண்டர்கள் முன்வந்திருக்கின்றனர். டிசம்பர் 25-ந் தேதி முதல் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப்படும். இதேமாதிரி சத்தியாக்கிரகமொன்று கோயிற் பிரவேசத்துக்காக நவம்பர் 15-ந் தேதி முதல் அம்ரோதியில் ஆரம்பிக்கப்படும்.



சுதந்திரமும் மனிதனுக்கு இல்லாதிருப்பது நீதி அன்று என்றும் கூறினார். தலைவர் வேண்டுகோளின் மீது அந்த இடத்திலேயே 500 ரூபாய்க்கு மேல் வசூலாகிவிட்டது. சத்தியாக்கிரகம் செய்வதற்கு பல தொண்டர்கள் முன்வந்திருக்கின்றனர்.

டிசம்பர் 25ஆம் தேதி முதல் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப்படும் இதேமாதிரி சத்தியாக்கிரகமொன்று கோவில் பிரவேசத்துக்காக நவம்பர் 15ஆம் தேதி முதல் அம்ரோதியில் ஆரம்பிக்கப்படும்.

**- 'விடுதலை', 06.11.1927**

■

# 2

# பம்பாய் சுயமரியாதை முழக்கம்.

## முதல் மகாராஷ்டிர சுயமரியாதை மாநாடு

### டாக்டர் அம்பேத்கர் தலைமைப் பேருரை

நாசிக் சமூக சமத்துவ சங்கத்தின் ஆதரவில் 1929 மே மாதம் 26ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை முதல் மகாராஷ்டிரா சுயமரியாதை மகாநாடு நடைபெற்றது. மகாநாட்டுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர், எம்.ஏ., பார்-அட்-லா அவர்களும், மற்றும் தலைவர்களும் அன்று காலை காயிர்வாடி ரயில்வே ஸ்டேஷனில் வந்திறங்கினர். அவர்கள் அங்கு ஆடம்பரமாய் வரவேற்கப்பட்டு மகாநாட்டுப் பந்தலுக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். பெண்கள் உள்பட அய்யாயிரம் பேருக்கு மேல் மகாநாட்டுக்கு வந்திருந்தனர். ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களும் பெருந்தொகையாய் வந்திருந்தனர். டாக்டர் அம்பேத்கர் ஒடுக்கப்பட்ட வகுப்பாருக்காக பெரிதும் உழைத்து வருகிறார்.

அன்று பிற்பகல் 1:30 மணிக்கு மகாநாடு அதற்கென்று அமைக்கப்பட்டிருந்த பந்தலில் கூடியது.

நாசிக் கலாசாலை ஆசிரியர், சாப்தரிஸ், "சமத்துவம்" பத்திரிகை ஆசிரியர் திரு.டி.வி.நாயக், எம்.பி.தேசமுகி, பி.வி.பிரதான், பி.கே. கெய்க்வாட், எஸ்.எஸ்.குப்தா, காத்ரிக்கார், ஆர்.டி.கௌலி, யாதவர், நாசிக்கில் பிரபல காண்டிராக்டரான திரு.ராவ்கம்பி முதலியோர் மகாநாட்டுக்கு வந்திருந்தனர்.

மகாநாட்டில் பெரிதும் உற்சாகம் ஏற்பட்டிருந்தது. வரவேற்புக் கழகத் தலைவரான திரு.ராக்கேட் சுகவீனமாயிருந்ததால் தமது பிரசங்கத்தை, வாசிக்க முடியவில்லை.



பிறகு டாக்டர் அம்பேத்கர் தலைமை வகித்து ஒரு மணி நேரத்துக்கு அதிகமாக பின்வருமாறு பிரசங்கம் செய்தார்:

“இந்து சமூகத்தில் உயர்வு தாழ்வு என்ற பேதங்கள் ஏற்பட்டு சுயமரியாதையும், ஆண்மையையும், பலத்தையும் அழித்து விட்டது. நல்வாழ்க்கைக்கு சுயமரியாதையும், ஆண்மையும், அத்தியாவசியமானவை. ஒடுக்கப்பட்ட பிற்போக்கான வகுப்பார்கள்தான் இது விஷயமாக மிகவும் கேவல நிலைமையில் இருக்கின்றனர். இந்த வகுப்பார்களின் பேர்களே அவர்களைக் கேவலப்படுத்துவதாகிறது சில வகுப்பார்கள் தங்க ஆபரணங்கள் தரிக்கக் கூடாதென்றும், வேறு தாழ்ந்த உலோகத்தில் செய்த நகைகள்தான் தரிக்க வேண்டுமென்றும் மதத்தில் கூறப்பட்டிருக்கிறது.

இது வேற்றுமைக்கு அடிப்படையாகும், ஒடுக்கப்பட்ட வகுப்பாரில் பலர் தங்கம் வெள்ளி நகைகள் அணியத்தக்க பொருளாளராயினும், அவர்கள் தாழ்ந்த உலோகத்தில் செய்யப்பட்ட நகைகளே அணிய வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுகின்றனர். இந்த தீய வழக்கத்தை மீறி தங்கத்தை தரித்த தீண்டாதாருக்கு பலவித கொடுமைகள் இழைக்கப்பட்டுள்ளன. ஒடுக்கப்பட்ட மக்கள் மிருகங்களிலும் கேவலமாக நடத்தப்படுகின்றனர். பிரிட்டிஷ் சர்க்கார் தங்கள் கொள்கைப்படி ஜாதிக் கட்டுப்பாட்டை அறுத்தெறிந்திருக்க வேண்டியதாயினும், மூட பொது ஜன அபிப்பிராயத்துக்காக அதை ஆதரித்து வருகின்றனர். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்க உத்தியோகங்கள் கொடுக்கப்படுவதில்லை. இந்த வகுப்பாரின் சிறுமை நிலையை மாற்ற வேண்டுமாயின் அவர்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி உண்டாகச் செய்து, அவர்கள் தங்கள் உரிமைகளை அனுபவிப்பதற்காக துணிந்து முயலும்படி அவர்களைத் தூண்டி விடுவது அத்தியாவசியம். படிப்பினால் மாத்திரம் சமத்துவம் ஏற்பட்டு விடுமென்று நினைப்பது பைத்தியக்காரத்தனமாகும். படிப்பினால் ஒடுக்கப்பட்ட வகுப்பாரின் கஷ்டங்களும் துன்பங்களும் பெரிதும் நீங்குமாயின் சமூக வாழ்க்கையில் அவர்கள் நிலைமை உயர்வடைவதற்கு கல்வி மாத்திரம் போதாது. உதாரணமாக **நான் மிகவும் உயர்ந்த கல்வி கற்றிருக்கிறேன். அப்படி இருந்தும் நான் ஒரு தீண்டாதவனாகவே கருதப்படுகிறேன். ஆகையால், ஜாதி பேதம் என்ற**




**கொடிய வருணாசிரமக் கட்டுப்பாட்டை அடியோடு அழித்தால்தான் நாம் மேன்மையடைய முடியும்''** என்று கூறினார்.

அவர் பேசி முடித்ததும் **தென் இந்தியாவின் பேர் போன சுயமரியாதைத் தலைவரான திரு. ஈ.வெ.ராமசாமியாரை பாராட்டி**



**அவரிடமிருந்தும் திரு.எம்.கே.ரெட்டியாரிடமிருந்தும் வந்த கடிதங்களும் மற்ற அனுதாபச் செய்திகளும் வாசிக்கப்பட்டன.**

பிறகு பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:-

"குழந்தை மணம், ஜாதிபேதம், புரோகிதம் ஆகிய தீமைகள் ஒழிக்கப்பட வேண்டும்."

"மனுசாஸ்திரம், புராணம் முதலிய நூல்கள் பறிமுதல் செய்யப்பட வேண்டும்."

"கோயில் பூசை, உற்சவங்கள் ஆகியவைகளுக்காகச் சர்க்காரார் கொடுக்கும் தஸ்தி மோகினித் தொகைகள் நிறுத்தப்பட்டு நாட்டில் ஒடுக்கப்பட்டவர்களோ, இழிவு படுத்தப்பட்டவர்களோ, தீண்டாதவர்களோ, கல்வியறிவில்லாதவர்களோ, ஒருவர் கூட இல்லை என்று சொல்லத்தக்க நிலைமையை நமது நாடு அடையத்தக்க வழிக்குச் செலவு செய்ய வேண்டும்."

ஒடுக்கப்பட்ட வகுப்புச் சாரணர்கள் 150 பேர் மகாநாட்டுத் தொண்டர்களாக வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**- 'குடிஅரசு', 16.06.1929**

■

# 3

# டாக்டர் அம்பேத்கர் சொற்பொழிவு: இந்தியாவிலுள்ள தாழ்ந்த வகுப்பார் அனைவரும் எனது குடும்பத்தினராவர்

இம்மாதம் 4ஆம் தேதி சென்னை தாழ்ந்த வகுப்பார் கல்விச் சங்க ஆதரவில் இந்திய வாக்குரிமைக் கமிட்டி அங்கத்தினரும், வட்ட மேஜை மகாநாட்டுப் பிரதிநிதியுமான டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு ஒரு விருந்தளிக்கப்பட்டது. அவரது சமூக ஊழியத்தையும் வட்ட மேஜை மகாநாட்டில் செய்த சேவையையும் பாராட்டியதற்கு வந்தனமளிக்குமுகத்தான் டாக்டர் அம்பேத்கர் பேசியதன் சாரமாவது:

“இரண்டு முக்கிய சம்பவங்களுக்காக நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். முதலாவது பிரபலஸ்தர்களாக எனது சகோதரர்களோடு நெருங்கிப் பழக சந்தர்ப்பம் ஏற்பட்டதென்று, இந்நகரை விட்டு நாளை புறப்படப் போகும் நான் ஏதாவது சில முக்கியமான விஷயங்களைச் சொல்லிப் போகலாமென்பது மற்றொன்று. கனவான்களே! இந்தியாவிலுள்ள தாழ்ந்த வகுப்பார்கள் எல்லாம் எனது குடும்பத்தினரே.

கடந்த 6 வருஷங்களாக எனது மனைவி மக்களையோ, உறவினர்களையோ முற்றிலும் மறந்து விட்டேன் என்பதை நீங்கள் அறிய வேண்டும். ஒரு தினத்தில் ஒரு மணி நேரமாவது நான் அவர்களோடு சவகாசமாய் இருந்தது கிடையாது. இதிலிருந்து எனது குடும்ப வாழ்க்கையைப் பற்றி ஒருவாறு நீங்கள் யூகிக்கலாம். இது முற்றிலும் உண்மை என்பதையும், குடும்ப பராமரிப்பை உத்தேசித்து கட்டாயம் நடத்த வேண்டிய தொழிலேயல்லாது, நான் ஆற்ற வேண்டிய





1932-ஆம் மார்ச்-மீ 13-௳ குடி அரசு. 9

டாக்டர். அம்பெத்கார் சொற்பொழிவு.

இந்தியாவிலுள்ள தாழ்ந்த வகுப்பார் அனைவரும் எனது குடும்பத்தினராவர்.

எந்த அரசியல் உரிமைகளுக்காக நாம் போராடுகிறோமோ அந்த அரசியல் ஞானமே நம்மக்களிடம் உண்டாகவில்லை. அதை உண்டாக்கவேண்டியது பிரதிநிதிகளது கடமையும், பொறுப்புமாகும்.

கல்விவசியம்.

பிரதிநிதிகள் கடமை.

சமபந்திபோஜனம்.

மதுரை சுயமரியாதைச் சங்கத்தின் ஆதரவில் 20—3—32 ஞாயற்றுக்கிழமை பகல் 1மணிக்கு மதுரை முனிச்சாலை ரோடுலெக்ஷ்மிபுரம் தபாலாபீஸ் கிழ்புறத்திலிருக்கும் டாக்டர் எஸ். ஜி. தஸ்தகீர் அவர்களின் பங்களாவில் ஜாதி வித்தியாசங்களைப் போக்குவதின் நிமித்தம் சைவ சமபந்தி போஜனம் ஒன்று நடைபெறும்.

அனுதாபத்திற்குவந்தனம்.

அழகர்சாமி.

கடமைகள் உள்ளதென்பதையும் நீங்கள் அறிய வேண்டும். நாம் இன்று கோரும் அரசியல் உரிமைக்கு பல பக்கங்களிலிருந்தும் பெரிய எதிர்ப்புகள் இருந்தபோதிலும், இனி வரப்போகும் சீர்திருத்த உலகில் நமக்குத் தகுதியான செல்வாக்கில்லாமல் போகாது என்பதுவே எனது திடமான நம்பிக்கை.





சட்ட சபைகளில் ஸ்தானம் வகிக்கும் தாழ்ந்த வகுப்புப் பிரதிநிதிகள் தங்கள் பொறுப்பை உணர வேண்டும். அவர்களது மனசாட்சிக்கு விரோதமில்லாது, அவர்களது முழு பலத்தையும் உபயோகித்து ஒருமுகமாக நின்று வேலை செய்ய வேண்டும். இந்த விதமாக கட்டுபாடாகவும், ஒழுங்காகவும் அவர்கள் நடந்து கொள்வார்களேயானால் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் அவர்கள் கோரிய பலனை அடைவார்கள் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை. நமது பாமர மக்களில் பெரும்பாலோர் கல்வியறிவில்லாதவர்களாய் இருப்பதால் நமது பிரதிநிதிகளின் பொறுப்பு இன்னும் அதிகமான தென்பதை அவர்கள் உணர வேண்டும். இங்கிலாந்து தேசத்தில் பார்லிமெண்ட் சபையின் அங்கத்தினர் ஒருவர் தன் கடமையைச் சரி வர செய்யவில்லையானால், தன் தொகுதி ஓட்டர்களின் நன்மதிப்பையோ அல்லது நல்லெண்ணத்தையோ பெற முடியாது போனால், அந்தத் தொகுதி ஜனங்களும் ஓட்டர்களும் ஒரு கூட்டம் கூட்டி, மேற்படி அங்கத்தினரிடம் சமாதானம் கேட்பார்கள். 12 மாத காலத்தில் அந்த அங்கத்தினர் சபையில் செய்த ஊழியங்களைப் பற்றி கேட்பார்கள். அத்தகைய ஓர் மனோபாவம் நம்மிடை இன்னும் உண்டாகவில்லை.

“எந்த அரசியல் உரிமைக்காக நாம் போராடுகிறோமோ அந்த அரசியலைப் பற்றிய ஞானமே மக்களிடை இன்னும் உதிக்கவில்லை.” ஆகையால் “அத்தகைய அரசியல் அறிவை உண்டாக்க வேண்டியது பிரதிநிதிகளாகிய நமது பொறுப்பும் கடமையுமாகும்.” எத்தகைய சக்தியும், செல்வாக்கும் நமக்கு இருந்தும், அதை உபயோகிக்க வகை தெரியாவிடில் அது பிரயோஜனமற்றதாகும். “ஆகையால் தாழ்ந்த வகுப்புப் பிரதிநிதிகள் சட்டசபைக்குப் போவதிலும், எதிர்கட்சி ஆசனத்திலிருப்பதும் பிரயோஜனமற்றதாகும்,” நீங்கள் சட்டசபைக்குள் ஒரு முடிவான கொள்கையோடும், திட்டத்தோடும் போக வேண்டும். அந்தத் திட்டத்தை நீங்களே பிரஸ்தாபிக்கக் கூடிய ஆற்றலும், தைரியமும் வேண்டும். மற்றவர்களது புத்திமதியைக் கேட்டு அதன்படி நடப்பது என்பது எப்போதும் ஆகாத காரியமாகும். இனி வரும் நமது பிரதிநிதிகள் இரண்டு முக்கியமான விஷயங்களை மனதில் வைக்க வேண்டும். ஒன்று, நாங்கள் உண்மையாய் தாழ்ந்த வகுப்பாரின் பிரதிநிதிகள்தான்; “அவர்களது நன்மையே மனதில் கொண்டிருக்கிறோம் என்பதும், அது சம்பந்தமான சட்டதிட்டங்கள் தெரிந்திருப்பதுமே யாகும்.”

ஆனால், படித்துப் பட்டம் பெற்றால்தான் இவைகளை அறிய முடியுமென நீங்கள் எண்ணி மயங்கி விடாதீர்கள். படித்துப் பட்டம் பெற்றவர்களைக் காட்டிலும், நிழலுக்கும் கலாசாலையில் ஒதுங்கியிராதவர்கள் அதிக சாமர்த்தியசாலிகளாக இருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிய வேண்டும். இதற்குக் காரணம் அவர்களது முயற்சியும் உழைப்புமே.

உங்களுக்குள் ஒற்றுமையை உண்டாக்குவதிலும், கல்வியைப் பரப்புவதிலும் எல்லோரும் அதிக கவனம் செலுத்தி வருவீர்கள் என்று நம்புகிறேன். தாழ்த்தப்பட்ட வகுப்பாராகிய நாம் கல்வி அறிவினாலேயே முன்னேற முடியுமென்பதுவே எனது உறுதியான நம்பிக்கை. கல்வி கற்பதனால் நீங்கள் ஜாதி ஹிந்துக்களாகி விடலாமென்று நான் நினைத்துச் சொல்வதாக நீங்கள் கருதிவிடக் கூடாது. ஆனால், கல்வி உங்கள் நிலையை உணரவும், அதற்குறிய பரிகாரங்களை நீங்களே தேடிக் கொள்ளவும் போதிய உதவியளிக்கும், நமது பொது மக்களில் பணக்காரார்களாய் உள்ளவர்கள் தங்கள் சமூக முன்னேற்றத்திற்கான எல்லா உதவியையும் செய்ய வேண்டும். முஸ்லிம்கள் கல்வி அபிவிருத்தி அடைந்திருப்பதன் காரணமென்ன? அவர்களில் செல்வந்தர்களாய் உள்ளவர்களது தயாள குணமும் உதவியுமே யாகும். ஆகையால்தான் பணம் படைத்த நமது சகோதரர்கள் தங்கள் சமூகத்திற்கு உதவி செய்ய வேண்டிய கடமையைப் பற்றி வற்புறுத்துகிறேன்.

**- 'குடிஅரசு', 13.03.1932**

■

# 4

# டாக்டர் அம்பேத்கர் விளக்கம்

மூஞ்சே – ராஜா ஒப்பந்தப் புரட்டை விளக்கி டாக்டர் அம்பேத்கர் பின்வருமாறு ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

மூஞ்சே – ராஜா ஒப்பந்தத்தைப் பற்றி எனக்கு எந்தவிதமான கவலையும் கிடையாது. அதுபோலவே மற்ற எவருக்கும் அதைப் பற்றிய கவலை எதுவும் இருக்க வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன். அந்த ஒப்பந்தத்தில் விசேஷம் ஒன்றுமில்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்குள் தனித் தொகுதி கூட்டுத் தொகுதி முதலிய விஷயங்களில் கட்சிப் பிரதி கட்சி ஏற்பட்டிருப்பதைப்போல காட்டிக் கொள்வதற்காகவே அத்தகைய முயற்சி செய்யப்பட்டு வருகிறது என்பது வெளிப்படை. இவ்விஷயத்தில், காங்கிரசும் இந்து மகாசபையும் வழக்கமாகவே ஊக்கம் காட்டி வருகின்றன. இந்தியா முழுவதுமுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் அனைவரும் அதனை ஏற்கெனவே எதிர்த்து வருகின்றனர். இதனாலேயே அந்த ஒப்பந்தத்தில் உண்மையான மதிப்பு நன்கு தெரியவரும். ஆகையினாலே அதைப் பற்றிப் பேசிப் பொழுதைப் போக்குவது அனாவசியமான காரியம். ஆயினும் அந்த ஒப்பந்தம் ஏற்பட்ட விருத்தாந்தத்தைப் பற்றி நான் ஏதேனும் சொல்ல வேண்டுமென்று நமது சிநேகிதர்களில் சிலர் விரும்புகின்றனர். அதிலிருந்து பொது ஜனங்களும், குறிப்பாக தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களும் நாங்களே உண்மையைக் கண்டு கொள்ள முடியுமென்று நினைக்கின்றனர். அவர்களுடைய கட்டளைக்கிணங்கி கீழ்கண்ட குறிப்பை வெளியிடுகிறேன்.

டாக்டர் மூஞ்சே திரு. ராஜாவோடு உடன்படிக்கை செய்து கொள்வதற்கு முன்பு டாக்டர் மூஞ்சே என்னோடு முதலில் விவகாரம் ஆரம்பித்தார். புதிய டெல்லியில் மூன்று நாட்களாக நாங்கள் இதைப்





1932-ஆம் ஏப்ரல்-மீ 10-உ — குடி அரசு — 9

# Self-Respect University.

## சுயமரியாதைப்பரீக்ஷை.

### பொது அறிவு—1

—:0:—

மார்க் 100] [நேரம் 3-மணி

குறிப்பு:-கீழ்க்கண்ட கேள்விகளில் ஒவ்வொன்றுகவோ, சேர்த்தோ, பதில் எழுதத்தெரிந்தவர்கள் "குடி அரசு" ஆசிரியருக்கு அனுப்பலாம். ஒருவரும் பதில் அனுப்பாவிட்டாலும் கேள்விகள் வாரா வாரம் தொடர்ச்சியாய் வந்துகொண்டேயிருக்கும். பரீக்ஷகர் S. G.

(I) காங்கிரஸ் இயக்கத்தில் பார்ப்பனர்கள் மாத்திரம் (பெண்களும் கூட) ரொம்பவும் மூரமான பங்கெடுத்துக் கொள்வதன் காரணங்களை விளக்கி, 3-பக்கங்களுக்கு மேற்படாமல் எழுதுக.

(II) திரு. சத்தியமூர்த்தி அய்யர் எப்படித்தன் வயிற்றுப் பிழைப்பை நடத்துகிறார் என்பதை சுருக்கி 16-பக்கத்திற்குள் எழுதுக

(III) "ஏ ரங்கசாமி அய்யங்கார் தேசியத்தின் பெயரால் தன் சுற்றத்தாருக்கு உத்தியோகம் தேடிக்கொடுக்கிறார்"—இது உண்மையா இல்லையா என்பதை ஆராய்ச்சியுடனும், தகுந்த காரணங்களுடனும் விளக்குக.

(IV) கீழ்க்கண்டவைகளுக்கு வியாக்கியானம் எழுதுக:—

(a) "சூத்திரன் என்றால் ஆத்திரங்கொண்டடி"

(b) "ஆங்கிலேயர் அன்னியரென்றால் ஆரியப்பார்ப்பனர்கள் யார்?"

(c) "லிங்கம் என்பது ஆண்குறியும், பெண்குறியும் சேர்ந்ததாகும்"

(d) "உலகத்திலுள்ள 155-கோடி ஜனங்களில் பூணூல் போட்டிருப்பவர் எத்தனை பேர்? நெற்றியை விகாரப்படுத்துபவர் எத்தனை பேர்?"

(V) தமிழ்ப்பாஷை விருத்தியடையாமல் இருப்பதற்கு தமிழ்ப்பண்டிதர்களே காரணம் என்பதை விளக்குக.

(VI) "இந்தியாவிலுள்ள கோவில்களில் பார்ப்பான் கட்டிய கோவில் எத்தனை"—இக்கருத்தை விளக்கி ஒரு வியாசம் வரைக.

(VII) கீழ்க்கண்டவைகள் யார், யாருக்கு, எப்போது சொல்லப்பட்டவை என்பதை விளக்குக:—

(1) "என் உயிர் போனாலும் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனித்தொகுதி கொடுக்கச்சம்மதிக்கமாட்டேன்"

(2) "சுயமரியாதைக்காரர்கள் உத்சவங்களில் பேசினார்களானால் அவர்களை எலும்பும், சதையுமாகக்கிழித்தெரிந்து விடுவார்கள்."

(3) "நமது மதத்தலைவர்களைக்குற்றம் சொல்லுகிறவர்களை உயிருடன் வைத்துக்கொண்டிருக்கிறீர்களே! உங்கள் உடம்பில் சுத்த ரத்தம் ஓடுகிறதா?"

(4) "காந்தி ஒருபெரிய முட்டாள்"

(5) "லா காலேஜை (சட்டக்கல்லூரி) 10-வருஷத்திற்கு அடைத்து வைக்கலாம்"

(6) "என் பெண்ணிற்கு 14-வயதிற்குள் கல்யாணம் செய்து சாரதா சட்டத்தை மீறி ஜெயிலுக்குப்போவேன்"

(7) "கோவில்கள் எல்லாம் விபசார விடுதிகள்"

### ஆங்கில டாக்டரின் பெருந்தன்மை.

பெஷாவார் சிவில் சர்ஜன் மேஜர் கோல்டு ஸ்ட்ரீம் என்பவர் ஒரு இந்திய நோயாளியின் சிகிச்சையின் பொருட்டு தன் தேகத்திலிருந்து 40 அவுன்ஸ் இரத்தம் எடுத்து அதை நோயாளியின் உடலில் செலுத்தினார். நோயாளி உயிர் பிழைத்துக் குணமடைந்தார். நோயாளிக்கு வேறு விதமான சிகிச்சை செய்வதற்கு நேரமில்லாதிருந்தபடியாலும் தாமதம் பிராணாபத்தை யுண்டாக்கக்கூடுமென கருதப்பட்டதாலும், டாக்டர் உடனே தன் உடலிலிருந்து ரத்தம் பிடித்து ஆதனைக்கொண்டு உடனே சிகிச்சை செய்து உயிரைக்காப்பாற்றினார்;

## டாக்டர் அம்பெத்கார் விளக்கம்.

மூஞ்சே—ராஜா ஒப்பந்தப்புரட்டை விளக்கி டாக்டர் அம்பெத்கார் பின்வருமாறு ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

மூஞ்சே—ராஜா ஒப்பந்தத்தைப் பற்றி எனக்கு எந்தவிதமான கவலையும் கிடையாது. அதுபோலவேமற்ற எவருக்கும் அதைப்பற்றிய கவலை எதுவும் இருக்கவேண்டிய அவசியமில்லையென்று நினைக்கிறேன். அந்த ஒப்பந்தத்தில் விசேஷம் ஒன்றுமில்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்குள் தனித்தொகுதி கூட்டுத்தொகுதி முதலிய விஷயங்களில் கட்சிப்பிரதி கட்சி யேற்பட்டிருப்பதைப்போல காட்டிக்கொள்வதற்காகவே அத்தகைய முயற்சி செய்யப்பட்டு வருகிறது என்பது வெளிப்படை. இவ்விஷயத்தில், காங்கிரசும் இந்துமகா சபையும் வழக்கமாகவே ஊக்கங்காட்டி வருகிறது. இந்தியா முழுதிலுமுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் அனைவரும் அதனை ஏற்கனவே எதிர்த்து வருகின்றனர். இதனாலேயே அந்த ஒப்பந்தத்தின் உண்மையான மதிப்பு நன்குதெரியவரும். ஆகையினாலே அதைப்பற்றிப்பேசிப் பொழுதைப்போக்குவது அனாவசியமான காரியம் ஆயினும் அந்த ஒப்பந்தம் ஏற்பட்ட விருத்தாந்தத்தைப் பற்றி நான் ஏதேனும்சொல்லவேண்டுமென்று நமது சிநேகிதர்களிற் சிலர் விரும்புகின்றனர். அதிலிருந்து பொது ஜனங்களும், குறிப்பாக தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களும் தாங்களே உண்மையைக் கண்டுகொள்ள முடியுமென்று நினைக்கின்றனர். அவர்களுடைய கட்டளைக்கிணங்கி கீழ்கண்டகுறிப்பைவெளியிடுகிறேன்:—

### ஒப்பந்தத்திற்கு முன்பு.

டாக்டர் மூஞ்சே திரு. ராஜாவோடு உடன்படிக்கை செய்து கொள்ளுவதற்கு முன்பு டாக்டர் மூஞ்சே என்னோடு முதலில் விவகாரம் ஆரம்பித்தார். புதிய டெல்லியில் மூன்று நாட்களாக நாங்கள் இதைப்பற்றி விவாதித்தோம். பிப்ரவரி மாதம் முதல் தேதி முதல் 3ந் தேதி மட்டும் எங்களுடைய தர்க்க வாதம் நடந்தது. தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கு ஐந்து வருஷ காலத்திற்கு மட்டும் தனித்தொகுதி கொடுக்கலாமென்று டாக்டர் மூஞ்சே கூறினார். நான் அதை ஒத்துக்கொள்ளவில்லை. அதனால் எங்களுடைய விவகாரம் முறிந்தது. அந்த சமயத்தில் டாக்டருக்கு திரு. ராஜாவைப்பற்றிய ஞாபகமே இருந்ததில்லை. திரு. ராஜா தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதி யென்று அவர் அந்தக்காலத்தில் நினைத்திருக்கவில்லை.

### ஏதோ ஒரு ஸ்தாபனத்தலைவர்.

அகில இந்திய தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சங்கம் சார்பாக உடன்படிக்கை ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. திரு. ராஜா இதன் தலைவர் என்று சொல்லப்படுகிறது. திரு. ராஜா அந்த சங்கத்தலைவர் என்ற ஹோதாவில் உடன்படிக்கையில் கையெழுத்திட்டிருக்கிறார். தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுடைய எண்ணிறந்த ஸ்தாபனங்களைத் தெரிந்தவர்களுக்கு மேலே சொல்லப்பட்ட அகில இந்திய ஸ்தாபனம் பேரளவிலும், ஏட்டளவிலுமே இருப்பதாகத் தோன்றும். அந்த சங்கத்தின்கிளைகள் அஸ்ஸாம், வங்காளம், சென்னை, பம்பாய், பீகார். ஒரிசா, பஞ்சாப் முதலிய மாகாணங்களிலே கிடையாது. அதன் கிளைகள் இருப்பதாகச் சொல்லப்படும் இடங்களிலேயும், சங்கத்தின் உத்தியோகஸ்தர்களைத்தவிர வேறு அங்கத்தினர்கள் கிடையாது என்று தெரிகிறது. அத்தகைய ஸ்தாபனம் அகில இந்திய ஸ்தாபனமாகக் கொள்ளப்படுவதற்கில்லை. இன்னும் திரு. ராஜாவின் சங்கம் அகில இந்திய தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அனைவருக்கும் பிரதிநிதியாக இருக்க முடியாதென்பதையும் தவிர, அந்த ஸ்தாபனம் திரு. மூஞ்சேயோடு உடன்படிக்கை செய்து கொள்ளும்படிக்கும், கூட்டுத்தொகுதியை ஒத்துக்கொள்ளும்படிக்கும் திரு. ராஜாவுக்கு எந்த விதமான அதிகாரமும் கொடுக்கவில்லை.

டெல்லியில் திரு. ராஜா தலைமையில் சென்ற பிப்ரவரி மாதம் 23ந் தேதி ஒரு கூட்டம் நடைபெற்றதாக அசோஷியேட் பிரஸ் தந்தியிலிருந்து தெரிந்தது. அப்போது உடன்படிக்கை விஷயமாக திரு. ராஜாவைவை பேட்டி கண்ட விஷயத்தைப் பற்றி ஆலோசனை நடைபெறும் என்று சொல்லப்பட்டது. ஆனால் இக்கூட்டத்தில் அவ்விஷயமாக எந்த விதமான முடிவுக்கும் வரமுடியவில்லையென்று ராஜாவே கூறினார். அக்காரணத்தால் வேறொரு கூட்டம் போட வேண்டுமென்றும், அதற்கு இந்தியாவிலுள்ள பல மாகாணங்களிலிருந்தும் தாழ்த்தப்பட்டவர்களுடைய பிரதிநிதிகள் கட்டாயம் வரவேண்டுமென்றும் அப்போது தீர்மானித்தனர். டெல்லிக் கூட்டத்தில் நடந்த விஷயங்கள் அவ்வளவு தான்.

திரு. ராஜாவின் காரியங்களுக்கு அவருடைய வகுப்பினர்களே எந்த விதமான ஆதரவும் கொடுக்கவில்லையென்று நன்கு தெரிந்தது. ஆகவே டெல்லி கூட்டத்தில் தீர்மானம் செ

தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.

பற்றி விவாதித்தோம். பிப்ரவரி மாதம் முதல் தேதி முதல் 3ஆம் தேதி மட்டும் எங்களுடைய தர்க்க வாதம் நடந்தது. தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கு அய்ந்து வருஷ காலத்திற்கு மட்டும் தனித் தொகுதி கொடுக்கலாம் என்று டாக்டர் மூஞ்சே கூறினார். நான் அதை ஒத்துக் கொள்ளவில்லை. அதனால் எங்களுடைய விவகாரம் முறிந்தது. அந்த சமயத்தில் டாக்டருக்கு திரு. ராஜாவைப் பற்றிய ஞாபகமே





இருந்ததில்லை. திரு. ராஜா தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதி என்று அவர் அந்தக் காலத்தில் நினைக்கவில்லை.

அகில இந்திய தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சங்கம் சார்பாக உடன்படிக்கை ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. திரு. ராஜா இதன் தலைவர் என்று சொல்லப்படுகிறது. திரு.ராஜா இந்த சங்கத் தலைவர் என்ற ஹோதாவில் உடன்படிக்கையில் கையெழுத்திட்டிருக்கிறார். தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுடைய எண்ணிறந்த ஸ்தாபனங்களைத் தெரிந்தவர்களுக்கு மேலே சொல்லப்பட்ட அகில இந்திய ஸ்தாபனம் பேரளவிலும், ஏட்டளவிலுமே இருப்பதாகத் தோன்றும். அந்த சங்கத்தின் கிளைகள் அசாம், வங்காளம், சென்னை, பம்பாய், பீகார், ஒரிசா, பஞ்சாப் முதலிய மாகாணங்களிலே கிடையாது. அதன் கிளைகள் இருப்பதாகச் சொல்லப்படும் இடங்களிலேயும், சங்கத்தின் உத்தியோகஸ்தர்களைத் தவிர வேறு அங்கத்தினர்கள் கிடையாது என்று தெரிகிறது. அத்தகைய ஸ்தாபனம் அகில இந்திய ஸ்தாபனமாகக் கொள்ளப்படுவதில்லை. இன்னும் திரு.ராஜாவின் சங்கம் அகில இந்திய தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அனைவருக்கும் பிரதிநிதியாக இருக்க முடியாதென்பதையும் தவிர, அந்த ஸ்தாபனம் திரு. மூஞ்சேயோடு உடன்படிக்கை செய்து கொள்ளும்படிக்கும், கூட்டுத் தொகுதியை ஒத்துக் கொள்ளும்படிக்கும் திரு.ராஜாவுக்கு எந்தவிதமான அதிகாரமும் கொடுக்கவில்லை.

டெல்லியில் திரு.ராஜா தலைமையில், சென்ற பிப்ரவரி மாதம் 23ஆம் தேதி ஒரு கூட்டம் நடைபெற்றதாக அசோஷியேட் பிரஸ் தந்தியிலிருந்து தெரிந்தது. அப்போது உடன்படிக்கை விஷயமாக திரு. ராஜாவை பேட்டி கண்ட விஷயத்தைப் பற்றி ஆலோசனை நடைபெறும் என்று சொல்லப்பட்டது. ஆனால், இக்கூட்டத்தில் அவ்விஷயங்கள் எந்தவிதமான முடிவுக்கும் வரமுடியவில்லை என்று ராஜாவே கூறினார். அக்காரணத்தால் வேறொரு கூட்டம் போட வேண்டுமென்றும், அதற்கு இந்தியாவிலுள்ள பல மாகாணங்களில் இருந்தும் தாழ்த்தப்பட்டவர்களுடைய பிரதிநிதிகள் கட்டாயம் வர வேண்டும் என்றும் அப்போது தீர்மானித்தனர். டெல்லிக் கூட்டத்தில் நடந்த விஷயங்கள் அவ்வளவுதான்.

திரு. ராஜாவின் காரியங்களுக்கு அவருடைய வகுப்பினர்களே எந்தவிதமான ஆதரவும் கொடுக்கவில்லை என்று நன்கு தெரிந்தது.



ஆகவே, டெல்லி கூட்டத்தில் தீர்மானம் செய்யப்பட்டிருந்தபடி வேறொரு கூட்டமும் நடைபெறவே இல்லை. பிரதிநிதிகள் அதிகமாகக் கொண்ட வேறொரு கூட்டம் கூட்டவேண்டுமென்றிருந்த எண்ணத்தையே திரு.ராஜா கைவிட்டு விட்டார் என்று நன்கு விளங்கிற்று.

ராஜா - மூஞ்சே உடன்படிக்கைக்கு உடந்தையாயிருந்து அதனை நிறைவேற்றிக் கொடுத்தவர் மூவர். அவர்கள் திரு. கவாய், திரு.ஜாதவ், திரு.ராஜா முதலானவர்கள்.

தலைவர்களுடைய அபிப்பிராயங்கள் எவ்வளவு மாறுபாடுகளை அடைந்து கொண்டே வந்திருக்கின்றன என்பது (கடந்த கடிதப் போக்குவரத்திலிருந்து) நன்கு விளங்கும். அவர்கள் உண்மையிலேயே அபிப்பிராயங்களை மாற்றிக் கொண்டார்களா என்பது சந்தேகமாகவே இருக்கிறது. இவ்வளவு பெரிய மாறுபாடு கொண்ட அப்பிராயங்களை அவர்கள் அடைந்து வருவதற்கு அவர்கள் என்ன காரணத்தைச் சொல்லக் கூடும்? இவை நாணய உலகத்தை திருப்தி செய்ய முடியுமா? திரு. ராஜா வெகு காலமாக தனித் தொகுதியையே ஆதரித்து வந்திருக்கின்றார்.

அப்படியிருக்க அவர், தான் வாக்குரிமைக் கமிட்டிக்கு தனித்த முறையில் அனுப்பிய யாதாஸ்தில் கூட்டுத் தொகுதியைப் பற்றியோ, தனித் தொகுதியைப் பற்றியோ, ஒன்றும் சொல்லாமல் மௌனமாய் இருந்து விட்டது கவனிக்கத்தக்கது. அவர் உடன்படிக்கை கையெழுத்திடுவதற்கு பத்து அல்லது பன்னிரண்டு நாள்களுக்கு முன்பு தான் அவர் தன் யாதாஸ்தை அனுப்பியிருக்கிறார். திரு. ராஜாவைப் போலவே திரு. கவாயும் தான் அகில இந்திய தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சங்கத்தின் சார்பாக அனுப்பிய யாதாஸ்தில் தேர்தல் தொகுதி விஷயமாக வேண்டுமென்றே மவுனம் சாதித்து விட்டதாகத் தாமே ஒப்புக் கொண்டிருக்கிறார். கூட்டுத் தொகுதியில் தங்களுக்குள்ள புதிய நம்பிக்கையையும் தீர்மானத்தையும் அவர்கள் நல்ல சந்தர்ப்பத்திலும் என பகிரங்கப்படுத்திக் கொள்ளவில்லை என்று யாரும் கேட்கலாம்.

**- 'குடிஅரசு', 10.04.1932**

■




# 5

# அம்பேத்கரின் வெடிகுண்டு

## ஆலயப்பிரவேசம் சுயமரியாதைக்கு விரோதம்

ஆலயப் பிரவேச மசோதாவைப் பற்றி டாக்டர் அம்பேத்கரின் அறிக்கையின் சுருக்கம்:-

“தற்போது தோழர் இரங்கையரின் மசோதாவானது தாழ்த்தப்பட்ட வகுப்பார் ஆதரிக்கத்தகுந்ததாயில்லை. அது மெஜாரிட்டியாரின் இஷ்டப்படி நடக்க வேண்டும் என்கின்ற கொள்கையை உடையதாக இருக்கின்றது. இந்த மாதிரி கொள்கைகளால் பெரிய மாறுதல்களை உண்டாக்கிவிட முடியாது. ஆதலால், இது சனாதன தர்மிகளுக்கே மிகவும் அனுகூலமானது. இம்மசோதாவானது தாழ்த்தப்பட்டவர்களுக்கு கோயில் பிரவேசம் கொடுத்தாக வேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்துவதில்லை. சீக்கிரத்தில் கிடைத்து விடுமென்று நம்புவதற்குமில்லை. கோயில் பிரவேசத்துக்கு மெஜாரிட்டி ஓட்டு கிடைத்து விடுமென்றும் சுலபத்தில் நினைத்து விட முடியாது.

மசோதாவின் கர்த்தாவே மெஜாரிட்டி கிடைத்து விடுமென்பதற்கு ஆதாரமில்லையென்று சங்காராச்சாரியாருக்கு எழுதியிருக்கிறார். குருவாயூரில் மெஜாரிட்டி ஓட்டு கிடைத்ததாகச் சொல்லப்பட்டாலும், அது மகாத்மாவின் உயிரைப் பலியிடப்போவதாய் பயப்படுத்தியதன் மீது கிடைத்த ஓட்டுகளாகும்.

தீண்டாமையை ஒரு குற்றமான காரியமென்று மசோதா சொல்லவில்லை. அதுவும் ஒரு சாதாரண செய்தியைப் போலவே பாவிக்கப்படுகிறது.


குடி அரசு

# அம்பெத்காரின் வெடிகுண்டு.

## ஆலயப்பிரவேசம் சுயமரியாதைக்கு விரோதம்.

வருணச்சிரமம் ஒழியாவிட்டால் வேறு மதத்திற்குப் போய்விடுவோம்.

## காந்தியின் வருணச்சிரமத்தைப்பற்றி 'தமிழ் நாடு' எழுதுவது.

தீண்டாமையைப் பாவிப்பது சட்ட விரோதமாக பாவிக்க வேண்டுமென்று மசோதா சொல்லவில்லை. மெஜாரிட்டியார் சம்மதமில்லாவிட்டால் ஆலயப் பிரவேசத்திற்கு என்றென்றைக்குமே அனுமதி கிடையாதென்பதை இம்மசோதா உறுதிப்படுத்துகிறது.

தீண்டாமை பாவிப்பது ஒரு குற்றமான காரியம் என்று சட்டம் செய்வதாய் இருந்தால் ஒழிய, தாழ்த்தப்பட்ட மக்கள் இந்த மசோதாவை ஆதரிக்க முடியாது.

இந்த மசோதாவால் மகாத்மா எப்படி திருப்தியடைந்தார் என்பது எனக்கே விளங்கவில்லை.

இது தாழ்த்தப்பட்டவர்களுக்கு கண்டிப்பாய் திருப்தி தரத்தக்கதல்ல யாதொரு பிரயோஜனமும் மற்ற வெறும் ஆலயப் பிரவேசத்தில் தங்கள் சக்தியையும் கவனத்தையும் செலுத்த தாழ்த்தப்பட்டோர்கள் விரும்பவில்லை.

அன்றியும் இன்றைய ஆலயப் பிரவேசம் என்பது தாழ்த்தப்பட்டவர்களின் சுயமரியாதைக்கு விரோதமானது.

எப்படியெனில் முன்னர் அய்ரோப்பியர்களின் வீடுகளின் முன்புறம் “நாய்களும் இந்தியர்களும் பிரவேசிக்கக் கூடாது” என்று ஒரு போர்டு எழுதி தொங்கவிடப்பட்டிருக்கும். அதைப் பார்த்த ஓர் இந்தியனாவது தன்னை அந்த அய்ரோப்பியனின் வீட்டிற்குள் செல்ல அனுமதி கொடுக்க வேண்டுமென்று கெஞ்சியதே கிடையாது. அது போலவே இந்து கோவில்களிலும் “தீண்டாதார்கள் தவிர எல்லா இந்துக்களும் நாய்கள் உள்பட எல்லா மிருகங்களும் ஆலயங்களுக்குள் பிரவேசிக்கலாம்” என்கின்ற போர்டு எழுதித் தொங்கவிட்டிருப்பது போல் இருக்கிறது.

இதை அறிந்த சுயமரியாதையுள்ள எந்த தீண்டாதாராவது இம்மாதிரி இழிவுபடுத்தப்பட்ட இடத்துக்குள் பிரவேசிக்க ஆணவம் கொண்ட இந்துக்களிடம் கெஞ்ச முடியுமா என்பதை யோசித்தால் அதிலுள்ள இழிவு விளங்கிவிடும்.

தாழ்த்தப்பட்டோர்களுக்கு கோவில் பிரவேசமளிப்பதே ஒரு பிரமாதமான காரியமென்றும், அதுவே தான் அவர்களுடைய முற்போக்கிற்காக செய்ய வேண்டிய முடிவான காரியமென்றும் இந்துக்கள் கருதியிருப்பார்களேயானால் தாழ்த்தப்பட்டவர்கள் இதோடு திருப்தியடைந்து விட முடியாது.

இந்து சமூகம் தங்களை (தீண்டாதார்களை) சேர்த்துக் கொள்ள மறுத்துவிட்டதென்று கருதி வேறு புகலிடம் (மதம்) தேடிக் கொள்வார்கள்.

அப்படிக்கில்லாமல் கோவில் பிரவேசமென்பது முதற்படியென்றும், இன்னும் மற்ற எல்லாவித முற்போக்கிற்கும் உதவி செய்யக்கூடுமென்றும் மகாத்மா உள்பட எல்லோரும் கருதுவார்களேயானால் அதைத் தாழ்த்தப்பட்டவர்கள் ஆதரிக்கக் கூடும்.

தாழ்த்தப்பட்டவர்களின் லட்சியமெல்லாம் தாழ்த்தப்பட்டவர்கள் சமூக வாழ்வில் சமத்துவமளிக்கும் ஒரு மதத்தில் சேரவே அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு சமூகத்தில், அச்சமூக மக்களில் சிலருக்கு கேடு விளைவிக்கக் கூடிய காரியம் இன்னதென்று நன்றாய் விளங்கிய பின்னரும் மத சாக்கைக்காரணமாகக் கொண்டு அக்கேட்டை ஒழிக்க முடியாதென்று சொல்லுவது மிக மிக இழிவான காரியமாகும். இவ்வித கொடுமைகளை ஆதரிக்கும் ஒரு மதத்தை இனிமேல் சார்ந்திருப்பதில்லை என்று தாழ்த்தப்பட்டவர்கள் கங்கணம் கட்டிக் கொண்டார்கள். இந்து மதத்தை தங்கள் மதமென்று தாழ்த்தப்பட்டவர்கள் ஒப்புக் கொள்ள வேண்டுமாயின் இந்து மதத்தில் சமதர்மம் ஏற்பட வேண்டுமென்று தான் அவர்கள் விரும்புகின்றார்கள். ஆலயப் பிரவேசம் ஏற்பட்டு விட்டதனாலேயே அம்மதத்தில் சமதர்மம் ஏற்பட்டு விடுமென்று சொல்ல முடியாது. ஜாதிய பிரிவுகளும், வருணாசிரம பிரிவுகளும் ஒழிக்கப்பட்டாக வேண்டும். அவை தான் எல்லாவித உயர்வு தாழ்வுகளுக்கும், ஜாதி முறைகளுக்கும் பிறப்பிடமாக இருக்கின்றன. ஆகவே இந்த ஜாதி முறையும் வருணாசிரம தர்மமும் ஒழிக்கப்பட்டாலொழிய தாழ்த்தப்பட்டவர்கள் கோவில் பிரவேசத்தை தள்ளிவிடுவதோடு இந்து மத நம்பிக்கையையும் ஒழித்து விட வேண்டியவர்களாவார்கள். ஒரு சமயம் தற்கால சாந்தியாக கோவில் பிரவேசத்தை ஒப்புக் கொள்ளுவதானது பின்னாலே வருணாசிரம தர்மத்தையும், ஜாதி முறையையும் ஒழிப்பதற்கு வேலை செய்வதைத் தடுத்துவிடாதென்று ஒரு சமாதானம் சொல்ல வரலாம். அது எப்படியிருந்த போதிலும் தோழர் காந்தி வருணாசிரமத்தையும், ஜாதிப் பிரிவையும் ஒழிப்பதை ஒப்புக் கொள்ளுகிறாரா என்பதையும், வருணாச்சிரமத்தை ஒழிக்க

நான் முயற்சி செய்தால் அப்பொழுது காந்தி என்னோடு சேர்வாரா? என்பதையும் நன்றாய் தெரிந்த பிறகு தான் நான் கோவில் பிரவேச மசோதாவை ஆதரிப்பதாகவோ, மற்றும் தோழர் காந்தியோடு சேர்ந்து வேலை செய்வதாகவோ சொல்ல முடியும். ஆகையால் தோழர் காந்தி வருணாசிரமத்திற்கு அனுகூலமாக இருப்பாரேயானால் வருணாசிரம விஷயத்தில் தோழர் காந்தி வருணாசிரமிகளோடு சேர்வாரேயானால் இப்பொழுதிருந்தே நான் அவரோடு இருக்கவோ ஒத்துழைக்கவோ முடியாது.”

**- ‘குடிஅரசு’, 19.02.1933**

■

# 6

# அம்பேத்கரும், காந்தியும்

“ஹரிஜனம்” பத்திரிகையின் முதல் இதழ் 11ஆம் தேதி பிரசுரமாகிறது. அப்பத்திரிகைக்கு டாக்டர் அம்பேத்கர் கீழ்க்கண்ட செய்தியை அனுப்பியுள்ளார்.

“தீண்டாதார் என்பது ஜாதி வித்தியாச அமைப்பால் ஏற்பட்ட பயனாகும். ஜாதிகள் பல இருக்கும் வரை “தீண்டாதார்” என்பவரும் இருந்தே வருவர். ஜாதியையும் வருணாசிரமத்தையும் ஒழித்தால் ஒழிய “தீண்டாதாரின்” கதி மோட்சத்திற்கு வேறு வகையில்லை. ஹிந்து மதத்திலிருந்து இவ்வித பகைமையையும், கெட்ட முறையையும் ஒழித்தாலன்றி வரப்போகும் போராட்டத்தில் ஹிந்துக்கள் எதிர்த்து நின்று நிலைத்திருப்பது துர்பலம்.”

டாக்டர் அம்பேத்கரின் செய்தியைப் பற்றி மகாத்மா காந்தி “ஹரிஜனம்” பத்திரிகையிலே எழுதியதாவது:

“நான் இவ்வித (அம்பேத்கர் கொண்ட) கருத்து கொள்வதற்கில்லை. வருணாசிரம தருமமும் ஜாதி முறையும் தீமையானதென்று நான் நினைப்பதில்லை. ஜாதி முறையில் சில குறைபாடுகள் இருக்கின்றன. ஆனால், தீண்டாமையைப் போல் அதில் பாப (குற்ற) மெதுவுமில்லை. தீண்டாமை என்பது ஜாதி முறையின் பயனென்று கூறுவது “தேகமே மலங்கள் உற்பத்திக்கு காரணம்” என்று கூறுவதற்கு ஒப்பாகும். தீண்டாமை இருக்கிறதே என்று ஜாதி முறையை ஒழிப்பதானது மலங்களிலிருக்கிறதே என்று தேகத்தை அழிப்பதற்கு ஒப்பாகும்.



12 குடி அரசு. ஆங்கீரஸ-ஹூ மாசி-ம் ௨-௳

'மெயில்' பத்திரிகை யின் கூற்று.

திருவாங்கூரில் இராமசாமியும், கேளப்பனும்.

அம்பேத்காரும், காந்தியும்.

டாக்டர் அம்பேத்கார் அபிப்பிராயம்.

"ஹரிஜனம்" பத்திரிகையின் முதல் இதழ் 11-ந்தேதி பிரசுரமாகிறது. அப்பத்திரிகைக்கு டாக்டர் அம்பேத்கார் கீழ்க்கண்ட செய்தியை அனுப்பியுள்ளார்.

"தீண்டாதார் என்பது ஜாதிவித்தியாச அமைப்பால் ஏற்பட்ட பயனாகும். ஜாதிகள் பல இருக்கும் வரை "தீண்டாதார்" என்பவரும் இருந்தே வருவர். ஜாதியையும் வருணாச்சிரமத்தையும் ஒழித்தாலொழிய "தீண்டாதாரின்" கதிமோட்சத்திற்கு வேறு வகையில்லை. ஹிந்து மதத்திலிருந்து இவ்வித பகைமையையும், கெட்ட முறையையும், ஒழித்தாலன்றி வரப்போகும் போராட்டத்தில் ஹிந்துக்கள் எதிர்த்து நின்று நிலைதிருப்பது துர்லபம்."

காந்தியின் பதில்.

டாக்டர் அம்பேத்காரின் செய்தியைப்பற்றி மகாத்மா காந்தி "ஹரிஜனம்" பத்திரிகையிலேயே எழுதுவதாவது:—

"நான் இவ்வித (அம்பேத்கார் கொண்ட) கருத்து கொள்வதற்கில்லை. வருணாச்சிரம தருமமும் ஜாதி முறையும் தீமையானதென்று நான் நினைப்பதில்லை. ஜாதிமுறையில் சில குறைபாடுகளிருக்கின்றன. ஆனால் தீண்டாமையைப்போல் அதில் பாப(குற்ற)மெதுவுமில்லை. தீண்டாமை ...

தீண்டாமை ஒழிந்ததும், ஜாதி முறை சுத்தப்படும். அதாவது உண்மை வருணாசிரம தர்மமேற்படும். இந்து சமூகத்தில் பாகுபாடுகளிலிருந்து (நாலு வருண தருமங்களிலிருந்து) ஒவ்வொரு அம்சமும் பரஸ்பர உதவியாக நின்று ஒன்றுக்கொன்று உயர்வு தாழ்வின்றி சமமாக இந்து ஹிந்துமத மனத்திற்கும் ஒவ்வொரு அம்சமும் ஆதரவளித்து

நிற்க வேண்டுமென்பதே எனது மனப்பூர்வமான நம்பிக்கை. அவ்வித வருணாசிரம தர்மத்திலேயே எனக்கு பூரண நம்பிக்கை. வருணாசிரமத்தை ஒழித்தாலன்றி தீண்டாமை நீங்காதென்று கூறும் டாக்டர் அம்பேத்கர் போன்றவர்களினின்றும் நான் ஆதி முதல் வேறான அபிப்பிராயம் கொண்டிருக்கிறேன்" என்று மறுமொழி கூறி இருக்கிறார்.

**- 'குடிஅரசு', 19.02.1933**

■




# 7

# சபாஷ் அம்பேத்கர்!

தோழர் டாக்டர் அம்பேத்கர் நாசிக்கில் கூடிய பம்பாய் மாகாண ஆதி இந்துக்கள் மகாநாட்டில் தலைமை வகித்துச் செய்த தலைமைப் பிரசங்கத்தில்,

"மேல் ஜாதிக்காரர்கள் என்று சொல்லிக் கொள்ளுகின்றவர்களிடத்தில் நம்மீது கருணை ஏற்படும்படி நாம் செய்து வந்த முயற்சிகள் எல்லாம் வீணாய்ப் போய் விட்டன.

இனி அவர்களிடத்தில் சமத்துவமாயும், ஒற்றுமையாயும் வாழ முயற்சித்து நம் சக்தியையும், உழைப்பையும், பணத்தையும் செலவழிப்பது வீண் வேலையாகும். நமது குறைகளும், இழிவுகளும் மேல் ஜாதிக்கார இந்துக்களால் தீர்க்கப்படும் என்று எதிர்பார்ப்பது ஏமாற்றத்தைத் தான் அளிக்கும்.

இனி நாம் செய்ய வேண்டியது என்ன என்கின்ற விஷயத்தில் நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன். அம் முடிவு என்னவென்றால், நாம் இந்து மதத்தை விட்டு அடியோடு விலகி விடுவது என்பதுதான். நமக்கு யார் சுதந்திரம் கொடுக்க மறுக்கிறார்களோ அவர்களை இனி நாம் கெஞ்சக் கூடாது. அவர்களது சம்பந்தத்தை இனி நாம் விலக்கிக் கொள்ள வேண்டும். நாம் நம்மை இந்துக்கள் என்று இனி கூறிக்கொள்வது கூடாது.

அதனால்தான் மேல் ஜாதிக்காரர்கள் நம்மை இழிவாகவும் கொடுமையாகவும் நடத்துகிறார்கள்.

நாம் வேறு மதத்தைச் சேர்ந்தவர்களாய் இருந்தால் நம்மை இப்படி கொடுமைப்படுத்த அவர்களுக்குத் துணிவு இருக்காது.





10 குடி அரசு யுவஹு ஐப்பசி-மீ 4உ

# குடி அரசு.

ஈரோடு, 1935-ஹு அக்டோபர்-மீ 20-உ

## சபாஷ் அம்பத்கார்.

(1)

தோழர் டாக்டர் அம்பத்கார் நாசிக்கில் கூடிய பம்பாய் மாகாண ஆதி இந்துக்கள் மகாநாட்டில் தலைமை வகித்துச் செய்த தலைமைப் பிரசங்கத்தில்,

"மேல் ஜாதிக்காரர்கள் என்று சொல்லிக்கொள்ளுகின்றவர்களிடத்தில் நம்மீது கருணை ஏற்படும்படி நாம் செய்து வந்த முயற்சிகள் எல்லாம் வீணாய்ப் போய்விட்டன.

இனி அவர்களிடத்தில் சமத்துவமாயும், ஒற்றுமையாயும் வாழ முயற்சித்து நம் சக்தியையும், உழைப்பையும், பணத்தையும் செலவழிப்பது வீண் வேலையாகும். நமது குறைகளும் இழிவுகளும் மேல் ஜாதிக்கார இந்துக்களால் தீர்க்கப்படும் என்று எதிர்பார்ப்பது ஏமாற்றத்தைத்தான் அளிக்கும்.

இனி நாம் செய்ய வேண்டியது என்ன என்கின்ற விஷயத்தில்நான்ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். அம்முடிவு என்னவென்றால்,

நாம் இந்து மதத்தை விட்டு அடியோடு விலகி விடுவது என்பதுதான்.

நமக்கு யார் சுதந்திரம் கொடுக்க மறுக்கிறார்களோ அவர்களை இனி நாம் கெஞ்சக் கூடாது. அவர்களது சம்மந்தத்தை இனி நாம் விலக்கிக் கொள்ள வேண்டும்.

நாம் நம்மை இந்துக்கள் என்று இனி கூறிக்கொள்வது கூடாது.

அதனால்தான் மேல் ஜாதிக்காரர்கள் நம்மை இழிவாகவும கொடுமையாகவும் நடத்துகிறார்கள்.

நாம் வேறு மதத்தைச் சேர்ந்தவர்களாய் இருந்தால் நம்மை இப்படி கொடுமைப்படுத்த அவர்களுக்கு துணிவு இருந்திருக்காது.

எந்த மதத்தினர் உங்களுக்கு சம அந்தஸ்து கொடுத்து சமத்துவமாய் நடத்துகிறார்களோ அப்படிப்பட்ட மதம் எதுவாயினும் அதில் சேர்ந்துகொள்ளுங்கள்.

பிறக்கும்போதே நான் தீண்டப்படாதவனாய்ப் பிறந்தேன் என்றாலும் அது நான் செய்த குற்றமல்ல. ஆனால் இறக்கும்போது நான் தீண்டப்படாதவனாய் இறக்கமாட்டேன். அதற்கு மார்க்கம் என் கையிலேயே இருக்கிறது.

அதாவது நான் ஒரு இந்துவாய் இறக்கப்போவதில்லை" என்று பேசி இருக்கிறார்.

இப்பேச்சுக்குப் பிறகு சுமார் 15000 பேர்கள் கூடி உள்ள அம்மகாநாட்டில் ஏகமனதாய் ஒரு தீர்மானம் நிறைவேறி இருக்கிறது.

அதாவது,

"ஆதி இந்துக்கள் இந்து மததத்தை விட்டு அடியோடு விலகிவிட வேண்டும். சமத்துவ பாவிப்பு உள்ள வேறு எந்த மதத்திலாவது சேர்ந்துகொள்ள வேண்டும்" என்பதாகும்.

இதற்கு இந்துக்கள் என்ன பதில் சொல்லுகிறார்கள்,

"வருணாச்சிரமமும் கீதை உபதேசமும எனது இரு சுவாசங்கள்" என்றும்,

"இந்து மதமே நானாய் இருக்கிறேன்" என்றும் சொல்லும காந்தியாரும்

மதத்தில் நாங்கள் பிரவேசிப்பதில்லை என்றும், பழய கலைகளையும் பழய பழக்க வழக்கம் தொழில்முறை ஆகியவைகளையும் வெகு பத்திரமாய் காப்பாற்றிக் கொடுப்போம் என்றும்,

இந்துக்களுக்கும் வருணாச்சிரம தர்மிகளுக்கும் வாக்குறுதியும் பாதுகாப்பும் அளித்திருக்கும் "சமதர்ம" காங்கிரஸ்காரர்களும என்ன பதில் சொலலப்போகிறார்கள்.

தோழர் அம்பத்கார் அவர்கள் பேசியிருக்கும் பேச்சும், பம்பாய் மாகாண ஆதி இந்துக்கள் மகாநாட்டில் தீர்மானித்து இருக்கும் தீர்மானமும் புதிதல்ல. அல்லது அவர்களே முதல் முதல் கண்டுபிடித்த சொந்தக் கருத்தல்ல.

ஏனெனில்,

இந்து மதத்தை பார்ப்பனரல்லாத மக்கள் விட்டுவிட வேண்டுமென்றும், யாரும் தங்களை இந்துக்கள் என்று சொல்லிக்கொள்ளக்கூடாது என்றும், சுயமரியாதை இயக்கமானது 1925 முதலே சங்குநாதம் செய்து வருகிறது.

சென்ற ஜன கணிதத்தில் அனேக ஜாதி இந்துக்கள் என்பவர்களே தங்களை இந்துக்கள் அல்ல என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள்.

தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தீண்டப்படாத வகுப்பு என்பதைச் சேர்ந்தவர் அல்ல என்று சொல்லப்படுபவரானாலும், தான்சாகும்போது இந்துவாய்ச் சாகப்போவதில்லை என்று சுமார் 10 வருஷத்துக்கு முன்பே சொல்லி இருக்கிறார்.

அது மாத்திரமல்லாமல் இந்து மதம் என்பதாக ஒரு மதமேஇல்லையென்றும், அது ஜாதிப் பாகுபாட்டின் பயனாய் பயன் அனுபவிக்கும் சோம்பேறிக் கூட்டத்தின் கற்பனை என்றும் சொல்லி அந்தப்படி பல மகாநாடுகளில் பல தீர்மானங்களும் செய்யச் செய்திருக்கிறார்.

இவ்வளவோடு மாத்திரமல்லாமல் மனு நூலையும் இராமாயணத்தையும் சுட்டெரிக்க வேண்டுமென்று, 1922ல் திருப்பூரில் கூடியசென்னைமாகாண தமிழ்நாடு காங்கிரஸ் மகாநாட்டில் மாகாண காங்கரஸ் கமிட்டி காரியதரிசியாய் இருக்கும் போதே கூறி இருக்கிறார்,

அந்தப்படியே பல சுயமரியாதை மகாநாட்டில் ராமாயணமும் மனுதர்ம சாஸ்திரங்களும் சுட்டெரிக்கப்பட்டுமிருக்கின்றன.

மற்றும் கேரள தேசத்து அதாவது மலையாளம் கொச்சி திருவாங்கூர் தேசத்து தாழ்த்தப்பட்ட மக்கள் என்பவர்களாகிய தீயர், ஈழவர், நாடார், பில்லவா ஆகிய சுமார் 20 அல்லது 30 லட்சம் ஜனத்தொகை கொண்ட சமூகம் தங்களது மகாநாட்டிலும் தாங்கள் இந்து மதத்தை விட்டுவிட வேண்டும் என்றும், தங்களை இனி யாரும் இந்துக்கள் என்று சொல்லிக்கொள்ளக் கூடாது என்றும், தங்களுக்கு மதத்தில் நம்பிக்கையே இல்லை என்றும் பல தீர்மானங்கள் இந்த 6, 7 வருஷ காலமாகவே 10000-க்கணக்கான மக்கள் கூட்டத்தில் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டு வந்திருக்கின்றன.

கடைசியாக 1933ல் கூட்டப்பட்ட S. N. D. P. யோகம் என்னும் அவர்களது சமூக மகாநாட்டில் மிதவாதி பத்திராதிபரும் பெரிய செல்வரும் சென்னை சட்டசபை அங்கத்தினருமான தோழர் சி. கிருஷ்ணன் B. A., B. L., அவர்களது தலைமையில் "ஈழவ சமூக மக்களுக்கு மதத்தில் நம்பிக்கை இல்லை. ஆதலால் ஈழவ சமூக மக்கள்தங்களை இனிமேல் இந்துக்கள் என்று யாரும் சொல்லிக் கொள்ளக் கூடாது"

என்று தீர்மானித்து இருக்கிறார்கள்.

ஆகவே பம்பாய் மாகாண ஆதி இந்துக்கள் மகாநாட்டுத் தீர்மானமும் தலைவர் அம்பேத்கார் அவர்களது வீர கர்ஜனையும் எதுவும் புதிதல்ல.

இவற்றிற்கு இதுவரை காந்தியாரும், காங்கிரசுக்காரரும், வருணாச்சிரமிகளும், பார்ப்பனர்களும், இந்து மத பாதுகாப்பாளர்களும் என்ன பதில் சொல்லி வந்தார்களோ, எப்படி கருதினார்களோ அப்படியேதான் இதையும் கருதுவார்கள்—இதற்கும் பதில் சொல்லுவார்கள் என்பதில் சிறிதும் அய்யமில்லை.

தீண்டப்படாதவர்கள் விஷயமாகவோ, ஜாதி வித்தியாசம் விஷயமாகவோ, இந்து மத சீர்திருத்த விஷயமாகவோ இந்து மதம் என்றும், சாதிவித்தியாசம் என்றும் ஏற்பட்ட காலம் முதலே முயற்சிகள் செய்யப்பட்டுத்தான் வந்திருக்கின்றன.

கபிலர், திருவள்ளுவர், ராமானுஜர் முதலாகியவர்கள் "தெய்வத்தன்மையில்" இருந்து பாடுபட்டிருப்பதாய் சரித்திரம் கூறுகின்றன. புத்தர் முதலிய அரசர்கள் பாடுபட்டிருப்பதாய் ஆதாரங்கள் கூறுகின்றன.

"எந்த மதத்தினர் உங்களுக்குச் சம அந்தஸ்து கொடுத்து சமத்துவமாய் நடத்துகிறார்களோ அப்படிப்பட்ட மதம் எதுவாயினும் அதில் சேர்ந்து கொள்ளுங்கள்".

பிறக்கும்போதே நான் தீண்டப்படாதவனாய்ப் பிறந்தேன் என்றாலும், அது நான் செய்த குற்றமல்ல. ஆனால், இறக்கும்போது

நான் தீண்டப்படாதவனாய் இறக்க மாட்டேன். அதற்கு மார்க்கம் என் கையிலேயே இருக்கிறது.

அதாவது நான் ஓர் இந்துவாய் இறக்கப் போவதில்லை'' என்று பேசி இருக்கிறார்.

இப்பேச்சுக்குப் பிறகு சுமார் 15000 பேர்கள் கூடியுள்ள அம்மகாநாட்டில் ஏகமனதாய் ஒரு தீர்மானம் நிறைவேறி இருக்கிறது.

அதாவது,

**``ஆதி இந்துக்கள் இந்துமதத்தை விட்டு அடியோடு விலகிவிட வேண்டும். சமத்துவ பாவிப்பு உள்ள வேறு எந்த மதத்திலாவது சேர்ந்து கொள்ள வேண்டும்''** என்பதாகும்.

இதற்கு இந்துக்கள் என்ன பதில் சொல்லுகிறார்கள், ``வருணாசிரமமும், கீதை உபதேசமும் எனது இரு சுவாசங்கள்'' என்றும், ``இந்து மதமே நானாய் இருக்கிறேன்'' என்றும் சொல்லும் காந்தியாரும்,

மதத்தில் நாங்கள் பிரவேசிப்பதில்லை என்றும், பழைய கலைகளையும் பழைய பழக்க வழக்கம், தொழில்முறை ஆகியவைகளையும் வெகு பத்திரமாய் காப்பாற்றிக் கொடுப்போம் என்றும்,

இந்துக்களுக்கும் வருணாசிரம தர்மிகளுக்கும் வாக்குறுதியும் பாதுகாப்பும் அளித்திருக்கும் ``சமதர்ம'' காங்கிரஸ்காரர்களும் என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

தோழர் அம்பேத்கர் அவர்கள் பேசியிருக்கும் பேச்சும், பம்பாய் மாகாண ஆதி இந்துக்கள் மகாநாட்டில் தீர்மானித்து இருக்கும் தீர்மானமும் புதிதல்ல. அல்லது அவர்களே முதன் முதல் கண்டுபிடித்த சொந்தக் கருத்தல்ல.

ஏனெனில்,

இந்து மதத்தை பார்ப்பனரல்லாத மக்கள் விட்டுவிட வேண்டுமென்றும், யாரும் தங்களை இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளக் கூடாது என்றும், சுயமரியாதை இயக்கமானது 1925 முதலே சங்கநாதம் செய்து வருகிறது.



சென்ற ஜன கணிதத்தில் அநேக ஜாதி இந்துக்கள் என்பவர்களே தங்களை இந்துக்கள் அல்ல என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள்.

தோழர் ஈ.வெ.ராமசாமி அவர்கள் தீண்டப்படாத வகுப்பு என்பதைச் சேர்ந்தவரல்ல என்று சொல்லப்படுபவரானாலும், தான் சாகும்போது இந்துவாய்ச் சாகப் போவதில்லை என்று சுமார் 10 வருஷத்துக்கு முன்பே சொல்லி இருக்கிறார்.

அதுமாத்திரமல்லாமல் "இந்துமதம் என்பதாக ஒரு மதமே இல்லை என்றும், அது ஜாதி பாகுபாட்டின் பயனாய் பயன் அனுபவிக்கும் சோம்பேறிக் கூட்டத்தின் கற்பனை என்றும் சொல்லி, அந்தப்படி பல மகாநாடுகளில் பல தீர்மானங்களும் செய்யச் செய்து இருக்கிறார். இவ்வளவோடு மாத்திரம் அல்லாமல் **மனு நூலையும், இராமாயணத்தையும் சுட்டெரிக்க வேண்டும்**" என்று, 1922இல் திருப்பூரில் கூடிய சென்னை மாகாண தமிழ்நாடு காங்கிரஸ் மகாநாட்டில் மாகாண காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியாய் இருக்கும்போதே கூறி இருக்கிறார்.

அந்தப்படியே பல சுயமரியாதை மகாநாட்டில் இராமாயணமும், மனுதர்ம சாஸ்திரங்களும் சுட்டெரிக்கப்பட்டும் இருக்கின்றன.

மற்றும் கேரள தேசத்து அதாவது மலையாளம், கொச்சி, திருவாங்கூர் தேசத்து தாழ்த்தப்பட்ட மக்கள் என்பவர்களாகிய தீயர், ஈழவர், நாடார், பில்லவா ஆகிய சுமார் 20 அல்லது 30 லட்சம் ஜனத்தொகை கொண்ட சமூகம் தங்களது மகாநாட்டிலும் தாங்கள் இந்து மதத்தை விட்டுவிட வேண்டும் என்றும், தங்களை இனி யாரும் இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளக் கூடாது என்றும், தங்களுக்கு மதத்தில் நம்பிக்கையே இல்லை என்றும், பல தீர்மானங்கள் இந்த 6, 7 வருஷகாலமாகவே 10000க்கணக்கான மக்கள் கூட்டத்தில் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டு வந்திருக்கின்றன.

கடைசியாக 1933இல் கூட்டப்பட்ட எஸ்.என்.டி.பி. யோகம் என்னும் அவர்களது சமூக மகாநாட்டில் மிதவாதி பத்திராதிபரும், பெரிய செல்வவானும், சென்னை சட்டசபை அங்கத்தினருமான தோழர்சி.கிருஷ்ணன், பி.ஏ., பி.எல்., அவர்களது தலைமையில், "ஈழவ சமூக மக்களுக்கு மதத்தில் நம்பிக்கை இல்லை. ஆதலால் ஈழவ சமூக மக்கள் தங்களை இனிமேல் இந்துக்கள் என்றும் யாரும் சொல்லிக் கொள்ளக் கூடாது" என்று தீர்மானித்து இருக்கிறார்கள்.

ஆகவே, பம்பாய் மாகாண ஆதி இந்துக்கள் மகாநாட்டுத் தீர்மானமும் தலைவர் அம்பேத்கர் அவர்களது வீர கர்ஜனையும் எதுவும் புதிதல்ல.

இவற்றிற்கு இதுவரை காந்தியாரும், காங்கிரசாரும், வருணாசிரமிகளும், பார்ப்பனர்களும், இந்துமத பாதுகாப்பாளர்களும் என்ன பதில் சொல்லி வந்தார்களோ, எப்படி கருதினார்களோ அப்படியேதான் இதையும் கருதுவார்கள். இதற்கும் பதில் சொல்லுவார்கள் என்பதில் சிறிதும் அய்யமில்லை.

தீண்டப்படாதவர்கள் விஷயமாகவோ, ஜாதி வித்தியாசம் விஷயமாகவோ, இந்து மத சீர்திருத்த விஷயமாகவோ இந்து மதம் என்றும், ஜாதி வித்தியாசம் என்றும் ஏற்பட்ட காலம் முதலே முயற்சிகள் செய்யப்பட்டுத்தான் வந்திருக்கின்றன.

கபிலர், திருவள்ளுவர், ராமானுஜர் முதலாகியவர்கள் "தெய்வத்தன்மையில்" இருந்து பாடுபட்டிருப்பதாய் சரித்திரம் கூறுகின்றது. புத்தர் முதலிய அரசர்கள் பாடுபட்டிருப்பதாய் ஆதாரங்கள் கூறுகின்றன. ராம்மோகன் ராய், மற்றும் சுவாமி தயானந்த சரஸ்வதி, ராமலிங்க சுவாமிகள், விவேகானந்தர் முதலிய ஞானவான்கள் முயற்சித்திருப்பதாய்ப் பிரத்தியட்ச அனுபவங்கள் கூறுகின்றன.

இவர்கள் எல்லாம் இன்று பூஜிக்கப்படுகிறார்கள் என்றாலும் காரியத்தில் ஒரு பயனும் ஏற்பட்டதாகக் கூற முடியாது.

மேற்கண்ட பெரியார்களுக்கு, சிஷ்யர்களாக 100 பேர்களோ, பதினாயிரம் பேர்களோ, ஒரு லட்சம் பேர்களோ இருக்கலாம்.

அவரவர்கள் ஸ்தாபனங்களில் ஒரு சில லட்சம் அங்கத்தினர்கள் இருக்கலாம். மற்றபடி காரியத்தில் நடந்ததென்ன என்று பார்த்தால் பழைய நிலைமையேதான் சட்டதிட்டங்கள் மூலம், வருணாசிரம கூட்டங்கள் மூலம் பத்திரப்படுத்தப்பட்டு வந்திருக்கிறது.

ஆகவே, இவ்விஷயத்தில் ஏதாவது ஒரு காரியம் தகுந்த அளவுக்கு நடைபெற வேண்டுமானால் மேல்கண்டபடி சுவாமிகள் என்றும், அவதாரங்கள் என்றும், மகாத்மா என்றும், பூஜிக்கப்படத்தக்கவர்கள் என்றும் சொல்லிக் கொள்ளுபவர்களால் ஒரு காரியமும் நடைபெறாது,



இவர்களைப் பண்டார சன்னதிகள், சங்கராச்சாரியார்கள் என்று சொல்லப்படுபவர்களுக்கு ஒரு படி மேலாகச் சொல்லலாம். ஆனால் பொது ஜனங்களால் வெறுக்கப்படுகிறவர்களாலும், தூற்றப்படுகின்றவர்களாலும் தான் அவசியமான ஏதாவது மாறுதல்கள் காரியத்தில் நடைபெறக் கூடும்.

எனவே, தோழர் அம்பேத்கர் அவர்களின் கர்ஜனையும், வீரமும், ஞானமும் நிறைந்த தீர்மானமும் பொது ஜனங்களால் எவ்வளவுதான் வெறுக்கப்பட்ட போதிலும், அவர் எவ்வளவுதான் தூற்றப்பட்ட போதிலும் அதுதான் தாழ்த்தப்பட்ட மக்கள் மாத்திரமல்லாமல் இந்தியாவிலுள்ள இந்துக்களில் பார்ப்பனரல்லாத மக்களாகிய 100க்கு 97 விகிதாசாரமுள்ள 24 கோடி இந்து மக்களின் விடுதலைக்கு சர்வசமய சஞ்சீவியாகப் போகிறது.

இதைப் பாராட்டும்போது நாம் சொல்வதெல்லாம் அம்பேத்கர் அவர்கள் பார்ப்பன சூழ்ச்சிக்கு ஏமாந்து மறுபடியும் இத்தீர்மானத்தை மாற்றிக் கொள்ளக் கூடாது என்பதோடு, வைதிகமும், மூடநம்பிக்கையும், குருட்டு பழக்க வழக்கமும் கொண்ட வேறு எந்த மதத்திலும் விழுந்து விடக்கூடாது என்றும் எச்சரிக்கை செய்கிறோம். அநேகமாய் மதங்கள் என்பவை எதுவும் ஏதோ ஒருவிதமான குருட்டு நம்பிக்கை மீதும், முரட்டுப் பிடிவாதத்தின் மீதும் தான் கட்டப்பட்டிருக்கின்றன. எல்லா மதங்களுக்கும் ஒரே அஸ்திவாரம் தான்.

ஆதலால், "ஒரு தப்பிதத்தின் பாவ நிவர்த்திக்கு ஆக மற்றொரு தப்பிதம் செய்யக் கூடாது" என்கின்ற பழமொழியை இந்தச் சமயத்தில் நன்றாய் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பது நமது ஆசையாகும்.

நிற்க,. தோழர் அம்பேத்கரின் வாக்குமூலத்துக்கும், பம்பாய் ஆதி திராவிட மகாநாட்டுத் தீர்மானத்துக்கும் காந்தியாரும், பார்ப்பனர்களும் என்ன பதில் சொன்னார்கள் என்று பார்ப்போம். தோழர் காந்தியார் தனது வழக்கமான சூழ்ச்சித் திறத்தைக் காட்டும் முறையில், "தோழர் அம்பேத்கர் இந்தப்படி பேசியதை நான் நம்பவில்லை" என்பதாகப் பாசாங்கு காட்டிவிட்டு பிறகு அந்தத் தீர்மானமும், அவரது பேச்சும் துர் அதிர்ஷ்டவசமானது என்றும், கோபத்தில் பேசியது என்றும், தீண்டாமை விஷயத்தில் ஏதோ அங்கொன்றும் இங்கொன்றுமாகத்தான் தவறுதல்

நடக்கின்றன என்றும், அதற்கு ஆக இப்படிச் செய்யக் கூடாது என்றும், அம்பேத்கருக்குக் கடவுளிடம் நம்பிக்கை இருக்குமானால்தான் தன் அபிப்பிராயங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று சொல்லிவிட்டு, மதம் என்பது ஒருவருக்கு மாற்றிக் கொள்ளக்கூடியது அல்ல என்றும், அது முடியாதது என்றும், மதம் மாறிவிட்டதனாலேயே தீண்டாமை ஒழிந்துவிடாது என்றும் சொல்லி, அம்பேத்கரை நாஸ்திகர் என்று ஜனங்கள் பழிக்கும்படி விஷமம் செய்து இருக்கிறாரே ஒழிய, அக் கொடுமைகளுக்குத் திருப்தியும் சாந்தியுமளிக்கத்தக்க வேறு எவ்வித சமாதானமும் சொல்லவில்லை. ஆகவே, காந்தியாரின் கருத்துகளை ஒரு வாக்கியத்தில் சொல்வதாய் இருந்தால் அம்பேத்கருடன் பந்தயம் கட்டுகிறார் என்றுதான் சொல்ல வேண்டும்.

அதாவது, உன்னால் முடியாது, உன் இஷ்டப்படி நடக்காது, உன்னால் ஆனதைப் பார், உன்னை தொலைத்து விடுகிறேன் என்பதுதான் கருத்தாகும்.

மற்றபடி காங்கிரஸ்காரர்களுடையவும், பார்ப்பனர்களுடையவும் பதில் என்ன என்று பார்ப்போமானால்,

“சுதேசமித்திரன்” பத்திரிகையானது அம்பேத்கரைப் பரிகாசம் செய்கிறது.

அதாவது, “ஏரியோடு கோபித்துக் கொண்டு கால் கழுவாமல் போகிறார் அம்பேத்கர். அதற்கேற்ற தீர்மானம் செய்திருக்கிறது ஆதி இந்து மகாநாடு” என்று ஏளனம் செய்திருக்கிறது.

அதாவது ஜாதி இந்துக்கள் சமூகம் ஏரியைப் போல் இருக்கிறதென்றும், அம்பேத்கரும் 6 கோடி தீண்டப்படாத மக்களும் (வெளிக்குப் போய்) கால் கழுவாத மக்கள் என்றும், வெளிக்குப் போய் கால் கழுவாமல் அசுத்தமாய் இருக்கிறவன் ஏரியுடன் கோபித்துக் கொண்டால் ஏரிக்கு ஒரு குறைவும் ஏற்படாதென்றும், ஏரி சுத்தமாக இருக்கும் என்றும், கோபித்துக் கொண்டு கால் கழுவாமல் போகிறவன் தான் அசிங்கத்துடன் இருக்க வேண்டும் என்றும், ஆதலால் அம்பேத்கரும் தீண்டப்படாதவர்களும் வேறு மதத்துக்கும் போய்விட்டால் ஜாதி இந்துக்களுக்கு லாபமே ஒழிய நஷ்டமில்லை என்றும் பொருள்பட அதற்கு ஏற்ற பழமொழியைச் சொல்லுகிறது.



அதோடு, “நீண்டகாலப் பழக்கவழக்கங்களை திடீரென்று மாற்றிவிடமுடியாது.”

“தீண்டாமை ஒழிய வேண்டுமானால் தாழ்ந்த வகுப்பினரின் மனோபாவத்திலும் விசேஷ மாறுதல் ஏற்பட வேண்டும்.”

அம்பேத்கரின் பேச்சும் ஆதி இந்துக்களின் தீர்மானமும், “காரியத்தில் நடக்கக்கூடிய காரியம் அல்ல, வெறும் வாய் பேச்சு மிரட்டல்” என்கிறது.

டாக்டர் அம்பேத்கரே தான் வேறு மதத்துக்குப் போகக் கூடுமே ஒழிய, மற்ற தாழ்ந்த வகுப்பார் இவர் பேச்சை கேட்க மாட்டார்கள் என்றும் தைரியம் கொள்ளுகிறது.

அதோடு கூடவே அம்பேத்கரை நம்பாதீர்கள். நம்பி எந்த மதக்காரரும் அவரைச் சேர்த்துக் கொள்ளாதீர்கள் என்று மற்ற மதக்காரர்களுக்கும் எச்சரிக்கை செய்கிறது. கடைசியாக இதனால் எல்லாம் ஒன்றும் ஆகிவிடப் போவதில்லை என்றும் வீரம் பேசுகிறது.

மற்றபடி அக்ரகாரத் தெரு திண்ணைகளில் இருக்கும் மடிசஞ்சிகளும், அவர்களது வாரிசுகளும், காப்பிக் கடைகளிலும், வக்கீல்கள் தாழ்வாரங்களிலும் சுதேசமித்திரனின் பழமொழி போலவே அதைவிட சற்று மேன்மையாக,

“மூக்கு மயிர் பிடுங்கப்படுவதால் ஆள் பாரம் குறைந்து விடப் போகிறதா?” என்று அலட்சியமாய் பேசப்படுகின்றன.

ஆகவே, அம்பேத்கர் சொன்ன பேச்சும், தீர்மானமும் பல காலமாய் இருந்து வந்திருப்பதால், பழைய பாட்டானதால் பார்ப்பனர்களுக்கும், இந்து மதப் பித்தர்களுக்கும் சிறிதும் உறுத்தப் போவதில்லை என்பது உறுதி.

ஆனாலும், தோழர் அம்பேத்கருடைய பேச்சுக்கும், ஆதி இந்துக்கள் தீர்மானத்துக்கும் ஏதாவது மதிப்பு இருக்க வேண்டுமானால், அவர் உடனே இந்தக் காரியத்தை அதாவது ஆதி இந்துக்கள் ஆதி திராவிடர்கள் முதலிய தீண்டப்படாத வகுப்பு என்பவர்களிடையில் உடனே பிரச்சாரம் செய்து அவர்களை இந்து மதத்திலிருந்து வெளிக்கிளப்பிவிட

வேண்டும். தோழர் அம்பேத்கரை பொருத்தவரையில் சிறிது நாள் பொறுத்துத்தான் மதத்தைப் போக்கிக் கொள்ள வேண்டும்.

ஏனெனில், நமது பார்ப்பனர்களுக்கு இப்படிப்பட்ட ஆட்கள் இந்துமதத்தை விட்டுப் போய்விட்டால் இவர்களுடைய தொல்லை ஒழிந்தது என்று சந்தோஷமடைந்து விடுவார்கள். ஆகையால், மதம் மாறாமல் இருந்து கொண்டு எவ்வளவு பேர்களை மதத்திலிருந்து வெளியாக்கலாமோ அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டியது அம்பேத்கரின் முதல் கடமையாகும். பூனா ஒப்பந்தத்தால் ஏமாற்றப்பட்ட அம்பேத்கருக்கு இப்பொழுதாவது உண்மை கண்டு கொள்ள சந்தர்ப்பம் ஏற்பட்டதற்காக நாம் அவரை மனமாரக் கையாரப் பாராட்டுகிறோம்.

- 'குடிஅரசு' - தலையங்கம் - 20.10.1935

■

# 8

# அம்பேத்கரும் இந்து மதமும்

இந்து மதத்தில் இருந்து அம்பேத்கரும், தாழ்த்தப்பட்டவர்களும் மாத்திரமே அல்லாமல் இந்துக்கள் என்று சொல்லிக் கொள்பவர்களில் தீண்டாதவர்கள் என்பவர்கள் நீங்கிய சுமார் 17 கோடி பேர்களும் கூட இந்து மதத்தை விட்டு விலக வேண்டியவர்களாவார்கள்.

இந்து மதம் என்று ஒன்று குறிப்பாக இல்லை என்று காந்தியாரே ஒப்புக் கொள்ளுகிறார்.

இந்தியாவுக்கு முகமதியர்கள் முதலிய அயல்நாட்டார்கள் வந்த காலத்தில் இந்தியாவில் உள்ள பல்வேறு தேச வகுப்பு மக்கள் நடந்து கொண்டு வந்த நடவடிக்கைகளுக்கும், பழக்க வழக்கங்களுக்கும், பல்வேறு சமூகத்தாருடைய சடங்கு, பிரார்த்தனை, வழிபடு கடவுள்கள் முதலாகியவைகளுக்கும் சேர்த்து எல்லாவற்றிற்கும் ஒரே பெயராக இந்துமதம், அதாவது “இந்தியர்களின் மதம்” என்பதாகப் பெயரிட்டு விட்டார்கள்.

அக்காலத்தில் இருந்த திராவிடர்கள் பழக்க வழக்கங்களுக்கும் இந்துமதம் என்றும், ஆரியர் பழக்கவழக்கங்களுக்கும் இந்துமதம் என்றும், மலை நாட்டு மக்கள் பழக்கவழக்கங்களுக்கும் இந்துமதம் என்றும், ஆரிய சமாஜமும் இந்துமதம் என்றும், பிரம்மசமாஜமும் இந்து மதமும் என்றும், வேதாந்தமும் இந்து மதமென்றும், கடவுளையும், மதத்தையும், சரீரத்தையும், உயிரையும் துறந்த துறவறமும் இந்துமதம் என்றும், பவுத்தர்கள் பழக்கவழக்கங்களுக்கும் இந்துமதம் என்றும், நாஸ்திகர்கள் கொள்கைகளுக்கும் இந்துமதம் என்றும் இப்படிப் பல விதமாய் அவர்கள் அதாவது கிறிஸ்துவர்கள், முகமதியர்கள் தவிர,





# குடி அரசு.

ஈரோடு, 1935-ஹு அக்டோபர்-மீ 27-உ

## அம்பத்காரும், இந்துமதமும்.

II.

இந்து மதத்தில் இருந்து அம்பத்காரும், தாழ்த்தப்பட்டவர்களும் மாத்திரமே அல்லாமல் இந்துக்கள் என்று சொல்லிக்கொள்ளுபவர்களில் தீண்டாதவர்கள் என்பவர்கள் நீங்கிய சுமார் 17 கோடி பேர்களும் கூட இந்துமதத்தை விட்டு விலகவேண்டியவர்களேயாவார்கள்.

இந்து மதம் என்று ஒன்று குறிப்பாக இல்லை என்று காந்தியாரே ஒப்புக்கொள்ளுகிறார்.

இந்தியாவுக்கு மகமதியர்கள் முதலிய அயல் நாட்டார்கள் வந்த காலத்தில் இந்தியாவில் உள்ள பல்வேறு தேச வகுப்பு மக்கள் நடந்துகொண்டுவந்த நடவடிக்கைகளுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் பல் வேறு சமூகத்தாருடைய சடங்கு, பிரார்த்தனை, வழிபடு கடவுள்கள் முதலாகியவைகளுக்கும் சேர்த்து எல்லாவற்றிற்கும் ஒரே பெயராக இந்துமதம் அதாவது இந்தியர்களின் மதம் என்பதாக பெயரிட்டு விட்டார்கள்.

அக் காலத்தில் இருந்த திராவிடர்கள் பழக்க வழக்கங்களுக்கும் இந்து மதம் என்றும், ஆரியர்கள் பழக்க வழக்கங்களுக்கும் இந்து மதம் என்றும், மலைநாட்டு மக்கள் பழக்கவழக்கங்களுக்கும் இந்து மதம் என்றும், ஆரிய சமாஜமும் இந்து மதம் என்றும், பிரம்ம சமாஜமும் இந்துமதம் என்றும் வேதாந்தமும் இந்துமதம் என்றும் கடவுளையும் மதத்தையும் சரீரத்தையும் உயிரையும் துறந்த துறவறமும் இந்து மதம் என்றும் பவுத்தர்கள் பழக்க வழக்கங்களுக்கும் இந்து மதம் என்றும், நாஸ்திகர்கள் கொள்கைகளுக்கும் இந்து மதம் என்றும், இப்படிப் பலவிதமாய் அவர்கள் அதாவது கிறிஸ்தவர்கள் மகமதியர்கள் தவிர மற்ற எவர்களது நடவடிக்கைக்கும் இந்துமதம் என்றே பேர் வைத்து விட்டார்கள். அதாவது இந்தியர்களின் மதம் எனச் சொல்லி விட்டார்கள்.

ஆகவே இந்து மதம் என்றால் இந்தியர்கள் மதம் என்றுதான் அருத்தமே ஒழிய ஒரு தனிப்பட்ட குறிப்பான கொள்கைகளுக்கு இந்து மதம் என்று பெயரில்லை. என்றாலும் அக்காலத்தில் ஆரியர்கள் சிறிது செல்வாக்குப் பெற்று இருந்ததால் அவர்கள் தங்கள் பழக்க வழக்கம், சடங்கு, தங்களின் வழிபடு கடவுள்கள், ஆகியவைகளையே பிற இந்தியர்கள் மீதும் சுமத்தி அதற்கு அதிகமான செல்வாக்கை உண்டாக்கிவைத்துக் கொண்டிருந்தபடியால் ஆரியர்கள் பழக்க வழக்கம், சடங்கு, வழிபடு, கடவுள் அவர்களது இலக்கிய ஆதாரங்கள், சாஸ்திரங்கள் புராணங்கள் என்பன முதலியவைகளே இந்துக்களின் மதமாகவும் மத ஆதாரங்களாகவும் ஆக்கப்பட்டு விட்டன. ஆரியர்களுக்கு எதிர்ப்பானவைகளும் ஆரியர்கள் அல்லாதவர்களும்கூட விவகாரத்திற்கு இடமில்லாமல் போகட்டும் என்கின்ற காரியத்துக்காகவே எல்லாம் இந்து மதம் தான் எல்லோரும் இந்துக்கள்தான் என்றும், அதுவும் இந்து மதம் இதுவும் இந்துமதம் என்றும், இந்து மதத்தில் எல்லாக் கொள்கையும் உண்டு என்றும், ஒரு இந்து எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம், என்றும் பல சமயங்கள் சேர்ந்தது இந்து மதம் என்றும், அவ்வப்போது தோன்றிய பல பெரியார்களின் அபிப்பிராயங்கள் - எல்லாமுமே இந்துமதமாக இருக்கிறது என்றும், எந்த மதக்கருத்தும் இந்து மதத்தில் உண்டு என்றும், எப்படிப்பட்டவனும் இந்துவாய் இருக்கலாம் என்றும், புத்தர்கள் சமணர்கள் ஜெயினர்கள் எல்லாருடைய அபிப்பிராயமும் இந்து மதத்தில் இருந்து வந்ததுதான் என்றும், இந்து மதத்துக்கு பொருத்தமானதே என்றும் சொல்லி பொதுவாக இன்று முகமதியர்கள் கிறிஸ்தவர்கள் அல்லாத எவரும் இந்துக்கள் என்றே சொல்லக்கூடிய நிலைமை ஏற்படுத்திக்கொண்டார்கள்.

இந்துமதம் என்பதாக இந்துக்களுடைய பழய ஆதாரங்கள் என்று சொல்லும்படியான எதிலும்ஒரு வார்த்தை கூட கிடையாது.

இந்தியாவின் பெயரைக் குறிப்பதற்கு இந்துஸ்தான் என்று ஒரு வார்த்தை காணப்படலாமே என்னமோ அதுகூட நைரியமாய்ச் சொல்வதற்கு இல்லை. இந்தியா என்கின்ற பெயர்கூட இந்து மத ஆதாரங்கள் என்பவைகளில் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்து மதம் என்பதற்கு என்னதான் அருத்தம் என்று பழய அதாவது சுமார் 100, வருஷம் 200 வருஷம் முந்திய ஐரோப்பிய அகராதிகளையும்ஐரோப்பிய கலைகளையும் பார்ப்போமானால் மகமதியர்கள் அல்லாதவர்கள் அனுஷ்டிக்கும் மதம் என்றும், ஆரியர்களின் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுகிறவர்களுக்குச் சொல்லும் மதப்பெயர் என்றும், ஆரியர்கள் அனுஷ்டிக்கும் ஆச்சார அனுஷ்டானங்கள் என்றும் தான் காணப்படுகின்றனவே அன்றி வேறு ஒன்றும் சொல்லப்படுவதாகக் காணமுடியவில்லை.

இந்து மதம் பிரத்தியக்ஷத்தில் என்னமாய் இருக்கிறது என்று பார்ப்போமானால் விக்கிரகங்களை வணங்குவது, ஜாதி வித்தியாசங்களை-உயர்வு தாழ்வுகளை பாராட்டுவது ஆகிய இந்த இரண்டு காரியம் தான் இந்த உலகத்தில் வேறு எந்த தேசமக்களிடத்திலும் வேறு எந்த மதஸ்தரிடத்திலும் இல்லாத குணங்கள் கொண்டு இருந்து வருகிறது.

இந்த இரண்டுகாரியங்களைப்பற்றி அறிஞர்கள் என்பவர்கள் வெகுகாலத்துக்கு முன்பே தவறுதலானது என்றும் அவசியமற்றது என்றும் முடிவுகட்டி விட்டார்கள். அதற்கும் பல ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்உள்ள பெரியார்கள் என்பவர்களுடைய வாக்கும் உபதேசமும் இருந்துவருகிறது. இவைகளையும் இந்துமத ஆதாரமாகவும், அப்பெரியார்களையும் இந்துமதத்தில தெய்வீகாம்சம் பெற்றவர்கள் என்றும் சொல்லப்படுவதோடு விக்கிர ஆராதனையில் நம்பிக்கை இல்லாதவனும் ஜாதிவித்தியாசம் உயர்வு தாழ்வு ஆகியவற்றை வெறுப்பவனும் இகழ்பவனும் கூட இந்துதான் என்றும், அதற்கும் ஆதாரம் இந்துமதத்தில் இருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது.

ஆகவே இப்போது எது இந்துமதம் எது இந்துமதம் அல்லாதது என்று சொல்ல முடியாதநிலையில் இருக்கிறோம்.

ஆனால் தேசியத்தலைவர்கள் மதத்தலைவர்கள் என்று சொல்லப்பட்டவர்களான தோழர்கள் காந்தியார், மாளவியார் முதலாகியவர்கள் இந்து மதம் என்று எதைச்சொல்லுகிறார்கள் என்று பார்த்தால்வருணாச்சிரமத்தை பரிசுத்தமாக்கி நிலைநிறுத்துவது தான் இந்து மதம்என்கிறார்காந்தியார். களிமண்ணும் கங்கை ஜலமும்கூடவே இருக்கவேண்டியது தான் இந்து மதம் என்று செய்து காட்டுகிறார் மாளவியார்.

மகமதிய ஆதிக்கம் தலையெடுக்காமல செய்வது தான்இந்து மதம் என்கிறார்மூஞ்செயாரும் பரமானந்தனாரும். மற்றபடி சங்கராச்சாரிகளுடைய இந்து மதம் எப்படிப்பட்டது? இராமானுஜாச்சாரியாருடைய இந்து மதம் எப்படிப்பட்டது? பண்டாரசன்னதிகளுடைய இந்துமதம் எப்படிப்பட்டது? மனுதர்ம சாஸ்திர இந்துமதம் எப்படிப்பட்டது? இதிகாசமாகிய கீதையுடைய இந்து மதம் எப்படிப்பட்டது? புராணங்களுடைய இந்து மதம் எப்படிப்பட்டது? சைவர்களுடைய இந்து மதம் எப்படிப்பட்டது? மற்றும் பார்ப்பனரல்லாத சைவர்கள் இந்து மதமஎப்படிப்பட்டது? வைணவர்களுடைய இந்துமதம் எப்படிப்பட்டது? என்பவைகளைப் பற்றி நாம் விவரிக்க இதில்இடம்வைத்துக்கொள்ளவில்லை.

எப்படி இருந்தாலும் இஸ்லாமியர்களைப்போலவும் கிறிஸ்தவர்களைப் போலவும் மதம் என்பதற்குஇருந்துவரும் ஆதாரம்,கொள்கை, குறிப்பிட்டவர்களுடைய உபதேசம் என்

மற்ற எவர்களது நடவடிக்கைக்கும் இந்துமதம் என்றே பேர் வைத்து விட்டார்கள். அதாவது இந்தியர்களின் மதம் எனச் சொல்லி விட்டார்கள்.

ஆகவே, "இந்துமதம் என்றால் இந்தியர்கள் மதம் என்றுதான் அர்த்தமே ஒழிய, ஒரு தனிப்பட்ட குறிப்பான கொள்கைகளுக்கு இந்துமதம் என்று பெயரில்லை" என்றாலும், அக்காலத்தில் ஆரியர்கள் சிறிது செல்வாக்குப் பெற்று இருந்ததால் அவர்கள்



தங்கள் பழக்க வழக்கம், சடங்கு, தங்களின் வழிபாடு கடவுள்கள் ஆகியவைகளையே பிற இந்தியர்கள் மீதும் சுமத்தி அதற்கு அதிகமான செல்வாக்கை உண்டாக்கி வைத்துக் கொண்டிருந்தபடியால் ஆரியர்கள் பழக்க வழக்கம், சடங்கு, வழிபடு கடவுள், அவர்களது இலக்கிய ஆதாரங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள் என்பன முதலியவைகளே இந்துக்களின் மதமாகவும், மத ஆதாரங்களாகவும் ஆக்கப்பட்டுவிட்டன. ஆரியர்களுக்கு எதிர்ப்பானவைகளும், ஆரியர்கள் அல்லாதவர்களும்கூட விவகாரத்திற்கு இடம் இல்லாமல் போகட்டும் என்கின்ற காரியத்துக்காகவே எல்லாம் இந்துமதம் தான், எல்லோரும் இந்துக்கள் தான் என்றும், அதுவும் இந்துமதம், இதுவும் இந்துமதம் என்றும், இந்து மதத்தில் எல்லாக் கொள்கையும் உண்டு என்றும், ஓர் இந்து எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் என்றும், பல சமயங்கள் சேர்ந்தது இந்துமதம் என்றும், அவ்வப்போது தோன்றிய பல பெரியார்களின் அபிப்பிராயங்கள் எல்லாமுமே இந்துமதமாகவே இருக்கிறது என்றும், எந்த மதக் கருத்தும், இந்துமதத்தில் உண்டு என்றும், எப்படிப்பட்டவனும் இந்துவாய் இருக்கலாம் என்றும், புத்தர்கள், சமணர்கள், ஜெயினர்கள் எல்லோருடைய அபிப்பிராயமும் இந்துமதத்தில் இருந்து வந்ததுதான் என்றும், இந்துமதத்துக்குப் பொருத்தமானதே என்றும் சொல்லி பொதுவாக இன்று முகமதியர்கள், கிறிஸ்துவர்கள் அல்லாத எவரும் இந்துக்கள் என்றே சொல்லக்கூடிய நிலையை ஏற்படுத்திக்கொண்டார்கள்.

இந்து மதம் என்பதாக இந்துக்களுடைய பழைய ஆதாரங்கள் என்று சொல்லும்படியான எதிலும் ஒரு வார்த்தை கூட கிடையாது.

இந்தியாவின் பெயரைக் குறிப்பதற்கு இந்துஸ்தான் என்று ஒரு வார்த்தை காணப்படலாமோ என்னமோ அதுகூட தைரியமாய் சொல்வதற்கு இல்லை. இந்தியா என்கின்ற பெயர்கூட இந்துமத ஆதாரங்கள் என்பவைகளில் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்து மதம் என்பதற்கு என்னதான் அர்த்தம் என்று பழைய அதாவது சுமார் 100 வருஷம், 200 வருஷம் முந்திய அய்ரோப்பிய அகராதிகளையும், அய்ரோப்பிய கலைகளையும் பார்ப்போமானால் முகம்மதியர்கள் அல்லாதவர்கள் அனுஷ்டிக்கும் மதம் என்றும்,





ஆரியர்களின் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுகிறவர்களுக்குச் சொல்லும் மதப் பெயர் என்றும், ஆரியர்கள் அனுஷ்டிக்கும் ஆச்சார அனுஷ்டானங்கள் என்றும் தான் காணப்படுகின்றனவே அன்றி வேறு ஒன்றும் சொல்லப்படுவதாகக் காண முடியவில்லை.

இந்து மதம் பிரத்தியட்சத்தில் என்னமாய் இருக்கிறது என்று பார்ப்போமானால் விக்கிரகங்களை வணங்குவது, ஜாதி வித்தியாசங்களை உயர்வு தாழ்வுகளைப் பாராட்டுவது ஆகிய இந்த இரண்டு காரியம் தான் இந்த உலகத்தில் வேறு எந்த தேச மக்களிடத்திலும் வேறு எந்த மதஸ்தரிடத்திலும் இல்லாத குணங்கள் கொண்டு இருந்து வருகிறது.

இந்த இரண்டு காரியங்களைப் பற்றி அறிஞர்கள் என்பவர்கள் வெகு காலத்துக்கு முன்பே தவறுதலானது என்றும், அவசியமற்றது என்றும் முடிவுகட்டி விட்டார்கள். அதற்கும் பல ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் உள்ள பெரியார்கள் என்பவர்களுடைய வாக்கும், உபதேசமும் இருந்து வருகிறது. இவைகளையும் இந்து மத ஆதாரமாகவும், அப்பெரியார்களையும் இந்து மதத்தில் தெய்வீகாம்சம் பெற்றவர்கள் என்றும் சொல்லப்படுவதோடு, விக்கிரக ஆராதனையில் நம்பிக்கை இல்லாதவனும், ஜாதி வித்தியாசம் உயர்வு தாழ்வு ஆகியவற்றை வெறுப்பவனும், இகழ்பவனும் கூட இந்து தான் என்றும், அதற்கு ஆதாரம் இந்து மதத்தில் இருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது.

ஆகவே, இப்போது எது இந்துமதம், எது இந்துமதம் அல்லாதது என்று சொல்ல முடியாத நிலையில் இருக்கிறோம்.

ஆனால், தேசியத் தலைவர்கள், மதத் தலைவர்கள் என்று சொல்லப்பட்டவர்களான தோழர்கள் காந்தியார், மாளவியார் முதலாகியவர்கள் இந்து மதம் என்று எதைச் சொல்லுகிறார்கள் என்று பார்த்தால் வருணாசிரமத்தைப் பரிசுத்தமாக்கி நிலைநிறுத்துவதுதான் இந்துமதம் என்கிறார் காந்தியார். களிமண்ணும் கங்கை ஜலமும் கூடவே இருக்க வேண்டியதுதான் இந்துமதம் என்று செய்து காட்டுகிறார் மாளவியார்.

மகம்மதிய ஆதிக்கம் தலையெடுக்காமல் செய்வதுதான் இந்துமதம் என்கின்றனர் மூஞ்சேயாரும், பரமானந்தனாரும். மற்றபடி சங்கராச்சாரிகளுடைய இந்து மதம் எப்படிப்பட்டது?

இராமானுஜாச்சாரியாருடைய இந்து மதம் எப்படிப்பட்டது? பண்டார சன்னதிகளுடைய இந்துமதம் எப்படிப்பட்டது? மனுதர்மசாஸ்திர இந்து மதம் எப்படிப்பட்டது? இதிகாசமாகிய கீதையுடைய இந்து மதம் எப்படிப்பட்டது? புராணங்களுடைய இந்துமதம் எப்படிப்பட்டது? சைவர்களுடைய இந்துமதம் எப்படிப்பட்டது? மற்றும் பார்ப்பனரல்லாத சைவர்கள் இந்துமதம் எப்படிப்பட்டது? வைணவர்களுடைய இந்துமதம் எப்படிப்பட்டது? என்பவைகளைப் பற்றி நாம் விவரிக்க இதில் இடம் வைத்துக் கொள்ள வில்லை.

எப்படி இருந்தாலும் இஸ்லாமியர்களைப் போலவும், கிறிஸ்துவர் களைப் போலவும் மதம் என்பதற்கு இருந்து வரும் ஆதாரம், கொள்கை, குறிப்பிட்டவர்களுடைய உபதேசம் என்பதாக எதுவும் இல்லாமல் வார்த்தை அளவில் குருட்டு அபிமான அளவில் இந்துமதம் இருந்து வருகிறது என்பதை எவரும் மறுக்க முடியாது.

இந்த லட்சணத்தில் உள்ள இந்துமதம் மனிதனைத் தீண்டக்கூடாதவன் என்றும், ஒரு மனிதனைத் தாசிமகன், வைப்பாட்டி மகன், அடிமை மகன் என்றும் சொல்லிக் கொண்டு உரிமையும் பாராட்டி 100க்கு 97 மக்களைச் சுயமரியாதையற்றவர்களாக்கி 100க்கு 25 மக்களை தீண்டாதவர்கள், சண்டாளர்கள் என்று இழிவுபடுத்தி வருவதென்றால், இப்படிப்பட்ட இந்துமதம் உலகத்தில் எதற்காக இருக்க வேண்டும்? இது அடியோடு ஒழிக்கப்படுவதில் என்ன தப்பு? என்றுதான் கேட்கின்றோம்.

ஜாதி அகம்பாவம் பிடித்த சோம்பேறிப் பார்ப்பனியக் கூட்டம் தங்களது சுயநலங்களை உத்தேசித்து இந்துமதம் ஒழியச் சம்மதப்படமாட்டார்கள் என்பதோடு, "இந்துமதத்தை ஒழிக்க உன்னாலும் முடியாது. உங்கள் பாட்டனாலும் முடியாது" என்று சொல்லுவார்கள். ஆனால், அது வேறு விஷயம். தீண்டப்படாத வகுப்பைச் சேர்ந்த ஓர் ஆள் இந்து மதத்தை விட்டு விடுகிறேன் என்றும், "சண்டாளர்கள்", "இழி மக்கள்" என்று சொல்லக்கூடிய ஒரு கூட்ட மக்களின் மகாநாட்டில், "இந்து மதத்தை விட்டு விடவேண்டும்" என்று ஒரு தீர்மானம் செய்தவுடன் இமயமலை முதல் கன்னியாகுமரி வரையில் உள்ள தேசியத் தலைவர்கள், தேசியப் பத்திராதிபர்கள், மகாத்மாக்கள், மாளவியாக்கள், இந்துமதத் தலைவர்கள், "வீரர்கள்", "தியாகிகள்", "சத்தியாக்கிரகிகள்", எல்லோருக்குமே தலையில் இடி

விழுந்தது போல் ஆகிவிட்டதுடன், இதற்காக எத்தனை பொய்புரட்டு, ஏமாற்று தந்திரம் ஆகிய இழிகாரியங்கள் எல்லாம் செய்து, “அம்பேத்கர் அவ்வளவு பெரிய மனுஷன் அல்ல” என்றும் “பம்பாய் மாகாண தீண்டப்படாதார் மகாநாடு தக்க பிரதிநிதித்துவம் பொருந்தியது அல்ல” என்றும் தாங்கள் கூப்பாடு போடுவது போதாமல், அவ் வகுப்பிலேயே பல வயிற்றுச் சோற்றுக் கருப்பன்களைப் பிடித்து ஒரு திராம், இரண்டு திராம் சாராயம் வாங்கிக் கொடுத்து எழுதச் சொல்லியும், எழுதினதாக ஒப்புக் கொள்ளச் சொல்லியும் இவ்வளவு பாடுபடுவதைப் பார்க்கும்போதே முடியாது என்று சொல்லுபவர்கள் உண்மையாக நம்புகிறார்களா அல்லது பயந்து நடுங்கி இப்படி உளறுகிறார்களா என்பது விளங்கும்.

இந்துமதம் நாளுக்கு நாள் ஒழிகிறதா இல்லையா என்பதும், பிற மதம் நாளுக்கு நாள் ஓங்குகிறதா இல்லையா என்பதும் ஒரு 50 வருஷம் ஜன கணிதத்தைப் பார்த்தால் தானாகவே விளங்கும். ஆகையால், இந்து மதத்தை ஒழிக்க வேண்டுமென்று முயற்சி செய்தவர்கள் இப்பார்ப்பனர்களுடைய மிரட்டலுக்குப் பயப்படாமல் சித்திரத்தில் படம் எழுதக்கூட ஓர் இந்துவின் பழைய சின்னம் இல்லாத அளவுக்கு இந்துமதம் என்னும் புரட்டான ஒரு கட்டும், சூழ்ச்சியும் அழிய வேண்டியது அவசியம் என்றும், அது அழிந்து போகப் போவது உறுதிதான் என்றும் தைரியமாய்க் கூறுவோம்.

**‘குடிஅரசு’ - தலையங்கம் - 27.10.1935**

■

# 9

# ஹிந்து சமூகத்தினால் நமக்கு நன்மையில்லை சமத்துவம் கொடுக்கும் எந்த மதத்திலாகிலும் சேருங்கள்

## அம்பேத்கர் பிரசங்கம்

தாழ்த்தப்பட்ட மக்கள் ஹிந்து சமூகத்தினின்றும் அடியுடன் விலகிவிட வேண்டுமென்றும், சம அந்தஸ்தும் சம உரிமைகளையும் கொடுக்கும் வேறு எம்மதத்திலாவது சேர்ந்து கொள்ள வேண்டும் என்றும் 13.10.1935 தேதி நாசிக் ஜில்லாவில் இயோலா என்னும் இடத்தில் நடைபெற்ற பம்பாய் மாகாண தாழ்த்தப்பட்டவர்கள் மாநாட்டில் ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேறியது.

மகாநாட்டுக்குத் தலைமை வகித்த டாக்டர் அம்பேத்கரின் யோசனையின் பெயரிலேயே தீர்மானம் நிறைவேறியது.

சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேல் மிகவும் மனக் கசப்புடன் பேசிய டாக்டர் அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஜாதி இந்துக்கள் இழைத்துவரும் கொடுமைகளை எடுத்துரைத்து அதைக் கண்டித்தார்.

ஜாதி இந்துக்களின் மனதை மாற்றுவதற்காக நாம் இது வரையிலும் செய்து வந்த முயற்சிகள் யாவும் பலனளிக்கவில்லை. இனியும் நமது சக்தியையும், பணத்தையும், நமது குறையைத் தீர்த்துக் கொள்ளவும், அவர்களுடன் ஒற்றுமையாக வாழவும் செலவழிக்க முயற்சி செய்வது வீணேயாகும். எனது தீர்க்க ஆலோசனைக்குப்பின் இந்து சமூகத்தினின்றும் அடியுடன் விலகி விடுவதே சிறந்த வழி என்கிற முடிவுக்கு வந்திருக்கிறேன். நமக்கு சமத்துவம் கொடுக்க மறுக்குமிடத்தில் நம்முடைய போராட்டத்தை நிறுத்தி விடுவோம். நம்மை நாம் இந்துக்கள் என்று கூறிக் கொள்ளும் துர்ப்பாக்கியத்தினால் தான் இவ்வாறு நாம் கொடுமையாக நடத்தப்படுகிறோம். நாம் வேறு ஒரு மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தால் எவருக்கும் நம்மை இவ்விதம்



16 குடி அரசு ஐப்பசி-மீ 11உ

# ஹிந்து சமூகத்தினால் நமக்கு நன்மையில்லை.

சமத்துவம் கொடுக்கும் எந்தமதத்திலாகிலும் சேருங்கள்.

———0———

## அம்பேத்கார் பிரசங்கம்.

தாழ்த்தப்பட்ட மக்கள் ஹிந்துசமூகத்தினின்றும் அடியுடன் விலகிவிட வேண்டுமென்றும், சம அந்தஸ்தும் சம உரிமைகளையும் கொடுக்கும் வேறு எம்மதத்திலாவது சேர்ந்து கொள்ள வேண்டும் என்றும் 13-10-35 தேதி நாசிக் ஜில்லாவில் இயோலா என்ற விடத்தில் நடைபெற்ற, பம்பாய் மாகாண தாழ்த்தப்பட்டார்கள் மகாநாட்டில் ஏகமனதாக ஓர் தீர்மானம் நிறைவேறியது.

மகாநாட்டுக்குத் தலைமை வகித்த டாக்டர் அம்பேத்காரின் யோசனையின் பேரிலேயே அத்தீர்மானம் நிறைவேறியது.

சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேல் மிகவும் மனக் கசப்புடன் பேசிய டாக்டர் அம்பேத்கார் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஜாதி இந்துக்கள் இழைத்துவரும் கொடுமைகளை எடுத்துரைத்து அதைக் கண்டித்தார்.

மனம் மாறவில்லை.

ஜாதி இந்துக்களின் மனதை மாற்றுவதற்காக நாம் இது வரையிலும் செய்துவந்த முயற்சிகள் யாவும் பலனளிக்கவில்லை. இனியும் நமது சக்தியையும், பணத்தையும், நமது குறைபைத் தீர்த்துக் கொள்ளவும், அவர்களுடன் ஒற்றுமையாக வாழவும் செலவழிக்க முயற்சி செய்வது வீணேயாகும். எனது தீர்க்காலோசனைக்குப் பின் இந்து சமூகத்தினின்றும் அடியுடன் விலகிவிடுவதே சிறந்த வழி என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன். நமக்கு சமத்துவம் கொடுக்க மறுக்குமிடத்தில் நம்முடைய போராட்டத்தை நிறுத்தி விடுவோம். நம்மை நாம் இந்துக்களென்று கூறிக் கொள்ளும் துர்ப்பாக்கியத்தினால் தான் இவ்வாறு நாம் கொடுமையாக நடத்தப்படுகிறோம். நாம் வேறு ஓர்மதத்தைச் சார்ந்தவர்களாயிருந்தால் எவருக்கும் நம்மை இவ்விதம் நடத்த துணிவு வராது. ஆனால் எம் மதத்தில் உங்களுக்கு சம அந்தஸ்து கொடுத்து சமத்துவமாய் நடத்துகிறார்களோ அம்மதத்தில் நீங்கள் சேர்ந்துகொள்ளுங்கள்.

"நம்முடைய தவறை நாம் இப்பொழுது திருத்திக்கொள்ளுவோம். பிறக்கும்பொழுதே தீண்டத்தகாதவன் என்ற களங்கம் என் மீது சுமத்தப்பட்டு விட்டது என் துரதிர்ஷ்டமேயாகும். ஆனால் எனது குற்றத்தால் அது ஏற்படவில்லை. இறக்கும்பொழுது நான் ஓர் இந்துவாய் இறக்கமாட்டேன். ஏனெனில் அவ்வாறு செய்து கொள்ளும் சக்தி என்வசமிருக்கிறது."

டாக்டர் அம்பேத்காரின் பிரசங்கத்தைக் கேட்ட சபையோர் மனமிளகினர். அவர் யோசனையை சபையோர் வரவேற்றனர் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. சுமார் 10,000 ஜனங்கள் மகாநாட்டிற்கு விஜயம் செய்திருந்தனர்.

மகாநாட்டுக்குத் தலைமை வகிக்கும்படியும், தான் இனிமேல் காங்கிரசில் சேருவதில்லை என்றும், சங்கம் சொல்லுகிறபடி நடப்பதாகவும் கேட்டுக்கொண்டார். பிறகு சங்கத்தார் அடியில் கண்டபடி ஒரு கடிதம் பெற்றுக்கொண்டு அவருக்கு போட்டி இல்லாமல் செய்துவிட்டார்கள். கடிதத்தின் விபரமாவது:—

திருச்சி, இடைத்தெரு, உடையார் சத்திரம், பார்க்கவகுல மகாஜன சங்கத்தின் காரியதரிசி அவர்கட்கு வரகூர் சர்க்கிள் காங்கிரஸ் அபேட்சகராக நிற்பதாகவிருந்தமாதாங்கி செல்லமுத்து உடையார்குமாரர் பூமாலை உடையார் எழுதிகொடுத்த உறுதிமொழி:-நமது சங்கதில் அங்கத்தினராகச் சேர்ந்துகொள்ளுகிறேன் என்றும், சங்கத்தின் விதிகட்கும், கொள்கைகட்கும் கட்டுப்பட்டு நடந்துவருகிறேன் என்றும், ஜில்லாபோர்டில் சங்கத்தின் உத்திரவுப்படியே உழைக்கச் சம்மதிக்கிறேன் என்றும், காங்கிரசினின்றும் விலகிக்கொண்டேனென்றும் உறுதிகூறுவதோடு எனக்காக சங்க அபேட்சகராகநின்ற தோழர் பி. சுப்பிரமணிய உடையார் அவர்கள் விலகிக்கொள்ளச் செய்தமைக்குத் தங்கட்கு எனது என்றும் மறவாத நன்றியறிதலையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஆகவே காங்கிரசுக்காரர்கள் தங்களது கட்சிககு ஆள் சேர்க்க எவ்வளவு மோசமான ஏமாற்றலான நாணயம் கெட்ட முறையைக் கையாடுகிறார்கள் என்பதை கவனிக்கும்படி வேண்டுகிறேன்.

வாணியம்பாடியில்

# ராஜேந்திரபிரசாத் பகிஷ்காரம்.

——:0:——

அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் பாபுராஜேந்திரப் பிரசாத் வாணியம்பாடி வருகையை முன்னிட்டு ஜஸ்டிஸ், சுயமரியாதை வாலிபர்கள் அன்று பகல் 1 மணிக்குப் பகிஷ்காரத் துண்டுப் பிரசுரங்கள் வழங்கினார்கள் கூட்டம் நடைபெறும் இடத்திற்கு ஒரு பர்லாங் தூரத்தில்சுமார் 50-வாலிபர்கள் உற்சாகத்துடன் கருப்புக்கொடியைத்தாங்கி நின்றனர். ஆனால் குறிப்பிட்ட நேரத்தில் பிரசாத் வராததினால் அனேகர் வீடு திரும்பினர். பிறகு ஏறக்குறைய 8மணிக்கு கார்வரும் சப்தம் கேட்டவுடன் வாலிபர்கள் உற்சாகத்துடன் ஆங்கிலத்தில் "வெட்கம் பாபுஜீதிரும்பிப்போ" என்று வீரகோஷம் செய்தார்கள் ஆனால் முதல் காரில் போலீஸ் உத்தியோகஸ்தர்கள் இருப்பதை யறியாமல் அவர்களையும் திரும்பிப்போ என்று தெரிவித்தார்கள் உடனே கார் நிறுத்தப்பட்டு போலீஸ்காரருள் ஒருவர் வந்துஇதற்கு யார்தலைவர் என்று கேட்டார் அதற்கு வாலிபர்கள் சிறிதும்பின் தாங்காது "நாங்கள் எல்லோரும் தலைவர்கள் தான்" என்றுரைத்தார்கள். அதற்கு அப்போலீஸ்காரர் ஆனால் அதிகாரி கூப்பிடுகின்றார்யார் வருவது? வருவதும் இப்பொழுது வரவேண்டும் என்றார். அதற்கு கருப்புக்கொடியை தாங்கி நிற்கும் வீரர்கள் பதிலளித்ததாவது:—

"கருப்புக்கொடி தாங்கி நிற்கும் நாங்களும் எங்களைபின்பற்றி நிற்கும் ஏனையோரும்தாங்கள் தெரிவிக்கும் அதிகாரியிடம் வரத்தயாராய் இருக்கின்றோம். ஆனால் இது சமயம் வரமுடியாது. பாபுஜி வந்த உடன் பகிஷ்கரித்தஉடனே வரமுடியும்" என்று கூறினார்கள் அப்போலீஸ்காரர்உடனே அதிகாரிக்குத்தெரிவிக்கவே அந்தஅதிகாரிகளும் ஒன்றும் சொல்லாமல் போய்விட்டனர். "பின்பு ராஜேந்திரர் கார் வரவே வெட்கம் திரும்பிப்போ" என்று கோஷம் செய்தனர்.

ராஜேந்திர பிரசாத் கூட்டத்தில் பகிஷ்காரத்தைப்பற்றி பேசியதாவது 'நான்சுற்றுப்பிரயாணத்தில் கருப்புக் கொடியையும் பகிஷ்கரிப்பதையும் வாணியம் பாடியில் தான் கண்டேன் நான் என்னுடைய வாழ்நாளில் பகிஷ்கரிக்கபட்ட இடமும் வாணியம்பாடிதான்" என்று குறிப்பிட்டுப்பேசினார்.

———

### அனுதாப மரணம்.

——

நாகை கீழத்தஞ்சை 'போர்டாபீஸ் கிளார்க்கு தோழர் டி. கே. பாலசுப்பிரமணியம் அவர்கள் மனைவி தமது 25ம் வயதில் 15-10-35ல் அகாலமரணமடைந்தார். என ஒரு நிருபர் எழுதுகிறார்.

———

### சென்னையில் நமது புத்தகங்கள் கிடைக்குமிடம்.

———

குடியரசு பதிப்பகப் புத்தகங்களும் பகுத்தறிவு நூற்பதிப்புப் புத்தகங்களும் சென்னையில் கீழ்க்கண்ட விலாசத்தாரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம்:—
T. N. இராமன்
32/33 நாகப்பய்யர் வீதி,
திருவேட்டிசுரன்பேட்டை
சென்னை.

### ஷர்ட்டிங் துணிசுகள்.

45X10. 40 லெ. கலர் சவுக்களி பீசுகள், 20. லெ. கைஸ் கலர் பீசுகள், சாதா வெள்ளை பீசுகள் முதலிய ரகங்கள் கைத்தறியில் நெசவு செய்யப்பட்டவைகள் எங்களிடம்கிடைக்கும். விலை விபரத்துக்கு எழுதவும்.
M. V. K. Stores,
Tirupur. S. I. R.

நடத்த துணிவு வராது. ஆனால் எம் மதத்தில் உங்களுக்கு சம அந்தஸ்து கொடுத்து சமத்துவமாய் நடத்துகிறார்களோ அம்மதத்தில் நீங்கள் சேர்ந்து கொள்ளுங்கள்.

"நம்முடைய தவறை நாம் இப்பொழுது திருத்திக் கொள்ளுவோம். பிறக்கும் பொழுதே தீண்டத்தகாதவன் என்ற களங்கம் என்மீது சுமத்தப்பட்டு விட்டது என் துரதிர்ஷ்டமேயாகும். ஆனால், எனது



குற்றத்தால் அது ஏற்படவில்லை. இறக்கும்பொழுது நான் ஓர் இந்துவாய் இறக்க மாட்டேன். ஏனெனில், அவ்வாறு செய்து கொள்ளும் சக்தி என் வசமிருக்கிறது.''

டாக்டர் அம்பேத்கரின் பிரசங்கத்தைக் கேட்ட சபையோர் மனமிளகினர். அவர் யோசனையை சபையோர் வரவேற்றனர். தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. சுமார் 10,000 ஜனங்கள் மகாநாட்டிற்கு விஜயம் செய்திருந்தனர்.

- 'குடிஅரசு', 27.10.1935

■

# 10

# காந்தியாரிடம் எனக்கு நம்பிக்கை இல்லை

## டாக்டர் அம்பேத்கர் அறிக்கை

அகமதாபாத்தில் கூடிய ஓர் ஒடுக்கப்பட்டோர் கூட்டத்தில் பேசுகையில் டாக்டர் அம்பேத்கர் கூறியதாவது:

எனக்குக் காங்கிரசிடமும் காந்தியிடமும் நம்பிக்கையே கிடையாது. காந்தி மூலமோ, காங்கிரஸ் மூலமோ ஒடுக்கப்பட்டவர்களுக்கு எத்தகைய நன்மையும் கிடையாது. வட்டமேஜை மகாநாட்டுக் காலத்தில் எனக்குக் கிடைத்த அனுபவத்தினால் காந்தியாரிடம் எனக்கிருந்து வந்த நம்பிக்கை சிதறுண்டுவிட்டது.

எல்லாக் கட்சியாரும் சம்மதித்தால் சட்டசபைகளில் ஒடுக்கப்பட்டவர்களுக்கென ஸ்தானம் ஒதுக்கலாம் எனக் காந்தியார் முதலில் சொன்னார். ஒடுக்கப்பட்டவர்களுக்கு ஸ்தானங்கள் ஒதுக்க முஸ்லிம்கள் சம்மதித்தார்கள். ஆனால், காந்தியார் மட்டும் இணங்கவில்லை. அம்மட்டோ மந்திரி சபைகளில் ஒடுக்கப்பட்டவர்கள்



"காந்தியாரிடம் எனக்கு நம்பிக்கைஇல்லை",

டாக்டர் அம்பேத்கர் அறிக்கை.

அகமதாபாத், அக். 22.

அகமதாபாத்தில் கூடிய ஒரு ஒடுக்கப்பட்டோர் கூட்டத்தில் பேசுகையில் டாக்டர் அம்பேத்கார் கூறியதாவது:—

எனக்குக்காங்கிரசிடமும் காந்தியிடமும் நம்பிக்கையே கிடையாது. காந்தி மூலமோ, காங்கிரஸ் மூலமோ ஒடுக்கப்பட்டவர்களுக்கு எத்தகைய நன்மையும் கிடையாது. வட்டமேஜை மகாநாட்டுக்காலத்தில் எனக்குக் கிடைத்த அனுபவத்தினால் காந்தியாரிடம் எனக்கிருந்துவந்தநம்பிக்கை சிதறுண்டுவிட்டது. எல்லாக் கட்சியாரும் சம்மதித்தால்



முன்னேற்றத்துக்கானவை ஆராய்ந்து வேண்டுவன செய்ய முன்னிருந்த பம்பாய் மந்திரிகள் பல கமிட்டிகளை நியமித்திருந்தார்கள். அந்தக் கமிட்டிகளின் சிபார்சுகளை அமலில் கொண்டு வர பம்பாய் காங்கிரஸ் மந்திரிகள் இதுகாறும் எதுவும் செய்யவில்லை. ஒடுக்கப்பட்டவர்கள் ஒன்றிணைந்து ஒரு தனி இயக்கம் காண வேண்டும் அல்லது சுயேச்சைத் தொழிற் கட்சியுடன் ஒத்துழைக்க வேண்டும். சுயேச்சைத் தொழிற் கட்சிக்கு நாளுக்கு நாள் செல்வாக்கும் சக்தியும் பெருகி வருகிறது.

- 'குடிஅரசு', 30.10.1938

■

Reg. No. M. 3734. தமிழ்நாடு தமிழருக்கே 6-பக்கங்கள் ... அரையணா

"விடுதலை"
விளம்பர விகிதம்.
சர்க்கார், ரயில்வே, முனிசிபாலிட்டி, ஜில்லாபோர்டு, கோர்ட்டு ஆகியவைகள் சம்பந்தப் பட்டவைகளுக்கு பத்தி அங்குலம் 1-க்கு 2-8. ஒப்பந்தமில்லாத தனிப்பட்ட வியாபார விளம்பரங்களுக்கு அங்குலம் 1-க்கு ரூ. 2. ஒப்பந்த விளம்பரங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

விடுதலை
VIDUTHALAI ★ தமிழர் தினசரி

"விடுதலை"
சந்தா விபரம்
உள்நாடு
தபால் மூலம் அனுப்ப முன் பணமாக மாதம் ஒன்றுக்கு சந்தா ரூ. 1 0 0
3-மாதத்திற்கு ரூ. 3 0 0
6-மாதத்திற்கு ரூ. 6 0 0
வருடத்துக்கு ரூ. 12 0 0
வெளிநாடு
வருடத்துக்கு ரூ. 16 0 0

மலர்-5] ஈரோடு: (1-1-40) பிரமாதி வருஷம் மார்கழி மீ 17உ திங்கட்கிழமை [இதழ்-104

# 11

# பெரியார் பம்பாய் விஜய முழு விபரம்

- தாதர் புகைவண்டி நிலையத்தில் தமிழ் முழக்கம்
- பெரியாருக்கு ஆடம்பரமான வரவேற்பு
- ஜனாப் ஜின்னாவும் பெரியாரும் சந்திப்பு
- பெரியாருக்கு அம்பேத்கர் விருந்து

## அன்பான அழைப்பு

பெரியார் ஈ.வெ.ராமசாமி அவர்கள் பம்பாய், தாராவிக்கு ஒரு முறை வரவேண்டுமென அங்குள்ள தமிழர்கள் பெரிதும் விரும்பி, பல மாதங்களாக அன்பான அழைப்புகளை அனுப்பிக் கொண்டிருந்தனர். பெரியார் தமிழ்நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்ததால் பம்பாய் வர சவுகரியம் ஏற்படவில்லை என்று பதில் கூறினார். ஆனால் எப்படியேனும் ஒருமுறை வந்தே தீரவேண்டும் எனவும், தமிழர் தலைவரைக் கண்டுகளிக்க, அவர் மொழிகேட்டு இன்புற தமிழர்கள் ஆவலாக இருக்கிறார்கள் எனவும், தமிழ்நாட்டவர் பெரியார் பணிக்கு உதவியாக பணமுடிப்புகள் ஆங்காங்கு தருவதைப் போல தாமும் தர விழைவதாகவும் கடிதமெழுதி வற்புறுத்தினர். "பார்ப்போம்" எனப் பெரியார் சம்மதமளித்தார். நாள் குறிப்பிடவில்லை. தமிழ்நாட்டில் அவருக்கு வேலை சரியாக இருந்தது.

## தலைவர்கள் எண்ணம்

இடையே பம்பாயிலுள்ள நமதியக்க முக்கியஸ்தர் ஒருவர் பெரியார் பம்பாய் வரவேண்டிய அவசியத்தை விளக்கி எழுதியதுடன் பெரியார் வருகை தமிழர்கள் உள்ளத்தில் களிப்பூட்டுவதுடன் மற்றொரு முக்கியமான சம்பவத்துக்கும் உதவுமென எழுதியிருந்தார். அதாவது அகில இந்திய முஸ்லிம்களின் தலைவர் ஜனாப் ஜின்னாவும்,





விடுதலை திங்கட்கிழமை 5

# பெரியார் பம்பாய் விஜய முழு விவரம்

## தாதர் புகை வண்டி நிலையத்தில் தமிழ் முழக்கம்

### பெரியாருக்கு ஆடம்பரமான வரவேற்பு

### வெண்புரவி கோச்சில் பெரியார் ஊர்வலம்

### பொதுக்கூட்டமும் பண முடிப்பும்

### ஜனாப்ஜின்னாவும் பெரியாரும் சந்திப்பு

### பெரியாருக்கு அம்பேத்கார் விருந்து

(நமது விசேஷ நிருபர்)

அன்பான அழைப்பு

தலைவர்கள் எண்ணம்

பம்பாய் பயணம்

தாதர் ரயில் நிலையத்தில் வரவேற்பு

வழியில் உபசாரம்

மாலையில் ஊர்வலம்

தாராவியின் தனிச்சிறப்பு

அம்பேத்காருடன் அளவளாவுதல்

தோழர் ஜாதேவ் சந்திப்பு

மாலை பொதுக்கூட்டம்

ஆதிதிராவிட வாலிபர் கழக ஆண்டு விழா

தாராவி தோழர்களிடை

ஜனாப் ஜின்னா சந்திப்பு

அம்பேத்கார் அளித்த தேநீர் விருந்து

மீண்டும் ஜெயகரிடம்

## பெரியார் திருநெல்வேலி பிரயாணம்

### 20-ந் தேதி செல்வார்

(நமது நிருபர்)

ஆதிதிராவிடர் தலைவர் டாக்டர் அம்பேத்கரும் பெரியார் பம்பாய் வரின் கண்டு அளவளாவுவர் எனக் குறிப்பிட்டிருந்தார். ஆகவே இந்த இரு முக்கியமான விஷயங்களைப் பூர்த்தி செய்யவேண்டி, பெரியார் பம்பாய் வர இசைந்து தேதி குறிப்பிட்டுக் கொடுத்தார்.

## பம்பாய் பயணம்

ஈரோட்டிலிருந்து 4-1-1940 இரயில் வண்டியில் பெரியார் தோழர்கள் சி.என்.அண்ணாதுரை, டி.பி.எஸ்.பொன்னப்பன் ஆகியோருடன்

சென்னை சென்றார். 5-1-1940 காலை சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனில் பெரியாரை வரவேற்க இயக்கத் தோழர்கள் வந்திருந்தனர். பின்னர் பெரியார், சண்டே அப்சர்வர் ஆசிரியர் தோழர் பாலசுப்பிரமணியம், ஜஸ்டிஸ் தோழர் டி.ஏ.வி.நாதன், தோழர்கள் கே.எம்.பாலசுப்பிரமணியம், டி.பி.எஸ்.பொன்னப்பன், சி.பஞ்சாட்சரம், சி.என்.அண்ணாதுரை ஆகியோர் பம்பாய்க்குப் புறப்பட்டனர்.

பெரியாரை வழியனுப்ப ஸ்டேஷனில் குமாரராஜா முத்தைய்யா செட்டியார், ஜனாப் கலிபுல்லா சாகிப் உள்ளிட்ட பல இயக்கத் தலைவர்களும், தோழர்களும் வந்திருந்தனர். போட்டோ எடுக்கப்பட்டு, மாலைகள் சூட்டப்பட்டது. பெரியார் வாழ்க! தமிழ் வாழ்க! என்ற பேரொலி முழக்கம் கிளம்பிற்று, ரயிலும் நகர்ந்தது.

**வழியில் உபசாரம்**

பம்பாய்க்கு செல்லும் வழியில், அரக்கோணம், ரேணுகுண்டா, கடப்பா ஆகிய பல ஸ்டேஷன்களில் இயக்கத்தவர்கள் உபசாரம் செய்தனர். கடப்பை வரையில், கடப்பை ஜில்லா போர்டின் தலைவராக இருந்த தோழர் சி.எல்.நரசிம்மா ரெட்டியார், பெரியாருடன் வந்திருந்தார்.

**தாதர் ரயில் நிலையத்தில் வரவேற்பு**

6ஆம் தேதி காலை 10 மணிக்கு பெரியார் தம் சகாக்களுடன் பம்பாய்க்கடுத்த தாதர் ரயில்வே ஸ்டேஷனை வந்தடைந்தார். தாதர் ரயில்வே ஸ்டேஷனில் கண்கொள்ளாக்காட்சி தமிழ்நாட்டைக் கடந்து,ஆந்திராவில் புகுந்து, நிஜாம் சமஸ்தானம் பகுதியைத் தாண்டி, மராட்டிய பிரதேசம் சென்றதால், வழியில் தமிழ் முழக்கம் கேளாதிருந்தவர் செவியில், தீந்தமிழ் முழக்கம், திடீரென விழவே, தாதர் தமிழ்நாட்டின் ஒரு பகுதியோ என அய்யுறும்படியான ஆச்சரியம் ஏற்பட்டது.

பெரியார் வாழ்க! தமிழ் வாழ்க! இந்தி ஒழிக! தமிழ்நாடு தமிழருக்கே! என நூற்றுக்கணக்கான தமிழ்த் தொண்டர்கள் முழக்கம் செய்தனர்.

அவர்களின் உணர்ச்சியும் உற்சாகமும் சொல்லுந்தரத்தன்று. அன்று அவர்களுக்குத் திருநாள்! முகமெல்லாம் ஜொலிப்பு! உள்ளமெல்லாம் களிப்பு! ஒவ்வொருவர் சட்டையிலும் பெரியார் பேட்ஜ்! ஒவ்வொருவர் உள்ளத்திலும் தமிழ்நாட்டு அன்பு ததும்பிற்று. மாலைகள் குவிந்தன. மட்டற்ற மகிழ்ச்சியுடன் தலைவரை வரவேற்று உபசரித்து ரயிலடி



யிலிருந்து பார்சி காலனி என்னும் பகுதியிலுள்ள தோழர் கெ.டி.பிள்ளை அவர்களின் மேகபவனம் என்னும் மாளிகைக்கு பெரியார் அழைத்துச் செல்லப்பட்டார். சில நேரம் பெரியார் தமிழர்களுடன் அன்புடன் பேசிக்கொண்டிருந்தார்.

பிற்பகல் 2-30 மணியிலிருந்து 3-15 வரையில் பெரியாரை டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகை நிருபரும், 1832ஆம் ஆண்டு துவக்கப்பட்ட ஜாமே ஜம்ஷெட் என்ற குஜராத்தி தினசரி பத்திரிகை நிருபரும் பேட்டி கண்டு பேசினர். புகைப்படமெடுத்தனர்.

**மாலையில் ஊர்வலம்**

மாலை 5 மணிக்கு, இரு வெண்புரவிகள் பூட்டப்பட்ட அலங்காரக் கோச்சில், பெரியார் அமர்ந்தார். மகீம் ரயில்வே நிலையத்தருகிலிருந்து தாராவி வரையில் ஊர்வலம் ரம்மியமாகச் சென்றது. தமிழ் முழக்கம் வானைப் பிளந்தது.

**தாராவியின் தனிச்சிறப்பு**

தாராவி, பம்பாயில் ஒரு பகுதியே தவிர அது தமிழ்நாட்டிலிருந்து பெயர்த்தெடுத்து அங்கு ஒட்டவைக்கப்பட்டிருக்கும் இடமோ என்று எண்ணும்படியான இயல்பும், எழிலும், தமிழ் மணமும் கொண்டுள்ளது. அங்கு 2000 குடும்பங்கள் தமிழர் குடும்பங்கள் உள்ளன. பெரிதும் ராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை ஆகிய ஜில்லாக்காரர் எல்லாம் தனித் தமிழர்கள், பாட்டாளிகள். எனவேதான் அவர்களுக்குப் பெரியாரிடம் அவ்வளவு அன்பு ஏற்பட்டது. பெரியார், பாட்டாளி மக்களின் பாதுகாவலரல்லவா!

தமிழ்நாட்டிலிருந்து தமது தலைவர் வந்த நாளைத் திருநாளெனக் கொண்டு, தாராவி தமிழர்கள், தமது இல்லம் தோறும் வாழைமரம் கட்டி, வாசலில் தோரணங்கட்டி, வீட்டுக்கு வீடு பெரியாரின் படத்தை அலங் கரித்து அமைத்து அழகுபெறும் காட்சி அமைத்தனர். வழியெங்கும் வளைவுகள், தோரணங்கள், வரவேற்புகள், அலங்காரங்கள்.

ஊர்வலம் செல்லச் செல்ல மாலைகள் பெரியாரின் கழுத்தில் விளையாடியபடி இருந்தன. வீடுதோறும் மாலை வீதிதோறும் உபசாரம். இடையே விடுதலை ஏஜண்டாக உள்ள தோழர் ஷண்முகம் தமது

பண்டகசாலையில் பெரியாரை அழைத்துச்சென்று பால்பழம் அளித்து உபசரித்தார். இரவு 7 மணி சுமாருக்கு ஊர்வலம் அலங்காரப் பந்தலைச் சென்று அடைந்தது.

## தமிழ்க்கொடியேற்று விழா

அங்கு பெரியார் தமிழ்கொடியை ஏற்றுவித்து, கொடியின் சிறப்புப்பற்றியும் மக்கள் அதன் மூலம் பெறவேண்டிய உணர்ச்சியைப்பற்றியும் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

## அம்பேத்கருடன் அளவளாவுதல்

அன்றிரவு 9-மணிக்கு பெரியாரை டாக்டர் அம்பேத்கர் தமது மாளிகைக்கு அழைத்து உபசரித்தார். இரவு 10.30 மணி வரையில் பெரியார் டாக்டர் அம்பேத்கருடன் பல்வேறு அரசியல் சமுதாய பிரச்சினைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்.

## தோழர் ஜாதேவ் சந்திப்பு

மறுநாள், 7ஆம் தேதி காலை 10 மணிக்கு, மராட்டியத் தலைவரும் முன்னாள் நீதிக்கட்சி மாநாட்டுக்குத் தலைமை வகித்தவரும் மாஜி மந்திரியுமான, தோழர் பி.வி.ஜாதேவ், பெரியாரைச் சந்தித்து, நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தார். பார்ப்பனரல்லாதார் இயக்கம் பம்பாயில் இனி வேகமாகப் பரவ மார்க்கமிருப்பதாகவும், பெரியாரின் சேவை நாட்டிலே விழிப்பை ஏற்படுத்தியதாகவும் தோழர் ஜாதேவ் கூறியதுடன், தம் வகுப்பினர் பார்ப்பனீயத்தை அறவே அகற்றிவிட்டதாகவும் சொன்னார்.

பிறகு அசோசியேட்டட் பிரஸ் நிருபர் பெரியாரை பேட்டி கண்டு பேசினார்.

11 மணிக்குமேல் பெரியார் லண்டன் பிரிவிகவுன்சில் ஜுடிஷியல் கமிட்டி மெம்பர் மகாகனம் எம்.ஆர்.ஜெயகர் இல்லம் சென்றார். தோழர் ஜெயகர், ஈரோட்டில் முன்பு நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் தலைமை வகித்தவர், பெரியாரிடம் பேரன்பு கொண்டவர். தோழர் இருவரும் நீண்டநேரம் பல்வேறு விஷயங்களைப் பற்றிப் பேசினர். பெரியாரின் சலியாத உழைப்பையும், சேவையையும் தோழர் ஜெயகர் பாராட்டி வியந்தார். பழங்காலக்கதைகள் பலப்பலப் பேசினர்.



## அம்பேத்கர் அளித்த தேநீர் விருந்து

மாலை 4-மணிக்கு பெரியாரின் வருகையைக் கொண்டாட வேண்டி, டாக்டர் அம்பேத்கர் ஒரு தேநீர் விருந்து நடத்தினார். விருந்து கோகலே கல்வி நிலையக் கழகத்தில் நடைபெற்றது. பெரியாரை, டாக்டர் அம்பேத்கர் வரவேற்று, விருந்துக்கு வந்திருந்த பிரமுகர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். விருந்துக்கு தோழர் எஸ்.சி.ஜோஷி எம்.எல்.சி., ஆர்.ஆர்.போல் எம்.எல்.ஏ., ஜாதவ் எம்.எல்.ஏ., எம்.வி.தொண்டே பி.ஏ., பிரின்சிபால் பட்ஸ்கூல், டி.வி.பிரதான் முனிசிபல் கவுன்சிலர், ஆர்.கே.தனீஸ், ஆசிரியர், நாசரீக், ஆர்.எஸ்.சமாரத் பார்-அட்-லா, எம்.என்.தால்போர்ல் பி.ஏ., எல்.எல்.பி., முனிசிபல் கவுன்சிலர், இந்துமகாசபை தலைவர், இஜெக்கல், நியூஸ் எடிட்டர், பம்பாய் செண்டினல், கே.என்.சரவன்ட் எம்.எல்.ஏ., (காங்கிரஸ்) ஜி.என்.ஷகான்புதா பி.ஏ., ஆசிரியர் ஜனதா, ஜி.எம்.மானி பி.ஏ.எல். எல்.பி., கவ்லி, அட்வகேட், கனிகர், சர்வண்ட் ஆப் இந்தியா சொசைட்டி, கே.வி.சித்ரா சுயேச்சைத் தொழிற்கட்சி ஆகியோரும் மற்றும் பல பிரபலஸ்தர்களும் வந்திந்தனர்.

தேநீர் விருந்தின்போதும், அது முடிந்ததும், பெரியார் வந்திருந்தவர்களுடன் மிக வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தார். அரசியல் விஷயமாகவும், ஆச்சாரியாரின் திருவிளையாடல்கள் விஷயமாகவும், காங்கிரஸ் மாளிகை கருகிய விந்தை விஷயமாகவும், ரசமான சம்பாஷணை நடைபெற்றது.

## மாலை பொதுக்கூட்டம்

அன்று மாலை 5-30 மணிக்கு தாராவி ரோட்டு காலேகில்லா என்ற இடத்தில் தென்னிந்திய தமிழர்களின் பொதுக்கூட்டமொன்று சிறப்புடன் நடைபெற்றது. ஒலிபெருக்கியும் மின்சார விளக்கு அலங்காரமும் அமைக்கப்பட்டிருந்தன. கூட்டத்துக்கு டாக்டர் அம்பேத்கர் தலைமை வகித்தார். தோழர்கள் சங்கரபாண்டியன், சுப்பைய்யா, சுவாமிதாஸ் தமிழ் கீதங்கள் பாடினர்.

பெரியார் ஈ.வெ.ரா. அவர்களுக்கு பம்பாய் தென்னிந்திய தமிழர்களாகிய பெரியார் ஈ.வெ.ரா. வரவேற்புக் கழகத்தாரும், பம்பாய் பத்தமடை ஆதிதிராவிட மகாஜன சங்க உறுப்பினர்களும், பம்பாய் தாராவி தேவேந்திர வேளாள மகாஜன சங்கத்தாரும், பம்பாய்

தென்னிந்திய ஆதிதிராவிட வாலிபர் கழக உறுப்பினர்களும், பெரியார் அவர்களின் பெருந்தன்மைகளையும் சேவைகளையும் பாராட்டிப் புகழ்ந்து தனித்தனியே வரவேற்பிதழ்கள் வாசித்தளித்தனர்.

மேற்படி வரவேற்பு இதழ்கள், வரவேற்புக் கமிட்டித் தலைவர் தோழர் அழகர்சாமியாலும், காரியதரிசி தோழர் ராஜாவினாலும் வாசித்தளிக்கப்பட்டன.

பிறகு, பம்பாய் தமிழர்கள் சங்கங்களால் பெரியாருக்களித்த பணமுடிப்பு விபரம்:–

பம்பாய் தாராவி தமிழர் தலைவர் பெரியார் வரவேற்புக் கழகத்தார் – 301 ரூபாய்,

திராவிட பெண்கள் கழகம் – 101 அணா
சோல்பெல்ட் கம்பெனி தொழிலாளர்கள் – 101 அணா
தாராவி தென்னிந்திய ஆதிதிராவிடர் வாலிபர் சங்கம் – 101 அணா
விடுதலை வாசகர்கள் ஏஜண்ட் ஷண்முகம் மூலம் – 1001 அணா
தாராவி மேலப்பாளையம் ஆதிதிராவிடர் சங்கம் – 101 அணா
தாராவி பத்தமடை மகாஜன சங்கம் – 1001 காலணா
மாடசாமி – 1001 காசு
தேவேந்திர வேளாள வாலிப சங்கம் – 10 ரூபாய்
தாராவி அய்க்கிய வியாபார சங்கத்தார் – 1001 காசு
கே.எஸ்.மாடசாமி – 101 காலணா
சுப்பய்ய நாடார் – 101 காசு

பணமுடிப்புகள் அளிக்கப்பட்டன. பெரியார் 3 மணி நேரம் அரியதோர் சொற்பொழிவாற்றினார்.

கூட்டத்திற்கு வந்திருந்தவர்கள் பல சங்கங்களின் சார்பில் பெரியாருக்கு மலர் மாலைகள் சூட்டினர். தாய்மார்களும் அவ்விதமே மாலைகளை அணிவித்தனர்.

ஆதிதிராவிட வாலிபர் கழக ஆண்டுவிழா

பொதுக்கூட்டத்துக்குப் பிறகு, பெரியார் தலைமையில், தாராவி, ஆதிதிராவிட வாலிபர் கழகத்தின் ஆண்டுவிழா நடைபெற்றது. ஆதிதிராவிடரின் அல்லல்பற்றி பெரியார் பேசினார். பிறகு தோழர்கள்



டி.ஏ.வி.நாதன், பி.பாலசுப்ரமணியம், டி.பி.எஸ்.பொன்னப்பன், கே.எம். பாலசுப்ரமணியம், சி.என்.அண்ணாதுரை ஆகியோர் பேசினர். தோழர்கள் வி.எஸ்.டி.ராஜா, அழகிரிசாமி வந்தனோபசாரம் கூறியபிறகு கூட்டம் இனிது முடிந்தது.

### அம்பேத்கர் விருந்து

பட் உயர்தரப்பள்ளி மண்டபத்தில் அன்றிரவு 9 மணிக்கு, டாக்டர் அம்பேத்கர், பெரியாருக்கு, ஒரு அரிய விருந்தளித்தார். விருந்துக்கு, பம்பாய் “செண்டினல்” நிருபர் தோழர் ஜெகெல், டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகை சீப் ரிபோர்டர் தோழர் ராவ், ஜாமே - ஜம்ஷெட் ஆசிரியர், நாசரத் ஆசிரியர், சன்ஜ் வர்த்மான் பத்திரிகை ஆசிரியர் தோழர் பால்சாரா, பி.ஏ.எல்.எல்.பி., கணிகர் பிரதான், கௌரி, பி.என். ராஜ்போஜ், லட்சுமி நாராயண் அச்சு நிலைய சொந்தக்காரர் மராம்தார் முதலிய பலரும், தேநீர் விருந்தில் கலந்து கொண்ட முக்யஸ்தர்களும் வந்திருந்தனர். சென்னை மாகாண மாஜி மந்திரி தோழர் எஸ்.முத்தைய்ய முதலியாரின் மகனார் தோழர் சொக்கலிங்கம் அட்வகேட் வந்திருந்தார்.

சிறப்பான விருந்துக்குப் பிறகு பெரியார் டாக்டர் அம்பேத்கருடனும் மற்றவர்களுடனும் பேசிக்கொண்டிருந்தார். இரவு 11 மணிக்குமேல் விருந்துக் கூட்டம் கலைந்தது.

### புறப்பாடு

மறுதினம் 10ஆம் தேதி காலையில் ஆதிதிராவிட கழகத்தார் பெரியாரை உபசரித்து புகைப்படமெடுத்தனர். அன்று பிற்பகல் 2.25 மணிக்கு பெரியாரும் தோழர்களும் சென்னைக்குப் பயணமாயினர். விக்டோரியா டெர்மினஸ் ஸ்டேஷனிலும், தாதர் ரயில் நிலையத்திலும் தோழர்கள் பெரியாருக்கு மாலை அணிவித்து பேரொலியுடன் வாழ்த்தினர். பெரியார் 11ஆம் தேதி காலை சென்னை வந்து சேர்ந்தார்.

**- ‘விடுதலை’ 15.01.1940**

■




# 12

## பம்பாயில் பெரியாருக்கு பேருபசாரம்

- பிரம்மாண்டமான ஊர்வலம்
- பெரியார்-அம்பேத்கர், ஜெயகர், ஜாதர்வ் முதலியவர்கள் சந்திப்பு
- மாலையில் மாபெருங் கூட்டம்
- 3-மணி நேரத்திற்கு மேல் பெரியார் கர்ஜனை
- பல பத்திரிகைப் பிரதிநிதிகள் பேட்டி

பம்பாய், ஜன. 9- 6-1-40ஆம் தேதி காலை பெரியார் ஈ.வெ.ராமசாமி அவர்கள், தோழர்கள் ‘ஜஸ்டிஸ்’ ஆசிரியர் டி.ஏ.வி.நாதன், ‘சண்டே அப்சர்வர்’ ஆசிரியர் பி.பாலசுப்பிரமணியம், கே.எம்.பாலசுப்பிரமணியம், சி.என். அண்ணாதுரை, பஞ்சாட்சரம், டி.பி.எஸ்.பொன்னப்பன் ஆகியவர்களுடன் தாதர் ஸ்டேஷனை வந்து சேர்ந்தார். ஸ்டேஷனில் ஏராளமான தென்னிந்தியர்கள் கூடி தலைவர்களை வரவேற்று உபசரித்தார்கள். பெரியார் வாழ்க, தமிழ் வாழ்க, இந்தி ஒழிக, பார்ப்பனியம் ஒழிக, காங்கிரஸ் ஒழிக, நீதிக்கட்சி ஓங்குக என்ற ஒலிகள் வானைப் பிளந்தன.

மாலையில் பெரியார் தோழர் கே.டி.பிள்ளை அவர்கள் மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஊர்வலம் 2 மைல் நீளத்துக்கு அவ்வளவு பெரிதாக இருந்தது. வழிநெடுக பொதுமக்களும், தமிழ் மக்களும் பெரியாருக்கும் மற்ற தலைவர்களுக்கும் ஏராளமான மாலைகள் சூட்டி உபசரித்து வரவேற்றார்கள்.

தாராவியில் மாலையில் ஒரு மாபெரும் கூட்டம் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர். பெரியார் தமிழ்க்கொடி ஏற்றுவித்தார். அது சமயம் ஓர் உருக்கமான சொற்பொழிவு நிகழ்த்தினார்.



Reg. No. M. 3734.

தமிழ்நாடு தமிழருக்கே

6-பக்கங்கள் விலை அரையணா

# விடுதலை

VIDUTHALAI ★ தமிழர் தினசரி

"விடுதலை" சந்தா விபரம்

(9.1.40) பிரமாதி வருஷம் மார்கழி 25உ செவ்வாய்க்கிழமை [இதழ் 11

## பம்பாயில் பெரியாருக்கு பேருபசாரம்

பெரியார் ஈ. வெ. ராமசாமி

### பிரம்மாண்டமான ஊர்வலம்

பெரியார்--அம்பேத்கார், ஜெயகர், ஜாதர் முதலியவர்கள் சந்திப்பு

மாலையில் மாபெருங் கூட்டம்

3-மணி நேரத்திற்குமேல் பெரியார் கர்ஜனை

பல பத்திரிகைப் பிரதிநிதிகள் பேட்டி

[நமது நிருபர் தந்தி]

பம்பாய், ஜன. 9—

6-1-40ம் தேதி காலை பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள், தோழர்கள் 'ஜஸ்டிஸ்' ஆசிரியர் டி.ஏ.வி. நாதன், 'சண்டே அப்சர்வர்' ஆசிரியர் பி. பாலசுப்பிரமணியம், கே. எம். பாலசுப்பிரமணியம், சி.என். அண்ணாதுரை, பஞ்சாட்சரம், டி. பி. எஸ். பொன்னப்பன் ஆகியவர்களுடன் டாடர் ஸ்டேஷனை வந்து சேர்ந்தார். ஸ்டேஷனில் ஏராளமான தென்னிந்தியர்கள் கூடி தலைவர்களை வரவேற்று உபசரித்தார்கள். பெரியார் வாழ்க, தமிழ் வாழ்க, இந்தி ஒழிக, பார்ப்பனீயம் ஒழிக, காங்கரஸ் ஒழிக, நீதிக்கட்சி ஓங்குக என்ற ஒலிகள் வானைப் பிளந்தன.

மாலையில் பெரியார் தோழர் கே. டி. பிள்ளை அவர்கள் மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஊர்வலம் 2மைல் நீளத்துக்கு அவ்வளவு பெரிதாக இருந்தது. வழிநெடுக பொது மக்களும், தமிழ் மக்களும் பெரியாருக்கும் மற்ற தலைவர்களுக்கும் ஏராளமான மாலைகள் சூட்டி உபசரித்து வரவேற்றார்கள்.

தாராவியில் மாலையில் ஓர் மாபெரும் கூட்டம் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர். பெரியார் தமிழ்க்கொடி யேற்றிவைத்தார். அது சமயம் ஓர் உருக்கமான சொற்பொழிவு நிகழ்த்தினார்.

இரவு 9 மணிக்கு பெரியார் டாக்டர் அம்பேத்காரை கண்டு பேசினார். 2 மணி நேரத்திற்கு மேல் தற்கால அரசியல் நிலைமையைக் குறித்து பேசினார்.

7ம் தேதி, அஸோசியேட் பிரஸ் நிருபரும், பம்பாய் சென்டினல் பத்திரிகை நிருபரும் பெரியாரை பேட்டிக் கண்டு பேசினார்கள்.

பம்பாய் மாஜி மந்திரியும் பார்ப்பனரல்லாத தலைவருமான தோழர் பி. வி. ஜாதர் பெரியாரைக்கண்டு எதிர்காலத்தில் பம்பாயில் பார்ப்பனரல்லாதார் இயக்கம் செய்யவேண்டிய வேலைத் திட்டங்களைக் குறித்துப் பேசினார்.

7ம் தேதி காலை 11 மணிக்கு பெரியார் பிரிவி கௌன்சில் மெம்பரும் ஈரோட்டில் நடைபெற்ற சுயமரியாதை மகாநாட்டின் தலைவருமான மகா கனம் எம். ஆர். ஜெயக்கர் அவர்களைக் கண்டு பேசினார். அவருடன் நீண்ட நேரம் சம்பாஷித்தார்.

மாலை 4-மணிக்கு, கோக்கேல் எடுகேஷன் சொசைட்டி ஹைஸ்கூல் கட்டிடத்தில் பெரியார் அவர்கள் வந்ததை முன்னிட்டு டாக்டர் அம்பேத்கார் ஓர் தேநீர் விருந்தளித்தார். விருந்தில் பம்பாய் கௌன்சில், அசெம்பிளி மெம்பர்களும், பத்திரிகை ஆசிரியர்களும், நகர முக்கியபிரமுகர்களும், சில காங்கரஸ்காரர்களும் கலந்து கொண்டனர்.

7ம் தேதி மாலை 6 மணிக்குத் தாராவியில் பிரம்மாண்டமான பொதுக் கூட்டம் நன்று ஒலிபெருக்கி கருவிகளுடன் நடைபெற்றது.

சுயேச்சைத் தொழிலாளர் கட்சித் தலைவர் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் மேற்படி கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். பெரியாருக்கு ஏராளமான உபசாரப் பத்திரங்களும் பல பணமுடிப்புகளும் அளிக்கப்பட்டன.

பார்ப்பனியத்தை ஒழிப்பதில் தாமும் பெரியார் கொள்கையை ஒத்துக் கொள்வதாகவும் அன்று முதல் இன்றுவரை பார்ப்பனீயத்தை எதிர்த்துப் போராடியும் பார்ப்பனீயத்தை அறைகூவி அழைத்து வருபவருமானஒப்பற்றதலைவர் பேசும் கூட்டத்திற்குத் தலைமை வகிக்க தமக்குக் கிடைக்கப்பட்ட பாக்கியமே தமது வாழ்க்கையில் தாம் சிறந்த பாக்கியமாகக் கருதுவதாகவும் தலைவர் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்.

தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் பிரசங்கத்தைத் தமிழில் மொழிபெயர்த்தார்.

கூட்டத்தில் தோழர்கள் ஜாதர் கௌல்கி முதலிய பிரபல மஹாராஷ்டிர தலைவர்கள் உட்பட பலர் வந்திருந்தார்கள். பெரியார் 3 மணி நேரத்திற்கு மேல் பேசினார். பம்பாயிலுள்ள தலைவர்களுடைய நன்மையை முன்னிட்டு பெரியார் சொற்பொழிவை தோழர் அண்ணாதுரை அவர்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

ஜஸ்டிஸ் கட்சி, சுயமரியாதைக் கட்சி ஆகியவைகள் மக்கள் முன்னேற்றத்திற்கும் அரசியல் துறையிலும், பொருளாதாரத் துறையிலும், சமூகத்துறையிலும் செய்த சீர்திருத்தங்களையும், சென்னைக் காங்கரஸ் மந்திரிகள் செய்த அட்டூழியங்களைக் குறித்தும், திராவிட நாடு தனியாகப் பிரிக்கப்படவேண்டிய அவசியத்தைக் குறித்தும் பெரியார் தெளிவாக விளக்கிப் பேசினார்.

இரவு 11 மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது.

'டைம்ஸ் ஆப் இந்தியா', 'ஈவினிங் நியூஸ்', 'ஜாம்-இ-ஜாம்ஷெட்', 'குஜராத்தி தினசரி' முதலிய பத்திரிகைகளின் பிரதிநிதிகள் பெரியாரைக் கண்டுபேசி போட்டோ எடுத்தார்கள்.

டாக்டர் பி. ஆர். அம்பேத்கார்

28 ஆரம்ப ஆசிரியர்கள் கைது

காங்கரஸ் கமிட்டிக் காரியதரிசி கைது

அனுதாபம்

செய்சருக்கு உடல் அசௌக்கியம்

காவிரிப்பட்டணம் பஞ்சாயத்து

தலைவர் தேர்தல்

ஜஸ்டிஸ் கட்சி வெற்றி

இரவு 9 மணிக்கு பெரியார் டாக்டர் அம்பேத்கரை கண்டு பேசினார். 2 மணி நேரத்திற்கு மேல் தற்கால அரசியல் நிலைமையைக் குறித்து பேசினார்.

7ஆம் தேதி, அஸோசியேட் பிரஸ் நிருபரும், பம்பாய் சென்டினல் பத்திரிகை நிருபரும் பெரியாரை பேட்டிக் கண்டு பேசினார்கள்.

பம்பாய் மாஜி மந்திரியும் பார்ப்பனரல்லாத தலைவருமான தோழர் பி.வி.ஜாதர்வ் பெரியாரைக்கண்டு, எதிர்காலத்தில் பம்பாயில் பார்ப்பனரல்லாதார் இயக்கம் செய்யவேண்டிய வேலைத் திட்டங்களைக் குறித்துப் பேசினார்.

7ஆம் தேதி காலை 11 மணிக்கு பெரியார் பிரிவி கவுன்சில் மெம்பரும் ஈரோட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டின் தலைவருமான மகா கனம் எம்.ஆர்.ஜெயகர் அவர்களைக் கண்டு பேசினார். அவருடன் நீண்ட நேரம் சம்பாஷித்தார்.

மாலை 4 மணிக்கு, கோக்கேல் எடுகேஷன் சொசைட்டி ஹைஸ்கூல் கட்டிடத்தில் பெரியார் அவர்கள் வந்ததை முன்னிட்டு டாக்டர் அம்பேத்கர் ஓர் தேநீர் விருந்தளித்தார். விருந்தில் பம்பாய் கவுன்சில், அசம்பிளி மெம்பர்களும், பத்திரிகை ஆசிரியர்களும், நகர முக்கிய பிரமுகர்களும், சில காங்கிரஸ்காரர்களும் கலந்து கொண்டனர்.

7ஆம் தேதி மாலை 6 மணிக்குத் தாராவியில் பிரம்மாண்டமான பொதுக்கூட்டம் ஒன்று ஒலிபெருக்குக் கருவிகளுடன் நடைபெற்றது.

சுயேச்சைத் தொழிலாளர் கட்சித் தலைவர் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் மேற்படி கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். பெரியாருக்கு ஏராளமான உபசாரப் பத்திரங்களும் பல பணமுடிப்புகளும் அளிக்கப்பட்டன.





பார்ப்பனியத்தை ஒழிப்பதில் தாமும் பெரியார் கொள்கையை ஒத்துக் கொள்வதாகவும் அன்று முதல் இன்றுவரை பார்ப்பனியத்தை எதிர்த்துக் போராடி வருபவரான ஒப்பற்ற தலைவர் பேசும் கூட்டத்திற்குத் தலைமை வகிக்க தமக்குக் கிடைக்கப்பட்ட பாக்கியமே தமது வாழ்க்கையில் தாம் சிறந்த பாக்கியமாகக் கருதுவதாகவும் தலைவர் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்.

தோழர் சி.என். அண்ணாதுரை அவர்கள் பிரசங்கத்தைத் தமிழில் மொழிபெயர்த்தார்.

கூட்டத்தில் தோழர்கள் ஜாதர் கவுல்வி முதலிய பிரபல மகாராஷ்டிர தலைவர்கள் உட்பட பலர் வந்திருந்தார்கள். பெரியார் 3 மணி நேரத்திற்கு மேல் பேசினார். பம்பாயிலுள்ள தலைவர்களுடைய நன்மையை முன்னிட்டு பெரியார் சொற்பொழிவை தோழர் அண்ணாதுரை அவர்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

ஜஸ்டிஸ் கட்சி, சுயமரியாதைக் கட்சி ஆகியவைகள் மக்கள் முன்னேற்றத்திற்கும் அரசியல் துறையிலும், பொருளாதாரத் துறையிலும், சமூகத் துறையிலும் செய்த சீர்திருத்தங்களையும், சென்னை காங்கிரஸ் மந்திரிகள் செய்த அட்டூழியங்களைக் குறித்தும், திராவிட நாடு தனியாகப் பிரிக்கப்பட வேண்டிய அவசியத்தைக் குறித்தும் பெரியார் தெளிவாக விளக்கிப் பேசினார்.

இரவு 11 மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது.

‘டைம்ஸ் ஆப் இந்தியா’, ‘ஈவினிங் நியூஸ்’, ‘ஜாம்-இ-ஜாம் ஷெட்’, ‘குஜராத்தி தினசரி’ முதலிய பத்திரிகைகளின் பிரதிநிதிகள் பெரியாரைக் கண்டுபேசி போட்டோ எடுத்தார்கள்.

**- ‘விடுதலை’ - 09.01.1940**

■

# 13

# காங்கிரசை எதிர்க்க கூட்டு இயக்கம்

## பெரியார் - ஜின்னா - அம்பேத்கர் முடிவு

நீதிக்கட்சித் தலைவர் தோழர் ஈ.வெ.ராமசாமி அவர்கள் பம்பாயில் சுற்றுப் பிரயாணம் செய்து அ.இ.முஸ்லிம் லீக் தலைவர் ஜனாப் ஜின்னாவையும், ஆதி திராவிட சமூகத் தலைவர் டாக்டர் அம்பேத்கரையும் சந்தித்து தற்கால அரசியல் நிலை பற்றிச் சம்பாஷித்த விஷயத்தைப் பற்றி, பெரியார் ஈ.வெ.ராமசாமி ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அது வருமாறு:-

நான் பம்பாயில் சுற்றுப்பிரயாணம் செய்தபோது அ.இ. முஸ்லிம் லீக் தலைவர் ஜனாப் முகம்மது அலி ஜின்னாவையும், ஆதிதிராவிட சமூகத் தலைவர் டாக்டர் அம்பேத்கரையும் சந்தித்துச் சில மணி நேரங்கள் அவர்களுடன் மனம் விட்டுத் தாராளமாகச் சம்பாஷித்தேன்.

நாங்கள் காங்கிரஸின் ஆரம்பம் முதல் அரசியல் நிருவாகத் திறமையின்மை வரை பல்வேறு விஷயங்கள் பற்றிச் சம்பாஷித்தோம். ஜனாப் ஜின்னாவும் டாக்டர் அம்பேத்கரும் காங்கிரஸைப் பற்றிக் கூறிய அபிப்பிராயங்கள் என் சொந்த அபிப்பிராயத்தை ஒத்தனவாகவே இருந்தன. நாங்கள் மூவரும், காங்கிரஸ் செல்வாக்கினால் ஏற்படும் தீங்குகளை அகற்ற ஒன்று கூடி முயற்சிப்பதென முடிவு செய்தோம்.

காங்கிரஸின் செயல்களும், அதில் அங்கம் வகிப்பவர்களும், கொள்கைகளும், தீவிர மாறுதலும் காங்கிரஸ் எப்போதும் ஓர் அரசியல் ஸ்தாபனமெனக் கூற முடியாதென்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன என்று ஜனாப் ஜின்னா கூறினார்.

காங்கிரஸ் சுயநலங்கொண்ட சில தனிப்பட்ட நபர்களடங்கியது. அது பொது மக்களின் உணர்ச்சியில் விளையாடும் முறையில்



1940-ஆ ஜனவரி-மீ 28-உ குடி அரசு 11

# காங்கரசை எதிர்க்க கூட்டு இயக்கம்

:(o):

## பெரியார்-ஜின்னா-அம்பேத்கார் முடிவு

### பம்பாய் பயணம் பற்றி பெரியார் அறிக்கை

சென்றவாரம் நீதிக் கட்சித் தலைவர் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் பம்பாயில் சுற்றுப் பிரயாணம் செய்து அ. இ. முஸ்லிம் லீக் தலைவர் ஜனாப் ஜின்னாவையும், ஆதித்திராவிட சமூகத் தலைவர் டாக்டர் அம்பேத்காரையும் சந்தித்து தற்கால அரசியல் நிலை பற்றிச் சம்பாஷித்த விஷயத்தைப்பற்றி, பெரியார் ஈ. வெ. ராமசாமி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அது வருமாறு:—

"நான் பம்பாயில் சுற்றுப்பிரயாணம் செய்தபோது அ. இ. முஸ்லிம் லீக் தலைவர் ஜனாப் முஹம்மத் அலி ஜின்னாவையும், ஆதித்திராவிட சமூகத் தலைவர் டாக்டர் அம்பேத்காரையும் சந்தித்துச் சில மணிநேரங்கள் அவர்களுடன் மனம்விட்டுத் தாராளமாகச்சம்பாஷித்தேன்.

நாங்கள் காங்கரஸின் ஆரம்பம் முதல் அரசியல் நிர்வாகத் திறமையின்மைவரை பல்வேறு விஷயங்கள் பற்றிச் சம்பாஷித்தோம். ஜனாப்ஜின்னாவும் டாக்டர் அம்பேத்காரும் காங்கரஸைப் பற்றிக் கூறிய அபிப்பிராயங்கள் என் சொந்த அபிப்பிராயத்தை ஒத்தனவாகவே இருந்தன. நாங்கள் மூவரும், காங்கரஸ் செல்வாக்கினால் ஏற்படும் தீங்குகளை யகற்ற ஒன்று கூடி முயற்சிப்பதென முடிவு செய்தோம்.

#### சுய நலமிகள் கூட்டம்

"காங்கரஸின் செயல்களும் அதில் அங்கம் வகிப்பவர்களும், கொள்கைகளும் தீவிரமாறுதலும் காங்கரஸ் எப்போதும் ஒரு அரசியல் ஸ்தாபனமெனக் கூறமுடியாதென்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன" என்று ஜனாப் ஜின்னா கூறினார்.

காங்கரஸ் சுயநலங் கொண்ட சில தனிப்பட்ட நபர்களடங்கியது. அது பொதுமக்களின் உணர்ச்சியில் விளையாடும் முறையில் நடந்து வருகிறது. காங்கரஸாரும் பொதுமக்களின் பிரதிநிதிகளெனத் தங்களைக் கூறிக்கொண்டு அவர்களிடம் கிடைத்ததையெல்லாம் விழுங்கி, தங்கள் குலப்பெருமையை பலப்படுத்திக் கொள்ளுகின்றனர்.

#### பிரிட்டிஷாரின் நல்ல பிள்ளை

காங்கரஸ் விஷயத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் நடந்துகொள்ளும் முறைகள் பற்றியும் விவாதம் நடைபெற்றது. பிரிட்டிஷ் சர்க்கார் காங்கரசைத் தட்டிக் கொடுப்பதையே லாபகரமானதாகவும், பாதுகாப்பானதாகவும் கருதுகின்றனவென்று நாங்கள் ஏகமனதாக அபிப்பிராயப்பட்டோம். ஏனெனில், வேறெந்த ஸ்தாபனமும், காங்கரசைப் போன்று ராஜவிஸ்வாசமாகவும், பூரணமாகவும் பிரிட்டிஷ் சர்க்காரின் பாட்டுக்குத் தாளம் போட முடியாது. மேலும், காங்கரசைப் போல் வேறெந்தக் கட்சியும், பிரிட்டிஷாரின் வசதிக்காகப் பொதுமக்களின் உணர்ச்சிகளைக் கருணையற்ற முறையில் புண்படுத்த முற்படாது.

பிரிட்டிஷ் நலன்களுக்குத் தீங்கு செய்யாததும், அவ்வாறு செய்ய நினையாததுமான ஒரே ஒரு கட்சி காங்கரஸ்தான். ஒருக்கால் பிரிட்டிஷ் சர்க்காரின் கருத்தும் இவ்வாறுதான் இருக்குமெனக் கருத வேண்டியிருக்கிறது. அவ்வாறில்லாவிடில், காங்கரசிடம் பிரிட்டன் இப்போது நடந்து வரும் தோரணையில் நடந்து வராது.

#### குரைக்கும் நாய்களுக்கு எலும்பு

பிரிட்டிஷார் காங்கரஸின் செல்வாக்கு க்ஷீணமடைந்து வருவதை நன்கறிவர். ஆனால், அவர்கள் "குரைக்கும் நாய்களுக்கு எலும்பு போடு" பழைய கொள்கையை இப்போது அனுஷ்டித்து வருகின்றனர். அயல்நாட்டு ஆதிக்கத்தை யுண்மையில் வெறுப்பவர்களைக் கருணையின்றி ஒழித்து விடும் கொள்கையும் பிரிட்டிஷார் அனுசரித்து வருகின்றனர். ஒரு வேளை அவர்கள் இதர சிலகட்சித் தலைவர்களையும், சமூகத்தினரையும் கூடப்புறக்கணித்து விட முயற்சிப்பர்.

முஸ்லிம் லீக் மதப்பாது காப்புக்காக ஏற்பட்ட ஒரு ஸ்தாபனமன்று. இஸ்லாத்திற்கு இத்தகைய உதவியொன்றும் தேவையில்லை. இஸ்லாம்மதம் தன்சுயபலத்தோடு நின்று, தன்னைப்பாது காத்துக்கொள்ளும் வல்லமையுடையது.

ஆனால், அரசியல் முஸ்லிம்களுக்காகப்பேசவும், செயல்கள் புரியவும் முஸ்லிம் லீக் ஒரு ஸ்தாபனத்துக்கு மட்டுமே உரிமையிருக்கிறது. முஸ்லிம் லீக் ஒன்றே முஸ்லிம்களின் சுயமரியாதைக்குக் கண்கண்ட பூரணச் சின்னமாகும். அரசியல் முஸ்லிம்களுக்காக முஸ்லிமல்லாதார் பேசுவதை முஸ்லிம் லீக் ஒருபோதும் சகித்துக் கொண்டிராது.

முஸ்லிம் லீக் ஒன்றே முஸ்லிம் சமூகத்தின் அரசியல் விஷயங்களில் பிரதிநிதித்துவம் வாய்ந்தது. முஸ்லிம்சமூகத்தின் சார்பாகப் பேசவும், முஸ்லிம் சமூக நன்மைகளை உத்தேசித்து எத்தகைய அரசியல் மாற்றத்தையும் அனுமதிக்கவும் முஸ்லிம்லீக் ஒன்றுக்கு மட்டுமே உரிமையுண்டு. இந்த உண்மை உணரப்பட வேண்டும்; அங்கீகரிக்கப்பட வேண்டும். அப்போது தான் முஸ்லிம் லீக், தனது அரசியல் கோரிக்கைகளை இதர அரசியல் கட்சிகள் முன்னும் பிரிட்டிஷார் முன்னும் சமர்ப்பிக்கும்.

#### முஸ்லிம் லீக் பணிய முடியாது

"முஸ்லிம் லீக், தனது உரிமைகளைக் கோருவதற்காக அந்நியருக்கு பணிந்து விடாது. நமது சமூகத்தின் 'இஜ்ஜத்' (கண்ணியத்தை) அங்கீகரிக்கக்கூடிய அந்தஸ்தையே முஸ்லிம் லீக் கோருகிறது. இத்தகைய கண்ணியமான சந்தைக் கொண்டுவரும் எவரையும் வரவேற்க லீக் தயாராயிருக்கிறது."

என்று ஜனாப் ஜின்னா கூறினார். இந்தப் பெருந்தன்மைவாய்ந்த நியாயமான கூற்றை யாராவது மறுக்க முடியுமா என்று நான் கேட்கிறேன்.

காங்கரஸ் ஆட்சியில் சிறுபான்மையினர் நிலைமை சம்பந்தமான பிரச்சினையில் நாங்கள் ஒரே அபிப்பிராயம் கொண்டவர்களாகவே இருக்கிறோம்.

"எந்த வகையிலாவது, காங்கரஸ் மீண்டும் பதவிக்கு வர முயற்சிக்குமாயின், அம் முயற்சியொன்றே சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு வேண்டுவதன் அவசியத்தையுணர்த்திவிடும். இப்பாதுகாப்புகளில்லாமல் எந்த அரசியல் முறையும் திருப்திகரமாக நடைபெறாது."

என்று ஜனாப் ஜின்னா அபிப்பிராயப்படுகிறார்.

#### கட்டாய இந்தி

காங்கரஸின் ஆட்சி, உலக மக்களுடையவும், பிரிட்டிஷாருடையவும் கண்களைத் திறந்துவிடும். அப்போது காங்கரஸின் யதேச்சாதிகாரச் செயல்களிலிருந்து சிறுபான்மையினர் பாதுகாக்கப்படவேண்டுவதவசியமென்ற உண்மை ஸ்வரூபத்தைக் கண்டுகொள்வர்.

கட்டாய இந்தி சம்பந்தமாக என் கருத்துகளை ஜனாப் ஜின்னாவும், டாக்டர் அம்பேத்காரும் ஆதரித்தனர். கட்டாய இந்தித் திட்டம் நமது கலைகளுக்கு விரோதமாக பிராம்மண மதத்தையும் கலைகளையும் பலப்படுத்தி விஸ்தரிக்கும் ஒரு குறுகிய நோக்குள்ள திட்டமாகுமென்று நான் அபிப்பிராயப்படுவது போன்றே ஜனாப் ஜின்னாவும், டாக்டர் அம்பேத்காரும் அபிப்பிராயப்பட்டனர். நான் நாதுராகாணத்தில் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி மீண்டும் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்ட விஷயமாகப் பிரஸ்தாபித்தபோது ஜனாப் ஜின்னா அவர்கள் "நீங்கள் என் பூர்ண ஆதரவையும் பெறுவீர்கள்" என்று கூறினார். இவ்விஷயத்தில் டாக்டர் அம்பேத்காரும் என் அபிப்பிராயத்தை ஆதரித்தார். இந்தி சம்பந்தமாக எனது கொள்கையை ஜனாப் ஜின்னா அங்கீகரித்ததிலிருந்து, நான் மீண்டும் ஆரம்பிக்கப்போகும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் இம்மாகாண முஸ்லிம்கள் தாராளமாகக் கலந்து உதவி செய்வாரென நான் நம்பு

நடந்து வருகிறது. காங்கிரஸாரும் பொது மக்களின் பிரதிநிதிகளெனத் தங்களைக் கூறிக்கெண்டு அவர்களிடம் கிடைத்ததையெல்லாம் விழுங்கி, தங்கள் குலப்பெருமையைப் பலப்படுத்திக் கொள்ளுகின்றனர்.

காங்கிரஸ் விஷயத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் நடந்து கொள்ளும் முறைகள் பற்றியும் விவாதம் நடைபெற்றது. பிரிட்டிஷ் சர்க்கார்





காங்கிரசைத் தட்டிக் கொடுப்பதையே லாபகரமானதாகவும், பாதுகாப்பானதாகவும் கருதுகின்றனரென்று நாங்கள் ஏகமனதாக அபிப்பிராயப்பட்டோம். ஏனெனில் வேறெந்த ஸ்தாபனமும், காங்கிரசைப் போன்று ராஜவிஸ்வாசமாகவும், பூரணமாகவும் பிரிட்டிஷ் சர்க்காரின் பாட்டுக்குத் தாளம் போட முடியாது. மேலும், காங்கிரசைப் போல் வேறெந்தக் கட்சியும். பிரிட்டிஷாரின் வசதிக்காகப் பொதுமக்களின் உணர்ச்சிகளைக் கருணையற்ற முறையில் புண்படுத்த முற்படாது.

பிரிட்டிஷ் நலன்களுக்குத் தீங்கு செய்யாததும், அவ்வாறு செய்ய நினையாததுமான ஒரே ஒரு கட்சி காங்கிரஸ்தான். ஒருக்கால் பிரிட்டிஷ் சர்க்காரின் கருத்தும் இவ்வாறுதான் இருக்குமெனக் கருத வேண்டியிருக்கிறது. அவ்வாறில்லாவிடில், காங்கிரசிடம் பிரிட்டன் இப்போது நடந்து வரும் தோரணையில் நடந்து வராது.

பிரிட்டிஷார் காங்கிரசின் செல்வாக்கு க்ஷீணமடைந்து வருவதை நன்கறிவர். ஆனால், அவர்கள் குரைக்கும் நாய்களுக்கு எலும்பு போடும் பழைய கொள்கையை இப்போது அனுஷ்டித்து வருகின்றனர். அயல்நாட்டு ஆதிக்கத்தை உண்மையில் வெறுப்பவர்களைக் கருணையின்றி ஒழித்து விடும் கொள்கையும் பிரிட்டிஷார் அனுசரித்து வருகின்றனர். ஒரு வேளை அவர்கள் இதர சில கட்சித் தலைவர்களையும், சமூகத்தினரையும் புறக்கணித்துவிட முயற்சிப்பர்.

முஸ்லிம் லீக் மதப் பாதுகாப்புக்காக ஏற்பட்ட ஒரு ஸ்தாபனமன்று, இஸ்லாத்திற்கு இத்தகைய உதவியொன்றும் தேவையில்லை. இஸ்லாம் மதம் தன் சுயபலத்தோடு நின்று தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் வல்லமையுடையது.

ஆனால், அரசியல் முஸ்லிம்களுக்காகப் பேசவும், செயல்கள் புரியவும் முஸ்லிம் லீக் ஒரு ஸ்தாபனத்துக்கு மட்டுமே உரிமையிருக்கிறது. முஸ்லிம் லீக் ஒன்றே முஸ்லிம்களின் சுயமரியாதைக்குக் கண்கண்ட பூரணச் சின்னமாகும். அரசியல் முஸ்லிம்களுக்காக முஸ்லிம் அல்லாதார் பேசுவதை முஸ்லிம் லீக் ஒரு போதும் சகித்துக் கொண்டிராது.

முஸ்லிம் லீக் ஒன்றே முஸ்லிம் சமூகத்தின் அரசியல் விஷயங்களில் பிரதிநிதித்துவம் வாய்ந்தது. முஸ்லிம் சமுகத்தின் சார்பாகப் பேசவும்,



முஸ்லிம் சமூக நன்மைகளை உத்தேசித்து எத்தகைய அரசியல் மாற்றத்தையும் அனுமதிக்கவும் முஸ்லிம் லீக் ஒன்றுக்கு மட்டுமே உரிமையுண்டு. இந்த உண்மை உணரப்பட வேண்டும்; அங்கீகரிக்கப்பட வேண்டும்; அப்போதுதான் முஸ்லிம் லீக், தனது அரசியல் கோரிக்கைகளை இதர அரசியல் கட்சிகள் முன்னும் பிரிட்டிஷார் முன்னும் சமர்ப்பிக்கும்.

“**முஸ்லிம் லீக், தனது உரிமைகளைக் கோருவதற்காக அந்நியருக்குப் பணிந்து விடாது. நமது சமூகத்தின் இஜ்ஜத் (கண்ணியத்தை) அங்கீகரிக்கக்கூடிய அந்தஸ்தையே முஸ்லிம் லீக் கோருகிறது. இத்தகைய கண்ணியமான சத்தைக் கொண்டுவரும் எவரையும் வரவேற்க லீக் தயாராயிருக்கிறது**” என்று ஜனாப் ஜின்னா கூறினார். இந்தப் பெருந்தன்மை வாய்ந்த நியாயமான கூற்றை யாராவது மறுக்க முடியுமா என்று நான் கேட்கிறேன்.

காங்கிரஸ் ஆட்சியில் சிறுபான்மையினர் நிலைமை சம்பந்தமான பிரச்சினையில் நாங்கள் ஒரே அபிப்பிராயம் கொண்டவர்களாக இருக்கிறோம்.

எந்த வகையிலாவது, காங்கிரஸ் மீண்டும் பதவிக்கு வர முயற்சிக்குமாயின், அம்முயற்சியொன்றே சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு வேண்டுவதன் அவசியத்தை உணர்த்தி விடும். இப்பாதுகாப்புகள் இல்லாமல் எந்த அரசியல் முறையும் திருப்திகரமாக நடைபெறாது என்று ஜனாப் ஜின்னா அபிப்பிராயப்படுகிறார்.

காங்கிரசின் ஆட்சி, உலக மக்களுடையவும், பிரிட்டிஷாருடையவும் கண்களைத் திறந்துவிடும். அப்போது காங்கிரசின் யதேச்சாதிகாரச் செயல்களிலிருந்து சிறுபான்மையினர் பாதுகாக்கப்பட வேண்டுவது அவசியமென்ற உண்மை ஸ்வரூபத்தைக் கண்டுகொள்வர்.

கட்டாய இந்தி சம்பந்தமாக என் கருத்துகளை ஜனாப் ஜின்னாவும், டாக்டர் அம்பேத்கரும் ஆதரித்தனர். கட்டாய இந்தித் திட்டம் நமது கலைகளுக்கு விரோதமாக பிராமண மதத்தையும் கலைகளையும் பலப்படுத்தி விஸ்தரிக்கும் ஒரு குறுகிய நோக்குள்ள திட்டமாகுமென்று நான் அபிப்பிராயப்படுவது போன்றே ஜனாப் ஜின்னாவும், டாக்டர் அம்பேத்கரும் அபிப்பிராயப்பட்டனர். நான் நமது மாகாணத்தில் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி மீண்டும் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்ட





விஷயமாகப் பிரஸ்தாபித்த போது ஜனாப் ஜின்னா அவர்கள் "நீங்கள் என் பூர்ண ஆதரவையும் பெறுவீர்கள்" என்று கூறினார். இவ்விஷயத்தில் டாக்டர் அம்பேத்கரும் என் அபிப்பிராயத்தை ஆதரித்தார். "இந்தி சம்பந்தமாக எனது கொள்கையை ஜனாப் ஜின்னா அங்கீகரித்ததிலிருந்து, நான் மீண்டும் ஆரம்பிக்கப் போகும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் இம்மாகாண முஸ்லிம்கள் தாராளமாகக் கலந்து உதவி செய்வரென நான் நம்புகிறேன்." நம் மாகாணத்தில் காங்கிரஸ் மந்திரி சபையின் செயல்களைப் பற்றி என்னிடமிருந்து; முதல் தரமான தகவல்களைக் கேள்விப்பட்டவுடன் அவ்விரு தலைவர்களும்,

"காங்கிரஸ் ஆட்சியின் கீழ் நீங்கள் மிக சகிப்புத் தன்மையோடு நடந்து கொண்டதைப் பாராட்டுகிறேன். நீங்கள் இதர மாகாணங்களிலும் சுற்றுப் பிரயாணம் செய்து, அங்குள்ள பொது மக்களுக்கு இவ்வுண்மையை உணர்த்த வேண்டும்" என்று ஏகோபித்துக் கூறினார்கள்.

இந்நாட்டிலுள்ள எல்லா காங்கிரஸ் எதிர்ப்பு ஸ்தாபனங்களையும் ஒன்று திரட்ட நாங்கள் ஏகமனதாக வேலை செய்வதென முடிவு செய்தோம். இதனை கட்டுப்பாடான வேலையென அவர்கள் கூறுகின்றனர். ஆனால், ஜனாப் ஜின்னாவும், டாக்டர் அம்பேத்கரும் அரசியல் நிர்ணய சபையைப் பலமாக எதிர்க்கின்றனர். மாஜி காங்கிரஸ் மந்திரி சபையால் ஏற்படுத்தப்பட்ட படுமோச வரிகளை ஒழிக்கக் கிளர்ச்சி செய்யும் விஷயத்தைப் பற்றியும், வேலையற்றிருக்கும் சட்டசபைகளின் அங்கத்தினர்களுக்கு சம்பளங்கள் அளிக்கப்படக்கூடாதெனக் கிளர்ச்சி செய்யும் விஷயத்தைப் பற்றியும் நாங்கள் மேற்கொண்டு சம்பாஷணை நடத்தினோம். கூடிய சீக்கிரத்தில் இதற்காக ஒரு கூட்டுக்கிளர்ச்சி செய்ய திட்டத்தை வகுப்பதென உத்தேசித்துள்ளோம்.

நாம் நியாயமாகக் கருதுபவைகளையெல்லாம் அழித்துக் கொண்டு வரும் விபரீத குணமுள்ள ஸ்தாபனமாகிய காங்கிரசை கடைசி வரை எதிர்த்துப் போராட காங்கிரஸ் எதிர்ப்பு இயக்கம் ஒன்று சமீபத்தில் ஆரம்பிக்கப்படுமென அந்த மாபெருந் தலைவர்களிருவரும் வாக்குறுதிகளும் நம்பிக்கையுமளித்தனர் என்பதை நான் மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்கிறேன். சீக்கிரத்தில் நான் மீண்டும் பம்பாய் செல்வேன். அது சமயம் அரசியல் நிலைபற்றி இன்னும் விரிவான விஷயங்கள் விவாதிக்கப்பட்டு, ஒரு திட்டம் வகுக்கப்படுமென நம்புகிறேன்.



என் சுற்றுப்பிரயாணம் மிகப் பயன்படக்கூடியதாகவும் பேருதவியாகவும் இருந்தது. இது போன்ற சந்தோஷமான சந்திப்பு - நமது நண்பர்கள் எதிர்பார்ப்பதைவிடவும், நம் எதிரிகள் பயப்படுவதைவிடவும் வெகுசீக்கிரத்தில் - ஏற்படுவதற்கு என் நன்றியையும், வந்தனத்தையும் செலுத்திக்கொள்ளுகிறேன்.

(நீதிக் கட்சித் தலைவர் தோழர் ஈ.வெ.ராமசாமி அவர்கள் பம்பாயில் சுற்றுப் பிரயாணம் செய்து அ.இ.முஸ்லிம் லீக் தலைவர் ஜனாப் ஜின்னாவையும், ஆதி திராவிட சமூகத் தலைவர் டாக்டர் அம்பேத்கரையும் சந்தித்து தற்கால அரசியல் நிலைபற்றிச் சம்பாஷித்த விஷயத்தைப்பற்றி, பெரியார் ஈ.வெ.ராமசாமி அவர்கள் வெளியிட்ட அறிக்கை)

**- ‘குடிஅரசு’, அறிக்கை - 28.01.1940**

■

## 14

# அம்பேத்கரின் வெடிகுண்டு

## பம்பாயில் தாழ்த்தப்பட்ட மக்கள்விடுதலை நாள் கொண்டாட்டம்

**இந்நாட்டு மக்களின் இழி நிலைக்கு ஆரிய மதமும் ஆரிய நாகரிகமும் காரணம்**

இந்தியர்கள் ஆரிய மத நாகரிகங்களைப் பற்றி பெருமை கொள்ளுகிறார்கள். ஆனால் இந்தியர்களுடைய வீரமும், வலிவும் அறிவும், ஞானமும் அரசியல் சுதந்திரமும் உலக மக்கள் முன்னிலையில் கீழான நிலைமை அடைந்து விட்டதற்கு காரணம் 2000 வருஷம் காலமாக இந்தியர் ஆரிய ஆதிக்கத்துக்கு அடிமைப்பட்டுக் கிடந்ததேயாகும். என்று பம்பாய் சுதந்திர தொழிலாளர் சங்கத்தில் விடுதலை நாள் கொண்டாட்டத்தில் 20000 மக்கள் கொண்ட கூட்டத்தில் டாக்டர் அம்பேத்கர் கர்ஜித்தார். பொதுஜனங்கள் பெருத்த ஆரவாரம் செய்தார்கள்.

**டாக்டர் அம்பேத்கர் பிரசங்கம்**

இன்றைக்கு 14 வருஷங்களுக்கு முன்பு இந்த நாள்தான் தாழ்த்தப்பட்ட மக்கள் இந்த ஊரில் கூட்டப்பட்ட ஒரு மாநாட்டிற்குப் பக்கத்திலுள்ள ஒரு குடிதண்ணீர்க் குளத்தில் தண்ணீர் மொள்ள உரிமை பெற வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு ஜாதி இந்துகளுக்கு ஒரு சவால் விடுத்தார்கள். அந்த நாள் மாலையிலேயே தண்ணீர் மொள்ள முயற்சித்தார்கள்.

அதன்பேரில் 3000 ஜாதி இந்துக்கள் ஆயுதங்களுடனும், தடிகளுடனும் வந்து பந்தலைச் சூழ்ந்து கொண்டு நூற்றுக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்களை அடித்து தொந்தரவு செய்தார்கள். இந்த செய்கையே ஒரு சத்தியாக்கிரக இயக்கமாக பரிணமித்து 4 வருஷ காலம்




நடந்து அதனால் ஏற்பட்ட கோர்ட்டு விவகாரங்கள் இன்னும் அதிக காலம் நடந்து கடைசியாக தாழ்த்தப்பட்ட மக்கள் அக்குளத்தில் தண்ணீர் எடுக்க வெற்றி பெற்றார்கள். அதனாலேயே, அந்த நாள் தாழ்த்தப்பட்ட மக்களின் சுதந்திர நாள் என்னும் பெயரால் கொண்டாடப்பட்டு வருகிறது. ஒரு விரிவானதும், ஊக்கம்தரத்தக்கதுமான நிகழ்ச்சிகள்

கொண்ட நடவடிக்கைகள் இந்த சந்தர்ப்பத்தில் கொண்டாடப்பட்டு வருகின்றன.

நமது நாட்டில் ஜாதி வித்தியாசமிருப்பதற்கும் அவற்றுள் உயர்வு தாழ்வு இருப்பதற்கும் அவை சட்டத்தின் மூலமும் சமுதாய ஒழுங்கு மூலமும் காப்பாற்றப்பட்டு வருவதற்கும் ஆரிய நாகரிகமும் அவர்களுடைய சமய கொள்கையாகிய இந்து மதமுமே காரணமாகும். இந்த ஆரிய ஸ்தாபனங்களேதான் இந்திய சமுதாயம் பாழாய் போயிருப்பதற்கு காரணமாகும்.

இந்த ஆரிய கொள்கைகளேதான் இந்திய பெண் மக்களை தாழ்த்தப்பட்ட மக்களைவிட கீழான நிலைமையில் வைத்திருப்பதற்கு காரணமாகும். மற்றும் ஆரிய கொள்கைகளானது இந்திய சமுதாயத்திற்கு அளவிட முடியாத கெடுதல்களை செய்திருக்கிறது. இந்தியர் மாத்திரமல்லாமல் வேறு எந்த சமுதாயகாரர்கள் இருந்த போதிலும் அநீதியும் கொடுமையுமான ஆரிய கொள்கைக்கு அடிமைப்பட்டால் இந்த இழிவான நிலைமைக்கு வந்துதான் தீரும்.

இந்திய சமுதாயம் உயர்நிலை அடையவேண்டுமானால் ஆரிய ஆதிக்கமும் அதனால் ஏற்பட்ட ஜாதி பாகுபாடுகளும் மற்றும் பெண்களை இழிவுப்படுத்துவதும் முதலிய நூற்றுக்கணக்கான ஆரிய கொடுமைகள் ஒழிந்தாகவேண்டும்.

1927ஆம் வருஷத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஆரம்பித்த சத்தியாகிரகம்தான் தாழ்த்தப்பட்ட ஜனங்களுக்கு சமத்துவ உணர்ச்சியை உண்டாக்கி ஜாதிபேத கொடுமைக்கு நாசக்காலத்தை துவக்கிற்று, அந்த சத்தியாகிரகம்தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்குள் புரட்சி மனப்பான்மையை உண்டாக்கி தங்களை ஜாதி இந்துக்கள் என்பவர்கள், தாழ்மையாய் நடத்தி வருவதையும் ஞாபகப்படுத்திற்று.

அரசியல் சுதந்திரத்தைவிட சமுதாய சுதந்திரமும், சுயமரியாதையும் மேலானது என்பதை சரித்திரங்களில் காணலாம். மக்கள் சமுதாய முன்னேற்றத்திற்கு வேண்டிய காரியங்களை சரிப்படுத்தி ஒன்றுப்படுத்திக் கொள்வதற்கு முன்பு அரசியல் சுதந்திரம் என்பது அர்த்தமற்ற காரியமாகும். உலகத்தில் கருப்பு ஜனங்கள் ஆசியா, அமெரிக்கா முதலிய அரசியல் சுதந்திரம் பெற்ற இடங்களில் வசித்து வந்தபோதிலும் கூட கருப்பு ஜனங்களின் நிலைமை இந்தியாவில்

இருப்பதைவிட கேவலமாகத்தானிருந்து. வருகிறது. சமுதாய அடிமைத்தன்மையும் ஒரு ஜாதிமீது மற்றொரு ஜாதி ஆதிக்கம் செலுத்துவதும் பொருளாதாரத் துறையில் ஒரு ஜாதியே மற்ற ஜாதியைவிட உயர்நிலையிலிருப்பதும் ஆன கொடுமையிலிருந்து விலகுவதுதான் மதிக்கத் தகுந்த சுதந்திரமாகும்.

இந்த எண்ணங்களை மனதில் வைத்துக்கொண்டும் காரியத்தில் காட்டத் துணிந்துகொண்டும் முயற்சிக்கிற சுயேச்சைதான் உண்மைச் சுயேச்சையாக இருக்கமுடியும். ஆனால் காங்கிரசுக்கு அந்த எண்ணமுமில்லை; முயற்சியுமில்லை. ஆசையுமில்லை. காங்கிரஸ் மந்திரிகளும் அதன் சட்டசபை அங்கத்தினர்களும் சில தலைவர்களிடமிருந்து மகிழ்ச்சி தரக்கூடிய எந்தக்காரியத்தையும் எதிர்பார்க்க முடியாது. இருக்கிற நிலைமையை நிலை நிறுத்தத்தான் உதவுவார்கள். தாழ்த்தப்பட்ட மக்களின் சத்தியாக்கிரகமானது தங்களுடைய சமுதாய சுதந்திரத்தை பெறுவதற்கு மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டதல்ல. பின் எதற்கென்றால் ஒரு கூட்டத்தார் மற்ற மக்கள் பல நூற்றாண்டுகளாக தாழ்த்தப்பட்டு இழிவுப்படுத்தப்பட்டு வருவதையும் தாழ்த்தப்பட்ட மக்களும் தங்களைப் போல மனிதர்கள்தான் என்ற எண்ணம் ஏற்படவும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மற்றவர்கள் கொடுமையிலிருந்து விலகுவதற்கு ஓர் உணர்ச்சியும் ஆத்திரமும் உண்டாக்குவதற்காகவும் வேண்டியே துவக்கப்பட்டதாகும்.

அதுபோலவே அந்த சத்தியாக்கிரகம் தாழ்த்தப்பட்ட மக்களுக்குள் ஓர் உணர்ச்சியை உண்டாக்கித் தங்கள் வலிமையையும் கடமையையும் இன்னதென்பதையும் ஞாபகப்படுத்தி இந்த நாட்டின் அரசியல் சுதந்திரத்தை விட சமுதாய சமத்துவமே முக்கியமானதென்று வெளிப்படுத்திவிட்டது.

பொதுவாகவே தாழ்த்தப்பட்ட மக்கள் இயக்கம் ஏற்பட்ட பிறகு தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கையிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

உதாரணமாக செத்துப் போன மிருகங்களின் மாமிசங்களை தாழ்த்தப்பட்ட மக்கள் கொஞ்ச காலத்திற்கு முன்பு சாப்பிட்டுக் கொண்டு வந்தார்கள் 14 வருடங்களுக்கு முன்பு இந்த பழக்கத்தை நான் கண்டித்து பேசினபோது என்னை பலர் பரிகாசம் செய்தார்கள். தாழ்த்தப்பட்ட

மக்களிலேயே சிலர் எதிர்த்தார்கள். ஆனால், இந்த பழக்கம் இப்போது இங்கு அடியோடு ஒழிந்து போய்விட்டது. 10, 15 வருஷங்களுக்கு முன்பு ஜாதி இந்துக்கள் வீட்டில் பிச்சையெடுத்து சாப்பிடுவதே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பெரும்பாலும் பழக்கமாயிருந்தது. அந்த பழக்கமும் இப்போது போய்விட்டது. தாழ்ந்த உலோகங்களிலேயே நகைகள் போட்டதும்மாறிவிட்டது. பேய், பூதங்களை வணங்கி வந்த வழக்கங்களும் போய்விட்டன. என்றாலும் இன்னும் அதிகத் திருத்தங்களடைய வேண்டியவர்களாகவே இருக்கிறார்கள். அவைகள் என்னென்னவென்ற விஷயத்தைப் பற்றி இப்போது பேச வேண்டியதில்லை. அவைகள் எல்லாவற்றையும் அவர்கள் ஏற்கனவே தெரிந்துகொண்டார்கள்.

மகாராஷ்டிர குடியான மக்களுக்கு ஒரு வார்த்தை சொல்லுகிறேன். நீங்கள் தாழ்த்தப்பட்ட மக்களைவிட உயர்வாகயிருக்கிறதாகக் கருதி விடாதீர்கள். கல்வியிலும் பொருளாதாரத்திலும் மற்ற காரியங்களிலும் கீழ் நிலைமையில் தானிருக்கிறீர்கள். மராட்டியர்கள் இந்த மாகாணத்தில் 100க்கு 60 பேராக இருந்தாலும் அரசியல் பதவிகளில் உள்ள உயர் பதவிகளில் உங்களுக்கு பிரதிநிதித்துவம் இல்லையென்றுதான் சொல்லவேண்டும். அரசியலில் உங்களுக்கு இருப்பதெல்லாம் பியூன் வேலையும் தபேதார் வேலையும் சிகரடமரியேட்டில் பில்லை சிப்பாய் வேலையும்தான் மராட்டியர் அல்லாதவர்களே உயர்பதவியிலிருக்கிறார்கள். ஆகையால் நீங்களும் உங்கள் சமத்துவத்திற்கு தாழ்த்தப்பட்ட மக்களுடன் சேர்ந்து உழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தோழர்கள் சுரேந்திரநாத் டிப்னிஸ் ஜி.எம்.ஜாதவ், டி.ஜாதவ், போட்டினிஸ் ஆகியவர்கள் இதை ஆதரித்துப் பேசினார்கள். 20000 மக்களுக்கு மேலாகவே கூடியிருந்தார்கள்.

**- 'விடுதலை', 23.3.1940**

■




# 15

# அம்பேத்கர் பிரிவினைத் திட்டம்
## ஆதி குடிகள் உரிமை முழக்கம்

**அகமதாபாத்**

கூர்ஜரத்தில் (குஜராத்தில்) நடந்த முதலாவது தாழ்த்தப்பட்ட வகுப்பார் அரசியல் மாநாட்டில் தலைமை வகித்துப் பேசிய டாக்டர் அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்குத் தனிமையான காலனிகள்; இப்போது விவசாயமில்லாத நிலப் பகுதிகளிலும் காட்டு நிலங்களிலும் ஆங்காங்கு அமைத்துத் தர வேண்டுமென்றும், தாழ்த்தப்பட்ட வகுப்பார் அபிவிருத்திக்காக ஒவ்வொரு மாகாணத்திலும் வருடம் தோறும் ரூ.20 லட்சம் செலவு தொகையாக வரவு-செலவு திட்டத்தில் ஒதுக்கி வைக்க வேண்டுமென்றும் வற்புறுத்தினார். டாக்டர் அம்பேத்கரின் ஆக்குடிகள் புதிய அரசியல் உரிமைத்திட்டத்தின் முக்கிய நிபந்தனைகளாவன:

1. சட்டசபை முதலியவைகளுக்கு தாழ்த்தப்பட்ட வகுப்புப் பிரதிநிதிகள் தனித் தொகுதி தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

2. சட்டசபைகளில் உள்ள தாழ்த்தப்பட்ட வகுப்புப் பிரதிநிதிகளிலிருந்து 2 பேர் மந்திரி சபையில் சேர்த்துக்கொள்ள வேண்டும். ஒரு தடவை அவர்கள் இதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அந்த சட்டசபை ஆயுள் உள்ளவரை அவர்கள் அப்பதவியிலிருந்து நீக்கப்படக்கூடாது.

3. சர்க்கார் இலாகாக்களில், முக்கியமாக ரெவின்யூ, போலீஸ், நீதி நிருவாக இலாகாக்களில், 15 சதவிகித உயர்தர உத்தியோகங்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கு அளிக்கப்பட வேண்டும். இந்தச் சதவிகிதம் 10 வருட காலத்தில் சரி கட்டப்படவேண்டும். அந்த உத்தியோகத்திற்கு உரிய படிப்பு யோக்யதாம்சத்தைக் கருதி நியமனம் செய்யலாம்.



விடுதலை செவ்வாய்க்கிழமை 3

# அம்பேத்கார் பிரிவினைத் திட்டம்

## ஆதி குடிகள் உரிமை முழக்கம்

அலகாபாத், மார்ச். 16—

டாக்டர் பி. ஆர். அம்பேத்கார்

## அடுத்த சர்ச்சில்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

# நீதிக்கட்சியின் பெரும் செல்வாக்கு

## பெரியாரின் ஒப்பற்ற சக்தி

## நேஷனல் டெமாகிராடிக்கட்சிக்கு ஜீவாதாரம்

### தோழர் எம். என். ராய் பரவசம்

4. ஒவ்வொரு மாகாணத்திலும் பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் தாழ்த்தப்பட்ட வகுப்பார் பிரதிநிதிகள் நியமிக்கப்பட வேண்டும்.

5. ஒவ்வொரு மாகாணத்திலும் தாழ்த்தப்பட்ட வகுப்பார் கல்வியபிவிருத்திக்காக வருட வரவு - செலவுத் திட்டத்தில் ஒரு குறிப்பிட்ட தொகை அவ்வப்போது ஒதுக்கி வைக்கப்பட வேண்டும்.

**மாநாட்டுத் தீர்மானம்:**

முதலாவது, கூர்ஜா மாகாண தாழ்த்தப்பட்ட வகுப்பார் மாநாடு இன்று முடிவுற்றது. பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேறின. முக்கியமாக, தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கு தனித்தொகுதித் தேர்தல் முறை கையாளப்பட வேண்டும் என்றும், பொதுத் தொகுதித் தேர்தல் முறை கூடாதென்றும் வற்புறுத்தப்பட்டது.

- ‘விடுதலை’, 18.3.1941

■

ரிஜிஸ்டர் நெ. M. 3734.
4-பக்கங்கள் விலை அரை அணா.
விடுதலை தபாலில் அனுப்ப மாதச் சந்தா ரூ. 1-0-0

விடுதலை

VIDUTHALAI தமிழர் தினசரி

மலர்-7.] ஈரோடு, (30—7—42) சித்திரபாநு-ஞு ஆடி-மீ 15-உ வியாழக்கிழமை [இதழ்-220.

# 16

## காங்கிரஸ் பூச்சாண்டி
## "எதிர்த்து அடக்க வேண்டும்"
## டாக்டர் அம்பேத்கர் அறிக்கை

காங்கிரஸ் பூச்சாண்டியைக் குறித்தும், காந்தியார் மிரட்டலைக் குறித்தும் கனம் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் அவர்கள் பம்பாயிலிருந்து 27ஆம் தேதி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது:

"இன்றைய நிலைமை இந்திய சரித்திரத்திலேயே காணமுடியாத அவ்வளவு நெருக்கடியான சமயமாகும். இந்தச் சமயத்தில் தோழர் காந்தியார் ஏன் இத்தகைய திட்டத்தில் இறங்கினார் என்பது தெரியவில்லை. இந்தியாவின் அரசியல் லட்சியம் படிப்படியாக அபிவிருத்தியடைந்திருக்கிறதை யாராலும் மறுக்க முடியாது.

பிரிட்டிஷார் கையிலிருக்கும் அதிகாரம் படிப்படியாக இந்தியர் கைக்கு மாறிவருகிறது. கடைசி கட்டமாகிய முழு அரசியலையும் மாற்றிக் கொடுப்பதிலும் பிரிட்டன் தயங்கவில்லையென்பதை சர். கிரிப்சு திட்டம் விளக்கி விட்டது.

அரசியல் நிர்ணய சபையையும் சுதந்திரத்தையும் அளிக்க முன் வந்தும் கிரிப்சின் திட்டம் ஏன் காங்கிரஸ்காரர்களால் நிராகரிக்கப்பட்டதென்று தெரியவில்லை. தற்காப்பு இலாகாவை மாற்றிக்கொடுக்க இணங்காததே இத்தகைய பொது சட்டமறுப்புக்குக் காரணம் என்று சொல்லப்படுமேயானால் அது அதன் குறுகிய நோக்கத்தையே காட்டும்.

முதலாவது, காங்கிரஸ்காரர்கள் கோரியதெல்லாம் பிரிட்டிஷாரின் யுத்த நோக்கம் என்ன என்பதை விளக்க வேண்டுமென்பது தான்.



**காங்கரஸ் பூச்சாண்டி**

**"எதிர்ந்து அடக்க வேண்டும்"**

**டாக்டர் அம்பேத்கார் அறிக்கை**

காங்கரஸ் பூச்சாண்டியைக் குறித்தும், காந்தியார் மிரட்டலைக் குறித்தும் கனம் டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் அவர்கள் பம்பாயிலிருந்து 27உ வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது:—

"இன்றைய நிலைமை இந்திய சரித்திரத்திலேயே காணமுடியாத அவ்வளவு நெருக்கடியான சமயமாகும். இந்தச் சமயத்தில் தோழர் காந்தியார் ஏன் இத்தகைய திட்டத்தில் இறங்கினார் என்பது தெரியவில்லை. இந்தியாவின் அரசியல் லட்சியம் படிப்படியாக அபிவிருத்தியடைந்திருக்கிறதை யாராலும் மறுக்க முடியாது."

பிரிட்டிஷார் கையிலிருக்கும் அதிகாரம் படிப்படியாக இந்தியர்கைக்கு மாறிவருகிறது. கடைசி கட்டமாகிய முழு அரசியலையும் மாற்றிக் கொடுப்பதிலும்பிரிட்டன் தயங்கவில்லையென்பதை சர். கிரிப்சு திட்டம் விளக்கிவிட்டது.

அரசியல் நிர்ணய சபையையும் சுதந்திரத்தையும் அளிக்க முன் வந்தும் கிரிப்சின் திட்டம் ஏன் காங்கரஸ் காரர்களால் நிராகரிக்கப்பட்டதென்று தெரியவில்லை. தற்காப்பு இலாகா

குறித்து சண்டைப் போடுவது சிறுபிள்ளைத் தனமேயாகும். மாற்றப்பட்ட இலாகாக்களின் கோரிக்கைகள் நியாயமானதாகவும் அவசியமானதாகவும் இருந்தால் மாற்றப்படாத இலாகா அதில் பிடிவாதம் காட்டுவதில்லை. இது காங்கரஸ் பதவி வகித்த காலத்தில் நடந்திருக்கிறது. இதுவிஷயத்தில் காங்கரஸ் இவ்வளவு சீக்கிரத்தில் மறந்து போனதுதான் ஆச்சரியமாக இருக்கிறது.

இப்பொழுதுள்ள ஊழலான நிலையிலிருந்து தன்னையும் காங்கரசையும் காப்பாற்றிக் கொள்வதற்காகவே, காந்தியார் இப்போராட்டத்தை ஆரம்பித்திருக்கிறார். இது காங்கரஸ் கட்சிக்கு நன்மை பயக்கக்கூடியதாக இருக்கலாம், ஆனால் நாட்டுக்கு பெரிய தீமையை விளைவிக்கக்கூடியதாகும்.

நேரடியான நடவடிக்கையில் இறங்குவது அல்லது எல்லா கட்சிகளையும் நலன்களையும் ஒன்று சேர்த்துக்கொண்டு ஒரு கோரிக்கை சமர்ப்பிப்பது என்பதுதான் காங்கரசுக்கு உள்ள வழிகள். தோழர் காந்தியாரும் முதல்வழியைத்தான் பின்பற்றுகிறார். காரணம் பிரிட்டிஷார் நாஜிகளைப்போல் பலாத்காரத்திலிறங்கி அடக்கமாட்டார்கள் என்பதுதான்.

தோழர் காந்தியார் ஏன் இரண்டாவது வழியாகிய எல்லாக் கட்சிகளையும் ஒன்று சேர்ப்பதில் இறங்கக்கூடாது? தலைவர்களை அழைத்து அவர்களுக்குள்ளிருக்கும் தகராறுகளைத் தீர்க்க ஏன் பாடுபடக்கூடாது? இதுதான் சரியான வழியாகும். இப்படிச் செய்தால் பலதிறப்பட்ட சமூகங்களிடையே நிரந்தர சமாதானம் ஏற்படமுடியும்.

இதை எவ்வளவு சீக்கிரத்தில் காந்தியார் உணர்கிறாரோ அவ்வளவு சீக்கிரத்தில் நாட்டுக்கு நன்மை பிறக்கும். அவருடைய அரசியல் அபிலாஷை ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம் என்பதாக சொல்லப்பட்டு வந்தது. ஆனால் 20 வருஷங்களுக்குப் பிறகும் அவரை முஸ்லிம்களோ தாழ்த்தப்பட்டோரோ இன்னும் நம்பவில்லை. காந்தியாரின் வாழ்விலே இது துக்ககரமான சம்பவமாகும். இப்பொழுதுங்கூட மைனாரிட்டிகளின் தலைவர்களை அழைத்துப்பேசலாம். அவர்கள் முடியாத கோரிக்கைகளைக் கேட்கிறார்கள் என்று சொல்லுவதில் பயனில்லை. அவர் அத்தகைய கோரிக்கைகளை சர்வ தேசமத்தியஸ்தத்துக்குவிட்டுவிடலாம்

ஆகவே, பொது மக்கள், காந்தியாரின் இக்கிளர்ச்சியை சிறிதும் ஆதரிக்கக் கூடாது. காந்தியாரின் கிளர்ச்சியில் சேரக்கூடாது என்று சொல்லிவிடுவதிலே நமது கடமை தீர்ந்துவிட்டதாக எண்ணக் கூடாது. காந்தியார் இயக்கத்தை தடுப்பதற்கும் பாடுபடவேண்டும். 1930ல் அவர் ஆரம்பித்த சட்டமறுப்புப் போருக்கும் இதற்கும் வித்தியாசம் உண்டு. அன்றைய நிலைமை இன்றில்லை. எதிரிகள் நமது வாசல்களில் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த வேளையில் நாம் வாளா இருக்க முடியாது. எதிரியை நம் நாட்டுக்கு எஜமானனாக விடக்கூடாது.

காங்கரஸ் இந்நாட்டின் சார்பாக பேசுவதாகக் கூறுவதை இனியும் மற்றக் கட்சிகள் அனுமதித்துக் கொண்டிருக்கக்கூடாது. அதை மறுத்து உலகறியச் செய்யவேண்டும். நமது நோக்கம் ஜனநாயகம் வெற்றியுற வழிவே

ஆகாயத்தில் ஆதிக்கம்பெற்று வெற்றி அடையுங்கள். ★ கவர்னர்

யுத்த காலத்தில் அது எவ்வாறு அனுஷ்டிக்கப்படும் என்று கேட்கப் படவில்லை.

இரண்டாவது, இராணுவ நுட்பங்களை அறிந்து தற்காப்பு இலாகாவை, திறம்பட நடத்தக்கூடிய ஓர் இந்திய அரசியல்வாதியாவது எனக்குத் தெரிந்தமட்டில் கிடையாது. ஏனெனில், இந்தியர்கள் அவ்விஷயத்தைப் புறக்கணித்தே வந்திருக்கிறார்கள். இந்த நிலையில் அந்த இலாகாவைத் தங்களிடம் ஒப்புவிக்கும்படி கேட்பது முட்டாள் தனமாகும்.

மூன்றாவது, கிரிப்ஸ் திட்டப்படி எல்லா இலாகாவும் மாற்றப்பட்டப் பிறகு மாற்றப்படாத இலாகாவைக் குறித்து சண்டை போடுவது சிறு பிள்ளைத் தனமேயாகும். மாற்றப்பட்ட இலாகாக்களின் கோரிக்கைகள் நியாயமானதாகவும் அவசியமானதாகவும் இருந்தால் மாற்றப்படாத இலாகா அதில் பிடிவாதம் காட்டுவதில்லை. இது காங்கிரஸ் பதவி வகித்த காலத்தில் நடந்திருக்கிறது. இது விஷயத்தில் காங்கிரஸ் இவ்வளவு சீக்கிரத்தில் மறந்து போனதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. இப்பொழுதுள்ள ஊழலான நிலையிலிருந்து தன்னையும் காங்கிரசையும் காப்பாற்றிக் கொள்வதற்காகவே, காந்தியார் இப்போராட்டத்தை ஆரம்பித்திருக்கிறார். இது காங்கிரஸ் கட்சிக்கு நன்மை பயக்கக்கூடியதாக இருக்கலாம். ஆனால், நாட்டுக்கு பெரிய



தீமையை விளைவிக்கக்கூடியதாகும். நேரடியான நடவடிக்கையில் இறங்குவது அல்லது எல்லா கட்சிகளையும் நலன்களையும் ஒன்று சேர்த்துக்கொண்டு ஒரு கோரிக்கை சமர்ப்பிப்பது என்பதுதான் காங்கிரசுக்கு உள்ள வழிகள். தோழர் காந்தியாரும் முதல்வழியைத் தான் பின்பற்றுகிறார். காரணம், பிரிட்டிஷார் நாஜிகளைப்போல் பலாத்காரத்திலிறங்கி அடக்கமாட்டார்கள் என்பதுதான்.

தோழர் காந்தியார் ஏன் இரண்டாவது வழியாகிய எல்லாக் கட்சிகளையும் ஒன்று சேர்ப்பதில் இறங்கக் கூடாது? தலைவர்களை அழைத்து அவர்களுக்குள்ளிருக்கும் தகராறுகளைத் தீர்க்க ஏன் பாடுபடக் கூடாது? இதுதான் சரியான வழியாகும். இப்படிச் செய்தால் பல திறப்பட்ட சமூகங்களிடையே நிரந்தர சமாதானம் ஏற்பட முடியும்.

இதை எவ்வளவு சீக்கிரத்தில் காந்தியார் உணர்கிறாரோ அவ்வளவு சீக்கிரத்தில் நாட்டுக்கு நன்மை பிறக்கும். அவருடைய அரசியல் அபிலாஷை ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம் என்பதாக சொல்லப்பட்டு வந்தது. ஆனால் 20 வருஷங்களுக்குப் பிறகும் அவரை முஸ்லிம்களோ தாழ்த்தப்பட்டோரோ இன்னும் நம்பவில்லை. காந்தியாரின் வாழ்விலே இது துக்ககரமான சம்பவமாகும். இப்பொழுதுங்கூட மைனாரிட்டிகளின் தலைவர்களை அழைத்துப் பேசலாம். அவர்கள் முடியாத கோரிக்கைகளைக் கேட்கிறார்கள் என்று சொல்லுவதில் பயனில்லை. அவர் அத்தகைய கோரிக்கைகளை சர்வதேச மத்தியஸ்த்துக்கு விட்டுவிடலாம்.

ஆகவே, பொது மக்கள், காந்தியாரின் இக்கிளர்ச்சியை சிறிதும் ஆதரிக்கக் கூடாது. காந்தியாரின் கிளர்ச்சியில் சேரக்கூடாது என்று சொல்வி விடுவதிலே நமது கடமை தீர்ந்துவிட்டதாக எண்ணக் கூடாது. காந்தியார் இயக்கத்தை தடுப்பதற்கும் பாடுபட வேண்டும். 1930இல் அவர் ஆரம்பித்த சட்டமறுப்புப் போருக்கும் - இதற்கும் வித்தியாசம் உண்டு. அன்றைய நிலைமை இன்றில்லை. எதிரிகள் நமது வாசல்களில் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த வேளையில் நாம் இருக்க முடியாது. எதிரியை நம் நாட்டுக்கு எஜமானனாக விடக்கூடாது.

காங்கிரஸ் இந்நாட்டின் சார்பாக பேசுவதாகக் கூறுவதை இனியும் மற்றக் கட்சிகள் அனுமதித்துக் கொண்டிருக்கக்கூடாது. அதை மறுத்து உலகறியச் செய்யவேண்டும். நமது நோக்கம் ஜனநாயகம்

வெற்றியடைவதிலே இருக்கவேண்டும். ஜனநாயகம் வெற்றியடைந்தால், இந்நாடு சுதந்திரம் அடைவதை எதுவும் தடுக்காது. நமது ஒற்றுமைதான் அவசியம். ஆகவே, காந்தியார் இயக்கம் தேவையேயில்லை. ஜனநாயகக் கொள்கைக்காகவல்ல; நமது நாட்டின் எதிர்கால நன்மையை உத்தேசித்தே ஜனநாயகம் வெற்றியடையப் போராட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். காந்தியார் வயதானவர். அவசரத்தில் ஏதாவது செய்ய விரும்புகிறார். ஆனால், இந்தியரோ நிதானத்தோடு இருக்க வேண்டும், அவசரப்பட்டால் பின்னால் வருந்த வேண்டி நேரிடும்.”

**- ‘விடுதலை’, 30.7.1942**

■

ரிஜிஸ்டர் நெ. M. 3734. 4-பக்கங்கள் விலை அரை அணா.
விடுதலை தபாலில் அனுப்ப மாதச் சந்தா ரு. 1-0-0

விடுதலை

VIDUTHALAI தமிழர் தினசரி

மலர்-7.] ஈரோடு, (30—7—42) சித்திரபாநு-ஸு ஆடி-மீ 15-உ வியாழக்கிழமை [இதழ்-220.

# 17

## டாக்டர் அம்பேத்கர் எச்சரிக்கை

இவ்வுபகண்டத்தில் ஒரே வகுப்பார் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடைந்தும் தனி ஆதிக்கம் செலுத்தி வருவதையும் யாவரும் அறிவர். இதற்கு என்ன காரணம் என்பதைக் குறித்து யாரும் கவலை எடுத்துக்கொள்வதில்லை. கவலை எடுத்துக்கொள்ளாததற்கு முக்கிய காரணமாக இருந்து வருவது மூடநம்பிக்கையும் அறியாமையுமாகும்.

இந்த இரண்டு ஆயுதங்களையும் அந்த ஒரு கூட்டம் வச்சிராயுதமென நினைத்துக்கொண்டு தன்னரசு செலுத்தி வருகிறது. வச்சிராயுதத்தால்தான் வச்சிராயுதத்தை வெல்ல முடியும். வைரத்தை வைரந்தான் அறுக்கமுடியும். அதுபோல இன்று அந்த ஒரு கூட்டம் எந்த ஆயுதத்தால் மற்றவர்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கிறதோ அந்த ஆயுதங்களை மற்றவர்கள் கைக்கொள்ள வேண்டும். அவ்வாறு, என்று இவர்கள் கையில் அந்த ஆயுதங்கள் ஏறுகின்றனவோ, அன்றுதான் அந்த சிறுக் கூட்டத்தை வீழ்த்த முடியும்.

இன்று அந்தச் சிறு கூட்டம் இவ்வளவு காரியங்களையும் செய்வதற்கும் - அவ்வச்சிராயுதங்கள் அவர்கள் கையிலிருப்பதற்கும் முக்கிய ஏதுவாக இருப்பது அதிகாரத்தை அரசியலை - அவர்கள் கைப்பற்றியிருப்பதேயாகும். ஆகவேதான் பெரியார், பார்ப்பனரல்லாதார் தனித்து இருந்து தனி உரிமையை பெற்று தக்க பாதுகாப்புகளுடன் இருந்து போராட வேண்டும் என்று கூறிவருகிறார். ஆரியர் என்ற ஒரு பிரிவு இந்நாட்டிலே இருந்துவரும் அளவும், பார்ப்பனரல்லாதார் என்ற ஒரு பிரிவு தனியாக இருந்துதான் தீரவேண்டும் என்றும் பார்ப்பனரல்லாதார் முன்னேற தனித்து இருக்க உரிமை பெற்று தனி





2 விடுதலை பெர்ரிமான்டு-ஆவணி-மீ 11

# விடுதலை

1942-ஆம் ஆகஸ்டு-மீ 26-உ

## டாக்டர் அம்பேத்கார் எச்சரிக்கை

இவ்வுபகண்டத்தில் ஒரே வகுப்பார் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடைந்தும் தனி ஆதிக்கம் செலுத்தி வருவதையும் யாவரும் அறிவர். இதற்கு என்ன காரணம் என்பதைக் குறித்து யாரும் கவலை எடுத்துக்கொள்வதில்லை. கவலை எடுத்துக்கொள்ளாததற்கு முக்கிய காரணமாக இருந்து வருவது மூடநம்பிக்கையும் அறியாமையுமாகும். இந்த இரண்டு ஆயுதங்களையும் அந்த ஒரு கூட்டம் வச்சிராயுதமென நினைத்துக்கொண்டு தன்னரசு செலுத்திவருகிறது. வச்சிராயுதத்தால்தான் வச்சிராயுதத்தை வெல்ல முடியும். வைரத்தை வைரந்தான் அறுக்கமுடியும். அதுபோல இன்று அந்த ஒரு கூட்டம் எந்த ஆயுதத்தால் மற்றவர்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கிறதோ அந்த ஆயுதங்களை மற்றவர்கள்கைக்கொள்ள வேண்டும். அவ்வாறு என்று இவர்கள் கையில் அந்த ஆயுதங்கள் ஏறுகின்றனவோ, அன்றுதான் அந்த சிறு கூட்டத்தை வீழ்த்த முடியும்.

இன்று அந்த சிறு கூட்டம் இவ்வளவு காரியங்களையும் செய்வதற்கும் அவ்வச்சிராயுதங்கள் அவர்கள் கையிலிருப்பதற்கும் முக்கிய ஏதுவாக இருப்பது அதிகாரத்தை-அரசியல்லை அவர்கள் கைப்பற்றியிருப்பதே யாகும். ஆகவே தான் பெரியார், பார்ப்பனரல்லாதார் தனித்து இருந்து தனி உரிமையை பெற்று தக்க பாதுகாப்புகளுடன் இருந்து போராட வேண்டும் என்று கூறிவருகிறார். ஆரியர் என்ற ஒரு பிரிவு இந்நாட்டிலே இருந்துவரும் அளவும், பார்ப்பனரல்லாதார் என்ற ஒரு பிரிவு தனியாக இருந்துதான் தீரவேண்டும் என்றும் பார்ப்பனரல்லாதார் முன்னேறதனித்து இருக்க உரிமைப் பெற்று தனி பாதுகாப்புகளுடன் விளங்கவேண்டுமெனவும் பறைசாற்றி வருகிறார். தனித்து தனிவகுப்பாக இவர்கள் விளங்காதவரை இவர்கள் முன்னேற முடியாதென்பதை இன்றேகல்லின்மேல்எழுதி வைத்துக் கொள்ளலாம்.

இந்த உண்மையைத்தான் டாக்டர் அம்பேத்காரும் தம்முடைய வகுப்பாராகிய தாழ்த்தப்பட்டோருக்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்.

டில்லியில் கடந்த 25உ அவருக்கு தாழ்த்தப்பட்ட வகுப்பினர் நல அபிவிருத்தி சங்கத்தார் அளித்த உபசாரப் பத்திரத்திற்கு பதிலளிக்கையில் அவர் கூறும் புத்திமதிகள் பொன்னேபோல் போற்றக்கூடியவைகளாகும்:

"தேசத்தின் அரசியல்வாழ்க்கையில் நமது நிலைமையை நிடைப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. அம்மாதிரி நாம் செய்யாவிட்டால் மீண்டும்நாம் பழையநிலைக்குத் தள்ளப்படுவோம்"

என்று டாக்டர் அவர்கள் எச்சரித்திருப்பதை ஒவ்வொரு தாழ்த்தப்பட்ட மகனும்மகளும் கவனத்தில் வைக்கவேண்டும்.

"மீண்டும் பழையநிலைக்குத் தள்ளப்படுவோம்" என்று அவர் எடுத்துக் காட்டியிருப்பதிலிருந்தே, பழைய நிலையை விட இன்றைய அவர்கள் நிலை அபிவிருத்தி யடைந்திருக்கிறது என்பது விளங்கும். இதற்கு அவர்கள் கல்வித் துறையிலும், அரசியல் துறையிலும் சிறிது முன்னேற்றமடைந்திருப்பதேயாகும். இதுதான் நாம் மேலே எடுத்துக் காட்டிய இரு வச்சிராயுதங்களுமாகும். இந்த ஆயுதங்களை பூரணமாக ஒரு சமூகம் உபயோகப்படுத்தி எதிரியை முறியடிக்க வேண்டுமானால் அச்சமூகம் தனித்து இருத்தல் அவசியமாகும். இதையும் டாக்டர் அம்பேத்கார் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

"தாழ்த்தப்பட்ட வகுப்பினர் இந்து சமூகத்தின் ஒரு பிரிவல்லவென்றும், அது தனி வகுப்பென்றும் லண்டனில் நடந்த சர்வகட்சி மகாநாட்டில் விளக்கியிருக்கிறேன்."

என்று அவர் கூறுவதிலிருந்தே தாழ்த்தப்பட்டோர் தனி வகுப்பாக விளங்கினால் தான் அவர்கள் முன்னேற முடியும் என்பது விளங்கும்.

அடுத்தபடியாக, 1940-ம் வருட ஆகஸ்டு மாதம் பிரிட்டிஷ் சர்க்கார் கொண்டிருந்த மனோபாவத்தையும் அதற்குப் பிறகு அவர்கள் கொண்டுவந்திருக்கும் மனோபாவத்தையும் அவர் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்.

1940 ஆகஸ்டு மாதத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் வெளியிட்ட அறிக்கையில் சொல்லியிருப்பதையும் அதற்குப்பிறகு அவர்கள் கைக்கொண்ட காரியங்களையும் ஒப்பிட்டுப்பார்த்தால், தங்களை எதிர்க்கிறவர்களை சமாதானப் படுத்துவதில் தான் அதிக அக்கறைகொண்டிருக்கிறார்கள் என்பது விளங்கும் என்று அவர் கூறுகிறார். இதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. இது அவர்களுடைய இயற்கை சுபாவம்.

உதைக்கிற காலுக்கு முத்தமிடுவதுதான் அவர்களது பிறவிக்குணமாக இருந்து வருகிறது. சென்னை மாகாணத்தில் ஜஸ்டிஸ் கட்சியார்-பார்ப்பனரல்லாதார் விஷயத்திலும் பார்ப்பனர்கள்—காங்கரஸ்காரர்கள் விஷயத்திலும் பிரிட்டிஷ் சர்க்கார் நடந்துகொண்ட விதத்தைப் பார்ப்பவர்களுக்கு இது ஆச்சரியத்தை தராது என்றே நம்புகின்றோம்.

'கிரிப்சு திட்டத்தில், காங்கரசுக்கும் முஸ்லிம் லீக்குக்கும் சமரசமேற்படுவதைப் பற்றியே கவலை காட்டப்பட்டிருக்கிறது' என்று டாக்டர் அவர்கள் கூறுவது பிரிட்டிஷ் சர்க்காரின் மனப்பான்மை உதைக்கிறகாலுக்கு முத்தமிடுவதுதான் என்பதை உறுதிப்படுத்தக்கூடியதாயிருக்கிறது என்பது விளங்கும்.

எனவே இவ்வுபகண்டத்தில் ஆரிய ஆதிக்கத்தையும் இந்து ஆதிக்கத்தையும் ஜாதி இந்துக்களின் கொடுமையையும் எதிர்த்து நிற்கும் திராவிடர், முஸ்லிம், தாழ்த்தப்பட்டோர் ஆகியவர்கள் யாவரும் உண்மையிலே விடுதலையடைய வேண்டும்,முன்னேறவேண்டும், தன்மானத்தோடு வாழவேண்டுமானால் தனித்து வாழவேண்டும்; தனி வகுப்பாக இருந்து தங்கள் தங்கள் முன்னேற்றத்திற்கான திட்டங்களை வகுத்துக் கொள்ளவேண்டும். அதற்கு இப்பொழுதே அரசியலில் தாங்களும் தனிஇனங்கள் என்பதை இவ்வுபகண்டமட்டிலுமல்ல அமெரிக்கா, சீனா, பிரிட்டன் முதலிய நாடுகளுக்கும் எட்டும்படிசெய்யவேண்டும். ஏனெனில் இன்று அந்நாடுகள் யாவும் இப்பிரச்சினையில் அதிக கவலை செலுத்தி வருவதால், இவ்வுபகண்டத்தில், முஸ்லிம் லீக்கும் காங்கரசுமட்டுமல்ல, திராவிடர்களும் தாழ்த்தப்பட்டோரும் ஆகிய கோடிக்கணக்கான மக்கள் தனித்து விளங்கவேண்டுமெனவிரும்புகின்றனர்; அதற்காகப்போராடுகின்றனர் என்பதை அவர்களும் அறியும்படி செய்யவேண்டும். நல்ல சமயத்தில் டாக்டர் அம்பேத்கார் தமது சமூகத்தாரை எச்சரிக்க முன்வந்ததற்காக அவரை மனப்பூர்வமாக பாராட்டுகிறோம்.

## பசிபிக்கில் கடற்படை பலம்

பசிபிக்கில் இன்று இருநாட்டினரது கடற்படையின் பலமும் சமமாக இருந்துவருகிறதாக ஆஸ்திரேலியா கடற்படை மந்திரி தோழர் மக்கின், மாஜிகடற்படை ஆட்களின் சங்கத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

## யுத்தப்படி

### கோச்சி சர்க்கார் தாராளம்

கொச்சி சர்க்கார் 25 ரூபாயும் அதற்குக்கீழும் சம்பளம் வாங்குபவர்களுக்கு யுத்தப்படியாக 2 ரூபாய் கொடுத்து வருவதையும், ரூ 3 ஆக ஆகஸ்டு முதல் உயர்த்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## இந்திய ராணுவச் சேனைக்கு இந்தியக் கடற்படையின் உதவி

இந்தியாவையும், அதன் க
பல் பாதைகளையும் பாதுகாப்
தோடு இந்தியக் கடற்படை
மற்ற கடற்படைகளுக்கும் த
காப்பு சர்வீஸ்களுக்கும் எ
தனையோ வழிகளில் உத
புரிகிறது.

உதாரணமாக இதன்மூல
சேனை ஆபீசர்களுக்கு பாலை
வனத்தில் திசை கண்டுபிடி
பது முதலியன சொல்லி
கொடுக்கப்படுகிறது. திசையற
கருவிகளை உபயோகிப்பது
நட்சத்திரக் கூட்டங்களை
அடையாளம் கண்டுகொள்வ
முதலியனவும் இவர்களுக்கு
கற்றுக்கொடுக்கப்படுகிறது. பட
உதவியின்றி பாலைவனத்தில்
வழி கண்டுபிடிக்கத் தெரிந்தி
ருக்க வேண்டியது யந்திரப்
படைகளுக்கு அவசியமாகும்

இந்தியக் டற்படையினரு
க்கு தன் சமிக்ஞை பள்ளிக்
கூடத்தில் பயிற்சி யளிக்கிறது.

இன்னும் இந்தியாவுக்கு
வந்து சேரும் நேசதேசக்கப்பல்
களில் உள்ளவர்களின் வைத்
திய வசதிகளையும் இந்தியக்
கடற்படை கவனித்துக் கொள்
கிறது. பம்பாயில், இந்தியக்
கடற்படையின் பிரதம வைத்திய
ஆபீசர் இது சம்பந்தமான விஷ
யங்களைக் கவனித்துக் கொள்
கிறார்.

இன்னும் மலேரியா தடுப்பு வேலையும் செய்யப்படுகிறது. துறைமுகம் வந்து சேரும் கப்பல்களின்மீது மருந்து தெளிக்கப்பட்டு, ஐந்தே நிமிஷங்களில் எல்லாக் கொசுக்களும் கொல்லப்படுகின்றன.

## காங்கரஸ் நாசவேலை

### சர்க்கார் நடவடிக்கை

சென்னை மாகாணத்தின் காங்கரசின் நாச வேலையால் ஏற்பட்ட நிலைமை மாறி இப்பொழுது அபிவிருத்தியடைந்து வருகிறதாக சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

மதுரையில் இரவு நடமாட்டத் தடையுத்தரவு தளர்த்தப்படுகிறது.

ஃ ஃ ஃ

கான்பூரில் துப்பாக்கிப் பிரயோகம்செய்யநேர்ந்தது. பலருக்குக் கசையடியும் கூட்டு அபராதமும் விதிக்கப்பட்டது.

மற்றபடி வட இந்தியாவில் சிற்சில இடங்களில் காங்கரசின் நாச வேலை தோன்றி வருகின்றன. அவைகளை அடக்க அந்தந்த மாகாண சர்க்கார்கள் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

சென்னையில் காங்கரசை ஆதரித்து எத்தகைய பொதுக் கூட்டங்களோ,ஊர்வலங்களோ நடைபெறக் கூடாதென போலீஸ் கமிஷனர் தடையுத்தரவு பிறப்பித்திருக்கிறார்.



பாதுகாப்புகளுடன் விளங்க வேண்டுமெனவும் பறைசாற்றி வருகிறார். தனித்து தனிவகுப்பாக இவர்கள் விளங்காதவரை இவர்கள் முன்னேற முடியாதென்பதை இன்றே கல்லின் மேல் எழுதி வைத்துக் கொள்ளலாம், இந்த உண்மையைத்தான் டாக்டர் அம்பேத்கரும் தம்முடைய வகுப்பாராகிய தாழ்த்தப்பட்டோருக்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்.

டில்லியில் கடந்த 25ஆம் தேதி அவருக்கு தாழ்த்தப்பட்ட வகுப்பினர் நல அபிவிருத்தி சங்கத்தார் அளித்த உபசாரப் பத்திரத்திற்கு பதிலளிக்கையில் அவர் கூறும் புத்திமதிகள் பொன்னேபோல் போற்றக்கூடியவைகளாகும்.

“தேசத்தின் அரசியல் வாழ்க்கையில் நமது நிலைமையை திடப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. அம்மாதிரி நாம் செய்யாவிட்டால் மீண்டும் நாம் பழைய நிலைக்குத் தள்ளப்படுவோம்” என்று டாக்டர் அவர்கள் எச்சரித்திருப்பதை ஒவ்வொரு தாழ்த்தப்பட்ட மகனும் மகளும் கவனத்தில் வைக்கவேண்டும்.

“மீண்டும் பழைய நிலைக்குத் தள்ளப்படுவோம்” என்று அவர் எடுத்துக் காட்டியிருப்பதிலிருந்தே, பழைய நிலையை விட இன்றைய அவர்கள் நிலை அபிவிருத்தியடைந்திருக்கிறது என்பது விளங்கும். இதற்கு அவர்கள் கல்வித் துறையிலும், அரசியல் துறையிலும் சிறிது முன்னேற்றமடைந்திருப்பதேயாகும். இதுதான் நாம் மேலே எடுத்துக் காட்டிய இரு வச்சிராயுதங்களுமாகும். இந்த ஆயுதங்களை பூரணமாக ஒரு சமூகம் உபயோகப்படுத்தி எதிரியை முறியடிக்க வேண்டுமானால் அச்சமூகம் தனித்து இருத்தல் அவசியமாகும். இதையும் டாக்டர் அம்பேத்கர் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

“தாழ்த்தப்பட்ட வகுப்பினர் இந்து சமூகத்தின் ஒரு பிரிவல்லவென்றும், அது தனி வகுப்பென்றும் லண்டனில் நடந்த சர்வகட்சி மாநாட்டில் விளக்கியிருக்கிறேன்” என்றும் அவர் கூறுவதிலிருந்தே தாழ்த்தப்பட்டோர் தனி வகுப்பாக விளங்கினால் தான் அவர்கள் முன்னேற முடியும் என்பது விளங்கும். அடுத்தபடியாக, 1940ஆம் வருட ஆகஸ்ட் மாதம் பிரிட்டிஷ் சர்க்கார் கொண்டிருந்த மனோபாவத்தையும் அதற்குப் பிறகு அவர்கள் கொண்டு வந்திருக்கும் மனோபாவத்தையும் அவர் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்.

1940 ஆகஸ்ட் மாதத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் வெளியிட்ட அறிக்கையில் சொல்லியிருப்பதையும் அதற்குப்பிறகு அவர்கள் கைக்கொண்ட காரியங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால், தங்களை

எதிர்க்கிறவர்களை சமாதானப்படுத்துவதில்தான் அதிக அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பது விளங்கும் என்று அவர் கூறுகிறார். இதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. இது அவர்களுடைய இயற்கை சுபாவம்.

உதைக்கிற காலுக்கு முத்தமிடுவதுதான் அவர்களது பிறவிக் குணமாக இருந்து வருகிறது. சென்னை மாகாணத்தில் ஜஸ்டிஸ் கட்சியார் பார்ப்பனரல்லாதார் விஷயத்திலும் பார்ப்பனர்கள் - காங்கிரஸ்காரர்கள் விஷயத்திலும் பிரிட்டிஷ் சர்க்கார் நடந்து கொண்ட விதத்தைப் பார்ப்பவர்களுக்கு இது ஆச்சரியத்தைத் தராது என்றே நம்புகின்றோம்.

“கிரிப்சு திட்டத்தில், காங்கிரசுக்கும் முஸ்லிம் லீக்குக்கும் சமரசமேற்படுவதைப் பற்றியே கவலை காட்டப்பட்டிருக்கிறது” என்று டாக்டர் அவர்கள் கூறுவது பிரிட்டிஷ் சர்க்காரின் மனப்பான்மை உதைக்கிற காலுக்கு முத்தமிடுவதுதான் என்பதை உறுதிப்படுத்தக் கூடியதாகயிருக்கிறது என்பது விளங்கும்.

எனவே, இவ்வுபகண்டத்தில் ஆரிய ஆதிக்கத்தையும் இந்து ஆதிக்கத்தையும் ஜாதி இந்துக்களின் கொடுமையையும் எதிர்த்து நிற்கும் திராவிடர், முஸ்லிம், தாழ்த்தப்பட்டோர் ஆகியவர்கள் யாவரும் உண்மையிலே விடுதலையடைய வேண்டும், முன்னேற வேண்டும், தன்மானத்தோடு வாழவேண்டுமானால் தனித்து வாழவேண்டும்; தனி வகுப்பாக இருந்து தங்கள் தங்கள் முன்னேற்றத்திற்கான திட்டங்களை வகுத்துக் கொள்ள வேண்டும். அதற்கு இப்பொழுதே அரசியலில் தாங்களும் தனி இனங்கள் என்பதை இவ்வுபகண்டமட்டிலுமல்ல; அமெரிக்கா, சீனா, பிரிட்டன் முதலிய நாடுகளுக்கும் எட்டும்படி செய்ய வேண்டும். ஏனெனில், இன்று அந்நாடுகள் யாவும் இப்பிரச்சினையில் அதிக கவலை செலுத்தி வருவதால், இவ்வுபகண்டத்தில், முஸ்லிம் லீக்கும் காங்கிரசுமட்டுமல்ல; திராவிடர்களும் தாழ்த்தப்பட்டோரும் ஆகிய கோடிக்கணக்கான மக்கள் தனித்து விளங்க வேண்டுமென விரும்புகின்றனர்; அதற்காகப் போராடுகின்றனர் என்பதை அவர்களும் அறியும்படி செய்ய வேண்டும். நல்ல சமயத்தில் டாக்டர் அம்பேத்கர் தமது சமூகத்தாரை எச்சரிக்க முன்வந்ததற்காக அவரை மனப்பூர்வமாக பாராட்டுகிறோம்.

**- ‘விடுதலை’, தலையங்கம், 26.8.1942**

■

# 18

# அம்பேத்கர் - தந்தை பெரியார் சந்திப்பு

இந்திய மத்திய அரசாங்க நிர்வாக அங்கத்தினர் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் விருப்பத்திற்கு இணங்கி பெரியார் ஈ.வெ.ராமசாமி சென்னை சென்று தனது வரவைத் தெரிவித்துக் கொண்டார்.

டாக்டர் அவர்கள் 12 மணிக்கு வந்து சந்திப்பதாக தெரிவித்து விட்டு சரியாய் 12 மணிக்கு பெரியார் ஜாகைக்கு வந்து சந்தித்து ஒரு மணி நேரம் பேசிக் கொண்டு இருந்துவிட்டுச் சென்றார்.

சேலம் மாநாட்டுத் தீர்மானங்களை வரவேற்பதாகவும், அதற்கு ஆகவும், அவை யாவும் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டதற்கு ஆக பெரியாரைப் பாராட்டுவதாகவும், பட்டம் பதவியாளர்களும், பணக்காரர்களும், பதவியே கருமமாய்க் கருதுபவர்களும் முன்னணியிலிருந்து நடத்தப்படும் கட்சி எதுவும் இக்காலத்தில் பயன்தராதென்றும், அவர்களைப் பின் அணிக்குத் தள்ளியது இக்கட்சிக்குப் புத்துயிரளித்தது போல ஆயிற்றென்றும்,

பார்ப்பனரல்லாதார் கட்சி என்பதின் திட்டங்களில் நம் வகுப்பில் பார்ப்பனருக்கும் நமக்கும் இருக்கும் வித்தியாசம் என்ன? எதை ஒழிப்பதற்கு அல்லது என்ன நடப்பை மாற்றுவதற்கு என்று குறிப்பிடும் திட்டங்கள் நடைமுறைகள் இல்லாததாலேயே பாமர மக்களிடத்திலும் அறிவாளிகளிடத்திலும் ஜஸ்டிஸ் கட்சிக்கு மதிப்பில்லாமல் போனதோடு, பார்ப்பனர், இக்கட்சியாரை உத்தியோக வேட்டைக்காரர் என்று சொல்லுவதை பாமர மக்களும் வெளியிலுள்ள அறிஞர்களும் நம்பும்படி ஏற்பட்டு விட்டதென்றும், இதனாலேயே கட்சி 1937இல் வீழ்ச்சியுற வேண்டியதாயிற்று என்றும், சேலம் தீர்மானம் ஜஸ்டிஸ் கட்சியை எல்லா இந்தியக் கட்சியாக ஆக்கக் கூடியதாகுமென்றும், எதிர் காலத்தில் இது தலைசிறந்து விளக்கக் கூடியதாக ஆகிவிட்டதென்றும் கூறினார்.

**சேலம் தீர்மானம் பிடிக்காததால் கட்சியை விட்டுப் போகிறேன் என்பவர்களைப்பற்றியும், வீண் குறை கூறிக் கொண்டு தங்கள் காரியம் பார்த்துக் கொண்டிருப்பவர்களை பற்றியும் கவலைப்படாமல் பாமர மக்களுடையவும் வெளிநாட்டு மக்களுடையவும் ஆதரவு பெறவும் சர்க்கார் கவனிக்கவும் உருப்படியான காரியம் செய்யவும் நீங்கள் பார்க்க வேண்டும் என்றும், சந்தர்ப்பப்பட்டால் மற்ற ஆள்களுக்கும் இதை வெளிப்படையாய் சொல்லிவிட்டுப் போகிறேன் என்றும் சொன்னார்.**


30—9—44 புரட்டாசி 15உ

அம்பேத்கார்-பெரியார் சந்திப்பு

இந்திய மத்திய அரசாங்க நிர்வாக அங்கத்தினர் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் விருப்பத்திற்கு இணங்கி பெரியார் ஈ.வெ. ராமசாமி சென்னை சென்று தனது வரவைத் தெரிவித்துக் கொண்டார்.

டாக்டர் அவர்கள் 12 மணிக்கு வந்து சந்திப்பதாகத் தெரிவித்து விட்டு சரியாய் 12 மணிக்கு பெரியார் ஜாகைக்கு வந்து சந்தித்து ஒரு மணி நேரம் பேசிக் கொண்டு இருந்து விட்டுச் சென்றார்.

பேச்சின் முக்கிய சாரம்:

சேலம் மாநாட்டுத் தீர்மானங்களை வரவேற்பதாகவும், அதற்கு ஆகவும், அவை யாவும் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டதற்கு ஆக பெரியாரைப் பாராட்டுவதாகவும், பட்டம்பதவி ஆளர்களும், பணக்காரர்களும் பதவியே கருமமாய்க் கருதுபவர்களும் முன்னணியிலிருந்து நடத்தப்படும் கட்சி எதுவும் இக்காலத்தில் பயன்தராதென்றும், அவர்களைப் பின் அணிக்குத் தள்ளியது இக்கட்சிக்குப் புத்துயிரளித்தது போல் ஆயிற்றென்றும்,

பார்ப்பனரல்லாதார் கட்சி என்பதின் திட்டங்களில் நம் வகுப்பில் பார்ப்பனருக்கும் நமக்கும் இருக்கும் வித்தியாசம் என்ன! எதை ஒழிப்பதற்கு அல்லது என்ன நடப்பை மாற்றுவதற்கு என்று குறிப்பிடும் திட்டங்கள் வேலை முறைகள் இல்லாததாலேயே பாமர மக்களிடத்திலும் அறிவாளிகளிடத்திலும் ஜஸ்டிஸ் கட்சிக்கு மதிப்பில்லாமல் போனதோடு பார்ப்பனர் இக்கட்சியாரை உத்தியோக வேட்டைக்காரர் என்று சொல்லுவதை பாமர மக்களும் வெளியிலுள்ள அறிஞர்களும் நம்பும்படி ஏற்பட்டு விட்டதென்றும், இதனாலேயே கட்சி 1937-ல் வீழ்ச்சியுற வேண்டியதாயிற்று என்றும் சேலம் தீர்மானம் ஜஸ்டிஸ் கட்சியை எல்லா இந்தியக் கட்சியாக ஆக்கக் கூடியதாகுமென்றும் எதிர் காலத்தில் இது தலைசிறந்து விளங்கக் கூடியதாக ஆகிவிட்டதென்றும் கூறினார்.

சேலம் தீர்மானம் பிடிக்காததால் கட்சியை விட்டுப் போகிறேன் என்

ஜஸ்டிஸ்கட்சி எல்லா இந்தியக் கட்சியாக ஆக இப்போது நல்ல சமயமும், நல்ல வேலைத் திட்ட தீர்மானங்களும் இருப்பதால், துணிந்து தைரியமாயும் இந்தியா பூராவும் சுற்றி வேலை செய்யும்படியும் ஆங்காங்குள்ள தனது நண்பர்களுக்கு எழுதியும் தன்னால் ஆன அளவுக்கு ஒத்துழைத்தும் ஆதரிப்பதாகவும் சொன்னார்.

கடைசியாக திராவிடஸ்தானையும் பாகிஸ்தானையும் ஒன்றாக கருதியது தப்பு என்றும், அதன் தத்துவம் வேறு; இதன் தத்துவம் வேறு என்றும், அது முஸ்லிம் மெஜாரிட்டி உள்ள இடத்திற்கு மாத்திரம் பொருத்தமானதென்றும், திராவிடஸ்தான் இந்தியாபூராவுக்கும் பொறுத்தமானதென்றும், பிராமணியம் இந்தியா முழுமையும் பொறுத்த விஷயமென்றும், திராவிடஸ்தானில் தங்களையும் வேறு மாகாணக்காரர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் சொன்னார்.

- ‘குடிஅரசு’ செய்தி, 30.09.1944

■

# 19

## டாக்டர் அம்பேத்கர்

டாக்டர் அம்பேத்கர் அவர்கள் இந்திய அரசாங்க நிருவாக சபை மெம்பர் என்கின்ற முறையில் சென்னைக்கு வந்து 4, 5 நாள்கள் தங்கி இருந்து பல இடங்களில் பேசிவிட்டுப் போய் இருக்கிறார்.

அப்படி அவர்கள் பேசிய பேச்சுகளில் பார்ப்பனர்கள் பெரிய உத்தியோகங்களில் பதவிகளில் இருந்தால் எப்படி பார்ப்பனிய ஆதரவுக்கும் நலத்துக்கும் துணிகரமாய் வெள்ளையாய் பேசுவார்களோ அதுபோலவே பச்சையாய் பேசுகிறார் என்பது மிகுதியும், அதிசயப்படவும், பாராட்டத்தக்கதுமான காரியமாகும்.

நம் எதிரிகள் அவரை 'சர்க்கார்தாசர்' என்று சொல்லக்கூடும். அதைப் பற்றி அவர் சிறிதும் பயப்படவில்லை. பதவிக்கு அவர் வந்த உடன் "இந்தப் பதவிக்கு நான் வந்ததன் பயனாய் என் இன மக்களின் நலத்துக்கு இப்பதவியைப் பயன்படுத்த முடியுமானால் - என் இன மக்களுக்கு ஏதாவது நலம் செய்ய முடியுமானால் - நான் இதில் இருப்பேன்; இல்லாவிட்டால் நான் வெளிவந்துவிடுவேன்'' என்று சொன்னார். அதுபோலவே பதவிக்கு அவர் சென்றது முதல் ஒவ்வொரு மூச்சிலும் தன் இனத்தின் பெயரையும் நிலைமையையும் எடுத்துச் சொல்லி சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் தன் இனத்தின் நலத்துக்கு ஏதாவது காரியங்கள் செய்து கொண்டு எதிரிகளை வெள்ளையாய் கண்டித்துப் பேசி நடுங்கச் செய்தும் வருகிறார்.

அவருக்கு அவருடைய வகுப்பாருடைய ஆதரவு இருக்கிறதா என்றால் அது பூஜ்ஜியம் என்பதோடு, இனத்தார் அத்தனை பேரும் தனக்கு ஆதரவளிக்கும்படியான வலிமை பொருந்திய ஸ்தாபனமும் இல்லை. இனத்தின் தக்க செல்வமோ செல்வாக்கோ துணிந்து



6 குடி அரசு 30—9—44 புரட்டாசி-மீ 15-உ

# குடி அரசு

1944-ஆம் செப்டம்பர்-மீ 30-உ

## டாக்டர் அம்பேத்கார்

டாக்டர் அம்பேத்கார் அவர்கள் இந்திய அரசாங்க நிர்வாக சபை மெம்பர் என்கின்ற முறையில் சென்னைக்கு வந்து 4, 5 நாள்கள் தங்கி இருந்து பல இடங்களில் பேசிவிட்டுப் போய் இருக்கிறார்.

அப்படி அவர்கள் பேசியபேச்சுகளில் பார்ப்பனர்கள் பெரிய உத்தியோகங்களில் பதவிகளில் இருந்தால் எப்படி பார்ப்பனிய ஆக்கத்துக்கும் நலத்துக்கும் அனுகூலமாய் வெள்ளையாய் பேசுவார்களோ அதுபோலவே பச்சையாய் பேசுகிறார் என்பது மிகுதியும், அதிசயப்படவும், பாராட்டத்தக்கதுமான காரியமாகும்.

நம் எதிரிகள் அவரை 'சர்க்கார் தாசர்' என்று சொல்லக்கூடும். அதைப் பற்றி அவர் சிறிதும் பயப்படவில்லை. பதவிக்கு அவர் வந்தவுடன் "இந்தப் பதவிக்கு நான் வந்ததின் பயனாய் என் இன மக்களின் நலத்துக்கு இப்பதவியைப் பயன்படுத்த முடியுமானால்—என் இன மக்களுக்கு ஏதாவது நலம் செய்ய முடியுமானால் நான் இதில் இருப்பேன் இல்லாவிட்டால் நான் வெளிவந்துவிடுவேன்" என்று சொன்னார். அதுபோலவே பதவிக்கு அவர் சென்றது முதல் ஒவ்வொரு மூச்சிலும் தன் இனத்தின் பெயரையும் நிலைமையையும் எடுத்துச்சொல்லி சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் தன் இனத்தின் நலத்துக்கு ஏதாவது காரியங்கள் செய்து கொண்டு - எதிரிகளை வெள்ளையாய் கண்டித்துப் பேசி நடுங்கச் செய்தும் வருகிறார்.

அவருக்கு அவருடைய வகுப்பாருடைய ஆதரவு இருக்கிறதா என்றால் அது பூஜ்ஜியம் என்பதோடு இனத்தார் அத்தனை பேரும் ...க்கு ஆதரவளிக்கும்படியான ...

...யாரும் இல்லை; இனத்தில் தக்க செல்வமோ செல்வாக்கோ துணிந்து வெளிவந்து ஆதரவளிக்கக் கூடிய ஆளுகளும் மிகக்குறைவு. 100க்கு 99பேர் ஏழை, கூலி, தரித்திர மக்கள். இப்படிப்பட்ட நிலையில் உள்ள அவர், உத்தியோகம் தனக்கு கிடைக்கத்தக்க விதமாக தனது வாழ்வில் பல அவதாரம் எடுக்காமலும் எதிரிகளிடம் நல்ல பேர் வாங்க—அவர்கள் மெச்சும் படி நடக்காமலும், இந்துக்களையும் இந்து மதத்தையும் இராமாயணம், மநுஸ்மிருதி முதலியவைகளையும் பார்ப்பனர்களையும் பச்சையாய் வைது கண்டித்து சிலவற்றைக் கொளுத்த வேண்டும் என்றும், சிலதை தீயில் கொளுத்தியும் 'நான் இந்து மதத்தை விட்டு வெளியே போய்விடுகிறேன்' என்றும், தேசியம் என்பது புரட்டு, தேசீய சர்க்கார் என்பது பார்ப்பன ஆட்சி, தேசிய சர்க்காரைவிட இன்றுள்ள சர்க்காரே மேல் என்றும், பேசி வருகிறார். மற்றும் தேசிய சர்க்கார் ஏன் கெடுதி என்றால், "எந்த சுதந்திர தேசிய சர்க்கார் வந்தாலும் அது பார்ப்பன, வர்ணாச்சிரம, சர்க்காராகத்தான் இருக்கும்" என்றும் வெடிவெடிக்கும் மாதிரியில் பேசி, தன் இன மக்களின் நம்பிக்கையையும், பாராட்டுதலையும் பெற்றுக் கொண்டு சட்டதிட்டங்களை லட்சியம் செய்யாமல் பேசி வருகிறார்.

இவரை பார்ப்பனர் சபிக்கலாம், காங்கிரசுக்காரர்கள் வையலாம், 'தேசியப்' பத்திரிக்கைகள் யோக்கியப் பொறுப்பில்லாமல் எழுதலாம்; மற்றும் வகுப்புப் பேரால் பதவி பெற்று பதவிக்கு போய் வகுப்பை மறந்துவிட்டு தங்கள் குடும்ப நலத்திற்கு ஆக பதவி அனுபவிப்பவர்கள் பொறாமைப் பட்டு "இந்த சனியன்பிடித்த டாக்டர் அம்பேத்கார் நம்ம யோக்கியதை வெளியாகும்படி நடக்கிறாரே" என்று பொறாமையும் ஆத்திரமும் கொள்ளலாம். ஆனால் தோழர் அம்பேத்கார் மேற்கண்டபடி பேசுவதும் நடப்பதும் இந்த நாசமாய்ப் போன சுயமரியாதை அற்ற பார்ப்பனரல்லாத சமுதாயத்தைத் தவிர மற்ற சமுதாயக்காரர்களில் பதவி பெற்ற ...

செய்கிற காரியமே தவிர அம்பேத்காருக்கு மாத்திரம் புதிதல்ல. ஆனால் மற்றவர்களைவிட இவர் சற்று வெளிப்படையாய் பேசுகிறார் எழுதுகிறார் என்று சொல்லிக்கொள்ளலாம். உதாரணமாக டாக்டர் அம்பேத்கார் சென்னை நகரசபை வரவேற்புக்கு பதில் சொல்லும்போது பேசியதை கவனிப்போம்.

"ஒரு கூட்டத்தார் எனக்கு வரவேற்புக் கொடுக்க சம்மதிக்கவில்லை என்பது எனக்குத் தெரியும். அதற்குஆகவே இந்த வரவேற்பைப் பெற நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஏன்எனில் இந்த வரவேற்பு—சடங்குமுறை வரவேற்பல்ல என்பதும் எனக்கு வரவேற்பு கொடுத்துத்தான் ஆகவேண்டும் என்பவர்கள் பிடிவாதமாய் இருந்து மெஜாரிட்டியாய் இருந்து வெற்றிபெற்று எனக்குக்காட்டிய அன்பென்றும் கருதுவதால் நான் மகிழ்ச்சி அடைகிறேன்" என்று பேசினார்.

அடுத்தாப்போல் தேசியப்பித்தலாட்டத்தை பட்டவர்த்தனமாக்கினார். என்னவெனில்,

"தேசிய சர்க்கார் என்றால் பார்ப்பன சர்க்கார்தானே! 1937ல் தேசியம் வெற்றிபெற்ற 7-மாகாணங்களும் பார்ப்பன முதல் மந்திரிகள் ஆதிக்கத்தில்தானே இருந்துவந்திருக்கிறது. நாளைக்கு எல்லா மக்களுக்கும் ஓட்டு கொடுத்து அதன்மூலம் ஒரு சர்க்காரை ஏற்படுத்தினாலும் அதிலும் பார்ப்பனர்கள் தானே ஆட்சி செலுத்துவார்கள்? இது மாத்திரமா, பெண்களுக்கு ஸ்தானம் வழங்கினாலும் அதிலும் பார்ப்பத்திகளே மெஜாரிட்டியாய் வருகிறார்கள்; தொழிலாளருக்கு ஸ்தானம் வழங்கினாலும் அதற்கும் பார்ப்பனர்களே பிரதிநிதிகளாய் வருகிறார்கள். இதுமாத்திரமா தீண்டாத வகுப்பாருக்கு ஸ்தானம் வழங்கினாலும் அதிலும் பார்ப்பனர்கள் பிடித்துவைக்கிற ஆள்கள் தான் வருகிறார்களே தவிர வேறு யார் வருகிறார்கள்? ஆகவே தேசிய சர்க்கார் என்னும் பித்தலாட்டத்திற்கும் இந்த நாட்டின் மானக்கேடான அரசியல் நிலைக்கும் இந்த உதாரணம் ...

வெளிவந்து ஆதரவளிக்கக் கூடிய ஆள்களும் மிகக்குறைவு. 100 க்கு 99 பேர் ஏழை, கூலி, தரித்திர மக்கள். இப்படிப்பட்ட நிலையில் உள்ள அவர், உத்தியோகம் தனக்கு கிடைக்கத்தக்க விதமாக தனது வாழ்வில் பல அவதாரம் எடுக்காமலும் எதிரிகளிடம் நல்ல பேர் வாங்க – அவர்கள் மெச்சும் படி நடக்காமலும், இந்துக்களையும் இந்து

மதத்தையும், இராமாயணம், மனுஸ்மிருதி முதலியவைகளையும் பார்ப்பனர்களையும் பச்சையாய் வைது கண்டித்து சிலவற்றைக் கொளுத்த வேண்டும் என்றும், சிலவற்றை தீயில் கொளுத்தியும் 'நான் இந்து மதத்தை விட்டு வெளியே போய்விடுகிறேன்' என்றும், தேசியம் என்பது புரட்டு, தேசிய சர்க்கார் என்பது பார்ப்பன ஆட்சி, தேசிய சர்க்காரைவிட இன்றுள்ள சர்க்காரே மேல் என்றும், பேசி வருகிறார். மற்றும் தேசிய சர்க்கார் ஏன் கெடுதி என்றால், "எந்த சுதந்திர தேசிய சர்க்கார் வந்தாலும் அது பார்ப்பன, வர்ணாசிரம, சர்க்காராகத்தான் இருக்கும்" என்றும் வெடி வெடிக்கும் மாதிரியில் பேசி, தன் இன மக்களின் நம்பிக்கையையும், பாராட்டுதலையும் பெற்றுக் கொண்டு சட்டதிட்டங்களை லட்சியம் செய்யாமல் பேசி வருகிறார்.

இவரைப் பார்ப்பனர் சபிக்கலாம், காங்கிரசுக்காரர்கள் வையலாம், 'தேசிய'ப் பத்திரிகைகள் யோக்கியப் பொறுப்பில்லாமல் எழுதலாம்; மற்றும் வகுப்புப் பேரால் பதவி பெற்று பதவிக்கு போய் வகுப்பை மறந்துவிட்டு தங்கள் குடும்ப நலத்திற்காக பதவி அனுபவிப்பவர்கள் பொறாமைப் பட்டு "இந்தச் சனியன் பிடித்த டாக்டர் அம்பேத்கர் நம்ம யோக்கியதை வெளியாகும்படி நடக்கிறாரே" என்று பொறாமையும் ஆத்திரமும் கொள்ளலாம். ஆனால், தோழர் அம்பேத்கர் மேற்கண்டபடி பேசுவதும் நடப்பதும் இந்த நாசமாய்ப் போன சுயமரியாதை அற்ற பார்ப்பனரல்லாத சமுதாயத்தைத் தவிர மற்ற சமுதாயக்காரர்களின் பதவி பெற்ற எவ்வளவு தாழ்ந்த மனிதனும் செய்கிற காரியமே தவிர, அம்பேத்கருக்கு மாத்திரம் புதிதல்ல. ஆனால், மற்றவர்களைவிட இவர் சற்று வெளிப்படையாய் பேசுகிறார், எழுதுகிறார் என்று சொல்லிக்கொள்ளலாம். உதாரணமாக டாக்டர் அம்பேத்கர் சென்னை நகரசபை வரவேற்புக்கு பதில் சொல்லும்போது பேசியதைக் கவனிப்போம்.

"ஒரு கூட்டத்தார் எனக்கு வரவேற்புக் கொடுக்க சம்மதிக்கவில்லை என்பது எனக்குத் தெரியும். அதற்காகவே இந்த வரவேற்பைப் பெற நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஏன் எனில், இந்த வரவேற்பு சடங்குமுறை வரவேற்பல்ல என்பதும், எனக்கு வரவேற்பு கொடுத்துத்தான் ஆகவேண்டும் என்பவர்கள் பிடிவாதமாய் இருந்து மெஜாரிட்டியாய் இருந்து வெற்றிபெற்று எனக்குக்காட்டிய அன்பென்றும் கருதுவதால் நான் மகிழ்ச்சி அடைகிறேன்" என்று பேசினார்.

அடுத்தாற்போல் தேசியப் பித்தலாட்டத்தைப் பட்டவர்த்தனமாக்கினார். என்னவெனில், “தேசிய சர்க்கார் என்றால் பார்ப்பன சர்க்கார்தானே! 1937 இல் தேசியம் வெற்றிபெற்ற 7 மாகாணங்களும் பார்ப்பன முதல் மந்திரிகள் ஆதிக்கத்தில்தானே இருந்து வந்திருக்கின்றன. நாளைக்கு எல்லா மக்களுக்கும் ஓட்டு கொடுத்து அதன்மூலம் ஒரு சர்க்காரை ஏற்படுத்தினாலும் அதிலும் பார்ப்பனர்கள்தானே ஆட்சி செலுத்துவார்கள்? இது மாத்திரமா, பெண்களுக்கு ஸ்தானம் வழங்கினாலும் அதிலும் பார்ப்பனத்திகளே மெஜாரிட்டியாய் வருகிறார்கள்; தொழிலாளருக்கு ஸ்தானம் வழங்கினாலும் அதற்கும் பார்ப்பனர்களே பிரதிநிதிகளாய் வருகிறார்கள். இதுமாத்திரமா தீண்டாத வகுப்பாருக்கு ஸ்தானம் வழங்கினாலும் அதிலும் பார்ப்பனர்கள் பிடித்துவைக்கிற ஆள்கள்தான் வருகிறார்களே தவிர வேறு யார் வருகிறார்கள்? ஆகவே, தேசிய சர்க்கார் என்னும் பித்தலாட்டத்திற்கும் இந்த நாட்டின் மானக்கேடான அரசியல் நிலைக்கும் இந்த உதாரணம் போதாதா?'' என்று பேசுகிறார். இதற்குப் பார்ப்பனர்கள் தானாகட்டும் தேசியர்கள் தானாகட்டும் என்ன பதில் சொல்லக் கூடும்? “நான் சென்ஸ், ரப்பிஷ்'' என்று குரைத்து தங்கள் அயோக்கியத்தனங்களை மறைக்க முயற்சிக்கக் கூடுமே ஒழிய, வேறு என்ன சமாதானம் சொல்ல முடியும்? சுயமரியாதை இயக்கம் இல்லாவிட்டால் “இதெல்லாம் (இப்படி பார்ப்பனர் வெற்றிபெற்றது) கடவுள் செயல், அந்தராத்மா கட்டளை'' என்று சொல்ல முடியும். இப்போது தலையைக் கவிழ்ந்துகொள்ள வேண்டியதைத் தவிர இதற்கு வேறு பதில் இல்லை.

தேசியர்களின் தன்மை இப்படி என்றால் பார்ப்பனரல்லாத கட்சியார் என்று தங்களைச் சொல்லிக் கொண்டு ஒரு நல்ல கொள்கையையும், பொறுப்பையும் பாழ் அடையும்படி தங்கள் சுயநலத்தையும், வயிறுவளர்ப்பையும், பட்டம் , பதவி, உத்தியோகம் முதலியவைகளை மாத்திரம் வேட்டை ஆடுவதில் மூழ்கிக்கொண்டு மற்றவர்கள் தங்களைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்ற கவலையற்ற அதிதீவிர சுயநலக்காரர்களுக்கும் சரியான சவுக்கடி கொடுத்து சிறிதாவது உறைக்கும்படி செய்திருக்கிறார். அதற்கு உதாரணமாக கன்னிமாரா ஓட்டலில் டாக்டர் அம்பேத்கரின் ஆசிபெற விருந்துகொடுத்து ஏமாற்ற நினைத்த சென்னைத் தோழர்களுக்கு டாக்டர் உறுத்திய அறிவுரையைக் கவனித்தால் விளங்கும்.



அவர் பேசியதன் தத்துவமாவது, “பார்ப்பனரல்லாத தோழர்களே!

உங்களை நீங்கள் பார்ப்பனரல்லாதார் என்று சொல்லிக் கொள்ளுகிறீர்களே! அதில் உங்களுக்கும் பார்ப்பனர்களுக்கும் உள்ள பேதத்தைக் காட்டுவதற்குள்ள காரியங்கள் என்ன? அதற்கு உங்கள் கொள்கை என்ன? திட்டங்கள் என்ன? எங்கள் கட்சி பார்ப்பனியத்திற்கு மாறான கட்சி’’ என்று சொல்லிக்கொண்டு நெற்றியில் நாமம், வீட்டில் பார்ப்பன புரோகிதம், நடவடிக்கையில் பார்ப்பனியத்தைப் பின்பற்றுதல், அவன் பூசை பண்ணும் கோவிலில் சென்று வெளியில் இருந்து வணங்குதல் ஆகியவைகளைச் செய்து உங்களையும் 2ஆவது வகுப்பு பார்ப்பனர் மாதிரி ஆக்கிக்கொண்டு, முதலாவது வகுப்பு பார்ப்பனராக ஆக ஆவதற்கு ஏற்ற வண்ணம் நடந்துகொண்டு வருவீர்களானால் நீங்கள் எந்தத் தன்மையில் பார்ப்பனரல்லாதார் என்று சொல்லிக்கொள்ள அருகர்கள் ஆவீர்கள்?

பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு முதலாவதும் கடைசியானதுமான கொள்கை “உத்தியோகம்’’ தானா? அல்லது உத்தியோகத்தில் “சரி பங்கு” என்பது மாத்திரம் தானா? இதைத் தவிர வேறு என்ன கொள்கையை இதுவரை பின்பற்றி வந்தீர்கள்? என்பது ஆகக் கேட்டிருக்கிறார்.

மேலும் அப்படியாவது உத்தியோகம் பதவி பட்டம் ஆகியவை அக்கட்சியின் மூலம் பெற்று வாழ்ந்தீர்களே அதற்கு ஆக அக்கட்சிக்கு நீங்கள் காட்டிய நன்றி அறிதல் விஸ்வாசம் என்ன? என்பது ஆகவும் கேட்டிருக்கிறார். மேலும் மந்திரி வேலை பார்த்தவர்கள் எங்கே? சேலம் கூட்டத்திற்குப் போனீர்களா? அல்லது நிருவாகசபை கூட்டங்களில் ஏதாவது ஒன்றுக்கு போனீர்களா? மந்திரிகளின் காரியதரிசிகளாய் இருந்து மாதம் 500 , 1000 மூட்டை கட்டியவர்கள் எங்கே? இவர்கள் தேர்தலுக்கு நிற்பது, தேர்தலுக்கு பேசுவது தவிர வேறு ஏதாவது பொதுக் கூட்டம் கூட்டி இருப்பார்களா அல்லது பொதுக் கூட்டத்தில் பேசி இருப்பார்களா? இந்த மந்திரிகளும், அவர்களது காரியதரிசிகளும் சம்பளம் பெற்றது தவிர பார்ப்பனியத்தில் ஏதாவது ஒன்றை விட்டிருப்பார்களா? விட்டிருக்காவிட்டாலும் பார்ப்பனியத்தை வளர்க்காமலாவது இருந்திருப்பார்களா?

இவைகள் எல்லாம் நாசமாகப் போகட்டும், கட்சியின் பேரால் உத்தியோகம் பெற்ற பெரியவர்கள் யோக்கியதைதான் இப்படி என்றால்,





கட்சி பேரால் உத்தியோகம் பெற்ற வாலிபர்களிலாவது எவனாவது கட்சிக்கோ கட்சியில் உள்ள மற்ற மக்களுக்கோ ஏதாவது நன்மை செய்தானா என்பதும் விளங்கும்படி பேசினார்.

கட்சித் தலைவர்கள் பார்ப்பனரல்லாத கிராமத்தார்களைப் பற்றி நினைத்தார்களா? எந்தக் கிராமத்திற்காவது எந்தத் தாலுகாவுக்காவது போய் அங்குள்ள மக்களிடம் கலந்தார்களா? கூட்டங்களுக்கு போய் பேச்சசாளர்களாகப் பேசினார்களா? என்றும் தைக்கும்படி பேசினார்.

மற்றும் கட்சி வீழ்ச்சி அடைந்த பின் மந்திரிகளும் பட்டம் பெற்றவர்களும் பிள்ளை குட்டிகளுக்குப் பதவியும், உத்தியோகமும் பெற்றவர்களும், மந்திரிகளுக்குக் காரியதரிசியாய் இருந்து பயன் பெற்றவர்களுமான தமிழர் ஆந்திராவுக்குப் போனார்களா? இப்படிப்பட்ட ஆந்திரக்காரர் யாராவது தமிழ்நாட்டுக்கு வந்து பிரச்சாரம் செய்தார்களா? அல்லது ஆந்திரர்கள் யாராவது ஆந்திராவில் ஒரு கூட்டத்தில் பேசி இருப்பார்களா? தமிழர்கள் யாராவது தமிழ்நாட்டிலோ, மலையாளத்திலோ ஒரு பேச்சு பேசி இருப்பார்களா? என்றும் பொருள்பட அறைந்தார். பதவி அடைந்து பட்டம் பெற்று பணம் சம்பாதித்துக் கொண்டு மேலும் மேலே போக ஆசைப்பட்டு வலை வீசிக்கொண்டு அலையும் நீங்கள், உங்கள் நன்றிமறந்த தன்மைக்கும், கவலையற்ற தன்மைக்கும் வெட்கப்படாமல் வருத்தப்படாமல், ஓய்வொழிச்சல் இல்லாமல் ஏதோ ஒரு சிறிதாவது வேலை செய்து கொண்டு இருக்கிறவர்களையும், அதுபோன்ற கட்சித் தலைவனையும் குற்றம் கூறி வீரம் பேசுவதை கட்சி வேலை என்று கருதுகிறீர்களே... இது ஒழுங்கா?

மற்றக் கட்சிகளைப் பாருங்கள், அக்கட்சித் தலைவர்களின் தன்மையைப் பாருங்கள். கட்சியின் மக்களை, பின்பற்றுவோரைப் பாருங்கள். உங்களைப் போன்று குறைகூறித் திரியும் ஆள்கள் அங்கு எதிலாவது யாராவது இருக்கிறார்களா ? என்றும் விளாசி இருக்கிறார்.

“உங்களுக்கும் பார்ப்பனர்களுக்கும் பேதம் காட்டி பார்ப்பனியத்தில் இருந்து நீங்கள் விலகாததாலேயே தோற்றீர்கள் அதனாலேயே உங்களுக்கு செல்வாக்கில்லை இப்படியே இருந்தால் இனியும் நீங்கள் என்றென்றும் உருப்படமாட்டீர்கள்” என்றும் எச்சரிக்கையான அறிவுரை பகர்ந்திருக்கிறார்.

விருந்து நடத்தியவர்கள் இவ்வளவு அடியையும், இடியையும் பெற்றுக்கொண்டு டாக்டர் அம்பேத்கருக்கு நன்றி செலுத்திவிட்டு,

“நாங்கள் தலைவரிடம் முழு நம்பிக்கையுடனும் பக்தி விசுவாசத்துடனும் தலைவர் கட்டளைக்கு மறுமொழி கூறாமலும்தான் நடந்து கொள்ளுகிறோம் அதுதான் எங்கள் கட்சி சம்பிரதாயம்; ஆனால், ஜனநாயகம் வேண்டும் என்று தான் சொல்லுகிறோம் என்று பதில் சொன்னார்களாம். அதுவும் யார் சொன்னார்கள் என்றால் சேலம் மாநாட்டுக்கு வந்து “பெரியாரைத் தவிர உலகம் முழுவதும் தேடியும் வேறு தலைவர் கிடைக்கவில்லை. நான் ஒரு காலத்தில் தலைவர் பதவிக்கு சிபார்சு செய்த சர். சண்முகம் செட்டியார் முதலியவர்கள் கட்சிக்கு துரோகிகளாகவும், வஞ்சகர்களாகவும் ஆகிவிட்டார்கள். ஆதலால் பெரியாரே எங்கள் நிரந்தரத் தலைவர். அவரை நாங்கள் என்றும் பின்பற்றுவோம். அவரே லெனின்; அவரே மார்க்ஸ்; அவரே திராவிட நாட்டுக்கு பிரசிடெண்டு’’ என்று கூறி மக்கள் கைதட்டுதலைப் பெற்றுக்கொண்டு பிழைத்தேன் என்று சொல்லிக்கொண்டு ஓடினவர்களும் ஊருக்கு இரண்டு மைல் தூரத்தில் போலிஸ் பந்தோபஸ்தை வைத்து தங்கள் ஆளுகளைத் தவிர வேறு யாரையும் உள்ளே விடாமல் தடுத்து வேலைக்காரர்கள் உள்பட 20, 30 பேர்கள் இருந்து கொண்டு ஏதோ பேசி எதையோ எழுதிக் கொண்டு நாங்கள் தலைவரை நீக்கிவிட்டோம்; வேறு தலைவரை நியமித்து விட்டோம் என்று வெளிப்படுத்தின மூன்றே முக்கால் பேர்வழிகள் தான் இந்த ஜனநாயகம் பேசியிருக்கிறார்கள்.

அது ஒருபுறமிருக்கட்டும். இவைகளிலிருந்து டாக்டர் அம்பேத்கர் அவர்கள் ஒரு தைரியசாலி என்பதும், மனதில் உள்ளதை தைரியமாய்ப் பேசுகிறவர் என்பதும், அவரது பொது வாழ்வு பட்டத்திற்கோ பதவிக்கோ பண சேகரிப்புக்கோ, விளம்பரத்திற்கோ அல்லாமல் ஒரு பொது இலட்சியத்திற்கு என்பதும் நன்றாய் விளங்கும்படி நடந்துவந்திருப்பதோடு சென்னைக்கு வந்ததிலும் அப்படியே நடந்துகொண்டிருக்கிறார் என்பதும் நன்றாய் விளங்கும்.

இதே சந்தர்ப்பத்தில் நம் நாட்டில் உள்ள பார்ப்பனரல்லாத தலைவர்கள் பிரமுகர்கள் மந்திரிகள், மந்திரிகளின் காரியதரிசிகள், மந்திரிகளுடன் சுற்றித் திரிந்து கொண்டு பயன்பெற்றும், பதவி பெற்றும், வயிற்றுப் பிழைப்பும் வாழ்க்கை நடத்திக்கொண்டும் இருந்த மக்களின் யோக்கியதையும் நினைத்துப் பாருங்கள்.

**- ‘குடிஅரசு’ - தலையங்கம் - 30.09.1944**

■

20

# சோறு போட்டு உதை வாங்கின கதை

## அம்பேத்கர் கொடுத்த அடி

சென்னையில் தங்களையும், ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் என்று சொல்லிக் கொண்டு, ஆனால், திராவிடர் கழகம் என்று சொல்லிக் கொள்ள மாட்டோம், தென் இந்தியர் கழகம் என்றுதான் சொல்லுவோம் என்று சொல்லிக் கொள்ளும் சில நபர்கள், டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு ஒரு விருந்து நடத்தி அவரிடம் ஆசீர்வாதம் பெற்று விளம்பரம் பெறலாம் என்று கருதி ஒரு விருந்து செய்தார்கள். டாக்டர் விருந்தை சாப்பிட்டு விட்டு விருந்து நடத்தியவர்களுக்கு நல்ல அடிகொடுத்து அழ வைத்துவிட்டுப் போய் விட்டார். விருந்து கொடுத்தவர்கள் டாக்டரை அனுப்பி விட்டு மூலையில் இருந்து முக்காடிட்டு ஒப்பாரி வைத்து அழுத வண்ணம் கிடக்கிறார்கள். பாவம் அவர்களை அழாதீர்கள் என்று சொல்லி ஓய வைக்கவும் ஆளில்லாமல் அவர்களாகவே ஓய்வதற்கும் வெட்கப்பட்டுக் கொண்டு கிடக்கிறார்கள், இதுவும் அதிசயம்தான்.

“நண்பர்களே! உங்கள் விருந்துக்கு நன்றி செலுத்துகிறேன்.

பார்ப்பனரல்லாதார் கட்சி தோற்றுவிக்கப்பட்டதானது சரித்திரத்திலேயே குறிப்பிடத்தகுந்ததாகும். ஆனால், அதை முன்பு கையாண்ட மக்கள் அதைத் தோற்றுவித்தவர்களின் கருத்துக்கு நேர் விரோதமாக யாரோ சிலர் உத்தியோகம் பெறவும், யாரோ சிலருக்கு உத்தியோகம் தேடிக் கொடுக்கவுமே பயன்படுத்தி வந்ததானது அக்கட்சியையே ஒழிந்து போகும்படி செய்துவிட்டது.

20 ஆண்டு ஆட்சி செலுத்தி வந்தும் 1937ஆம் தேர்தலில் இக்கட்சி ஏன் தோல்வி அடைந்தது? வீழ்ச்சி அடைந்த உடன்,





30-9-44 புரட்டாசி 15 குடி அரசு

## சோறுபோட்டு உதை வாங்கின கதை

### அம்பேத்கார் கொடுத்த அடி

சென்னையில் தங்களையும், ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் என்று சொல்லிக்கொண்டு, ஆனால் திராவிடர் கழகம் என்று சொல்லிக்கொள்ள மாட்டோம், தென் இந்தியர் கழகம் என்றுதான் சொல்லுவோம் என்று சொல்லிக்கொள்ளும் சில நபர்கள், டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு ஒரு விருந்து நடத்தி அவரிடம் ஆசீர்வாதம் பெற்று விளம்பரம் பெறலாம் என்று கருதி ஒரு விருந்துசெய்தார்கள். டாக்டர் விருந்தை சாப்பிட்டுவிட்டு விருந்து நடத்தியவர்களுக்கு நல்ல அடிகொடுத்து அழவைத்துவிட்டுப் போய்விட்டார். விருந்துகொடுத்தவர்கள் டாக்டரை அனுப்பிவிட்டு மூலையில் இருந்து முக்காடிட்டு ஒப்பாரி வைத்து அழுதவண்ணம் கிடக்கிறார்கள். பாவம் அவர்களை அழாதீர்கள் என்று சொல்லி ஓய வைக்கவும் ஆளில்லாமல் அவர்களாகவே ஓய்வதற்கும் வெட்கப்பட்டுக்கொண்டு கிடக்கிறார்கள், இதுவும் அதிசயம்தான்.

அம்பேத்கார் பேச்சு

"நண்பர்களே! உங்கள் விருந்துக்கு நன்றிசெலுத்துகிறேன்.

பார்ப்பனரல்லாதார் கட்சி தோற்கடிக்கப்பட்டதானது சரித்திரத்திலேயே குறிப்பிடத்தகுந்ததாகும். ஆனால் அதை முன்பு கையாண்ட மக்கள் அதைத் தோற்றுவித்தவர்களின் கருத்துக்கு நேர் விரோதமாக யாரோ சிலர் உத்தியோகம் பெறவும், யாரோ சிலருக்கு உத்தியோகம் தேடிக் கொடுக்கவுமே பயன்படுத்தி வந்ததானது அக்கட்சியையே ஒழிந்து போகும்படி செய்து விட்டது.

ஏன் தோற்றது?

20 ஆண்டு ஆட்சி செலுத்தி வந்தும் 1937ம் வருஷ தேர்தலில் இக்கட்சி ஏன் தோல்வி அடைந்தது? வீழ்ச்சி அடைந்த உடன் கட்சித் தலைவர்கள், சீட்டுக் கட்டு வீசி எறிந்தால் ... தில் பறந்து ஓடிவிழுவதுபோல் கலைந்து மறைந்துவிட்டதற்குக் காரணம் என்ன? பார்ப்பனர் அல்லாதார் ஓட்டுகள்தானே அதிகமாயிருந்தது? அவர்களிடம் இக்கட்சிக்கு ஏன் செல்வாக்கில்லை? என்பதை யோசியுங்கள்.

காரணம் தெரியுமா?

இதற்கு முக்கிய காரணங்கள் 2 ஆகும்.

ஒன்று பார்ப்பனர்களுக்கும், இக்கட்சியாருக்காக ஏற்பட்டதோ அந்த பார்ப்பனரல்லாத மக்களுக்கும், எதில் எதில் என்ன என்ன வித்தியாசம் என்பதை இதன் தலைவர்கள் மக்களுக்கு எடுத்துச் சொல்லவில்லை. இதன் போல் பட்டம்பதவி உத்தியோகம் பெற்று பயனடைந்தவர்களும் நடந்து காட்டவில்லை. அவர்கள் தாங்களாவது உணர்ந்து கொள்ளவுமில்லை.

மற்றும் பிராமணீயத்தை வெறுக்கிறோம் என்று சொன்னார்களே ஒழிய அப்படிச் சொன்ன தலைவர்கள் பிராமணீயத்தை தங்கள் வாழ்வில் வெறுக்கவில்லை. அவ்வளவோடு மாத்திரம் இல்லாமல் பிராமணீய அறிகுறிகளாகிய நாமம் முதலிய குறிகளை அணிந்துகொண்டு பிராமணர்களைப் போலவே நடித்து தங்களை (செகண்டு கிளாஸ்) 2-வது வகுப்புப் பிராமணர்கள் என்று தெரியும்படி நடை உடை பாவனைகளில் காட்டிப் பெருமையடைந்தும் வந்தார்கள். பார்ப்பனர்கள் மீது ஜஸ்டிஸ் கட்சி பார்ப்பனரல்லாத பிரமுகர்களுக்கு இருந்து வந்த கோபமெல்லாம் பார்ப்பனர்கள் ஏன் நம்மை முதல்வகுப்பு (பஸ்ட் கிளாஸ்) பிராமணர்களாக ஒப்புக்கொள்ளவில்லை என்பதைத் தவிர பார்ப்பனீயம் ஒழிக்கப்பட வேண்டுமே என்கின்ற கவலையே இல்லாமலேயே போனது பரிதாபகரமான காரியமாகும்.

பேதம் தெரியவேண்டும்.

ஒரு கட்சி இருந்தால் அக்கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் அக்கட்சிக்கு எதிரிகளாய், அக்கட்சியாரல்லாதவர்களாய் இருப்பவர்களுக்கும் நன்றாய் பேதம் தெரியும்படியாய் கொள்கைகள், காரியங்கள் கொண்டவர்களாய் எதற்காக மற்றக் கட்சியை நல்லது நம் கட்சி அல்லாத மக்களை எதிர்க்கிறோம் என்பது நம்பாமர மக்களுக்கும் ஓட்டர்களுக்கும் தெரியவேண்டாமா? இதில் பார்ப்பனரல்லாதார் கட்சித் தலைவர்களுக்கு சிறிதும் கவலை இல்லாததாலும் தாங்களும் பார்ப்பனர்கள் போலவே தங்கள் வாழ்வில் நடந்து தங்கள் வாழ்க்கையில் பார்ப்பனீயத்துக்கு மரியாதையும், பெருமையும் கொடுத்துவந்ததாலும் பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு வேர் பூமியில் ஆழம்பட இறங்காமல் போனதோடு சிறியதொரு காற்றில் அது பெரியதொரு வீழ்ச்சியையும் அடைய நேரிட்டுவிட்டது.

இரண்டாவது காரணம்

கட்சி வீழ்ச்சிக்கும் பாமர மக்கள் அவமதிப்புக்கும் இரண்டாவது காரணமென்னவென்றால், அதன் குறுகிய அரசியல் நோக்கமேயாகும். என்னவெனில் கட்சியின் எதிரிகள் இக்கட்சியாரை "உத்தியோக வேட்டைக்காரர்கள் கட்சி" என்று சொல்லிவந்ததை அறிந்தும் அவர்களுக்கு தக்கபதில் சொல்லும்படியாக நடந்துவரவில்லை. இக்கட்சியாரைவிட இக்கட்சியின் எதிரிகள் அதிகமான உத்தியோக வேட்டைக்காரர்களாக இருந்தும் அவர்கள் தங்களை பாமர மக்கள் அப்படிச் சொல்ல முடியாமல் நடந்து கொண்டு வந்திருக்கிறார்கள்.

"அரசியல் திட்டம்"

பார்ப்பனரல்லாத கட்சியின் உள்ள அரசியல் திட்டம் சர்க்காரை ஆதரிப்பதும், தலைவர்கள் உத்தியோகம் பெறுவதும், இளைஞர்களுக்கு வாங்கித்தருவதும் என்று மாத்திரம் இருந்தால் போதுமா? இது குற்றமில்லை என்றாலும், இது மாத்திரம் இருந்ததாலேயே அது பயன்படாமல் போனதோடு கட்சி வீழ்ச்சிக்கும் இது உதவி செய்யும் காரணமாய் இருந்து விட்டது.

20 ஆண்டு உயர்ந்த பதவிகள் பெற்று ஆட்சி நடத்தி அநேக பார்ப்பனரல்லாத இளைஞர்களுக்கு உத்தியோகம் கொடுத்தும் ஏன் வீழ்ச்சி பெற்றது. பதவி பெற்றவர்களும், உத்தியோகம் பெற்ற இளைஞர்

கட்சித் தலைவர்கள், சீட்டுக் கட்டு வீசி எறிந்ததால் அவை திக்குக்கு ஒன்றாய்க் காற்றில் பறந்து ஓடி விழுவதுபோல் கலைந்து மறைந்து விட்டதற்குக் காரணம் என்ன? பார்ப்பனர் அல்லாதார் ஓட்டுகள்தானே அதிகமாயிருந்தது? அவர்களிடம் இக்கட்சிக்கு ஏன் செல்வாக்கில்லை? என்பதை யோசியுங்கள்.





இதற்கு முக்கிய காரணங்கள் இரண்டு ஆகும்.

ஒன்று, பார்ப்பனர்களுக்கும், இக்கட்சி யாருக்காக ஏற்பட்டதோ அந்த பார்ப்பனரல்லாத மக்களுக்கும் எதில் எதில் என்ன என்ன வித்தியாசம் என்பதை இதன் தலைவர்கள் மக்களுக்கு எடுத்துச் சொல்லவில்லை. இதன் பேரால் பட்டம் பதவி உத்தியோகம் பெற்று பயனடைந்தவர்களும் நடந்து காட்டவில்லை. அவர்கள் தாங்களாவது உணர்ந்து கொள்ளவுமில்லை.

மற்றும் பிராமணியத்தை வெறுக்கிறோம் என்று சொன்னார்களே ஒழிய, அப்படிச் சொன்ன தலைவர்கள் பிராமணியத்தை தங்கள் வாழ்வில் வெறுக்கவில்லை. அவ்வளவோடு மாத்திரம் இல்லாமல் பிராமணிய அறிகுறிகளாகிய நாமம் முதலிய குறிகளை அணிந்து கொண்டு பிராமணர்களைப் போலவே நடித்து தங்களை (செகண்டு கிளாஸ்) 2ஆவது வகுப்புப் பிராமணர்கள் என்று தெரியும்படி நடை உடை பாவணைகளில் காட்டிப் பெருமையடைந்தும் வந்தார்கள். பார்ப்பனர்கள்மீது ஜஸ்டிஸ்கட்சி பார்ப்பனரல்லாத பிரமுர்களுக்கு இருந்து வந்த கோபமெல்லாம் பார்ப்பனர்கள் ஏன் நம்மை முதல் வகுப்பு (பஸ்ட் கிளாஸ்) பிராமணர்களாக ஒப்புக் கொள்ளவில்லை என்பதைத் தவிர பார்ப்பனியம் ஒழிக்கப்பட வேண்டுமே என்கின்ற கவலையே இல்லாமல் போனது பரிதாபகரமான காரியமாகும்.

ஒரு கட்சி இருந்தால் அக்கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் அக்கட்சிக்கு எதிரிகளாய், அக்கட்சி பார்ப்பனரல்லாதவர்களாய் இருப்பவர்களுக்கு நன்றாய் பேதம் தெரியும்படியாய் கொள்கைகள், காரியங்கள் தொண்டர்களாய் இருக்க வேண்டும்.

எதற்காக மற்றக் கட்சியை அல்லது நம் கட்சி அல்லாத மக்களை எதிர்க்கிறோம் என்பது நம் பாமர மக்களுக்கும் ஓட்டர்களுக்கும் தெரிய வேண்டாமா? இதில் பார்ப்பனரல்லாதார் கட்சித் தலைவர்களுக்கு சிறிதும் கவலை இல்லாததாலும் தாங்களும் பார்ப்பனர்கள் போலவே தங்கள் வாழ்வில் நடந்து தங்கள் வாழ்க்கையில் பார்ப்பனியத்துக்கு மரியாதையும், பெருமையும் கொடுத்து வந்ததாலும் பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு வேர் பூமியில் ஆழம்பட இறங்காமல் போனதோடு சிறியதொரு காற்றில் அது பெரியதொரு வீழ்ச்சியையும் அடைய நேரிட்டு விட்டது.

கட்சி வீழ்ச்சிக்கும் பாமர மக்கள் அவமதிப்புக்கும் இரண்டாவது காரணமென்னவென்றால், அதன் குறுகிய அரசியல் நோக்கமேயாகும்,



என்னவெனில், கட்சியின் எதிரிகள் இக்கட்சியாரை "உத்தியோக வேட்டைக்காரர்கள் கட்சி" என்று சொல்லி வந்ததை அறிந்தும் அவர்களுக்கு தக்க பதில் சொல்லும்படியாக நடந்துவரவில்லை. இக்கட்சியாரைவிட இக்கட்சியின் எதிரிகள் அதிகமான உத்தியோக வேட்டைக்காரர்களாக இருந்தும், அவர்கள் தங்களை பாமர மக்கள் அப்படிச் சொல்ல முடியாமல் நடந்து கொண்டு வந்திருக்கிறார்கள்.

பார்ப்பனரல்லாத கட்சியில் உள்ள அரசியல் திட்டம் சர்க்காரை ஆதரிப்பதும்; தலைவர்கள் உத்தியோகம் பெறுவதும், இளைஞர்களுக்கு வாங்கித் தருவதும் என்று மாத்திரம் போதுமா? இது குற்றமில்லை என்றாலும் இது மாத்திரம் இருந்ததாலேயே அது பயன்படாமல் போனதோடு கட்சி வீழ்ச்சிக்கும் இது உதவி செய்யும் காரணமாய் இருந்துவிட்டது.

20 ஆண்டு உயர்ந்த பதவிகள் பெற்று ஆட்சி நடத்தி அநேக பார்ப்பனரல்லாத இளைஞர்களுக்கு உத்தியோகம் கொடுத்தும் ஏன் வீழ்ச்சி பெற்றது. பதவி பெற்றவர்களும், உத்தியோகம் பெற்ற இளைஞர்களும் கட்சியின் நன்மதிப்புக்கு யாதொரு நன்மையும் செய்யவில்லை. "கட்சியினால் நாம் முன்னுக்கு வந்தோம், நம் பிள்ளை குட்டி அண்ணன் தம்பி பந்து குடும்பத்தாருக்கு உதவி உத்தியோகம் அளித்தோம்" என்ற விஸ்வாசமோ, நன்றி அறிதலோ, நினைவோகூட இல்லாமல் இருந்துவிட்டார்கள். பட்டம் பதவியில் உத்தியோகத்தில் வந்தவர்களும் தங்களையும் தங்களைச் சுற்றியும் பார்த்துக் கொண்டார்களே தவிர, பாமர மக்களை, கிராம மக்களைக் கவனித்து அவர்கள் விவகாரங்களிலும் லேவாதேவிக்காரர்களிடமும், முதலாளிகளிடமும் சிக்கி அல்லல்படுவதை சிறிதாவது கவனித்தவர்கள் அல்ல. இவர்களுடைய இப்படிப்பட்ட காரியங்களை எதிரிகள் பாமர மக்களுக்கு எடுத்துச் சொல்லி அவர்களை தங்கள் வசமாக்கிக் கொண்டார்கள்.

நிருவாகம் நம் கையில் இருக்க வேண்டியது அவசியமாகும். நிருவாகம் இருந்தால் எப்படிப்பட்ட சட்டத்தையும் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் அது எப்படிப்பட்டவர்கள் கைக்கு வர வேண்டும் தெரியுமா? வெறும் பிறவியில் பார்ப்பனரல்லாதார் என்று சொல்லிக் கொண்டு தனது நலத்துக்கு அதை ஏணியாய் வைத்துக் கொண்டு பார்ப்பனர்போல் நாமம் போட்டு நடித்துக் கொண்டிருப்பவன் கைக்குப் போனால் பயனில்லை. பதவிக்குப் போனவர்கள், உத்தியோகத்தில் இருப்பவர்கள் "பார்ப்பனரல்லாதார் நலத்திற்காக என்று சொல்லி

இதைப் பெற்றோம். பார்ப்பனரல்லாதார் என்ற முறையில் இதைப் பெற்றோம்; ஆதலால் இப்பதவியை இவ்வுத்தியோகத்தை அதற்குப் பயன்படுத்த வேண்டியது மனிதத் தன்மையாகும் என்றும், நமக்கும் பார்ப்பனருக்கும் இன்ன பேதம் இருக்கிறதை அதற்கு இன்னபடி நடக்க வேண்டும் என்றும் நன்றியறிதலும் நாணயமும் அறிவும் கடமையும் கொண்டவர்கள் பதவியில் உத்தியோகத்தில் இருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்கள் பார்ப்பனர்களில் இருக்கிறார்கள். அதனால் அவர்கள் பதவிகளை இழக்காமல் இருக்கிறார்கள். பார்ப்பனரல்லாதார்களில் அதை மறந்து விடுபவர்கள்தான் அதிகமாக பதவி உத்தியோகங்களில் இருக்கிறார்கள்; அவர்களாலேயேதான் இக்கட்சி பெரிதும் பாதிக்கப்பட்டு விட்டது. உத்தியோக வேட்டைக் கட்சி என்பதை அவர்கள் மெய்ப்பித்தும் விட்டார்கள்.

கட்சி என்றால் கட்சிக்கு ஒரு நல்ல தலைவரும் நல்ல திட்டங்களைக் கொண்ட அமைப்பும் வேண்டும். கட்சிக்கு பொது மேடைகள் வேண்டும்.

தலைவரைக் குறைகூறுவது நல்ல காரியமல்ல; அது கூடாது.

காங்கிரசை பாருங்கள், அதன் தலைவர் காந்தியார்

1. அவருக்கு முன் யோசனை கிடையாது.
2. பகுத்தறிவு போதாது.
3. விஷய அனுபவம் இல்லாதவர்.
4. அவரது வாழ்வு முழுவதும் தோல்வியிலேயே ஆழ்ந்திருப்பவர்.
5. சிறிதும் யோசியாமல் கரணம் அடிப்பவர்.

இப்படிப்பட்ட ஒருவரை வேறு எந்த நாட்டிலாவது தலைவராகக் கொள்வார்களா? குறை கூறாமல் இருப்பார்களா?

பாகிஸ்தானை ஒரு பாவச் செயல் என்றார். அந்த பாவச் செயல் ஒரு பூதமாக வந்து மிரட்டினதும் இப்போது நடுநடுங்கி அதை நீயே கதி என்று இறுகத் தழுவிப் பிடித்துக் கொண்டார். இப்படியெல்லாம் இருந்தும் காங்கிரசில் யாராவது காந்தியாரைக் குற்றம் சொல்லுகிறார்களா? அவரோடு மாறுபட்ட காங்கிரசாராவது குற்றம் பேசித் திரிகிறார்களா? இன்னமும் காந்தியார் காங்கிரசுக்கு சர்வாதிகாரத் தலைவராகக் கருதப்பட்டு வருகிறார். அவர்மீது எவரும் குற்றப் பத்திரிகை



படிப்பதில்லை, அவரை மாற்ற யாரும் நினைப்பதில்லை. ஜனாப் ஜின்னாவோ லீகில் ஒரு சர்வாதிகாரியாய் இருக்கிறார். லீக்கை அவர் தன் இஷ்டப்படி ஆட்டி வருகிறார். ஆனால், முஸ்லிம்களுக்கு அவரிடம் நம்பிக்கை, நன்றி அறிவு இருக்கிறது. காந்தியாரைக் குற்றம் சொல்லுவது காங்கிரசைக் குற்றம் சொல்லுவதாகும். காங்கிரசை ஒழிப்பதாகும் என்கின்ற கொள்கை கொண்டு இருக்கிறார்கள் காங்கிரசுக்காரர்கள்.

ஆதலாலேயே ஜனநாயகத்துக்கு எதிராக ஜனநாயகத்துக்குப் பொருந்தாத காரியங்கள் எதை காந்தியார் சர்வாதிகாரமாய்ப் பேசினாலும் செய்தாலும்  காங்கிரசார் வாய்மூடி பணிந்து ஏற்று வருகிறார்கள்.

ஆகவே, பார்ப்பனரல்லாதாருக்கு நான் சொல்லுவது என்னவென்றால் தலைவர், ஒற்றுமை, தலைவரிடம் மரியாதை ஆகியவைகளில் மற்றக் கட்சிகளைப் பார்த்துப் படித்துக் கொள்ளுங்கள். காலங்கடவா முன்னர் கற்றுக் கொள்ளுங்கள்.

ஆதலால், இன்றைய உங்கள் தலைவரைக் குறைகூறுவதோ மாற்றுவதோ சிறிதும் புத்திசாலித்தனமான காரியமாகாது. காங்கிரஸ்காரர்களுக்கு தலைவர் விஷயத்தில் உள்ள புத்தி உங்களுக்கு இருக்க வேண்டும். அப்பொழுதுதான் மதிக்கப்படுவீர்கள்” என்றும்,

சேலம் மாநாட்டுத் தீர்மானங்கள் மிக அவசியமானது என்றும், தலைவரோடு ஒத்துழைத்து தீர்மானங்களை மதித்து நடந்து கொள்ளுங்கள் என்றும் வலியுறுத்துகிற மாதிரியில் பேசினார்.

விருந்து அளித்தவர்கள் சார்பில் தோழர் பாலசுப்ரமணியம் என்பவர் பேசுகையில், டாக்டர் அம்பேத்கர் அறிவுரைக்கு நன்றி செலுத்துவதாகவும், தலைவரிடத்தில் முழு நம்பிக்கை வைத்து மறுமொழி கூறாமல் பின்பற்றுவதுதான் எங்களுடையவும் எங்கள் கட்சியுடையவும் சம்பிரதாயம் என்றும் ஜனநாயகத்தை வலியுறுத்துகிறோமே ஒழிய வேறு பிளவு இல்லை என்றும் கூறியவருக்கு நன்றி செலுத்தினார்.

**- ‘குடிஅரசு’, தலையங்கம், 30.9.1944**

■



Regd. No. M. 4593. KUDI ARASU 12 பக்கங்கள்
குடி அரசு
Estd. 1924.
தனிப்பிரதி விலை ரூ. 0-1-6 சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0
மாலை 19 } ஈரோடு 5-1-1946 மார்கழி 22உ { மலர் 13


# 21

# அம்பேத்கர் அழைப்பு

காங்கிரசினுடைவும், பிரிட்டிஷாருடையவும் கூட்டு ஒப்பந்தத்தை எதிர்த்து டாக்டர் அம்பேத்கர் ஒரு கிளர்ச்சி துவக்கி இருக்கிறார். இதில் இதுவரை பம்பாய் மாகாணத்தில் மாத்திரம் 5000 பேர்களுக்கு மேல் சிறை சென்று இருக்கிறார்கள்.

எல்லா மாகாணத்திலும் துவக்கப்படவேண்டும் என்று டாக்டர் விரும்புவதோடு ஏழைப் பாட்டாளி மக்களின் பற்றும் அனுதாபமும் கொண்ட யாவரும் இந்தக் கிளர்ச்சியில் சேர வேண்டுமென்று அழைக்கிறார். இந்த மாகாண ஷெட்யூல் வகுப்புத் தலைவர்கள் என்பவர்கள் நடத்தை எப்படி இருந்தாலும் பற்றுள்ள பொதுமக்கள் யாவரும் கிளர்ச்சியை ஆதரிக்க வேண்டும் என்பதாக விரும்புகிறோம்.



குடி அரசு

அம்பேத்கார் அழைப்பு

காங்கரசினுடைவும், பிரிட்டிஷாருடையவும் கூட்டு ஒப்பந்தத்தை எதிர்த்து டாக்டர் அம்பேத்கார் ஒரு கிளர்ச்சி துவக்கி இருக்கிறார். இதில் இதுவரை பம்பாய் மாகாணத்தில் மாத்திரம் 500 பேர்களுக்குமேல் சிறைசென்று இருக்கிறார்கள்.

எல்லா மாகாணத்திலும் துவக்கப் படவேண்டும் என்று டாக்டர் விரும்புவதோடு ஏழைப் பாட்டாளிமக்களின் நலன்களில் பற்றும் அனுதாபமும் கொண்ட யாவரும் இந்தக் கிளர்ச்சியில் சேரவேண்டுமென்று அழைக்கிறார். இந்த மாகாண ஷெட்யூல் வகுப்புத் தலைவர்கள் என்பவர்கள் நடத்தை எப்படி இருந்தாலும் பற்றுள்ள பொதுமக்கள் யாவரும் கிளர்ச்சியை ஆதரிக்க வேண்டும் என்பதாக விரும்புகிறோம்.

– ‘குடிஅரசு’, 27.7.1946

■



Regd. No. 4739 விலை அணா 1

திராவிடநாடு திராவிடருக்கே!

# விடுதலை

(திராவிடர் தமிழ்த் தினசரி)

மலர் 9 சென்னை (1—1—'48) வியாழக்கிழமை இதழ் 180

வாலஸ் கட்சி முழுமுர...

ஜூன் மாதத்... மாபெரும் ம... வாஷிங்டன்... தலைவர் தேர்தல் ... கத்தைத் தீவிரமாக ... கான மாபெரும் அரசிய... மோன்றை உருவாக்கு... யில் தோழர் வாலஸின் ... கள் முனைந்து நிற்கின்... பார்க் கலிபோர்னியா மு...

## 22

# டாக்டர் அம்பேத்கர் கலப்பு மணம்

## பார்ப்பனப் பெண்ணை மணந்து கொண்டார்

பம்பாயிலுள்ள டாக்டர் லட்சுமி என்ற பார்ப்பனப் பெண்ணை இந்திய சட்ட மந்திரி டாக்டர் அம்பேத்கர் வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொள்ள முடிவு செய்துள்ளார்.

இச்செய்தியை, வாழ்க்கையொப்பந்தம் செய்து கொள்ளும் ஒப்பந்தங்களைப் பதிவு செய்யும் ரிஷிஸ்திராருக்கு தோழர் அம்பேத்கர் தெரிவித்துள்ளார். இருவருக்கும் ஏப்ரல் 15ஆம் தேதி அன்று புதுடில்லியில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும் ஏப்ரல் 14ஆம் தேதி அம்பேத்கரின் பிறந்த நாளாகும்.

டாக்டர் லட்சுமி பம்பாயிலிருக்கும் கபீரின் மகள், இவர் பார்ப்பனிய வகுப்பைச் சேர்ந்தவர். டாக்டர் லட்சுமி பம்பாயில் சொந்த முறையில் நடத்தப்பெறும் நர்சிங் ஹோமைச் சேர்ந்தவர். சமீபத்தில் டாக்டர் அம்பேத்கர் இந்த நர்சிங் ஹோமில் சிகிச்சை பெற்று வந்தார் என்பதைக் குறிப்பிட விரும்புகிறோம். அம்பேத்கருக்கு வயது 56 ஆகிறது. டாக்டர் லட்சுமிக்கு வயது 40 டாக்டர் அம்பபேத்கர் மனைவி இறந்து 12 ஆண்டுகள் ஆகின்றன.

– 'விடுதலை', 10.04.1948



டாக்டர் அம்பேத்கார் கலப்புமணம்

பார்ப்பனப்பெண்ணை மணந்து கொண்டார்

புதுடெல்லி, ஏப். 9—

பம்பாயிலுள்ள டாக்டர் லட்சுமி என்ற பார்ப்பனப்பெண்ணை இந்திய சட்ட மந்திரி டாக்டர் அம்பேத்கார் வாழ்க்கை யொப்பந்தம் செய்து கொள்ள முடிவு செய்துள்ளார்.

இச்செய்தியை, வாழ்க்கை யொப்பந்தம் செய்துகொள்ளும் ஒப்பந்தங்களைப் பதிவு செய்யும் ரிஜிஸ்திராருக்கு தோழர் அம்பேத்கார் தெரிவித்துள்ளார். இருவருக்கும் ஏப்ரல் 15-ந்தேதி யன்று புதுடெல்லியில் வாழ்க்கை யொப்பந்தம் நடைபெறும். ஏப்ரல் 14-ந்தேதி அம்பேத்காரின் பிறந்த நாளாகும்.

டாக்டர் லட்சுமி பம்பாயிலிருக்கும் கபீரின் மகள். இவர் பார்ப்பனீய [illegible]. டாக்டர் லட்சுமி பம்பாயில் சொந்தமுறையில் நடத்தப்பெறும் நர்சிங் ஹோமைச் சேர்ந்தவர். சமீபத்தில் டாக்டர் அம்பேத்கார் இந்த நர்சிங்ஹோமில் சிகிச்சை பெற்றுவந்தார் என்பதைக் குறிப்பிட விரும்புகிறோம். அம்பேத்காருக்கு வயது 56 ஆகிறது. டாக்டர் லட்சுமிக்கு வயது 40 டாக்டர் அம்பேத்கார் மனைவி இறந்து 12 ஆண்டுகள் ஆகின்றன.

கல்கத்தா டல்சலைக்கழகத்தில்

அணுசக்தி ஆராய்ச்சி

■




# 23

# டாக்டர் அம்பேத்கர் மாணவர் இல்லத்தின் 2ஆம் ஆண்டு விழா

திருச்சியில் 17.3.1947 மாலை 5:00 மணிக்குப் பெரியாரவர்களின் சீரிய தலைமையில் **டாக்டர் அம்பேத்கர் மாணவர் இல்லத்தின்*** **2ஆம் ஆண்டு விழா திருச்சி** முனிசிபல் கொட்டகையில் நடைபெற்றது. விழாவுக்குப் பெருந்திரளான மக்கள் வந்திருந்தனர். இல்லத்தின் ஸ்தாபகர் தோழர் வ.வீராசாமி பெரியாரவர்கட்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்து மாலையிட்டார். மான்பிடி மங்கல ஷெட்யூல்டு வகுப்பு இளைஞர் கழகத்தார் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்தனர். பல ஷெட்யூல்டு வகுப்புக் கழகங்கள் சார்பில் பெரியார் அவர்கட்கு மாலையிட்டனர்.

பெரிய ஆரவாரத்துக்கிடையே பெரியாரவர்கள் எழுந்து, இந்நாட்டிலுள்ள தீண்டாமை முதலிய கொடுமைகளுக்குக் காரணம் ஆரியர்களால் ஏற்படுத்தப்பட்ட இந்து மதமும், ஜாதி வெறி பிடித்த இந்து சமூகமும்தான் என்றும், தீண்டாமை, ஜாதி மத வித்தியாசங்கள் முதலிய இழிவுகள் நீங்க வேண்டுமானால் இந்து மதத்தை அறவே வெறுத்து ஷெட்யூல்டு வகுப்பினர் வெளியேற வேண்டுமென்றும், இதுதான் தன் நீண்ட நாள் அனுபவத்தில் கண்ட மருந்து என்றும் கூறினார்.

---

* திருச்சி பெரியார் மாளிகையில் ஒரு பகுதியை வாடகை வாங்காமல் இலவசமாக டாக்டர் அம்பேத்கர் ஷெட்யூல்டு மாணவர் விடுதி நடத்த தோழர் வ.வீராசாமிக்கு அளித்தார் பெரியார். அதில் படித்து வந்தவர்கள் பின்னாளில் உயர்நீதிமன்ற நீதிபதியாக போலீஸ் அய்.ஜி., அய்.பி.எஸ்., அய்.ஏ.எஸ் ஆகியுள்ளார்கள்.



டாக்டர் அம்பெத்கார்
மாணவர் இல்லத்தின்
2-வது ஆண்டுவிழா

திருச்சியில் 17-3-47 மாலை 5மணிக்குப் பெரியாரவர்களின் சீரிய தலைமையில் டாக்டர் அம்பேத்கார் மாணவர் இல்லத்தின் 2வது ஆண்டுவிழா திருச்சி முனிசிபல் கொட்டகையில் நடைபெற்றது. விழாவுக்குப் பெருந் திரளான மக்கள் வந்திருந்தனர். இல்லத்தின்

மேலும் பேசுகையில், காங்கிரஸ்காரர்கள் ஆங்காங்கு சில கோயில்களைத் திறந்து விடுவதைக் கண்டு ஆதிதிராவிடர்கள் மயங்கிவிடக் கூடாது என்றும், இன்னும் பல சலுகைகள் காட்டினாலும் இவையாவும் தூண்டிலில் கோர்க்கும் பொருள்கள் தானே தவிர, வேறில்லை என்றும், இவையாவும் முஸ்லிம்களுக்கும், திராவிடர்களுக்கும் எதிராக ஷெட்யூல்டு வகுப்பினரை உபயோகப்படுத்தச் செய்யும் சூழ்ச்சிகள் என்றும், ஆகையால் மிக விழிப்புடன் இருக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

பிறகு திராவிடர் கழகத் தலைவர் தி.பொ.வேதாச்சலம் அவர்களும், பி.சிவபிச்சை அவர்களும் பேசினார்கள். நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

பெரியாரவர்கள் விடுதிக்கு ரூ.100 நன்கொடை அளித்தது குறிப்பிடத்தக்கது.

- 'குடிஅரசு' 5.4.1947

■


Regd. No. 4739 விலை அணா 1

திராவிடநாடு திராவிடருக்கே!

விடுதலை

(திராவிடர் தமிழ்த் தினசரி)

மலர் 9 சென்னை (1—1—'48) வியாழக்கிழமை இதழ் 180

# 24

# அம்பேத்கரைக் கொல்ல ஆரியப் பார்ப்பனர் முயற்சி

## உத்தமர் காந்தி உயிரைக் குடித்த ஆரியத்தின் அடுத்த இலக்கு அம்பேத்கரா?

- **பெண்ணுருவில் வந்து பேடிச்செயல் புரிந்தது பார்ப்பனிய மாயப் பிசாசு**
- **அடுத்துக்கெடுக்க முயன்ற ஆரியப் பெண் இலக்குமி கைது**

இந்திய சர்க்கார் சட்ட மந்திரியும் தாழ்த்தப்பட்டோர் தலைவருமாகிய டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் அவர்களைக் கொல்ல வஞ்சக முயற்சியொன்று நடைபெற்றதாகவும் டாக்டரவர்கள் சிறிது விழிப்புடன் நடந்து கொண்டதால் இப்பேராபத்தினின்றும் தப்பினார் என்றும் இங்கு செய்தியறிந்த தாழ்த்தப்பட்டோர் சம்மேளன வட்டாரங்களில் பேச்சு அடிபடுவதாக வெகு உறுதியான செய்தி ஒன்று நமக்குக் கிடைத்துள்ளது.

டாக்டர் அம்பேத்கர் அவர்கள் அண்மையில் காதர் கிழத்ததியாகத் திருமணம் செய்து கொண்ட இலக்குமி என்ற பார்ப்பன மாதே இக்கொலை முயற்சிக்குக் கருவியாக இருந்தாரென்றும், அம்மாது அம்பேத்கருக்கு அளித்த பானத்தில் விஷமிட்டுக் கொடுத்தார் என்றும், பானத்தின் வாசனை ஒரு மாதிரியாக இருப்பதைக் கண்டுணர்ந்த அம்பேத்கர், டாக்டரைக் கொண்டு அதைச் சோதித்தார் என்றும், சோதித்ததில் பானத்தில் விஷம் கலந்திருந்தது தெரிய வந்தது என்றும், இவ்விதமாக டாக்டர் அம்பேத்கர் உயிர் தப்பினார் என்றும் இங்கு பேச்சு உலவுகிறது.



# அம்பேத்காரைக் கொல்ல ஆரியப் பார்ப்பனர்

## காதற்கிழத்தி பார்ப்பன இலக்குமியே விஷமிட்டு மாய்க்கத் துணிந்தார்!

பெண்ணுருவில் வந்து பேடிச்செயல் புரிந்தது பார்ப்பனீய மாயப் பிசாசு!

உத்தமர் காந்தி உயிரைக் குடித்த ஆரியத்தின் அடுத்த இலக்கு அம்பேத்காரா?

அடுத்துக்கெடுக்க முயன்ற ஆரியப் பெண் இலக்குமி கைது

(நமது நிருபர் விமானத் தபால்)

பம்பாய், மே. 15—

இந்திய சர்க்கார் சட்ட மந்திரியும், தாழ்த்தப்பட்டோர் தலைவருமாகிய டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் அவர்களைக் கொல்ல வஞ்சக முயற்சியொன்று நடைபெற்றதாகவும் டாக்டரவர்கள் சிறந்த விழிப்புடன் நடந்து கொண்டதால இப்பேராபத்தினின்றும் தப்பினாரென்றும் இங்கு செய்தியறிந்த தாழ்த்தப்பட்டோர் சம்மேளன வட்டாரங்களில் பேச்சு அடிபடுவதாக, வெகு உறுதியான செய்தி யொன்று நமக்குக் கிடைத்துள்ளது,

டாக்டர் அம்பேத்கார் அவர்கள் அண்மையில் காதற்கிழத்தியாகத் திருமணஞ் செய்துகொண்ட இலக்குமி யென்ற பார்ப்பன மாதே இக்கொலை முயற்சிக்குக் கருவியாக இருந்தாரென்றும், அம்மாது அம்பேத்காருக்கு அளித்த பானத்தில் விஷமிட்டுக் கொடுத்தாரென்றும், பானத்தின் வாசனை ஒரு மாதிரியாக இருப்பதைக் கண்டுணர்ந்த அம்பேத்கார், டாக்டரைக் கொண்டு அதைச்சோதித்தாரென்றும், சோதித்ததில் பானத்தில் விஷங் கலந்திருந்தது தெரிய வந்ததென்றும், இவ்விதமாக டாக்டர் அம்பேத்கார் உயிர் தப்பினாரென்றும் இங்கு பேச்சு உலவுகிறது.

இது சம்பந்தமாக அப்பார்ப்பன மாது இலக்குமியம்மாள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

தோழர் பி. ஆர். அம்பேத்கார் அவர்களைக் கொலை செய்ய, இலக்குமி அம்மையார் (அதாவது பார்ப்பனத் துணைவி) பானத்தில் விஷமிட்டுக் கொடுத்ததாகவும், அந்தப் பானத்தின் வாசனை ஒரு மாதிரியாக இருக்கவே அம்பேத்கார் சந்தேகப்பட்டு, டாக்டரிடம் அந்தப் பானத்தைச் சோதிக்கும்படிக் கேட்க நஞ்சு கலந்திருப்பதாய் டாக்டர் கூறியதாகவும் உடனே இலக்குமி அம்மையார் கைது செய்யப்பட்டுள்ளதாயும் இங்கு ஷெ. வ. பெ. வட்டாரங்களில் வதந்தி ஏற்பட்டுள்ளது. இது சம்பந்தமாக கோட்டை சித்தார்த்தா கல்லூரியிலும் விஷயமறிந்தவர்கள் கூறுகின்றார்கள். தாதர், சேரி பகுதிகளில் பார்ப்பனர்களுக்கும் புழங்குடி மக்கட்கும் இடையில் சிறு கைகலப்பு ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

### உடல் முழுதும் க்ஷவரம் செய்ய

மருத்துவ குலத்தினர் மறுப்பு

கும்பகோணம், மே. 17—

முக க்ஷவரம் கிராப் வெட்டுதல், மொட்டையடித்தல் இவைகளைத் தவிர வேறு எவ்வித க்ஷவரத்தையும் செய்ய முடியாதென்று மருத்துவ குல சங்கத்தினர் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றனர். உடல் முழுதும் க்ஷவரம் செய்துகொள்ளும் பழக்கமுடையவர்கள் இனல் இடையூறுகின்றார்கள். கிராமங்களில் சேரிப் க்ஷவரம் செய்துகொண்டு வரலாமென்று சென்றவர்கள் அங்கும் இந்த நிலைமை இருக்கக் கண்டு ஏமாந்தனர். (குமாரப்)

### மாணவர்களுக்கு இலவச உணவு

திருப்பனந்தாள் பண்டார சன்னதி தாராளம்

கும்பகோணம், மே 17—

சிதம்பரத்தில் ஹைஸ்கூல் வகுப்புகளில் படிக்கும் மாணவர்களின் இலவச உணவுக்காக திருப்பனந்தாள் மடத்தின் ஆதீனம் ரூ 35,000 என்டோமெண்ட் ஏற்படுத்தி யிருக்கிறது.

### முஸௌரி ஆர். எஸ். எஸ். கள் கைது!

முஸௌரி, மே. 17—

பொது அமைதிச்சட்டத்தின் கீழ் ஜில்லா முனிசிபல் சிப்பந்திகள் சிலருள்பட 28 ஆர்.ஆர்.எஸ். கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (அ. பி.)

### அமெரிக்காவின் அணுக்குண்டு பரீட்சை

வாஷிங்டன், மே. 16—

சமீபத்தில் நடத்திய அணுக்குண்டு பரீட்சைகள் வெற்றிகரமாக முடிந்தன என்று அமெரிக்க சர்க்கார் இன்று கூறியது. பிரஸ்தாப பரீட்சையில் 3 அணுக் குண்டுகள் உபயோகிக்கப் பட்டனவாம்.

லேக்சக்ஸஸ், மே 17—

பாலஸ்தீனத்தில் நடைபெறும் போர் சம்பந்தமான [illegible] விளைவிப்பதாகும் [illegible] யூதரும் அராபியரும் [illegible] செய்ய வேண்டுமெனறும் குறிப்பிடு. அமெரிக்கத் தீர்மானம் [illegible] சபையில் [illegible]

### சீனாவில் கம்யூனிஸ்ட் கை ஓங்குகிறது

லண்டன், மே. 17—

சீனாவில் தாங்கள் பிடித்த இடங்களில் எல்லாம் தங்கள் சர்க்கார் நிர்வாகத்தை சீனக் கம்யூனிஸ்டுகள் ஏற்படுத்தி வருகின்றனர். சீனாவின் பெரிய சுவருக்கருகிலுள்ள சீன்சோவை கம்யூனிஸ்டுகள் வளைத்துக் கொண்டிருக்கின்றனர். இந்த இடம் கம்யூனிஸ்டுகள் வசமானால் வடக்கு சீனாவிலிருந்து மத்ய சீனா வரையுள்ள 7 மாகாணங்கள் கம்யூனிஸ்ட் ஆதிக்கத்தின் கீழ் வந்துவிடும்.

Regd No. 4739

திராவிடநாடு திராவிடருக்[கே]

# விடுதலை

(திராவிடர் தமிழ்த் தி[னசரி])

மலர் 9] சென்னை (18-5-'48) செவ்வாய் ★ பெரியார்

## இஸ்ரேல் ராஜ்யத்துக்கு ரஷ்யா அங்கீகாரம்

### அராபியருக்கு பாகிஸ்தான் உதவியளிக்கும்

யூத ராஜ்யம் பற்றி பிரிட்டன் எந்த முடிவும் கூறவில்லை

பாலஸ்தீன யூதராஜ்யமான இஸ்ரேலை ரஷ்யா அங்கீகரித்துள்ளது.

பாலஸ்தீனத்துக்கு போர்த் தளவாடங்கள் அனுப்புவதைபற்றி யிருக்கும் தடையை நீக்கவேண்டுமென அமெரிக்க சட்டசபையில் சகல கட்சியினரும் வலியுறுத்தினர்.

இஸ்ரேல ராஜ்யத்தை இன்னும் பிரிட்டன் அங்கீகரிக்க வில்லை. தங்கள் நாட்டை அங்கீகரிக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் 58 நாடுகளுக்கும் இஸ்ரேல வேண்டிக் கொண்டுள்ளது.

பாலஸ்தீன அராபியருக்கு சகல வழிகளிலும் உதவவேண்டுமென பாகிஸ்தான் பார்லிமெண்டு முஸ்லிம் லீக் கட்சி இன்று முடிவு செய்திருப்பதோடு ஆவனசெய்ய ஒரு சப்கமிட்டியையும் நியமித்துள்ளது.

மாஸ்கோ, மே. 17—

யூதர்களின் "இஸ்ரேல்" ராஜ்யத்தை ரஷ்யா அதிகார பூர்வமாக ஒப்புக்கொண்டு அங்கீகரித்துள்ளது. யூத ராஜ்யத்தை அதிகார பூர்வமாக அங்கீகரித்தது முதல் முதலில் ரஷ்யாதான் என்று ப்ரேக்கிலிருந்து வந்த செய்தியொன்று கூறுகிறது.

### யு. எஸ். சட்டசபை அங்கீகாரம்

வாஷிங்டன், மே. 17

இஸ்ரேல் ராஜ்யத்தை அமெரிக்க தலைவர் ட்ரூமன் உடனடியாக அங்கீகரித்ததை இன்று குடியரசு கட்சியினரும் ஜனநாயக வாதிகளும் அமெரிக்க சட்டசபையில்கூடி அங்கீகரித்தனர். அந்த யூத ராஜ்யத்துக்கு போர்த் தளவாடங்கள் அனுப்ப இருக்கும் தடையை ரத்து செய்ய வேண்டுமெனவும் கூறியபா. பாலஸ்தீனத்துக்குள் எகிப்து படைகள் நுழைந்ததை குடியரசுக் கட்சிவாதியான ஒவென்ப்ரூஸ்டர் வெகுவாகக் கண்டித்துப் பேசியதோடு ஐக்கிய நாடுகள் சபையின் கட்டளையைமீறும் எகிப்தின்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறினார் டெல்-அவிவ் மீது விமானங் கொண்டு தாக்கியதையும் கண்டித்துப் பேசினார்.

### பிரிட்டிஷ் சர்க்கார் போக்கு

லண்டன், மே 17—

தற்போதுள்ளது போல பாலஸ்தீனத்தில் ராணுவநிலைமைபூரணமாக இருக்கும் வரையில் புது யூத ராஜ்யத்தை பிரிட்டன் அங்கீகரிக்காது என்று நமது அரசியல் நிருபர் அறிவிக்கிறார்.

யூத வெளிநாட்டு மந்திரி மோஷே ஷெர்டாக் தங்கள் யூத ராஜ்யத்தை அங்கீகரிக்குமாறு வேண்டிக்கொண்டு எந்தத் தகவலும் அனுப்பவில்லையென்று பிரிட்டிஷ் வெளிநாட்டு அதிகாரி யொருவர் குறிப்பிட்டார்.

புது ராஜ்யத்தில் எல்லை, தங்கள் ஒத்துழைக்கும் நடைமுறையிலுள்ள சர்வதேச நோக்கங்கள் ஆகியவைகளை யூதர் பிரகடனப்படுத்தியபின்னரே ஒரு புது கட்டைச் சட்டப்படி அங்கீகாரம் செய்யலாமென்றும் இந்த நடைமுறைகளை இன்னும் இஸ்ரேல பூர்த்திசெய்யவில்லையென்றும் அந்த பிரிட்டிஷ் அதிகாரி குறிப்பிட்டார்.

டெல் அவிவிலும், ஹைபாவிலும் ராஜ்ய ஏஜண்டுகளை பிரிட்டன் நியமிக்க உத்தேசித்துக் கொண்டுள்ளது என்ற செய்தி ஆதாரமற்றதென அவர் மறுத்தார்.

ஒரு சமாதான ஒப்பந்தத்தை மீண்டும் முயற்சி செய்ய பிரிட்டனின் ராஜ தந்திரிகள் எண்ணங் கொண்டிருப்பதாக ஊர்ஜிதமில்லாத செய்திகள் கூறுகின்றன.

டெல்அவிவ் நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கும் எகிப்து, டிரான்ஸ் ஜார்தான படைகளின் முன்னேற்றம் பற்றிய செய்திகளை அறிய பிரிட்டிஷ் அதிகார வட்டாரங்கள் ஆவலுடன்உள்ளன. பாலஸ்தீனத்துக்கு ஆயுதச்சப்ளை செய்வது பற்றி பிரிட்டிஷ் சர்க்[கார்] அமெரிக்காவுடன் எந்த விதமா[ன] யோசனையையும் செய்யவில்[லை] யென்றும் அவர் மறுத்தார்.

## யூதர்கள் மீது குண்டு வீசுவதை நிறுத்தவும்

அரபுகளுக்கு சீனா, கொலம்பியா கோரிக்கை

லண்டன், மே. 17—

பாதுகாப்புக்கவுன்சில் கூட்டம் நடக்கும், வரையிலாவது யூதர்கள் மீது குண்டு வீசுவதை அரபுகள் நிறுத்த வேண்டும் என்று அரபுகளை ஆதரிக்கும் நாடுகளான சீனாவும் கொலம்பியாவும் கேட்டுள்ளன என்று ரூடேர் விசேஷ நிருபர் அறிவிக்கிறார். அரபுகள் ஆக்ரமிப்பில் இறங்கினர் என்ற குற்றச்சாட்டுக்கால் அதை எதிர்த்து வோட்டுப் செய்ய சாதகமாக இருக்கும் என்பதற்காகவே இக்கோரிக்கை அனுப்பப்படும் என்று தெரிகிறது.

### எகிப்து போக்கு கண்டு யூதர் பீதி

எகிப்தியர் பாலஸ்தீன விஷயத்தில் இவ்வளவு சிரத்தை காட்டுவர் என்று யூதர்கள் நினைக்கவே இல்லை ஆகவே எகிப்து படையெடுப்பு யூதர்களிடையே பீதியைக்கிளப்பி விட்டிருக்கிறது.

### யூதர் கைக்குள் ட்ரூமன்

யூதர்கள் சொல்கிறபடி எல்லாம் [illegible]

"சமாதானத்துக்குப் பங்க[ம்]"

அமெரிக்காவின் எதிர்ப்புத்தல் [illegible]

லேக்சக்ஸஸ், மே. 17

பலஸ்தீனத்தில் தற்போதுள்[ள] நிலை சமாதானத்துக்குப் பங்க[ம்] விளைவிப்பதாகும் என்று இவ் அமெரிக்கா வெளியிட்டுள்ள [illegible] ஐக்கிய நாடுகள் சாசனத்[தை] மீறுவதாகுமென்றும் போரை [illegible] உடனடியாக எல்லா நாடுகளும் நிறு[த்த] விட வேண்டுமென்றும் அவ[ர்] [அறிக்]கையில் குறிப்பிட்டுள்ளது.

### 58 நாடுகளுக்கும் யூதர் வேண்டுகோள்

லேக்சக்ஸஸ், மே. 17

ஐக்கிய நாடுகள் சபையில் [illegible] னையும் உறுப்பினராக சேர்த்[துக்] கொள்ள வேண்டுமென இஸ்[ரேல்] நாடு விண்ணப்பித்துக் கொண்[டுள்]ளது.

இந்த விண்ணப்பத்தை ஐக்[கிய] நாடுகள் சமக்ஷம் செய்துகொ[ண்] டுள்ள இஸ்ரேல் நாட்டின் வெ[ளி] நாட்டு மந்திரியான மோஷே [ஷெர்]டாக ஐக்கிய நாடுகள் சபை[யில்] உறுப்பினராக யிருக்கும் 58 [நாடுகளுக்கும்] [illegible]

## ஜாபா[வில்] அராபியர் [illegible]

ஈராக், எகிப்[து] தாக்[குதல்]

டெல் அவிவ் இஸ்ரேல் [illegible] ஜாபா நகருக்கு 35 மைலுக்கு[ள்] [illegible]ளன. யூத மீது அராபியர் படை[கள்] [illegible]

பாலஸ்தீன அராபியர் [illegible] பெரிய நகரங்களில் ஒன்றான ஜ[ாபா] கடந்த வாரம் யூதர் வசமாகிய [illegible]

கடற்கரை பக்கமாக முன்[னேறி] வந்து கொண்டிருக்கும் எகிப்[து] படைகள் பஜ்டால் என்ற இடத்[தை] அடைந்துவிட்டன. இந்த இ[டம்] ஜாபாவுக்கு 35 மைலிலுள்ளது.

வடக்குப் பகுதியில் சிரி[ய] படைகள் வட கிழக்கிலிருந்து [illegible] கிழக்கிலிருந்து ஈராக் படைக[ள்] முன்னேறி வந்துகொண்டிருக்கி[ன்]றன.

இரு இடங்களில் விமான தாக்குதல்

செப்ரோ, மே. 19

எகிப்து விமானங்கள் [illegible]

### பாலஸ்தீன நிலையில் ஹைற[ா] [illegible]

ரஷ்யா வெப்படுகிறார்

ஹைதராபாத், மே. 17

பாலஸ்தீனத்திலுள்ள முஸ்[லிம்] களின் நிலைமையிலேயே ஹைதரா[பாத்] [illegible]

ட்ரூமன் ஆவருகிறார். யூதரா[ஜ்]யத்தை அங்கீகரிக்க விட்டனர்பிர[சி]டெண்ட் ஆசேர்தலுக்கு ஜனநாயக கட்சி அப்பட்சகாரக ட்ரூமன் நிறுத்தவது முடியாதகாரியம் என்[று] சொல்லப்படுகிறதாம். இப்பொழு[து] ஆயுத ஏற்றுமதி தடையை நீக்கி[ய] பால் பிரசிடெண்ட் பதவி கிடை[க்கு]மா என்று ட்ரூமன் கிரட்டப்படு[ம்] நிலையில் இருக்கிறார். —ரூடே[ர்]

இது சம்பந்தமாக மேற்படி பார்ப்பன மாது இலக்குமியம்மாள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

தோழர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களைக் கொலை செய்ய, இலக்குமி அம்மையார் (அதாவது பார்ப்பனத் துணைவி) பானத்தில் விஷமிட்டுக் கொடுத்ததாகவும், அந்தப் பானத்தின் வாசனை ஒரு மாதிரியாக இருக்கவே அம்பேத்கர் சந்தேகப்பட்டு, டாக்டரிடம் அந்தப் பானத்தைச் சோதிக்கும்படி கேட்டு நஞ்சு கலந்திருப்பதாய் டாக்டர் கூறியதாகவும், உடனே இலக்குமி அம்மையார் கைது செய்யப்பட்டுள்ளதாயும் இங்கு ஷெ.வ.பெ. வட்டாரங்களில் வதந்தி ஏற்பட்டுள்ளது. இது சம்பந்தமாக கோட்டை சித்தார்த்தா கல்லூரியிலும் விஷயமறிந்தவர்கள் கூறுகின்றார்கள். தாதர், சென் பகுதிகளில் பார்ப்பனர்களுக்கும் பழங்குடி மக்கட்கும் இடையில் சிறிது கைகலப்பு ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

**- 'விடுதலை', 18.05.1948**

■


இந்திய சட்டசபையில் டாக்டர் அம்பேத்காரர் விளாசல்!

இந்து சட்டத் திருத்த மசோதாவை முன்வைத்து 2 மணிநேரம் சொற்பொழிவு

'பெரும்பான்மைமக்கள் வழக்கத்தில் திருமண ரத்து முறை உண்டு'

'கலப்புமணம் செய்பவர்களுக்கு வசதி தரும் மசோதா'

ஜி. டி. நாயுடுக்கு சர்க்கார் அழைப்பு

திராவிடநாடு திராவிடருக்கே!

விடுதலை

(திராவிடர் தமிழ்த் தினசரி)

மலர் 10] சென்னை (25-2-'49) வெள்ளி ★ வெளியீடு (26-2-'49) சனி [இதழ் 265

# 25

# 90 சதவிகித 'சூத்திரர்' மீது 10 பேர் சட்டம் ஆட்சி புரிவதா?

## இந்திய சட்டசபையில் டாக்டர் அம்பேத்கர் விளாசல்!

- இந்து சட்டத் திருத்த மசோதாவை முன்வைத்து 2 மணிநேரம் சொற்பொழிவு
- பெரும்பான்மை மக்கள் வழக்கத்தில் திருமண ரத்து முறை உண்டு
- கலப்பு மணம் செய்பவர்களுக்கு வசதி தரும் மசோதா
- இந்துமத ரிப்பேர் தானிது: புரட்சியென்று மிரளாதீர்!

இந்திய சட்டசபையில் இந்து சட்டத் திருத்த மசோதாவை டாக்டர் அம்பேத்கர் பிரேரேபித்தார்.

கலப்பு மணம், சுவீகாரம் முதலிய திருத்தங்கள் பற்றி விளக்கிய டாக்டர் இந்து முறைகள், இந்து கலாச்சாரம், இந்து சமுதாயம் அப்படியே நீடிக்க வேண்டுமானால் எங்கெங்கு 'ரிப்பேர்' செய்ய வேண்டுமோ, அங்கங்கு 'ரிப்பேர்' செய்தல் அவசியம் எனக் கூறினார்.

இன்று இந்திய சட்டசபையில் இந்து சட்டத்திருத்த மசோதாவை கொணர்ந்து இந்திய சட்ட மந்திரி டாக்டர் அம்பேத்கர் இரண்டு மணி நேரம் பேசினார். அவர் பேசி முடித்ததும் மேற்படி மசோதாவுக்கு நாஜீத்தீருன் அஹமது மூன்று திருத்தங்கள் கொணர்ந்தார். அவையாவன: மசோதாவை ஒத்தி வைக்க வேண்டும். மசோதாவை பொதுக் (செலக்ட்) கமிட்டிக்கு விட வேண்டும் என்பதாகும்.

பின் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் கொண்டு வருவதாக இருந்த பன்னிரு திருத்தங்கள் கொணரப்படவில்லை. டாக்டர்



# 90 சதவிகித 'சூத்திரர்' மீது 10 பேர் சட்டம் ஆட்சி புரிவதா?

Regd No 4'3

விலை முக்கால் அணா
இலங்கைக்கு 10 சதம்

திராவிடநாடு திராவிடருக்கே!

# விடுதலை

(திராவிடர் தமிழ்த் தினசரி)

மலர் 10] சென்னை (25-2-'49) வெள்ளி ★ வெளியீடு (26-2-'49) சனி [இதழ் 265

## இந்திய சட்டசபையில் டாக்டர் அம்பேத்காரின் விளாசல்!

இந்து சட்டத் திருத்த மசோதாவை முன்வைத்து 2 மணிநேரம் சொற்பொழிவு

'பெரும்பான்மை மக்கள் வழக்கத்தில் திருமண ரத்து முறை உண்டு'

'கலப்புமணம் செய்பவர்களுக்கு வசதி தரும் மசோதா'

இந்துமத 'சிப்பேர்' தானிது: புரட்சியென்று மிரளாதீர்!

புதுடெல்லி, பிப். 24 — இந்திய சட்ட சபையில் இந்து சட்டத் திருத்த மசோதாவை டாக்டர் அம்பேத்கார் பிரேரேபித்தார்.

அம்பேத்கார் பேச்சு

திருமண முறைகள்பற்றி

திருமண ரத்தும் சூத்திரனும்!

சுசேத முயற்சி!

நடவடிக்கைகள் விபரம்

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

## இந்து அறநிலைப் பாதுகாப்பு மசோதா

## ஜி. டி. நாயுடுக்கு சர்க்கார் அழைப்பு

கைத்தொழில் போர்டில் உறுப்பினரானார்

## 'அமெரிக்கா-பிரிட்டனுக்கும் ஆசியத் தலைமைக்குப் ஆசைகொண்டுவிட்டது இந்தியா!

அடக்கு முறையைக் கண்டித்து கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை

## எகிப்து—இஸ்ரேல் நாட்டவரிடையே போர் நிறுத்த ஒப்பந்தம்

ஒன்பதுமாதக் கடும் போராட்டம் ஒருமுடிவுக்கு வந்தது

ரோட்ஸ், பிப். 24 —

## சையாமில் அவசரகாலச் சட்டம் பிரகடனம்

பர்மா, சீனக் கிளர்ச்சிகளின் எதிரொலி!

பாங்காக், பிப். 24—

சையாம்—இந்தியா உறவு

பேச்சு வார்த்தைகள் நடத்த முடிவு

## ஒன்று உறுதி!

★

பந்தயம் வேண்டுமானாலும் கட்டுவேன்!

மத்திய அரசாங்கப் பிடியில் இருந்து திராவிடநாடு தனி நாடாகப் பிரியாவிடில், சுதந்திரம் இல்லை,—சோறு இல்லை—, மானவாழ்வு இல்லை.

இது உறுதி! உறுதி!! உறுதி!!!
பந்தயம் வேண்டுமானாலும் கட்டுவேன்!

—பெரியார்.

பாகிஸ்தான் ஹைகமிஷனர் பதவி

ஐ. மா. சீதாராம் நியமனம் ஆவாரா?

நீங்கள் வெகு நாட்களாக எதிர்பார்த்த எமது புதிய சமூக நாடகம்

26—2—49 சனி முதல் 28—2—49 திங்கள் வரை மூன்றே தினங்கள் மட்டும் தினசரி இரவு 9-30 மணிக்கு

திருச்சி P. R. தேவர் ஹாலில்

நடிகவேள் M. R. ராதா நடிக்கும்

ரத்தக்கண்ணீர்

நாடகம் நடைபெறும்.
(திருவாரூர் K தங்கராஜ் எழுதியது)
டிக்கட் வழக்கம்போல்
காலை 10 மணி முதல் டிக்கட் சீசன் செய்யப்படும்.
—L. M. P. கண்டிராக்டர்.



அம்பேத்கர் பிரேரேபனை மீதும், திருத்தங்கள் மீதும் நாளையும் தொடர்ந்து நடைபெறும். பின் வோட்டெடுப்பு நடைபெறும்.

டாக்டர் அம்பேத்கர் பேசுகையில் திருமணங்களை பொறுத்த வரையில் இம்மசோதாவின் நோக்கம் பழமைக்கும் புதுமைக்கும் இடையே மத்தியஸ்தம் செய்து வைப்பது போன்றதாகும். தங்கள் 'தர்மம்' வழுவாது தங்கள் சொந்த வகுப்பிலேயே திருமணம் செய்து



கொள்ள வைதிக மனப்பான்மையருக்கும் இடம் உண்டு. அதே பொழுது பிற வகுப்பில் திருமணம் நாமே சீர்திருத்தக்காரர் தங்கள் கொள்கையையும் மனநிலையையும் பின்பற்றவும் மசோதாவில் இடம் உண்டு என்றார்.

திருமண ரத்து முறை பற்றி டாக்டர் அம்பேத்கர் கூறியது:

“இந்துக்களில் நூற்றுக்கு தொண்ணூறு பேராக கண் கூடாக இருக்கும் ‘சூத்திரர்கள்’ வழக்கத்தில் திருமண ரத்து செய்து கொள்வது பழக்கமேயாகும். எனவே, நான் உறுப்பினர்களைக் கேட்கப் போகும் கேள்வி நூற்றுக்குப் பத்து பேராக இருப்பவர்களுடைய சட்ட திட்டங்களையே நூற்றுக்கு 90 பேராக இருப்பவர்களுக்கு அமைக்கப் போகிறீர்களா? என்பதுதான்” (கைதட்டல்).

மேலும் அவர் திருமண ரத்து செய்து கொள்வதற்கு சாஸ்திரங்களில் கூட இடம் இருக்கிறது என்று தொடர்ந்து பேசியதாவது, “திருமண முறைகளில் நல்ல உரிமையைத் தருவதற்கு சாதகமாகவிருந்த சாஸ்திரங்கள் எல்லாம் துரதிர்ஷ்டவசமாக பழக்கம் என்பதற்கு ஆட்படும்படி ஆகிவிட்டது” என்றும் கூறினார்.

மேற்படி மசோதாவுக்கான ஆதரவை திரட்டுவதற்காக சட்டசபை வட்டாரங்களில் சில நாட்களாக முழுமூச்சாக இருந்துவரும் சுசேதா கிருபளானி பேசுகையில் இம்மசோதா இந்து சமுதாயத்துக்கே நன்மை பயப்பதாகும் என்று எடுத்துச் சொன்னார்.

கடந்த வாரம் போலவே மசோதாவுக்கு முன்னுரையாக டாக்டர் அம்பேத்கர் பேசுகையில் பலர் ஒழுங்கு பிரச்சினைகளை எழுப்பினர். அவைகளை எல்லாம் துணை சபைத் தலைவரான (டெபுடி ஸ்பீக்கர்) அனந்தசயனம் அய்யங்கார் அனுமதிக்கவில்லை. கபூர், சார்வேத், நாஜீருதின் ஆகியோரே ஒழுங்குப் பிரச்சினைகளைக் கிளப்பியவர்கள்.

மசோதாவை பிரேரேபித்து அம்பேத்கர் விளக்கமாகப் பேசினார். செய்தி ஆரம்பத்தில் அவர் பேசியதன் குறிப்புகள் தரப்பட்டுள்ளன. குழந்தைகள் இல்லாத விதவைகள், தத்துப் பிள்ளைகள், எடுத்தால் அப்பிள்ளைகளுக்குரிய உரிமை பற்றியும், மருமக்கத் தானம், கலிய சந்தான முறை ஆகியவை பற்றியும் பேசி விட்டு இந்துக்களில் உள்ள திருமண முறைகள் பற்றிக் கூறியதாவது:-

“திருமண முறை, திருமண ரத்து, ஆகியவை பற்றி தகராறு எழுப்பப்பட்டிருக்கிறது. இம்மசோதா பழமைக்கும் புதுமைக்கும் மத்தியஸ்தம் செய்து வைப்பது போன்றது. ஒரே ‘வர்ணம்’ அல்லது ஒரே ஜாதி அல்லது ஜாதிக்குள்ளேயே உள்ள ஜாதியைச் சேர்ந்த மணமகனும், மணமகளுமே திருமணம் செய்து கொள்ள வேண்டும். அப்படி இல்லாவிட்டால் செல்லாது என்கின்ற இந்த வைதீக முறையைப் பின்பற்ற விரும்பும் எவரையும் அவரிஷ்டம் போல் அவர் ‘தர்மம்’ போல் நடந்து கொள்ள இம்மசோதா இடமளிக்கின்றது. அதேபோல் ‘வர்ணம்’ ‘ஜாதி’ சாதிக்குள்ளேயே ஜாதி ஆகியவைகளில் நம்பிக்கையற்ற ஒரு சீர்திருத்தவாதியாயிருக்கும் எந்த இந்தும் தன் ஜாதியில்லாத இன்னொரு ஜாதிப் பெண்ணை திருமணம் செய்து கொள்ள எண்ணினால் அதற்கும் இம்மசோதாவில் இடம் இருக்கிறது. எனவே, திருமணச் சட்டத்தைப் பொறுத்தவரையில் எதையும் தடுக்கும் நிலையில்லை.

தங்கள் தர்மப்படி எது சரியெனப்படுகிறதோ அதைச் செய்ய ‘வைதீகர்களுக்கு’ சுயேச்சை அளிக்கப்பட்டிருக்கிறது. வைதீக தர்மத்தைப் பின்பற்றாது கொள்கையையும் அறிவையும் பின்பற்றும் சீர்திருத்தக்காரர்கள் அவர்கள் விருப்பப்படி நடக்கவும் இடமிருக்கிறது. (கேளுங்கள்! கேளுங்கள்!!)

மகா வீர தியாகி: சீர்திருத்தக்காரர்கள் தங்கள் மதம் விட்டு இன்னொரு மதத்தில் திருமணம் செய்து கொள்ள இடம் உண்டா?

அம்பேத்கர்: அதற்கென இன்னொரு மசோதா கொண்டு வருவோம். தியாகி கல்யாணமாகாதவரா என்பது எனக்குத் தெரியாது. அப்படியிருக்குமானால் அம்மசோதாவை அவசரமாகக் கொண்டு வருகிறேன்!

தியாகி: எனக்கல்ல; பிறருக்கு வசதி செய்து தரவேண்டுமென்பதே என் ஆசை (சிரிப்பு)

மேலும் தொடர்ந்து பேசிய அம்பேத்கர் இந்து சட்டத்தில் செய்யப்படும் “ஆப்ரேஷனால்” பழமைக்கும் புதுமைக்குமிடையே போட்டி இருக்கும்.

புது வழியைப் பின்பற்றுபவர்கள் அதற்கான வெற்றிகளைப் பெறுவார்கள் என்றே நாம் நம்புகிறோம் (கேளுங்கள்). அப்படியில்லை என்றால் இரண்டு மண முறைகளும் நாட்டில் நிகழ அனுமதிப்போம்.

இதனால் சாஸ்திரத்தையோ அல்லது ஸ்மிருதியையோ நாம் மீறவில்லை” பின் திருமண ரத்து பற்றியும் விளக்கினார்.

குழந்தையின்மையால் தத்துப் பிள்ளை எடுப்பவர்கள் ஜாதியிலேயே எடுக்க வேண்டுமென்று இம்மசோதாவில் குறிக்கப்பட வில்லை. திருமணத்துக்கு எம்முறை விதிக்கப்பட்டிக்கிறதோ அதுவே தான் இதற்கும்.

**ஒரு பார்ப்பனர் ஒரு பார்ப்பனப் பிள்ளையையே தத்து எடுக்கலாமே என்றால் அப்படி செய்யவும் இடம் உண்டு. அதே வேளையில் பார்ப்பனர் தன் வகுப்புப் பையனை தத்து எடுக்காமல் ஒரு ‘சூத்திர’ப் பையனை தத்து எடுக்க விரும்பும் அளவு விஷயம் அறிந்தவராகயிருந்தால் அப்படியும் செய்யலாம்.**

சேத்கோவிந்தாஸ்: ஏன் அப்படிப்பட்ட பார்ப்பனர், விஷயம் அறிந்தவராகக் கருதப்பட வேண்டும்?

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த டாக்டர் அம்பேத்கர் புன்சிரிப்புடன் பதிலளித்தபொழுது சபை முழுவதும் சிரிப்பு நிலவியது... அவர் கூறியதாவது: “என்னைப் பொறுத்தமட்டில் அவர் நிச்சயம் விஷயம் தெரிந்தவர்தான். உங்கள் கருத்துப்படி அவர் தெரியாதவராக இருக்கலாம். அதுதான் கருத்து வேற்றுமைக்குக் காரணம்.

மேலும் பேசிய டாக்டர் அம்பேத்கர் குழந்தை இல்லாவிட்டால் அவர் ஏன் ‘சுவீகாரம்’ செய்து கொள்ள வேண்டும் என்பது தனக்குப் புரியவில்லை என்றும், தன் பெயரைச் சொல்ல தனக்கு ஒரு குழந்தை கூட இல்லை என்றும் சிரிப்புக்கிடையே அவர் வெளியிட்டார்.

பின் அவர் பல விதிகளைப் பற்றியும் விளக்கியபின், அவர் கூறியதாவது:

“இந்த மசோதா ஒரு புரட்சிகரமானதல்ல என்பதோடு தீவிரமான தன்மை கொண்டதுகூட அல்ல. ராவ் கமிட்டியின் அறிக்கையில் கையெழுத்திட்ட இரு உறுப்பினர்களில் ஒருவரான கார்புரே மிகப் பெரிய பிற்போக்குவாதிகளில் ஒருவர் - அரசியலிலும் சமுதாயத் துறையிலும்.

உண்மையில் அவர் சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் என்னை ஒரு பெரிய கழியால் கூடத் தொடுவதென்பதை கஷ்டமாகக் கருதுபவர் (சிரிப்பு).

இன்னொரு உறுப்பினரான டி.ஆர்.வெங்கட்ராம சாஸ்திரி ஒரு மிதவாதியேயொழிய நிச்சயம் தீவிரவாதியல்ல இவர்களே அறிக்கையில் கையெழுத்திட்டுள்ளனர்.

"நான் ஒரு பிற்போக்குவாதி. முன் முன்னேற்றம் விரும்பும் பிற்போக்குவாதி!"

பிற்போக்கு உள்ளம் கொண்ட ஒவ்வொருவரும் பெரிய அரசியல், தத்துவ ஞானியான எட்மண்ட் பாக் – பிரெஞ்ச் புரட்சிக்கு எதிராக புத்தகம் எழுதியவர் – தன் நாட்டு பிற்போக்குவாதிகளுக்குச் சொல்லியதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். எப்பொழுதும் போலவே இருக்க விரும்புகிறவர்கள் "ரிப்பேருக்கும் தயாராக இருக்க வேண்டும்" நான் இச்சபைக்கு தெரிவிப்பதெல்லாம் இந்த முறை, கலாச்சாரம், சமுதாயம் இருக்கிறபடி இருக்க வேண்டுமேயானால் எங்கெங்கு "ரிப்பேர்" செய்ய வேண்டுமோ அதைச் செய்யத் தயங்கக் கூடாது.

இம்மசோதா எந்தெந்த இடங்கள் சீர்குலைந்து போயிருக்கிறதோ அவைகளை ரிப்பேர் செய்வதே ஆகும்.

பின் சுசேதா கிருபளானி பேசுகையில், "அடுத்த தேர்தல் வரும் வரை மசோதாவை தள்ளி வையுங்கள். இல்லாவிட்டால் காங்கிரஸ் வெற்றி பெற முடியாது என்று கூறியதைக் கண்டித்து "கடமைக்கு முன் நாம் செல்வாக்கை கவனித்தா வந்திருக்கிறோம்" என்று கேட்டார்.

"அனாதையான பெண்கள் முன்பு ஒன்றான குடும்பத்தாரால் பாதுகாக்கப்பட்டனர் என்பது உண்மைதான். ஆனால் அதே வேளையில் எத்தனை நூற்றுக்கணக்கான பெண்கள் கூட்டுக் குடும்பத்தில் ஆதரவு பெற முடியாது வாழ்வை சோகமும் வெட்கமும் நிரம்பியதாகச் செய்து கொள்ளுகிறார்கள். எனவே, சொத்தில் பெண்களுக்கு உரிமை பெறுவது நியாயமே" என்று கூறியதும், ஜக்ஜீவன்ராம்: இன்னும் அதிகமாகக் கூட....

தோழியர் சுஜாதா கிருபளானி: எவ்வளவு அதிகமோ அவ்வளவு நல்லது. இறந்த காலத்தில் எவ்வெவைகளையோ நீங்கள் மறுத்து வந்திருக்கிறீர்கள். அதை இப்பொழுது சரி செய்து கொள்ளுங்கள்" என்று கூறினார்.

**- 'விடுதலை', 25.2.1949**

■


ஆட்சியாளர் போக்கு, வேலை யில்லாத் திண்டாட்டத்தையே வளர்க்கும்

நிர்வாகத் திறன் படைத்தவர்கள் யாருமே சர்க்காரில் இல்லை

Regd. No. 4739
Phone: 86977

திராவிடநாடு திராவிடருக்கே!

விடுதலை

(திராவிடர் தமிழ்த் தினசரி)

மலர் 11] சென்னை (1-1-50) ஞாயிறு ★ வெளியூர் (2-1-50) திங்கள்

# 26

## டாக்டர் அம்பேத்கர் வாழ்க!

இம்மாதம் 14ஆம் தேதியன்று டாக்டர் அம்பேத்கரின் பிறந்த நாள். அதே நாளில் புதிய இந்து சட்ட திருத்த மசோதா பற்றி பொது மக்களின் கருத்தை அறிவதற்காகப் புதுடெல்லியின் ஒரு மாநாட்டையும் கூட்டியிருக்கிறார். இம்மசோதாவின் கர்த்தாவான அம்பேத்கர்.

இம்மசோதா அவரது விருப்பப்படி சட்டமாகி, இந்து மதத்தில் கிடந்துழமுகின்ற பெண்களுக்கு ஓரளவு உரிமையானது வழங்குகின்ற வழியைக் கோலுமென்று நம்புகின்றோம். இந்து சட்டத்தில் இந்த ஒரு திருத்தத்தினால் மட்டுமே முழு நன்மையும் ஏற்பட்டுவிடப் போவதில்லையென்பதையும், அந்தச் சட்டமே தலை கீழான மாறுதலை அடைய வேண்டுமென்பதையும் நாம் நன்குணர்வோம்; அம்பேத்கர் உணர்வார். ஆயினும் ஆரம்பத்தில் சிறு அளவுக்கேனும் திருத்தம் அடைவது பற்றி மகிழ்ச்சியடைகின்றோம். வைதீகக் கும்பல்கள் எதிர்ப்புக்கு டாக்டர் அம்பேத்கர் தலை வணங்கமாட்டார் என்றாலும், மற்ற மந்திரிகள் இவ்விஷயத்தில் அவ்வளவு உறுதியுடன் இருப்பார்களா என்பது சந்தேகம்தான். எப்படியாவது அம்பேத்கர் முயற்சி வெற்றியடைய வேண்டுமென்று விரும்புவதுடன் இந்திய பார்லிமெண்டிலுள்ள தென்னாட்டு உறுப்பினர்கள் இம்முயற்சியில் அவருக்கு ஆதரவு தர வேண்டும் என்பதே நம் வேண்டுகோள்.

இனி, அம்பேத்கரைப் பற்றிச் சில கூறவேண்டியது அவசியமாகிறது.

அவர் சேற்றில் பிறந்த செந்தாமரை. புதரில் முளைத்த ரோஜா. ஆழ்கடலின் அடியில் கிடக்கும் முத்து.

வெறும் கற்பனையல்ல; முற்றிலும் உண்மை. தலைசிறந்த மத ஆராய்ச்சிக்காரர். புகழ்பெற்ற சட்ட நிபுணர். அதிதீவிரமான புரட்சிக்



விடுதலை

சென்னை 11—4—50 செவ்வாய்க்கிழமை

டாக்டர் அம்பேத்கார் வாழ்க!

அய்ரோப்பாவில் கம்யூனிஸ்ட் தீவிர நடவடிக்கை?

Fரஞ்ச் கம்யூனிஸ்ட் மாநாட்டின் எதிரொலி

பெரியார் சுற்றுப் பயணம்

அமெரிக்காவுக்குக் கண்டனம்

அடிமைத் தனத்தை ஒழிக்க அய். நா. முயற்சி

பாட்டாளிகளுக்கு போனஸ்

டெல்லி சட்ட சபைக் கூட்டம்

வெள்ளையர் இறக்குமதி

சாதிச் சண்டை

பாக் - இந்தியா போலீஸ் கை கலப்பு

கண்ணே! குமாரசாமி!

சமஸ்கிருத ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்பு

இந்துக்களுக்குக் கூடப் புரியாத மொழி

உலகப் பொறுப்பை ஏற்கவியலாது

பிரகாசத்தின் பிடி வாதம்

தங்கத்திற்கு அதிக விலை

காரார். ஆரியத்தையும் அதன் ஆபாச ஆதாரங்களையும் வெறுப்பதில், வடநாட்டில் அவருக்கிணையானவர் அவரே தான்.

கட்டாயக் கலப்பு மணத்தை வற்புறுத்தக்கூடிய அவசரச் சட்டம் ஒன்றைப் பிறபிக்க வேண்டுமென்று இவர் தம் கூட்டு மந்திரிகளுடன்



இடைவிடாமல் போராடிக் கொண்டிருப்பதாகச் சென்ற மாதம் ஒரு செய்தியை நாம் வெளியிட்டிருந்தது நம் வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

காங்கிரசின் பரம விரோதி என்பதையும், வைதீகத்தின் வைரி என்பதையும், அறிந்திருந்தும் இவரைக் கட்டாயப்படுத்திக் கெஞ்சி, மந்திரி சபையில் சேர்த்துக் கொண்டதும், அபுல்கலாம் ஆசாத் போல் வெறும் பொம்மை மந்திரியாக வைத்துக் கொள்ளாமல், பொறுப்புள்ள இலாகாவின் மந்திரியாக ஆக்கியதும், புதிய அரசியல் திட்டத்தை வகுக்கும் பொறுப்பை இவரிடமே கொடுத்திருந்ததும், “விலகுகிறேன்” என்று பல தடவை கூறியும் விடாப்பிடியாகப் பிடித்து வைத்திருப்பதும், இவரது அபாரத் திறமையை விளக்குகிறதல்லவா?

இவரது மந்திரி பதவியின் மூலம் தாழ்த்தப்பட்ட பிற்போக்கு சமூக மக்கள், மத – சமுதாயத்துறைகளில் முன்னேறி விடவில்லை என்பதும் உண்மைதான். ஏதோ, படித்த இரண்டொரு தாழ்த்தப்பட்டவர்களுக்கு வேலை தேடித் தந்திருப்பதைத் தவிர, நிரந்தரமான – புரட்சிகரமான சமுதாய மாறுதல்களை இவரால் உண்டாக்க முடியவில்லை என்பது உண்மையே. ஆனால், இதற்குப் பொறுப்பாளி இவரல்ல. இன்றுள்ள ஆட்சியின் கீழ் இவரால் இவ்வளவுதான் சாதிக்க முடியும்.

எனவே, மந்திரி பதவியை உதறித் தள்ளிவிட்டு, விரைவில் வெளியேறி, தாழ்த்தப்பட்ட சமூகங்களிடையே புத்துணர்ச்சியையும் புரட்சி எண்ணத்தையும் உண்டாக்கும் பணியில் ஈடுபடும் பொருட்டே டாக்டர் அம்பேத்கர் பொதுநல ஊழியராக வெளிக் கிளம்பும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். வடக்கே அம்பேத்கர்; தெற்கே பெரியார். ஒருவர் ஆரியத்தின் அணுகுண்டு; மற்றொருவர் ஹைட்ரஜன் குண்டு.

வைதீகமும் கண்மூடி ஆஸ்திமுகம் தலைவிரித்தாடிக் கொண்டு, ஜாதி மத வெறியர்களுக்குத் தூபம் போட்டுக் கொண்டு திரிகின்ற இந்நாட்டில், எத்தனை நேருகளும் பட்டேல்களும் தோன்றினாலும் சமுதாயச் சீர்கேடுகளை ஒழிக்க முடியாது. அம்பேத்கர் பெரியார் போன்ற ஈவு இரக்கமற்ற டைனமைட்களால்தான் பாழடைந்த இப்பழங் கோட்டைகளை உடைத்தெறிய முடியும்.

மதவெறி காரணமாகத் தம் மந்திரி பதவியைத் துறந்துள்ளனர், இரு மந்திரிகள்.

மதவெறியையும், ஜாதி வெறியையும் ஒழிப்பதற்காகவே மந்திரி பதவியைத் துறக்க வேண்டும், டாக்டர் அம்பேத்கர்.

அவரது அற்புத ஆராய்ச்சி முடிவுகளும், புரட்சிக் கருத்துகளும் பார்லிமெண்ட் என்ற இருட்டறையில் கிடந்து மங்கி மறைந்து விடக் கூடாது. வெளிச்சம் மிகுந்த வெளியுலகத்தில் வந்து, உறங்கிக் கிடக்கும் மக்களை விழிக்க வைக்க வேண்டும்.

இந்த நாட்டின் இரண்டு மாபெரும் புரட்சிப் பீரங்கிகள் ஒலிக்க ஆரம்பித்தால், வைதீகப் படைகள் ஓட்டமெடுக்கும். வில் ஏந்தி நிற்கும் சனாதனக் கும்பல்கள் சரண் அடைந்துவிடும்.

அம்பேத்கர் நீடூழி வாழ்க! அவர் அறிவும் ஆற்றலும் நமக்குப் பயன்படுக! ஆயிரக்கணக்கான அம்பேத்கர்கள் இந்நாட்டில் தோன்றுக! என்று கூறி பேரறிஞர் அம்பேத்கரை மனமார வாழ்த்துகின்றோம்.

**- ‘விடுதலை’ தலையங்கம், 11.4.1950**

■


திராவிட நாடு திராவிடருக்கே!
விடுதலை
“VIDUTHALAI”
(திராவிடர் தமிழ்த் தினசரி)
Most Popular in the South

# 27

# அம்பேத்கரின் குற்றச்சாட்டால் பொறி கலங்கி அலறுகிறது காங்கிரசு

## சட்ட சபையில் சி.ஆரின். மழுப்பல் பலனில்லை

- **புலன்விசாரணை நடத்த அச்சம்?**
- **கைப்பாவைகளைக் கொண்டு காங்கிரசை மூலவர்கள் நடத்தும் பொம்மலாட்டம்**
- **புதுடில்லி விசேஷ நிருபர் தரும் செய்திகள்**

“காங்கிரசு துரைத்தனம் தாழ்த்தப்பட்ட பழங்குடிகள் நலனுக்கும் முன்னேற்றத்திற்கும், யாதொன்றும் செய்யக் கிடையாது. “சுதந்திரம்” வந்ததும் பழங்குடிகள் நிலைமை “பழைய குருடியாக”த் தானிருக்கிறது” என்று இந்திய சட்ட மந்திரி டாக்டர் அம்பேத்கர் வெளியிட்ட செய்தி காங்கிரசு ஆட்சிப்பீட வட்டாரத்தில் மாத்திரமன்றி, சாதாரண கதர் சட்டைகளின் வட்டாரத்திலும் பெரு கலக்கத்தையும் நடுக்கத்தையும் விளைத்துவிட்டதாக புதுடில்லி விசேஷ நிருபர், ஆராய்ந்தறிந்து செய்தியனுப்பி இருக்கிறார். வரப்போகும் தேர்தலில், படிப்பு வாசனையற்ற பழங்குடிகளின் கையாதரவையே காங்கிரசுக்காரர்கள் பெரிதும் நம்பிக் கனவு கண்டு கொண்டிருந்தனர். டாக்டர் அம்பேத்கரின் பேச்சு, பெரிதும் வெடிகுண்டுபோல் பாய்ந்து வெடித்து அக்கனவுக் கோட்டையைச் சிதைத்து விட்டது.

சட்டசபையிலே உள்நாட்டிலாகா மந்திரி சி.ஆர்., டாக்டர் அம்பேத்கரின் குற்றச்சாற்று ஆதாரமற்றதென்றார். புலன் விசாரணை நடத்தப்பட்டதா என்று மறுகேள்வி கேட்டபோது, இல்லையெனக் கூறி மழுப்பி விட்டார்.



திராவிட நாடு திராவிடருக்கே!

# விடுதலை

"VIDUTHALAI" The Leading Tamil Daily

(திராவிடர் தமிழ்த் தினசரி)

Most Popular in the South

மலர் 12 | சென்னை: கர-ஷு சித்திரை-மீ 11-உ (24-4-51) செவ்வாய் ★ வெளியூர்: கர-ஷு சித்திரை-மீ 12-உ (25-4-'51) புதன்

அண்டார்டிக் பகுதியில் இரு புது எரிமலைகள்

காங்கிரஸ் துரைத்தன அகராதியில்...?

## ★ அம்பேத்காரின் குற்றச்சாட்டால் பொறி கலங்கி அலறுகிறது காங்கிரசு

### சட்ட சபையில் சி. ஆரின் மழுப்பல் பலனில்லை

### புலன்விசாரணை நடத்த அச்சம்?

### கைப்பாவைகளைக் கொண்டு காங்கிரசை மூலவர்கள் நடத்தும் பொம்மலாட்டம்

### புதுடில்லி விசேஷ நிருபர் தரும் செய்திகள்

புதுடில்லி, ஏப். 24—

"காங்கிரசு துரைத்தனம் தாழ்த்தப்பட்ட பழங்குடிகள் நலனுக்கும் முன்னேற்றத்திற்கும், யாதொன்றும் செய்யக்கிடையாது. "சுதந்தரம்" வந்தும் பழங்குடிகள் நிலைமை "பழைய குருடியாக"த்தானிருக்கிறது" என்று இந்திய சட்ட மந்திரி டாக்டர் அம்பேத்கார் வெளியிட்ட செய்தி காங்கிரசு ஆட்சிப்பீட வட்டாரத்தில் மாத்திரமன்றி, சாதாரண கதர் சட்டைகளின் வட்டாரத்திலும் பெரு கலக்கத்தையும் நடுக்கத்தையும் விளைத்துவிட்டதாக புதுடில்லி விசேஷ நிருபர், ஆராய்ந்தறிந்து செய்தியனுப்பி யிருக்கிறார். வரப்போகும் தேர்தலில், படிப்பு வாசனையற்றப் பழங்குடிகளின் கையாதரவையே காங்கிரசுக்காரர்கள் பெரிதும் நம்பிக் கனவுகண்டு கொண்டிருந்தனர். டாக்டர் அம்பேத்காரின் பேச்சு, பெரிதும் வெடிகுண்டுபோல் பாய்ந்து வெடித்து அக்கனவுக்கோட்டையைச் சிதைத்து விட்டது.

சட்டசபையிலே உள்நாட்டிலாகா மந்திரி சி.ஆர்., டாக்டர் அம்பேத்காரின் குற்றச்சாற்று ஆதாரமற்றதென்றார். புலன் விசாரணை நடத்தப்பட்டதா என்று மறுகேள்வி கேட்டபோது, இல்லையெனக் கூறி மழுப்பி விட்டார்.

புது டில்லி விசேஷ நிருபர் மேலும் எழுதியிருப்பதாவது:—

நாடகாசிரியர் ஜார்ஜ் பெர்னாட்ஷா ஓர் இந்தியராகப் பிறந்திருந்து இந்தியாவில் வாழ்ந்திருந்தால் அவருக்கும் காந்தியாரின் முடிவுதான் கிடைத்திருக்கும்.

பிரிட்டனில் கம்யூனிஸ்ட் எதிர்ப்பு

அமெரிக்க இராணுவ பெருக்கு திட்டத்திற்கு பிவான் கண்டனம்

மேற்கத்திய நாடுகளின் பொருளாதார சீர்குலைவுக்குக் காரணம்

மந்திரி பிவான் விளக்கம்

போலீசாரின் வேட்டை

காங்கிரஸ் ஒழிப்பு நாள்

போஸ்டர் ஒட்டியதாக ரூ. 20 அபராதம்

இந்தோனேஷ்யாவில் ரயில்வே தொழிலாளர் கிளர்ச்சி

நாளொன்றுக்கு 7 மணி நேரம் வேலை செய்வதாகக் கோரிக்கை

கொரியாவில் அமெரிக்கப் படைகள் பின் வாங்கல்

100 மைல் அகலத்தில் விடுதலைப் படைகள் முன்னேற்றம்

பிவானைப் பின் பற்றி பலர் விலகுகிறார்கள்

பிரிட்டிஷ் மந்திரி சபை கலகலத்து விட்டது

ஹெரால்டு வில்சன் விலகி விட்டார்

பெண்கள் கிளர்ச்சி!

புது டில்லி விசேஷ நிருபர் மேலும் எழுதியிருப்பதாவது:

நாடகாசிரியர் ஜார்ஜ் பெர்னாட்ஷா ஓர் இந்தியராகப் பிறந்திருந்து இந்தியாவில் வாழ்ந்திருந்தால் அவருக்கும் காந்தியாரின் முடிவுதான் கிடைத்திருக்கும்.



பிரிட்டிஷ்காரர்களுக்கு முற்றும் மாறுபட்ட பண்பினர் இந்தியாவிலுள்ள ஜாதி இந்துக்கள் என்பவர்கள். இந்த ஜாதி இந்துக்கள் பால் உள்ள குற்றம் குறைகளை யாராவது சுட்டிக் காட்டிக் கண்டித்து விட்டாலோ இவர்களுக்கு (ஜாதி இந்துக்கள்) பெரும் அளவில் எரிச்சலும் மனக் கொதிப்பும் சீற்றமும் ஆத்திரமும் ஏற்பட்டு விடும். பல்லோர் மூலைக்கு மூலை குதித்தெழுந்து பெரும் முழக்கம் செய்து ஆர்ப்பரிப்பார்கள்.

மிஸ்.மேயோவின் புத்தகம் வெளிவந்தபோது இவர்கள் நடத்திய திருக்கூத்துகளைச் சொல்லி முடியாது. மிஸ்மேயோவின் மீதும் அமெரிக்கர்கள் மீதும், படுமோசமான முறையில் வசை மாரி பொழிந்து தள்ளினர். புத்தகங்களை வரைந்து குவித்தனர்.

டாக்டர் அம்பேத்கர் விஷயத்திலும் இப்போதும் இதே திருக்கூத்து தான் காங்கிரசுக்காரர்களால் (ஜாதி இந்துக்களால்) நடத்தப்படுகிறது.

பஞ்சாபில் பழங்குடி மக்கள், மிக மிகக் கொடுமைப்படுத்துவதாக டாக்டர் அம்பேத்கர் அண்மையில் பஞ்சாப் மாநாட்டில், திட்டவட்டமான ஆதாரங்களுடன் ஆணித்தரமான முறையில் குற்றம் சுமத்தினார்.

இவர் சாட்டிய குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவையாயின் தகுந்த ஆதாரப் புள்ளி விவரங்களை எடுத்துக் காட்டி மறுத்திருக்க வேண்டும். இதுவே நேர்மையும் நியாயத் துறையுமான முறை. பழங்குடிகளை ஜாதி இந்துக்கள் கொடுமைப்படுத்தவில்லை என்றும் சமத்துவத்துடன் நடத்துகின்றனரென்றும் ஆதாரங்களும் சாட்சிகளும் காட்டி இருக்க வேண்டும்.

அவ்விதம் செய்யாது அவர் பஞ்சாபில் பேசிய பேச்சு வெறும் தேர்தல் திருக்கூத்து என்று சட்டசபை காங்கிரசு உறுப்பினர்களைக் கொண்டே அறிக்கை வெளியிடும்படி செய்துள்ளனர்.

பழங்குடி மக்கள் மிக மிக ஏழ்மையுற்ற இனத்தவர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலிருந்தே இந்த மக்கள் ஜாதியிந்துக்களால் அடிமை நிலைக்கு உட்படுத்தப்பட்டு அடக்கி ஒடுக்கப்பட்டு வந்தனர். தெளிவுறக் கூறுமிடத்து இவர்களை மனித இனமாகவே கருதப்பட்டது கிடையாது.

வெறும் வியாபார சரக்கு போலும் ஆடு மாடுகளைப் போலும் பேரப்பண்டமாகத்தான் கருதி வந்துள்ளனர்.

இப்போது காங்கிரசு ‘தியாகி’கள் இதனை ஒப்புக் கொள்ள மாட்டார்கள். ஆனால், பிரித்தாளும் சூழ்ச்சியிலே பிரிட்டிஷாரை மீறி விட்டனர் காங்கிரஸ்காரர்கள். தேசிய முஸ்லிம்கள் தேசிய ஹரிஜனங்கள் தேசிய சீக்கியர்கள், தேசியத் தொழிலாளர்கள் என்று குட்டிக் கட்சிகளைத் தோற்றுவித்ததே இவர்களைப் பிரித்தாளும் சூழ்ச்சிகளுக்குப் போதுமான ஆதாரமாகும். டாக்டர் அம்பேத்கர் என்றால் இந்த “தேசியவாதி”களுக்கு எட்டிக் கொட்டை போல் கசப்பும் வெறுப்புமாகும். ஏனென்றால், அவர் இந்த தேசிய சூழ்ச்சிகளைத் தகர்த்தெறியும் பீரங்கியாக விளங்குகிறார். எனவே, அண்மையில் டாக்டர் அம்பேத்கரின் பேச்சு இந்த தேசிய கோட்டையை ஜாதி இந்துக்களின் அரணை சிதைத்தெறியும் அணுகுண்டாகிவிட்டது. அதுவும் பொதுத் தேர்தல் நெருங்கும் காலத்தில் காங்கிரசுக்குள்ளாகவே குடுமிச் சண்டைகள் ஏற்பட்டு சின்னாபின்னமாகும் சமயத்தில் தங்களுக்கு பற்றுக் கோடென நம்பியிருந்த பழங்குடிகளையும் டாக்டர் அம்பேத்கர் தட்டிப் பிடுங்கிக் கொள்வாரோ என்று, குலை நடுக்கம் கொண்டு துடிக்கின்றனர். இந்த ஆபத்திலிருந்து மீள, படாதபாடுகளெல்லாம் படுகின்றனர். அவசர தற்காப்பு நடவடிக்கைகள் விரைவாக நடக்கின்றது. தலைமை இடத்தில் ரகசிய மந்திராலோசனைகளும் நடக்கின்றன. டாக்டர் அம்பேத்கர் தாம் வெளியிட்ட அறிக்கையை வாபசு பெறச் செய்ய வேண்டுமென காங்கிரசு மூலவர்கள் “பகீரதப் பிரயத்தனங்கள்” செய்கின்றனர். ஆனால், டாக்டர் அம்பேத்கரோ கடுகளவும் விட்டுக் கொடுக்க முன்வரவில்லை. எனவே, தேர்தலுக்குள் அவரை மந்திரி பதவியிலிருந்து விலக அல்லது விலக்கச் செய்வார்கள்.

**- ‘விடுதலை’, 24.4.1951**

■


அய்யங்காரிலாகாவின்
"சிதம்பர ரகசியம்"
★
புதுடில்லி, மே. 19—
எல்லா ரயில்வேக்களிலுமுள்ள 9293-மூன்றாம் வகுப்பு வண்டிகளில 1897 வண்டிகளில் இப்போதே மின்சார விசிறிகள் அமைக்கப்பட்டிருப்பதாகவும், 1028 வண்டிகளில் மார்ச் மாதத்திற்குள் அமைக்கப்பட்டு விடுமென்றும் ரயிலவே அமைச்சர் நேற்று இந்திய சட்ட சபையில் பதிலளித்தார்.

Regd No 4739
Phone : 86977

திராவிட நாடு திராவிடருக்கே!

விடுதலை

விலை அணா ஒன்று
இலங்கைக்கு 10 சதம்

"VIDUTHALAI"
The leading Tamil Daily

(திராவிடர் தமிழ்த் தினசரி)

Most Popular in the South

நறுமண சீயக்காய் தூள்
CONCH
REGD No. 13817.

மலர் 12 | சென்னை : கர-ஷூ வைகாசி-மீ 5-உ (19-5-51) சனி ★ வெளியூர் : கர-ஷூ வைகாசி-மீ 6-உ (20-5-'51) ஞாயிறு | இதழ் 30

# 28

# கம்யூனல் ஜீ.ஓ. பற்றிய சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு திருப்தியற்றது

## பாராளுமன்றத்தில் டாக்டர் அம்பேத்கரின் முழக்கம்

நாட்டில் எந்தெந்த வகுப்பு மக்கள் தங்கள் சொந்த பலத்தினால் நிற்க முடியாத நிலையிலிருக்கிறார்களோ அந்தந்த 'பலஹீன'மான மக்களின் நலன்கள் முன்னேற – வாழ்வு உயர ராஜீய சர்க்காரின் கொள்கையை கட்டளை மூலமாக அமல் செய்யலாம் என்பதே அரசியல் சட்டத்தின் 46ஆவது விதி என்பதாக சட்ட மந்திரி டாக்டர் அம்பேத்கர் நேற்று பாராளுமன்றத்தில், அரசியல் சட்டத்திருத்த மசோதாவில் முதல் திருத்தத்தைக் குறித்து நடந்த விவாதத்தின் போது பேசுகையில் குறிப்பிட்டார்.

முன்னேற்றமடையாத மக்களின் முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டையாக 29(2)ஆவது விதியும் 16(4)ஆவது விதியும் குறுக்கிடாமலிருக்க 15ஆவது விதியை திருத்த வேண்டியது அவசியமென்று டாக்டர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்.

சென்னை சர்க்காரின் கம்யூனல் ஜீ.ஓ. பற்றி சுப்ரீம் கோர்ட்டு அளித்த தீர்ப்பு "முற்றிலும் திருப்தியற்றது" என்பதோடு மட்டுமல்ல இந்திய அரசியல் சட்டத்தின் நோக்கத்திற்கே புறம்பானது என்றும் மேலும் கூறினார்.

இத்திருத்த மசோதாவைக் குறித்து டாக்டர் அம்பேத்கர் பேசத் துவங்கியதும் 15ஆவது விதி திருத்தப்பட வேண்டிய அவசியத்தை முதலில் விளக்கினார்.



திராவிட நாடு திராவிடருக்கே!

விடுதலை

"VIDUTHALAI" The leading Tamil Daily

(திராவிடர் தமிழ்த் தினசரி)

Most Popular in the South

Regd No 4739
Phone : 86977

மலர் 12 | சென்னை: கர-ஆ வைகாசி-மீ 5-உ (19-5-51) சனி ★ வெளியூர்: கர-ஆ வைகாசி-மீ 6-உ (20-5-51) ஞாயிறு | இதழ் 30

"வடநாட்டுச் சுரண்டல் ஒழிந்தாலொழிய நம் வாழ்க்கை வளம்பெற முடியாது"

காங்கிரசு அலங்கோல ஆட்சியால் மக்களுக்கு அல்லல்தான் பெருகிற்று

விலை நிர்ணயத்தில் வடக்கத்திய மாகாணங்களுக்குத் தனிச் சலுகை

மதுரை மாவட்ட சுரண்டல் தடுப்பு மாநாட்டு வரவேற்புத் தலைவர் வெங்கடசாமியின் சொற்பொழிவு

சென்னை உயர்நீதி மன்றத்தில்

"அய்யர்கள்" உற்பத்திப் பெருக்கம்!

"கம்யூனல் ஜீ. ஓ. பற்றிய சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு திருப்தியற்றது"

பிற்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு உதவி புரிவதே அரசாங்கத்தின் கடமை

பாராளுமன்றத்தில் டாக்டர் அம்பேத்காரின் முழக்கம்

தென்னாட்டு அங்கத்தினர்களின் ஆதரவு

மாகாண சர்க்கார் தொழில் வருமானத்திலும் கை வைக்கிறது டில்லி

வர்த்தகப் பொருள்களுக்கு கலால்—சுங்க வரி

புதிய அரசியல் உருமாற்றம்

பெண்கள் புரட்சியின் நினைவுச் சின்னம்!

லண்டன் பொருட்காட்சி சாலையில் வைக்கப்பட்டது

செஞ்சீனாவுக்கு போர்ப் பொருள்கள் ஏற்றுமதித் தடை

அய். நா. பொதுச் சபையில் தீர்மானம்

சென்னை சர்க்காரின் கம்யூனல் ஜி.ஓ.வின்படி சர்க்கார் ஊழியத்திலும் கல்வி ஸ்தாபனங்களில் இடம் ஒதுக்குவதிலும் ஏற்பட்ட பிரச்சினை சம்பந்தமாக தொடரப்பட்ட இரு வழக்குகளில் சுப்ரீம் கோர்ட் அளித்த தீர்ப்பினால் விளைந்த விளைவினாலே அவ்விதிக்கு திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டதென விளக்கினார்.



மேலும் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:

கம்யூனல் ஜீ.ஓ. ஜாதியை அடிப்படையாகக் கொண்டு மக்களைக் பிரிக்கிறது. எனவே, அது செல்லாது என்பதாக சுப்ரீம் கோர்ட் முடிவுக்கு வந்திருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டின் இரு தீர்ப்புகளையும் நான் மிக நுணுக்கமாகப் படித்துப் பார்த்தேன். சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளிடத்தில் எனக்குள்ள மரியாதையுடன் சொல்லுகிறேன். -அத்தீர்ப்பு முற்றிலும் திருப்தி அற்றதாகவே காணப்படுகிறதென்று.

இச்சமயத்தில், சபையில் சிலர் ஒழுங்கு பிரச்சினையை கிளப்பினர். பார்லிமெண்டில் நீதிபதிகளைக் குறை கூறத்தக்கதாக எந்த உறுப்பினரும் பேசுவது வழக்கமில்லை என்பதாகக் கூறினர்.

இது குறை கூறுவதாகாது என்று டாக்டர் அம்பேத்கர் எடுத்துக் காட்டினார்.

சபைத் தலைவர், அச்சொற்களை உபயோகிக்காதிருந்தால் நானாகவே திருத்தி சொல்ல நான் எண்ணினேன். ஆனால், சர்க்கார் என்ன செய்ய வேண்டுமென்று எதிர்பார்த்ததோ சட்ட மந்திரியின் கருத்தாயிருக்கும் என்று நினைக்கிறேன்.

டாக்டர் அம்பேத்கர்: அரசியல் சட்டத்தின் விதிகளுக்கு ஒத்ததாக பொருத்தமானதாக அத்தீர்ப்புகள் இல்லை.

மீண்டும் சில உறுப்பினர்கள் ஒழுங்குப் பிரச்சினை கிளப்ப ஆரம்பித்தார்கள். ‘கனம் மந்திரியார்’ இனியாவது சுப்ரீம் கோர்ட்டில் தீர்ப்புகளைக் குறித்து இத்தகைய கருத்துகளை வெளியிட மாட்டார் என நினைக்கிறேன் என தலைவர் குறிப்பிட்டார்.

29ஆவது விதியில் ‘மாத்திரம்’ என்ற சொல்தான் மிக முக்கியமானது என்றும், அதற்கு எவ்வளவு தூரம் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமோ அவ்வளவு தூரம் முக்கியத்துவம் அளிக்கப்பட வில்லையென்றும் டாக்டர் அம்பேத்கர் கூறினார்.

16(4) விதியைக் குறித்து டாக்டர் குறிப்பிட்டுப் பேசுகையில்:

முல்லாவால் எழுதப்பட்ட ‘இந்து சட்டம்’ என்ற புத்தகத்தில் இந்து சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளைக் குறித்து விளக்கியிருப்பதில்,

ஜாதியில்லையென்று சொல்கிறவன் இந்துவாக இருக்க முடியாது

என்பதாக குறிப்பிட்டிருக்கிறது என்று எடுத்துக் காட்டினார்.

அவ்வாறு இருக்கையில், பிற்பட்ட ஒரு சிலருக்கு ஸ்தாபனங்கள் ஒதுக்குவதென்றால், சில ஜாதி மக்களுக்கு ஸ்தாபனங்கள் ஒதுக்குவது என்பதாகும். அவ்வாறு ஒதுக்கப்பட்ட மக்களும் சில ஜாதிகளைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்க முடியும்.

இத்தகைய சூழ்நிலையிலுள்ள ஒரு நாட்டில் ஒரு சில ஜாதிகளை ஒதுக்கி வைக்காமல் மற்றவர்களுக்கு ஸ்தானங்கள் ஒதுக்குவது என்பது முடியாத காரியம்.

எனவே, இத்தகைய காரணங்களினால்தான் அத்தீர்ப்பு மிகவும் திருப்தியற்றதாக இருக்கிறது என்று கூறுகிறேன்.

இச்சமயத்தில் சபையில் பலர் சட்ட மந்திரியைப் பாராட்டி 'கேளுங்கள்' 'கேளுங்கள்' என்றார்கள். சிலர் தலைவரைக் குறுக்கிடுமாறு கேட்டுக் கொண்டார்கள். ஆனால், இவர்கள் சொன்னது அவ்வளவாக கேட்கவில்லை. இதையறிந்த சட்ட மந்திரி டாக்டர் அம்பேத்கர் குறிப்பிட்டதாவது:

இந்த சந்தர்ப்பத்தில் நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் கோர்ட்டுகளில் நீதிபதிகளை நோக்கிப் பேசுகையில், 'தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு நடக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், அதை மதிக்கக் கடமைப்பட்டவனல்ல என்பதாக பல சந்தர்ப்பங்களில் எடுத்துச் சொல்லி வற்புறுத்தியிருக்கிறேன்.

இவ்வுரிமை ஒவ்வொரு வழக்கறிஞருக்கும் உண்டு. நீதிபதியின் தீர்ப்புத் தவறு என்று எடுத்துச் சொல்ல எந்த நியாயவாதிக்கும் உரிமை உண்டு. இவ்வுரிமையை விட்டுக் கொடுக்க நான் தயாராகயில்லை.

கட்டளைக் கொள்கைகளைக் குறித்து விளக்கும் இந்திய அரசியல் சட்டத்தின் 46ஆவது விதியைக் குறித்து டாக்டர் அம்பேத்கர் பேசுகையில், "இவ்விதி, ராஜீய சர்க்கார்கள் எந்த வகுப்பு மக்கள் பிற்பட்டுக் கிடக்கிறார்களோ அவர்களின் நலன்கள் முன்னேறச் சில முறைகளை கட்டளை பிறப்பிப்பது கடமை என்பதாக சுட்டிக் காட்டுகிறேன் என்றும், பலஹீனமான மக்கள் என்று கூறப்படுவது, தனது

சொந்த பலத்தினால் நிற்க முடியாத மக்கள் என்பதே அந்தப் பொருள் என்பதாக தாம் பொருள் கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இக்கடமை நிறைவேற்றப்படுகிறதா என்பதை சர்க்காரும் பார்லிமெண்ட்டும் கவனிக்க வேண்டும். அவ்வாறு கவனிப்பதற்கு இத்திருத்தம் செய்யாமல் போனால் 29(2)ஆவது விதியும் 16(4)ஆவது விதியும் குறுக்கிடுவதைத் தடுக்க முடியுமா என்பதை ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

**- 'விடுதலை', 19.5.1951**

■

Regd. No. 473
Phone : 86977
விலை அணா ஒன்று
இலங்கைக்கு 10 சதம்
திராவிட நாடு திராவிடருக்கே!
விடுதலை
"VIDUTHALAI"
The Leading Tamil Daily
(திராவிடர் தமிழ்த் தினசரி)
Most Popular in the South
விக்ருதி-வரு மார்கழி-மீ 18-உ (2-1-'51) செவ்வாய் * வெளியூர் விக்ருதி-வரு மார்கழி-மீ 19-உ

# 29

## அம்பேத்கர் வெடிகுண்டு!

தாழ்த்தப்பட்ட மக்களின் உயர்வுக்காக இந்திய சர்க்கார் எதுவும் செய்யவில்லை - என்று அதே சர்க்காரில் ஒரு மந்திரியாயுள்ள டாக்டர் அம்பேத்கர் கூறிவிட்டார். இதுபற்றிய பார்லிமெண்டில் பல கேள்விகள் கேட்கப்பட்டன. சரியான பதில் வரவில்லை. எல்லாம் மூடு மந்திரமாகவே இருக்கிறது. டாக்டர் அம்பேத்கர் தம் பதவியை உதறித் தள்ளிவிட்டு வெளியேறுவதற்காகத் துடித்துக் கொண்டிருக்கிறார் என்றும், முதலமைச்சர் நேருதான் நிறுத்தி வைத்திருக்கிறார் என்றும் கூறப்படுகிறது.

புது அரசியல் சட்டத்தை வகுப்பதற்கு முக்கிய காரணஸ்தராயிருந்த டாக்டர் அம்பேத்கர் மற்றப் பிரச்சினைகளில் அதிகமான அக்கறை எடுத்துக் கொள்ளாவிட்டாலும், தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு சலுகைகள் இருக்க வேண்டுமென்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார். தீண்டாமை வழக்கத்தை தண்டனைக்குரிய குற்றம் என்பதாகவும் ஒரு விதியை நுழைத்தார்.

இவ்வளவும் செய்து பார்த்தும், எல்லாம் ஏட்டளவில்தான் இருக்கிறதே தவிர, நடைமுறையில் தாழ்த்தப்பட்ட மக்கள் பழைய நிலையிலேதான் இருக்கின்றனர் என்பதைக் கண்டார். இதை உணர்வதற்கு இவ்வளவு காலம் பிடிக்க வேண்டியதில்லை என்றாலும் இப்போதாவது உணர்ந்து கொண்டாரே என்பது பற்றி மகிழ்ச்சியடைகிறோம்.

ஒரு விஷயத்தில் டாக்டர் அம்பேத்கரை நாம் 100க்கு 100 ஆக ஆதரிக்கின்றோம். தாழ்த்தப்பட்ட மக்கள் ஹிந்து (ஆரிய) மதத்தில் உள்ள வரையில் அவர்களுக்கு விமோசனமே கிடையாது. 'பஞ்சமன்' என்ற பழம் பெயருக்குப் பதிலாக 'ஹரிஜன்' என்ற புதுப் பட்டம்





2 சென்னை 2—5—51 விடுதலை வெளியீடு 3—5—51

திராவிட நாடு திராவிடருக்கே!

விடுதலை

சென்னை 2—5—51 புதன்கிழமை

## அம்பேத்கார் வெடி குண்டு!

## சென்னையில் திராவிட கழகப் பொதுமாநாடு

ஜூன் மாதத் துவக்கத்தில் நடைபெறும்

## திருவிதாங்கூர்-கொச்சி ராஜ்ய தொழில் கல்லூரி மாணவர் சேர்க்கையில் வகுப்புரிமை வேண்டும்

எஸ். என். டி. பி. யோகத்தின் தீர்மானம்

மலையாள தினசரி 'கேரள கமுதி' ஆதரவு

கேரள மக்கள் குமுறலின் எதிரொலி

## பல சரக்கு மூட்டை

"குத்தூசி"

ராஜ(ன்) லீலை!

## காங்கிரசுக் "கோட்டை" விரைந்து காலியாகிறது

கும்பல் கும்பலாக ஏராளமானவர்கள் விலகல்

வட்டாரம் வட்டாரமாகக் கூண்டோடு கை கழுவுகின்றனர்

நேருவும் "பட்டினி" உபதேசியானார்

ஸ்டாம்புகள் விற்கும் மன்னர்கள்

இளவயர்வு கோட்பாடினர் பார்வைக்கு

பம்பாய் தொழிற்சாலை எரிந்தது

சிகரெட் நெருப்பின் விளைவு

ஈரோடு மாநாட்டில் நாடகம்

சேலம் - சிவதாபுரம் திராவிட இளைஞர் மறுமலர்ச்சி நாடகக் குழுவினரால்

'மறுமணம்'

வரலாமே தவிர, வாழ்க்கையில் எந்தவிதமான மாறுதலையும் காண முடியாது. தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களை "ஹிந்துக்கள்" என்று கூறிக் கொள்வதற்கே வெட்கப்படவேண்டும்.

இனி, உத்யோகத் துறையில் இவர்கள் நிலை எவ்வளவு படுமோசமாக இருக்கிறது என்பதைக் கவனிப்போம்.

பார்லிமெண்டில் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் கனம் எட்டவுன்ஸ் மந்திரி ஆச்சாரியாரவர்கள் கூறியுள்ள பதிலின் சாரத்தைக் கீழே தருகிறோம்:

**"அய்.ஏ.எஸ்., அய்.எஃப்.எஸ். ஆகிய தேர்வுகளில் உட்கார்ந்த 2707 பேர்களில் 240 பேர் வெற்றி பெற்றனர். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் 51 பேரும், மலை ஜாதியினர் 2 பேரும் பரீட்சை எழுதியதில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஒருவர் மட்டுமே வெற்றி பெற்றார்."**

240 பேர்களில் ஒரே ஒருவர்தான் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர். ஏனெனில், உயர்ந்த பதவிகேற்ற தேர்வுகளில் போதிய அளவு 'மார்க்' வாங்கவில்லை.

அய்.ஏ.எஸ். அ.எஃப்.எஸ்., அய்.பி.எஸ். ஆகிய மூன்று பெரும் பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களில் சுமார் 100க்கு 40 பேர் வட நாட்டாரும், 100க்கு 50 பேர் தென்னாட்டுப் பார்ப்பனருமாகவே இருப்பதைக் காண்கிறோம். திராவிடர்களில் தமிழர்களில் 100க்கு ஒருவருக்கு மேல் இல்லை.

இம்மாதிரி உத்யோகங்களில் முன்பெல்லாம் 100க்கு 99 பேர் வெள்ளையர்களே இருந்து வந்தனர். அந்த அக்கிரமத்தை ஒழிப்பதற்காகவேதான் அகில இந்திய காங்கிரஸ் என்ற அமைப்புத் தோற்றுவிக்கப்பட்டது. இதை எந்த காங்கிரஸ்வாதியும் மறுக்க முடியாது.

இன்று வெள்ளையர் இருந்த இடங்களையெல்லாம் காங்கிரஸ் பார்ப்பனர்கள் பற்றிக் கொண்டு விட்டனர். இன்னும் தெளிவாகக் கூற வேண்டுமானால் வாணிபத் துறையை வடநாட்டாரும் - உத்தியோகத் துறையைப் பார்ப்பனருமாகப் பங்கு போட்டுக் கைப்பற்றிக் கொண்டு விட்டனர் என்று கூறுவதே பொருந்தும். இவ்விரு துறைகளிலும் திராவிட மக்கள் புகுந்து விடாதபடி சட்ட திட்டங்களை வகுத்துக் கொண்டு விட்டனர். ஒருவருக்கொருவர் கமிஷன் ஏஜெண்டாக இருந்து கொண்டு திராவிடப் பெருங்குடி மக்களை கசக்கிப் பிழிந்து உறிஞ்சிக் கொண்டிருக்கின்றனர்.

கம்யூனல் ஜீ.ஓ. என்ற வகுப்புரிமை ஒழிக்கப்பட்டதும் இந்தத் திட்டத்தைச் சேர்ந்த முயற்சியே தவிர வேறல்ல. இனி இதைப் பிழைக்க



வைக்க முடியாது. அரசியல் சட்டத்திலும் திருத்தம் வராது. இம்மாகாண மந்திரிகளும் செயலற்ற பொம்மைகளாகி விட்டனர்.

கல்லூரிகள் திறப்பதற்கு ஒன்றரை மாதந்தான் இருக்கிறது. 100க்கு 3 விகிதம் தான் (பழைய விகிதப்படி கூடவே கூடாது) பார்ப்பனருக்கு கல்லூரிகளில் இடம் ஒதுக்க வேண்டும் என்ற ஏற்பாடு எந்த வகையிலாவது செய்யப்படுகிறவரையில், கல்லூரிகளைத் திறக்கக் கூடாது என்று வற்புறுத்திக் கூறுகிறோம். மந்திரிமார்களிடம் நமக்கு நம்பிக்கை கிடையாது. சென்ற ஆண்டில் இவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட 12 (பன்னிரண்டு) இடங்களுக்கு (எஞ்சினியரிங் - மெடிக்கல் ஆகிய இரு கல்லூரிகளிலும்) 9 இடங்களில் பார்ப்பன மாணவர்களையே திணித்தவர்கள் இம்மந்திரிகள் என்பதை நாம் அறிவோம். ஆதலால், இவர்களது கம்யூனல் ஜீ.ஓ. ஆதரிப்பு நாடகத்தில் நாம் ஏமாற மாட்டோம். தமிழர்கள் ஏமாற மாட்டார்கள். ஆதலால்தான் இம்மந்திரிகள் முதலில் பதவியை விட்டுப் போக வேண்டும். அதன்மூலம் அரசியலில் நெருக்கடி உண்டாக வேண்டும்.

இனி, உத்தியோக நியமன விஷயமும் இதுபோலத்தான். எண்ணிக்கைக்குத் தகுந்த விகிதாசார முறை வகுக்கப்படும் வரையில், இனி, புதிதாக ஒரு உத்தியோகமும் எவருக்கும் அளிக்கப்படக் கூடாது. அது மட்டுமல்ல, திராவிட மேல் உத்யோகஸ்தர்கள் அனைவரும் தவறிக் கூட எந்தப் பார்ப்பனருக்கும் புது உத்தியோகமோ, உத்தியோக உயர்வோ அளிக்கக் கூடாது. இதிலும் ஒரு பெரிய நெருக்கடியை உண்டாக்கிப் பழிக்குப் பழி வாங்கினாலொழிய நல்லதொரு வழி பிறக்காது.

டாக்டர் அம்பேத்கர் கூறிவிட்ட பிறகும்கூட தாழ்த்தப்பட்ட மக்களில் யாரும் காங்கிரஸ் கட்சியின் சாகசங்களைக் கண்டு ஏமாறுவார்கள் என்று நாம் கருதவில்லை. காங்கிரஸ் கட்சிக்குத் குழி தோண்டும் திருப்பணியில் தாழ்த்தப்பட்ட மக்களே முன்னணியில் நிற்க வேண்டும்.

**- 'விடுதலை', 2.5.1951**

■


Regd. No. 4739
Phone: 86977

ஆட்சியாளர் போக்கு, வேலை யில்லாத் திண்டாட்டத்தையே வளர்க்கும்

நிர்வாகத் திறன் படைத்தவர்கள் யாருமே சர்க்காரில் இல்லை

விலைவாசியை குறைத்தாலன்றி நாடு உருப்படாது

பங்கு மார்க்கெட் தலைவர் எச்சரிக்கை

திராவிடநாடு திராவிடருக்கே!

விடுதலை

(திராவிடர் தமிழ்த் தினசரி)

மலர் 11] சென்னை (1-1-50) ஞாயிறு ★ வெளியீடு (2-1-50) திங்கள்

மதப் பண்பினால் விளைந்து

# 30

# டாக்டர் அம்பேத்கர் மாணவர் இல்லத்தில் அமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகரன்

08.10.1950 அன்று மாலை 5:30 மணிக்கு மத்திய சர்க்கார் துணை சுகாதார அமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகர் அவர்கள் டாக்டர் அம்பேத்கர் மாணவர் இல்லத்தைப் பார்வையிட்டார்கள்.

இல்லம் சிறந்த முறையில் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஜில்லா கலெக்டர், டி.எஸ்.பி., மற்றும் அதிகாரிகள், உள்ளூர் பிரமுகர்கள் ஏராளமாக வந்திருந்தனர்.

இல்லக் காரியதரிசி தோழர் வ.வீராசாமி எம்.பி. இல்லம் நிருவாகக் குழு சார்பில் அமைச்சருக்கு வாழ்த்து இதழ் வாசித்தளித்தார். தலைவர் திரு பி.சிவபிச்சை அவர்கள் மாலை அணிவித்தார்.

அமைச்சர் திருமதி மரகதம் பேசியதன் சுருக்கம்:

திருவாளர் வீராசாமி அவர்கள் இவ்விடுதியைப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். எனக்கும் இவ்விடுதியைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. இதுபோன்ற வரவேற்பும் ஏற்பாடுகளும் இருக்கும் என்று நான் நினைக்கவே இல்லை.

இவ்வளவு அன்புடன் என்னை வரவேற்றுப் பாராட்டியதற்காக நான் என் மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாணவர்களுக்கு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். தற்போது நமது சமுதாயம் இருக்கும் நிலையில் நம் முன்னேற்றத்திற்கு கல்வி மிக முக்கியம். தற்போது நமக்கு சர்க்கார் கொடுக்கும் உதவியை நன்கு பயன்படுத்திக் கொண்டு நாம் மேம்பாடு அடைய வேண்டும்.



விடுதலை - 09-01-1950, பக்கம் - 4

டாக்டர் அம்பேத்கார் மாணவர் இல்லத்தில்

அமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகரன்

திருச்சி, ஜன. 8—

நேற்று மாலை 5-30 மணிக்கு மத்திய சர்க்கார் துணை சுகாதார அமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகரன் அவர்கள் டாக்டர் அம்பேத்கார்மாணவர் இல்லத்தைப்பார்வையிட்டார்கள்.

இல்லம் சிறந்த முறையில் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஜில்லா கலெக்டர், டி. எஸ். பி., மற்றும் அதிகாரிகள், உள்ளூர் பிரமுகர்கள் ஏராளமாக வந்திருந்தனர்.

இல்லக் காரியதரிசி தோழர் வீராசாமி எம். பி. இல்லம் நிர்வாகக்குழு சார்பில் அமைச்சருக்கு வாழ்த்து இதழ் வாசித்தளித்தார். தலைவர் திரு பி. சிவபிச்சை அவர்கள் மாலை அணிவித்தார்.

அமைச்சர் திருமதி மரகதம் பேசியதன் சுருக்கம்:—

திருவாளர் வீராசாமி அவர்கள் இவ்விடுதியைப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். எனக்கும் இவ்விடுதியைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. இது போன்ற வரவேற்புமேற்பாடுகளுப் இருக்கும் என்று நான் நினைக்கவே இல்லை.

இவ்வளவு அன்புடன் என்னைவரவேற்றுப்பாராட்டியதற்காக நான் என் மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாணவர்களுக்கு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். தற்போது நமது சமுதாயம் இருக்கும் நிலையில் நம் முன்னேற்றத்திற்கு கல்வி மிக முக்கியம். தற்போதைய சர்க்கார் கொடுக்கும் உதவியை நன்கு பயன்படுத்திக்கொண்டு நாம் மேம்பாடு அடைய வேண்டும்.

நான் தற்போது வகிக்கும் ...

தாராசிங்குக்குமா எதிர்ப்பு?

கல்கத்தாவில் விபிஷணத்தனம்

கல்கத்தா, ஜன. 8—

டில்லியிலிருந்து கல்கத்தாவுக்கு வந்த அகாலிதளத் தலைவர் மாஸ்டர் தாராசிங்கை எதிர்த்து ...

தென்பகுதி இரயில்வே மென் யூனியன் பொன்மலை கிளை

பொன்மலை, ஜன. 8—

6—1—51 புதன் மாலை 6-30 ...

உத்யோகங்களுக்கு கல்லூரிப் பட்டங்கள்

நிபுணர் கமிட்டி கருத்து

பாகிஸ்தானுக்கு ராணுவ தளவாடங்கள்

நான் தற்போது வகிக்கும் இந்த மந்திரி பதவிக்கு படிப்பு ஒரு முக்கிய காரணம்.

அதனால் மாணவர்கள் கற்கும்போது படிப்பில் மிகவும் கவனம் செலுத்த வேண்டும். மாணவர்கள் கட்சி சம்பந்தம் வைத்துக் கொள்ளாமல் இருப்பது மிகவும் நல்லது. இரண்டு வருடங்களுக்கு

முன்னிருந்ததைவிட தற்போது சர்க்கார் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அளிக்கும் கல்விச் சலுகை அதிகம். சமீபத்தில்கூட 10 லட்சம் ரூபாய் அதிகமாக மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்க மத்திய சர்க்கார் ஒதுக்கியது. இதுபோன்ற பல உதவிகளை சர்க்கார் செய்து வருகிறார்கள்.

மாணவர்கள் இன்னொரு விஷயத்தை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். தாழ்த்தப்பட்ட மாணவர்கள் அறிவிலும் சரி, மற்ற எதிலும் சரி, மற்ற மாணவர்களுக்குக் குறைந்தவர்கள் அல்லர். சந்தர்ப்பத்தால் தாழ்த்தப்பட்ட மக்கள் சமூகத்தில் கீழ்நிலைக்கு வந்து விட்டார்கள். இன்றைக்கு இருக்கும் மாணவர்கள் நாளைக்கு சமூகத்திற்கு முன்னணியில் வேலை செய்யலாம். அதற்கு நீங்கள் இப்போது இருந்தே நேரத்தை வீணாக்காமல் கஷ்டப்பட்டு படித்து வரவேண்டும்.

இங்கு என்னை இவ்வளவு அன்போடு விமரிசையாக வரவேற்று கவுரவித்ததற்காக மாணவர் இல்ல காரியதரிசி திரு.வீராசாமி அவர்களுக்கும், நிருவாகக் குழுவினருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறி முடித்தார்.

தோழர் வீராசாமி நன்றி கூறினார். அமைச்சர் குழுவினருடன் அடுத்த நிகழ்ச்சிக்குப் புறப்பட்டார்.

இந்நிகழ்ச்சியையொட்டி மாணவர்களுக்கு விருந்துணவு அளிக்கப்பட்டது.

தோழர் வீராசாமி எம்.பி. அவர்கள் தம் இல்லத்தில் மத்திய சர்க்கார் துணை சுகாதார அமைச்சர் திருமதி. மரகதம் சந்திரசேகரன் அவர்களுக்கு 7.1.1954 இரவு விருந்தளித்தார்கள். இவ்விருந்தில் டாக்டர் மதுரம் எம்.பி., திருவாளர்கள் நாகப்ப செட்டியார் பி.பி., திரு. தி.பொ.வேதாசலம், டி.டி.வீரப்பா, டாக்டர் அம்பேத்கர் மாணவர் இல்ல நிருவாகக் குழுத் தலைவர் திரு.பி.சிவபிச்சை, திரு. டி.பி.ரத்னம மற்றும் நகர பிரமுர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**- ‘விடுதலை’, 09.01.1954**

■




# 31

# மதத்தின் பேரால் பணந்திரட்டி சாதுக்களை, சன்னியாசிகளைக் கொழுக்க வைப்பது கிரிமனல் குற்றமாகும்

❖ டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் கண்டனம்

இந்தியாவில் உண்மையில் மதம் என்ற ஒன்று இல்லவேயில்லை. விக்கிரகங்களை, சாதுக்களை, சன்னியாசிகளை, அற்புதங்கள் செய்பவர்களை வணங்குவதுதான் மதம் எனக் கருதப்படுகிறது என்று அகில இந்திய சாய் பக்தர்களின் கூட்டத்தைத் துவக்கி வைத்துப் பேசுகையில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:

‘‘மத விஷயத்தில் இந்திய மக்கள் வழி தவறிச் சென்று விட்டார்கள். தவறான கொள்கை கொண்டிருக்கின்றனர். அதே சமயத்தில் மதத்தின் பெயரால் பெரும் பணம் வசூலிக்கத் தலைப்பட்டு விட்டனர். இதையே தொழிலாகக் கொண்டு விட்டனர். இவ்வாறு திரட்டப்பட்ட பணத்தை நியாயமற்ற வழிகளில் ஒழுக்கமற்ற முறைகளில் செலவு செய்கிறார்கள்.

**உலகத்தில் எங்கு பார்த்தாலும் தரித்திரமும் பஞ்சமும் தாராளமாகத் தாண்டவமாடுகிறது. இந்த நிலையில் மதத்தின் பேரால் பணத்தைப் பெருமளவில் திரட்டி அவற்றை சாதுக்களுக்கும் சன்னியாசிகளுக்கு செலவிடுவது கிரிமினல் குற்றமாகும்.**

தருமமோ உதவியோ ஏதாவது செய்யப்படுவதாயின் அவை மிகவும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குச் செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு செய்யப்பட்டால் என்றாவது ஒரு நாள் அவர்களும் மனிதராக வாழ முடியும்''

இக்கூட்டத்திற்கு மத்திய சர்க்கார் உதவி உள்நாட்டமைச்சர் திரு.பி.என்.தத்தர் தலைமை வகித்தார்.

**- 'விடுதலை', 25.1.1954**

■


டெலிபோன் 36977
பதிவு எண் 4789
"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றியான்" —குறள்
விலை அணா: ஒன்று: 4 பக்கம்
இலங்கைக்கு பத்து சதம்
திராவிட நாடு திராவிடருக்கே!
விடுதலை
"VIDUTHALAI"
Leading Tamil Daily
திராவிடர் தமிழ்த் தினசரி
1937-ல் நிறுவப்பட்டது.
Estd. July 1937

32

# உலக புத்த மாநாட்டில் தந்தை பெரியார் - அம்பேத்கர் - மல்லலசேகரா சந்திப்பு

உலக புத்த மாநாட்டுக்குப் பெரியார் அவர்கள் திரு.ஏ.என். நரசிம்மன் பி.ஏ., திரு. க. இராசாராம் பி.ஏ., திருமதி. மணியம்மையார், திருமதி. இராம. கிருஷ்ணம்மாள் முதலியவர்களுடன் அழைப்பினராகச் சென்றார்கள். வரவேற்புக்குழுவினர் பெரியார் அவர்களை வரவேற்று நல்ல இடமளித்தார்கள்.



மாநாடு மிக்க சிறப்பாக மணி 9-50 க்கு ஆரம்பமானது. மாநாட்டின் முதல் நிகழ்ச்சியாக மஹாசங்க நாகுகா பஞ்சசீலம் சொன்னார்கள். பிறகு ஒரு சிறு சொற்பொழிவு ஆற்றினார்கள். மாநாட்டில் பர்மா நாட்டின் ஜனாதிபதி திரு. ஊபாவு அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். புத்த சாசன கவுன்சில் சங்கத் தலைவர் சர். ஊதிவின் தனது வரவேற்புரையை நிகழ்த்தினார்கள். சாசனக் காரியங்களின் மந்திரியான



திராவிட நாடு திராவிடருக்கே!

விடுதலை

திராவிடர் தமிழ்த் தினசரி

9—12—54 வியாழன்

ஜாதிக்குறியா? மதக்குறியா?

## ஆரிய சூழ்ச்சியான புது நாடகமசோதாவை எதிர்த்து முதலமைச்சருக்குத் தந்தி அனுப்பிவிட்டீர்களா? இன்றே செய்யுங்கள்

எஸ். குருசாமி
பொதுச் செயலாளர், திராவிட கழகம்

## பர்மாவில் பெரியார்

ரங்கூன், டிச. 4—

உலக புத்த மாநாட்டுக்குச் சென்றிருக்கும் பெரியார் அவர்கள் கலந்துகொண்ட கூட்டங்கள் நிகழ்ச்சிகள் வருமாறு:—

1-12-54

இன்று இங்கு பெரியார் அவர்கள் இரங்கூனிலிருந்து 7மைல் தூரத்தில் உள்ள தெங்கான்குன் பகுதிக்குச் சென்றார்கள். அங்கு கே. எம். கணபதி அவர்களின் பெண் குழந்தைக்கு 'அறிவுக்கண்' என்று பெயரிட்டார்கள். பின்னர் பெரியார் அவர்கட்கும் மற்றவர்களுக்கும் விருந்தொன்று நடைபெற்றது. இந்த விழா முடிவுற்றதும் பெரியார் அவர்கள் சுமார் 2-30 மணிக்கு இரங்கூன் திரும்பினார்கள்.

3-12-54

### உலக புத்த மாநாட்டில் பெரியார்

இன்று காலை உலக புத்த மாநாட்டிற்குப் பெரியார் அவர்களை திரு. ஏ. என். கரிம்மன் பி. ஏ., திரு. க. இராசாராம் பி. ஏ., திருமதி மணியம்மையார், திருமதி இராம கிருஷ்ணம்மாள் முதலியவர்களுடன் அழைப்பினராகச் சென்றார்கள்; வரவேற்புக் குழுவினர் பெரியார் அவர்களை வரவேற்று நல்ல இடமளித்தார்கள்; மாநாடு மிக்க சிறப்பாக மணி 9-50க்கு ஆரம்பமானது; மாநாட்டின் முதல் நிகழ்ச்சியாக மஹாசங்க நாயகர் பஞ்சசீலம் சொன்னார்கள்; பிறகு ஒரு சிறு சொற்பொழிவு ஆற்றினார்கள். மாநாட்டில் பர்மா நாட்டின் ஜனாதிபதி திரு ஊ பாவு அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்; புத்தசாசன கவுன்சில் சங்கத்தலைவர் சர் ஊ தினின் தனது வரவேற்புரையை நிகழ்த்தினார்கள். சாசனக் காரியங்களின் மந்திரியான ஊ வின் அவர்கள் பல நாட்டுப் பிரதிநிதிகளையும் மற்றவர்களையும் வரவேற்றார்கள். மாநாட்டு வரவேற்புக்குழு...

### சென்னை தோழர்களுக்கு வேண்டுகோள்

சென்னை செக்ரட்ரியேட் கமிட்டி அறையில் கூடுகின்ற செலக்ட் கமிட்டி முன்பு 11ந் தேதியன்று பிற்பகல் 4மணிக்கு கழகத் தோழர்கள் — நடிகர்கள் — ஏராளமாகச் சென்று, புதிய நாடகமசோதாவைக் கைவிட வேண்டிய காரணங்களை எடுத்துக் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எஸ். குருசாமி
(பொதுச்செயலாளர்-
திராவிட கழகம்.)

### ரஷ்யாவில் அணுகுண்டு பாதுகாப்புக் கூடங்கள்

... டிச 8—

அணுகுண்டு தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பு அளிக்கும் பாதாள மன்றங்களைக்கொண்ட இருப்பிடங்களை யூரல் மலைகளில் அமைத்து வருவதாகவும் வேலை மிகவும் இரகசியமாக நடைபெற்று வருவதாகவும் விடுதலைபெற்று வந்துள்ள ஒரு [illegible] தகவல் தெரிவித்திருக்கிறார்.

பெரியார் அவர்களை உலக புத்த மாநாட்டுக்குத் தலைமை வகித்த திரு. டாக்டர் ஜீ. பீ. மல்லலசேகர அவர்கள் தனது தலைமை உரையை முடித்தபிறகு, மாநாட்டுக் கையிலேயே பெரியார் இருந்த இடத்திற்கு வந்து சந்தித்தார்கள். திரு. டாக்டர் அவர்கள் பெரியார் அவர்களின் உடல் நலத்தை விசாரித்ததுடன். தனது வேண்டுகோளுக்கு இணங்க...

ஊவின் அவர்கள் பலநாட்டுப் பிரதிநிதிகளையும் மற்றவர்களையும் வரவேற்றார்கள். மாநாட்டு வரவேற்புக்குழுத் தலைவர் ஊசான்-டூன் அவர்கள் மாநாட்டுச் சார்பாக வரவேற்றார்கள்.

பின்னர் வந்திருந்த வெளி நாட்டு வாழ்த்துச் செய்திகள் படிக்கப்பட்டன. பின்னர் இலங்கையைச் சார்ந்தவரும், ஈரோடு புத்தக் கொள்கைப்பிரச்சார மாநாட்டுக்குத் தலைமை வகித்தவருமான திரு. ஜி.பி. மல்லல சேகரா அவர்கள் மாநாட்டிற்கு தலைமை வகித்து அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். மணி 12 க்கு மாநாடு இடைவேளை உணவுக்காக கலைந்தது.

**பெரியார்-மல்லல சேகரா சந்திப்பு**

புத்த மாநாட்டில் அழைப்பாளராகக் கலந்து கொண்ட திராவிடத் தந்தை பெரியார் அவர்களை உலக புத்த மாநாட்டுக்குத் தலைமை வகித்த திரு. டாக்டர்ஜி.பி. மல்லல சேகரா அவர்கள் தனது தலைமை உரையை முடித்தபிறகு, மாநாட்டுக் குகையிலேயே பெரியார் இருந்த இடத்திற்கு வந்து சந்தித்தார்கள். திரு. டாக்டர் அவர்கள் பெரியார் அவர்களின் உடல்நலத்தை விசாரித்ததுடன், தனது வேண்டுகோளுக்கு இணங்க பெரியார் அவர்கள் மாநாட்டுக்கு வந்தது குறித்து நன்றி செலுத்தினார்கள். அத்துடன் அடுத்த புத்த மாநாட்டுக்கு பெரியார் அவர்கள் ஒரு பவுத்தராகக் கலந்து கொள்ள



வேண்டும் என்பது தனது ஆசை என்றும் கருத்து தெரிவித்தார்கள். இந்த சுற்றுப்பயணத்தில் இலங்கையையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும், இலங்கையில் உள்ளவர்கள் தங்களைக்காண மிக்க ஆவலுள்ளவர்களாக இருப்பதாகவும் தெரிவித்தார்கள். பின்னர் பெரியார் அவர்களுடன் வந்திருந்த திருமதி. மணியம்மையார், திரு. ஏ.என் நரசிம்மன் பி.ஏ., திருமதி. இராமகிருஷ்ணம்மாள், திரு. க. இராசாராம் பி.ஏ., முதலியவர்களையும் நலம் விசாரித்து விட்டு விடைபெற்றார்கள்.

**பர்மாவில் பெரியார் ஈ.வெ.ரா. டாக்டர் அம்பேத்கர் சந்திப்பு**

கபாயே, டிசம். 5- இங்கு உலக புத்த அறநெறி மாநாட்டு அலுவலகத்தில் பெரியார் அவர்களும் டாக்டர் அம்பேத்கர் அவர்களும் காலை 10-20 மணிக்கு சந்தித்தார்கள். டாக்டர் அம்பேத்கர் அவர்கள் பெரியார் அவர்களை தன்னைவிட திடகாத்திர நிலையில் பார்ப்பதற்கு மிக்க மகிழ்ச்சி தெரிவித்தார்கள். இருவரும் ஒரு மணி நேரத்துக்கும் அதிகமாக தனிமையில் பல செய்திகள் குறித்து அளவளாவினார்கள். அவர்கள் பேசுகையில் இந்த உலக புத்த மாநாடு குறித்தும் எதிர்காலத்தில் தாங்கள் இருவரும் எப்படி நாட்டிற்கு வழிகாட்ட வேண்டும் என்பதை பற்றியும் பேசியதாகத் தெரிகின்றது.

பின்னர் பெரியார் அவர்கள் டாக்டர். அம்பேத்கர், டாக்டர்.மல்லலசேகரா முதலியவர்கள் உடனிருக்க புகைப்படம் எடுக்கப்பட்டது.

- 'விடுதலை', 09.12.1954

■




# 33

# எனக்குக் கடவுள் நம்பிக்கை இல்லை - ஆத்மா இல்லை - நான் ஒரு பவுத்தன்

- **மத்திய மேல்சபையில் டாக்டர் அம்பேத்கர் விளக்கம்**
- **பெரிய நாடுகளால் தெற்கு வடக்கு மோதல் ஏற்படுமென எச்சரிக்கை!**

"தனக்குக் கடவுள் நம்பிக்கையில்லை; ஆத்மா என்பதும் எனக்கில்லை; நான் ஒரு பவுத்தன்."

– இது நேற்று (01.05.1956) ராஜ்ய (மத்திய மேல்) சடையில் ராஜ்ய சீரமைப்பு மசோதா விவாதத்தின் போது பேசிய டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் தெரிவித்ததாகும்.

உலகப் பகுத்தறிவு மேதை ராபர்ட் இங்கர்சால் அவர்கள் சாவுப் படுக்கையிலே கிடக்கையில் கிறிஸ்துவ மதக் குருக்கள் அவரை அணுகி, 'மோட்சாதன ஜெபச் சடங்குகள்' செய்வதாகக் கூறித் தெரிவித்தனர்.

அதைக் கேட்டு மேதை இங்கர்சால் ஆக்ரோஷத்துடன் அவர்கள் சடங்கைப் புறக்கணித்தார். அது கண்டு மத குருக்கள், "உன் ஆத்மாவை கடவுள் ஆசீர்வதிக்கட்டும்" என்றனர். இதைச் செவி மடுத்த மேதை இங்கர்சால் தனக்கு கடவுள் நம்பிக்கையுமில்லை; ஆத்மா நம்பிக்கையுமில்லை என்று தெரிவித்த அதே வாசகங்களை நேற்று டாக்டர் அம்பேத்கர் கூறினார்.

டாக்டர் அம்பேத்கர் பம்பாய் நகரை மகாராஷ்டிரத்துடன் சேர்க்கவேண்டுமென்று வாதித்து மாபெரும் ராஜ்யமாகவுள்ள உத்தரப் பிரதேசத்தை (நேரு பிறந்த ராஜ்யம்) மூன்று பகுதிகளாகப் பிரிக்க வேண்டுமென்றும் சொன்னார்.



"VIDUTHALAI" கிராவிடர் தமிழ்த்தினசரி
(LEADING TAMIL DAILY)
விடுதலை
ESTD: 1935

மலர் 17 | சென்னை : துன்முகி ஞூ சித்திரை மீ 20 உ (2-5-56) புதன் ● வெளியூர் துன்முகி ஞூ சித்திரை மீ 21 உ (3-5-56) வியாழன் | 331

# "எனக்குக் கடவுள் நம்பிக்கை இல்லை--ஆத்மா இல்லை-நான் ஒரு பவுத்தன்"

## மத்திய மேல்சபையில் டாக்டர் அம்பேத்கார் விளக்கம்

### பெரிய நாடுகளால் தெற்கு-வடக்கு மோதல் ஏற்படுமென எச்சரிக்கை

புதுடில்லி, மே 2- "எனக்குக் கடவுள் நம்பிக்கையில்லை; ஆத்மா என்பதும் எனக்கில்லை நான் ஒரு பவுத்தன்".

—இது நேற்று ராஜ்ய (மேல்) சபையில் ராஜ்ய சீரமைப்பு மசோதா விவாதத்தின் போது டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் தெரிவித்ததாகும்.

'எனக்கு ஆத்மா இல்லை; நான் ஒரு பவுத்தன் எனவே என் ஆத்மாவைக் காப்பதற்காகப் பிரார்த்தனை செய்யும் சிரமத்தை எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமேயில்லை ... எனக்கு ஆத்மாவுமில்லை எனவே இவ்வகையில் உமக்கு (ஆத்ம காப்புப் பிரார்த்தனை ...) சிரமம் ஏற்படாது செய்து விடுகிறேன்."

## நோயாளியின் வயிற்றில் "டவல்"

### டாக்டர்கள் தவறின் விபரீதம்

## தென்னாட்டில் மேற்கொண்டு 65 நெசவாலைகள்

### லோக் சபையில் தரப்பட்ட கணக்கு

### கார் மோட்டார்களுக்கு நெய்வேலி நிலக்கரி

## பெருமாள் தேருக்குள் பாம்புவாசம்!

## சென்னை கடற்கரையில் "அறுசுசித்"ப் பொருள்

## மக்கள் நலன் கருதிய தலை சிறந்த மேதை புத்தர்

### விஞ்ஞானி சி. வி. ராமன் பாராட்டு

## நாடு சீரமைப்பு கூட்டுக்கமிட்டி

## நிலக்கரி திருத்த நிதி சபையுடன் ரூ.435 கோடி

### தேசிய வளர்ச்சிக் கவுன்சில் கணக்கு

## மாபெரும் மின்சார உற்பத்தி இயந்திரங்கள்

## 4 வடக்கத்திப் பேர்வழிகள் கைது

### 17 ராஜ்யங்களில் ரூ. 80,000 மோசடி செய்தனர்

## எபிரு-இல்ரேல் எல்லையில் பாதுகாப்பு

இதைக்கேட்ட உ,பி. அங்கத்தினர் ஒருவர் "கடவுள் உமது ஆத்மாவைக் காப்பாற்றுவாராக" என்றார்.

இதற்கு டாக்டர் அம்பேத்கர் பகுத்தறிவு மேதை இங்கர்சால் கூறிய அதே வாசகங்களை கீழ்க்கண்டபடி தெரிவித்தார்.

"எனக்கு ஆத்மா இல்லை; நான் ஒரு பவுத்தன். எனவே, என் ஆத்மாவைக் காப்பதற்காகப் பிரார்த்தனை செய்யும் சிரமத்தை



எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமே கிடையாது. கடவுள் இருப்பதாக நான் நம்புவது கிடையாது. எனக்கு ஆத்மாவுமில்லை. எனவே, இவ்வகையில் உமக்கு (ஆத்ம காப்புப் பிரார்த்தனை நடத்தும்) சிரமம் ஏற்படாது செய்து விட்டேன்.''

நேற்று ராஜ்யசபையில் நாடு சீரமைப்பு மசோதா விவாதத்துக்குத் தொடர்ந்து எடுத்துக் கொள்ளப்பட்டதும், பம்பாய் நகர உரிமை முழக்கமே வலுத்திருந்தது. சட்டசபையில் சொல்லாற்றல் பெரும் பீரங்கிகளும் அனுபவசாலிகளுமான டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரும், எச்.என்.குன்ஸ்ருவும், பம்பாய் நகரம் மகாராஷ்டிர நாட்டுடன் சேர்க்கப்படவேண்டுமென்ற உரிமைக் கோரிக்கையை வலியுறுத்தினர். ஆனால், இருவருக்கும் நாடமைப்பு, முறையில் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. பம்பாய் நகரைத் தலைநகராகக் கொண்ட மகாராஷ்டிரம் அமைக்கப்படவேண்டுமென்றார் டாக்டர் எச்.என்.குன்ஸ்ரு.

டாக்டர் அம்பேத்கரோ பம்பாய் மகாராஷ்டிரத்தின் ஒரு பகுதி என்பதை அங்கீகரிக்க வேண்டுமென்றும் ஆனால், பம்பாய் நகரம் ஒரு நகர ராஜ்யமாக இருக்கலாம் என்றார்.

டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் வெளியிட்ட கருத்தாவது:-

இந்தியாவின் தலையாய சிறப்புக்கொண்ட பெருநகரமான பம்பாய் இப்போது அந்தமான் நிக்கோபார் தீவுகளின் அந்தஸ்துக்கும் தாழ்த்தப்பட்டு யூனியன் வட்டாரமாகவும் ஆக்கப்பட்டுள்ளது.

இம்மாதிரி 'பைத்தியக்கார'த்தனத்தை யாரும் வெறிக்கனவில் கூட நினைத்திருக்கமாட்டார்கள்.

நில அமைப்புத் துறையில் பம்பாய் நகரம் மகாராஷ்டிரத்துடன் சேர்ந்ததென்பதை எல்லாரும் அறிவித்துள்ளனர்.

ஆனால், குஜராத்திகளோ இந்நகர் மீது ஏதோ ஒரு வகையில் உரிமை பாராட்டுவதாகத் தெரிகிறது. இந்நகரம் மகாராஷ்ரத்துக்குப் போவதை இவர்கள் விடமாட்டார்கள் கல்கத்தா மேற்கு வங்கத்துக்கு போகக்கூடாதென்று யாரும் உரிமை பாராட்டியதில்லையே? இந்நாடமைப்பு விஷயத்தில் எனக்கும் மற்ற மகாராஷ்டிரர்களுக்கும் கருத்து வேற்றுமைகள் உள்ளன. இரண்டு மகாராஷ்டிர நாடுகள் ஏற்படவேண்டும் என்கிறேன் நான்.





இதேபோல் உத்தரப் பிரதேச ராஜ்யத்தை மூன்றாகவும், பீகாரை இரண்டாகவும், மத்தியப் பிரதேசத்தை இரண்டாகவும் பிரிக்க வேண்டும்.

இது மொழிவாரிக் கொள்கையைப் பாதிக்காது. ஆனால், நல்ல முறையில் நிருவாகம் நடத்தவும் நிருவாகிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் பயிற்சியளிக்கவும் உதவியாகும்.

ராஜ்யங்கள் பெரிதாக இருக்கா விட்டால் பிற்காலத்தில் தெற்குக்கும் வடக்குக்கும் ஏதாவது மோதல்கள் ஏற்படக்கூடும்.

உ.பி., ராஜஸ்தான், பீகார் மற்றும் இதுபோல் பெரிய பாம்பு போன்ற மாகாணங்கள் ஏற்படுவதை நான் எதிர்ப்பதைப் போன்றே அய்க்கிய மகாராஷ்டிரம் ஏற்படுவதையும் எதிர்க்கிறேன்.

இது அரசியல் விளைவுகள் நிறைந்த கடுமையான பிரச்சினையாகும்.

அமெரிக்க அய்க்கிய நாடுகளில் பல்வேறு ராஜ்யங்கள் வெவ்வேறான மக்களைக் கொண்டிருக்கின்றன. ஆனால், இது அங்கு பொருட்படுத்தப்பட வேண்டியதில்லை. ஏனெனில், அங்கு ராஜ்யங்களுக்கு கீழ்சபை (மத்திய)க்குள்ள சரிசம உரிமைகள் கொண்டிருக்கின்றன.

இந்தியாவிலே வடக்கத்திய நாடுகள் தெற்கத்தி நாடுகளுக்கு எதிராகக் கூட்டணி ஏற்படுத்திக்கொண்டு தென்னாடுகள் நலனுக்கும் அக்கறைக்குமான ஒவ்வொரு விஷயத்திலும் நிலவரத்திலும் இந்த வடநாடுகள் ஆதிக்கம் செலுத்தும் என்றும் எண்ண இடமிருக்கிறது.

இம்மாதிரி ஏற்படுமேயானால் அப்போது உள்நாட்டுப்போர் ஏற்படுமென்று நான் அஞ்சுகிறேன். இப்படிக் கூறுவதில் நான் மிகைப்பட்ட பேச்சுப் பேசுவதாக இருக்கலாம்.

ஆனால்,இம்மாதிரி விஷயம் நடந்த காலத்திலும் நடந்துதானிருக்கிறது. வடக்குக்கும் தெற்குக்கும் பல்வேறு வேற்றுமைகள் இருக்கின்றன என்பதற்கு எண்ணற்ற உதாரணங்களிருக்கின்றன.

ராஜ்ய சீரமைப்புக் கமிஷன் அங்கத்தினராக இருந்த டாக்டர் எச்.என்.குன்ஸ்ரு எம்.பி., இம்மசோதாவைப் பற்றிப் பேசுகையில் பம்பாய் நகரை மகாராஷ்டிரத்தின் தலைநகரமாக்க வேண்டுமென்று வாதித்து டாக்டர் அம்பேத்கர் வெளியிட்ட சில கருத்துகள் பற்றித் தெரிவித்ததாவது:



தெற்கத்தி நாடுகளுக்கும் வடக்கத்தி நாடுகளுக்கும் உருவம் சிறிதும் பெரிதுமாக இருப்பது பற்றி டாக்டர் அம்பேத்கர் குறிப்பிட்டார். நாடு சீரமைப்புக் கமிஷன்தான் இப்படிச் செய்து விட்டதாக அவர் நினைப்பதாகத் தெரிகிறது; இது உண்மையல்ல.

கமிஷன் சிபார்சுபடி மைசூர் பெரிதாக்கப்படுகிறது. எனவே தென்னாட்டை ‘பாஸ்கானில்தான்’ (சிறிய நாடுகளாகத் துண்டாடுவது) செய்துவிட்டதாக கமிஷன் மீது குற்றம் சுமத்த முடியுமா? ஆந்திரா –தெலுங்கானாவும் இணைகின்றன.

வடஇந்திய மக்களை “பாப்பு ஜனங்கள்” என்றார் டாக்டர் அம்பேத்கர். இதை அவர் பழியாகக் கூறினாரா அல்லது வேறு ஏதாவது தனிக்கருத்தில் கூறினாரா என்று எனக்குத் தெரியவில்லை.

மத்தியப் பிரதேசம் மேற்குவங்கம் ஜனத்தொகை ஒவ்வொன்றுக்கும் சுமார் இரண்டரை கோடியே. பீகார் ஜனத்தொகை 4 கோடி; ஆந்திரா ஜனத்தொகை 3 கோடி; தமிழ்நாடு ஜனத்தொகையும் இதே அளவிருக்கும்.

எஸ்.சி.கரையாளர் (காங்கிரஸ்): கேரள நாடு சிறிதாக இருக்குமாகையால் அங்கு நிரந்தரமான மந்திரிசபை ஏற்பட முடியாது. எனவே, கேரளம் விரிவாக்கப்படவேண்டும் அல்லது சென்னை ராஜ்யத்துடன் சேர்க்கப்பட வேண்டும்.

**- ‘விடுதலை’, 2.5.1956**

■


Regd. No. M. 4789

விடுதலை

"VIDUTHALAI" திராவிடர் தமிழ்த்தினசரி

(LEADING TAMIL DAILY)

ESTD: 1935

1935 நிறுவனம்

# 34

# மதமாற்றம் தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமையைப் பாதிக்காது

- **சுயமரியாதைக்காகப் போராடுகிறோம்; எந்த தியாகம் செய்யவும் தயார்**
- **விஷமப் பிரச்சாரத்துக்கு டாக்டர் அம்பேத்கர் அறைக்கூவல்**

மதத்தின் பேரால் பல நூற்றாண்டு காலமாக நாங்கள் சொல்லமுடியாத கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வந்தோம். தீண்டப்படாத மக்களுக்கு புத்தர் கொள்கை ஒன்றுதான் விமோசனம் - நம்பிக்கை அளிப்பதாக இருக்கிறது என்பதாக டாக்டர் அம்பேத்கர் அவர்கள் மற்ற மதங்களைவிட புத்தர்கொள்கையைத் தாம் ஏன் தேர்ந்தெடுத்தார் என்பதற்கு விளக்கம் கூறினார். 15.10.1956 அன்று மாலை இங்கு நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் ஷெடியூல்டு வகுப்பார் புத்தர் கொள்கையை பின்பற்றுவதால் அரசியல் சட்டப்படி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் கிடைக்காமல் போகும் என்று சிலர் பிரச்சாரம் செய்வதற்கும் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் தக்க பதிலளித்தார் மேற்படி கூட்டத்தில் புத்தர் கொள்கையை நாங்கள் தழுவிய பின்னரும் அரசியல் சட்டத்தில் ஷெடியூல்டு வகுப்பு மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் உரிமைகளை பெற்றுவருவோம். நியாயமான அந்த உரிமைக்காகப் போராடுவோம்.

இன்று அரசியல் சட்டத்தில் ஷெடியூல்டு வகுப்பாருக்கு வழங்கப்பட்டிருக்கும் எல்லா சலுகைகளும் தமது உழைப்பின் பலன் என்பதாகக் கூறினார். அவைகளை - அந்த சலுகைகளை எவ்வாறு உங்களுக்கு நீட்டிக்கச் செய்வது என்பது எனக்கு தெரியும் என்றார். நாம் சுயமரியாதைக்காக போராடுகிறோமே தவிர வெறும்



[முன் பணமாக]

ஆண்டு ஒன்றுக்கு ரூ. 24-0-0
ஆறு மாதத்திற்கு ரூ. 12-0-0
மூன்று மாதத்திற்கு ரூ. 6-0-0
ஒரு மாதத்திற்கு ரூ. 2-2-0

விடுதலை

'VIDUTHALAI' ESTD:1935.

திராவிடர் தமிழ்த் தினசரி

மலர் 18 | சென்னை: துன்முகிஞூ புரட்டாசி மீ 31 உ (16-10-56) செவ்வாய்

"மதமாற்றம் தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமை...

**"சுயமரியாதைக்காகப் போராடுகிறோம்; எந்த 'தியாகம்' செய்யவும் தயார்"**

**விஷமப் பிரசாரத்துக்கு டாக்டர் அம்பேத்கார் அறைகூவல்**

நாகபுரி, அக். 16—

"மதத்தின் பேரால் பல நூற்றாண்டுகாலமாக நாங்கள் சொல்லமுடியாத கொடுமைகளுக்குள்ளாக்கப்பட்டு வந்தோம். தீண்டப்படாத மக்களுக்கு புத்தர்கொள்கை ஒன்றுதான் விமோசனம் நம்பிக்கையளிப்பதாக இருக்கிறது." என்பதாக டாக்டர் அம்பேத்கார் அவர்கள், மற்ற மதங்களை விட புத்தக் கொள்கையைத் தாம் ஏன் தெரிந்தெடுத்தார் என்பதற்கு விளக்கம் கூறினார், நேற்று மாலை இங்கு நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில்.

ஷெடியூல்டு வகுப்பார் புத்தர் கொள்கையைப் பின்பற்றுவதால், அரசியல் சட்டப்படி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் கிடைக்காமல் போகும் என்று சிலர் பிரச்சாரம்செய்வதற்கும் டாக்டர் அவர்கள் தக்க பதிலளித்தார் ஷெ கூட்டத்தில்.

"புத்தர் கொள்கையை நாங்கள் தழுவிய பின்னரும், அரசியல் சட்டத்தில் ஷெடியூல்டு வகுப்பு மக...

எனக்கு இன்று நேற்று ஏற்பட்டதல்ல; 1935-ம் ஆண்டிலே நான் முடிவு செய்துவிட்டேன்.

"நான் இந்துவாக பிறந்திருந்தாலும், நான் ஒரு இந்துவாக சாகமாட்டேன் என்பதாக அன்றே நான் சூளுரைத்திருக்கின்றேன்.

அவசர நடவடிக்கைகளில் எனக்கு நம்பிக்கை யில்லை. எனவே இருபது ஆண்டுகளுக்குப்பின் நன்கு ஆலோசித்து இந்த முடிவுக்கு வந்தேன்.

"கண்ணை மூடிக்கொண்டு எவரும் என்னைப் பின்பற்ற வேண்டுமென்று நான்யாரையும் கேட்டுக்கொள்ளவில்லை. புதிய கொள்கைகளை ஒவ்வொருவரும் சிந்தித்துப்பார்த்து அதன் பலாபலன்களை உணர்ந்து பின்பற்ற வேண்டும்.

"நீண்ட நெடுநாட்களாக மதத்தின் பெயரால் சொல்ல முடியாத கொடுமைகளுக்குள்ளாகி வந்த தீண்டப்படாத மக்களின் விடுதலைக்கு புத்தர்கொள்கையை வி...

**தாழ்த்தப்பட்டோருக்கு வயதில் சலுகை**

தமிழ்நாட்டு சர்க்கார் முடிவு

சென்னை அக் 16—
ஷெடியூல்டு வகுப்பு ஷெடியூல்டு மலைவாசிகள் ஆகியவர்களைச் சேர்ந்தவர்கள் சர்க்கார் வேலையில் சேருவதற்காக நிர்ணயம்செய்யப் பட்டிருக்கும் குறைந்தபட்ச கல்வி யோக்கிதாம்சம், வயதுஎன்ப ... வயதின் அளவைசிவருடம் அதிகரிப்பதென தமிழ்நாட்டு சர்க்கார் சென்னைபப்ளிக் சர்விஸ் கமிஷனைக் கலந்து முடிவுசெய்திருக்கின்றனர் எனத் தெரிகிறது.

**ஆந்திர சட்டசபை காங்கிரஸ்**

தலைவர் தேர்தல் போட்டி

கர்னூல் அக் 16—
ஆந்திரா சட்டசபை காங்கிரஸ் கட்சித் தலைமைப் பதவிக்கு போட்டியிடுவதை வலியுறுத்தியிருக்கிறார் ஆந்திர முதலமைச்சர் திரு. பி. கோபால் ரெட்டி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்:

அவரை போட்டியிடுவதிலிருந்து விலகிக் கொள்ளுமாறு காங்கிரஸ் மேலிடம் ஆலோசனைக் கூறியிருப்பதாக வெளிவந்துள்ள செய்தி தவறானதும் மக்களைத் தப்பான வழியில் திருப்பக்கூடியதுமாகும் என்றார்.

**சென்னையிலிருந்து 300 மலையாளி ஊழியர்கள் வெளியேற்றம்**

*தனி ரயிலில் அனுப்பிவைக்கப்படுவர்!*

...மேற்கொள்ளச் செய்யும் சாதனத்தை ஏற்படுத்தும் உத்தேசம் எனக்கிருக்கிறது.

இம்மதமாற்றத்திற்காக வெளிநாட்டுதவியை நான் எதிர்பார்க்கவில்லை. நான் இந்நாட்டு மக்களையே நம்பி இதிலிறங்கியிருக்கின்றேன்.

சமூகப்பணிக்காகவும் இப்புது மதமாற்றத்திற்காகவும் நீங்கள் ...

சென்னை, அக். 16—
சென்னை நகரிலிருந்து சுமார் 300 சர்க்கார் ஊழியர்கள் புதிய கேரள மாநிலசர்க்காருக்கு மாற்றப்படுவார்கள். அவர்கள் பதவிகளிலிருந்து இம் மாதம் 19ந் தேதி விடுவிக்கப்படுவார்கள். நவ. 1ந் தேதி திருவனந்தபுரத்துக்குச் சென்று வேலையில் சேருமாறு அவர்களுக்கு உத்தரவிடப்படும்.

இந்த ஊழியர்களின், அக்டோ...

பொருள் லாபத்திற்காக அல்ல; இந்த லட்சியத்தை அடைய எவ்வித தியாகத்தையும் செய்ய தயாராக இருக்கிறோம் என்பதாக அழுத்தம் திருத்தமாக டாக்டர் கூறினார்.

ஒருவர் தனது மத நம்பிக்கையை மாற்றி கொள்வதனாலேயே அவருக்கு அளிக்கப்பட்டுள்ள எல்லா சலுகைகளையும் இழந்தவராவார் என்பது விஷமத்தனமான பிரச்சாரம் என்று டாக்டர் கூறினார். இவ்வாறு பிரச்சாரம் செய்வதன் நோக்கம் நாம் என்றென்றும் இந்து மதத்திலே அழுந்தி கிடக்க வேண்டுமென்பதே ஆகும் என்றும், இத்தகைய சந்தேகங்களை தாழ்த்தப்பட்டோர் மனதிலிருந்து அடியோடு அகற்றவேண்டிது முதல் வேலை என்பதாக கூறினார். மேலும், அவர் பேசுகையில், கூறியதாவது. இந்து மதத்தைவிட்டு வெளியேற வேண்டும் என்ற கருத்து இன்று நேற்று ஏற்பட்டதல்ல; 1935ஆம் ஆண்டிலே நான் முடிவு செய்துவிட்டேன். நான் இந்துவாக பிறந்திருந்தாலும்

நான் ஓர் இந்துவாக சாகமாட்டேன் என்பதாக அன்றே நான் சூளுரைத்திருக்கின்றேன். அவசர நடவடிக்கைகளில் எனக்கு நம்பிக்கை இல்லை. எனவே, இருபது ஆண்டுகளுக்கு பின் நன்கு ஆலோசித்து இந்த முடிவுக்கு வந்தேன். கண்ணை மூடிக்கொண்டு எவரும் என்னை பின்பற்ற வேண்டும் என்று நான் யாரையும் கேட்டுக்கொள்ளவில்லை புதியக் கொள்கைகளை ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்த்து அதன் பலாபலன்களை உணர்ந்து பின்பற்ற வேண்டும். நீண்ட நெடுநாட்களாக மதத்தின் பேரால் சொல்லமுடியாத கொடுமைகளுக்கு உள்ளாகி வந்த தீண்டப்படாத மக்களின் விடுதலைக்கு புத்தர் கொள்கையைவிட வேறு சிறந்த மதம் இல்லை.

இந்து மதம் ஜாதி முறைகளையும், உயர்வு தாழ்வு என்ற வேற்றுமைகளையும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இதில் சிக்குண்டு கிடந்த தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு இந்துமதம் எவ்வித விமோசனமோ வாய்ப்போ அளிக்கவில்லை. மனிதன் வெறும் ரொட்டியில் மட்டும் உயிர்வாழ முடியாது. மனிதனது அறிவுக்கு உணவு வேண்டும், மதம் மனிதனுக்கு நம்பிக்கையூட்டி செயலிலீடுபடச் செய்கிறது. ஆனால், ஒடுக்கப்பட்ட மக்களின் ஊக்கத்தை சிதறடித்துவிட்டது இந்துமதம். எனவே, அதைவிட்டுவிட்டு வெளியேறி புத்தர் கொள்கையை பின்பற்றலானேன்.

இந்துமதம் - புத்தமதம் சமத்துவத்தையும், நீதியையும் அடிப்படையாகக் கொண்டது. ஜாதிபிரிவினைகளுக்கு இதில் இடமில்லை. புத்தர் கொள்கையை இந்த நாடெங்கும் என்னால் ஆனமட்டும் பரப்புவேன். புத்தர் கொள்கையின் அடிப்படைத் தத்துவமே மனித சமுதாயத்தை துன்பத்திலிருந்து விடுவிப்பதாகும்.

புத்தர் கொள்கையைப் பற்றி பிரச்சாரம் செய்ய வெகுதூரத்திலிருந்து பிக்குகள் எப்போதும் வந்துகொண்டிருக்க முடியாது. எனவே, சாதாரண பவுத்தர் ஒருவரே மக்களை பவுத்த நெறியில் திருப்புவதற்கான வேலையை மேற்கொள்ள செய்யும் சாதனத்தை ஏற்படுத்தும் உத்தேசம் எனக்கிருக்கிறது.

இம்மதமாற்றத்திற்காக வெளிநாட்டு உதவியை எதிர்பார்க்கவில்லை. நான் இந்நாட்டு மக்களையே நம்பி இதில் இறங்கி இருக்கிறேன். சமூகப்பணிக்காகவும் இப்புது மதமாற்றத்திற்காகவும் நீங்கள் உங்கள்

வருமானத்தில் 5 சதவிகிதம் அளித்தால் போதும். இந்நாட்டில் உள்ளவர்களை மட்டுமல்ல; இந்த உலக மக்களையே முன்னேற்றமடைய செய்துவிடலாம் என்றார்.

நாகபுரியை இம்மதமாற்றத்திற்கு ஏன் தேர்ந்தெடுத்தீர்கள் என்று கேட்டதற்கு, ஆரியர்கள் நாகர்களை தங்களின் பரம விரோதிகளாக கருதி வந்தார்கள். பல கொடுமைகள் இழைத்தார்கள். அவர்களை காக்க புத்தபெருமான் தோன்றினார். இதன் விளைவாக நாகபுரி மக்களுக்குதான் முதன்முதலில் அவர் உபதேசம் செய்தார். எனவே, முதன் முதலில் புத்தபெருமான் எந்த மக்களுக்காக உபதேசம் செய்தாரோ அந்த மக்கள் வாழ்ந்த இடமாகிய நாகபுரியை நான் தேர்ந்தெடுத்தேன் இம்மதமாற்றத்திற்கு என்பதை தவிர ஆர்.எஸ். எஸ்காரர்களை கொடுமைப்படுத்தவோ அல்லது அவர்களுக்கு அறைக்கூவல் விடுக்கவோ நான் விரும்பவில்லை. அந்த எண்ணமே என் மனதில் எழவில்லை. நாகர்கள் வாழ்ந்த இடமென்றதனால் இதை தெரிந்தெடுத்தேன் என்றார்.

இலங்கை பிக்கு எச்.சத்தாதிஸ்ஸா முதலில் பேசுகையில் இந்த சடங்கை மதமாற்ற சடங்கு என்று அழைப்பது தவறு என்றும் புத்தர் இந்த நாட்டிலே பிறந்தவர். ஆதலால், இன்று புத்தர்க் கொள்கையைப் பின்பற்றுகிறோம் என்று எவரேனும் சொன்னால் பழைய நிலைக்கு தங்களை ஆக்கிக்கொள்கிறார்கள் என்றுதான் கொள்ளவேண்டுமென்றார்.

16.10.1956 டாக்டர் அம்பேத்கருடன் புதிய கொள்கையை தழுவாதிருந்தவர்களுக்கு குஷிநாரா பிக்கு மஹாதேரா சங்கராமணி அவர்கள் மூன்று சரணங்களையும் பஞ்ச சீலங்களையும் கூறி உறுதி எடுக்கச்செய்து எண்ணற்றவர்களை பவுத்தக் கொள்கையை பின்பற்றச் செய்தார்.

அவுரங்காபாத்திலிருந்த கல்லூரி தலைவர் திரு.எம்.பி.சிட்னிஷ் மேற்படி கல்லூரி ரிஜிஸ்தார் திரு.பி.எச்.வய்ராலி டாக்டர் அம்பேத்கரின் இரு புதல்வர்களான யெஸ்வந்தா, முகந்தா ஆகியவர்கள் உட்பட பலர் சேர்ந்தனர்.

**- 'விடுதலை', 16.10.1956**

■


Regd. No. M. 4789

திராவிட நாடு திராவிடருக்கே!

விடுதலை

"VIDUTHALAI" திராவிடர் தமிழ்த்தினசரி

(LEADING TAMIL DAILY)

ESTD: 1935

1935 நிறுவனம்

# 35

# டாக்டர் அம்பேத்கர் தலைமையில் 3 லட்சம் பேர் பவுத்த நெறியைத் தழுவினர்

- **ஆரிய மதச் சேற்றிலிருந்து கூண்டோடு வெளியேற்றம்**
- **நான் இனி இந்துக் கடவுள்களை வணங்கப் போவதில்லை**

இந்திய வரலாற்றிலேயே கண்டறியாத ஒரு மாபெரும் மத புரட்சி 14.10.1956 அன்று நாகபுரியில் நடந்தேறியது. ஆரிய மதத்திலிருந்து டாக்டர் பி. ஆர். அம்பேத்கர், அவரது மனைவி மற்றும் உயர்தர அதிகாரிகள் ஆகியவர்கள் தலைமையில் தாழ்த்தப்பட்ட மக்கள் என்று சொல்லப்பட்டு வந்த ஆண்கள் பெண்களுட்பட சுமார் 3 லட்சம் பேர் பவுத்த நெறியைத் தழுவினர்.

இம்மதப்புரட்சி நாகபுரியிலுள்ள பவுத்த ஜன சமிதியின் கிளையினரால் நடத்தி வைக்கப்பட்டது. இந்தியாவில் உள்ள புத்த பிக்குகளிலேயே வயது மிகுந்த 83 வயதுள்ள குஷினா ராவைச் சேர்ந்த மஹாதேரா என்ற பவுத்த பிக்கு; டாக்டர் அம்பேத்கரையும் அவரைச் சேர்ந்தவர்களையும் புத்த நெறியைத் தழுவச் செய்யும் சடங்கை நிறைவேற்றி வைத்தார்.

இது போன்று லட்சக்கணக்கான பேர் தழுவும் பெரிய சடங்கு உலகில் வேறெங்கும் நடக்கவில்லை. நகரத்தின் வெளியே திறந்தவெளியில் வைபவம் நடத்தது. ஒரே மக்கள் கடல்! எங்கு நோக்கினும் மக்கள் தலைகள். நேற்று அதிகாலையிலிருந்து ஆயிரக்கணக்கில் மக்கள் ஆண்கள் - பெண்கள் - சிறுவர்கள் உட்பட சாரை சாரையாக பல



REGD.NO:M.4789.
PHONE NO:86977.
LEADING TAMIL DAILY.

விடுதலை

'VIDUTHALAI'
ESTD:1935.
திராவிடர் தமிழ்த் தினசரி
4 பக்கம் விலை அணா 1.
இலங்கைப்பத்து சதம்

கோயில்களில் இரத்த வெள்ளம்!

சென்னை: துன்முகிஷு புரட்டாசி மீ 30 உ (15—10—56) திங்கள்
வெளியூர்: துன்முகிஷு புரட்டாசி மீ 31 உ (16—10—56) செவ்வாய்

# டாக்டர் அம்பேத்கார் தலைமையில் 3 லட்சம் பேர் பௌத்த நெறியைத்தழுவினர்

## ஆரிய மதச் சேற்றிலிருந்து கூண்டோடு வெளியேற்றம்

"நான் இனி இந்துக் கடவுள்களை வணங்கப்போவதில்லை" —டாக்டர் அம்பேத்கார்

## கூட்டுறவு முறையில் மருத்துவமனை

அய்தராபாதில் நிறுவனம்

## "தீபாவளி கொண்டாடாதீர்கள்"

குஜராத்தியர் கழக வேண்டுகோள்

## புழுங்கலரிசி விலை ஏற்றம்

## டில்லிநகருக்கு ஆபத்து சூழ்கிறது

யமுனை வெள்ளம் செங்கோட்டையை எட்டியது

## டாக்டர் அம்பேத்கார்

தேர்தலில்போட்டியிடுவோர்

## உதவி பெறும் பள்ளிகளின் ஆசிரியர்கள்

62 வயது வரை வேலைபார்க்கலாம்

பகுதிகளிலிருந்தும் அந்த இடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். நேரம் ஆக ஆக தெருவெல்லாம் மக்கள் வெள்ளம், இதனால் போக்குவரத்தே நிற்க வேண்டியதாயிற்று.

நாகபுரிக்கு அடுத்துள்ள ஊர்களிலிருந்தும், மகாராஷ்டிராவிலிருந்தும் ரயில்கள், பஸ்கள், இதர வாகனங்கள் முதலியவைகள் மூலம் வெள்ளிக்கிழமை பிற்பகலிலிருந்தே ஆயிரக்கணக்கில் மக்கள்

வந்து குவிந்தவண்ணமாயிருந்தனர். ரயில்கள், பஸ்கள் எதைப் பார்த்தாலும் ஒரே கூட்டம் யாரைக் கேட்டாலும் டாக்டர் அம்பேத்கர் மத வெளியேற்றத்தில் கலந்து கொள்ள போவதாகக் கூறினர்.

டாக்டர் அம்பேத்கரும் அவரது மனைவி சவிதாபாயும் முதலில் சந்திரமாரி பிக்குவால் புதிய புத்தநெறி தழுவும் சடங்கை நிறைவேற்றி வைக்கப்பட்டனர்.

புதிய நெறியைப் பின்பற்றுவதற்காக எடுத்துக் கொள்ளவேண்டிய உறுதிமொழிகளும் மூன்று பிரணாமங்களும் 10 நிமிடங்களில் செய்து முடிக்கப்பட்டன, அதன் பின் டாக்டர் அம்பேத்கரும், அவரது மனைவியாரும் அவர்களைச் சேர்ந்த மற்றவர்களுக்கு மேற்படி உறுதி மொழிகளை மராத்தி மொழியில் நிறை வேற்றிவைத்தார்கள்,

டாக்டர் அம்பேத்கருடன் பவுத்த நெறியை பின்பற்றியவர்களில் முக்கியமான சிலர்.

அகில இந்திய ஷெடியூல்டு வகுப்பு சம்மேளனப் பொதுச் செயலாளர் திரு.கோப்ரகாடே, மகாராஷ்ட்ரா ஷெடியூல்டு வகுப்பு சம்மேளனத் தலைவர் திரு.பாபுராவ் கெய்க் வாட். மேற்படி சம்மேளனத்தின் செயலாளர் சாந்தாபாய்தானி, விதர்பாவைச் சேர்ந்த திரு.பி.சி.காம்பிளி எம்.எல்.ஏ., திரு.ஹரிதாஸ் காவோடே எம்.எல்.சி., மற்றும் மத்திய பிரதேச ஷெடியூல்டு வகுப்புச் சம்மேளனத்தின் இதர தலைவர்கள்.

நேற்றுக் காலை 9-15 மணிக்கு டாக்டர் அம்பேத்கரும் அவரது மனைவியாரும் சந்திர மாரி பிக்குவுடன் நூற்றுக்கணக்கானவர்கள் பின் தொடர பந்தலை வந்தடைந்கார்கள், டாக்டர் தூய வெள்ளை நிற ஆடையணிந்திருந்தார். அவர் மேடை மீது ஏறியதும் விண்ணதிர கைதட்டி பாராட்டினர்.

புத்தம் சரணம் கச்சாமி.
தம்மம் சரணம் கச்சாமி,
சங்கம் சரணம் கச்சாமி''

என்ற மூன்று சரணங்களை தலைமை பிக்கு ஒலித்து சடங்கை தொடங்கு கையில், எண்ணற்ற' காமிராச்காரர்கள் ' கிளிக்'' கிளிக்' என்ற சத்தத்துடன் படம் எடுத்தார்கள்.

தழுவுதல் சடங்கு முடிந்ததும், டாக்டர் அம்பேத்கரும் அவரது மனைவியாரும் புத்தர் சிலைக்குச் சென்று மாலையிட்டு தங்கள் வணக்கத்தைச் செலுத்தினர். பின்னர் இருவரும் பின்வரும் உறுதிமொழிகளை மராத்தியில் சொன்னார்கள் அதனை மற்றவர்கள் திருப்பி மொழிந்தார்கள்.

''பிரம்மா, விஷ்ணு, மஹேஸ்வரன் கணபதி, மற்றுமுள்ள இந்து 'கடவுள்களை நான் கடவுளாகவே கருதமாட்டேன்.

நான் 'பிந்துதானம்' கொடுக்க மாட்டேன்.

நான் கடவுள் அவதாரங்களை நம்பமாட்டேன்.

எந்தவித சிரார்த்த சடங்குகளிலும் நம்பிக்கை கொள்ள மாட்டேன்.

புத்த பெருமானை விஷ்ணுவின் அவதாரம் என்று நம்பமாட்டேன். அவ்வாறு கூறுவது பொய்பான விஷமத் தனமானதுமாகும் ''சடங்குகளைச் செய்ய பார்ப்பனர்களை இனி நான் எப்போதும் அழைக்கமாட்டேன், தீண்டாமைப் பழத்கத்தை நான் அனுசரிக்கமாட்டேன். எல்லா மனித சமூகத்தையும் சமத்துவமாகவே கருதுவேன்.

கொல்லாமை, களவு செய்யாமை, பிறன் மனைவிழையாமை, குடியையும், பொய்மையையும் வெறுத்தல் ஆகிய பஞ்சசீலக் கொள்கைகளை இன்று முதல் எனது நித்திய வாழ்க்கையில் பின்பற்றுவேன்.

பவுத்த கொள்கைகளைத்தான் நான் உண்மையான மதம் என நம்புகிறேன்.

அது, அறிவு, அன்பு, கடமை ஆகிய உயர் பண்புகளின் அடிப்படையில் அமைந்திருக்கிறது.

எனவே, நான் இன்று ஹிந்து மதத்தை உதறித் தள்ளி விட்டு பவுத்த நெறியைத் தழுவுவதன் மூலம் புதிய பிறவியை அடைகிறேன்'' என்றார்.

டாக்டர் அம்பேத்கர் ஆரிய மதத்தை - ஹிந்து மதத்தைவிட்டு வெளியேறி பவுத்த நெறியைப் பின்பற்றியதனால் அவர் இனி

அரசியலிலீடுபடுவாரா மாட்டாரா என்பது குறித்தும், ஷெடியூல்டு வகுப்பு சம்மேளனத்துக்கும் அவருக்குமுள்ள தொடர்பு குறித்தும் நிருபர்கள் அவரது கருத்தையறிய முனைந்தார்கள், தாம் புத்த நெறியைத் தழுவினாலும், நாம் தீவிர அரசியல்வாதியாகவேயிருக்கப் போவதாக டாக்டர் கருத்து அறிவித்தார். வரப்போகிற தேர்தலில் போட்டியிடப்போவதாகவும் கூறினார்.

தேர்தலுக்கு முன் குடிஅரசு கட்சி என்ற பெயரால் ஒரு புதிய அரசியல் கட்சியை துவக்கப்போவதாகவும், அரசியல் சட்டத்தில் காணப்படும் சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் ஆகிய முன்று கொள்கைகளின் அடிப்படையைக் கொண்டதாகவே இப்புது கட்சியிருக்கும் என்றும் அவர் கூறினார்.

இக்கட்சியில் யாவரும் உறுப்பினராகலாம், ஷெடியூல்டு வகுப்பு சம்மேளன உறுப்பினரும் உறுப்பினராகலாம் என்றார். அரசியல் என்பது குறுக்கு வழியல்ல; அதிகாரத்தைக் கைப்பற்ற நீண்டகாலம் பாடுபட வேண்டும்‘‘; என்றார். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்று அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டிருக்கும் சலுகைகள் அவர்கள் பவுத்த நெறியைப் பின் பற்றிய பின்னரும் அவர்களுக்கு. வழங்கப்படுமா என்று கேட்டதற்கு டாக்டர் பதிலளிக்கையில் இந்தியக் குடிமகன் என்பவனுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகள் யாவும் எப்போதும் நீடிக்கும் நீங்கள் எங்களை என்றுமே ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களைக் கட்டியழுது கொண்டேயிருக்கச் சொல்லுகிறீர்களா? அரசியல் உரிமையைக் குறித்து - அய்ந்தாண்டுகளுக்கொருமுறை ஓட்டுப் போடுவதற்குரிய உரிமையைக் குறித்து நான் கவலைப்படவில்லை மனித தன்மையுடன் வாழ வேண்டுமென்பதிலே அதிகக் கவலை கொண்டிருக்கிறேன்? என்றார்,

அரசியல் சட்டத்தில் சலுகை அளிக்கப்பட்டிருக்கின்றன என்பதற்காக, பிராமணர்கள் தங்களை ஷெடியூல்டு வகுப்பார்கள் என்று சொல்லிக் கொண்டு அவை பெறத் தயாரா? என்று கேட்டார். ஜாதி இந்துக்களின் நடத்தையினாலேயே தானும் தன்னைச் சேர்ந்தவர்களும் இந்து மதத்தைவிட்டு வெளியேற நேர்ந்தது என்றார். அவர்கள்



– ஜாதி இந்துக்கள் என்பவர்களுக்குப் போதுமான அவகாசம் கொடுத்தோம், மனம் மாறுவதற்கு என்பதாகவும் அதன் பின்னரே வேறு வழியில்லாததனால் வெளியேறியதாகவும் கூறினார். மேலும், டாக்டர் அம்பேத்கர் அவர்கள் கூறினார்.

“பவுத்தம் இன்று உலக மதம் – விஷ்வதர்மம். நாடு முழுவதும் பவுத்தநெறியைப் பின்பற்றவேண்டும். அதுவே என் லட்சியம். அதற்காகவே நான் பாடுபடப்போகிறேன்“ என்பதாக. –

ஷெடியூல்டு வகுப்பு சம்மேளனத்தைச் சேர்ந்தவர்களே ஜாதி முறையை அனுசரித்து வருவதனால், அவர்கள் பவுத்தமதத்தைப் பின்பற்றினாலும் அந்த ஜாதி வித்தியாசமிருந்து வருமே என்பதாகக் கேட்டதற்கு, நான் தைரியமானவன் – வீரன். அதைத் தடுக்க என்னால் முடியும் என்று பதிலளித்தார்.

டாக்டர் அவர்கள் இந்து மதக் கொடுமைகளைக் குறித்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:–

“ஒடுக்கப்படுவதற்கும், உயர்வு – தாழ்வு கற்பிப்பதற்கும் பிறப்பிடமானது இந்து மதம். எனவே, அதைவிட்டு வெளியேறினேன்; இன்றுதான் நான் மறுபிறப்படைந்தேன்.

“‘எனக்கு அவதாரங்களில் நம்பிக்கையில்லை.

“புத்தர் விஷ்ணுவின் அவதாரம் என்று சொல்வது தவறு – விஷமத்தனமாகத் திருத்திக் கூறுவதாகும்,

“இனி நான் எந்த இந்துக் கடவுளையோ கடவுளச்சியையோ வணங்கப் போவதில்லை.

“நான் இனிமேல் ‘சிரார்த்தம்’ (இறந்தவர்களுக்கு என ஆண்டுதோறும் பார்ப்பனர்களுக்கு அரிசி, பருப்பு, காய்கறிகள் வழங்குதல்) செய்யமாட்டேன்.

“நான் ஜாதி வித்தியாசத்தை வெறுத்து மனித சமுதாயத்தின் சமத்துவத்திற்காகவே பாடுபடுவேன், புத்தரின் எட்டுக் கொள்கைகளை நான் கண்டிப்பாகப் பின்பற்றுவேன்.”

“டாக்டர் அம்பேத்கர் நேற்று பவுத்த நெறியைப் பின்பற்றியபோது அவருடன் சேர்ந்து பல உயர்தர அதிகாரிகளும் பிரமுகர்களும் அந்நெறியைத் தழுவினர். அவர்களில் நாகபுரி உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதிடாக்டர் எம்.பி.நியோகி, நாகபுரி உதவி மேயர் திரு. எஸ்.ஜெ.ஃபுல்ஸெலி, பம்பாய் சட்டசபைக்குப் புதியதாகத் தெரிந்தெடுக்கப்பட்ட திரு.ஹரிதாஸ் அவோடே, நாகபுரி லேபர் ஆஃபீசர் டி.ஜி.ஜாதேவ் முதலியவர்கள்.

**- ‘விடுதலை’, 15.10.1956**

■




# 36

# அம்பேத்கர் உலகத் தலைவர்களில் ஒருவர்

## அம்பேத்கர் படத்திறப்பில் பெரியார் கருத்துரை!

நாங்கள் உலக புத்தர் மாநாட்டிற்குச் சென்ற போது அவரை பர்மாவில் சந்தித்தேன். புத்தர் மாநாட்டில் நான் பேசுவதாக 'ப்ரோகிராமில்' போட்டிருந்தார்கள். ஆனால், எனக்குச் சொல்லவில்லை. நான் போனேன். பிறகு என்னமோ வேறொருவரை பேசச் சொல்லிவிட்டோம் என்று சொல்லிவிட்டார்கள். அப்போது அம்பேத்கர் என்னிடம் இன்றைக்கே கையெழுத்துப்போட்டு புத்தமதத்தில் சேர்ந்துவிடுவோம் என்று சொன்னார். ரொம்ப அவசரப்பட்டார். அந்த மாநாட்டிற்கு பிரதிநிதிகள் (டெலிகேட்ஸ்) என்பவர்கள் சுமார் 500 பேர் தான் வந்திருந்தார்கள்.

சிலோனிலிருந்து 100 பேர், பர்மாவில் பல பாகங்களிலிருந்து 150 பேர், அமெரிக்கா இன்னும் மற்ற நாடுகளிலிருந்து 200 பேர் இப்படி 500 பேர்தான் இருக்கும். இதோடு உள்ளூர் விசிட்டர்கள். ஆனால், புத்த பிட்சுக்கள் என்பவர்கள் சுமார் இரண்டாயிரத்திற்கு அதிகமாக வந்திருந்தார்கள். அவர்களெல்லாம் புரோகிதர்களுக்கு மேற்பட்ட சடங்கு சம்பிரதாயத்துடன் என் னென்னமோ செய்தார்கள். நான் அந்த புத்த பிட்சுக்களைக் காட்டியே அம்பேத்கரிடம் சென்னேன் "புத்த மதத்தில் சேரவேண்டுமென்று அவசரப்படுகிறீர்களே... இவர்களையெல்லாம் (பிட்சுக்களை) வைத்துக்சொண்டு அங்கே போய்தான் என்ன செய்வது? நாம் அறிவின் எல்லைக்குப் போய்விட்டோம். இவர்களுடன் யார் அழுவது? இந்து மதத்திலாவது இந்தப் பசங்களுடன் அடிபட்டுப் பழகிப்போய் விட்டோம். இவர்களிடம் எனக்குப் பயமாக இருக்கிறது. 2, 3 சுற்றுப் பயணம் போய்விட்டுவந்து, 1 லட்சம் பேர்களோடாவது







சென்னை 7—11—56 விடுதலை வெளியீடு 8-11-56

# அம்பேத்கார் உலகத் தலைவர்களில் ஒருவர்

## பார்ப்பனர்கள் பவுத்த மதத்தில் பிட்சுவாகி பாழாக்கிவிட்டார்கள்

## இந்துமதம் என்று ஒருமதமேது? ஆதாரமேது?

## அம்பேத்கார் படத்திறப்பில் பெரியார் கருத்துரை

வேலூர், அக். 31 —

28-1-56 அன்று வேலூர் நகராட்சி மன்றத்தில் டாக்டர் அம்பேத்கார் படத்தைப் பெரியார் அவர்கள் திறந்துவைத்துப் பேசிய கருத்துரையை நேற்றைய 'விடுதலை' இதழில் வெளிவந்துள்ளதன் தொடர்ச்சி:

உலக புத்தர் மாநாடு

அம்பேத்கார் அறிக்கை

பார்ப்பனப் புத்த பிட்சு

இந்துமதம் என்று ஒரு மதமில்லை

புத்த மதம்

## குடந்தை திராவிட மாணவர் கழகத் துவக்க விழா!

காலம்: 11—11—56 ஞாயிறு மாலை 6 மணி

வணங்குபவனும் இந்து; உடைக்கிறவனும் இந்து

சைவர்களின் கொலைத்தன்மை

நாங்கள் மதம் மாற வேண்டியஅவசியமில்லை

அம்பேத்கார் ஓர் வழிகாட்டி

ஒரு பெரிய தலைவர்

## எமது நன்றி

## குடிபோதையில் சர்க்கார் சிப்பந்திகள்!

தலைக்கு 10 ரூபாய் அபராதம்

## நகரில் திருட்டு

ரூ. 2400 மதிப்புள்ள நகைகள் பறிபோயின

சென்றால்தான் மரியாதை இருக்கும். நாம் இதுதான் புத்தமதம் என்று சொன்னால் ''ஆமாம்'' என்று சொல்கிற நிலைமையில் நாம் போய்ச் சேரவேண்டும் என்று சென்னேன். அவர் என்னென்னமோ சென்னார்.

அப்போது ஒரு புத்தபிட்சு வந்தான்; வயது 30 இருக்கும்; சிவப்பாக ஒல்லியாக நன்றாக இருந்தான்; அவன் ஒரு வங்காளி; அவன் என்னைப் பார்த்து விட்டு என்னிடம் வந்து ''நீ எந்த ஊர்?'' என்றான்; ''மதராஸ்''



என்றேன்; "நீ எங்கு வந்தாய்?" என்றான்; "நான் புத்த மாநாட்டுக்குத்தான் வந்தேன்" என்றேன்; இதற்குள் பக்கத்தில் இருந்தவர் என்னைப்பற்றி "இவர்தான் பெரியார் ராமசாமி" என்று சொல்லி விட்டார். என்னை ஆளைத் தெரியாவிட்டாலும் என் பெயரைக் கேள்விப்பட்டு நான் யார் என்பதைத் தெரிந்து வைத்திருந்திருக்கிறான்; அவன் உடனே என்னிடம் "நீ புத்தமதத்தைக் காப்பாற்ற வந்திருக்கிறாயா? அல்லது ஒழிக்க வந்திருக்கிறாயா?" என்று கேட்டான். உடனே நான் சட்டென்று "நீ பார்ப்பானாயிருந்து தானே புத்தபிட்சு ஆனாய்?" என்று கேட்டுவிட்டேன். அதற்கு அவன் "ஆமாம். அதற்கென்ன இப்போது?" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

உண்மையில் அவன் பார்ப்பானாய் இருந்து புத்தபிட்சு ஆனவன். இதையும் அம்பேத்கரிடம் சொல்லி, பெயரைக் கேட்டவுடனேயே புத்தமதத்தை ஒழிக்கவா வந்திருக்கிறாய்? என்று கேட்கிறான், ஆகையால் இவ்வளவு ஆபத்து இருக்கிறது என்று எடுத்துக் காட்டினேன்.

இருந்தும் அவர் "அதெல்லாம் இல்லை. மைசூர் மகாராஜா புத்த மதக் கொள்கையில் ரொம்பப் பற்றுள்ளவர். நானும் மைசூரிலேயே நிரந்தரமாகத் தங்கலாமென்றிருக்கிறேன். அவர் எத்தனையோ ஏக்கர் நிலம்கூட தருவதாகச் சொல்லி இருக்கிறார். இப்படி இதையெல்வாம் வைத்து ஒரு பெரிய யூனிவர்சிடி ஆரம்பிக்காமல் நாமும் சாகிற வரையில் பேசிக்கொண்டேயிருந்துதான் என்னாவது? ஏதாவது சாவதற்குள் செய்ய வேண்டாமா?" என்று இன்னும் என்னென்னமோ சொன்னார் அதோடு தைரியமாக இப்போது புத்த மதத்தில் சேர்ந்து விட்டார். சேர்ந்த பிறகு ஒரு அறிக்கை வெளியிட்டார். நீங்கள் பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள்.

## அம்பேத்கர் அறிக்கை

"நான் இனிமேல் ராமன், கிருஷ்ணன், சிவன், ருத்திரன் முதலியவைகளைக் கடவுளாக ஏற்றுக் கொள்வதில்லை. அவதாரங்கள் என்பவைகளை ஏற்றுக்கொள்வதில்லை. உருவ வணக்கத்தில் எனக்கு நம்பிக்கையில்லை. ஜாதி முறையில் இன்னும் மோட்சம் - நரகம் இவற்றை நம்புவதில்லை. சடங்கு திதி - திவசங்கள் ஆகியவைகளில் நம்பிக்கையில்லை. இனிமேல் இவைகளைச் செய்யமாட்டேன். இதுபோல இன்று நாம் எதை எதைக் கண்டிக்கிறோமோ,

ஒத்துக்கொள்வதில்லையோ, அதையெல்லாம் சொல்லியிருக்கிறார். இடையில் ஒரு சின்ன சங்கதி; அம்பேத்கர் புத்தமதத்திற்குப் போனதும் ரிப்போர்ட்டர்கள் என்னிடம் வந்தார்கள். பார்ப்பன ரிப்போர்ட்டர்கள் ஜாக்ரதையாக இருந்து விட்டார்கள்; வரவில்லை. "தினத் தந்தி" நிருபர்தான் முதலில் வந்தார் என் அபிப்பிராயத்தைக் கேட்டார். "இந்து மதத்தில் இருந்துகொண்டே சீர்திருத்தம் செய்யப்போகிறேன்; புத்த மதத்திற்குப் போக ஆசையில்லை" என்று சொன்னேன். அவர் "விளக்கமாக இல்லை" என்று ஏதோ சொன்னார். "விளக்கமாகச் சொன்னால், நீங்கள் அதை அப்படியே போடுவீர்களா" என்றேன். "போடுகிறேன்" என்றார்; "அப்படியானால் சரி, எழுதிக் கொள்ளுங்கள்" என்று சொல்லி விட்டுச் சொன்னேன்:

இந்து மதம் என்பதாக ஒருமதம் இல்லை. (வேலூர் என்று ஓர் ஊர் இருந்தாலல்லவா அந்த ஊருக்குப் போக முடியும்) அதே போல இந்துமதம் என்று ஒரு மதம் இல்லை என்றேன். இந்து மதம் என்பதாக ஒருமதம் இருப்பதாக யாராவது சொல்ல முடியுமா? இதுதான் இந்துமதம்; உண்டாக்கியவர் இன்னார்; இதனுடைய சட்டதிட்டங்கள் முறைகள், இன்னின்னவை என்று யாராவது சொல்ல முடியுமா? அப்படி இருந்தாலல்லவா சொல்வதற்கு? இதைப் பெரிய பெரிய ஆள்கள் எல்லாம் காந்தியார்கூட ஒப்புக் கொண்டுருக்கிறார்கள். இந்துமதம் இன்னது என்று 1 வரி, 2 வரி எழுத ஆளில்லை. ஒரு சீக்கியனைக் கேட்டால் சொல்லமுடியும். குருநானக் தலைவர். அவர் சொன்னது சீக்கிய மதம். ஒரு ஆதாரம் ஒரு தலைவன், சரித்திரம் இருக்கிறது. அதுபோல முஸ்லிம் என்றால், குரான் ஆதாரம், முகம்மது நபி தலைவர், இத்தனை வருடத்திற்கு முன் பிறந்தார். இருந்தார் என்று சரித்திரம் உண்டு.

மதசம்பந்தமான ஆதாரங்கள் எப்படி இருந்தாலும் சரித்திர ஆதாரம் இருக்கிறது. அதைப் போல கிறிஸ்துவன் (பைபிள் இருக்கிறது; அவர்களது தலைவன் ஏசு; இன்றைக்கு 1956) ஆண்டுக்குமுன் ஆகிறது, அவர் பிறந்தது எங்கு பிறந்தார் எத்தனை வருடத்திற்குமுன் பிறந்தார் என்பதற்குச் சரித்திரம் ஆதாரம் இருக்கிறது அதுபோல இந்து மதத்தில் இன்னார் இன்ன வருடத்தில், இன்ன காலத்தில் இன்னது செய்தார் என்று சொல்ல என்ன ஆதாரம்?

எவனை எடுத்துக்கொண்டாலும் யுகாயுகங்கள், கோடி கோடி வருடம் முன்னால் 15 கோடி 20 கோடி வருடம் வாழ்ந்ததாகச்



சொல்லக்கூடிய விதத்தில்தான் இருக்கிறது. "நேற்று விவேக சிந்தாமணி" என்று ஒரு சட்ட புத்தகம் - (இந்துலா) பார்த்தேன். அதில் மனுவுக்கு முன் இருந்த ஒவ்வொருவரும் ஒரே குற்றத்திற்கு இன்னின்ன கருத்துகள் கொண்டிருந்தார்கள்; அதற்கு ஒவ்வொரு வரும் சொன்ன தண்டனை முதலியவைகள் போட்டிருக்கிறது. அதாவது ஒரு விஷயத்தைப்பற்றி நாரதர் என்ன சொன்னார், பராசரர் என்ன சொன்னார் என்று போட்டிருக்கிறார்கள். அதில் நாரதர், பராசரர், யக்ஞவல்கியர், இவர்களெல்லாம் வருகிறார்கள். இவனெல்லாம் எந்தப் புராணத்தை எடுத்தாலும் அந்தப் புராணங்களிலெல்லாம் 5 கோடி, 10 கோடி வருடம் இருந்து வாழ்ந்ததாகவே காணப்படுகிறது. நாரதரை எடுத்துக்கொண்டால் எத்தனை புராணத்தில் வருகிறது.

இதையெல்லாம் ஒத்துக் கொண்டதால்தான் இந்து மதம் என்று கண்டவனெல்லாம் நினைத்ததை எழுதி நாரதன் பெயரால், அவன் பெயரால், இவன் பெயரால், அவன் சொன்னது, இவன் சொன்னது என்று சேர்த்துக்கொண்டார்கள். இந்தமாதிரி வந்ததுதான் இந்து மதம். இதற்கு குறிப்பிட்ட கர்த்தா - தலைவன் - உபதேசி இல்லை. குறிப்பிட்ட மாதிரியில் ஒரு கொள்கை, திட்டம் கிடையாது யாரோ ஒன்றைச் சொல்லி இது தான் இந்துமதம் என்றால் அது தான் இந்து மதம். ஆகையால் இல்லாத ஒரு மதத்தை விட்டு வெளியேறுகிறேன் என்று சொல்வதில் அர்த்தமில்லை.

புத்தமதம் என்பதிலும் ஒன்றைச் சொல்லி அதை நம்பித்தான் ஆக வேண்டும் என்ற கட்டுத்திட்டம் இல்லை. மல்லலசேகரா இதை விளக்கமாகச் சொன்னார். புத்த மதத்தில் சித்தார்த்தர் என்பவர் சொன்னதாக எதுவும் இல்லை. இப்போது குரான் என்பது நபிகள் நாயகம் பல சந்தர்ப்பங்களில். பல பேரிடம் சென்னதை பல பேர் கேட்டுக்கொண்டிருந்து எழுதினார்கள். அப்படி எழுதியதைக் கடைசியாக ஒத்துப் பார்த்தால் சரியாக இருந்தது என்று சொல்கிறார்கள். அதுபோல புத்தன் யாரிடம் என்ன சொன்னான் என்று சொல்ல முடியுமா? புத்த மதத்தில் சொல்வதெல்லாம் "அம்மா சொல்கிறாள் என்பதற்காக நம்பாதே; அப்பா சொல்கிறார் என்பதற்காக நம்பாதே; நீண்ட நாளாக நடந்து வருகிறது என்பதற்காக நம்பாதே; சாஸ்திரம் சொல்கிறது, வேதம் சொல்கிறது, அவர் சொல்கிறார், இவர் சொல்கிறார் என்பதற்காக எதையும் நம்பாதே; உன் அறிவுக்கு ஆதாரமானதை -

பொருத்தமானதை நம்பு” இதுதான் இன்று நாம் சொல்லி வருகிறோம். இதைச் செய்ய இந்து மதத்தை விட்டு வெளியேறித்தான் ஆக வேண்டும் என்று என்ன கட்டாயம் இருக்கிறது?

விஷ்ணு, சிவன், ருத்திரன், கிருஷ்ணன், ராமன் இவர்களை யெல்லாம் வணங்கினால்தான் இந்து என்று யார் சொல்லமுடியும்? என்ன ஆதாரம்? நாங்கள் பிள்ளையாரை உடைத்தோம்; ராமனை நெருப்பு வைத்துக் கொளுத்தினோம். ஆனாலும் எங்களை இந்து அல்ல என்று யாரும் சொல்லமுடியாது. ராமனை வணங்குபவனும் இந்துதான்; கொளுத்துகிற நாங்களும் இந்துதான். திதி - திவசம் கொடுக்காவிட்டால் இந்து அல்லவென்று சொல்ல முடியுமா? நான் எங்கள் அய்யாவுக்கு திவசமே கொடுப்பதில்லை. எங்க அண்ணன் 5, 6 திவசம் கொடுத்தார்; பிறகு .அவரும் கொடுக்கவில்லை. இதனாலெல்லாம் இந்து அல்ல என்று சொல்லி விட முடியாது. கடவுளே இல்லையென்று சொன்னாலும் இந்து அல்ல என்று சொல்ல எந்த ஆதாரமும் இல்லை. ஒரு மதம் என்று சொல்லக்கூடியவற்றில் இதெல்லாம் இவ்வளவு சுலபமாக இருக்காது; முஸ்லிம்களை எடுத்துக் கொண்டால் அவர்கள் சொல்லுவது சரியோ - தவறோ, அதை அப்படியே ஏற்றுக்கொண்டால்தான் முஸ்லிம். எவ்வளவு சிநேகமாக இருந்தாலும் மதத்தைப்பற்றி ஏதாவது சொல்லிவிட்டால் அவர்களுக்குக் கோபம் வந்து விடும். பார்ப்பனர்கள் புத்த மதத்தில் சேர்ந்து பிட்சுக்களாக மாறி அவ்வளவு உயர்ந்த கொள்கையைக் கெடுத்து பவுத்தர்களைக் கோழைகளாக்கி விட்டார்கள். அதன் காரணமாகத் தான் பவுத்தம் அழிந்தது.

இன்று சைவர்கள் என்று பேசுகிறார்கள். தேவாரத்தைப் பார்த்தால் திருஞானசம்பந்தன் பரமசிவனை, சமணர்கள் பெண்டாட்டியை அடைய வழி சொல்லு என்று கேட்கிறானே; பத்துப் பாட்டுக்கு ஒரு பாட்டு சமணன் அயோக்கியன், திருடன், வஞ்சகன் என்றே பாடுகிறான். (இராமாயணத்திலும் புத்தர்களைத் திருடர்கள் என்பதாக எழுதி வைத்திருக்கிறார்கள்) இன்று சைவர்கள் அந்தப் பாடலை அன்போடு பாடி அப்படியே உருகிக் கண்ணீர் வடிக்கிறார்கள். இந்த சைவர்கள் தானே பவுத்தர் பனங்காய் சீவுவதைப் போல் சீவி எறிந்து சமணர்களை கழுவில் ஏற்றிக் கொன்றார்கள்? இன்றைக்கு நிஜமான கிறிஸ்துவன் இருந்தால் பல் இல்லாமல்தான் இருக்க வேண்டும்; ஏசு சொன்னார்: “ஒரு கன்னத்தில் அடித்தால் இன்னொரு கன்னத்தைக் காட்டு” என்று.

அதன்படி இருப்பதானால் இன்று எந்தக் கிறிஸ்துவனுக்கு பல் மிஞ்சும்? "மேல் வேட்டியைக் கேட்டால் இடுப்பு வேட்டியைக் கொடு" என்றார். அதன்படி நடப்பதானால் கிறிஸ்துவர்கள் எல்லோரும் நிர்வாண சங்கத்தில் சேர வேண்டியதுதான். எதற்குச் சொல்கிறேன் என்றால், ஒரே கருத்து எல்லா காலத்திற்கும் எல்லா சந்தர்ப்பத்திற்கும் பொருத்தமாக இருக்காது; இருக்க முடியாது.

இன்று அகிம்சை, அது இது என்பதெல்லாம் செல்லாது என்று எங்கள் கழகத்தினரை கத்தி வைத்துக்கொள்; மீறினால் குத்து என்கிறேன்; கிருஷ்ணன் கொன்றிருக்கிறான்; ராமன் கொன்றிருக்கிறான்; அப்புறம் உனக்கு என்ன பயம்? எதற்கு இதெல்லாம் சொல்கிறேன் என்றால், இந்து மதம் என்றோ புத்தமதம் என்றோ மதம் இல்லை, இரண்டுக்கும் சில கொள்கைகள்தான் இருக்கின்றன. இதில் இருந்து கொண்டு எதையும் சொல்ல வாய்ப்பிருக்கிறது. இன்று எத்தனை உண்டாகிறது – சாயிபாபா, ரமண ரிஷி என்று! இன்னும் நாம் ஏமாந்திருந்தால் எத்தனை சாயிபாபா; எத்தனை வெங்காயம் உண்டாகியிருக்கும்?

ஆனதனால் என்னைப் பொறுத்தவரையில் நானும் எனது தொண்டர்களும் மதம் மாற வேண்டிய அவசியமில்லை. இன்னும் சொல்கிறேன் இப்போது ஏதோ அம்பேத்கர் மதம் மாறிவிட்டார்.

இதனுடைய பின் விளைவு (effect) இப்போது தெரியாது. இதை நான் சொல்கிற போது சில நண்பர்கள் வருத்தப்படக்கூடும். இன்று அம்பேத்கர் வெளியேறியதைப் பார்ப்பான், "சனியன் தொலைந்தது" என்றுதான் கருதிக் கொண்டிருக்கிறான். இன்னும் பச்சையாகச் சொல்கிறேன்; என் தலை சாய வேண்டியதுதான். அடுத்த நாளே இவர்களுக்கு மரியாதை இருக்காது. வேறு யார் கேட்க நாதி? இன்று வகுப்பு வாரி நீதியின் பெயரால் 100க்கு 15 என்று உத்தியோகங்களில் ஏற்பாடு செய்துள்ளார்கள். பார்ப்பனர்கள் "நீதான் புத்தனாகி விட்டாயே; உனக்கு எதற்கு அந்தச் சலுகைகள்? இன்று ஆதி திராவிடர்களுக்கு ஏதாவது சலுகை இருக்கிறதென்றால் ஆதி திராவிட – இந்துவிற்குத்தான்; இன்று கிறிஸ்துவ ஆதி திராவிடர்களுக்கு எந்தச் சலுகையும் இல்லை. அதுபோலத்தான் நீ புத்தனாகிவிட்டாய்; அந்தச் சலுகைகள் உனக்கு இல்லை" என்று சொல்வார்கள். இதற்கெல்லாம் சண்டை பிடித்தாக வேண்டும். இதுபற்றியெல்லாம் அம்பேத்கர் என்ன யோசனை செய்து வைத்திருப்பாரோ, தெரியாது.

அம்பேத்கர் மக்களுக்கு வழி காட்டுபவர். ஜாதிமத குறைபாடுகளை - மனதில் பட்டதை தைரியமாக எடுத்துக் கூறி வந்தார். சுயநலமில்லாமல் பாடுபட்டவர். இந்தியா பூராவும் விளம்பரம் பெற்றவர். அவர் தமது மக்களுக்கு பவுத்த மதத்திற்குப் போகும்படி வழி காட்டியிருக்கிறார். அநேகமாக இங்கும் வருவார். இங்கும் பல பேர் மாறக்கூடிய நிலை ஏற்படும்: தன் சமுதாயத்திற்குப் படிப்பு, உத்யோகம் முதலிய காரியங்களில் முயற்சி செய்து பல வசதிகளைச் செய்திருக்கிறார். உத்தியோகத்தில் 100க்கு 15 என்று வாங்கிக் கொடுத்தார். நாங்கள் கூட அவரைக் குறை சொல்வதுண்டு; அவர் காரியத்தை மாத்திரம் பார்த்துக் கொண்டார் என்பதாக. அங்குள்ள நிலைமை அப்படி. அங்கு “உனக்கென்ன உன் சங்கதியைப் பார்த்துக் கொண்டு போ” என்று சொல்லியிருப்பார்கள், அவ்வளவுதான்.

அவர் உள்ளபடியே ஒரு பெரிய தலைவர். அவருக்குப் பிறகு அவரைப் போன்ற ஒரு தலைவர் தோன்ற முடியாது. அவர் சமதர்ம காலத்திற்கு முன் ஏற்பாடு செய்யப்பட்ட தலைவர். அதற்கு முன் தலைவர்கள் என்றால் சில கட்டுத் திட்டங்கள், சில குவாலிஃபிகேஷன் தேவையாக இருந்தன; இப்போது எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள். உண்மையில் தலைவர்களை உண்டாக்கும் இயந்திரம் இப்போது இல்லாமல் போய்விட்டது. உதாரணமாக காந்திக்குப் பிறகு அவருடைய இடத்திற்கு யார் இருக்கிறார்கள்? யாரும் வரவும் முடியாது. அந்த சகாப்தத்தில் நாம் இல்லை. தலைவர் என்றால் ஒரு தகுதி இருக்க வேண்டும் என்பதுகூட இல்லை. இனிமேல் யாரும் எந்த இடத்திற்கும் போகலாம். நிலைமை அப்படி வந்துவிட்டது. ஜின்னாவுக்குப் பிறகு எங்கே அவருக்கு ஒத்த தலைவர்? அதே போலத்தான் ஜவகருக்குப் பிறகு அவர் இடத்திற்கு யாரும் வர முடியாது. அதுபோலத்தான் அம்பேத்கருக்குப் பிறகு அவரைப் போன்ற தலைவர் ஏற்பட முடியாது. பெரிய தலைவர் என்று சொல்லக் கூடிய அவருக்கு நிரந்தரமான நினைவுச் சின்னம் வழங்கும் வகையில் ஏற்பாடு செய்த வேலூர் நகர சபையினரின் முயற்சியைப் பாராட்டுகிறேன் - என்பதாக சுமார் 1:30 மணி நேரம் விளக்கமாகப் பேசி நன்றி கூறி முடித்தார்கள்.

**- ‘விடுதலை’, 7.11.1956**

■




# 37

# அம்பேத்கர் உலகத் தலைவர்களில் ஒருவர்

## ஜாதி ஒழிப்பில் தீவிரவாதி! - பெரியார் கருத்து

வேலூர் நகராட்சி மன்றத்தில் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் 28.10.1956ஆம் தேதி டாக்டர் அம்பேத்கரின் உருவப் படத்தைத் திறந்து வைத்துப் பாராட்டிப் பேசியதிலிருந்து சில முக்கிய கருத்துகள் கீழே தரப்படுகின்றன.

அம்பேத்கர் உலகத்தில் பெரிய அறிஞர்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர். அவர் இவ்வளவு பெரிய அறிஞராக விளங்கக் காரணம் என்ன? படிப்பு, திறமை, என்று சொல்வதெல்லாம் இரண்டாவது தான். அவரை விடப் படித்தவர்கள் திறமை உள்ளவர்கள் இருக்கிறார்கள். ஆகையால் அம்பேத்கர் பெரிய அறிவாளியாக விளங்கக் காரணம் அவரது படிப்பு, திறமை என்பவை மாத்திரமல்ல; அவருடைய படிப்பும் திறமையும் நமக்குப் பயன்படுகிற - மக்களுக்குப் பயன்படுகிற - தன்மையில் இருப்பதால்தான் அவரை அறிவாளி என்று சொல்ல வேண்டியிருக்கிறது. மற்றவர்கள் படிப்புத் திறமையையெல்லாம் வேறு விதத்தில் பயன்படுத்தப்படுகிறது.

அம்பேத்கர் ஒரு நாஸ்திகர். அவர் இன்றல்ல; நீண்டநாளாகவே நாஸ்திகர். ஒன்று சொல்கிறேன் உலகத்தில் யார் யார் பெரிய அறிவாளிகளாக இருக்கிறார்களோ அவர்களெல்லாம் நாஸ்திகர்கள் தான்; நாஸ்திகராக இருக்கிறவர்கள் தான் ஆராய்ச்சியின் சிகரமாக அறிவு பிரகாசிக்கக்கூடிய மனிதர்களாக ஆகமுடிகிறது. அவர்கள் தான் தங்கள் படிப்பை, திறமையைப் பயன்படுத்துகிறார்கள்.

டாக்டர் அம்பேத்கர் ஒரு பெரிய அறிஞர். அதன் காரணமாகவே அவர் ஒரு பெரிய நாஸ்திகர். அவர் தனது சொந்த அறிவை உபயோகித்து,


சென்னை 7—12—56 விடுதலை வெள்ளி 8—12—56 3

டாக்டர் அம்பேத்கர் உலகத்தலைவர்களில் ஒருவர்

சாதி ஒழிப்பில் தீவிரவாதி

பெரியார் கருத்து

ஆசிரியருக்கு கடிதங்கள்

மதுரைக்குப் பெரியார் வருகை

மாபெரும் பொதுக்கூட்டம்

காலம்: 12—12—56 புதன் மாலை 6:30 மணி

இடம்: திலகர் திடல்

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் "தமிழ்நாடும் தற்கால அரசியலும்" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றுவார்.

—மதுரை நகர திராவிடர் கழகத்தினர்.

அரசியல் வாழ்வில் அறிஞர் அம்பேத்கர்

சில நினைவுக் குறிப்புகள்

ஈரோட்டில் பெரியார் மன்றத்தில் வாழ்க்கைத்துணை ஒப்பந்த நிகழ்ச்சி விழா

10—12—56-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணி

திரு. ஈ. வெ. கி. சுலராஜாசுந்தரம்

திருமதி தேவிகாவுக்கும்

அம்பேத்கர் ஓர் வழிகாட்டி

உலகப் புத்தர் மாநாடு

உலகில் பெரியதலைவர்

இராமாயணத்தைக் கொளுத்தினார்

அம்பேத்கர் அறிக்கை

தான் கண்டதைத் தைரியமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். நம் நாட்டில் அறிஞர் கூட்டம் என்பவரெல்லாம் எடுத்துச் சொல்லப் பயப்படுவார்கள். அவர் இது போலல்லாமல் தைரியமாக எடுத்துச் சொல்லி வந்திருக்கிறார்.

இப்பொழுது அதிசயமான உலகம் பூராவும் நினைக்கும்படியான சம்பவம் ஒன்று நடந்தது. அதுதான் அம்பேத்கர் புத்தமதத்தில்



சேர்ந்தது, இப்போது பேருக்குத்தான் அவர் புத்தமதத்தில் சேர்ந்ததாகச் சொல்கிறாரே தவிர, அம்பேத்கர் வெகுநாட்களாகவே புத்தர்தான்.

டாக்டர் அம்பேத்கர் 20, 30 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்தே இந்து மதத்தை ஒத்துக்கொள்வதில்லை. அவர் காந்தியைப் பற்றிச் சொல்லும்போது ‘‘காந்தி ஒரு பச்சை இந்து; மனுதர்ம முறை, வர்ணாசிரம முறையைப் பாதுகாக்க நினைப்பவர்; அவர் ஆதிதிராவிட மக்களுக்கு என்ன செய்ய முடியும்?’’ என்று கடுமையாகத் தாக்கி, வர்ணாசிரம ஆதார சுலோகங்களையெல்லாம் கூட எடுத்துப் போட்டு, காந்தி பச்சை இந்துவாக இருப்பதால்தான் அவர் புத்தி இப்படிப் போகிறது என்று எழுதினார்.

1930-35லேயே ஜாதி ஒழிப்பில் தீவிர கருத்துள்ளவராக இருந்தார்; ஜாதி ஒழிப்புக்காக பஞ்சாபில் ‘‘ஜத்பட் தோரக் மண்டல்’’ என்று கருதுகிறேன். ஒரு சபை ஏற்படுத்தியிருந்தார்கள். என்னைக்கூட, அதில் ஓர் அங்கத்தினராகச் சேர்த்திருந்தார்கள். அந்த சபையினர் ஜாதி ஒழிப்பு மாநாடு என்பதாக ஒரு மாநாடு கூட்ட ஏற்பாடு செய்து அந்த மாநாட்டுக்கு அம்பேத்கர் அவர்களைத் தலைமை வகிக்கக் கேட்டுக் கொண்டார்கள். அவரும் ஒத்துக் கொண்டு தலைமையுரையாக (Address) 100 பக்கம் ஆங்கிலத்தில் எழுதினார். அதில் பல ஆதாரங்களை எடுத்துப் போட்டு, ஜாதி ஒழிய இந்து மதமே ஒழிய வேண்டும் என்று எழுதியிருந்தார். இதைத் தெரிந்து அவரிடம் ‘‘உங்கள் மாநாட்டுத் தலைமை உரையை முன்னாடியே அனுப்புங்கள்’’ என்று கேட்டு வாங்கிப் பார்த்தார்கள். அதில் ஆதாரத்தொடு இந்து மதம் ஒழிய வேண்டும் என்று எழுதியிருந்தார்.

அதைப் பார்த்து விட்டு ‘‘உங்கள் தலைமையுரை எங்கள் சங்க மாநாட்டில் படிப்பதற்கு ஏற்றதாக இல்லை. ஜாதி ஒழிப்புச் சங்கமே தவிர இந்துமத ஒழிப்புச் சங்கமல்ல; ஆகையால் நீங்கள் இந்துமதம் ஒழிய வேண்டும் என்கிற அந்த ஓர் அத்தியாயத்தை (Chapter) நீக்கி விடவேண்டும் என்று அம்பேத்கரிடம் கேட்டார்கள். அதற்கு அம்பேத்கர் ‘‘ஜாதி ஒழிப்பிற்கு இந்து மதம் ஒழிய வேண்டும்’’ என்கிறதுதான் அஸ்திவாரம்; அதைப் பேசாமல் வேறு எதைப் பேசுவது? ஆகையால் அதை நீக்கமுடியாது என்று சொல்லிவிட்டார். பின் மாளவியா ஏதேதோ சமாதானமெல்லாம் சொன்னார். அதற்கும் அவர், ‘‘நான் தலைமை உரையைப் பேசுகிறபடி பேசுகிறேன்; நீங்கள்





வேண்டுமானால் அதைக் கண்டித்து மாநாட்டில் பேசுங்கள்: தீர்மானம் வேண்டுமானாலும் போடுங்கள், நான் முடிவுரையில் அது பற்றி பேசுகிறேன்'' என்று சொல்லி விட்டார். பிறகு மாநாடே நடக்காமல் போய் விட்டது. நான் அம்பேத்கரிடம் அந்தப் பேச்சை வாங்கி ''ஜாதியை ஒழிக்கும் வழி'' என்று தமிழில் புத்தகமாகப் போட்டு வெளியிட்டேன். அவர் அப்போதே அவ்வளவு தீவிரமாக இருந்தார்.

நாம் இராமாயணத்தைப் பற்றி வாயால் பேசிக்கொண்டிருக்கும்போதே அதாவது 1932லேயே அவர் இராமாயணத்தைக் கொளுத்தினார். அந்த மாநாட்டுக்கு சிவராஜ் தான் தலைவர். இதெல்லாம் ''குடிஅரசில்'' இருக்கிறது.

அவர் ஒரு தடவை சென்னைக்கு வந்திருந்த போது கீதையைப் பற்றி பேசும்போது, ''கீதை ஒரு பைத்தியக்காரனின் உளறல்'' என்றே பேசினார். அப்போது சி.பி.ராமசாமி அய்யர் போன்றவர்கள் ''இதென்ன அக்ரமம்; வெறும் அம்பேத்கர் பேசியிருந்தால் கூடக் கவலையில்லை; ஒரு கவுன்சில் மெம்பராக இருக்கிற அம்பேத்கர் அதுவும் சென்னையில் வந்து கீதை பைத்தியக்காரனின் உளறல் என்று பேசுவதென்றால் அக்ரமம்'' என்றெல்லாம் கூச்சல் போட்டார்கள்.

நான் 1930இல் ஈரோட்டில் நடந்த சீர்த்திருத்த மாநாட்டிற்கு அம்பேத்கரை அழைத்தேன். அந்த மாநாட்டுக்கு சண்முகம் செட்டியார் வரவேற்புரை அளித்தார். என்ன காரணத்தாலோ அம்பேத்கர் வரவில்லை. அவருக்குப் பதிலாக ஜெயக்கர் வந்திருந்தார். அவர் ஏதோ நம்மைப் பாராட்டிப் பேசி விட்டுப் போய்விட்டார். அம்பேத்கர் வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

அந்த சமயத்தில்தான் அம்பேத்கர் இஸ்லாம் ஆகப் போகிறேன் என்று சொன்னார். நானும் ராமனாதனும் இங்கிருந்து தந்தியடித்தோம்; ''தயவு செய்து அவசரப்பட்டு சேர்ந்துவிடாதீர்கள். குறைந்தது 1 லட்சம் பேராவது கூட பின்னால் வந்தார்கள் என்றால்தான், அங்கும் மதிப்பிருக்கும்; இல்லாவிட்டால் மவுலானா சொல்கிறபடிதான் கேட்க வேண்டும். அவர்களோ கைவைக்கக்கூடாத மதம் (Perfect Religion) என்பதாகச் சொல்லிக் கொண்டிருப்பவர்கள். எவனுக்குமே கைவைக்க உரிமையில்லை என்பவர்கள். வெறும் தொழுகை அது. இது எல்லாம் உங்களுக்கு ஜெயில் போலத்தான் இருக்கும். தனியே



போவதால் அங்கும் மரியாதை இருக்காது, உதைக்க வந்தால் கூட சிபாரிசுக்காவது ஆள் வேண்டாமா?” என்று சொன்னோம். அதன் பிறகு யார் யாரோ அவர் வீட்டிற்குப் போய் மதம் மாறக்கூடாதென்று கேட்டுக் கொண்டார்கள். பத்திரிகையில் வந்தது. அப்போதே அவர் மதம் மாறுவதில் தீவிர எண்ணம் வைத்திருந்தார். எப்படியோ கடைசியாக இப்போது புத்த மதத்தில் சேர்ந்து விட்டார். என்றாலும் அவர் ஏற்கெனவே புத்தர்தான்.

நாங்கள் உலக புத்தர் மாநாட்டிற்குச் சென்றபோது அவரை பர்மாவில் சந்தித்தேன். புத்தர் மாநாட்டில் நான் பேசுவதாக “ப்ரோகிராமில்” போட்டிருந்தார்கள். ஆனால், எனக்குச் சொல்லவில்லை. நான் போனேன். பிறகு என்னமோ வேறொருவரை பேசச் சொல்லி விட்டார்கள். அப்போது, அம்பேத்கர் என்னிடம் இன்றைக்கே கையெழுத்துப்போட்டு புத்தமதத்தில் சேர்ந்து விடுவோம் என்று சொன்னார்.

மைசூர் மகாராஜா புத்த மதக் கொள்கையில் ரொம்பப் பற்றுள்ளவர். நானும் மைசூரிலேயே நிரந்தரமாகத் தங்கலாமென்றிருக்கிறேன். அவர் எத்தனையோ ஏக்கர் நிலம்கூட தருவதாகச் சொல்லி இருக்கிறார். இப்படி இதையெல்லாம் வைத்து ஒரு பெரிய யூனிவர்சிடி ஆரம்பிக்காமல் நாமும் சாகிற வரையில் பேசிக்கொண்டேயிருந்து தான் என்னாவது? ஏதாவது சாவதற்குள் செய்ய வேண்டாமா? என்று இன்னும் என்னென்னமோ சொன்னார். அதோடு தைரியமாக இப்போது புத்த மதத்தில் சேர்ந்து விட்டார். சேர்ந்த பிறகு ஒரு அறிக்கை வெளியிட்டார்.

“நான் இனிமேல் ராமன், கிருஷ்ணன், சிவன், இந்திரன் முதலியவைகளைக் கடவுளாக ஏற்றுக் கொள்வதில்லை. அவதாரங்கள் என்பவைகளை எற்றுக்கொள்வதில்லை. உருவ வணக்கத்தில் எனக்கு நம்பிக்கையில்லை. ஜாதி முறையில் இன்னும் மோட்சம் - நரகம் இவற்றை நம்புவதில்லை. சடங்கு திதி-திவசங்கள் ஆகியவைகளில் நம்பிக்கையில்லை. இனி மேல் இவைகளைச் செய்ய மாட்டேன்.” இதுபோல இன்று நாம் எதை எதைக் கண்டிக்கிறோமோ ஒத்துக் கொள்வதில்லையோ, அதை நாம் நம்பவும் கூடாது.

அம்பேத்கர் மக்களுக்கு வழிகாட்டுபவர். ஜாதிமத குறைபாடுகளை மனதில் பட்டதை தைரியமாக எடுத்துக் கூறி வந்தார். சுயநலமில்லாமல்

பாடுபட்டவர்; இந்தியா பூராவும் விளம்பரம் பெற்றவர். அவர் தமது மக்களுக்கு பவுத்த மதத்திற்குப் போகும்படி வழி காட்டியிருக்கிறார். இங்கும் பலர் மாறக்கூடிய நிலை ஏற்படும். தன் சமுதாயத்திற்குப் படிப்பு உத்தியோகம் முதலிய காரியங்களில் முயற்சி செய்து பல வசதிகளைச் செய்திருக்கிறார். உத்தியோகத்தில் 100க்கு 15 என்று வாங்கிக் கொடுத்தார்.

அவர் உள்ளபடியே ஒரு பெரிய தலைவர். அவருக்குப் பிறகு அவரைப் போன்ற ஒரு தலைவர் தோன்ற முடியாது. அவர் சமதர்ம காலத்திற்கு முன் ஏற்பாடு செய்யப்பட்ட தலைவர் அம்பேத்கருக்குப் பிறகு அவரைப் போன்ற தலைவர் ஏற்பட முடியாது என்று சொல்லக்கூடிய அவருக்கு நிரந்தரமான நினைவுச் சின்னம் வழங்கும் வகையில் ஏற்பாடு செய்த வேலூர் நகரசபையினரைப் பாராட்டுகிறேன் என்றார்.

**- ‘விடுதலை’, 7.12.1956**

■




38

# டாக்டர் அம்பேத்கர் மறைவு பற்றி பெரியார் ஈ.வெ.ரா.

“இந்தியாவின் சிறந்த அறிஞர்களின் முன்னணியிலுள்ள அறிஞரும், ஏராளமான விஷயங்களைக் கற்றுத் தேர்ந்த கலாநிதியுமான அம்பேத்கர் அவர்கள் முடிவெய்தி விட்டார் என்ற செய்தி கேட்டவுடன் திடுக்கிட்டுப் பதறிவிட்டேன். உண்மையில் சொல்ல வேண்டுமானால், டாக்டர் அம்பேத்கருடைய மறைவு என்னும் ஒரு குறைபாடானது எந்த விதத்திலும் சரிசெய்ய முடியாத ஒரு மாபெரும் நஷ்டமேயாகும். அவர் சிறப்பாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்துக்குத் தலைவர் என்றுச் சொல்லப்பட்டாலும், பகுத்தறிவுக்கு எடுத்துக்காட்டாகவுள்ள ஒரு பேரறிஞராக விளங்கினார். எப்படிப்பட்டவரும் எடுத்துச் சொல்லப் பயப்படும் படியான புரட்சிகரமான விஷயங்களையெல்லாம் வெகு சாதாரணத் தன்மையில் எடுத்துச் சொல்லும்படியான வீரராகவும் விளங்கினார்.

உலகத்தாரால் மதிக்கப்படும் மாபெரும் தலைவரான காந்தியாரை வெகு சாதாரணமாக மதித்ததோடு, அவருடைய பல கருத்துகளைச் சின்னாபின்னமாகும்படி மக்களிடையில் விளக்கும் மேதாவியாக இருந்தார். இந்து மதம் என்பதான ஆரிய ஆஸ்திக மதக் கோட்பாடுகளை வெகு அலட்சியமாகவும், ஆபாசமாகவும் அர்த்தமற்றதாகவும் மக்கள் கருதும்படியாகப் பேசியும் எழுதியும் வந்தார். உதாரணம் சொல்லவேண்டுமென்றால், காந்தியாரையே ஒரு பத்தாம்பசலி, பிற்போக்குவாதியென்றும், அவரால் பிரமாதமாக நடிக்கப்பட்டு வந்த கீதையை முட்டாள்களின் உளறல்கள் என்றும் சொன்னதோடு, காந்தியாரின் கடவுளான ராமனை மகா கொடியவன் என்றும், இராமாயண காவியம் எரிக்கத் தகுந்தது என்றும் சொல்லி பல்லாயிரக்கணக்கான மக்களிடையில் ராமாயணத்தைச் சுட்டு எரித்து சாம்பலாக்கிக் காட்டினார்.



# டாக்டர் அம்பேத்கார் மறைவுபற்றி பெரியார் ஈ.வெ.ரா.

"இந்தியாவின் சிறந்த அறிஞர்களின் முன்னணியிலுள்ள அறிஞரும் ஏராளமான விஷயங்களைக் கற்றுத் தேர்ந்த கலாநிதியுமான அம்பேத்கார் அவர்கள் முடிவெய்திவிட்டார் என்ற செய்தி கேட்டவுடன் திடுக்கிட்டுப் பதறிவிட்டேன். உண்மையில் சொல்லவேண்டுமானால், டாக்டர் அம்பேத்காருடைய மறைவு என்னும் ஒரு குறைபாடானது எந்த விதத்திலும் சரிசெய்ய முடியாத ஒரு மாபெரும் நஷ்டமேயாகும். அவர் சிறப்பாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்துக்குத் தலைவர் என்றுச் சொல்லப்பட்டாலும், பகுத்தறிவுக்கு எடுத்துக்காட்டாகவுள்ள ஒரு பேரறிஞராக விளங்கினார். எப்படிப்பட்டவரும் எடுத்துச் சொல்லப்பயப்படும்படியான புரட்சிகரமான விஷயங்களையெல்லாம் வெகுசாதாரணத்தன்மையில் எடுத்துச் சொல்லும்படியான வீரராகவும் விளங்கினார்.

உலகத்தாரால் மதிக்கப்படும் மாபெரும் தலைவரான காந்தியாரை வெகுசாதாரணமாக மதித்ததோடு, அவருடைய பல கருத்துக்களைச் சின்னாபின்னமாகும்படி மக்களிடையில் விளக்கும் மேதாவியாக இருந்தார். இந்துமதம் என்பதான ஆரிய ஆஸ்திக மதக்கோட்பாடுகளை வெகு அலட்சியமாகவும், ஆபாசமாகவும் அர்த்தமற்றதாகவும் மக்கள் கருதும்படியாகப்பேசியும் எழுதியும் வந்தார். உதாரணம் சொல்லவேண்டுமென்றால், காந்தியாரையே ஒரு பத்தாம்பசலி பிற்போக்குவாதியென்றும், அவரால் பிரமாதமாக நடிக்கப்பட்டு வந்த கீதையை முட்டாள்களின் உளறல்கள் என்றும் சொன்னதோடு, காந்தியாரின் கடவுளான ராமனை மகா கொடியவன் என்றும், இராமாயண காவியம் எரிக்கத்தக்கது என்றும் சொல்லி, டில்லாபிரக்கணக்கான மக்களிடையில் ராமாயணத்தை சுட்டெரித்து சாம்பலாக்கிக் காட்டினார்.

சுற்றுப் பயண[ம்]

9....12....56 ஈரோடு
10....12....56 ,, ஈ. வெ. கி. சஜராஜூ திருமண[ம்]
12....12....56 மதுரை : காலை - திருமணம்
மாலை - தி. க. பொதுக்கூட்டம்

ஆசிரியர் குருசாமி விடுதலை

(டிரங்க் செய்தி)

இந்து மதம் உள்ள வரையிலும் தீண்டாமையும், ஜாதிப் பிரிவும், அவற்றால் ஏற்பட்ட கொடுமையும் ஒழியவே ஒழியாது என்றும் ஓங்கி அறைந்தார். மேற்கண்ட இந்தக் கருத்துகள் தவழும்படியாக ஏராளமான புத்தகங்களை எழுதி வெளியிட்டார். இப்படியாக அநேக அரிய காரியங்களைச் செய்த ஒரு மாபெரும் பகுத்தறிவுவாதியும், ஆராய்ச்சி நிபுணரும், சீர்திருத்த புரட்சி வீரருமான டாக்டர் அம்பேத்கர் முடிவு எய்தினது இந்தியாவுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பகுத்தறிவு வளர்ச்சிக்கும் எளிதில் பரிகரிக்க முடியாத பெரியதொரு குறைவே ஆகும்.

அம்பேத்கரின் மறைவு என்னும் செய்தி திடீரென்று மொட்டையாக வெளியானதிலிருந்து அவருடைய மரணத்துக்குப் பின்னால் சில இரகசியங்கள் இருக்கலாமென்று கருதுகிறேன். அதாவது காந்தியார் மரணத்துக்கு உண்டான காரணங்களும், அதற்கு ஆதாரமான பல சங்கதிகளும் டாக்டர் அம்பேத்கர் மரணத்துக்கும் இருக்கக் கூடும் என்பதே ஆகும்.

- ஈ.வெ.ரா.

**'விடுதலை', 08.12.1956**

■




# 39

# அம்பேத்கர் மரணத்துக்கு மறைமுகசதி நடந்தே இருக்கவேண்டும்

- **நீதிபதிகளாயினும் பார்ப்பனர் நமக்கு தேவையில்லை**
- **பத்திரிகைத் தில்லுமுல்லுகளை கண்டித்து மதுரையில் பெரியார் பேருரை**

டாக்டர் அம்பேத்கர் மரணத்தைப் பற்றி பின்னால் சொல்வதாகச் சொன்னேன். அதுபற்றி சில வார்த்தை சொல்ல ஆசைப்படுகிறேன். முன்பு காந்தியார் செத்த போது அவர் மரணத்திற்குப் பின்னால் பெரிய சதி நடந்திருக்கிறது என்று சொன்னேன். அப்போது ரேடியோக்காரர்கள் அந்த இரண்டு வரிகளை எடுத்துவிட வேண்டும் என்றார்கள். அதை விட்டு விட்டு பாக்கியைத்தான் ஒலிபரப்பினார்கள். மறுநாள் இரண்டு நாள் கழித்து நான் சொன்னது போலவே பத்திரிகையில் ஒரு செய்தி வந்தது. அதாவது “காந்தியார் மரணத்திற்குப் பின்னால் பெரிய ரகசியம் இருக்கிறது; சி.அய்.டி.காரர்கள் கண்டுபிடித்து இருக்கிறார்கள்” என்று போட்டார்கள். பெரிய ஆள்கள் எல்லாம் மாட்டிக் கொள்வார்கள் என்று சொன்னார்கள். மறு இரண்டு நாளில் என்னடா என்றால் “சி.அய்.டி. வைத்திருந்த ஆதாரங்களே திருட்டுப் போய்விட்டது என்றார்கள். சி.அய்.டி. வைத்திருந்தது திருட்டுப் போய்விட்டது. இதை நம்புவதா? என்னவோ எலி பூனையைத் தூக்கிக்கொண்டு போய்விட்டது என்பது போல் சொல்லிவிட்டார்கள்! பிறகு ஏதோ அந்தக் கோட்சே என்பவனைத் தண்டித்தார்கள். பெரிய மகான் என்று சொல்லப்பட்டவரைச் சுட்டதற்காக யாரோ ஒருவனைத் தண்டித்து விட்டால் பரிகாரமாய் விடுமா? அதில் பங்கு பெற்று இருந்த பெரிய ஆள்கள் எல்லாம் தப்பித்துக்கொண்டார்கள்.




சென்னை 20—12—56 விடுதலை வெளியூர் 21—12—56

அம்பேத்கர் மரணத்துக்கு மறைமுகசதி நடந்திருக்கவேண்டும்

நீதிபதிகளாயினும் பார்ப்பனர் நமக்குத் தேவையில்லை

பத்திரிகைத் திலுமுல்லுகளைக் கண்டித்து மதுரையில் பெரியார் பேருரை

குன்றக்குடி அனுபவம்

பத்திரிகைக்காரர்கள் தில்லுமுல்லு

யார் வகுப்புவாதி?

அம்பேத்கார் மறைவு

மரண ரகசியம்

தமிழ்உத்யோகஸ்தருக்கும் பாதுகாப்பு இல்லையே!

"நவஇந்தியா" ஆசிரியர் திரு. ராமகிருஷ்ணன் ரோட்டரி கவர்னராகத் தேர்வு

'தினம் தீபாவளி' கொண்டாடும் டில்லி மந்திரிகள் மக்கள் சபையில் 'காமத்' இடித்துரை

வானொலியில் தேர்தல் பிரசாரம்

அனுமதி இல்லை

பெரியார் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி

முதலுதவிப் பயிற்சி வகுப்புத் துவக்க விழா

பர்னார்டு இன்ஸ்டிடியூட்

மலேயர்மயமாக்கும் திட்டம்

14 வெளிநாட்டவருக்கு நோட்டீஸ்

விபசாரத் தடை மசோதா

டில்லியில் ஜேப்படிபெருக்கம்!

சைக்கிள் திருடியதாக இளைஞர் கைது

பூனாவிலுள்ள பள்ளிக் கூடத்திற்கு சென்னை மானியம்

அதுபோலவேதான் இன்று அம்பேத்கர் அவர்களது மரணமும் சந்தேகப்படத்தக்க நிலையில் உள்ளது. "மூன்று லட்சம் பேரை இந்து மதத்தில் இருந்து மாற்றியுள்ளார்; 16ஆம் தேதியன்று ஏதோ 10 லட்சம் பேரை மாற்றுவதற்குத் தயாராக இருந்தார் என்கிறார்கள். இதை எந்தப் பார்ப்பான் எந்த இந்து மகா சபைக்காரன் பொறுத்துக் கொண்டு



இருப்பான்? காரியம் ஆவது ஒன்றும் இல்லாவிட்டாலும் இந்து மதம் என்பதற்கு பலம் குறைகிறதே! அவன் பொறுப்பானா? ஒழித்துக் கட்டி விட்டான். எவ்வளவு பெரிய மனிதர்! ஏதோ ஓர் அனாதைச் சாக்காடு போலச் செய்து விட்டார்களே? கவர்மென்டில் இதுபற்றி விசாரித்து எழுத வேண்டாமா? எப்படிச் செத்தார்? என்ன வியாதி? யார் யார் கூட இருந்தார்கள்? மனைவி எங்கு இருந்தார்? இதெல்லாம் தெரிய வேண்டாமா? டாக்டர் 12 மணிக்கு முன்னால் செத்திருக்க வேண்டும் என்று சொல்கிறார். கடைசியாக யார் கூடவே இருந்தார்கள்? யார் ஆகாரம் கொடுத்தார்கள். இதெல்லாம் தெரிய வேண்டாமா? ஏதோ ஒரு அனாதைச் சாக்காடு போலவா ஆவது? இது பற்றி நன்றாகச் சிந்திக்க வேண்டும்.

**- 'விடுதலை', 20.12.1956**

■




# 40

# டாக்டர் அம்பேத்கர் புரட்சியின் சின்னமாவார்!

- அரசியல் துறையில் "தனி மனிதர் துதி"யை வெறுத்தவர்
- சர்வாதிகாரியாவதைக் கண்டித்தவர்

பம்பாயிலிருந்து வெளியாகும் 'கரண்ட்' என்னும் ஆங்கில கிழமையிதழில் (டிச. 12ஆம் தேதி இதழில்) பார்லிமெண்ட் உறுப்பினரான திரு **எச்.வி.காமத்** எழுதியுள்ள கட்டுரையின் சாரம் வருமாறு -

"அவர்தன் முயற்சியால் முன்னணிக்கு வந்த பெருமை வாய்ந்த வீரர்; அவரை அலட்சியம் செய்வோர் இருக்கமுடியாது."

கடந்த வியாழக்கிழமையன்று டாக்டர் அம்பேத்கருக்கு மரியாதை செலுத்தும் வகையில் பார்லிமெண்ட் ஒத்தி வைக்கப்பட்டதும் பார்லிமெண்ட் வட்டாரத்தினரிடையே இதே பேச்சாகத்தானிருந்தது.

லோக்சபையிலுள்ள ஒரு முக்கியமான காங்கிரஸ் தலைவர் பேசுகையில், 1947இல் அரசியல் நிர்ணயசபையில் அரசியலமைப்பு மசோதா உருவாக்கப்படும் போது, இவரைப் போல முன்னணியிலிருந்து ஆர்வமும் விடாமுயற்சியும் காட்டிச் செயலாற்றிய காங்கிரஸ்காரர் எவரும் கிடையாது என்றுரைத்தார். எனவேதான், இவர் அரசியல் சட்டத்தின் தலைமைச்சிற்பி என்று கருதப்படுகிறார்.

வன்மை வாய்ந்த தம் அரசியல் எதிரியொருவருக்கு கீழ்வருமாறு பாராட்டுரை வழங்கினார் பிரதமர் நேரு. வேறு எவரும் இல்வளவு பெருமை காணமுடியாது. அவ்வளவு வெளிப்படையாகப் பேசினார் நேரு.





சென்னை 24—12—56 விடுதலை வெளியூர் 25—12—56 3

தமிழ் மக்களுக்கு வேண்டுகோள்

தேர்தல் சூழ்நிலையில் ஏமாறாதிருக்கும்படி குடந்தை திராவிட கழகத்தினர் எச்சரிக்கை

துண்டு விளம்பரம் வழங்கினர்

தமிழர்களே ஜாக்கிரதை!

பழங்கள் மூலம் பாக்-பிரசாரம்?

சட்டசபை ஒத்திவைப்புத் தீர்மானம் நிராகரிப்பு

நகரசபை உறுப்பினர் பதவி இழப்பு நோட்டீஸ்

எதிர்த்து கோர்ட்டில் மனு

ரஷ்யாவை எதிர்த்து பம்பாயில் ஆர்ப்பாட்டம்

135 பேர் கைதாயினர்

புதிய ஜப்பானிய மந்திரி சபை

பிரபல தலைவருக்கு இடமில்லையாம்

நெசவாளருக்கு சர்க்கார் சலுகைகள் பெருகியுள்ளன

நெசவாளர் மாநாட்டில் தலைவர் நாச்சிமுத்து விளக்கம்

அடுத்த ஆண்டில் பண்டங்களின் விலைகள் வீழும்

மத்திய அமைச்சர் டி. டி. கே. நம்பிக்கை

ஆசிய எழுத்தாளர்கள் கடமை

ஹுமாயூன் கபீர் அறிவுரை

பணக்காரர்களை ஒரு முழுக்கில் ஒழிக்க இயலாது

மீண்டும் ரஷ்ய அணுகுண்டு சோதனை

புதிய சோவியத் ஆட்சிக் குழுக்கள்

டாக்டர் அம்பேத்கார் புரட்சியின் சின்னமாவார்!

அரசியல் துறையில் "தனி மனிதர் துதி"யை வெறுத்தவர்

சர்வாதிகாரியாவதைக் கண்டித்தவர்

"அவர் ஒரு புரட்சியின் சின்னம்; நாம் எதையெதை எதிர்த்துப் போராட வேண்டியுள்ளதோ அவற்றையே அவரும் எதிர்த்துப் புரட்சி செய்தார்" என்று திரு. நேரு பேசிய பேச்சு உண்மையேயாகும்.

அவரது சொல் முழக்கத்தை இனியொரு முறை நாம் கேட்கப் போவதில்லை. அரசியலமைப்புச் சபையிலும் அதன்பின் இயங்கிய

இடைக்கால பார்லிமெண்டிலும் அவர் ஒரு சிறந்த நாவன்மைமிக்க பேச்சாளராகத் திகழ்ந்தார்.

1952இல் நடந்த பொதுத் தேர்தலிலும் அதன்பின் 1954இல் நடந்த ஓர் இடைத் தேர்தலிலும் ஆக இருமுறை அவர் அடைந்த தோல்வி அவரை மனக் கசப்படையச் செய்துவிட்டது என்பதில் அய்யமில்லை. அவர் காங்கிரஸ் கட்சிக்கு ஓர் ஓயாத, கண்டிப்புள்ள எதிர்ப்பாளராக இருந்தார்.

அவர் தயாரித்த இந்து சட்டத் தொகுப்பு மசோதா சாதாரணமானதல்ல. அதை அவர் மிகச் சிரமப்பட்டுத் தயாரித்தார். அது அவர் காலத்துக்குள் நிறைவேற்றப்படவில்லை. இதுவும் அவர் ஆத்திரமடையச் செய்ய ஒரு காரணமாகும்.

அவரை நான் பார்லிமெண்டுக்கு வெளியிலும் நன்கு அறிவேன். பார்லிமெண்ட சேம்பரில் அடிக்கடி நான் அவருக்கருகில் அமர்ந்திருப்பதுண்டு. அவர் மந்திரியாக இருந்தபோது, அவரது இல்லமான “சஹார் டிஞ்ச் அவென்யூ” தாழ்வாரத்திலும், அவர் ராஜ்ய சபா உறுப்பினரானபின் அலிப்பூர் சாலையிலுள்ள அவரது வீட்டு வரவேற்புக் கூடத்திலும் உட்கார்ந்திருப்பது வழக்கம். அவர் எப்பொழுதுமே சுறுசுறுப்பாகவும் அடிக்கடி சர்க்காரிடம் குற்றங் காணுகிற மனப்பான்மையுடனும் தோற்றமளிப்பார்.

உலகிலேயே மிகப் பெரும் பகுத்தறிவாளர் என்று அவர் கருதிய புத்தரிடம் அவர் உண்மையான மரியாதை கொண்டிருந்தார். இந்தியாவின் சமுதாய சமத்துவத்துக்குப் போராடிய மாபெரும் வீரராவார்.

ஒரு சமயம் நான் அவரிடம், உபநிஷத்தின் போதனை, புத்தரின் போதனையை விடச் சிறந்ததல்லவா? என்று வினவியபோது, அவர் சினந்தெழுந்து, உபநிஷத் உபதேசிகளான ரிஷிகள் என்போர் சமுதாயக் கொடுமையை ஒழிக்க என்ன செய்திருக்கிறார்கள் என்று கேட்டார். அதற்கு என்னால் ஒன்றும் மாற்றமுரைக்க முடியாமற்போய் விட்டது. என்னால் அவரைச் சாந்தப்படுத்தவும் முடியவில்லை.

நானறிந்த வரையில் சட்டசபையிலிருந்து வெளி நடப்புச் செய்த ஒரே மந்திரி அவர் ஒருவர்தான். 1951ஆம் ஆண்டு அக்டோபர்



மாதம். அவர் தனது ராஜிநாமா அறிக்கையை சபையில் படித்த போது, அப்பொழுது சபைக்குத் தலைமை வகித்திருந்த உதவி சபாநாயகர் திரு.அனந்தசயனம் அய்யங்கார் சில சட்ட நுணுக்க ஆட்சேபனைகளை எழுப்பினார். உடனே டாக்டர் அம்பேத்கர் தமது எதிர்ப்பைக் காட்டும் வகையில் சபையை விட்டு வெளியேறி வெளியிலிருந்த பத்திரிகை நிருபர்களிடம் தனது அறிக்கையின் நகல்களைக் கொடுத்து விட்டார்.

இந்த நிகழ்ச்சி, அவரது ராஜிநாமாவுக்கு மற்றவற்றைக் காட்டிலும் அதிக முக்கியத்துவத்தையும் சிறப்பையும் அளித்தது. 1951இல் பண்டாரா இரட்டைத் தொகுதியில் நடந்த இடைத்தேர்தலில் போட்டியிட டாக்டர் அம்பேத்கர் முடிவு செய்த அதே தினத்தில் நான் அவருடன் இருந்து உணவு கொண்டேன், அப்பொழுது அவருக்கு உடல் நிலை சரியில்லாதிருந்துங்கூட தேர்தலுக்கு நிற்கத் தகுதியுடையவராகவே இருந்தார். ஆனால், அவர் அந்த இடைத் தேர்தலில் தோற்றது நாமெல்லோருக்கும் பெருத்த ஏமாற்றத்தையே கொடுத்தது. அரசியலமைப்புச் சபையில் அரசியலமைப்புச் சட்டம் நிறைவேறுவதற்குச் சிறிது முன்பு கடைசி முறையாக அவர் நிகழ்த்திய உரை வருமாறு:

“இந்தியா போன்ற ஜனநாயக அனுபவம் இல்லாத நாட்டில், சர்வாதிகாரத்துக்கு இடமளித்தால் அதனால் ஆபத்தே ஏற்படும். புதிதாகப் பிறக்கும் ஜனநாயக அமைப்பையே இது குலைக்க நேரிடும். இந்தியாவில் “பக்தி” என்று சொல்லப்படும் மடமையும் தனிமனித துதி மனப்பான்மையும் அரசியலில் உலகில் வேறு எங்குமில்லாத அளவு கையாளப்படுகின்றன. மதத்துறையில் வேண்டுமானால் “பக்தி” என்பது பரலோகத்துக்கான வழியாக இருக்கலாம். ஆனால், அரசியல் துறையில் பக்தி போன்ற தனிமனித துதியானது அழிவுப்பாதைக்கே, சர்வாதிகாரத்துக்கே இட்டுச் செல்லும்.

“நாம், மக்களுக்காக, மக்களால் ஆன, மக்கள் சர்க்கார் என்ற கொள்கையை மதித்து அரசியல் சட்டத்தைக் காப்பாற்ற வேண்டுமானால் நமது பாதையில் குறுக்கிடும் மடமைகளை ஒழிக்க வேண்டும். சர்க்காருக்காக மக்கள் என்னும் வகையில் சர்க்காரைத் தூண்டி விடக்கூடாது.

நமது நாட்டுக்குத் தொண்டு செய்வதைவிட வேறுவழி கிடையாது. எனப் பேசினார்.

இந்து சமூகத்தில் காணப்படும் ஜாதி முறையை ஒழித்துக் கட்ட பெரும் புரட்சி செய்தார். "நான் ஓர் இந்துவாகப் பிறந்தேன்; ஆனால், இந்துவாகச் சாகமாட்டேன்" என்று அவர் அடிக்கடி சொல்லி வந்தார். இரண்டு மாதங்களுக்கு முன் அவர் புத்த நெறியைத் தழுவினர். இந்தியாவில் புத்தஜெயந்தி விழா நடந்து கொண்டிருக்கும் போதே அவர் உயிர் விட்டார்.

**- 'விடுதலை', 24.12.1956**

■




41

# ஜாதியும் தீண்டாமையும் ஒழியுமா?

பெரியார் சொன்னதை அம்பேத்கர் கேட்டார்; மற்றவருக்கும் வழி காட்டினார்; என்றாலும் "அனாதையாய்"ச் செத்தார்.

பெரியார் 30 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, தீண்டாமையும் கீழ் ஜாதி மேல்ஜாதி தன்மையும் உண்மையில் ஒழிய வேண்டுமானால். ஆரிய மதமாகிய இந்து மதம் ஒழிந்தாக வேண்டும் என்று சொல்லி வந்திருக்கிறார்.

ஆதி திராவிடர்களைப் பார்த்து "உங்களால் இந்துமதத்தை ஒழிக்க முடியாது என்றால், நீங்கள் இந்து மதத்தைவிட்டு ஒழிந்து விடுங்கள், உங்களை விட்டு தீண்டாமை ஒழிகிறதா இல்லையா பாருங்கள்" என்றார்.

அதை அம்பேத்கர் கேட்டு செயலில் கொண்டு வந்தார். அதனால் பன்னிரண்டு லட்சம் பேரை விட்டு தீண்டாமை ஒழிந்து விட்டது.

தீண்டப்படாதவர்கள் மாத்திரமல்ல; மற்றவர்களும் ஆரிய மதமான இந்து மதத்தைவிட்டு வெளியேறும்படியான காரியத்திற்கு ஆக, பெரியார் அவர்கள்:

"நான் **பகுத்தறிவு இந்துமதத்தில்** இருந்து கொண்டே தொண்டு செய்கிறேன். என் தொண்டிற்கு பகுத்தறிவு இந்துமதம் இடம் தருகின்றது. கிறிஸ்து மதத்தை, புராணங்கள், புராண மதக்கடவுள்களை எதிர்க்க, ஒழிக்க இடமிருக்கிறது. நீங்கள், மற்ற தீண்டப்படாதவர்களாகிய நீங்கள் அம்பேத்கரையும் 12 லட்சம் தீண்டப்படாத மக்களையும் பின்பற்றி புத்தமதத்தில் சேருங்கள்! அதனால் அரசாங்கம் உங்களுக்கு அளிக்கும் சலுகையை மறுக்காது. இப்போது இந்து மதத்தினை விட்ட கிறித்துவர்களுக்கு மற்ற சலுகைகள் காமராசர் தரவில்லையா?




அது எங்கள் வேலை; நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம். நீங்கள் உடனே உங்கள் கடமையைச் (அம்பேத்கரை பின்பற்றுவதை) செய்யுங்கள்'' என்று அறிவுரை புகன்று வருகிறார்.

அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உழைத்தார். 10 வருட காலத்திற்கு என வகுப்புவாரி உத்தியோக உரிமையை 100க்கு 15 வீதம் என்று வாங்கிக் கொடுத்தார். 10 ஆண்டு காலமும் சீக்கிரத்தில் முடியப் போகிறது. வகுப்புவாரி உரிமையினால் தனது சமுதாயத்திற்குப்



பயனில்லை என்று உணர்ந்தேதான் டாக்டர் அம்பேத்கர் தனது சமுதாயம் இனி இந்துக்களாக இருக்க வேண்டியதில்லையென்ற கருத்தில் இந்து மதத்தை விட்டு வெளியேறி விட்டார். தன் இனத்தாரையும் இந்து மதத்தை விட்டுவிடும்படி கேட்டுக்கொண்டார்.

ஆனதால், தாழ்த்தப்பட்ட மக்கள் அம்பேத்கருக்குத் துரோகம் செய்யாமல் இருக்க வேண்டுமானால் அவர் சொன்னபடியும், எதிர்பார்த்தபடியும் நடந்து கொள்ள வேண்டியது கடமையும், நாணயமும் ஆகும். அம்பேத்கர் விஷம் கொடுத்துக் கொல்லப்பட்டார் என்பதாக அவரது மகன் டில்லி பார்லிமெண்ட் முன்பாகக் கூவி அழுதிருக்கிறார். அதை யாரும் லட்சியம் செய்யவில்லை. அவர் உயிர் போகும் போது பக்கத்தில் இல்லாதிருந்த அவரது மனைவியாரும் அதைப் பற்றி கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அம்பேத்கர் சடலத்தை வைத்தியர்கள் பரீட்சித்துப் பார்த்ததாக செய்தி 7ஆம் தேதி "தினத்தந்தி" பத்திரிகையில் வெளியாகியது என்றாலும், பிறகு அதைப்பற்றி ஒரு சேதியும் காணப்படவில்லை.

இப்போது அம்பேத்கரின் மகனுக்கும், அம்பேத்கரின் இளைய மனைவி பார்ப்பனத்தி அம்மாளுக்கும் அம்பேத்கருடைய சொத்தைப் பற்றி தகராறு ஏற்பட்டு, வழக்காடிக் கொண்டிருக்கிறார்கள் என்று செய்தி வந்திருக்கிறது.

அம்பேத்கர் மகன் இப்போது 'அனாதையாய்' இருக்கிறார்.

அய்க்கோர்ட ஜட்ஜ் பதவியை மறுத்து, மத்திய அரசாங்க மந்திரிப் பதவியை வெறுத்து மக்களுக்காகத் தொண்டாற்றிய ஒருவரின் கதியே அவர் பார்ப்பனராய்ப் பிறக்காததால் இப்படியாய் விட்டது என்பதை மக்கள் உணர்வார்களாக.

யாராவது ஒரு பார்ப்பனனோ, பார்ப்பன அடிமையோ இந்த நிலையில் இருந்து செத்திருந்தால், இந்நேரம் ஒரு மாபெரும் அமரர் ஆகியிருப்பார். அந்த "அமரரை"ப் பற்றி தினம் சி.ஆரும் பத்திரிகைகளும் எழுதிக் கொண்டே இருக்கும். பார்ப்பானே உன் பிறவியே பிறவி!

**- 'விடுதலை', 29.12.1956**

■


Regd. No. M. 4789

போன் 86977 பதிவு எண் 4789

திராவிட நாடு திராவிடருக்கே!

விடுதலை

"VIDUTHALAI" திராவிடர் தமிழ்த்தினசரி

(LEADING TAMIL DAILY)

ESTD: 1935 1935 நிறுவனம்

# 42

# இந்திய அரசியல் சட்டத்தைக் கொளுத்துவேன் - டாக்டர் அம்பேத்கர்

"சிலர் நான்தான் இந்த அரசியல் சட்டத்தை ஏற்படுத்தினேன் என்று சொல்கிறார்கள்",

"நான்தான் அதை நெருப்பிலிட்டுப் பொசுக்குவதற்கும் முதன்மையானவனாக இருப்பேன்",

"நான் அதை முற்றிலும் வெறுக்கிறேன்"

என ஆந்திர மசோதா பற்றிய விவாதம் ராஜாங்க சபையில் நடந்தபோது (3.9.1953இல்) டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் கூறினார்.

**- 'விடுதலை', 10.11.1957**

■


REGD.NO:M.4789. PHONE NO:86977.

விடுதலை

VIDUTHALAI ESTD:1935. திராவிடர் தமிழ்த் தினசரி

"இந்திய அரசியல் சட்டத்தைக் கொளுத்துவேன்"

[டாக்டர் அம்பேத்கார்]

"சிலர் நான்தான் இந்த அரசியல் சட்டத்தை ஏற்படுத்தினேன் என்று சொல்கிறார்கள்,"

"நான்தான் அதை நெருப்பிலிட்டுப் பொசுக்குவதற்கும் முதன்மையானவனாக இருப்பேன்,"




# 43

# பார்ப்பனரின் கடவுள் - மதத்துக்குப் பரம வைரியாயிருந்தவர் டாக்டர் அம்பேத்கர்

- **கீதையை பைத்தியக்காரனின் உளறலென துணிந்து கூறியவர்**
- **காந்தியின் பிற்போக்குத் தன்மையை நன்கு உணர்ந்து எதிர்த்தவர்**
- **புத்தர்நெறியை இங்கிலீஷில் தொகுத்து வெளியிட்ட மேதை**
- **மங்களூர் அம்பேத்கர் நினைவு மன்ற வரவேற்பில் தந்தை பெரியார் பாராட்டுரை**

தந்தை பெரியார் அவர்களை மைசூர் மாநிலத்தைச் சேர்ந்த மங்களூரில் உள்ள அம்பேத்கர் சமரத் சமிதி (அம்பேத்கர் நினைவு மன்றம்) அழைத்து வரவேற்பும் பொதுக் கூட்டமும் 17.5.1959 அன்று சிறந்த முறையில் நடத்த ஏற்பாடுகள் செய்திருந்தனர்.

பெரியார் அவர்கள் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள 14.5.1959 இரவு 9:00 மணி அளவில் திருச்சியில் இருந்து அன்னை மணியம்மையார் அவர்களுடனும் மற்றும் கடலூர் கி.வீரமணி எம்.ஏ., புலவர் இமயவரம்பன் ஆகியவருடனும் தமது கார் மூலம் பயணமானார்கள். முக்கிய கழகத் தோழர்களும் நண்பர்களும் பெரியார் அவர்களை வழி அனுப்பி வைத்தனர். சேலம், ஓசூர் வழியாக 15.5.1959 காலை 5:30 மணிக்கு பெங்களூர் வந்தடைந்தார்கள்.

பெங்களூர் கண்டோன்மென்டில் அவரது உறவினரும் பெரும் நிலச்சுவான்தாருமான திரு.ஏ.வி.ராமசாமி அவர்கள் இல்லத்தில் தங்கி ஓய்வு எடுத்துக் கொண்டார்கள். தந்தை பெரியார் அவர்கள் வந்துள்ள செய்தி எப்படியோ காட்டுத் தீ போல் நகரில் பரவிவிட்டது. ஏராளமான கழகத் தோழர்களும் பொது மக்களும் வந்து தந்தை பெரியார் அவர்களைக் கண்டு வணக்கம் செலுத்தி அளவளாவிச் சென்றனர்.


REGD.NO:M.4788.

PHONE NO:86977.

"விடுதலை" சந்தா விகிதம்

விடுதலை

VIDUTHALAI ESTD:1935.

திராவிடர் தமிழ்த் தினசரி

பெரியார் பொன்மொழி

# பார்ப்பனரின் கடவுள்-மதத்துக்குப் பரமவைரியாயிருந்தவர்

# டாக்டர் அம்பேத்கார்

## கீதையை பைத்தியக்காரனின் உளறலென துணிந்துகூறியவர்

காந்தியின் பிற்போக்குத் தன்மையை நன்கு உணர்ந்து எதிர்த்தவர்

புத்தர்நெறியை இங்கிலீஷில் தொகுத்து வெளியிட்ட மேதை

மங்களூர் அம்பேத்கார் நினைவு மன்ற வரவேற்பில் தந்தை பெரியார் பாராட்டுரை

பெங்களூரில் தந்தை பெரியார் அவர்கள்

குறைந்த விலையில் அறிவு இயக்க புத்தகங்கள்

காலைச் சிற்றுண்டிக்குப் பின் காலை 10:00 மணி அளவில் திரு.ஏ.வி.ராமசாமி அவர்களிடமும் மற்றும் கழகத் தோழர்களிடமும் விடை பெற்றுக் கொண்டு மங்களூருக்குப் பயணமானார்கள்.

மைசூர் மர்க்காரா (குடகு) வழியாக மங்களூர் செல்லும் வழியில் புத்தூர் என்ற நகரில் இரவு தங்கி 16.5.1959 காலை 10:00 மணி அளவில் மங்களூர் வந்தடைந்தார்கள்.



அம்பேத்கர் சமாரத் சமிதியின் முக்கியஸ்தர்களான திரு.ஆர்.கே. சாலியன் எம்.சி., திரு.கமலாட்சா முதலானோர்கள் தந்தை பெரியார் அவர்களை வரவேற்று முனிசிபல் ரெஸ்ட் ஹவுசில் தங்க வைத்தனர். ஏராளமான கன்னடப் பிரமுகர்களும் தமிழ் உத்தியோகஸ்தர்கள், பத்திரிகை நிருபர்கள், தொழிலாளர்கள் முதலானோர்கள் வந்து பெரியார் அவர்களைத் கண்டு அளவளாவி வணக்கம் செலுத்திச் சென்ற வண்ணம் இருந்தனர்.

மாலை 6:00 மணிக்கு மங்களூர் சென்ட்ரல் மைதானத்தில் தந்தை பெரியார் அவர்களுக்கு வரவேற்பளிக்க மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

சுமார் 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட பொதுமக்கள், வியாபாரிகள் தொழிலாளர்கள், மாணவர்கள், வழக்கறிஞர்கள், உத்யோகஸ்தர்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் இப்படியாகப் பலதரப்பட்ட மக்கள் குழுமி இருந்தனர்.

கூட்டத்திற்கு திரு.ஆர்.கே.சாலியன் எம்.சி. அவர்கள் தலைமை வகித்தார்.

அவர் தமது தலைமை உரையில் சமுதாயத் துறையில் பல்லாயிரம் ஆண்டுகளாக இருந்து வரும் இழிவினை ஒழிக்கப் பாடுபட்டு வரும் தலைவர் ஒருவர் உண்டென்றால் அவர் பெரியார் அவர்களே யாவார். அவர் பிற்படுத்தப்பட்ட மக்கள் நலனுக்காக வாதாடும் தலைவர் ஆவார். அவரது புரட்சிகரமான செயல்கள் பிற்போக்குவாதிகளுக்கு நடுக்கத்தையும் பயத்தையும் அளித்து வருகின்றது என்று கூறினார்.

சமிதி சார்பாக திரு. கமலாட்சா அவர்கள் தந்தை பெரியார் அவர்களை வரவேற்றுப் பேசினார். அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

இந்தியாவிலேயே பார்ப்பனக் கொடுமையை எதிர்த்துப் போராடி வருபவர் தந்தை பெரியார் அவர்கள் ஆவார். தந்தை பெரியார் அவர்களைப் போலவே டாக்டர் அம்பேத்கர் அவர்களும் பார்ப்பனர்களுக்கு வைரியாக வாழ்ந்தார். பெரியார் அவரும் ஜாதிக் கொடுமையைச் சாடி வருகிறார். கடவுள் மதங்கள் பேரால் நடைபெறும் அநீதியைக் கண்டித்து வருபவர். பின்தங்கிய மக்கள் நலனில் அக்கறை கொண்டு பாடுபட்டு வரும் பெருந்தலைவர் என்று குறிப்பிட்டார்.





அடுத்து முதலாவதாக டாக்டர் அப்பேத்கர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றினை கன்னடத்தில் திரு.கமலாட்சா அவர்கள் வெளியிட்டுள்ளதை தந்தை பெரியார் அவர்கள் திறந்து வைத்து அம்பேத்கர் அவர்களைப் பற்றி கன்னடத்தில் சொற்பொழிவாற்றினார்கள்.

தந்தை பெரியார் அவர்கள் கன்னடத்தில் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கமாவது:

பேரன்புமிக்க தலைவர் அவர்களே, தோழர்களே, தாய்மார்களே, இன்றைய தினம் உங்களை எல்லாம் சந்தித்து உங்கள் முன்னிலையில் எங்கள் கருத்துகளை எல்லாம் சேர்க்க வேண்டும் என்ற பேரவா உடையவனாக உள்ளேன். அந்த ஆசையின் காரணமாகவே 490 மைல்களுக்கு மேல் கடந்து வந்துள்ளேன். என்றாலும் உங்களிடத்தில் எங்கள் கருத்துகளை எடுத்துச் சொல்ல மொழி ஒரு பெருந்தடையாக உள்ளது.

என்னுடைய தாய்மொழி கன்னடமாக இருந்த போதிலும் அதனை நான் தினசரிப் பேச்சு வழக்கத்தில் கொண்டிருக்கவில்லை. வீட்டிலும் பேசும்படியான வாய்ப்பு இல்லை. எல்லாவற்றிற்கும் தமிழ் மொழியினைத்தான் பயன்படுத்தி வருகின்றேன். எனக்கு கன்னடத்தைவிட தெலுங்கில் கொஞ்சம் பயிற்சி உண்டு. எப்படி என்றால் வியாபார முறையிலும் நண்பர்களின் பழகத்தாலுமேயாகும்.

இருந்தாலும் தமிழ் மொழியில்தான் என்னுடைய கருத்துகள் அத்தனையும் நான் நினைக்கின்ற மாதிரி வெளிப்படுத்த முடியும்.

அய்ரோப்பாவில் எத்தனையோ மொழி, இனம், தேசம் இருந்தாலும் அவர்களிடத்தில் இல்லாத மொழிக் கஷ்டம் நம் நாட்டில் தான் உள்ளது.

உங்களுடைய மொழி வேறு எங்கள் மொழி வேறு உங்கள் தேசம் வேறு; எங்கள் தேசம் வேறு. உங்கள் கருத்து வேறு; எங்கள் கருத்து வேறு. இப்படி இருந்தாலும் நம் இருவருடைய கருத்துகளை பரிமாறிக் கொள்ள மொழி ஒரு தடையாக இல்லாமல் சவுகரியமாக இருக்க வேண்டும்.

என்னுடைய கொள்கைகளை நான் நினைக்கின்றபடி அப்படியே கன்னடத்தில் சொல்ல முடியாவிட்டாலும் இயன்ற அளவு சொல்ல முயற்சிக்கின்றேன்.

தோழர்கள் என்னை பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் வாழ்க்கை வரலாற்றினை கன்னடத்தில் புத்தக வடிவில் வெளியிட்டு உள்ளதைத் திறந்து வைக்கும்படி தோழர் கமலாட்சா கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்நிகழ்ச்சியில் அம்பேத்கர் அவர்களைப் பற்றி சில வார்த்தைகள் கூற வேண்டியது என்னுடைய கடமையாகும்.

**பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் இந்தியாவிலேயே தனியான அபிப்பிராயம் உள்ள ஓர் ஒப்பற்ற மாமனிதர். ஏன் இப்படி மகா மனிதர் என்று சொல்கின்றேன் என்றால், நம்நாட்டில் மகான், மகாத்மாக்கள் என்று அழைக்கப்படுபவர்களை நான் ஒத்துக் கொள்வதில்லை மனிதனின் மேம்பட்ட தெய்வீக சக்தி உடையவர்கள் என்பதிலும் எனக்கு நம்பிக்கை கிடையாது. அவையெல்லாம் புரட்டு பித்தலாட்டங்களாகும். ஆகவே, அப்பேத்கர் மனிதர்களிலேயே அறிவாக்கத்தால் மேம்பட்ட நிலையில் விளங்கியர் ஆவார். அவர் எதையும் சுதந்திரமாகச் சிந்திக்கும் அறிவும் சக்தியும் உடையவர் ஆவார்.**

**நான் எப்படி சாஸ்திர புராணங்களை எல்லாம் கண்டித்து வருகின்றேனோ அதுபோலவே அவைகளை எல்லாம் அவரும் கண்டித்து வந்தார். அப்படி அவர் மட்டும் கண்டிக்காமல் இவைகளுக்கு ஆதரவாக இருந்திருந்தால் பார்ப்பனர்கள் அவரையும் ஓர் மகாத்மாவாக, மகானாக ஆக்கி விளம்பரப்படுத்தி இருப்பார்கள்.**

டாக்டர் அவர்களை எனக்கு 30, 35 ஆண்டுகளாகவே நன்கு தெரியும். அதற்கு முன்னுங்கூட நான் ஒரு பக்கம் இம்மாதிரியான கருத்துகளை மக்களிடையே பரப்பும் வேலை செய்து வந்தேன்! அதுபோலவே அவரும் வேலை செய்து வந்திருக்கிறார்.

1947இல் திரு.சிவராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாநாட்டில் வருணாஸ்ரமக் கருத்துகளைக் கொண்டுள்ள மனுதர்ம நூலை எரித்தவர் ஆவார். அதில் இருந்து சாஸ்திர புராணங்களை எல்லாம் கண்டித்து பலப்பல ஆராய்ச்சி நூல்களை எல்லாம் எழுதி வெளியிட்டு உள்ளார். அவருடைய புத்தகங்கள் ஒவ்வொன்றும் ரூ.10, 15, 20 என்று விலை போகக் கூடியவைகள்.

காந்தியை கள்ள மனிதர் என்று கூறியவர், அதுபோல் எழுதியவர்; ஒரு சமயம் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் சாட்சியம் கொடுக்கச் சென்ற போது காந்தி தன்னை இந்தியர்களின் பிரதிநிதி என்று சொல்லிக் கொண்டார். டாக்டர் அம்பேத்கர் அவர் கூற்றை ஒத்துக் கொள்ளவில்லை. நீர் இந்துக்கள் பிரதிநிதியே ஒழிய இந்தியர்களின் பிரதிநிதி என்று எப்படி ஒப்புக் கொள்ள முடியும்? இந்தியாவில் இந்துக்கள் மட்டும் அல்ல; மற்ற பிற்படுத்தப்பட்ட மக்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்களே! அவர்களுக்குப் பிரதிநிதி அல்ல என்று எதிர்த்துக் கூறியவர்.

அவர் மத்திய சக்கார் மந்திரியாக இருந்தபோது ஒரு தடவை சென்னைக்கு வந்திருந்தார். ஒரு கட்டத்தில் அவரிடம் கீதையைப் பற்றி அபிப்பிராயம் கேட்டார்கள். டாக்டர் அவர்கள் பெரும்பான்மையான மக்களால் உயர்வாகக் கொண்டாடப்படும் ஒன்றாயிற்றே என்றுகூட சிறிதும் தயங்காமல் “கீதை என்பது பைத்தியக்காரனின் உளறல்” என்று எடுத்துரைத்தார்.

அம்பேத்கரின் இத்தகைய பதிலைக் கண்ட சென்னைப் பார்ப்பனர்கள் ஆத்திரம் அடைந்தார்கள். அரசாங்க மந்திரியாக வந்தவர் இப்படிப் பேசலாமா? அதற்கு அவர் மன்னிப்புக் கேட்க வேண்டும். இது பற்றி விசாரணை நடத்த ஜட்ஜை நியமிக்க வேண்டும் என்றெல்லாம் எதிர்ப்புத் தெரிவித்தனர். அதனை அவர் பொருட்படுத்தவில்லை.

மற்றொரு சமயம் லாகூரில் உள்ள ‘ஜட்பட் தோரக் மண்டல்’ என்ற சங்கத்தார் கூட்டிய ஜாதி ஒழிப்பு மாநாட்டிற்கு டாக்டர் அம்பேத்கர் அவர்களை தலைமை தாங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். அதற்கு அவரும் இசைவு தந்தார்.

இந்த சபையானது பச்சை வர்ணாசிரம வெறியரான பிர்லாவின் பணத்தில் இயங்குவது. மாநாட்டுக் குழுவினர்கள் தலைமை உரையினை அச்சுப் போட டாக்டர் அவர்களிடம் எழுதிக் கேட்டு இருந்தார்கள். அதுபோலவே அவரும் “ஜாதி ஒழிய வேண்டுமானால் அதற்கு ஆதாரமாக உள்ள கடவுள் இந்து மதம் சாஸ்திர புராணங்கள் ஆகியவைகள் ஒழிக்கப்பட வேண்டியது அவசியம்.”

ஆராய்ச்சிக் கருத்துகள் அடங்கிய தமது தலைமை உரை எழுதி அனுப்பி இருந்தார். மாநாட்டுக் குழுவினருக்கு ஜாதி ஒழிய கடவுள்,



இந்து மதம், சாஸ்திரம் ஆகியவைகள் ஒழிய வேண்டும் என்று டாக்டர் அவர்கள் கூறி இருப்பது பிடிக்கவில்லை. அவர்கள் ஜாதி ஒழிய வேண்டும் என்று எண்ணினார்களே தவிர, ஜாதிக்கு ஆதாரமான இவைகளை விட்டுவிட விரும்பவில்லை.

ஆகவே, அவர்கள் அம்பேத்கருக்கு எழுதி ஜாதி ஒழிய கடவுள், மதம், சாஸ்திரம் ஒழிய வேண்டும் என்று கூறி இருக்கும் இந்த ஆட்சேபகரமான வார்த்தைகளை மட்டும் நீக்க பிரசுரிக்க அனுமதி கேட்டார்கள். அதற்கு அவர் ஒத்துக் கொள்ளவில்லை.

இக்காரணத்தாலோ மாநாடும் நடைபெறாமல் நின்று விட்டது.

பிறகு அம்பேத்கர் அவர்கள் அதனை புத்தகமாக ஆங்கிலத்தில் வெளியிட்டார். அதனை நாங்களும் ‘ஜாதியை ஒழிக்க வழி’ என்ற பெயரில் தமிழில் மொழி பெயர்த்து குறைந்த விலைக்கு விற்று வருகின்றோம்.

கடைசியாக அவர் ‘புத்த தம்மா’ என்று ஆங்கிலத்தில் புத்தருடைய நெறிகளை விளக்கி எழுதியுள்ளார். இதுவரை புத்த நெறியினை பற்றி எவரும் செய்யாத முறையில் சிறந்த ஆராய்ச்சி அறிவுடன் எழுதியுள்ளார். அதன்விலை ரூ.25. அந்தப் புத்தக வெளியீட்டுக் கமிட்டியார் எனக்கு அன்பளிப்பாக ஒரு புத்தகம் பம்பாயில் தந்தார்கள்.

இத்தகைய ஒப்பற்ற மேதையானவர் இறந்தவுடன் நான்தான் எழுதினேன். காந்தியாரைக் கொன்றது போலவே அம்பேத்கரையும் கொன்றிருக்கிறார்கள் என்று.

இரவு 10:00 மணிக்கு சாப்பிட்டு நல்ல முறையில் நல்ல உடல் நிலையுடன் படுத்தவர். காலையில் ஆறு மணிக்கு படுக்கையில் பிணமாகக் கிடந்தார் என்றால் என்ன அர்த்தம்? இது பற்றிக் கேட்பார் இல்லை. அவர் மகன் ஏதோ டில்லியில் சத்தம் போட்டார். அரசாங்கமோ வேறு யாருமே பொருட்படுத்தவில்லை. அவர் கூப்பாடு கிணற்றில் போட்ட கல் போல் ஆகிவிட்டது.

இப்படிப் பார்ப்பனர்கள் அவர்களின் பிழைப்புக்கு ஏதுவான கடவுள், மதம், சாஸ்திரம் இவைகளை எதிர்த்த எவரையும் அவர்கள் விட்டு வைத்தது கிடையாது. புராணங்களில் வரும் இராவணன் இரணியன் முதல் காந்தி அம்பேத்கர் வரை எல்லோரையும் ஒழித்திருக்கிறார்கள்.

நான் பேசி விட்டுச் செல்லுகின்ற வழியிலோ வேறு எங்கோ என்னையும் கொலை செய்யக்கூடும். நாங்கள் எல்லாவற்றிற்கும் துணிந்துதான் இம்மாதிரியான காரியங்களில் இறங்கி இருக்கின்றோம். எனக்கு இப்ப வயது 80 ஆகின்றது. சராசரி மனிதன் வாழவேண்டிய வாழ்க்கைக்கு மேல் வாழ்ந்து விட்டேன். இனியும் நம் உயிர் உள்ளவரையிலும் நம்மாலானதை இந்த நாட்டுக்குச் செய்துவிட்டுப் போக வேண்டும் என்ற எண்ணத்தினாலேயே இப்படி ஊர் ஊராகச் சுற்றி பலவித எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் பிரச்சாரம் செய்து வருகின்றேன்" என்றார்கள்.

மற்றும் ஜாதி ஒழியவேண்டிய அவசியம் பற்றியும் ஜாதிக்கு ஆதாரமான கடவுள், மதம், சாஸ்திரம், புராணம் ஆகியவைகள் ஒழிக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் நமது சமுதாயத்தைப் பிடித்து சீரழித்தவரும் 3 பேய்கள் 5 நோய்கள் பற்றியும் தனிநாடு அடைய வேண்டிய அவசியம் பற்றியும் விளக்கமாக 3 மணி நேரம் பேசினார்கள் (முழுப் பேச்சு பின்னர்).

இரவு 10:00 மணிக்குக் கூட்டம் இனிதே முடிவுற்றது. 18.5.1959 காலை 10:00 மணிக்கு மங்களூரில் இருந்து அதன் வழியாக பெங்களூர் மாலை 5:00 மணிக்கு வந்தடைந்தார்கள்.

**- 'விடுதலை', 21.5.1959**

■




# 44

# காமராசரும் அம்பேத்கரும் தாழ்த்தப்பட்டோரின் காவலராவர்

- **ஜாதி ஒழிப்பில் தீவிரப்பங்கேற்றவர்கள்**
- **பார்ப்பனரின் ஜீவநாடியான மனுதர்மத்தையே அம்பேத்கர் கொளுத்தினார்! மானமே பெரிது, மதமல்ல என்று நிரூபித்தார்!**
- **சிறுநாங்கூரில் படம் திறந்து வைத்து பெரியார் விளக்கவுரை**

தந்தை பெரியார் .அவர்கள் பஞ்சாயத்து போர்டின் சார்பாக டாக்டர் அம்பேத்கர் படத்தை திறந்து வைத்தும், கழகக் கூட்டத்தில் கலந்து கொண்டும் சிறப்புரை ஆற்றினார்கள். அவர்கள் பேசுகையில் கூறியதாவது:

பேரன்புமிக்க தலைவர் அவர்களே, தோழர்களே, தாய்மார்களே, இவ்வூருக்கு நான் வரவேண்டும் என்று இரண்டு ஆண்டுகட்கு முன்பே பணம் தந்து கூப்பிட்டார்கள். இடைக்காலத்தில் இப்பகுதியில் 40, 50 தடவை வந்தும் இங்கு வர வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. இப்போது இங்கு வரும் வாய்ப்பு கிடைத்ததைப் பெருமையாகக் கருதுகிறேன். இவ்வூருக்கு வர ரோடு வழியின்றி மிக மோசமாக இருந்தது. வரும் போது நண்பர் சாமியை இம்மாதிரி ரோடு இல்லாத ஊர்களில் ஏன் அழைத்துத் தொல்லை தருகிறீர்கள் என்று கோபித்துக் கொண்டேன். ஆனால், இங்கு வந்து உங்கள் அன்பையும் உற்சாகத்தையும் நீங்கள் காட்டிய ஆதரவையும் பார்த்த பிறகு வராதிருந்தால் அது சுத்த பயித்தியக்காரத்தனமாக இருந்திருக்கும், முன்பே பலதடவை வந்திருக்கணும் என்று கருதினேன்.

தோழர்களே! இங்கு முதலாவதாக பஞ்சாயத்து போர்டின் சார்பாக டாக்டர் அம்பேத்கர் அவர்களின் உருவப் படத்தை திறந்து வைக்கிறேன். இதை நான் பஞ்சாயத்து போர்டிலேயே திறந்திருக்க







சென்னை 6—3—61 விடுதலை வெளியீடு 7—3—61

# காமராசரும் அம்பேத்காரும் தாழ்த்தப்பட்டோரின் காவலராவர்

## சாதிஒழிப்பில் தீவிரப்பங்கேற்றவர்கள்

பார்ப்பனரின் ஜீவநாடியான மனுதர்மத்தையே அம்பேத்கார் கொளுத்தினார்
மானமே பெரிது, மதமல்ல என்று நிரூபித்தார்

சிறுநாங்கூரில் படம் திறந்துவைத்து பெரியார் விளக்கவுரை

# இராசிபுரத்தில் பெரியாரிடம் நிலப்பட்டயம் அன்பளிக்கப்பட்டது

தமிழரின் காவலரான காமராசர் ஆட்சி நீடிக்கச்செய்வதே நமது முன்னணி வேலை

எதிர்க்கும் க.து.க்கள் சுதந்தரா கட்சி கூட்டு பலியாதென்பது நிச்சயம்

## இராசிபுரத்தில் பெரியார் அறிவுரை

## உலிபுரத்துக்கு பெரியார் வருகை

திராவிடர் கழக ஆண்டு விழா

உலிபுரம் சாவடித் திடலில் 7-3-61 செவ்வாய் மாலை 6-30 மணிக்கு

திரு. வி. சுந்தரராசு தலைமையில் நடைபெறும்

தந்தை பெரியார் அவர்கள்,

ஏ. என். நரசிம்மன் பி. ஏ.,

கடலூர் கி. வீரமணி எம். ஏ. பி. எல்.

மற்றும் பலர் பேசுவார்கள் அனைவரும் திரண்டு வருக!

திராவிடர் கழகம் உலிபுரம்

கழகச்செய்திகள்

வேண்டும். ஆனால், என் உடல் நிலை கருதி காரிலிருந்து ஏறி இறங்க கஷ்டமாய் இருக்கும் என்ற காரணத்தால் என் நண்பர்கள் இங்கேயே ஏற்பாடு செய்துள்ளனர்.

அம்பேத்கர் - காமராசர் ஆகிய இருவர்களின் படத்தைத் திறப்பது என்றால் எனக்கு மிகவும் உற்சாகமான காரியம் ஆகும். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக பாடுபட்டவரும். அதற்காகவே

உயிர் வாழ்ந்து தொண்டாற்றியவர் டாக்டர் அம்பேத்கர் அவர்கள். மற்றும் பலர் தாழ்த்தப்பட்டவர்களுக்காக பாடுபட்டார்கள் என்றால் அவர்கள் எல்லாம் அதன் பெயரால் வயிறு வளர்த்தவர்களேயாவர். அம்பேத்கருக்கு அடுத்தபடியாக இன்று எல்லா தமிழ் மக்களுக்கும், சேர்த்து யாதொரு தன்னலமுமின்றி காமராசர் பாடுபட்டு வருகிறார், அம்பேத்கரின் தொண்டு என்ன? எப்படிப்பட்டது என்றால் இந்தியாவிலேயே சிறந்த **மனுதர்மத்தை தீயிட்டவர் அம்பேத்கர்.**

மனுதர்மத்தை தீயிட்டு கொளுத்திக் காட்டியவர். நான் வாயால் கொளுத்த வேண்டும் என்றேன். அம்பேத்கர் எரித்தே காட்டினார். அது மட்டுமா? அவர் மந்திரியாக இருக்கும் போது இங்கு வந்து சென்றார். அப்போது கீதை முட்டாள்களின் உளறல் என்று கூறினார். முட்டாள் பேசினாலே ஆயாசம் இருக்கும். அதிலேயும் உளற ஆரம்பித்தால் எப்படியிருக்கும்? அவ்வளவு மோசம் கீதையில் உள்ளது என்றார். உடனே பார்ப்பனர்கள் எல்லாம் சேர்ந்து எதிர்த்தனர். அவர் கருத்தை அவர் கூறுகிறார் என்றார், கூறட்டும். ஆனால், மந்திரியாக, பதவியில் இருந்துகொண்டு இப்படிப் பேசக்கூடாது என்றனர்.

**பார்ப்பனர்களின் ஜீவநாடியான மனுதர்மத்தை நாசிக் மாநாட்டில் கொளுத்தினர்.** மந்திரி பதவியில் இருக்கும்போது சென்னைக்கு வந்து மதத்தின் உன்னதமான ஆதாரம் என கூறப்படும் கீதை முட்டாள்களின் உளறல் என்றார். இது ரொம்ப பெரிய காரியம். ஜாதி ஒழிய வேண்டுமானால் மதம் ஒழியவேண்டும் என்று அம்பேத்கர் எழுதியுள்ளார். ஜாதி ஒழிப்பதற்காக அம்பேத்கர் கடைசிவரை பாடுபட்டு வந்தவராவார்.

அடுத்தபடியாக ஜாதியை - ஒழிக்க திராவிடர் கழகம்தான் பாடுபடுகிறது. காங்கிரஸ்காரர்கள் வாயால் ஜாதி பேதம் ஒழியணும் என்று வெகு ஜாக்கிரதையாகத்தான் பேசுவார்கள்; பத்திரிகையில் எழுதுவார்களே தவிர, ஜாதி ஒழியணும் என்று கூற மாட்டார்கள். எழுத மாட்டார்கள். ஜாதி ஒழிந்தது என்றால் மதம் ஒழிந்து போச்சு என்று தான் அர்த்தம். அதற்கு எவனும் சம்மதிக்க மாட்டான். காந்தி வர்ணாஸ்ரம தர்மத்தைக் காப்பாற்றி வந்தவர். சட்டத்திலே ஜாதி ஒழியக்கூடாது என்று எழுதி வைத்து விட்டார்கள் பார்ப்பனர்.

நேரு மனதில் ஜாதி ஒழியணும் என்று கருதுகிறார். வெளிநாட்டில் அவர் போகும்போது உங்கள் நாட்டில் பறையர் - பிராமணர் என்று ஜாதிப்பிரிவுகள் இருக்கிறதாமே என்று கேட்டால், இவர் வெட்கித்

தலைகுனிவது தவிர என்ன பேசமுடியும்? அதெல்லாம் இப்போது இல்லை, மாறி வருகிறது என்று கூறித்தானே ஆகணும்? சட்டத்தில் ஜாதி ஒழிப்பு என்று இல்லாவிட்டாலும் செயல் முறையில் ஜாதியை ஒழிக்க வேண்டும் என்கிறார். காமராசர் ஜாதியை ஒழிப்பதில் தீவிரக் கவனம் செலுத்தி வேலை செய்வதைக் கண்டு நேருவும், காமராசரை உற்சாகப்படுத்துகிறார்.

நீ செய்கிற வேலை மிகவும் நல்லது, துணிந்து ஜாதியை ஒழிக்க வேலை செய். ஆனால், வாயால் மட்டும் கூறாதே என்கிறார்.

தோழர்களே! மதத்தின் காரணமாக ஒரு மனிதன் தீண்டப்படாதவன் - சூத்திரன் என்றால் அது ஒரு மதமாக இருக்க முடியுமா? ஒரு வேலையும் செய்யாத சோம்பேறிப் பார்ப்பான் உயர்ந்தவனாகவும், பாடுபடும் நாம் சூத்திரன் தேவடியாள் மக்கள் - பஞ்சமன் பறையன் என்று கூறும் ஒரு மதம் இருக்கலாமா? அது நமக்குரிய மதமாக இருக்க முடியுமா? நமக்கு மானம் பெரிதா? மதம் பெரிதா? மனிதனுக்காக மதமா? மதத்திற்காக மனிதனா? நான் சூத்திரன், தேவடியாள் மகன் என்று கூறும் மதத்தில் இருக்கிறேன் என்றால் அவன் முட்டாள் என்றுதானே கூற வேண்டும்? முக்கிய சாஸ்திரம் மனுதர்மம் ஆகும். **அரசாங்கத்தின் இந்து லா சட்டம் இந்த மனு தர்மத்தை அடிப்படையாகக் கொண்டு தான் எழுதப்பட்டிருக்கிறது**. இது பார்ப்பனர்களின் நலனை அனுசரித்து இருக்கும், பார்ப்பனர்களின் தர்மம் என்ன என்பது இப்போது அம்பலத்திற்கு வந்து விட்டதே! சூத்திரனும் பஞ்சமனும், தீண்டப்படாதவனும் படிக்கிறான். அவர்கள் படிப்பதற்காக இந்த காமராசர் அரசாங்கம் உதவி செய்கிறது. எனவே, தர்மம் கெட்டுப் போச்சு என்று ஆச்சாரியார் கூறுகிறாரே... அதற்கு இந்த விபீஷண அனுமார்களும் துணை போகின்றார்கள் என்றால் அவர்களைப் பற்றி என்ன நினைப்பது?

மேலும் பேசுகையில், காங்கிரஸை எதிர்த்த நான், ஏன் இன்று ஆதரிக்கிறேன் என்பதையும், காமராசர் செய்துள்ள பல நன்மைகளை எடுத்து விளக்கியும், வருகின்ற தேர்தலில் காமராசர் கரத்தை வலுப்படுத்த அவரை ஆதரிக்க வேண்டியதன் அவசியத்தை விளக்கியும் பேசினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி நவில கூட்டம் இனிது முடிவுற்றது.

**- 'விடுதலை', 6.3.1961**

■




# 45

# டாக்டர் அம்பேத்கர் உலகறிந்த பேரறிஞர் ஆவார்

- **சமுதாயத் துறையில் தைரியமாக இறங்கிப் போராடியவர்**
- **இந்துமத வெறியை வீழ்த்த் வெற்றிக்கண்டவர் இராமாயணம், மனுதர்மத்தைக் கொளுத்தியவர்**
- **காந்தியாரின் போலித்தன்மையை விளக்கினார்! தாழ்த்தப்பட்டோர் நலத்துக்காகவே உழைத்தார்!**
- **புத்தர் பல்கலைக்கழகம் நிறுவி புத்தநெறியை உயிர்ப்பிக்கத் திட்டமிட்டார். பார்ப்பனர் சூழ்ச்சியால் மாண்டார்**
- **அரக்கோணத்தில் அம்பேத்கர் பிறந்த நாள் விழாவில் பெரியார் பாராட்டுரை:**

பேரன்புமிக்க தலைவர் அவர்களே! தாய்மார்களே! தோழர்களே! டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பிறந்த தின விழாவில் அவர் பெருமையைப் பற்றிப் பேசுவது ஒன்று; அவரின் தொண்டினால் ஏற்பட்ட நலனைப் பற்றிப் பேசுவது ஒன்று.

அம்பேத்கர் பெருமையைப் பற்றிப் பேச வேண்டியது தேவை இல்லை. **அவர் உலகமறிந்த பேரறிஞர்**. நாம் அம்பேத்கர் அவர்களை அம்பேத்கர் என்று அழைப்பதற்குப் பதில் **பெரியார் அம்பேத்கர்** என்று அழைக்க வேண்டும். என்னை பெரியார் என்று அழைக்கின்றார்கள். ஆனதினால் எனக்கு அப்படிக் கூற சற்று வெட்கமாக இருக்கின்றது.

அம்பேத்கர் அவர்கள் மனிதத் தன்மையில் தீவிரமான கருத்தும் தைரியமான பண்பும் கொண்டவர் ஆவார். அவர் சமுதாயத் துறையில் தைரியமாக இறங்கிப் பாடுபட்டவர். மக்களால் பெருமையாகப் பாராட்டப்பட்ட காந்தியாரையே பிய்த்துத் தள்ளியவர்! எப்படி ஜின்னா அவர்கள் நடந்து கொண்டாரோ அது போல மதத்துறையினை



சென்னை 4—5—61 விடுதலை வெளியீடு 5—5—61 3

# டாக்டர் அம்பேத்கார் உலகறிந்த பேரறிஞர் ஆவார்

## சமுதாயத்துறையில் தைரியமாக இறங்கி போராடியவர்

## இந்து மத வெறியை வீழ்த்தி வெற்றிகண்டவர் இராமாயணம், மனுதர்மத்தைக் கொளுத்தியவர்

### காந்தியாரின் போலித்தன்மையை விளக்கினர் தாழ்த்தப்பட்டோர் நலத்துக்காகவே உழைத்தார்

### புத்தர் பல்கலைக் கழகம் நிறுவி புத்தநெறியை உயிர்ப்பிக்கத்திட்டமிட்டார் பார்ப்பனர் சூழ்ச்சியால் மாண்டார்

### அரக்கோணத்தில் அம்பேத்கார் பிறந்தநாள்விழாவில் பெரியார் பாராட்டுரை

### பெரியார் திருப்பூர் வருகை

7-5-61 ஞாயிறு மாலை 6 மணிக்கு

தந்தை பெரியார் அவர்களும்

### அமிர்தகடேசுவரர் நடுச்சந்தியில் நின்று தவிப்பு

தேர் திருவிழாவில் தாழ்த்தப்பட்டோர்-மீனவர் மோதல்

8 பேருக்குக் காயம்: 5 பேர் கைது

### தஞ்சை மாவட்ட தி. க. தோழர்களுக்கு

சின்னாபின்னப்படுத்தியவர். காந்தியாரால் சமுதாயத் துறைக்கு ஒரு நன்மையும் ஏற்படவில்லை. கேடுகள் தான் வளர்ந்து இருக்கின்றது என்று புத்தகம் எழுதியவர்.

இவர் ராமாயணத்தையும் மனுதர்மத்தையும் கொளுத்தியவர்.

பார்ப்பனர்களால் பெருமையாகக் கொண்டாடப்படும் கீதையை பைத்தியக்காரன் உளறல் என்று துணிந்து கூறியவர்.



எப்படி காந்தி ஒரு பார்ப்பானால் கொல்லப்பட்டாரோ அது போலவே இவரும் கடைசியாக பார்ப்பன சூழ்ச்சியால் கொல்லப் பட்டார். அது அதிசயம் இல்லை. இது போன்றவர்கள் எல்லாம் பார்ப்பனர்களால் கொல்லப்பட்டுள்ளார்கள். சமண, பவுத்தர்கள் கொல்லப்பட்டது உங்களுக்குத் தெரியாதது அல்ல.

அம்பேத்கர் அவர்கள் வட்ட மேஜை மாநாட்டில் காந்தியார் அரிஜனங்களின் தலைவர் என்று கூறியபோது நான் உங்களுக்கு பல தடவைகள் கூறி இருந்தும் நீங்கள் மனம் கூசாது.அரிஜனங்களின் தலைவர் என்று கூறிக் கொள்கிறீர்களே என்று கேட்டார். காந்தியால் எதிர்த்துப் பேசமுடியவில்லை. இங்குள்ளவர்கள் எல்லாம் அம்பேத்கர் அப்படிப் பேசியதற்காக கூப்பாடு போட்டார்கள். அம்பேத்கர் கூறினார். “தாழ்த்தப்பட்டவர்களுக்கு. நீங்கள் உண்மைத் தலைவராக இருந்தால் என்னை ஏன் இங்கு அழைத்து இருக்கின்றார்கள்” என்று காந்தியைக் கேட்டவர்.

சமுதாயக் கேடுகள் ஒழிய, ஜாதி ஒழிய, கடவுள், மதம் சாஸ்திரங்கள் ஆகியவைகள் ஒழிய வேண்டும் என்று துணிந்து கூறியவர் ஆவார். இந்த தென்னாட்டில் அல்ல, இதை விட மூடநம்பிக்கைகள் மலிந்த வடநாட்டில் துணிந்து எடுத்துக் கூறி பாடுபட்டவர்.

அம்பேத்கர் அவர்களின் நாளை கொண்டாடுகின்றோம் என்றால் அவர் கொள்கையை நாம் தெரிந்து கொள்ளவேயாகும். எப்படி திராவிடர் கழகம் காங்கிரசை வெளுத்து வாங்கி வந்ததோ அதுபோல அம்பேத்கரும் காங்கிரசின் வண்டவாளங்களை எல்லாம் எடுத்து வெளுத்துக் கட்டியவர். சமுதாயத் துறையில் பிற்படுத்தப்பட்டவர்கள், சமுதாயத் துறையில் முன்னேற்றம் அடைவதைத் தடை செய்ய ஏற்படுத்தப்பட்டது தான் காங்கிரஸ் என்று கூறியவர்.

பானர்ஜி என்ற காங்கிரஸ் பார்ப்பனத் தலைவர் காங்கிரஸ் தலைமையுரையில் அரசியல் பற்றிப் பேசும் போது சமுதாயத்தைப் பற்றிப் பேசுவது தப்பு என்று கூறியுள்ளார். காந்திக்கு முன் வரை அரசியல் மாநாடு தனியாகவும், சமுதாய சீர்திருத்த மாநாடு தனியாகவுமே நடந்து வந்தன. திலகர், “காங்கிரஸ் மாநாட்டுக் கொட்டகையில் சமுதாய சீர்திருத்த மாநாடு நடைபெறக்கூடாது. நடைபெற்றால் தீவைத்து விடுவோம்” என்று மிரட்டியுள்ளார்.

ஒரு சமுதாயத்தில் நாம் என்றென்றைக்கும் இழிமக்களாகவும் வசதியற்றவர்களாகவும் இருக்க ஓர் இனம் சகல துறையிலும் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்பதுதானே காங்கிரஸ் என்று எடுத்துக் காட்டியவர்.

தனித்தொகுதி முறை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அவசியம் தேவை. தாழ்த்தப்பட்ட மக்களே ஓட்டு அளித்து தேர்ந்து எடுக்க வேண்டும் என்று திட்டம் நிறைவேற்றப்பட்டது. காந்தியார் அவர்கள் இப்படி தனித் தொகுதி முறை ஏற்பட்டால் நான் சோறு தின்ன மாட்டேன் என்று பட்டினி கிடந்தார். அப்போது நான் பாரிசில் இருந்தேன். பேப்பரில் பார்த்துவிட்டு உடனே நானும் ராமநாதனும் அம்பேத்கருக்குத் தந்தி கொடுத்தோம் - இப்போதுதான் உங்கள் இனத்துக்கு நல்வாய்ப்பு ஏற்பட்டு உள்ளது. ஏமாந்து கையெழுத்துப் போட்டுவிடாதீர்கள் என்று. எப்படியோ கை எழுத்துப் போட்டு விட்டார். காந்தியார் பட்டினி கிடந்து இறந்து விடுவாரோ என்பதற்கு மட்டும் அல்ல; அவரையே கொலை செய்யவும் சதிகள் நடைபெற்றன. எனவே, கை எழுத்துப் போட்டு விட்டார்.

அம்பேத்கர் வெகுநாளைக்கு முன்னமேயே இந்த இந்து மதத்தை விட்டுவிட்டு முஸ்லிம் மதத்தில் சேர்ந்துவிட முடிவு கட்டினார். நான் “குடிஅரசு” ஆஃபீசில் இருந்து தந்தி கொடுத்தேன். இஸ்லாத்தில் சேர்ந்தால் இஸ்லாமியர்களுக்கு அடங்கி இருக்க வேண்டுமே ஒழிய, இந்துக்களையும் திருத்த முடியாது; முஸ்லிமாக இருந்து இந்து மதத்தைத் தாக்க முடியாது என்றேன். பிறகு மாளவியா, காந்தி எல்லாம் அவரிடம் சென்று ரொம்ப வேண்டிக்கொண்டதால் கைவிட்டார். மதம் மாறுவது மட்டும் உறுதி. ஆனால், எந்த மதம் என்று மட்டும் இப்போது சொல்லுவதற்கு இல்லை என்றார்.

பிறகு புத்த மதத்தில் சேருவதாக இருந்த போதிலும் என்னையும் அழைத்தார். நான் கூறினேன், “நாம் புத்தனாக மாறிவிட்டால் இந்து மதத்தின் குறைபாடுகளை எல்லாம் பேச முடியாது. எப்படி இந்து முஸ்லிம் மதத்தைப் பற்றி பேசினால் முஸ்லிம் சண்டைக்கு வருகின்றானோ, அதுபோலத்தான் நாம் புத்தனாக மாறி இந்து மதத்தைப் பற்றிப் பேசினால் எதிர்ப்பார்கள். நாம் இந்து மதத்தை இந்துவாக இருந்து எதிர்ப்பதனால் எவனும் நம்மைத் தட்டிக் கேட்க முடியவில்லை என்று கூறினேன்.



பர்மாவில் நடைபெற்ற பவுத்த மாநாட்டுக்கு நானும் போய் இருந்தேன். அம்பேத்கரும் வந்து இருந்தார். அவர் என்னைக் கேட்டார், "கையெழுத்துப்போடு, புத்தராக ஆகிவிடுவோம்" என்றார். நான் கூறினேன். "நாம் மட்டும் சேர்ந்தால் போதுமா? நம்மைப் பின்பற்ற பல லட்சம் மக்களைத் தயார் செய்து கொண்டு அல்லவா இறங்க வேண்டும். இப்போது நமது நாட்டில் மதத்தின் பெயரால் எவ்வளவு மூடத்தனமான நம்பிக்கையும் சடங்குகளும் நடைபெறுகின்றதோ அதுபோலத்தானே இன்று பர்மாவிலும் புத்த மதத்தின் பேரால் நடைபெறுகின்றதைக் காண்கின்றோம். நமது கருத்துப்படி அமைய நாம் நமக்கு பலத்தைத் திரட்டிக் கொண்டு பிறகுதான் இறங்க வேண்டும்" என்றேன். என்னமோ நாம் இப்படியே இருந்து விட்டால் போதுமா? ஏதாவது செய்து விட்டுச் சாக வேண்டாமா? என்று கூறினார்.

தாம் புத்த மதத்தில் சேரப் போவதாகவும், தாம் மைசூரில் பெரிய பவுத்த பல்கலைக்கழகம் ஏற்படுத்தப் போவதாகவும் மைசூர் மகாராஜா உதவ இருப்பதாகவும் கூறினார்.

நாங்கள் இப்படி பர்மாவில் பேசிக்கொண்டு இருக்கும்போது ஒரு புத்த பிட்சு அந்த இடத்துக்கு வந்தான். அவனுக்கு அம்பேத்கர் என்னை ஈ. வெ.ராமசாமி என்று அறிமுகப்படுத்தினார். அந்த பிட்சு உடனே என்னைப் பார்த்துக் கேட்டான், "நீ என்ன புத்தமதத்தைக் காப்பாற்ற வந்தாயா அல்லது ஒழிக்க வந்தாயா?" என்று கேட்டான். அவன் போன பிறகு அவன் யார் என்று விசாரித்தபோது அவன் வங்காளத்தில் இருந்து வந்து இருக்கின்றான். இவன் பார்ப்பானாக இருந்து புத்த பிட்சுவானவன் என்று தெரிவித்தார். இப்படித்தான் பார்ப்பனர் அன்றும் புத்த மதத்தில் சேர்ந்து புத்த மதத்தையே ஒழித்தனர்.

கொஞ்ச நேரத்துக்கு எல்லாம் அங்கு அம்பேத்கர் கடைசி காலத்தில் திருமணம் செய்து கொண்ட பார்ப்பன மனைவி வந்தாள். என்னை அம்பேத்கர் அறிமுகப்படுத்திய உடனே அந்த அம்மாள் சொன்னாள் நீங்கள் யாரையோ தேடிக்கொண்டிருந்தீர்களே அப்போதே நினைத்தேன் இந்த ஆசாமியைத் தான் தேடிக் கொண்டிருந்திருப்பீர்கள் என்று கூறினாள்.

தோழர்களே! அம்பேத்கர் இன்னும் கொஞ்சகாலம் இருந்திருப்பாரேயானால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எவ்வளவோ நலந்தரும் மாறுதல்கள் இன்னும் செய்திருப்பார். அம்பேத்கர் சட்டத்தில்

தாழ்த்தப்பட்டவர்களுக்கு 100க்கு 16 வீதம் வாங்கிவிட்டார். நான் அவரைக் கேட்டேன், "உங்கள் ஜாதிக்கு 16 வாங்கிக் கொண்டீர்களே... எங்கள் ஜாதியைப்பற்றி மறந்து விட்டீர்களே" என்று கேட்டேன். "ராமசாமி நீ சொல்லுவது தப்பு. இந்த கமிட்டியில் இருந்தவர்கள் எல்லாம் பார்ப்பான்கள். அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், டி.டி.கிருஷ்ணமாச்சாரி, கோபால்சாமி அய்யங்கார், முன்ஷி என்ற நாலு விஷப்பாம்புகள் இருந்தார்கள். ஒரு சாயபு. இவர் ஓர் அனாமதேயம். அவர்கள் இனத்தாருக்குக்கூட அவரால் எதையும் செய்யவில்லை.

நான்தான் எதையும் எடுத்துச் சொல்லி ஆக வேண்டும். பார்ப்பான்கள் எல்லாம் மெஜாரிட்டியாக இருப்பதனால் என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்றார்.

மேலும் கூறினார். "நான்தான் அரசியல் சட்டத்தை உண்டாக்கினேன். இம்மாதிரியான ஓட்டைகள் எல்லாம் ஏற்பட்டுவிட்டது. இந்த அரசியல் சட்டத்தை எடுத்து கொளுத்துவதாக இருந்தால் நான் முன்னணியில் இருந்து தீ வைக்கத் தயார்" என்றார்.

பிறகு பார்லிமெண்டிலேயே கூறினார், "நான் தான் இந்த அரசியல் சட்டம் உண்டாக்கியதாகக் கூறுகின்றார்கள். அதை தீ வைக்க வேண்டும் என்று கூறினால் நானே முன்நின்று வைப்பேன்" என்று கூறினார்.

இப்படி அம்பேத்கர் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக பாடுபட இயக்கம் நடத்துவதை வகுப்புவாத இயக்கம் என்று பார்ப்பனர் கூறிப் பழித்தனர்.

இப்படிப்பட்ட ஒப்பற்ற தலைவரை பின்பற்றுபவர்களாகிய - தாழ்த்தப்பட்டவர்களாகிய - நீங்கள் கடவுள், மதம், சாஸ்திரங்களில் நம்பிக்கை வைக்கக்கூடாது என்று எடுத்து உரைத்தார்கள்.

மேலும் பேசுகையில் காமராசர் ஆட்சியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் செய்யப்படும் நன்மைகள் பற்றியும் குறிப்பிட்டுப் பேசினார்கள்.

செயலாளர் நன்றி கூற கூட்டம் இரவு 10:00 மணிக்கு இனிது முடிவுற்றது.

**- 'விடுதலை', 4.5.1961**

■




# 46

# ஜாதி ஒழிப்பில் தீவிரச் செயல் வீரராகத் திகழ்ந்தவர் டாக்டர் அம்பேத்கர்

- **இராமாயணத்தைக் கொளுத்தியவர்; இந்து மதக் கொடுமைகளைத் தைரியமாகக் கண்டித்தவர்**
- **புத்தர்நெறியைத் தழுவி பல லட்சம்பேரைத் திருப்புகையில் கொலையுண்டார்**
- **ஆம்பூர் கே.எம்.சாமி நாடக மன்றத்தில் படம் திறந்து வைத்து பெரியார் விளக்கவுரை**

ஆம்பூர் கஸ்பாவில் காலம் சென்ற திரு.கே.எம்.சாமி அவர்களின் பேரில் நாடக மன்ற துவக்க விழா 27.8.1961 அன்று மாலை 5:00 மணி அளவில் நடைபெற்றது. விழாவிற்கு திரு.பொன்னரசன் தலைமை வகித்தார். திரு.ஜி.நேசராஜ் திறந்து வைத்தார்.

புத்தர் திருவுருவப்படத்தை திரு.சின்னசாமி அவர்கள் திறந்து வைத்தார்.

முதலமைச்சர் காமராஜர் அவர்களின் திருவுருவப் படத்தை ஆம்பூர் நகராட்சி மன்ற துணைத் தலைவர் திரு.ஆர்.இராமசாமி அவர்கள் திறந்து வைத்தார். காலஞ்சென்ற திரு.ஜெ.ஜெ.தாஸ் உருவப் படத்தை திரு.ஆதிமூலம் அவர்கள் திறந்து வைத்தார்.

காலஞ்சென்ற கே.எம்.சாமி அவர்களின் திருவுருவப் படத்தை பி.ஜி.சாமிதாஸ் அவர்கள் திறந்து வைத்தார்.

இறுதியாக தந்தை பெரியார் அவர்கள் காலஞ்சென்ற டாக்டர் திரு.அம்பேத்கர் அவர்களின் திரு உருவப் படத்தை திறந்து வைத்தார்கள். தந்தை பெரியார் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:



விடுதலை

சென்னை 8-9-61

வெளியூர் 9-9-61 3

# சாதிஒழிப்பில் தீவிரச் செயல்வீரராகத் திகழ்ந்தவர் டாக்டர் அம்பேத்கார்

## இராமாயணத்தைக் கொளுத்தியவர்: இந்துமதக் கொடுமைகளைத் தைரியமாகக் கண்டித்தவர்

புத்தர்நெறியைத்தழுவி பலலட்சப்பேரைத் திருப்புகையில் கொலையுண்டார்

ஆம்பூர் கே. எச். சாமி நாடகமன்றத்தில் படம் திறந்துவைத்து பெரியார் விளக்கவுரை

ஆம்பூர். செப். 8—

இராமாயணத்தைத் தீயிட்டுக் கொளுத்திய தீரர்

சாதி ஒழிப்பின் அவசியம்

டாக்டர் அம்பேத்கார் படத்திறப்பு தந்தை பெரியார் அறிவுரை

### காஞ்சியில் பெரியார் பேருரை

திராவிடர் கழகப் பொதுக்கூட்டம்

10-9-61 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு

சின்ன காஞ்சிபுரம் சங்கசாமிகுளத்தெருவில்

செ. மா. தி. க. தலைவர்

திரு. சி. பி. இராசமாணிக்கம் அவர்கள்

தலைமையில்

தந்தை பெரியார் அவர்களும்

மத்திய தி. க. பொதுச்செயலாளர்

ஆனைமலை திரு. ஏ. என். நரசிம்மன் பி. ஏ.,

ஆர். ஞானகிராம், எம். சண்முகம்,

டி. பி. எஸ். பொன்னப்பா

ஆகியோரும் பேசுவார்கள்.

அனைவரும் திரண்டு வருக.

செங்கற்பட்டு மாவட்ட திராவிடர் கழகம், காஞ்சிபுரம்.

### அணுக்குண்டு சோதனையின் பயங்கர விளைவுகள்

ஒரே குண்டு பத்து லட்சம் பேரை முடமாக்குமாம்

### வந்தவாசிக்குப் பெரியார் வருகை

திராவிடர் கழகப் பொதுக் கூட்டம்

11-9-61 திங்கள் மாலை 6-30மணிக்கு

வந்தவாசி ஈஸ்வரன்கோயில் எதிரில்

தந்தை பெரியார் அவர்களும்

மத்திய தி. க. பொதுச்செயலாளர்

ஆனைமலை திரு. நரசிம்மன் பி. ஏ., அவர்களும்

தற்கால அரசியல் சமுதாய நிலைபற்றிப் பேசுவார்கள்

அனைவரும் திரண்டு வருக!

வந்தவாசி தி. க.

### இரண்டாண்டுகளுக்கு மின்விசை வெட்டு இராது

பிரதம எஞ்சினியர் திரு. அப்பாதுரை கருத்து

3-ம் திட்டத்தில் விசை உற்பத்தி இருமடங்காகும்

கோவை, செப் 7—

### ராணுவத்தினர் பென்ஷன்

சென்னை, செப். 8—

### குடந்தையில் பெரியார் கார்நிதி வசூல்

பேரன்புமிக்க தலைவர் அவர்களே! தோழர்களே! தாய்மார்களே! என்னை காலஞ்சென்ற நண்பர் டாக்டர் திரு.அம்பேத்கர் அவர்களின் திருஉருவப் படத்தைத் திறந்து வைக்கப் பணித்துள்ளீர்கள். டாக்டர் அம்பேத்கர் அவர்கள் நோய் வந்து ஒன்றும் முடிவெய்துவிடவில்லை கொன்று போட்டார்கள் என்பது எனது கருத்து. அம்பேத்கர் இறந்த செய்தி கேட்டு அவரை காந்தியாரைக் கொன்றது போலவே கொன்று இருக்கின்றார்கள் என்று நான் தான் பேசினேன் - எழுதினேன். நான்கு



அய்ந்து நாட்களுக்கெல்லாம் என்னுடைய கூற்று உண்மை என்பதை உணர்த்தும் வகையில் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் மகனும் என் தந்தையை அநியாயமாகக் கொலை செய்து விட்டார்கள் என்று டெல்லி பாராளுமன்றத்தின் எதிரில் கூப்பாடு போட்டார். அங்கு கேட்க நாதி இல்லை. போலீசார் அவர் மகனைத்தான் அப்புறப்படுத்தினார்கள்.

நான் ஜாதி ஒழிப்புப் பற்றியும் கடவுள், மதம், சாஸ்திரங்கள் பற்றியும் என்ன என்ன கருத்து கொண்டு இருக்கின்றேனோ அதே கருத்துக் கொண்டவர்தான் டாக்டர் அம்பேத்கர் அவர்களும். அவர் எழுதியுள்ள "ஜாதியை ஒழிக்கும் வழி" என்ற புத்தகத்தை வாங்கிப் பார்த்தாலே தெரியும். அதில் ஜாதி ஒழிய வேண்டுமானால் மதம், சாஸ்திர புராணங்கள், கடவுள்கள் அனைத்தும் ஒழிய வேண்டும் என்று குறிப்பிட்டு உள்ளார்.

டாக்டர் அம்பேத்கர் அவர்களும் காங்கிரஸ், பார்ப்பனர்களுடைய பழக்க வழக்கங்களையும ஜாதியைப் பாதுகாக்கவும் ஏற்பட்ட ஸ்தாபனம் என்றே எடுத்துக் காட்டியுள்ளார். காங்கிரஸ் தலைவர்களின் பேச்சுகளை எல்லாம் எடுத்துக் காட்டியுள்ளார். சமுதாய சீர்திருத்தம் இல்லாமல் அரசியல் சீர்திருத்தம் சரிபட்டு வராது என்பதை எதிர்த்துப் பேசிய தலைவர்களின் பேச்சுகளை எல்லாம் அன்று கண்டித்துள்ளார். காந்தியின் தீண்டாமைக் கொள்கையினைக் கண்டித்தவர் ஆவார். தீண்டாமை ஒழிப்பு என்பது பெரிய மோசடி என்றும் கூறியுள்ளார் – தீண்டாமை விலக்கு என்கிறார்களே ஒழிய, ஜாதி ஒழிப்புக்கு ஒரு பரிகாரமும் செய்யப்படாமை பற்றி கண்டித்துள்ளார்.

ஜாதி இந்துக்கள் தீண்டப்படாதரைக் கொடுமைப்படுத்தி வருவதைக் கண்டித்துள்ளார். தீண்டாதார் சரிகைத் துணி அணியக் கூடாது; சாயம் போட்ட வேட்டி கட்டக் கூடாது; தாழ்ந்த ஜாதியார் வெள்ளி நகை அணியக்கூடாது. இந்துக்கள் கொடுத்ததைத் தான் மனமுவந்து ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த நிபந்தனைகளுக்குக் கட்டுப்படாதவர்களை கிராமத்தைவிட்டு விலக்க வேண்டும் என்ற நிலைமை இருந்து இருக்கின்றது. 1935 ஏப்ரல் ஒன்னாந்தேதி வடநாட்டில் தாழ்த்தப்பட்டவர்கள் விருந்தில் நெய் பரிமாறியதற்காக தடிகொண்டு தாக்கப்பட்டதை எடுத்துக் காட்டிக் கண்டித்துள்ளார்.

டாக்டர் அம்பேத்கர் அவர்கள் சூரத்தில் நடந்த தாழ்த்தப்பட்டவர் மாநாட்டில் இராமாயணத்தைக் கொளுத்தியுள்ளார். சென்னைக்கு

வந்தபோது கீதையானது “பைத்தியக்காரன் உளறல்” என்று கூறியுள்ளார்.

அம்பேத்காரின் மதமாற்ற யோசனை

டாக்டர் அம்பேத்கர் அவர்கள் இந்து மதத்தின் கொடுமைகளில் இருந்து விலகி இஸ்லாத்தில் சேரப் போவதாகக் குறிப்பிட்டார் காந்தி. மாளவியா போன்றவர்கள் எல்லாம் வேண்டாம் என்று சமாதானம் கூறினார்கள். நானும் நண்பர் இராமநாதனும் தாங்கள் மட்டும் இஸ்லாத்தில் சேர்ந்து பிரயோசனம் இல்லை. ஒரு லட்சம் மக்களையாவது கூட்டிக் கொண்டு மதம் மாறினால்தான் உங்களுக்கு அங்கு செல்வாக்கு இருக்கும் என்று நீண்ட தந்தி கொடுத்தோம்.

அடுத்து புத்த மார்க்கத்தில் சேர முடிவு செய்து கொண்டு பர்மா புத்தர் மாநாட்டுக்குப் போய் இருந்த போது அதைக் கூறி என்னையும் சேர்ந்து விடும்படியும் அன்றே கையெழுத்துப் போடும்படியும் வற்புறுத்தினார்.

நாம் இருவரும் மட்டும் புத்த மார்க்கத்தில் சேர்ந்தால் போதுமா? நம்மைப் பின்பற்ற பல லட்சக்கணக்கான மக்களையாவது சேர்த்துக் கொண்டாவது போவதுதான் நல்லது. மேலும் நாம் புத்த மார்க்கத்தில் சேர்ந்துவிட்டால் இந்து மதத்தில் உள்ள ஊழல்களைக் கண்டிக்க முடியாது. இந்து மதத்தில் இருந்து கொண்டு கண்டித்தால் எவனும் நம்மைத் தட்டிக் கேட்க முடியாது என்றேன்.

அதற்கு அம்பேத்கர் அவர்கள், “என்னமோ நீங்கள் சும்மா பேசிப் போட்டுச் சாகின்றேன் என்கின்றீர்களே ஒழிய, உருப்படியாக எதையாவது செய்ய மாட்டேன் என்கின்றீர்களே” என்று என்னைக் கேலி பேசினார்.

பர்மாவில் இருந்து வந்த சில மாதங்களில் 5, 5 லட்சம் மக்களையும் தம்மோடு மதமாற்றத்துக்குத் தயார் செய்து கொண்டு புத்தர் நெறிக்கு மாறினார்.

அம்பேத்கரும் நானும் பர்மாவில் புத்த மார்க்கத்தில் உள்ள மூடப் பழக்கவழக்கங்களை திருத்தியாக வேண்டியமை பற்றிப் பேசிக் கொண்டு இருந்தோம். அவரும் அதற்கு உடன்பட்டு புத்த மார்க்கத்தின் உண்மைக் கருத்துகளை எல்லாம் ஆராய்ந்து தெளிவுபடுத்தி எழுதியுள்ளார் என்று எடுத்துரைத்தார்கள்.



மேலும் பேசுகையில் ஜாதியை ஒழிக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் விளக்கினார்கள்.

அடுத்து எதிர்பாராத விதமாக தந்தை பெரியார் அவர்களைச் சந்தித்து சென்னையில் நடபெறும் ஜாதி ஒழிப்பு மாநாட்டுக்கு அழைக்க வந்திருந்த தமிழ் தேசிய கட்சியின் முக்கியத் தலைவர் கவிஞர் கண்ணதாசன் அவர்களும் சிறிது நேரம் ஜாதி ஒழிக்கப்பட வேண்டிய அவசியம் பற்றியும் தந்தை பெரியார் அவர்களின் தொண்டுகள் பற்றியும் பேசினார்கள்.

செயலாளர்கள் நன்றி கூற கூட்டம் ஆறரை மணிக்கு முடிவுற்றது.

**- 'விடுதலை', 8.9.1961**

■


நிறுவனம்-1935 "VIDUTHALAI" TAMIL DAILY பதிவு எண் 4789.

விடுதலை

பக்கம் 4 விலை 8 காசுகள்

மலர் 27] சென்னை விசுவாவசு ஆண்டு மார்கழி 17 (1—1—66) சனி வெளியூர் (2—1—66) ஞாயிறு [இதழ் 209

60-வது பார்க்பே பொருட்காட்சி
வைர விழா
S. I. A. A. மைதானம், சென்னை-3.
2-1-66 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணிக்கு
தந்தை பெரியார் அவர்கள் தலைமையில்
நடிகவேள் எம். ஆர். ராதா அவர்கள் நடிக்கும்
"ரத்தக்கண்ணீர் நாடகம்"
விளையாட்டு பந்தயங்களும் வாண வேடிக்கைகள்
மற்றும் பல அரிய நிகழ்ச்சிகளும் உண்டு.
நுழைவுக் கட்டணம் 25 காசுகள்
கே. கோவிந்தசாமி எம்.சி.
அமைப்பாளர்
(Advt.)

காலநிலை:
வங்கக்கடலில் புயல்

வறுமை-பட்டினி வளரவிடுவது

# 47

# பற்றற்ற பகுத்தறிவாளரே சமூகக் குறைகளை நீக்க இயலும்!

- **மனித குலத்தைத் திருத்திய நான்கு தியாக சீலர்களில் டாக்டர் அம்பேத்கர் ஒருவர்**
- **அறிவுத் தெளிவுக்கு புத்தமார்க்கமே சிறந்தது**
- **தாழ்த்தப்பட்டப்பவர்களின் ரட்சகர் அவரே சென்னை அம்பேத்கர் விழாவில் பெரியார் பேருரை**

"டாக்டர் அம்பேத்கர் உலகினரின் சொத்தானவர். செயற்கரிய செய்த, மனித குலத்தைத் திருத்திய தியாக சீலர்கள் நால்வரில் ஒருவர். அறிவுத் தெளிவுக்கு புத்த மார்க்கமே சிறந்ததெனக் கண்டு தானும் புத்தரானார்; லட்சக்கணக்கில் புத்தர்களை உண்டாக்கினார், தாழ்த்தப்பட்ட மக்களின் ரட்சகராவார்; அம்பேத்கர் வகுப்புரிமை வாங்கித் தந்தவர்; மடமையை ஒழித்து அறிவுத் தெளிவடையச் செய்தவர்; லட்சக்கணக்கில் புத்த மார்க்கத்தில் சேர்ந்த மக்கள் வழிகாட்டியாவார்" என்று தந்தை பெரியார் அவர்கள் சென்னை பெரியமேட்டில் நடந்த டாக்டர் அம்பேத்கர் 75ஆம் ஆண்டு விழாவில் விளக்கவுரையாற்றினார்கள்.

தந்தை பெரியார் அவர்கள் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் தொண்டுகளைப் பற்றி விளக்க உரை ஆற்றுகையில் குறிப்பிட்டதாவது:

இந்த நிகழ்ச்சியானது டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 75ஆம் ஆண்டாக கொண்டாடும்படியாக நடைபெறுகின்றது.

அம்பேத்கார் அவர்களைப் பற்றி எடுத்துச் சொல்லப்படும் விஷயங்கள் அம்பேத்கர் அவர்களுக்குப் பெருமை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக அல்ல; அது மக்களுக்கு பயன்பட வேண்டும் என்ற கருத்தில் கூறுகின்றேன்.





திருவள்ளுவர் 1935 "VIDUTHALAI" TAMIL DAILY

**விடுதலை**

**கவலை வேண்டாம்!**

வாலிபர்களே! வயோதிகர்களே! தாய்மார்களே! உங்கள் வியாதி எதுவாயினும்—சகலவித காசம், வாதரோகம், சர்மரோகம், வீரியமின்மை, சோகை, பாண்டு, மூலம், பவுத்திரம், மற்றும் பல நோய்களை, ஆண், பெண் இரு பாலருக்கும், எல்லா வயதினருக்கும், குணப்படுத்தப்படும்—உத்திரவாதம். பதில் வேண்டுவோர் போதிய ஸ்டாம்புகளுடன் தொடர்பு கொள்ளவும்.

டாக்டர் இரா. செகநாதன், ஆர்.அய்.எம்.பி. தியாகராயர் கல்லூரி பின்புறம் வடசென்னை-21. கவனிக்கும் நேரம் காலை 7 முதல் 9 வரை மாலை 5 முதல் 8 வரை advt.

கடவுள் கதையின் லட்சணம்!

**இராமாயணம் ஆபாசக் களஞ்சியமே!**

[9]

சீதையின் கற்பு யோக்கியதை!

அங்கங்களை அன்னியன் நேரில் வர்ணிக்க அனுமதிக்கிறாள்!

# பற்றற்ற பகுத்தறிவாளரே சமூகக்குறைகளை நீக்க இயலும்

**மனிதகுலத்தைத்திருத்திய நான்கு தியாகசீலர்களில் டாக்டர் அம்பேத்கர் ஒருவர்**

அறிவுத்தெளிவுக்கு புத்தமார்க்கமே சிறந்தது

தாழ்த்தப்பட்டவர்களின் ரட்சகர் அவரே

**சென்னை அம்பேத்கர் விழாவில் பெரியார்பேருரை**

சென்னை, ஏப். 14-

"டாக்டர் அம்பேத்கர் உலகினரின் சொத்தானவர். செயற்கரியசெய்த, மனிதகுலத்தைத்திருத்திய தியாக சீலர்கள் நால்வரில் ஒருவர். அறிவுத் தெளிவுக்கு புத்தமார்க்கமே சிறந்த தெனக்கண்டு தானும் புத்தரானார்; லட்சக்கணக்கில் புத்தர்களை உண்டாக்கினார். தாழ்த்தப்பட்ட மக்களின் ரட்சகராவார்; அம்பேத்கார் வகுப்புரிமை வாங்கித்தந்தவர்; மடமையை ஒழித்து அறிவுத் தெளிவடையச் செய்தவர்; லட்சக்கணக்கில் புத்தமார்க்கத்தில் சேர்ந்த மக்கள் வழிகாட்டியாவார்.

--என்று தந்தை பெரியார் அவர்கள் சென்னை பெரியமேட்டில் நடந்த டாக்டர் அம்பேத்கார் 75-ம் ஆண்டுவிழாவில் விளக்கவுரை யாற்றினார்கள்.

சென்னை, ஏப். 14— சென்னை பெரியமேட்டில் 13—4—66 அன்று மாலை 6-30 மணி அளவில் டாக்டர் அம்பேத்கார் நினைவு டிரஸ்ட் சார்பாக தாழ்த்தப்பட்ட மக்களின் தனிப்பெரும் தலைவரும் ...

**கள்முதலாளி ஏழுமலையானின் உண்டியலில் திருட்டு!**

சக்தியற்ற சிலையென்று புரிந்துகொண்ட கோயில் பெருச்சாளிகள் கைவரிசை!

**நாளை இதழில்**

"பார்ப்பனர் ஏன் காங்கிரசை அழிக்க வேண்டுமென்கிறார்கள்?" என்ற பெரியார் தலையங்கம் வெளிவரும்.

**நாட்டு வருமானத்தில் 3 சதவிகிதம் கல்விக்காக செலவிடுவது மிகக்குறைவே!**

பார்லிமெண்ட் கல்வி ஆலோசனைக் கமிட்டியில் சக்ளா வருத்தம்

**தயார் நிலையிலிருப்பதே ஆக்கிரமிப்பை தடுக்கும் சிறந்தவழி**

மக்கள் சிவில்பாதுகாப்புப்பயிற்சிகளை பெற்றாக வேண்டும்!

பிரதமர் இந்திராகாந்தி வலியுறுத்தல்

இந்தக் கூட்டத்தில் தலைவர் அவர்கள் கூறியதுபோல் நானும் டாக்டர் அவர்களைப் பற்றி பேசுவது பொருத்தமானாலும் என்னைப் பற்றியும் இரண்டொரு வார்த்தைகள் சொல்லிக் கொள்ள வேண்டும்.

என்னுடைய லட்சியம் எல்லாம் மனித சமுதாயத்தில் உள்ள மக்களை இழிவு குறைபாடுகளை நீக்கி பகுத்தறிவு உடையவர்களாகச் செய்ய வேண்டும் என்பதுதான். மற்ற சங்கதிகள் எல்லாம் அடுத்தபடி தான் ஆகும்.





எப்படியோ நமது நாட்டில் மனித சமுதாயம் இழிவுக்கும், குறைபாடுகளுக்கும் ஆட்பட்டு விட்டது.

இதுகளை நீக்க யாரும் கவலை எடுத்துகொள்ளவே இல்லை. மனித சமுதாயத்துக்குள்ள குறைபாடுகளை நீக்க வேண்டியவர்களுக்கு பகுத்தறிவுப் பற்று ஒன்றுதான் இருக்க வேண்டும். மற்றெவ்வித பற்றுகள் இருந்தாலும் சறுக்கி விழுந்து விடுவார்கள் என்பது எனது கருத்து.

எனவே, நான் பகுத்தறிவுவாதி என்ற முறையில் பேசுகிறேன்.

அப்படியே நம்ப வேண்டும் என்பது அல்ல. உங்களுக்கு சரி என்று பட்டதை எடுத்துக் கொண்டு மற்றதைத் தள்ளிவிட வேண்டும்.

தோழர்களே! டாக்டர் அம்பேத்கர் அவர்களைப் பற்றி தலைவர் அவர்கள் பேசும்போது **டாக்டர் ஒரு சமுதாயத்துக்கு மட்டும் சொந்தம் அல்ல; உலகத்துக்கே சொந்தம் என்றார்கள்.**

நானும் அதைத்தான் சொல்லுகின்றேன் டாக்டர் அம்பேத்கர் உலகத்தின் சொத்து. உலகிலே செயற்கரிய செய்த பெரியவர்கள் கூட்டத்தில் டாக்டர் அவர்களும் ஒருவர் ஆவார்.

பெரியவர்கள் நாட்டில் ஏராளம் இருக்கலாம். நாட்டுக்காக மொழிக்காக, ஒரு இனத்துக்காகப் பாடுபட்டவர்கள் உண்டு. அவர்கள் எல்லாம் செயற்கரிய செயல் செய்த பெரியவர்கள் பட்டியலில் சேர மாட்டார்கள்.

டாக்டர் அவர்கள் தமக்கு புகழ் வரவேண்டும் என்றோ; மதிப்பு வரவேண்டும் என்றோ; பதவி வரவேண்டும் என்றோ; நல்வாழ்வு வரவேண்டும் என்றோ பாடுபட்டவர் அல்ல; பலன் கருதாத் தொண்டு செய்தவர் ஆவார்.

இப்படி பலன் கருதாது செயற்கு அரிய தொண்டு செய்தவர்கள் மிக மிக சிலரேயாவர்.

பழங்கால சரித்திரத்தை எடுத்துக் கொண்டால் ஏசுநாதரை, மகமது நபியை, புத்தரைத்தான் சொல்லலாம்.

இந்த மூன்று பேருக்கு அப்புறம் நான்காவது விரலை விட வேண்டும். ஆனால், அம்பேத்கரை தான் சொல்லலாம்.



மக்களின் மடமையை, இழிவை, கொடுமைகளைக் கண்டு அவற்றை நீக்கப் பாடுபட்டவர் டாக்டர் அம்பேத்கர்தான். தாழ்மையாகக் கேட்டுக் கொள்ளுகின்றேன் இவரைவிட இன்னொருவர் இருக்கின்றார் என்று நீங்கள் காட்டினால் நான் ஏற்றுக் கொள்ளுகின்றேன்.

கடந்த 3000 ஆண்டில் முயற்சி எடுத்துக் கொண்டு மனித சமுதாய இழிவுக்கு, மடமைக்கு பரிகாரம் தேட முற்பட்டவர்கள் இவர்கள் நால்வர்தாம் ஆவர்.

ஒரு திருத்தம் சொல்ல வேண்டுமானால் ஏசுநாதரை கடவுளின் திருக்குமாரர் என்பார்கள். முகமது நபி அவர்களை கடவுளின் தூதர் என்பார்கள். புத்தர், அம்பேத்கர் அப்படிப்பட்டவர்கள் அல்லர். சாதாரண மனிதனாக இருந்து அறிவு விளக்கம் காட்டியவர்கள் ஆவார்கள்.

இப்படி மக்களின் இழிவுக்கு மடமைக்குப் பரிகாரம் தேட வழிகாட்டிய ஆதி புருஷர் யார் என்றால் புத்தர்தான் ஆகும்.

புத்தருக்குப் பிறகு மதவாதிகளும், அரசியல்வாதிகளும், ஏராளமான பெரியவர்களை விளம்பரப்படுத்தியுள்ளார்கள். இவர்கள் எல்லாம் நான் முன்பு கூறிய ஏசு, நபிகள் நாயகம் புத்தர் போன்றவர்கள் அல்லர்.

நமது நாட்டில் மகான்கள், மகாத்மாக்கள், ரிஷிகள், அவதார புருஷர்களுக்கு குறைவே இல்லை. இவர்கள் எல்லாம் பக்திமான்களாக பெரியவர்கள் ஆக்கப்பட்டவர்கள்.

நாம் பகுத்தறிவுவாதிகள். பகுத்தறிவு அடிப்படையில் பார்த்தால் பக்தி என்பது மூடநம்பிக்கையின் உச்ச ஸ்தானம் என்று கருதுகின்றவர்கள் ஆனபடியால் நாம் இவர்களை முன்பு கூறிய ஏசு, நபி, புத்தர் போன்றவர்களுடன் ஒப்பிட முடியாது.

நமது நாட்டில் தோன்றிய மகான்கள், மகாத்மாக்கள், ஆனந்தாக்கள், ரிஷிகள் எல்லாம் செயற்கு அரிய செயல் செய்த பெரியார்களின் கருத்துகளை கோட்பாடுகளை ஒழிக்கவே பாடுபட்டார்கள் என்று தான் சொல்லவேண்டும்.

டாக்டர் அம்பேத்கர் அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களின் இழிவைத் துடைக்க தைரியமாக முன் வந்தவர் ஆவார்.

அதற்கேற்ற அறிவு, படிப்பு, துணிவு அவரிடம் நிரம்ப இருந்தது. இவரைத் தவிர இவருக்கு முன்னும் பின்னும் இவர் போல தொண்டு செய்ய எவருமே முன்வரவில்லை. ஏன் என்றால் மக்களின் மடமையினை இழிவினை ஒழிக்க நாட்டில் மதமும், சமுதாயச் சூழலும் இடம் கொடுக்கவில்லை.

டாக்டர் அம்பேத்கர் கருத்தினை எதிர்த்துப் பேசி ஜெயித்தவர்கள் நாட்டில் யாருமே இல்லையே!

நாட்டில் எது எதை குற்றம் எனக் குறை கூறவேண்டுமோ அதுகளை எல்லாம் தைரியமாகச் சொன்னவர் ஆவார்.

உலகம் எல்லாம் மகாத்மாவைப் புகழ்ந்து கொண்டு ஒருபுறம் இருக்க காந்தியார் மனித சமுதாயத்தின் எதிரி. அவர் மூளை இல்லாதவர் என்று துணிந்து கூறினார் டாக்டர்.

அதுமட்டும் அல்ல. நமது சென்னையில்தான் “கீதையை முட்டாள்களின் உளறல்” என்று துணிந்து கூறினார். ஏன் இப்படிக் கூறினாய் என்று எவராவது கேட்டார்களா? கேட்டார்கள் என்றாலும் என்ன கேட்டார்கள்? ஏன் இப்படிச் சொன்னாய் என்று கேட்கவில்லை. “மந்திரியாக இருந்து கொண்டு இப்படிச் சொல்லலாமா?” என்று தான் கேட்டார்கள் - எழுதினார்கள்!

அதற்கு அவர் மந்திரி பதவி வேறு; அம்பேத்கர் வேறு. மந்திரியாக இருந்தால் அறிவு இருக்கக் கூடாதா? என்றார். அவர், காந்தியார் தீண்டப்படாத மக்களுக்கு என்ன செய்தார்? என்று பெரிய புத்தகமே எழுதியுள்ளார். இன்றுவரை யாரும் எதிர்க்கவே இல்லை.

அம்பேத்கர் துணிவுக்கு ஒரு உதாரணம் கூறுகின்றேன். தென்னாட்டில் ஜாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு பிரச்சாரம் நடைபெறுவது கண்டு பஞ்சாபில் “ஜத்பட்தோரக் மண்டல்” என்ற சங்கம் வேலை செய்து வந்தது. தீண்டாமைக் கொடுமையினை ஒழிக்க பல கருத்து நிறைந்த கார்ட்டூன்கள் நூல்கள் எல்லாம் வெளியிட்டு வந்தார்கள். இந்த சங்கத்தை எப்படியாவது ஒழித்துவிட வேண்டும் என்று எண்ணி சில பணக்காரர்களும் தந்திரமாக உள்ளே புகுந்து விட்டார்கள்.

பஞ்சாப்பில் இந்த சங்கத்தின் சார்பாக தீண்டாமை ஒழிப்பு மாநாடு என்ற ஒன்றை ஏற்பாடு செய்து இருந்தார்கள். புதிதாகப் புகுந்தவர்கள்

ஆதிக்கம் மேலோங்கி இருந்ததனால் அவர்கள் பழமையாக இருந்து வருபவர்களை திருப்திப்படுத்துவதற்காக மாநாட்டிற்கு தலைமை வகிக்க அம்பேத்கர் அவர்களைக் கூப்பிடுவது என்று முடிவு செய்தார்கள். அம்பேத்கரும் ஒத்துக் கெண்டார். பிறகு அதில் இருந்த உயர் ஜாதிக்காரர்களுக்கும், பணக்காரர்களுக்கும் எப்படியோ சந்தேகம் உண்டானது. அம்பேத்கர் வந்தால் எதையாவது பேசிவிட்டால் என்ன பண்ணுவது என்று அய்யம் கொண்டனர்.

அவர்கள் தந்திரமாக டாக்டர் அவர்களிடம் தங்கள் தலைமையுரையை அச்சிட வேண்டும், அனுப்பி வையுங்கள் என்று கேட்டார்கள். அவரும் அனுப்பி விட்டார்.

அதனைக் கண்ணுற்ற மாநாட்டுக்காரர்கள் நாம் மதத்தைக் காப்பாற்ற அல்லவா தீண்டாமை ஒழிய வேண்டும் என்கின்றோம். அவர், தீண்டாமை ஒழிய வேண்டுமானால் ஜாதி ஒழிய வேண்டும்; ஜாதிக்கு ஆதாரமான கடவுள் மதம் ஒழிய வேண்டும் என்று கூறுகின்றாரே என்று திடுக்கிட்டார்கள்.

பிறகு அம்பேத்கர் அவர்களை அணுகி அந்தப் பாகங்களை நீக்கிவிட வேண்டும்; இல்லாவிட்டால் எதிர்ப்பு அதிகமாக இருக்கும் என்றார்கள்.

அதற்கு அம்பேத்கர் நான் ஒரு எழுத்தைக்கூட மாற்ற அனுமதிக்க மாட்டேன். ஒன்று வேண்டுமானால் செய்யுங்கள். மாநாட்டிக்கு நான் தலைவன் எனது கருத்தை நான் படிக்கின்றேன்.

நீங்கள் வேண்டுமானால் இந்தக் கருத்துகளை மாநாடு ஏற்றுக் கொள்ளவில்லை என்று தீர்மானம் வேண்டுமானால் கொண்டு வந்து நிறைவேற்றிக் கொள்ளுங்கள். நான் ஆட்சேபிக்கவில்லை என்றார்.

மாநாட்டுக்காரர் அம்பேத்காரின் உறுதி கண்டு மாநாட்டையே நிறுத்திப் போட்டார்கள். பிறகு அம்பேத்கர் அந்த தலைமையுரையினை அச்சிட்டு புத்தகமாக வெளிப்படுத்தினார்.

**எனக்கு ஒரு புத்தகம் அனுப்பி இருந்தார் அதனை அவர் அனுமதி வாங்கி ‘‘ஜாதியை ஒழிக்க வழி’’ என்ற பெயரில் வெளியிட்டோம் (1934).**

எனவே, ஜாதியை ஒழிக்க வேண்டுமானால் மதத்தையும், கடவுளையும் ஒழித்தாக வேண்டும் என்ற கருத்தை ஒருவனும்

ஏற்றுக் கொள்ள மாட்டான். அதற்கு மிக்க துணிவு வேண்டும் இதுகளை வைத்துக் கொண்டு ஜாதியை ஒழிக்கின்றேன் என்பது பைத்தியக்காரத்தனமாகும்.

ஜாதிக் கொடுமை ஒழிய வேண்டுமானால் நாம் இந்து மதத்தை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்று எண்ணினார். சீக்கிரத்தில் முஸ்லிம் ஆகப் போகின்றேன் என்றார். பலர் வேண்டாம் வேண்டாம் என்றார்கள்.

நானும் கூட வேண்டாம் என்றுதான் எழுதினேன். எந்தக் கருத்தில் என்றால், நீங்கள் முஸ்லிமாக மாறுவதில் ஆட்சேபனை இல்லை. நீங்கள் மட்டும் போய்ச் சேர்ந்தால் மரியாதை இருக்காது. பெரிய கூட்டத்தையே சேர்த்துக் கொண்டு போய் சேருங்கள். அப்போதுதான் மரியாதை இருக்கும் என்று தந்தி கொடுத்தேன்.

அம்பேத்கரின் கோரிக்கையை விட்டுவிட வேண்டும் என்று ஒரு சமயம் காந்தி உண்ணாவிரதம் இருந்தார். அம்பேத்கர் காந்தியாரின் சண்டித்தனத்துக்கு இணங்கவில்லை.

அப்போது நானும் இராமநாதனும் சீமையில் இருந்தோம். அங்கிருந்து தந்தி கொடுத்தோம். காந்தியார் ஒரு உயிருக்காக கோடானு கோடி மக்களின் நலனை விட்டு விடாதீர்கள். காந்தியார் ஒருவர் உயிரைவிட கோடானு கோடி மக்கள் உயிர்கள் காப்பாற்றப் பட வேண்டும் என்று தந்தி கொடுத்தேன்.

அம்பேத்கர் அவர்களின் பிடிவாதம் கண்டு அவரை கொலை செய்யவும் திட்டம் உருப்பெற்று வருவதை உணர்ந்தார்.

பிறகு எப்படியோ ஒருவாறு சில நிபந்தனைகளுடன் ஒத்துக் கொண்டார்.

அனேக இடங்களில் துணிவாக நமக்கு வழிகாட்டும் நிலையில் இருந்தார் அம்பேத்கர்.

பிறகு நாம் மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். நாங்கள் பர்மாவில் புத்த மாநாட்டுக்குச் சென்ற இடத்தில் சந்தித்தோம்.

அவர் என்னைப் பார்த்துக் கேட்டார். நீங்கள் எத்தனை நாளைக்கு இப்படியே பேசிக் கொண்டு சாகப் போகின்றீர்கள் நாம் ஏதாவது செய்ய



வேண்டாமா? என்றார். அப்போது பக்கத்தில் அகில உலக புத்த சங்கத் தலைவர் டாக்டர் மல்லல சேகராவும் இந்தார்.

அவரைக் காட்டி அய்யாவும் இருக்கின்றார். நாம் இருவரும் கை எழுத்து இட்டு புத்த மார்க்கத்தில் சேர்ந்துவிடுவோம் என்றார்.

அதற்கு நான் கொஞ்ச நாள் அவகாசம் கொடுங்கள் பிறகு சேருகின்றேன். நாம் இந்துவாக இருந்து கொண்டு இந்து மதத்தை எவ்வளவு கடுமையாக வேண்டுமானாலும் தாக்கலாம். சீர்திருத்தத்தை எடுத்து வலியுறுத்தலாம்.

ஆனால், பவுத்தனாக மாறிவிட்டு இந்துக்கள் மத்தியில் சீர்திருத்தம் பேச முற்பட்டேனேயானால், நீதான் பவுத்தன் ஆயிற்றே எங்களைப் பற்றிக் கூற நீ யார்? என்பார்கள். அல்லது மதத் துவேஷம் பண்ணுகின்றான் என்பார்கள். எனவே, சிறிது அவகாசம் கொடுங்கள் என்றேன்.

அதற்கு அவர் சிரித்துக் கொண்டே நீங்கள் பேசிப் பேசியே இருந்து கொண்டு சாகுங்கள் என்று கூறினார்.

பர்மாவில் இருந்து வந்ததும் பல லட்சம் தாழ்த்தப்பட்ட மக்களை தம்மோடு புத்த மதத்தில் சேரும்படிச் செய்தார்.

அவர் மட்டும் இன்று இருந்திருந்தால் இங்கெல்லாம் புத்த மதம் பரவி இருக்கும். நான் எல்லாம்கூட சேர்ந்து இருப்பேன்.

அவரால் இந்து மதத்துக்கு ஆபத்து வரும் என்று உணர்ந்துதான் அவரைச் சதி செய்து கொன்று இருக்கின்றார்கள்.

அம்பேத்கர் சாவு இயற்கையானது அல்ல; சாகடிக்கப்பட்டார் என்று நான்தான் முதல் முதல் சந்தேகப்பட்டு வெளியிட்டேன்.

பிறகு 4, 5 நாட்களுக்குப் பிறகு அவரின் மகன் ஜனங்களைக் கூட்டிக் கொண்டு போய் பார்லிமெண்டுக்கு முன்பாக கூப்பாடு போட்டார். பலன் அளிக்கவில்லை.

அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட மக்கள் கல்வி, உத்தியோகம், பதவி இதுகளுக்கு ஆற்றிய பணி மகத்தானதாகும்.

அவரின் தொண்டினால் நாடு எவ்வளவோ நலன் பெற்றது. டாக்டர் அம்பேத்கர் அவர்களை தலைவராக வழிகாட்டியாக நாட்டில் எந்த

சமுதாயத்தினர்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் தாழ்த்தப்பட்ட மக்களாவது கட்டுப்பாடாக அவரது கொள்கையினை, கோட்பாட்டை ஏற்றுக் கொண்டு ஒற்றுமையுடன் பாடுபட வேண்டும்.

எப்படியும் மற்றவர்களும் இந்தக் கொள்கைக்கு வந்தே தீருவார்கள்.

அறிவுத் தெளிவுக்கு புத்த மார்க்கமே சிறந்தது

மனிதன் தெளிவும், அறிவும் அடைய வேண்டுமானால் புத்த மார்க்கத்தைத் தான் சார வேண்டும். புத்தரின் கோட்பாடுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று எடுத்துரைத்தார்கள்.

**- 'விடுதலை', 14.4.1966**

■


REGD.NO:M.4789
PHONE NO:86977
விடுதலை
VIDUTHALAI
ESTD:1935.
திராவிடர் தமிழ்த் தினசரி

# 48

# பார்ப்பான் பகிஷ்காரத்தைத் தீவிரப்படுத்துவதே எமது அடுத்த திட்டமாகும்

- **புத்திக்கு மதிப்பு அளித்து பகுத்தறிந்து நடத்தலே சிறப்பு**
- **தலைவனை மதித்து அவன் ஆணைப்படி நட! கொள்கைகளை உறுதியாகக் கடைப்பிடி! உன் ஸ்தாபனத்துக்கு மரியாதை செய்து பாதுகாத்து வா!**
- **இவையே புத்தர்கள் கோட்பாடு**

தந்தை பெரியார் அவர்களுக்கு 15.2.1959 ஞாயிறு காலை சுமார் 10:30 மணியளவில் டெல்லி பகார்கஞ்சில் எம்.எம்.ரோட்டில் உள்ள டாக்டர் அம்பேத்கர் பவன் சார்பாக சிறப்பானதொரு வரவேற்பு வழங்கப்பட்டது.

பம்பாய் ராஜ்யத்திலிருந்து வந்திருக்கும் திரு.காம்ளே எம்.பி. அவர்கள் தந்தை பெரியார் அவர்களை அவர் தங்கியிருந்த இல்லத்துக்கு வந்து அழைத்துச் சென்றார்கள். தந்தை பெரியார் அவர்களுடன் அன்னை மணியம்மையார் அவர்களும் தோழர்கள் ஈ.வெ.கி.சம்பத், ஏ.என்.நரசிம்மன் பி.ஏ. அவர்களும் பெரியாருடன் வந்துள்ள சுற்றுப்பயணக் குழுவினரும் சென்றனர்.

தந்தை பெரியார் அவர்கள் அம்பேத்கர் பவனத்தை அடைந்தவுடன் "பெரியார் இராமசாமிக்கு ஜே (வாழ்க)!" என்ற வாழ்த்தொலியை அங்கு கூடியிருந்த பல தோழர்களும் எழுப்பி தந்தை பெரியார் அவர்களுக்கு அம்பேத்கர் பவன் சார்பிலும் தனிப்பட்ட பல நண்பர்கள் சார்பாகவும் மலர் மாலைகள் அணிவிக்கப் பட்டன.

ஒரு பெரிய அறையில் டாக்டர் அம்பேத்கர் அவர்களுடைய படங்களும் வைக்கப்பட்டு மெழுகுவர்த்திகள் கொளுத்தப்பட்டு அங்கே மறைந்த டாக்டர் அம்பேத்கர் அவர்களுடைய சாம்பல் (அஸ்தி) வைக்கப்பட்டுள்ளது. தந்தை பெரியார் அவர்களும் உடன் வந்துள்ள தோழர்களும் அதைப் பார்வையிட்டு மறைந்த டாக்டர் அவர்களுக்கு மரியாதை செலுத்தி வெளியே வந்தனர்.

பின்னர் அதற்குப் பின்புறம் உள்ள பெரும் திடலில் அம்பேத்கர் அவர்கள் முழு உருவச் சிலை நிறுவப்பட்டுள்ள இடத்திற்கு அருகில் ஏற்பாடு செய்யப்பட்ட மேடையில் தந்தை பெரியார் அவர்கள் அமர்ந்தவுடன் வரவேற்புப் பொதுக்கூட்டம் துவங்கியது.

ஏராளமான தாய்மார்களும் தோழர்களுமாக பல்லாயிரவர் அம்பேத்கர் அவர்களைப் பின்பற்றுபவர்கள் அங்கு கூடியிருந்தனர். தந்தை பெரியார் அவர்கள் மேடைமீது ஏறி அமரும்போது “பெரியார் இராமசாமிக்கு ஜே!” அம்பேத்கர் புகழ் ஓங்குக! புத்தபகவான் நாமம் கொள்கைகள் வாழ்க! பெரியார் வாழ்க! என்றெல்லாம் வானைப் பிளக்கும் வண்ணம் வாழ்த்தொலிகளை எழுப்பி தமிழ்நாட்டின் தன்மானத் தந்தையே தங்களுக்கும் தலைவர் என்ற உணர்வை வெளிப்படுத்திக் கொண்டனர்.

தந்தை பெரியார் அவர்களை வரவேற்று எம்பிளாய்மென்ட் எக்ஸ் சேஞ்சு உதவி டைரக்டராக இருக்கும் திரு. சங்கர ஆனந்த் சாஸ்திரி அவர்கள் இந்தியில் சில நிமிடங்கள் தந்தை பெரியார் அவர்களையும், அவரது தொண்டினையும் பாராட்டிப் பெருமைப் படுத்திப் பேசினதோடு இந்தத் தள்ளாத வயதிலும் இந்தக் காரிலேயே சவாரி செய்து இத்தனை ஆயிரம் மைல்கள் கடந்து இன்று இந்தத் தொண்டு புரிந்து வருவது ஒன்றே அவரது சக்திக்கும் பெருமைக்கும் சான்றாகும் என்று பலத்த கைத்தட்டலுக்கிடையே கூறினார். (இவர் பெயரின் பின்னால் உள்ள **‘சாஸ்திரி’** ஜாதிப்பட்டம் அல்ல; கற்ற பட்டம். லால்பகதூர் **சாஸ்திரி** மாதிரி – ஆசிரியர்)

அங்கிருந்தவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, தோழர் ஈ.வெ.கி.சம்பத் எம்.பி. அவர்கள் தந்தை பெரியார் அவர்களை

அறிமுகப்படுத்த வேண்டிக் கொண்டதற்கிணங்க அவரது தொண்டினை விளக்கும் வகையில் சிறிது நேரம் ஆங்கிலத்தில் பேசினார்.

அதை ஒரு தோழர் இந்தியில் மொழிபெயர்த்துக் கூறினார். தோழர் ஈ.வெ.கி.சம்பத் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:-

பார்ப்பனர்களால் உண்டாக்கப்பட்ட ஜாதிமுறையை எதிர்த்து பெரியார் அவர்கள் பன்னெடுங்காலமாகவே போர் புரிந்து வருகிறார்கள். பலத்த எதிர்ப்புகளையும் பொருட்படுத்தாமல் இதற்காகவே தனது வாழ்நாளை செலவழித்து வருகின்றார்கள்.

சமீபத்தில் லக்னோவில் அவரது கூட்டத்தில நடந்த மாதிரி கலவரம் காலித்தனங்கள் ஏராளமாக பெரியார் அவர்களது கூட்டங்களில் அந்தக் காலத்தில் தமிழ்நாட்டில்கூட சர்வசாதாரணமாக நடந்து வந்திருக்கின்றன. ஆனால், இன்று தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இந்தப் பிரச்சினையில் கலவரம் செய்யும் கருத்துக்கள் யாரிடமும் கிடையாது. ஆனால், பத்திரிகைக்காரர்களால் மாத்திரம் இந்த விஷமம் செய்யும் காலித்தனங்கள் நடக்கின்றன என்றாலும் பிரச்சாரம் அவைகளைப் பயனற்றதாக்கி விட்டது.

தினசரி நூற்றுக்கணக்கான மைல்கள் கடந்து நாள் ஒன்றுக்கு 2-3 மணிநேரம் பத்து ஆயிரக்கணக்கான லட்சக்கணக்கான மக்களிடையே தனது கொள்கைகளை அலுப்பு சலிப்பு இன்றி எடுத்துச் சொல்லிவரும் தலைவர் பெரியார் அவர்கள்தான்.

டாக்டர் அம்பேத்கருடைய நெடு நாளைய நண்பர் நமது பெரியார் அவர்கள், அம்பேத்கர் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியுள்ள பல நூல்களை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டு இருக்கிறார்கள். 1954இல் ஈரோட்டில் புத்தர் கொள்கை பிரச்சார மாநாட்டை நடத்தி அதன்மூலம் புத்தருடைய கொள்கைகளை தமிழ்நாடெங்கும் பரவும்படிச் செய்தார்.

எங்கள் நாட்டில் பெரியார் அவர்கள் காட்டும் வழியைப் பின்பற்றி பார்ப்பனியத்தை எதிர்த்து ஜாதியை எதிர்த்து ஒழிக்க ஆயிரக்கணக் கானவர்கள் முன்வந்துள்ளனர் என்று குறிப்பிட்டார்.

அடுத்து தந்தை பெரியார் அவர்கள் தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பிற்கு நன்றி தெரிவித்துப் பேசும் முறையில் சுமார் 45 நிமிஷ நேரம் சொற்பொழிவாற்றினார். தந்தை பெரியார் அவர்கள் கன்னடத்தில் பேசிய பேச்சை திரு.சங்கரானந்த் சாஸ்திரி இந்தியில் மொழிபெயர்த்தார்.

“பேரன்புமிக்க தாய்மார்களே! அம்பேத்கர் பவன உறுப்பினர்களே! நண்பர்களே!

உங்கள் அனைவரையும் காணுவதிலும், உங்களது பேரன்பைப் பெறுவதிலும் நான் உள்ளபடியே பெருமகிழ்ச்சியடைகின்றேன். சுமார் 1500 மைல்களுக்கு அப்பால் இருந்து வந்திருக்கிற என்னைப் பாராட்டு முகத்தான் நீங்கள் அன்புடன் அளித்த நல்வரவேற்பிற்காக எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மறைந்த பாபாசாகிப் டாக்டர் அம்பேத்கர் அவர்களும் நானும் நெடுநாள்களாக நண்பர்கள் என்பது மாத்திரமல்ல; பலவிஷயங்களில் எனது கருத்தும் அவரது கருத்தும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். ஜாதி ஒழிப்பு என்ற விஷயத்தில் மாத்திரமே நாங்கள் ஒத்த கருத்துடையவர்கள் என்பது அல்ல; இந்து மதம், இந்து சாஸ்திரங்கள், இந்துக் கடவுள்கள், தேவர்கள் என்பவர்கள் பற்றிய இந்துமதப் புராணங்கள் இவைகளைக் குறித்தும்கூட எங்கள் இரண்டுபேர் கருத்தும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். அது மட்டுமல்ல; அவைகளைப்பற்றி நான் எவ்வளவு உறுதியாகவும் பலமாகவும் எனது அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கிறேனோ அவ்வாறுதான் அவரும் மிகவும் உறுதியாகவும் பலமாகவும் லட்சியங்களைக் கடைப்பிடித்தார். உதாரணமாக பார்ப்பனர் போற்றி பிரச்சாரம் செய்யும் கீதை என்பதை முட்டாளின் உளறல் என்று சொன்னவர்!

இப்படி சில விஷயங்களில் மாத்திரமல்ல; பலவிஷயங்களில் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் எந்த அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தாரோ அதே அபிப்பிராயம்தான் எனக்கும் இருந்து வந்தது. பல விஷயங்களில் நாங்கள் ஒருவருக்கொருவர் கலந்து கொள்ளாமலேயே அந்தப்படி அபிப்பிராயம் கொண்டவர்களாக இருந்து வந்தோம். சந்தர்ப்பம் கிடைத்தபோது நானும் அவரும் எங்கள் இருவருடைய எண்ணங்களையும் கருத்துகளையும் பரிமாறிக் கொள்ளுவதும் உண்டு.

உதாரணமாக, பர்மாவில் நடந்த உலக புத்தர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள நாங்கள் போயிருந்தபோது அம்பேத்கர் அவர்கள் என்னைப் பார்த்து "என்ன இராமசாமி! இப்படி பேசிக்கொண்டே இருப்பதால் நாம் என்ன பலன் ஏற்பட முடியும் வா நாம் இரண்டுபேரும் புத்தமார்க்கத்தில் சேர்ந்துவிடுவோம்"என்றார். நான் சொன்னேன் "ரொம்ப சரி. இப்போது முதலில் நீங்கள் சேருங்கள். நான் இப்போது சேருவது என்பது அவ்வளவு ஏற்றதல்ல. ஏனென்றால் தமிழ்நாட்டில் நான் இப்போது ஜாதி ஒழிப்பைப்பற்றித் தீவிரமாக பிரச்சாரம் செய்து வருகின்றேன். இந்துக் கடவுள்கள் எனப்படும் விநாயகர், இராமன் சிலைகளை உடைத்தும் எரித்தும் இந்து மதத்திலுள்ள பல விஷயங்களைப் பற்றியும் இப்போது எடுத்துச் சொல்லி மக்களிடையே எடுத்துசொல்லி பிரச்சாரம் செய்வதுபோல் அப்புறம் செய்ய முடியாது. ஓர் இந்துவாக இருந்து கொண்டு இப்படிப் பேசுவதனால் என்னை யாரும் நீ அதைச் சொல்லக்கூடாது என்று தடுக்க உரிமை கிடையாது. ஆனால், நான் இன்னொரு "மதக்காரனாக' இருந்தால் அப்படிப்பட்ட வசதி எனக்கு இருக்க முடியாது. ஆகவே நான் வெளியில் இருந்துகொண்டே புத்த மார்க்கத்தை பிரச்சாரம் செய்து வருகிறேன்" என்பதாகச் சொன்னேன்.

என் பிரச்சாரத்தில் ஜாதி ஒழிய வேண்டுமென்று மாத்திரம் நான் சொல்லிவரவில்லை. அதற்கு முக்கிய அடிப்படை ஜாதி, மதம் ஆதாரம் ஒழியவேண்டும் என்றுதான் நானும் சொல்லி வருகிறேன். அவரும் அப்படித்தான் சொன்னார்.

டாக்டர் அம்பேத்கர் அவர்கள் புத்த மார்க்கத்தில் சேரும்போது என்னென்ன பிரமாணம் எடுத்துப் படித்தாரோ (இராமனையும், கிருஷ்ணனையும் கடவுள்களாக வணங்கமாட்டேன் என்பன போன்றவைகள்) அவைகளைத்தான் நான் எங்கள் நாட்டில் சுமார் 20, 25 வருடகாலமாகச் சொல்லிவருகிறேன். அதனால்தான் எங்கள் நாட்டில் பத்தாயிரக்கணக்கான மக்கள் ராமனையும் பிள்ளையாரையும் கொளுத்தியும் உடைத்தார்கள். இந்த பிரமாணத்தில் உள்ள பல விஷயங்கள் எனக்கு பல வருஷங்களுக்கு முன்பே தோன்றியதுதான் அவைகளை எங்கள் பிரச்சாரமாகவே செய்து வருகிறோம். இதைப் படித்துவிட்டு நான் சொல்லவில்லை. எப்படியோ எங்களுக்கு அப்படித்தான் அபிப்பிராயம் தோன்றுகிறது.

புத்தர் கொள்கை கடவுளை ஏற்றுக்கொள்வது கிடையாது. ஆத்மா என்ற ஒன்றையும் ஏற்றுக்கொள்வது கிடையாது. அறிவுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதன்படி நட என்று சொல்லுகிற ஒரு மார்க்கமாகும்.

நேற்று நான் தங்கியிருந்த இடத்தில் ஒரு பார்ப்பன நிருபர் என்னை வந்து சந்தித்தார். அவர் கேட்டார் ‘நீ மதங்களைப் பற்றிக் கண்டித்துப் பேசுகிறாயே புத்த மார்க்கத்தில் சேரச் சொல்லி மக்களைப் பார்த்துச் சொல்லுகிறாயே அதுவும் ஒரு மதம்தானே’ என்று கேட்டார். அதற்கு நான் சொன்னேன். “அப்படி பித்தலாட்டமாக மக்களிடம் நீங்கள் பார்ப்பனர்கள் சொல்லி வைத்திருக்கிறீர்கள்” என்பதாகச் சொன்னேன்! அதற்கு அவர் சொன்னார், “ஏன் அதில் “புத்தம் சரணம் கச்சாமி; தம்மம் சரணம் கச்சாமி; சங்கம் சரணம் கச்சாமி” என்று சொல்லுகிறார்களே” என்றார். அதற்கு நான் சொன்ன பதிலை எடுத்து விளக்கினால் அது ஓரளவு பயன்படும் என்று நினைக்கிறேன்.

‘புத்தம் சரணம் கச்சாமி’ என்பது ஒன்று மூடநம்பிக்கைத் தத்துவம் அடங்கியதல்ல. நீ யாரைத் தலைவனாக ஏற்றுக் கொண்டிருக்கிறாயோ அவனிடத்தில் உண்மையாக நடந்து உறுதியோடு பின்பற்று என்பதாகும்.

தலைவனைத் தேர்ந்தெடுப்பதற்கு முன் நன்றாக துருவித்துருவிப் பார்த்து ஆராய்ந்து தேர்ந்தெடுக்கலாம். ஆனால், தேர்ந்தெடுத்துவிட்ட பிறகு அவனது கட்டுப்பாட்டுக்கு அடங்கி அவனைப் பின்பற்ற வேண்டும் என்ற நல்லொழுக்கந்தான் அது போதிக்கிறது. **தலைவன் என்று நீ ஒருவனை ஏற்றுக் கொண்டால் அவனுக்குக் கீழ்படிந்து நடக்க வேண்டும்** என்பதுதானே ஒழிய வேறில்லை மற்றும் புத்தம் என்பது உன் புத்தியைக் குறிப்பதேயாகும்.

அது போலவே ‘தர்மம் சரணம் கச்சாமி’ என்பதற்குப் பொருள் - நீ ஏற்றுக்கொண்டுள்ள தர்மங்களை **கொள்கைகளை** உண்மையான முறையில் பக்தி செலுத்திக் கடைப்பிடித்து வரவேண்டும். **அந்தக் கொள்கைகளுக்கு மாறாக நடக்கக்கூடாது.** உறுதியோடு அவைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதுதான்.

மூன்றாவதாக, ‘சங்கம் சரணம் கச்சாமி’ என்பது நீ நல்லபடி யோசித்து சேர்ந்திருக்கிற ஸ்தாபனத்தை மரியாதை பண்ணிப் பாதுகாக்க வேண்டும். அதற்கு எந்தவித இழுக்கும் வராத வண்ணம் நீ நடந்து

கொள்ள வேண்டும். **ஸ்தாபனத்தின் பெருமையை நீ கருதவேண்டும் என்பதுதானே ஒழிய வேறில்லை.**

ஆகவே, இந்த **மூன்றுக்கும் அர்த்தம்,**
**நீ உன் தலைவனை மதி!**
**உனது கொள்கைகளை உறுதியாகப் பின்பற்று!**

**உன் ஸ்தாபனத்திற்கு மரியாதை செய்து பாதுகாத்து வா! என்பதாகும்.**

நீங்களெல்லாம் உங்கள் புத்திக்கு மரியாதை கொடுத்து அது கூறும் கொள்கைகளை ஏற்று புத்தி மார்க்கத்தைக் கடைப்பிடித்து ஒழுகுவது என்பது அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். மற்றக் கொள்கைகளுக்கு நீங்கள் இடங் கொடுக்கக்கூடாது. பார்ப்பன இந்துமதக் கொள்கைகளை மறந்தும் உங்களை அறியாமல் உள்ளே புகவிடக் கூடாது.

எல்லோரும் டாக்டர் அம்பேத்கர் அவர்களைப் பின்பற்றுகிறீர்கள் என்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மற்றெல்லா பிற்பட்ட மக்களும் இந்த மாதிரியான நிலைக்கு வருவதற்காக மிகவும் பாடுபட வேண்டும்.

நீங்கள் இந்த மாதிரி இருப்பதற்காக பார்ப்பானும் இந்த அரசாங்கமும் உங்களுக்கு மிகவும் தொந்தரவு, தொல்லைகள் தரக்கூடும். அதெல்லாவற்றையும் நீங்கள் மிகவும் பொறுமையோடு சகித்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் இன்றைய அரசாங்கம் இந்துமத பார்ப்பன ஆட்சியாகும்.

உங்கள் வசதி வாய்ப்புகளை ஓரளவு அரசாங்கம் கொடுமைக்கு தியாகம் செய்தாவது இந்தக் கொள்கைகளைப் பரப்ப நாம் உறுதியோடு பாடுபட முன்வரவேண்டும்.

நம்மிடையே பல ஜாதிகள் இருப்பதாகச் சொல்லப்பட்டாலும் உண்மையில் பல ஜாதிகள் கிடையாது: நாம் இரண்டே ஜாதிகள். ஒன்று, பார்ப்பனர்கள்; இன்னொன்று சூத்திரர்கள். அவ்வளவுதான். மதப்படியும் சாஸ்திரங்கள்படியும். நாம் இரண்டு பிரிவினர்கள்தான். அவைகளில் பிற்படுத்தப்பட்ட மக்கள், பஞ்சமர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்ற பிரிவெல்லாம் இல்லை. இவை பார்ப்பனர் நலனுக்கு ஆக தொழில் காரணமாக என்று பிரித்த பிரிவுகளேயாகும். இவை பிறவி ஜாதிகள்

அல்ல. இதை நீங்கள் நன்றாக, உணரவேண்டும். நீங்களும் நாங்களும் சூத்திரர் என்ற ஒரே ஜாதிதான்.

இப்படிப்பட்ட நாம் இப்படி நமது இழிவைப்பற்றிக் கவலைப்படாமல் இருப்பதற்கு இன்னொரு காரணம், நம்மில் அநேகர் அதிகாரத்திற்கு ஆசைப்பட்டு அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற ஆசையினால் துணிவுடன் இதை எடுத்துச் சொல்லாமல் பயந்து தங்கள் சுயநலத்திற்கு எதையும் விட்டுக்கொடுத்து விடுகிறார்கள்.

ஆசையால் பார்ப்பனர்களுக்கு - பதவி அதிகாரத்திற்கு அடிமையாகிவிடுகிறார்கள். அப்படிப் போகிறவர்களைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. ஆனால், அதன் மூலம் நமது கொள்கைகளை விட்டுக்கொடுத்துவிட்டு வருகிறார்களே என்பது குறித்துத்தான் எனது கவலை எல்லாம்.

எனக்கு இப்போது 80 வயது ஆகிறது. நான் இன்னும் எத்தனை நாளைக்கு இருக்க முடியும்? ஆச்சு முதல்மணி அடித்தாகிவிட்டது. இன்னும் எத்தனை நாளைக்கு நான் இருக்க முடியும்? எனக்கு இனி வாழ்க்கையில் இதைவிட வேறு இலட்சியம் இருக்க முடியாது!

சம்பத் பேசும்போது என்னைப் பற்றி ரொம்பவும் அதிகமாகச் சொன்னார். அவர் எனக்கு அண்ணன் மகன் ஆகும். தகப்பனாரைப் பெருமைப்படுத்தும் முறையில்தான் அப்படிச் சொன்னரே தவிர, உண்மையில் நான் அவ்வளவு பெருமைக்கு உரியவன் அல்ல.

எங்கள் நாட்டைப் பொறுத்த வரை பார்ப்பனர்கள் பொதுவாழ்க்கையில் வெளிப்படையாக எந்தவித செல்வாக்கும் பெறமுடியாத அளவுக்கு நாங்கள் அங்கே ஆக்கிவைத்துவிட்டோம். இங்கே அவர்கள் தன்மைபற்றி தக்க பிரச்சாரம் இல்லாததால் லக்னோவில் பார்ப்பனர்கள் கலவரம் செய்யக் கொஞ்சம் தைரியம் வந்தது. ஆனால், எங்கள் பக்கத்தில் அவர்கள் எங்களைக் கண்டு நடுங்குகிற நிலையில் இருக்கிறார்கள். பல இடங்களில் பார்ப்பனர்கள் தனியாக நடக்க தயங்குவார்கள்.

பார்ப்பனர்கள் கொஞ்ச பேர்தான் என்றாலும் கட்டுப்பாடாக நம்மீது தப்புப் பிரச்சாரம் செய்கிறார்கள். எங்கள் நாட்டில் எங்கள் கட்சியை பார்ப்பானை எதிர்க்கிற கட்சி என்றே அழைக்கிறார்கள்.



அந்த அளவுக்கு நாங்கள் பக்குவப்படுத்தி வைத்திருக்கிறோம்.

எங்கள் கட்சியின் முக்கியமான திட்டங்களில் ஒன்று பார்ப்பனரல்லாத மக்களாகிய நாம் யாரும் பார்ப்பான் கடைக்கு சென்று எதுவும் வாங்கக்கூடாது என்பதாகும். (பலத்த கைத்தட்டல்)

எந்தவித சடங்குகளுக்கும் நாங்கள் பார்ப்பானை அழைப்பதில்லை. அதனால்தான் ரொம்ப பார்ப்பனர்கள் எங்கள் நாட்டைவிட்டு இங்கு வந்துவிட்டார்கள். மேலும் வர வாய்ப்புத் தேடிக்கொண்டும் இருக்கிறார்கள். (கைத்தட்டலும் சிரிப்பும்) நான் உங்களுக்குச் சொல்லுவதும் இதுதான் நீங்கள் கூடுமானவரை எல்லா விதத்திலும் பார்ப்பனர்களை பகிஷ்கரிக்க வேண்டும்.

'பசி' உயிர் போகிறது என்றாலும்கூட பார்ப்பான் கடையிலிருந்து எதையும் வாங்கி சாப்பிடக் கூடாது. அதில் நமக்கு உறுதிவேண்டும். பார்ப்பன பகிஷ்காரத்தை தீவிரப்படுத்துவதே எனது அடுத்த திட்டமாக இருக்கும்.

உங்களுக்கும் சொல்லவேண்டியது இன்னொன்றும் உண்டு. அநேக மக்கள் தாழ்த்தப்பட்ட மக்களில் தவறாக நினைக்கிறார்கள் - பார்ப்பனரல்லாத மக்கள்தான் தங்கள் எதிரிகள் என்றும் பார்ப்பனர்கள்கூட அல்லவென்றும்! இது மிகவும் தவறான எண்ணமாகும். இதற்குக் காரணம், பார்ப்பன ஆட்சியில் பல அதிகாரங்களும் பண வினியோகமும் இருப்பதால் பார்ப்பானுக்கு நல்ல பிள்ளையாகவும் அவனது விஷமப் பிரச்சாரத்தை நம்புவதும் ஆகும். நாங்கள் வேறு என்றும் நீங்கள் வேறு என்றும் எண்ணக் கூடாது. சூத்திரர்கள் ஓர் இனமாக இருந்தால் தங்களுக்கு ஆபத்து என்று கருதி பல இனம் ஆக ஆக்கிவிட்டார்கள்.

ஆகவே, இப்படியெல்லாம் உங்களை எண்ணும்படி வைப்பது பார்ப்பனர்கள் சூழ்ச்சிதானே ஒழிய வேறில்லை. இப்படிப்பட்ட கருத்தைப் பார்ப்பனர்கள்தான் தூண்டிவிடுகிறார்களே ஒழிய வேறில்லை. இதையெல்லாம் உண்மை என்று நீங்கள் நம்பவேண்டாம்.

பார்ப்பான் எதை எதைச் செய்கிறானோ அதையெல்லாம் இவன் அவனைப் பார்த்து அதேபோல் இவனும் செய்கிறானே தவிர வேறில்லை. ஆகவே, அவன் (பார்ப்பான்) அதைச் செய்யவில்லை என்றால் மற்றவர்கள் அதைச் செய்ய மாட்டார்கள்.

ஓர் உதாரணம் சொல்ல விரும்புகிறேன். ஈரோட்டில் எங்கள் தெருவில் தண்ணீர்க் குழாய் இருக்கிறது. அதில் எல்லோரும் தண்ணீர் எடுக்க வருவார்கள். ஒரு பார்ப்பார பெண் வந்தால் அவள் கையில் ஒரு செம்பில் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வந்து அதை அந்த குழாய்க்கு மேல் ஊற்றிக் கழுவிவிட்டு பிறகு தான் குடத்தை வைத்துத் தண்ணீர் பிடிப்பாள். அதைப்பார்த்து நம்மவன் வீட்டுப்பெண் பிள்ளையும் அப்படியே செம்பில் தண்ணீர் கொண்டுவந்து ஊற்றி விட்டு தண்ணீர் பிடித்துக் கொண்டு போவாள். அதைப் பார்த்து எங்கள் பக்கத்துவீட்டு (முஸ்லிம்) சாயபு பொம்பளையும் வந்து சொம்பில் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவந்து குழாய்மேல் ஊற்றி கழுவிவிட்டுத்தான் குடத்தை வைத்து தண்ணீர் பிடிக்கிறாள்.

முதலாவது பார்ப்பார பொம்பளை தண்ணீர் ஊற்றுவது மற்ற ஜாதிக்காரர்கள் குழாயைத் தொட்டுவிட்டார்களே - தீட்டுப்பட்டு விட்டதே - என்பதற்காக ஊற்றிக் கழுவுகிறாள்.

இதைப்பார்த்து அதை அப்படியே காப்பி அடித்துச் செய்கிற மற்ற பொம்பளைகளுக்கு நாம் எதற்காக இப்படிச் செய்கிறோம் என்று தெரியாமலேயே செய்து கொண்டு வருகிறார்கள். அது போலத்தான் பார்ப்பனரல்லாதாரில் ஜாதி வெறியும் பிற்போக்கு மனப்பான்மையும் கொண்டுள்ளவர்கள் நிலைமை. அவர்களது இந்த மாதிரியான நடத்தைக்குக் காரணம் அறியாமையும் பார்ப்பானைப் பார்த்து காப்பி அடிப்பதுமே தவிர, அகம்பாவம் (பார்ப்பனர்களைப்போல) கிடையாது. சொல்லிக்கொடுக்கும் வாத்தியாரைச் சரிப்படுத்தினால் மாணவன் தானே சரிப்பட்டு விடுவான். ஆகவே, இதற்காக நீங்கள் பெரும் அளவு உங்கள் நேரத்தைச் செலவழிக்க வேண்டியதில்லை.

பார்ப்பான்தான் நமக்கு முக்கிய எதிரி; பார்ப்பன மதம் பார்ப்பனப் புராணங்கள், பார்ப்பன சாஸ்திரங்கள், பார்ப்பனக் கடவுள்கள். இவைகள்தான் நமக்கு எதிரிகளே ஒழிய வேறில்லை. பார்ப்பனரல்லாதார் அல்ல நமக்கு எதிரிகள் என்பதை நீங்கள் தெளிவாக உணர வேண்டும்.

ஆகவே, நீங்கள் இவைகளை நன்றாக ஞாபகத்தில் வைத்துக் கொண்டு இதற்காகப் பாடுபட வேண்டும். அப்போதுதான் நமது இழிவு ஒழியும் என்று கூறி இந்த வரவேற்புக்காக உங்களது அன்பிற்காக எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்து முடித்துக் கொள்ளுகிறேன் என்று கூறி முடித்தார்கள்.

கடைசியில் ஒரு தோழர், "இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி தென்னாட்டில் நடத்துகிறீர்களே அதுபற்றி எங்களுக்கு விளக்கம் தேவை" என்று கேட்டார். ஒரு கேள்வி மூலம் அதற்கு விடையளித்து தந்தை பெரியார் அவர்கள் சொன்னதாவது: பார்ப்பனர்கள் இந்தியைப் பரப்பி தங்கள் கையிலேயே இந்த ஆட்சி நிரந்தரமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தியைப் புகுத்துகிறார்கள்.

இந்தியைப் புகுத்துவதன் மூலம் இந்து மதக் கொள்கைகளை அவர்கள் புகுத்த வேண்டும். இந்தியா முழுவதையும் தாங்களே நிரந்தரமாய் ஆளவேண்டும் என்ற அவர்களது வெறிபிடித்த நோக்கம் நிறைவேறவே தவிர வேறு இல்லை!

நாங்கள் இந்துமதம், இந்துக் கடவுள்கள், இந்து சாஸ்திரம், இந்து புராணங்கள் இவைகளெல்லாம் வேண்டாம் என்பவர்களாதலால் இவைகளைப் புகுத்தும் இந்தியும் வேண்டாம் என்று சொல்லுகிறோம்.

இந்தியா ஒரே நாடு எப்போதும் ஒன்றாகவே இருக்கவேண்டும் என்பதில் எனக்கு நம்பிக்கை கிடையாது. எங்கள் நாடு வேறு; உங்கள் நாடு வேறு - சரித்திரகாலத்திலும் அதற்கு முன் வேத புராண காலத்திலும் தனி நாடு, தனித்தனி மொழி, தனித்தனி உணவு உடை கலாச்சாரம் ஆகியவைகள் உள்ளன. ஆகவே, எதற்காக ஒன்றுக்கு ஒன்று 2000 மைல் தூரத்தில் மனித சமுதாய எதிரியான பார்ப்பானின் மனுதர்ம ஆட்சி தேவை? அப்படி நாம் அனைவருக்கும் பொது மொழி ஒன்று தேவையென்றால் அதற்கு உலக மொழியான ஆங்கிலமே இருக்கட்டுமே என்றுதான் நாங்கள் சொல்லுகிறோம்" என்பதாகக் குறிப்பிட்டார்கள். பிறகு தோழர்களிடம் விடைபெற்றுக் கொண்டு சுமார் 2:30 மணியளவில் அதைவிட்டுப் புறப்பட்டார்கள்.

குறிப்பு: இந்தக் கூட்டத்தில் ஏராளமாக சுமார் 500க்கு மேற்பட்ட பெரியார் படமும் ஆங்கில இராமாயண பாத்திர புத்தகங்களும் விற்பனை ஆகியது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**- 'விடுதலை' 22.9.1959**

■




# 49

# அறிவு வளர்ச்சி, இழிவு - மடமை நீக்கம், மக்களுக்காக உழைக்கும் உணர்ச்சி தருவதே கல்வியின் குறிக்கோள்

- ❖ பம்பாய் சித்தார்த்தா கல்லூரியில் தந்தை பெரியாருக்கு வரவேற்பும், புத்ததர்ம நூல் அன்பளிப்பும்
- ❖ எல்லா மக்களும் பெறும்வகையில் கல்விமுறை எளிதாக்கப்படவேண்டும்
- ❖ கல்லூரி நூல்நிலையத்தையும் சுற்றிக் காண்பித்தனர்,
- ❖ தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அம்பேத்கரின் அரிய சேவைச்சின்னம் இந்தக் கல்லூரி
- ❖ அறிவுச் சுதந்திரத்துக்கு அரும்பாடுபட்டு உழைத்தார் அம்பேத்கர்
- ❖ அவர் நோக்கத்துக்கேற்றபடி மக்களுக்குப் பயன்தரும்முறையில் பணியாற்றுங்கள்!

பம்பாய் நகருக்கு ஜாதி ஒழிப்புப் பிரச்சாரம் செய்ய வந்திருந்த தந்தை பெரியார் அவர்களுக்கு 25.2.1959 அன்று காலை 10:00 மணியளவில் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டு மிகவும் சிறப்பான முறையில் பல ஆண்டுகளாக நடைபெற்றுவரும் மக்கள் கல்விக் கழகத்தின் சார்பாக ஒரு மாபெரும் வரவேற்பும் பாராட்டுத் தேநீர் விருந்தும் நடைபெற்றது.

பீபிள்ஸ் எஜுகேஷன் சொசைட்டியாரால் சுமார் 4 கல்லூரிகள் பம்பாய் நகரத்தில் நடத்தப் பெறுகின்றன. காலஞ்சென்ற டாக்டர் அம்பேத்கர் அவர்களே இந்த ஸ்தாபனத்தை நிறுவி தனது காலம் வரை அதன் தலைவராக இருந்து மிகவும் அரும்பாடுபட்டு இந்த அமைப்புகளை வளர்ச்சியுறச் செய்தார். கலைக்கல்லூரி, தொழில்





விடுதலை 4-3-59

அறிவு வளர்ச்சி, இழிவு-மடமை நீக்கம், மக்களுக்காக உழைக்கும் உணர்ச்சிதருவதே கல்வியின் குறிக்கோள்

பம்பாய் சித்தார்த்தா கல்லூரியில் தந்தை பெரியாருக்கு வரவேற்பு, புத்த தர்ம நூல் அன்பளிப்பும்

கல்லூரி நூல்நிலையத்தையும் சுற்றிக் காண்பித்தனர்

தாழ்த்தப்பட்டமக்களுக்கு அம்பேத்காரின் அரிய சேவைச்சின்னம் இந்தக் கல்லூரி

பம்பாய் கல்லூரி வரவேற்பில் பெரியார் அறிவுரை

பெரியார் அறிக்கை

3-3-59

எல்லா மக்களும் பெறும்வகையில் கல்விமுறை எளிதாக்கப்படவேண்டும்

அறிவுச் சுதந்தரத்துக்கு அரும்பாடுபட்டு உழைத்தார் அம்பேத்கார்

அவர் நோக்கத்துக்கேற்றபடி மக்களுக்குப் பயன்தரும்முறையில் பணியாற்றுங்கள்!

கல்லூரி, சட்டக் கல்லூரி போன்ற பல கல்லூரிகளை இந்த ஸ்தாபனத்தார் நடத்தி வருவதுடன் மற்றும் பம்பாய் மாநிலத்தில் உள்ள அவுரங்காபாத்தில் ஒரு கல்லூரியும், சில உயர்தரப் பள்ளிகளும், இரவுப் பாடசாலைகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

பிற்படுத்தப்பட்ட மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் பெரும் அளவில் இக்கல்லூரிகளின் மூலம் கல்விப்பயன் பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

அக்கல்லூரிகளை நடத்தும் நிருவாகக் குழுவினரும் அக்கல்லூரிகளில் பணியாற்றும் பேராசிரியர்களும் கல்லூரித் தலைவர்களும் அதிகாரிகளும் தந்தை பெரியார் அவர்களை அழைத்து அங்கு வருகை தந்து தங்களை மகிழ்விக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டதற்கிணங்க தந்தை பெரியார் அவர்கள் 25.2.1959 அன்று காலை சுமார் 10:00 மணியளவில் சித்தார்த்தா கல்லூரிக்குச் சென்றார்கள்.

பெரியார் அவர்களை, கல்லூரிகளின் பதிவாளரும் (ரிஜிஸ்டிரார்) மக்கள் கல்விக் கழகத்தின் செயலாளருமாகிய திரு. தால்வாட்கர் நிருவாகக் குழு உறுப்பினர்களாகிய திரு.பேராசிரியர் வி.ஜி.ராவ், எம்.பண்டாரே எம்.எல்.ஏ., திருபார்மார், டாக்டர் கார்னிக், (கலை விஞ்ஞானக் கல்லூரித் தலைவர்), பேராசிரியர் வீ.ஜி.தால்வி (சட்டக்கல்லூரித் தலைவர்) திரு.டிப்னே எம்.எல்.ஏ. ஆகியோர் வாயிலில் நின்று தந்தை பெரியார் அவர்களுக்கு வணக்கம் செலுத்தி உள்ளே அழைத்துச் சென்று தந்தை பெரியார் அவர்கட்கும் அன்னை மணியம்மையார் அவர்கட்கும் கல்லூரிக் கட்டடங்களையும் கல்லூரியின் நூல் நிலையத்தையும் காட்டி, நூல் நிலையத்தில் சுமார் 100 வருஷங்களுக்குமுன் பைண்டு செய்யப்பட்ட புத்தகங்கள், முதன்முதலாக அச்சேறிய புத்தகங்கள் முதலியவற்றைக் காட்டி விளக்கினார்கள். திரு.ஜே.சி.பகாலே அவர்கள் அந்த நூல்நிலைய நிருவாக அதிகாரி மிகவும் அருமையான முறையில் நூல்கள் பற்றி தந்தை பெரியார் அவர்களிடம் விளக்கினார்கள்.

பிறகு ஆடம்பரமான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேநீர் விருந்தில் ஏராளமான பிரமுகர்களும் கல்லூரித் தலைவர்களும் பேராசிரியர்களும் கலந்து கொண்டனர்.

தந்தை பெரியார் அவர்களை வரவேற்று அக்கல்லூரிகளின் ரிஜிஸ்திரார் திரு. தால்வாட்கர் பேசும்போது குறிப்பிட்டதாவது: தென்னாட்டில் மக்களைச் சிந்திக்க வைத்த அரும்பெரும் தலைவரும் பகுத்தறிவு சிந்தனா சக்தி இவைகளைப் பயன்படுத்தும்படிச் செய்துள்ள அரும்பெரும் சிந்தனை வீரருமாகிய பெரியார் அவர்களை இங்கு வரவேற்பதில் பெருமை கொள்ளுகிறோம். அதைப்பேறு என்றே கருதுகிறோம். பெரியார் அவர்கள் ஒரு

மாபெரும் விடுதலை இயக்கத்தின் தலைவராவார். நம் கல்லூரிகளை நிறுவிய டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு உற்ற நண்பரும் சமுதாய சீர்திருத்தத்தில் ஒத்த கருத்துடையவருமாவார். 1955இல் பர்மாவில் நடைபெற்ற உலக புத்தர் மாநாட்டிற்கு இங்கிருந்து டாக்டர் போனதுபோலவே தென்னாட்டிலிருந்து பெரியார் அவர்களும் சென்றார்கள் என்று கூறி புத்தநெறியில் அவர் கொண்டுள்ள பற்றை விளக்கினார். மேலும் கூறுகையில் இந்த நிருவாகக்குழுவினர் 4 கல்லூரிகளை நடத்துகின்றனர் என்றும், இந்த கல்லூரிகளில் சுமார் 6500 மாணவர்கட்குமேல் படிக்கிறார்கள். அதில் சுமார் 1000 பேருக்கு மேல் கீழ்ஜாதிக்காரர்கள் ‘பஞ்சம வகுப்பைச்’ சேர்ந்தவராவார்கள். அந்த வகையில் டாக்டர் அம்பேத்கர் அவர்தம் அரிய முயற்சி காரணமாக துவக்கப்பட்டு நடைபெற்றுவரும் இக்கல்லூரிகள் சிறந்த முறையில் அற்புதமான வகையில் தாழ்த்தப்பட்டு இருக்கிற மக்களுக்குப் பெரிதும் பயன்பெறுகிறது. அவுரங்காபாத்திலும் ஒரு கல்லூரி இந்த ஸ்தாபனத்தின் மூலம் நடைபெறுகிறது. அது புத்தர் கொள்கையைப் பின்பற்றி கிரேக்க மன்னன் மினான்டர் பெயரால் நிறுவப்பட்டுள்ளது என்றும், இக்கல்லூரிகளை நடத்தும் சொசைட்டியின் சார்பாக தந்தை பெரியார் அவர்களை வரவேற்பதில் பெருமை கொள்ளுகிறோம் என்பதாகவும் குறிப்பிட்டார்கள்.

பிறகு தந்தை பெரியார் அவர்களுக்குப் பலத்த கைத்தட்டலுக் கிடையே மலர்மாலை ஒன்றும் அணிவித்தார்கள்.

டாக்டர் அம்பேத்கர் அவர்களது கடைசி நூலான “புத்தரும் அவரது கொள்கையும்” என்ற நூலை (மக்கள் கல்விக்கழகத்தினரே வெளியிட்டு உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதன் விலை ரூ.25) மக்கள் கல்விக் கழகத்தினர் சார்பில் பேராசிரியர் வி.ஜி.ராவ் அவர்கள் தந்தை பெரியார் அவர்கள் கையில் அன்பளிப்பாகத் தந்தார்கள். தந்தை பெரியார் அவர்கள் அதைப் பெற்றுக்கொண்டு நன்றிசெலுத்தினார்கள்.

பிறகு அக்கல்லூரிகளைப்பற்றியும் அக்கழகத்தினர் ஆற்றிக் கொண்டு வரும் அருந்தொண்டு குறித்த தனது கருத்துகளையும் பார்வையாளர்கள் புத்தகத்தில் தந்தை பெரியார் அவர்கள் எழுதினார்கள்.

பிறகு தனக்கு அளிக்கப்பட்ட பெருமைக்கும் பாராட்டுக்கும் நன்றி செலுத்தும் வகையில் தந்தை பெரியார் அவர்கள் பேசினார்கள். அவர்கள் குறிப்பிட்டதாவது:

பேரன்புமிக்க கல்லூரித் தலைவர்களே! நிருவாகப் பேராசிரியர்களே! உறுப்பினர்களே! மாணவர்களே! இன்றைய தினம், பம்பாய் நகரக்குச் ஜாதி ஒழிப்புப் பிரச்சாரம் செய்யும் பொருட்டு வந்திருக்கிற என்னை இங்கு நீங்கள் அழைத்து உங்கள் கல்லூரி ஸ்தாபனங்களை எல்லாம் காட்டி, நூல் நிலையம்போன்ற பல அமைப்புகளையும் பார்வையிடும் நல்வாய்ப்பை ஏற்படுத்தித் தந்து, எனக்கு இவ்வளவு ஆடம்பரமான முறையில் வரவேற்பு - பெருமையெல்லாம் அளித்தமைக்காக நான் பெரிதும் மகிழ்வதோடு எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

காலஞ்சென்ற நண்பர் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்கள் அரிய முயற்சியால் இந்தக் கல்வி ஸ்தாபனங்கள் ஆரம்பிக்கப்பட்டு அவரே இவைகளை தனது ஆயுள் முழுவதும் முன்னின்று நடத்திக்கொண்டு வந்தார் என்பதைக் கேள்விப்பட்டு நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.

டாக்டர் அம்பேத்கர் அவர்கள் இந்தியாவிலேயே தலைசிறந்த அறிவாளிகள் என்று கருதப்படும் சிலரில் ஒருவர் ஆவார். அவர் தனது வாழ்நாள் முழுவதும் மக்களை அறிவைப் பயன்படுத்துகிறவர்களாகவும் அறிவுக்கு முழுச்சுதந்திரம் கொடுப்பவர் களாகவும் ஆக்கவேண்டும் என்பதற்காகவே பாடுபட்டவரும் ஆவார். அவர் நம்மைப் போலவே சாதாரண மனிதர்களில் ஒருவர் ஆவார். சக்திக்கு மேற்பட்ட எந்தவித தெய்வீக சக்தி என்பதோ தன்மையோ ஏதும் அவரிடத்தில் கிடையாது. அவர் ஒரு மகானோ, மகாத்மாவோ, முனிவரோ, ரிஷியோ, தவசிரேஷ்டரோ, வரப்பிரசாதியோ அல்ல. அவர் சித்தார்த்தர் எப்படி ஒரு சாதாரண மனிதராக இருந்து மனித சமுதாயத்திற்கு எப்படிப்பட்ட தொண்டு ஆற்றமுடியுமோ அப்படிப்பட்ட தொண்டாற்றி வந்தார்.

புத்தர் அரச குடும்பத்தினராகப் பிறந்தார். ஆனால், அம்பேத்கர் அவர்களோ அந்த மாதிரி பிறக்கும் போதே வசதியோடு பிறந்தவர் அல்ல. டாக்டர் மிகவும் வசதியில்லாத நிலையிலிருந்து தன்னுடைய உழைப்பாலும் சுய அறிவினாலும் முயற்சியாலும் உயர்ந்த நிலைக்கு வந்து மக்களுக்குப் பயன்படத்தக்க மாதிரியான வகையில் தொண்டாற்றினார்.



இந்தியாவில் எத்தனையோ மகாத்மாக்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், ரிஷிகள், தவசிரேஷ்டர்கள், அவதாரங்கள் எல்லாம் தோன்றியிருக்கிறார்கள், ஏராளமாக! ஆனால், அவர்களால் மக்கள் என்ன லாபம் பெற்றார்கள் என்று பார்த்தால், அந்த மகாத்மாக்கள் முதலியவர்கள் மோட்சத்திற்குப் போனார்கள், புகழ் பெற்றார்கள் என்பதைத்தவிர வேறு மக்களுக்கு எந்த வகையிலும் எந்தவித நன்மையும் ஏற்பட்டது கிடையாது. இந்த நாட்டில் மக்களைப் பார்த்து 'நீங்கள் உங்கள் அறிவுக்கு வேலை கொடுங்கள். அறிவின்படியே நடவுங்கள்' என்று சொன்னவர்கள் 2500 வருஷங்களுக்கு முன் புத்தரும் அவருக்குப் பிறகு டாக்டர் அம்பேத்கரும்தான் காணப்படுகிறார்கள். வேறு யாரும் இல்லை என்றே சொல்லலாம்.

இந்த இரண்டு பேர்களும் தங்களது வாழ்நாள் பூராவிலும் பலமான எதிர்ப்பைக் கண்டார்கள். அவர்களது தொண்டிற்குப் பலத்த எதிர்ப்பு இருந்தது என்பது உண்மை என்றாலும் அவர்களது கொள்கைக்கு மக்களிடத்தில் நல்ல மரியாதையும் செல்வாக்கும் வளர ஆரம்பித்தன. இந்த நாட்டில் எந்த முட்டாளும் மகான் ஆகலாம். எந்த மடையனும் மகாத்மா ஆகிவிடலாம். ஆனால், அறிவுப்படி நடவுங்கள் என்று கூறிப் பிரச்சாரம் செய்ய ரொம்ப துணிவும், எதிர்ப்பைத் தாங்க மாபெரும் அறிவு சக்தியும், உண்மை மக்கள் பற்றும் வேண்டும்.

இன்றைக்கு இருக்கும் பெருந் தலைவர்கள் எனப்படும் பலரும் விளம்பரத்தாலும் மற்றவர்களுடைய பாராட்டினாலும் பெரிய ஆள்கள் ஆனார்களே தவிர, தங்களது அறிவினாலோ அனுபவ ஆராய்ச்சி காரணமாகவோ அல்லது மக்களுக்குப் பயன்படும் வகையில் தொண்டாற்றியமை காரணமாகவோ கிடையாது. அப்படி உண்மையான தொண்டு புரிபவர்களுக்கு மக்களிடத்தில் செல்வாக்கும் புகழும் கிடைப்பதற்குப் பதில் எதிர்ப்பும் வசவுகளும்தான் கிடைக்கும். உண்மையான பொதுத்தொண்டுக்குரிய அளவுகோல் அதுதான். புரட்சிவீரனின் தன்மை என்னவென்றால், அவனது வாழ்நாளில் அவனுக்குக் கிடைக்கும் வசவுகளும் எதிர்ப்புகளும். இதற்குப் பயந்து கொண்டுதான் பொதுவாழ்வில் உள்ள தலைவர்கள் பலர் இந்த மாதிரி எந்தக் காரியத்தையும் சொல்லமாட்டார்கள்!

அந்த முறையில் சமுதாயத்தில் எதற்காக 100க்கு 97 பேராக இருக்கிற மக்கள் கீழ்ஜாதி மக்களாகவும், அடிமைகளாகவும், தற்குறிகளாகவும், உடலுழைப்புக்கார மக்களாகவும், இருக்க வேண்டும் என்பதாக உணர்ந்து அதற்குக் காரணமானவற்றை ஒழித்து, மனிதத் தன்மையும் அறிவும் உண்டாகும்படி டாக்டர் அம்பேத்கர் அவர்கள் பாடுபட்டார்கள். மனித சமுதாயத்தின் நல்வாழ்வுக்குப் பாடுபட்டதன் காரணமாகத்தான் அவர் புகழ் ஓங்கவேண்டிய அளவுக்கு ஓங்கவில்லை.

**- 'விடுதலை' 4.3.1959**

■



புத்தாண்டுச் செய்தி

1969 மறைந்து 1970 இன்று முதல் தோன்றுகிறது, இந்த 1970-ல் பல அதிசயக் காரியங்கள் தோன்றவேண்டும்.

முதலாவதாக ஜாதியும், ஜாதி ஆணவமும் மறைக்கப்பட்டாக வேண்டும்.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரை இன்றுள்ள பெரும்கேடு இந்த இரண்டு தன்மைக்கு தமிழர்களாகிய நாம் இடம் கொடுத்து வருவதுதான்.

இதை உணர்ந்திருக்கும் தன்மையிலும், இதற்குப் பரிகாரம் செய்யும் தன்மையிலும் இந்திரா அம்மையாரின் காங்கிரசின் தலைவரான திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் தாம் நிகழ்த்திய தலைமையுரையில் "ஜனநாயக சோஷியலிசம், மதசார்பற்ற

சக அமைச்சர்கள் பற்றி அஜாய்முகர்ஜிக்கு கவர்னர் கடிதம்

கல்கத்தா, ஜன. 1—

மேற்கு வங்க கவர்னர் திரு. எஸ். எஸ். தவான் முதலமைச்சர் திரு. அஜாய்முகர்ஜிக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவரது மந்திரிசபையினர் தனிப்பட்ட முறையில் தற்காலிகமாக தங்கள் இலாகாக்களை ஒருவருக்கொருவர் மாற்றிக்கொள்ள உரிமையில்லையென்று தெரிவித்திருக்கிறார். இதற்கான அரசியல் சட்ட விதியையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்தகவலை நேற்று முதலமைச்சர் திரு. அஜாய் முகர்ஜி பத்திரிகையாளரிடம் வெளியிட்டார்.

மார்க்ஸிஸ்டுகளான உதவி முதலமைச்சர் திரு. ஜோதிபாசும் மற்றும் அமைச்சர்களும் தனக்கும் கூட தெரிவிக்காமல் தங்கள் இலாகாக்களை தங்கள் சகாக்களுடன் மாற்றிக்கொண்டனர் என்று முதலமைச்சர் கூறினார்,

பதிவு எண்: எம்: 4789 டெலிஃபோன்: 34898

தமிழ்நாடு தமிழருக்கே!

விடுதலை

"VIDUTHALAI" LEADING TAMIL DAILY

மலர் 32 ] சென்னை வியாழன் ( 1-1-70 ) வெளியூர் வெள்ளி (2-1-70)

சௌமிய ஆண்டு மார்கழி 17 : 4 பக்கங்கள் விலை 10 காசுகள் [ இதழ் 209

# 50

# மதத்தொண்டு செய்கிறவன் என்றால் மடையனையும் மகாத்மா ஆக்கிவிடுவர்

- **அரசியல் தொண்டு செய்கிறவன் என்றால் அயோக்கியர்களும் மந்திரி ஆகிவிடலாம்**
- **அம்பேத்கர் பிறந்த தின விழாவில் தந்தை பெரியார் படப்பிடிப்பு**

4.6.1970 வியாழக்கிழமை மாலை 7:15 மணி அளவில் தொட்டியம் டாக்டர் அம்பேத்கர் தாழ்த்தப்பட்டோர் சுயமரியாதை இயக்கம், தொட்டியம் சுற்றுவட்டார அம்பேத்கர் சுயமரியாதை இயக்கத்தின் சார்பில் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 79ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் திரு. மைனர் சுப்பிரமணியம் (ஜில்லா லீக் தலைவர்) அவர்கள் தலைமையில் கடவுள் மறுப்போடு துவங்கி நடைபெற்றது.

தந்தை பெரியார் அறிவுரை

இன்றையதினம் இங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற இக்கூட்டமானது டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 89ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா என்பதை முன்னிட்டு டாக்டர் அம்பேத்கர் தாழ்த்தப்பட்டோர் சுயமரியாதை இயக்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டதாகும். தோழர்களே! டாக்டர் அம்பேத்கர் அவர்கள் உண்மையில் இந்தியாவில் பொது வாழ்வில் சமுதாயத் துறையில் முயற்சி செய்து வெற்றி பெற்றவர் அவர் ஒருவர்தான் ஆவார்; மற்றவர்கள் எல்லாம் சமுதாயத் தொண்டு என்று சொல்லிக்கொண்டு தாங்கள் பெரிய மனிதர்களானவர்களேயாவார்கள்.

சமுதாயத் துறையில் காந்தியார் பார்ப்பனருக்கு நன்மை செய்தாரே ஒழிய, நமக்கு எதுவும் செய்யவில்லை. இதனை அம்பேத்கரே சொல்லி இருக்கிறார். நான் சொல்லவேண்டுமானால் காந்தியாருடைய குறைகள்



சென்னை 19-6-70 விடுதலை வெளியூர் 20-6-70 3

# மதத்தொண்டு செய்கிறவன்என்றால் மடையனையும் மகாத்மா ஆக்கிவிடுவர்

# அரசியல் தொண்டு செய்கிறவன் என்றால் அயோக்கியர்களும் மந்திரி ஆகிவிடலாம்

## அம்பேத்கார் பிறந்த தின விழாவில் தந்தை பெரியார் படப்பிடிப்பு

தொட்டியம், ஜுன் 19—

இந்தியாவில் மத சம்பந்தமான, அரசியல் சம்பந்தமான தொண்டு செய்கிறவர்களே அதிகமாகும். மத சம்பந்தமான தொண்டு செய்கிறவன் எவ்வளவு மடையனாக இருந்தாலும் பத்திரிகைக்காரர்கள் அவனை மகானாக்கி,மகாத்மா ஆக்கிவிடுவார்கள். அரசியல் தொண்டு செய்கிறவர்கள் எவ்வளவு அயோக்கியர்கள் ஆனாலும் அதன் மூலம் மந்திரியாகலாம் என்பதற்காகத்தான் அரசியலில் இருக்கிறார்கள் என்று தந்தை பெரியார் அவர்கள் கருத்துக்கூறினார்கள்.

நிறைய இருக்கின்றன. அடுத்து பெரும் அரசியல்வாதி என பெயர் பெற்ற பண்டித ஜவகர்லால் நேருவும் சமுதாயத் துறையில் எந்தக் காரியமும் செய்யவில்லை. மற்ற எவரும் சமுதாயத்திற்குத் தொண்டு செய்து இந்தியாவில் வெற்றி பெற்றது கிடையாது.



இந்தியாவில் மத சம்பந்தமான, அரசியல் சம்பந்தமான தொண்டு செய்கிறவர்களே அதிகமாகும். மத சம்பந்தமான - கடவுள் சம்பந்தமான தொண்டு செய்கிறவன் எவ்வளவு மடையனானாலும் பத்திரிகைக்காரர்கள் அவனை விளம்பரப்படுத்தி மகானாக்கி, மகாத்மாவாக்கி விடுவார்கள். அரசியல் தொண்டு செய்கிறவர்கள் எவ்வளவு அயோக்கியர்களானாலும் அதன் மூலம், மந்திரியாகலாம், சட்டசபை மெம்பராகலாம், பஞ்சாயத்துத் தலைவராகலாம் என்பதற்காகத்தான் அரசியல் தொண்டு செய்கிறவர்களாக இருக்கிறார்கள்.

பஞ்சாபில் சமுதாய சீர்திருத்த மாநாடு போட்டார்கள். அதற்கு அம்பேத்கரைத் தலைமை வகிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதற்கு அவரும் சம்மதித்து, தான் மாநாட்டில் ஆற்ற இருக்கிற தலைமையுரையை அவர்களுக்கு அனுப்பி வைத்தார். அந்தத் தலைமையுரையில் காந்தியாரை மிகவும் கண்டித்திருந்ததோடு, மதத்தையும் கண்டித்திருந்தார்.

மதம் ஒழிந்தால் ஒழிய, சமுதாயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது என்று அதில் குறிப்பிட்டிருந்தார். அந்தத் தலைமையுரையினை, புத்தகமாகப் போடுவதற்காக மாநாடு நடத்தியவர்கள் கேட்டார்கள். அதை அவர் அனுப்பி வைத்தார். அதனைப் படித்ததும் அவரது உரையானது மதத்திற்கு விரோதமாக இருப்பதை உணர்ந்த மாநாட்டுக் குழுவினர் "உங்களுடைய தலைமையுரையைப் படித்தோம். அது மதத்திற்கு விரோதமான தன்மையில் அமைந்திருக்கிறது. தயவு செய்து அதனை மாற்றிக்கொள்ள வேண்டுகிறோம்" எனக் கடிதம் எழுதினார்கள்.

அதற்கு அம்பேத்கர் அவர்கள் "நான் எனது உரையை மாற்றிக் கொள்ள இயலாது, அதிலுள்ளபடிதான் பேசுவேன். நான் பேசி முடித்தபின், அம்பேத்கர் பேச்சு ஒப்புக் கொள்ளத்தக்கதல்லவென்று வேண்டுமானால் நீங்கள் என் தலைமையிலேயே தீர்மானம் போடுங்கள். அதற்கு நான் பதில் சொல்லுகின்றேன். எனது பேச்சினை மாற்றிக் கொள்வது என்பது இயலாது" என்று பதில் எழுதி விட்டார்.

பிறகு அவர்கள் மாநாடு நடத்துகிற முயற்சியையே கைவிட்டு விட்டார்கள் மாநாடு நடைபெறவில்லை என்றாலும் அபேத்கார்





அவர்கள் நான் ஒரு மாநாட்டிற்குத் தலைமையுரை எழுதினேன். அந்த தலைமையுரையினை மாநாட்டு கமிட்டியார் ஏற்றுக்கொள்ள மறுத்ததால் அந்த உரையினை புத்தகமாகப் போடுகிறேன் எனக் குறிப்பிட்டு, புத்தகமாகப் போட்டு வெளியாக்கினார். அவரிடம் அனுமதி பெற்று அந்த புத்தகத்தை நான் தமிழில் வெளியிட்டிருக்கின்றேன்.

அவருடைய கருத்து "சமுதாயம் முன்னேற வேண்டுமானால் இந்து மதமே ஒழிய வேண்டும்" என்பதாகும். அதைச் சார்ந்து அவர் இந்து மதத்திலிருந்து முஸ்லிம் மதத்திற்குப் போகப்போவதாக அறிக்கை வெளியிட்டார் அப்போது நான் நீங்கள் மதம் மாறிப்போவது சரியல்ல, அப்படிப் போவதாக இருந்தால் குறைந்தது 50 ஆயிரம் மக்களோடு போனால்தான் நமக்கு மரியாதை இருக்கும் என்று எழுதினேன். அப்போது அதைப் பார்த்து, மதம் மாறுவதாக இருந்த தனது கருத்தினை மாற்றிக்கொண்டார். என்றாலும் பிறகு புத்த மதத்தில் சேர்ந்துவிட்டார். அவரோடு சேர்ந்து 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் புத்த மதத்தில் சேர்ந்தார்கள்.

பொது வாழ்க்கையில் அவரைப்போல் தைரியமுடையவர்கள் யாருமில்லை. காந்தியை அவர் எதிர்த்தது போல் யாரும் எதிர்க்கவில்லை. இலண்டனில் வட்டமேஜை மாநாட்டிற்கு காந்தியோடு அம்பேத்கரும் சென்றிருந்தார். அங்கு அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனித்தொகுதி கொடுக்க வேண்டும்; அவர்களின் விகிதாசாரத்திற்கு ஏற்ப உரிமை கொடுக்க வேண்டுமென்றார். அடுத்து பேசிய காந்தியார், "இந்தியாவிலிருக்கிற எல்லா இந்துக்களின் தலைவர் என்கின்ற முறையில் நான் பேசுகின்றேன். இந்துக்களிடையே தனித்தொகுதி கொடுக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். இந்துக்களிடையே பிரிவினை ஏற்படுத்துவதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்துக்கள் யாவரும் ஒற்றுமையாக வாழக் கூடியவர்கள். அவர்களிடையே பிரிவினை செய்வது கூடாது" என்று பேசிக் கொண்டிருக்கும்போது அம்பேத்கர் அவர்கள் மிஸ்டர் காந்தி என்றழைத்து, "நீங்கள் இந்துக்களின் தலைவராக இருக்கலாம். ஆனால், எங்கள் ஆதிதிராவிட மக்களின் தலைவராக நாங்கள் உங்களை ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே, எங்களைப் பற்றிப் பேச உங்களுக்கு உரிமை இல்லை" என்று குறிப்பிட்டார்.



அம்பேத்கர் அவர்கள் காந்தியை மகாத்மா என்று அழைப்பது கிடையாது. “மிஸ்டர் காந்தி! நீங்கள் எங்கள் தலைவரில்லை என்று ஒரு முறைக்கு இரு முறை சொல்விட்டேன். மீண்டும் நீங்கள் எங்களையும் சேர்ந்து எங்களுக்கு தனித் தொகுதி விகிதாச்சார உரிமை தேவை இல்லை என்று சொல்வது பொருந்தாது” என்று வாதாடினார். இதைக் கண்ட வெள்ளைக்காரன் ஆதிதிராவிடர்களுக்குத் தனித்தொகுதி கொடுப்பது என்று தீர்மானித்து விட்டான். வட்ட மேஜை மாநாட்டில் ஆதிதிராவிட மக்களுக்காக வாதாடியதோடு பிரசிடெண்டே அதனை ஒப்புக் கொள்ளச் செய்து விட்டார். காந்தியை எதிர்த்துக் கேட்டது மட்டுமல்ல; அதனை வெள்ளைக்காரனையே ஒத்துக் கொள்ளும்படி செய்தவராவார்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனித் தொகுதி கொடுப்பதாக இருந்தால் நான் பட்டினி கிடந்து செத்துப்போவேன் என்று காந்தி பட்டினி கிடக்க ஆரம்பித்தார். உடனே அம்பேத்கரைக் கொலை செய்வதாக மிரட்டினார்கள். அவர் அதற்கு அஞ்சவில்லை. பிறகு சமாதானத்திற்கு வந்து தந்திரமாக ஆதி திராவிட மக்களின் விகிதாசார எண்ணிக்கைப்படி கல்வி, உத்யோகங்களில் பங்குகொடுத்து விடுகிறோம். தனித் தொகுதி கோரிக்கையை விட்டு விடுங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள். அவரும் ஒத்துக் கொண்டார். அதில் வந்தது தான் 100க்கு 16 ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்குவது என்கின்ற சட்டமாகும்.

நான் அம்பேத்கரைக் கேட்டேன் - “ஏன் தனித் தொகுதி கோரிக்கையினை விட்டுவிட்டீர்கள் இன்னும் கொஞ்ச நாளிருந்தால் கொடுத்திருப்பானே” என்று. அதற்கு அவர், “என்னைக் கொலை செய்வதற்காக எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டார்கள். நான் இந்த விகிதாசாரத்திற்கு ஒப்புக்கொள்ளாமல் தனித்தொகுதிதான் வேண்டுமென்று சொல்லியிருந்தால், நிச்சயம் என்னைக் கொலை செய்திருப்பார்கள். நான் சாவைக் கண்டு அஞ்சவில்லை. என்றாலும் பிறகு இந்த விகிதாசார உரிமையும் கிடைக்காமல் போய்விடுமே என்று பயந்துதான் ஒப்புக்கொண்டேன் என்று சொன்னார். அதன் பயனாக அந்தச் சமுதாயம் முன்னுக்கு வந்து கொண்டிருக்கிறது.

அவர் மத்திய அரசில் மந்திரியாக இருந்தபோது, சென்னையில் ஒரு கூட்டத்திற்கு வந்திருந்தார். அங்கு மத சம்பந்தமாக பேசும் போது “இராமாயணம், பாரதம் இவை யாவும் கொளுத்தப்பட வேண்டும்,

கீதை என்பது முட்டாள்களின் உளறல்'' என்று சொன்னார். ஒரு மாநாட்டில் இராமாயணத்தையே எரித்து இருக்கிறார். இங்கு நமது மக்கள் பக்குவப்பட்டிருப்பதால் இதெல்லாம் சாதாரண நிகழ்ச்சியாகத் தோன்றலாம். வடநாட்டிலுள்ள மக்கள் மகா மூடநம்பிக்கைக்காரர்கள்; காட்டுமிராண்டிகள். அவர்களிடையே இதையெல்லாம் செய்ய மிகத் துணிவு வேண்டும். தான் சொன்னதை என்றைக்கும் வாபஸ் வாங்கியது கிடையாது. ``நான் அந்த கருத்தில் சொல்லவில்லை; இந்தக் கருத்தில் சொன்னேன்'' என்று தான் சொன்னதை மாற்றிச் சொன்னதே கிடையாது. மனதில் பட்டதை தைரியமாக எடுத்துச் சொல்லக்கூடிய துணிவுடையவர். எதிர்ப்பைக் கண்டு கலங்காதவர். அவருடைய தொண்டால்தான் தாழ்த்தப்பட்ட சமுதாயம் இன்று ஓரளவாவது உரிமை பெற்றிருக்கிறது.

தாழ்த்தப்பட்ட மக்களிடையே ஒற்றுமைவேண்டும். பாழும் தேர்தல் வந்து மக்களிடையே இருந்த ஒற்றுமையைக் கெடுத்துவிட்டது. 100க்கு 16 ஸ்தானம் ஒதுக்கி இருந்தாலும் அவர்கள் பொதுத் தொகுதியில் நின்று மேல் ஜாதிக்காரன் ஓட்டைப் பெற்றுத்தான் வெற்றி பெற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதை மாற்றி, அவர்களுக்கு தனியாகவே ஒதுக்கி வைத்து விடவேண்டும். டாக்டர் அம்பேத்கர் அவர்கள் இந்தியாவில் யாரும் செய்யாத நல்ல காரியத்தை - நிலையான காரியத்தைச் செய்தவராவார்.

இன்றைய தினம் இருக்கிற அரசியல் சட்டம் ஜாதியைப் பாதுகாக்கக் கூடியதாகும். ஜாதி இல்லை, மதம் இல்லை, கடவுள் இல்லை என்கின்ற கொள்கையுடைய அரசாக நமது தி.மு.க. அரசு இருந்தாலும், அதனால் ஜாதி ஒழிக என்று சொல்ல முடியவில்லை. சுயமரியாதை இயக்கம் தோன்றி ``கடவுள் ஒழிக! மதம் ஒழிக! காந்தி ஒழிக! காங்கிரஸ் ஒழிக! பார்ப்பான் ஒழிக'' என்று ஆரம்பித்து மக்கள் அதனை உணர ஆரம்பித்த பின்தான் காங்கிரஸ் தீண்டாமை ஒழிப்பு வேஷம் போட்டது.

இன்று சட்டத்தில்தான் ஜாதி இருக்கிறதே ஒழிய, நடைமுறையில் இல்லை. கோயில்களில் தர்மகர்த்தாக்களாக ஆதிதிராவிட மக்கள் இருக்கிறார்கள். இன்றைக்கு கோயில் பூசைகளை ஆதிதிராவிட மக்கள் உள்பட எல்லா ஜாதி மக்களும் செய்யலாம் என்று சட்டம் செய்யப் போகிறார்கள். இரயில்வே உணவு விடுதியின் மேற்பார்வையாளராக ஓர் ஆதிதிராவிடத் தோழி இருக்கிறார். பல

ஆதிதிராவிடத் தோழர்கள் உணவு சமைப்பவர்களாகவும், சப்ளை செய்பவர்களாகவும் இருக்கிறார்கள் என்றாலும், முழுதும் ஒழிந்து விட்டது என்று சொல்வதற்கில்லை. கிராமங்கள் பலவற்றில் இன்னும் ஆதிதிராவிட மக்களை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். இதற்குக் காரணம் இந்நாட்டிலிருக்கிற ஜாதிப் பிரிவேயாகும்.

நீக்ரோக்களிடையே கிறித்துவர்களிடையே, முஸ்லிம்களிடையே ஜாதி கிடையாது. வேறு எந்த நாட்டிலும் ஜாதி இல்லை. இந்தியாவில் தான் ஜாதி இருக்கிறது. அதுவும் பார்ப்பானால்தான் இருக்கிறது. அவன் பல சூதுவாது செய்து அதனைக் காப்பாற்றி வருகின்றான். அதை ஒழித்தால்தான் அதற்கு அடிப்படையாக - பாதுகாப்பாக இருக்கிற கடவுள், மதம், பார்ப்பான் இவைகளை ஒழித்தால் தான் ஒழியும். மேலும் அம்பேத்கர் அவர்கள் இந்தியாவில் சமுதாயத் துறையில் 100க்கு 700 பங்கு விடுதலை பெற்று தந்தார் என்று சொல்லலாம். நம்முடைய முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பவை ஜாதி மட்டுமல்ல, மதம் மட்டுமல்ல; அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற கோயில்கள், அதிலுள்ள கடவுள் சிலைகள், அதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட சாஸ்திரங்கள் யாவுமாகும். இவை ஒழிக்கப்பட்டால்தான் நம் தடை நீங்கும். மற்ற எந்த ஜீவனுக்குமில்லாத பகுத்தறிவைப் பெற்றிருக்கிற மனிதன் 3000 ஆண்டுகளிலிருந்து எவ்வளவு அறிவில் முன்னுக்கு வந்தான்? மனிதன் இந்த 100 வருடங்களில் அடைந்த முன்னேற்றத்தினை சென்ற 3000 ஆண்டுகளில் அடையாததற்குக் காரணம் என்ன? என்பதைச் சிந்திக்க வேண்டும்!

மனிதன் வளர்ச்சியடைய வேண்டுமானால், மனிதனுக்கு இருக்கிற குறைகள் நீங்கவேண்டுமானால், மனிதன் சமத்துவமாக சுதந்திரமாக வாழவேண்டுமானால், உலக மக்களைப்போன்று அறிவு பெற வேண்டுமானால் இந்தக் கடவுள் மதம் ஒழிந்தாகவேண்டும். நம்முடைய அறிவைப் பயன்படுத்த முடியாமல் கடவுளும் - மதமும்தான் தடுக்கின்றன என்பதை மிக விளக்கமாகவும் விரிவாகவும் எடுத்துரைத்தார்கள்.

**- 'விடுதலை', 19.6.1970**

■




# 51

# மாநில சுயாட்சி வழங்கப்படாவிட்டால் அடுத்து தனி சுதந்திர கோரிக்கைதான்!

- **உணர்ச்சியை ஏற்படுத்தித் தூண்டிவிட்டால் மூன்றாண்டுகளில் சுதந்திரம் கிடைத்தே தீரும்!**
- **சுயாட்சி மாநாட்டில் தந்தை பெரியார் உரை முழுவிவரம்**

மாநில சுய ஆட்சி மாநாடு என்கின்ற பெயரில் கூட்டப்பட்ட இம்மாநாடு எங்கு கூட்டப்பட்டிருக்கிறது? மாநில சுய ஆட்சி பற்றி எங்கிருந்து கொண்டு பேசுகிறோமென்றால், சுதந்திரமடைந்த நாட்டிலிருந்து கொண்டு பேசுகிறோம். சுதந்திரமடைந்த நாட்டிலிருந்து கொண்டு எங்களுக்கு சுதந்திரம் வேண்டும், மாநில சுய ஆட்சி வேண்டுமென்பது பெரிய மானக்கேடாகும். இந்த (இந்திய) நாடு சுதந்திரம் பெற்று 23 ஆண்டுகள் ஆகின்றன. இந்த 23 ஆண்டுகளில் நம் நாட்டில் சமுதாயத் துறையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. சுதந்திரம் பெறுவதற்கு முன் எந்த நிலையிலிருந்ததோ அந்த நிலையில் தான் இன்றுமிருக்கிறது சிறு மாறுபாடு கூட ஏற்படவில்லை. ‘சூத்திரன்’ சூத்திரனாகத்தானிருக்கிறான். ‘பறையன்’ பறையனாகத்தானிருக்கிறான். ‘சக்கிலி’ சக்கிலியாகத்தானிருக்கிறான். பார்ப்பான் பார்ப்பானாகத்தானிருக்கிறானே ஒழிய, மாறவில்லை.

இந்தக் கூட்டம் (மாநாடு) கூட்டியிருப்பவர்கள் ஆட்சியிலிருப்பவர்களானதால் இந்திய ஆட்சிக்குக் கட்டுப்பட்ட இந்திய ஆட்சி அதிகாரங்களுக்குக் கட்டுப்பட்ட சுதந்திரமே கேட்கிறார்கள். இன்னும் கொஞ்சம் அதிகாரங்கள் தாருங்கள் என்று டில்லியைப் பார்த்து கெஞ்சுவதற்காகவே ஏற்பாடு செய்யப்பட்ட

சென்னை 14-9-70 விடுதலை வெளியீடு 15-9-70 3

# மாநில சுயாட்சி வழங்கப்படாவிட்டால் அடுத்து தனி சுதந்திரக் கோரிக்கைதான்

## உணர்ச்சியை ஏற்படுத்தித் தூண்டிவிட்டால் மூன்றாண்டுகளில் சுதந்திரம் கிடைத்தே தீரும்

### சுயாட்சி மாநாட்டில் தந்தை பெரியார் உரை முழுவிவரம்



சென்னை, செப். 14-

இப்போது மாநில சுயாட்சி வழங்கப்படாவிட்டால் அடுத்து தனி சுதந்திர கோரிக்கை எழவே செய்யும். முட்டாள்தனமான காரியங்களுக்காக மனிதன் உயிரைக் கொடுக்கத் துணியவில்லையா? அதுபோல அவசியமான காரியங்களுக்கு உணர்ச்சியைத் தூண்டிவிட்டால் மூன்றாண்டுகளில் சுதந்திரம் கிடைத்தே தீரும் என்று சுயாட்சி மாநாட்டில் தந்தை பெரியார் அவர்கள் உரை நிகழ்த்தினார்.

### தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம்

### தமிழ்நாடு அரசு

போக்குவரத்து இயக்குநரின் அலுவலகம், சென்னை-2.

ஒப்பந்த விளம்பரம்

### அரசியல் சட்டஎரிப்பும்

### தோடிக்கணக்கில் கொள்ளை

### புதுக்கோயில்களும் புதுக்கடவுள்களும்

### 56 தேசங்கள்

### இந்துமதம் என்று ஒருமதமும் இல்லை

### அடக்கியாளவா உரிமை கேட்கிறோம்

### வி.ஜி.பன்னீர்தாஸ் நிறுவனத்துக்கு பம்பாயில் பரிசு



இந்தியாவில் மிகப்பெரியதையல் இயந்திர விற்பனையாளர் என்ற தனிச்சிறப்பினை வி. ஜி. பன்னீர்தாஸ் நிறுவனம் பெற்றுள்ளது...

மாநாடு ஆகும் இது. தங்கள் நாட்டிற்கேற்ப ஆட்சியை அமைத்துக் கொள்ள நடத்த உரிமை கேட்கிறார்கள். இது கூட இல்லாத சுதந்திரம் என்ன சுதந்திரம்? என்று கேட்கிறேன். நம் நாட்டிற்கான காரியத்தைச் செய்ய இன்னொருவரைக் கேட்க வேண்டிய இம்மாதிரியான தாழ்ந்த

நிலை, இழி நிலை நமக்கு வருவதற்குக் காரணமென்ன? இந்நாட்டை 100-200 ஆண்டுகளுக்கு மேல் ஆண்டு கொண்டிருந்தவர்களை - வெள்ளையர்களை வெளியேறும்படிச் செய்தோம் (அவர்கள் தானாகவே இந்நாட்டை விட்டு வெளியேறினார்கள்) அவர்கள் இந்த இந்திய நாட்டை விட்டு வெளியேறிய போதே நம்நாடு சுதந்திரமடைய வேண்டுமென்கின்ற எண்ணம் மக்களிடமிருந்தது. அதற்கு முன்பிருந்தே நாம் திராவிட நாடு திராவிடருக்கே ஆக வேண்டுமென்று கிளர்ச்சி செய்து வந்தோம். வெள்ளையன் நாட்டை விட்டுப்போனதும் தமிழ்நாட்டில் மட்டுமில்லாமல் எல்லா மாநிலங்களிலும் அந்த எண்ணம் பிரதிபலித்தது, சுதந்திரம் பெற்றதும் இந்தியா ஒரு நாடாக இருக்க முடியாது; 4,5 பாகமாக பிரித்துவிட வேண்டியதுதான் என்கின்ற கருத்து அரசியல்வாதிகளால் கூறப்பட்டது. நமது நண்பர் இராஜாஜி அவர்கள் முஸ்லிம்களுக்குத் தனி நாடு கொடுக்க வேண்டியது அவசியம் என்று வற்புறுத்தி, அவர்களுக்குத் தனி நாடு கிடைக்கச் செய்தார். அவர் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும்போது "முஸ்லிம்களுக்குத் தனிநாடு கொடுக்க வேண்டியது அவசியம் என்று சொல்கிறீர்களே, அதுபோல பெரியாரவர்கள் தனித் திராவிடநாடு வேண்டுமென்று கேட்கிறாரே, அதையும் பிரித்துக் கொடுத்து விடுவீர்களா?" என்று கேட்கப்பட்ட போது, "பெரியார் தனியாக நின்று கேட்கிறார். திராவிட மக்களெல்லாம் சேர்ந்து கேட்டால் பிரித்துக் கொடுத்துவிட வேண்டியதுதான்" என்று பதில் சொல்லி இருக்கிறார். இச்செய்திகள் அப்போதே பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

வெள்ளையன் இந்நாட்டை விட்டுப் போனதும் இந்தியா இனி ஒரு நாடாக இருக்சு முடியாது. பல பாகங்களாகப் பிரித்துவிடவேண்டும் என்பது போன்று பலர் பலவிதமான கருத்துகளை திட்டங்களைச் சொன்னார்கள். வெள்ளையர்கள் இந்நாட்டைவிட்டு வெளியேறிய போது இந்தியாவின் பெரும் பகுதியை இந்தியருக்கென்று காங்கிரசிடமும், சிறு பகுதியை முஸ்லிம்களுக்கென்று முஸ்லிம் லீக் கிடமும் ஒப்படைத்தனர். இந்தியருக்கென்று நாடு காங்கிரசிடம் ஒப்படைக்கப்பட்டதும் ஏற்பட்ட கேடு என்னவென்றால், காங்கிரசார் யாரையும் கலக்காமல் மனுதர்மத்தை அடிப்படையாகக்கொண்டு பார்ப்பனர் உயர்வுக்கு எவ்வித சிறு கேடும் ஏற்படாத தன்மையில் அரசியல் சட்டத்தை ஏற்படுத்திக் கொண்டு விட்டனர்.



இந்த அரசியல் சட்டத்தை ஏற்படுத்திய கர்த்தாக்கள் யாரென்றால், இந்நாட்டின் மிகச் சிறு பகுதியினரான - 100க்கு 3 பேராக உள்ள - தமிழ் நாட்டுப் பார்ப்பனர் மூவர், பம்பாய் நாட்டு பார்ப்பனர் ஒருவர், மற்ற இருவரில் ஒருவர் முஸ்லிம், மற்றவர் தாழ்த்தப்பட்ட வகுப்பை சார்ந்தவராவரர். நாலாம் ஜாதி ஆக்கப்பட்டவர்களுக்கு அதில் இடமே இல்லை. அதாவது இந் நாட்டில் 100க்கு 80பேராக உள்ள மக்களுக்கு அதில் பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை. மேற்கண்ட இந்த அனைவரும் யார் யார் என்றால், திரு. அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், திரு.டி.டி.கிருஷ்ணமாச்சாரி, திரு. கோபால்சாமி அய்யங்கார், திரு.கே.எம்.முன்ஷி (பம்பாய் பார்ப்பனர்) ஆக நான்கு பேரும் பார்ப்பனர்கள். முஸ்லிம்களுக்காக திரு.சாதுல்லாவும், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக டாக்டர் அம்பேத்கர் அவர்களும் ஆக ஆறு பேர்கள் ஆவார்கள். இதில் பார்ப்பனர்களே இரட்டிப்பு மெஜாரிட்டியாகவும் மீதி இருவர் மைனாரிட்டியாகவுமிருந்ததால் பார்ப்பனர்கள் தங்கள் வசதிக்கேற்ப அரசியல் சட்டத்தினை அமைத்துக் கொண்டு விட்டனர்.

இந்த மோசடியான அரசியல் சட்டத்தின்படி “இந்தியா என்றென்றும் ஒரே நாடாக இருக்கவேண்டியது; இந்து சமுதாயம் என்றும் இன்று போலவே இருக்கவேண்டும்; எக்காரணத்தைக் கொண்டும் பிரிக்கக்கூடாது, மாற்றக்கூடாது. இதிலிருந்து பிரிய வேண்டுமென்பது தேசத் துரோகமானது” என்பதாக பலமாக அமைக்கப்பட்டு விட்டது. இந்த அரசியல் சட்டமானது வெளியானபோதே நான் இது மோசடியான சட்டம் ஜாதியை, பார்ப்பன ஆதிக்கத்தைப் பாதுகாக்கக்கூடியது என்று சொல்லி அரசியல் சட்டத்தை தீயிட்டுக் கொளுத்தியதோடு, ஒரு கட்டத்தில் பேசும்போது டாக்டர் அம்பேத்கர் அவர்களைக் குறைகூறி, தன் ஜாதிக்கு விகிதாசாரம் கிடைத்து விட்டதால் மற்ற மக்களைப்பற்றி அவர் கருதவில்லை” என்று பேசினேன். இது தெரிந்ததும் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் ராஜ்யசபாவில் இந்தச் சட்டத்தை கொளுத்துவதாக இருந்தால் இதை முதலில் நானே “கொளுத்துவேன்” என்று குறிப்பிட்டதோடு, எனக்குச் சமாதானம் சொல்கிறவகையில் “கமிட்டியில் நான் ஒருவன்; மீதி 5 பேர் எதிர்ப்பு. நான் எதிர்த்தும் பயனில்லாமல் போய் விட்டது. அதில் உள்ளவைகளில் பல எனது கருத்துக்கு மாறுபாடானது” என்றும் குறிப்பிட்டிருக்கிறார். இந்த அரசியல் சட்டத்தால் பெரும்பான்மையாக இருக்கிற மக்கள்

ஏமாற்றப்பட்டார்கள். சமுதாயத்தில் மட்டுமல்லாமல் தொழில் துறை, பொருளாதாரத்துறை எதிலும் நம் மக்கள் முற்போக்கடைய முடியாத தன்மையில் ஏற்பாடு செய்து கொண்டுவிட்டனர்.

இன்றும்கூட நமக்குள்ள குறைகளும் இழிவும் ஒழிவதற்கு, எங்கு நான் தமிழ் நாடு தனியாகப் பிரிய வேண்டுமென்று சொல்லி விடுவேனோ என்று பயப்படுகிறார்கள். நான் அப்படிச் சொல்ல இங்கு வரவில்லை. “நம் நாட்டைப் பொறுத்த விஷயங்களில் நமக்கு அதிகாரம் வேண்டும். மற்றவர் தலையீடு இருக்கக்கூடாது” என்று தான் சொல்கின்றேன். இது இல்லாத காரணத்தால்தான் கண்டவரெல்லாம் வந்து நம் நாட்டைச் சுரண்டுகின்றார்கள். நமது பணத்தை கோடிக் கணக்கில் கொள்ளையடித்துக்கொண்டு போகின்றார்கள். நம் நாட்டிற்குரிய நமது மக்கள் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கும்போது மற்றவரெல்லாம் இங்கு வந்து புகுந்து கொண்டு சம்பாதிக்கின்றார்கள். இதனைத் தடுக்க நம்மால் முடியவில்லை. இம்முறையை மாற்றியமைக்க மற்றவர் எங்களைச் சுரண்டாமல் தடுத்துக்கொள்வதற்கு அதிகாரம் எங்களுக்கு வேண்டாமா?

வெள்ளைக்காரன் ஆட்சி இருக்கிறபோது நாட்டிற்கான திட்டம் போடுகிற உரிமை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரிகளிடமும் அத்திட்டங்களுக்குப் பொருள் (பணம்) ஒதுக்கவேண்டிய பொறுப்பு அரசாங்க (வெள்ளைக்கார) மந்திரியிடமும் இருந்ததால் இவர்கள் போடுகிற திட்டத்திற்கேற்ப பணத்தை ஒதுக்குவது கிடையாது. இதனால் அவர்கள் தாங்கள் போடுகிற திட்டப்படி மந்திரிகள் நடந்து கொள்ள முடியாமல் போய்விட்டது. இம்முறையைத்தான் இரட்டை ஆட்சி முறை என்றனர். அதுபோலத்தான் இன்றைய ஆட்சி நிலையும் உள்ளது. டில்லி ஆட்சிக்குக் கட்டுப்பட்டு அதன் திட்டப்படி மாநில ஆட்சி நடக்க வேண்டுமே தவிர, தன் இஷ் டப்படி நடப்பதற்கு உரிமை இல்லை. இவர்கள் நாலுபேர் மந்திரியாக இருக்கிறார்கள். அதனால் நம்மவர்களுக்குப் பதவி உத்தியோகம் கொடுக்கிறார்கள் என்பதைத் தவிர இதை மாற்ற இவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. நாங்கள் தான் ஏதாவது செய்ய வேண்டும். எங்களால் செய்ய முடியும் என்பதற்குக் காரணம். நாங்கள் மந்திரிகளாக இல்லை. அரசியல் பதவிகளில் இல்லை. ஆனதால் துணிந்து செய்யமுடியும்.



மக்கள் நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து கொண்டு வருகின்றார்கள். மற்ற உலக மக்களெல்லாம் புதுப்புது விஞ்ஞான அற்புத அதிசயங்களைக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கின்றனர். இங்கு நம்நாட்டில் புதுப்புது கடவுள்களைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கிறான், புதுப்புது கோயில்களைக் கட்டிக் கொண்டிருக்கிறான். மக்களை அதன் மூலம் மடையர்களாக்கிக் கொண்டிருக்கிறான். இதைத் தடுக்க வேண்டுமென்றால் அவனுடைய அனுமதியைப் பெற்றாக வேண்டிய நிலை இருப்பதால் இதையெல்லாம் இவர்களால் தடுக்க முடியாமலிருக்கிறது. எதற்காக நமக்கிந்த இழிநிலை? நான்கு கோடி மக்களும், வற்றாத நதிகளும், பல வளமும் கொண்ட நாடு எதற்காக இன்னொருவனுக்கு அடிமையாக இருக்கவேண்டும்? கணவன் மனைவிகூட, கணவன் பிடிக்கவில்லை யென்றால் பிரிந்து கொள்கிறார்கள், அண்ணன் தம்பிகூட, கருத்து வேறுபட்டால் பிரிந்து கொள்கின்றனர். சட்டமும் அதற்கு இடம் கொடுக்கிறது. ஆனால், இந்த நாடு மட்டும் ஆயுள் உள்ள வரை இந்தியாவிலிருந்து பிரியக்கூடாது இந்த சமுதாயம் மாற்றமடையக் கூடாது என்றால், இது என்ன சுதந்திரம்? வெங்காய சுதந்திரம் என்று கேட்கின்றேன்.

உலகத்தில் இந்தியா என்று ஒரு நாடு என்று இருந்தது? நம்நாடு இலக்கியப் படி 56 தேசங்களாக, தனி சுதந்திர நாடுகளாக இருந்தன. வெள்ளைக்காரன் இந்த நாட்டை விட்டுப் போகிறபோதுகூட 56 நாடுகள் சுதந்திரமாக சுதேச சமஸ்தானங்களாக இருந்தன. சுதந்திரம் கிடைத்த பின்தான் எல்லாவற்றையும் ஒன்றாக இணைக்க வேண்டுமென்று இணைத்தார்கள். இப்படி இணைத்ததால் எந்தப் பலனும் மக்களுக்குக் கிடைக்கவில்லை என்பதோடு, கேடுகள்தான் அதிகமாயின. உலகம் பூராவும் எடுத்துக் கொண்டால்கூட இதுபோல் 4 கோடி மக்கள் உள்ள நாடு அடிமை நாடாக எங்கும் இல்லை. 59 இலட்சம் 60 இலட்சம் மக்கள் கொண்ட மிகச் சிறிய நாடுகள் எல்லாம் பூரண சுதந்திரமாக இருக்கும்போது, நம் நாடு மட்டும்தான் அடிமையாக இருக்கிறது. இந்த நிலை மாற்றப்படவேண்டும். மாறித்தான் தீரும்.

எப்படி இந்தியா என்று ஒருநாடு இல்லையோ அதுபோல, இந்து மதம் என்பதாக ஒரு மதம் இல்லை. இப்படி ஒருமதம் இருந்ததாக எந்த ஆதாரமும் இல்லை. இந்து மதம் என்றால் என்ன? அது எப்போது

தோன்றியது? யாரால் தோற்றுவிக்கப்பட்டது? அதன் தலைவன் யார்? அதற்கு ஆதாரமான நூல் எது? என்று கேட்கின்றேன். ஒரு மதம் என்றால் அதற்கு காலம், தலைவன், அதற்கான நூல் இருக்க வேண்டுமா? இல்லையா?

நாம் கேட்பதெல்லாம் நம் நாட்டிற்கு உரிமை வேண்டுமென்பது. தானே தவிர, இன்னொருவரை அடக்கியாள வேண்டுமென்று கேட்கவில்லை. எங்கள் நாட்டிற்குள் செய்கிற காரியங்களை நாங்களே செய்து கொள்கிறோம். மற்றவர்கள் அனுமதி பெற்றுச் செய்ய வேண்டுமென்கின்ற நிலை வேண்டாம் என்றுதான் சொல்கிறோம். இராஷ்டிரபதி இருக்கிறபடி இருக்கட்டும். நாங்கள் போடுகிற தீர்மானத்தை வேண்டுமானால் அவர் கேன்சல் செய்துவிட்டுப் போகட்டும் அதைப்பற்றி கவலையில்லை. ஆனால், உங்களை கேட்டுத்தான் உங்கள் அனுமதி பெற்றுத்தான் செய்ய வேண்டும் என்கின்ற நிலை எங்களுக்கு இருக்கக்கூடாது. நாங்கள் எங்கள் நாட்டிற்கு ஏதாவது செய்யவேண்டுமென்றால் உன்னிடம் வந்து உனது பார்லிமெண்டில் பாசாக வேண்டும் என்கின்ற நிலை எங்களுக்கு வேண்டாம். பார்லிமெண்டில் 525க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் இருக்கிறார்கள் அதில் நாங்கள் 38 பேர்தான் நாங்கள் கொண்டுவந்ருகிற தீர்மானம் மற்றவர்களால் தோற்கடிக்கப்பட்டு செயல்பட முடியாமல் போய்விடுகிறது. எனவேதான் இந்த கீழ் நிலை எங்களுக்கு வேண்டாம் என்கிறோம். உலகில் வேறு எங்குமே இதுபோன்ற அடிமை நாடுகள் இல்லை

அரசியல் சட்டத்தில் இடம் இருந்தால்கூட நீதிமன்றங்கள் பல உரிமைகளைப் பறித்துக் கொள்கின்றன. நாங்கள் 10,000 பேர் அரசியல் சட்டத்தைக் கொளுத்தி 3000 பேர் சிறைக்குப் போய் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான விகிதாச்சார உரிமையை வழங்கும்படி செய்தோம். பிற்படுத்தப்பட்ட மக்கள் பார்ப்பனர், மேல்ஜாதியார், தாழ்த்தப்பட்ட மக்கள் நீங்களாக 100க்கு சுமார் 75 பேர்கள் இருப்பார்கள். அவர்களுக்குரிய உரிமையை கொடுக்க சட்டத்தில் இடம் இருந்தும் சுப்ரீம் கோர்ட் என்கிற நீதிமன்றம் அப்படிக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லையென்று சொல்லிவிட்டது. அதனால் பிற்படுத்தப்பட்ட மக்கள் தங்களின் உரிமையை அடைய முடியாமல் போய்விட்டது. அரசியல் சட்டத்தில் தீண்டாமை ஒழிப்பு



என்று குறிப்பிடப்பட்டிருப்பதும் பெரிய மோசடியாகும். அதிலுள்ளபடி பார்த்தால் இந்நாட்டில் தீண்டாமை ஒழியவே ஒழியாது. தீண்டாமை ஒழிப்பைப் பற்றி வியாக்கியானம் சொல்லும்போது தீண்டாமை ஒழிப்பு என்றால் ஒருவரை ஒருவர் தொட்டுக் கொள்ளலாம் என்பதே தவிர மற்றப்படி புழங்கலாம் என்பதல்ல என்று சொல்லி மதத்தில் பிரவேசிக்கக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள்.

அடுத்த பொருளாதார சமத்துவம் என்று சொல்லிவிட்டு இந்நாட்டு பிரஜை எங்கு வேண்டுமானாலும் சென்று எவ்வளவு வேண்டுமானாலும் சம்பாதித்து எங்கு வேண்டுமானாலும் கொண்டு செல்ல உரிமை உண்டு தனி மனிதனின் சுதந்திரம் காப்பாற்றப்படும் என்று எழுதி வைத்துக் கொண்டிருக்கிறபோது பொருளாதார சமத்துவம் எப்படி ஏற்படமுடியும். இந்த நிலைகளை நம் நாட்டில் மாற்ற உரிமைக் கொடுத்தால் மற்றவனுக்கு நட்டமில்லாமல் எங்களுக்கேற்ப நாங்கள் நடந்து கொள்வோமா? இல்லையா? இதையெல்லாம் வெளியில் சொல்ல இயலாமல் இந்த ஆட்சியாளர் மனம் வெதும்பி மற்ற மாநிலக்காரர்களையும் அழைத்து மாநில சுய ஆட்சி கோரிக்கையை எழுப்புகின்றார்கள். இதை (டில்லி) கவனிக்காவிட்டால் நிச்சயம் விபரீதம் வரும்.

இப்போது முட்டாள் தனமான காரியங்களுக்காக மனிதன் உயிரைக் கொடுக்க துணியவில்லையா? அது போல அவசியமான காரியங்களுக்கு உணர்ச்சியை ஏற்படுத்தி தூண்டிவிட்டால் மூன்றாண்டுகளில் சுதந்திரம் கிடைத்தே தீரும். இதில் சந்தேகமே இல்லை ஜனநாயகமென்றால், சுதந்திரமென்றால் டில்லி ஆட்சிக்குக் கட்டுப்பட்டு நடப்பதல்ல. அந்தந்த மாநிலங்களும் தங்களுக்குரிய காரியங்களைத் தாங்களே செய்து கொள்வது, மற்ற மாநில மக்களுக்கு தீங்கு இல்லாமல் நடந்து கொள்வது என்பதேயாகும். இப்போது மாநில சுய ஆட்சி வழங்கப்படாவிட்டால் அடுத்து தனி சுதந்திர கோரிக்கை எழத்தான் அது வழிவகுக்கும் என்பதை எழுத்துரைத்தார்கள்.

**- ‘விடுதலை’, 14.9.1970**

■



சக அமைச்சர்கள் பற்றி அஜாய்முகர்ஜிக்கு கவர்னர் கடிதம்

பதிவு எண்: எம்: 4789

தமிழ்நாடு தமிழருக்கே!

விடுதலை

"VIDUTHALAI" LEADING TAMIL DAILY

மலர் 32 ] சென்னை வியாழன் ( 1-1-70 ) வெளியூர் வெள்ளி (2-1-70)

சௌமிய ஆண்டு மார்கழி 17 : 4 பக்கங்கள் விலை 10 காசுகள் [ இதழ் 209

ஆலைத் தொழில்வளர்ச்சியில் தமிழக அரசு தீவிரம்:

# 52

# சிந்தனையைத் தூண்டிவிட்டு மனிதனை மனிதனாக்கும் அமைப்புகள் தேவை!

- **காப்பதற்கு என்று நிறுவனங்கள் இல்லாதிருந்தால் ஆத்திகம் அழிந்திருக்கும்**
- **கோவையில் சிந்தனைப் பேரவையைத் துவக்கிவைத்து தந்தை பெரியார் அறிவுரை**

தந்தை பெரியாரவர்கள் சிந்தனைப் பேரவையைத் துவக்கி வைத்தும் **டாக்டர் அம்பேத்கர், அறிஞர் அண்ணா, பண்டித நேரு ஆகியோரின் உருவப் படங்களைத் திறந்து வைத்தும்** உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

இன்றைய தினம் இக் கோவை மாநகரில் சிந்தனைப் பேரவைத் துவக்க விழா என்னும் பெயரால் இம்மாபெரும் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோடு, இந்நிகழ்ச்சியில் செயற்கரிய செய்த பெரியார்களின் படங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மூன்று பெரியார்களும் பல அரிய காரியங்களைச் செய்துள்ளனர். முக்கியமாக இம்மூவரில் டாக்டர் அம்பேத்கரை முதல்வராக சொல்லவேண்டும். இரண்டாவதாக அண்ணா அவர்களைக் குறிப்பிட வேண்டும். மூன்றாவதாக பண்டித நேருவைக் குறிப்பிடவேண்டும்.

டாக்டர் அம்பேத்கர் ஆற்றிய பணி இதுவரை இந்நாட்டில் யாரும் ஆற்றாத பணியாகும். அம்பேத்கர் அவர்கள் நாமெல்லாம் மகாத்மா என்று போற்றுகிறவரை, "உனக்கு அறிவு இருக்கிறதா" என்று கேட்டவர். அவ்வளவு துணிவு யாருக்கும் வராது. இலண்டனில் நடைபெற்ற



சென்னை 26-10-70 விடுதலை வெளியீடு 27-10-70 3

# சிந்தனையைத் தூண்டிவிட்டு மனிதனை மனிதனாக்கும் அமைப்புகள் தேவை

## காப்பதற்கு என்று நிறுவனங்கள் இல்லாதிருந்தால் ஆத்திகம் அழிந்திருக்கும்

### கோவையில் சிந்தனைப்பேரவையைத் துவக்கிவைத்து தந்தை பெரியார் அறிவுரை

கோவை, 26—

சிந்தனையைத் தூண்டிவிட்டு மனிதனை மனிதனாக்கும் பணிக்கு பகுத்தறிவு அமைப்புகள் நாடெங்கும் தேவை. இவை தான் உணர்ச்சியுள்ள ஸ்தாபனங்கள் என்று தந்தை பெரியார் அவர்கள் கோவையில் சிந்தனைப் பேரவையைத் துவக்கி வைத்துப் பேசுகையில் கூறினார்.

## தமிழக அரசு பரிசுச் சீட்டு

25-வது குலுக்கல் முடிவுகள் தேதி: 25-10-70 இடம்: பாலர் அரங்கம்

| 'FT' வரிசை | 'FU' வரிசை | 'FV' வரிசை | 'FW' வரிசை |
|---|---|---|---|
| ஒரு முதல் பரிசு ரூ. 1 லட்சம் 851448 | ஒரு முதல் பரிசு ரூ. 1 லட்சம் 108665 | ஒரு முதல் பரிசு ரூ. 1 லட்சம் 149204 | ஒரு முதல் பரிசு ரூ. 1 லட்சம் 825470 |

வட்ட மேஜை மாநாட்டில் காந்தியாரவர்கள் "நான் இந்தியாவின் பிரதிநிதியாகப் பேசுகிறேன்" என்று குறிப்பிட்டு பேச ஆரம்பித்தார். அம்பேத்கர் அவர்கள் எழுந்து "நீங்கள் இந்துக்களின் பிரதிநிதியாக இருக்கலாமே ஒழிய, இந்தியாவின் பிரதிநிதி என்பதை நான் ஒப்புக் கொள்ள மறுக்கிறேன்" என்று குறிப்பிட்டதும் மீண்டும் காந்தியார் "நான் இந்தியாவின் பிரதிநிதியாக" என்று குறிப்பிட்டதும் அம்பேத்கர்





அவர்கள் “நான் முன்னமேயே தாங்கள் இந்தியாவின் பிரதிநிதி அல்ல என்பதை எடுத்துச் சொல்லிவிட்டேன் மீண்டும் மீண்டும் அதையே சொல்கிறீர்கள். உனக்கு அறிவு இருக்கிறதா இல்லையா?” என்று துணிந்து கேட்டார்.

மனித சமுதாயத்தில் ஏதாவது திருத்தம் செய்ய வேண்டுமானால் இந்து மதம் ஒழிக்கப்பட வேண்டுமென்று சொன்னவர். ஒரு மாநாட்டிற்கு தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொண்டு, அவரது தலைமையுரையினை அச்சிட்டு வெளியிட வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அந்த உரையில் இந்துமதம் ஒழியாமல் ஜாதி ஒழியாது. ஜாதி ஒழிக்கப்பட வேண்டுமானால் இந்து மதம் ஒழிக்கப்பட்டாக வேண்டும் என்பதை விளக்கியிருந்தார். இதைக்கண்டதும் மாநாட்டுக்காரர்கள் இக்கருத்தினை நீக்கிவிட வேண்டுமென்று அவரைக் கேட்டுக் கொண்டார்கள். அவர் மறுத்துவிட்டதோடு, நான் அதிலுள்ளபடிதான் பேசுவேன். பின்னால் பேசுகிறவர்கள் அதைக் கண்டித்துப் பேசட்டும். நீக்கிவிட்டுப் பேச முடியாது என்று மறுத்து விட்டார். அந்த உரையை வாங்கி நான் தமிழில் புத்தகமாக வெளியிட்டுள்ளேன்.

இரண்டொரு மாநாட்டில் இராமாயணத்தைக் கொளுத்தியிருக்கிறார் அவர் மந்திரியாக இருந்த போது சென்னை வந்தார். அப்போது அவர் “கீதை, பைத்தியக்காரனின் உளறல்” என்று சொன்னார். பத்திரிகைகளெல்லாம் மந்திரியாக இருந்து கொண்டு அம்பேத்கர் இப்படி பேசக்கூடாது என்று கண்டித்து எழுதின. அவர் அதை இலட்சியம் செய்யவில்லை. அவரது கருத்துகள், கொள்கைகள் மிக சிறந்தவையாகும். அதை யாராலும் கண்டிக்க முடியவில்லை. அவர் இந்தியாவிலேயே செயற்கரிய செய்தவராவார்.

இந்தியாவிலேயே கடவுள் - மதம் - ஜாதி - சாஸ்திரம் இல்லை என்று சொல்லி ஒரு புதிய ஸ்தாபனத்தையே ஏற்படுத்தி அதன் மூலம் வெற்றி பெற்றவர் அறிஞர் அண்ணா ஆவார்கள். அவர் தனது ஆட்சியில் கடவுள் - மத சாஸ்திரத்திற்கு விரோதமான சுயமரியாதைத் திருமணத்தை சட்டபூர்வமாக்கினார். கடவுள் - மத - சாஸ்திரங்களுக்கும் ஆட்சிக்கும் சம்பந்தமில்லை என்பதை தனது ஆட்சியின் மூலம் வெளிக்காட்டிக் கொண்டார்.

நேரு காந்தியின் செல்லப் பிள்ளையாக இருந்ததால் அவருக்கு பதவி கிடைத்தது. அந்தப் பதவி பட்டேலுக்கு கிடைக்க வேண்டியதாகும்.



பதவிக்கு வந்தும் புராண இதிகாசங்களைக் கண்டித்து சில கருத்துகளைச் சொல்லி இருக்கிறார்.

இப்படிப்பட்ட பாராட்டுக்குரிய காரியங்களைச் செய்தவர்களின் படங்களைத் திறந்து வைப்பது அவர்களை பெருமைப் படுத்துவதற்தாக அல்ல, அவரது கொள்கைகளை மக்களிடையே பரப்புவதற்கும் மக்கள் அவர்களது கொள்கைகளை உணர்ந்து அதன்படி நடந்து கொள்வதற்காகவுமேயாகும். அம்முறையில் தான் இப்படங்களை இங்கு திறந்துவைக்கச் செய்திருக்கிறார்கள் என்று கருதுகின்றேன்.

இச் “சிந்தனைப் பேரவை” போன்ற உணர்ச்சியுள்ள ஸ்தாபனங்கள் நிறைய ஏற்படவேண்டும். சிந்தனையாளர் கழகம், பகுத்தறிவாளர் சங்கம், அறிவு வளர்ச்சிப் பேரவை என்று எதைச் சொன்னாலும் அது மனிதர்களுடைய சங்கம், சிந்திப்பது, ஆராய்வது அதன் முடிவுப்படி நடப்பது, சிந்தனைக்கு - ஆராய்ச்சிக்கு ஒவ்வாத நம்பிக்கைக் காரியங்களை ஏற்காதது மனிதன் ஒருவனுக்குத்தான் உண்டு. இதுவரை சிந்திக்காதிருந்த காரணத்தாலேயே மனிதன் தளர்ச்சியடையவில்லை. சிந்தனைப் பேரவை என்பது மனிதர்களுடைய ஸ்தாபனம்; மற்றவர்களை மனிதராக்கும் ஸ்தாபனமாகும்.

நம் நாட்டில் 50 கோடி மக்களிருக்கிறார்கள் என்றால் பெரும் பகுதி மக்கள் முன்னோர்கள்; பழமைப் பெரியவர்கள் சொன்னது, சாஸ்திரத்திலுள்ளது என்று எதையும் சிந்திக்காமல் ஏற்றுக் கொள்பவர்களாவார்கள். அவர்களெல்லாம் மனித உருவுள்ளவர்களேயொழிய, மனிதர்களாக மாட்டார்கள்.

மனிதனுக்கு சிந்தனை உரிமை உண்டு. மனிதனென்றால் சிந்திக்க வேண்டுமென்று முதலில் சொன்னவர் சாக்ரட்டீஸ் ஆவார். சாக்ரட்டீஸ் காலம் முதல் தான் மனிதன் சிந்திக்கத் துவங்கினான். மேல் நாடுகளில் இதுபோன்ற கழகங்கள் பல பெயர்களில் நிறைய இருக்கின்றன. ஒவ்வொன்றிலும் பல இலட்சக்கணக்கான மக்கள் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். அமெரிக்காவிலுள்ள சங்கங்களைத் தவிர மற்ற உலகத்திலுள்ள எல்லா சங்கங்களுக்கும் நான் விருந்தாளியாகச் சென்று வந்திருக்கின்றேன். இன்று உலகில் பகுதிக்கு மேற்பட்ட மக்கள் நாத்திகர்களாகச் சிந்தனையாளர்களாக இருக்கிறார்கள்.

ஆத்திகத்தைக் காப்பதற்கென்று ஆள்களும், ஸ்தாபனங்களும், நிறைய நிதியும் இருப்பதால் இன்னமும் ஆத்திகர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். நாத்திகத்திற்குள்ள பிரச்சாரமெல்லாம் உனக்கு அறிவு இருக்கிறது; சிந்தித்து ஏற்றுக்கொள் என்பதோடு சரி ஆத்திகத்தின் பிரச்சாரம் எதையும் சிந்திக்கக்கூடாது சொல்வதை ஏற்றுக்கொள் என்பதாகும். இதுவரை மனிதன் சிந்தனையற்றிருந்தான் பல அதிசய அற்புதங்கள் விஞ்ஞானத்தின் மூலம் ஆன பிறகு இப்போதுதான் சிந்திக்க வேண்டுமென்ற உணர்வு வந்துள்ளது.

நமது மக்கள் சிந்தனையற்று மிருகமாக இருந்த காரணத்தால்தான் 100க்கு 97 பேராக இருக்கிற மக்கள் சூத்திரர்களாக, பார்ப்பானுக்கு வைப்பாட்டி மக்களாக இருக்கிறார்கள். இந்த இழிநிலை மாறி உலகிலுள்ள மற்ற மக்களைப் போன்று இழிவற்று, உரிமை பெற்று, அறிவு பெற்று வாழவேண்டுமானால் நமது மக்கள் சிந்திக்கவேண்டும். தங்கள் அறிவிற்கு சரியென்று படுவதை ஏற்று அறிவிற்கும், சிந்தனைக்கும், ஆராய்ச்சிக்கும் பொருந்தாத கடவுள் - மதம் - சாஸ்திரம் - புராணம் ஆகியவைகளை விட்டொழிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

**- 'விடுதலை', 26.10.1970**

■


புத்தாண்டுச் செய்தி

1969 மறைந்து 1970 இன்று முதல் தோன்றுகிறது. இந்த 1970-ல் பல அதிசயக் காரியங்கள் தோன்றவேண்டும்.

முதலாவதாக ஜாதியும், ஜாதி ஆணவமும் மறைக்கப்பட்டாக வேண்டும்.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரை இன்றுள்ள பெருங்கேடு இந்த இரண்டு தன்மைக்கு தமிழர்களாகிய நாம் இடம் கொடுத்து வருவதுதான்.

சக அமைச்சர்கள் பற்றி அஜாய்முகர்ஜிக்கு கவர்னர் கடிதம்

கல்கத்தா, ஜன. 1—

மேற்கு வங்க கவர்னர் திரு. எஸ். எஸ். தவான் முதலமைச்சர் திரு. அஜாய்முகர்ஜிக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவரது மந்திரிசபையினர் தனிப்பட்ட முறையில் தற்காலிகமாக தங்கள் இலாகாக்களை ஒருவருக்கொருவர் மாற்றிக்கொள்ள உரிமையில்லையென்று தெரிவித்திருக்கிறார். இதற்கான அரசியல் சட்ட விதியையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்தகவலை நேற்று முதலமைச்சர் திரு. அஜாய் முகர்ஜி பத்திரிகையாளரிடம் வெளியிட்டார்.

பதிவு எண்: எம்: 4789 டெலிபோன்: 34898

தமிழ்நாடு தமிழருக்கே!

விடுதலை

"VIDUTHALAI" LEADING TAMIL DAILY

மலர் 32 ] சென்னை வியாழன் (1-1-70) வெளியீடு வெள்ளி (2-1-70)

சௌமிய ஆண்டு மார்கழி 17 : 4 பக்கங்கள் விலை 10 காசுகள் [ இதழ் 209

# 53

# தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களிடையே கட்சி மாறுபாடு இருக்கக்கூடாது

- **அரசு அனைத்து வசதியும் செய்யும், ஒன்றுபட்டு செயல்படுங்கள்**
- **கல்லூரி அடிக்கல் நாட்டுவிழாவில் தந்தை பெரியார் வேண்டுகோள்**

04.07.1971 ஞாயிறு காலை 10:30 மணி அளவில் நெல்லை மாவட்டம் செய்துங்கநல்லூர் (மேல்புரம்) தேவேந்திரகுல வேளாளர் கல்லூரி அடிக்கல் நாட்டு விழா திரு.ஆர்.எஸ்.ஆறுமுகம் முன்னாள் எம்.பி. அவர்கள் தலைமையில் சிறப்புடன் நடைபெற்றது.

திரு.எஸ்.ராஜகோபாலன் பி.ஏ.,பி.எல்., (செயலாளர், கல்விக்குழு) அவர்கள் விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்று வரவேற்புரை நிகழ்த்தினார்.

திருவாளர்கள்: சுடலை மணி நாடார் (செய்துங்க நல்லூர் ஊராட்சி மன்ற தலைவர்) - பாலச்சந்திர மோகன், தேவநாயகம், புலவர் சூசையப்பன், எம்.கே.சோமசுந்தரம் முன்னாள் எம்.எல்.ஏ., திருமதி செல்லம்மாள், அம்பிகாபதி (மதுரை மாவட்ட தேவேந்திரகுல வேளாளர் சங்க தலைவர் தேனி), முகமது சாலி (தி.முக. செயலர்), மாறன் (பம்பாய்), எஸ்.நட்சேத்திரம் (மாவட்ட தி.க. தலைவர்), டி.ஏ.தியாகராசன் (மாவட்ட தி.க. செயலர்), பேராசிரியர் ராஜமாணிக்கம் ஆகியோர் உரையாற்றினர்.

தந்தை பெரியாரவர்கள் தேவேந்திர குல வேளாளர் கல்லூரிக்கான அடிக்கல்லினை நாட்டுவித்து ஆற்றிய அறிவுரை:-

இக்கல்லூரி நல்லவண்ணம் அமைந்து இப்பிராந்திய மக்களுக்கு கல்வியளிக்க முன்வரும் என்று நம்புகின்றேன். நாமே கல்லூரி







சென்னை 27-7-71 விடுதலை வெளியூர் 28-7-71 3

# தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களிடையே கட்சி மாறுபாடு இருக்கக்கூடாது

## அரசு அனைத்து வசதியும் செய்யும்; ஒன்றுபட்டு செயல்படுங்கள்

### கல்லூரி அடிக்கல் நாட்டு விழாவில் தந்தை பெரியார் வேண்டுகோள்

நெல்லை, ஜூலை 27—

தாழ்த்தப்பட்ட மக்கள் ஒன்றுபட்டு நிற்கவேண்டும். இந்த அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எத்தனையோ நன்மைகளைச் செய்துள்ளது. மேலும் எல்லா வசதிகளையும் செய்து தரும். எனவே, தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்கள் அரசியல் மாறுபாடு காட்டக்கூடாது என்று தந்தை பெரியார் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

தந்தை பெரியார் அறிவுரை

முஸ்லீம் ஆக முயற்சி

சதவிகிதம் உயர்ந்தது

புத்தமதத்தில் சேர்ந்தார்

அம்பேத்கார் செய்த பணி

இலங்கை குடியுரிமை கோரியவர்களுக்கு இந்தியக் குடியுரிமை பெற ஆர்வம்

தூதரகத்தில் விசாரணைக் கடிதங்கள் குவிகின்றன

உலக வரலாற்றில் பகுத்தறிவு

(66)

நாடு கடந்தோடிய போப்புகள்

ரூ. 12 கோடி முதலீட்டில் தூத்துக்குடி சோடா காரம் தொழிற்சாலை

கூட்டுத் துறையில் அமையும்

அமைப்பது பெரிய கஷ்டம். அரசாங்கத்திடம் 5 லட்சம் கொடுத்தால் அவர்களே நடத்திக் கொள்வார்கள். நான் கூட ஒரு கல்லூரி வைக்க முற்பட்டேன். பின் அதிலுள்ள கஷ்டத்தை உணர்ந்து அரசாங்கத்திடம் 5 லட்சம் கொடுத்து அவர்களையே அமைக்கும்படியாக சொல்லி விட்டேன். தற்போது, அவர்களே அமைத்து நடத்தி வருகின்றார்கள். கல்லூரிக்கான ரூ.5 இலட்சத்தை எப்படியாவது வசூல் செய்து

அரசாங்கத்திடம் கொடுத்தால் அவர்கள் கல்லூரியினை ஏற்படுத்தி விடுவார்கள். அதற்காக அரசாங்கத்திடம் மேன்மைமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் நானும் கூடுமான உதவி செய்யத் தயாராக இருக்கின்றோம்.

நாம் இன்று நேற்றல்ல; 1000 கணக்கான ஆண்டுகளாக தாழ்ந்த நிலையில் - கடை நிலையில் இருக்கின்றோம். இந்த நிலைமாற வேண்டுமென்று எவருமே பாடுபடவில்லை. டாக்டர் அம்பேத்கர் ஒருவர்தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக மிகவும் வாதாடி அரசாங்கத்தில் சில உரிமைகள் பெற்றுத் தந்தார். அதன் காரணமாகத்தான் தாழ்த்தப்பட்ட மக்கள் உரிமை பெற்றனர்.

அம்பேத்கர் அவர்கள் மிகத் துணிவுள்ளவர் காந்தியையே மூளை இல்லாதவர் என்றார். சாஸ்திர சம்பிரதாயங்களையெல்லாம் அழிக்க வேண்டுமென்றார். லண்டனில் நடைபெற்ற வட்டமேஜை மாநாட்டில் காந்தி அவர்கள் இந்திய மக்களின் தலைவன் என்கின்ற சார்பில் பேசுகிறேன் என்று தனது பேச்சைத் துவக்கினார். உடனே அம்பேத்கர் அவர்கள் இடைமறித்து, “நீர் இந்துக்களின் தலைவரே தவிர, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நீர் தலைவரல்ல” என்று கண்டித்துக் கூறினார். அரசியல் சட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் விகிதாசாரத்திற்குரிய இடம் கிடைக்க ஏற்பாடு செய்தார்.

தாழ்த்தப்பட்ட மக்களின் கொடுமைகள் தீர நான் இங்கு தாழ்த்தப்பட்ட மக்கள் யாவரும் முஸ்லிம்கள் ஆகவேண்டுமென்று சொன்னேன். இதைக்கேட்டு அம்பேத்கர் அவர்களும் முஸ்லிம் ஆக முற்பட்டார். அப்போது நான் முஸ்லிம் ஆவதைப்பற்றி கவலை இல்லை ஆனால் நாம் ஒருவர் மட்டும் முஸ்லிம் ஆனால், அந்த மதத்திற்கு கட்டுப்படவேண்டியதாகிவிடும் நம்மோடு ஒரு இலட்சம் பேரையாவது முஸ்லிம்களாக்கினால்தான் நமது கொள்கைகளை நிலைநாட்டமுடியும் என்று சொல்லி அவர் முஸ்லிம் ஆவதைத் தடுத்தேன்.

பின் அவரே இந்து மதத்திலிருந்த கொடுமைகளைப் பார்த்து எனது முன்னிலையில் பர்மாவில் புத்த மதத்தில் சேர்ந்தார். என்னையும் சேரும்படி வற்புறுத்தினார். நான் அவரிடம் “நான் மட்டும் மாறிவிடுவதால் இந்து மதத்திலுள்ள கொடுமைகளை ஒழிக்கமுடியாது வேறு மதத்தில் சேர்ந்து கொண்டு இந்து மதத்திலிருக்கிற குறைகளை

எடுத்துச் சொன்னால் மக்கள் மதிக்க மாட்டார்கள். இந்து மதத்திலிருந்து கொண்டே அதில் உள்ள குறைகளை எடுத்துச் சொன்னால்தான் மக்கள் கொஞ்சமாவது சிந்திப்பார்கள்" என்று சொல்லி புத்தமதத்தில் சேர மறுத்து விட்டேன்.

நான் காங்கிரசில் தமிழ்நாடு செயலாளராக இருந்தவன். காங்கிரஸ் தீண்டாமை ஒழிப்பை மக்களை ஏமாற்றும் சாதனமாகக் கருதியதே தவிர தீண்டாமை ஒழிய வேண்டுமென்று உண்மையில் கருதவில்லை. தீண்டப்படாத மக்களுக்காக தனியாக கிணறு, பள்ளிக்கூடம் கோயில் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி அதற்காக பணமும் ஒதுக்கியது. நான் தான் அதனை எதிர்த்தேன்.

தீண்டப்படாத மக்களுக்கு தனி கிணறு, பள்ளிக்கூடம் கோயில் அமைப்பதானது இது பறையன் கிணறு, பறையன் பள்ளிக்கூடம், பறையன் கோயில் என்று மக்களிடம் பேதத்தை ஏற்படுத்த பயன்படுமே ஒழிய தீண்டாமை ஒழிய பயன் தராது என்று சொன்னேன். காங்கிரசின் எண்ணம் தீண்டாமை ஒழியக்கூடாது வளர வேண்டுமென்பதேயாகும்.

காங்கிரசைவிட்டு வெளியேறி மக்களின் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்காகப் போராடி 1927 முதல் வகுப்பு வாரி பிரதிநிதித்துவப்படி உத்தியோகங்கள் கிடைக்க ஏற்பாடு செய்தேன். இந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவம் 1946 வரை இருந்தது. சுதந்திரம் கிடைத்ததும் காங்கிரஸ் செய்த முதல் காரியம். வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை ஒழித்த இந்த அரசாங்கத்தின் மூலம் எல்லா சமூ கமுமே வளர்ச்சியடைந்துள்ளது

தாழ்த்தப்பட்ட சமுதாயம் மட்டுமல்லாமல் எல்லா சமுதாயத்திற்கும் பல நன்மைகளைச் செய்து வருகின்றது. இதுவரை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 100க்கு 16 விகிதம் இருந்தது. அதனை இன்றைய அரசு 18 ஆக உயர்த்தியதோடு பிற்பட்ட மக்களுக்கு 100க்கு 25 என்றிருந்ததை 31 ஆக ஆக்கியுள்ளார்கள். அமைச்சரவையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இரண்டு ஸ்தானங்கள் கொடுத்துள்ளார்கள்.

இனி தாழ்த்தப்பட்ட மக்களெல்லாம் ஒன்றுபட வேண்டும். கடவுள் – மத – சாஸ்திர நம்பிக்கைகளை விட்டுவிடவேண்டும். அப்போது தான் அவர்கள் தாழ்வு நீங்குமே ஒழிய கடவுளையும் மதத்தையும் சாஸ்திரத்தையும் நம்பிக்கொண்டு தாழ்வு ஒழிய வேண்டுமென்றால்



ஒழியவே ஒழியாது. நீங்களாவது தீண்டப்படாத மக்கள் நீங்கள் உங்கள் தகப்பனுக்கு பிறந்தவனாக இருக்கலாம். ஆனால் எங்கள் நிலை நாங்கள் பார்ப்பானுக்குத் தீண்டப்படாதவர்களாக இருப்பதோடு பார்ப்பானின் வைப்பாட்டி மக்களாக (சூத்திரர்களர்க) சாஸ்திரப்படி சட்டப்படி இருக்கிறோம். நாங்கள் செய்கிற தொண்டு உங்களுக்காக மட்டுமல்ல எங்களுக்காகவும் ஆகும். நமது சமுதாயத்திற்கு கட்சியே இருக்கக் கூடாது. அரசியலில் யார் ஆளுகிறார்களோ அவர்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும். அப்போது தான் நமது காரியங்களைச் செய்து கொள்ள முடியும் என்பதைத் தெளிவுபடுத்தி தாழ்த்தப்பட்ட மக்கள் யாவரும் ஒன்று படவேண்டும். அவர்களுக்குள் கட்சி மாறுபாடிருக்கக் கூடாது எனக் கேட்டுக் கொண்டார்.

**- 'விடுதலை', 27.7.1971**

■




# 54

# கம்யூனிஸ்ட்களால்கூட நிறைவேற்ற முடியாத சட்டத்தை தி.மு.க. அரசு நிறைவேற்றியது

- **வெளிநாட்டுக்காரர்களே ஆச்சரியப்படுகிறார்கள் தந்தை பெரியார் விளக்கம்**

15.1.1972 அன்று இரவு 7:00 மணி அளவில் கரூருக்கு அடுத்த ஆண்டாங்கோயிலுக்கு தந்தை பெரியார் அவர்கள் வருகை தந்தார்கள். கரூர் வட்டத்தில் திராவிடர் கழக கோட்டை என்று அழைக்கப்படும் ஆண்டாங்கோயில் மக்கள் கூடி நின்று தந்தை பெரியார் அவர்களை வரவேற்றார்கள்.

ஆண்டாங்கோயில் கீழ் பாகம் ஊராட்சி மன்றத்தின் கட்டிடத்திற்கு தந்தை பெரியார் அவர்கள் பெரியார் நகரில் கல் நாட்டு விழா நிகழ்த்தினார்கள்.

தந்தை பெரியார் அவர்கள் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது :

இந்த விழா எனது பிறந்த நாளை முன்னிட்டும், காலஞ் சென்ற டாக்டர் அம்பேத்கர் அறிஞர் அண்ணா ஆகியவர்கள் பிறந்த நாள் என்ற பெயராலும் நடைபெறுகின்றது. எங்கள் மூவருடைய உருவப் படமும் இங்கு திறந்துவைக்கப்பட்டு உள்ளன.

டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாளை மனிதன் என்கின்ற ஒவ்வொருவரும் அவசியம் கொண்டாடவேண்டும். அம்பேத்கர் செய்த காரியம் வேறு யாரும் செய்ய முடியாது. தாழ்த்தப்பட்ட மக்கள் எத்தனை சதவிகிதம் உண்டோ அத்தனை சதவிகிதம் உத்தியோகம் பதவி முதலியன சட்டப்படி கிடைக்க வகை செய்தார்.





27 | 72 விடுதலை வெளியீடு 28 | 72

களால்கூட நிறைவேற்றமுடியாத
தி. மு. க. அரசு நிறைவேற்றியது
...ர்களே ஆச்சரியப்படுகிறார்கள்

...பார் விளக்கம்

சென்னை, ஜன. 27-

தி. மு. கழக அரசு தமிழ்நாட்டில் ஏற்பட்ட பிறகு பெரிய கம்யூனிஸ்டுகளும் மேல்நாட்டினரும் ஆச்சரியப்படும் அளவுக்கு பல நல்ல காரியங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்று தந்தை பெரியார் எடுத்து விளக்கியுள்ளார். தி. மு. க. அரசு போல் சமுதாய சீர்திருத்த முன்னேற்ற சட்டங்களை எங்களால்கூட நிறைவேற்றமுடியவில்லையேஎன்று பெரிய பெரிய கம்யூனிஸ்டுகள் எல்லாம் ஒப்புக் கொள்கிறார்கள் என்று தந்தை சுட்டிக்காட்டினார்.

கரூர், கும்பகோணம் நிகழ்ச்சிகள் இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.

இதன் காரணமாக தாழ்த்தப்பட்ட சமுதாயம் ஒருவருடைய தயவு இல்லாமல் சகல துறைகளிலும் பதவி உத்தியோகம் கிடைக்கச் செய்தவர்.

காந்தியார் மேல்நாட்டில் தாம் இந்தியாவின் பிரதிநிதி என்று கூறினார். உடனே அம்பேத்கர் நீங்கள் இந்தியாவின் பிரதிநிதி அல்ல இந்துக்களுக்கு வேண்டுமானால் பிரதிநிதியாக இருக்கலாம் என்று கூறினார்.

மற்றும் ஓர் தடவை இந்தியாவின் பிரதிநிதி தாம் என்று கூறி ஆரம்பித்த உடனே நான் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் நீங்கள் இந்தியாவின் பிரதிநிதி அல்ல என்று கூறியும் சும்மா இந்தியாவின் பிரதிநிதி என்று கூற வெட்கமாய் இல்லையா என்று கேட்டார். கூட இருந்தவன் எல்லாம் வாபஸ் வாங்கவேண்டும் என்று கூப்பாடு போட்டார்கள். அம்பேத்கர் பயப்படவில்லை.

காந்தியார் தாம் சொன்னதை வாபஸ் வாங்க வேண்டுமே ஒழிய நான் வாபஸ் வாங்க மாட்டேன் என்று கூறியவர்.

கீதையை பைத்தியக்காரன் உளரல் என்று இந்த சென்னையிலேயே அவர் சொன்னார்.

அரசியல் சட்டத்தை நான் தான் எழுதினேன் என்று கூறுகின்றார்கள். உண்மை அதை கொளுத்த வேண்டுமானாலும் நான் முன்னணியில் இருப்பேன் என்று எடுத்துரைத்தார்.

சிறந்த ஆற்றல்மிக்க அறிவாளி தங்கள் இனமக்கள் இந்து மதத்தில் தாழ்ந்த நிலையில் இருப்பதைவிட புத்தமதத்தில் சேர்ந்து விடலாம் என்று எண்ணினார் அதன்படி பல லட்சம் மக்களையும் சேர்த்தார்.

அண்ணா அவர்களும் டாக்டர் அம்பேத்கர் போல அதிசயமான தொண்டு செய்தவர் ஆவார்.

அண்ணா அவர்கள் கொள்கை கடவுள் மதம், சாஸ்திரம் இல்லாத கொள்கையைக் கொண்டு கழகத் தொண்டற்றியவர்.

இந்தக் கொள்கையினைக் கொண்ட ஆட்சியையே ஏற்படுத்தியவர் அண்ணா .

இந்தக் கொள்கை வேறு எந்த நாட்டிலேயும் நடைபெறவே இல்லை. ரஷ்யாவில் நடைபெறவில்லையா என்று கேட்கலாம். ரஷ்யாவில் நடைபெறுகின்றது என்றால், அங்கு பலாத்காரத்தின் மூலம் அமலுக்கு வந்தது பணக்காரனை, பாதிரிகளை அரசர்களை கொன்றுக் கோயிலை இடித்துத்தான் பொது உடமைக் கொள்கையினை கொண்டுவந்தார்கள்.

அடுத்து எனது பிறந்த நாள் என்பது நீங்கள் என் மீது கொண்டு உள்ள அன்பின் காரணமாகவே எனது பிறந்த நாளையும் சேர்த்துக் கொண்டு உள்ளீர்கள். என்னுடைய கொள்கையும் அம்பேத்கர்

அண்ணா ஆகியவர்கள் கொள்கையும் ஒன்றாகவே இருக்கின்ற காரணத்தினால் என்னையும் அவர்களோடு சேர்த்து உள்ளீர்கள்.

இங்கு நமது இயக்கக் கொள்கைகள் உங்களுக்கு விளக்கியாக வேண்டும்.

எங்கள் கொள்கை கடவுள் மதம், சாஸ்திரம் முதலியவைகளை ஒழிக்க வேண்டும் என்பது. ஏன்? இவைகள்தான் நமது மடமைக்கும் இழிவுக்கும் காரணமாக இருக்கின்ற காரணத்தால் இவைகளை ஒழிக்க வேண்டும் என்கின்றோம் என்று எடுத்து கூறி தெளிவுபடுத்தினார்கள்.

**- 'விடுதலை', 27.1.1972**

■


தமிழ்நாடு தமிழருக்கே

விடுதலை

"விடுதலை" சந்தா விபரம்

ஆண்டு சந்தா ரூ. 48

6 மாதம் ரூ. 24

3 மாதம் ரூ. 12

55

# காந்தியை துரும்பாய் மதித்தவர்; 'வெட்கங்கெட்டவரே' என சாடியவர்

- ❖ 'கீதை'யை உளறல் என வர்ணித்தவர்
- ❖ டாக்டர் அம்பேத்கர் பற்றி தந்தை பெரியார் மறுநினைவு

2.4.1972 அன்று இரவு 7 மணி அளவில் திண்டிவனத்தில் காலஞ்சென்ற மேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 82ஆம் பிறந்த நாள் நினைவு விழாவானது மிக்க சீரும் சிறப்புடனும் நடைபெற்றது.

டாக்டர் அம்பேத்கர் அவர்கள் பிறந்த தினத்தை கொண்டாட இந்த விழாவாகும்.

டாக்டர் அம்பேத்கர் அவர்களை நேரில் பார்த்து கலந்து பேசியும், பாராட்டியும் இருக்கின்றேன்.

டாக்டர் அம்பேத்கர் அவர்கள் அதிசயமான மனிதர் செயற்கரிய செயல் செய்தவர் சிறந்த வீரர் சமுதாயக் குறைபாடுகளை யாருக்கும் பயப்படாமல் சுட்டிக்காட்டிக் கண்டித்தவர்.

அதுபோலவே அரசியல் துறையிலும் சிறந்த சாதனைகளைப் புரிந்தவர் - அவரிடம் இருந்த பெரிய குணம் என்னவென்றால் பலரும் பாராட்டும் காந்தியாரை துரும்பாக நினைத்தவர் - வெட்கம் இல்லையா என்று கேட்டவர். இந்தியாவைப் பற்றி பேச்சு எடுத்தபோது காந்தியார் 50 கோடி மக்களின் சார்பாகப் பேசுகின்றேன் என்றார்.

உடனே அம்பேத்கர் எழுந்து, எங்கள் சமுதாயத்திற்கு நீர் தலைவன் அல்ல. வேண்டுமானால் இந்துக்களின் தலைவர் என்று சொல்லிக் கொள்ளுங்கள் என்று கூறியவர்.



சென்னை 22 5 72 விடுதலை வெளியீடு 23 5 72

# காந்தியை துரும்பாய் மதித்தவர்; 'வெட்கங்கெட்டவரே' என சாடியவர்

## 'கீதை'யை உளறல் என வர்ணித்தவர்

டாக்டர் அம்பேத்கார்பற்றி

தந்தை பெரியார் மறுநினைவு

காந்தியும் துரும்பு

பார்த்தேன் - பாராட்டினேன்

சிந்தனை விருந்துக்கும் செயல் திட்டத்திற்கும்

# இருபெரும் சிறப்புமிக்க மாநாடுகள்

ஃ சென்னை "பெரியார் திடலில்" ஃ

27-5-72 சனி காலை 10 மணி

## மாநில பகுத்தறிவாளர் மாநாடு

துவக்குபவர்: மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர்

கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்

தலைவர்: மாண்புமிகு டாக்டர்

நாவலர் இரா. நெடுஞ்செழியன்

பகுத்தறிவாளர் படத்திறப்புக்கள்

அன்பில் தர்மலிங்கம்

கேரளத்தின் சிறந்த பகுத்தறிவாளரும், கேரள ஆட்சி மொழி(சட்ட)க்குழுவின் தலைவரும் வழக்கறிஞருமான திரு. பிரபா அவர்களும் திருவனந்தபுரம் பகுத்தறிவாளர் கழகத்தலைவர் திரு. பவனார் அவர்களும் "ஆந்திர ஜோதி" நாளிதழ் ஆசிரியர் திரு நார்லா, ஆந்திரா விசாகப்பட்டினம் இந்திய நாத்திகர் கழகத் தலைவர் திரு ஜெயகோபால் மற்றும் வெளி மாநிலத்தவர் பலரும் கலந்து கொள்ளுகின்றனர்

திருவாளர்கள்: கோவை ஜி.டி. நாயுடு, மதுரை மேயர் திரு முத்து எம்.எல்.சி., உலகநம்பி எம் பி, சட்டமன்ற உறுப்பினர்கள் மாயூரம் கிட்டப்பா, உத்தரமேரூர் கே எம் ராஜகோபால் கோவை செழியன்.

பகுத்தறிவுப் பாட்டரங்கம்: பிற்பகல் 2-30 முதல் 4 வரை

28-5-72 ஞாயிறு காலை 9 மணி

## சமூக இழிவு ஒழிப்பு மாநாடு

துவக்குபவர்: மாண்புமிகு மேலவைத் தலைவர்

சி. பி. சிற்றரசு அவர்கள்

தலைவர்: வணக்கத்துக்குரிய வைக்கம் வீரர்

தந்தை பெரியார் அவர்கள்

மற்றும் மாண்புமிகு அமைச்சர்கள்

டாக்டர் நாவலர்,என்.வி நடராசன், சத்திய வாணிமுத்து, எஸ். ராமச்சந்திரன், எஸ். மாதவன் மற்றும் குடிநீர் வாரியத் தலைவர் செ. கந்தப்பன், திருவாரூர் கே. தங்கராசு, வே. ஆனைமுத்து செல்வேந்திரன், எஸ் எஸ் பாட்சா நெல்லை மாவட்ட தி.க. தலைவர் நட்சேத்திரம், கிழக்கு இராமநாதபுரம் மாவட்ட திக தலைவர் சிவகங்கை சண்முகநாதன் பி.ஏ.,பி எல், மேற்கு இராமநாதபுரம் திக தலைவர் முத்துமுருகன், தென்.மா.திக அமைப்பாளர் மதுரை ஓவி கே நீர் காத்தலிங்கம், மதுரை மாவட்ட திக தலைவர் வாடிப்பட்டி சுப்பையா, திருச்சி மாவட்ட திக தலைவர் டி டி வீரப்பா, கோவை மாவட்ட திக தலைவர் கஸ்தூரி பி ஏ,பி எல், தெ ஆ மாவட்ட திக தலைவர் சிதம்பரம் கு கிருஷ்ணசாமி, தஞ்சை மாவட்ட திக தலைவர் தோலி ஆர் சுப்ரமணியம், வடாற்காடு மாவட்ட திக தலைவர் ஆப்பூர் பெருமாள், தர்மபுரி மாவட்ட திக தலைவர் எம் என் நஞ்சையா, செங்கற்பட்டு மாவட்ட திக தலைவர் சி பி இராசமாணிக்கம் மற்றும் கழக முக்கியஸ்தர்கள்.

27-ந் தேதி இரவு காரைக்குடி ஆர். சுப்ரமணியம் குழுவினரது பெரியார் நாடக மன்றம் அளிக்கும்

"தீ பரவட்டும் !"

பகுத்தறிவுக் கொள்கை விளக்க நாடகம் !

தந்தை பெரியார்

வட்டமேஜை மாநாட்டில் பேசிக்கொண்டு வரும்போது மீண்டும் நான் இந்தியர்களின் சார்பாக 50 கோடி மக்கள் சார்பாகப் பேசுகின்றேன் என்றார்.

டாக்டர் அம்பேத்கர் அவர்கள் மீண்டும் குறுக்கிட்டு நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். நீர் எங்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதி அல்ல என்று மீண்டும் மீண்டும் சேர்த்துப் பேசுகின்றீரே

வெட்கம் இல்லையா என்று கேட்டார்! அதன் காரணமாக பலர் அவரை கண்டித்தார்கள் என்றாலும் பயப்படவில்லை. இந்த சென்னையிலேயே வந்து தைரியமாகச் சொன்னார். கீதை என்பது, கள் குடித்து பைத்தியக்காரன் உளறுகின்றது என்று கூறினார்.

இங்கு உள்ள பார்ப்பான் எல்லாம் கூப்பாடு போட்டார்கள். எவரும் அம்பேத்கர் சொன்னால் பரவாய் இல்லை மந்திரியாக இருந்து கொண்டு சொல்வதா என்றார்கள்.

அதற்கும் அம்பேத்கர் "அம்பேத்கர் மந்திரியானதாலே அம்பேத்காரின் தனிப்பட்ட கொள்கை மாறாது. என்னுடைய கொள்கை கீதை என்பது பைத்தியகாரர்களின் உளறல் என்பதுதான்" என்று கூறினார்.

இங்கு நாங்கள் என்ன காரியம் செய்கின்றோமோ சொல்லுகின்றோமோ அவைகளை எல்லாம் அம்பேத்கர் அங்கு செய்திருக்கின்றார் சொல்லி இருக்கின்றார்.

அரசியல் சட்டத்தில் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எண்ணிக்கைப்படி கிடைக்கச் செய்தவர் சீர்திருத்தக்காரர் மட்டும் அல்ல. ரொம்ப துணிவானவர். அவரை பாராட்டுவது மட்டும் போதாது. அவருடைய கொள்கையினை நாம் மேற்கொள்ளவேண்டும்.

அவர் ஒரு லட்சிய புருஷர். ரொம்பப் படித்தவர்களில் முதன்மையானவர். உலகில் உள்ள முக்கியமான புத்தகங்களை எல்லாம் சேகரித்து வைத்து இருந்தார். புத்த தர்மத்தில் ஆராய்ச்சி செய்து பெரிய பெரிய புத்தகங்களை எழுதியவர்.

அவரால் தாழ்த்தப்பட்ட சமுதாயம் ரொம்ப முன்னேறியுள்ளது. பொதுவாக மனித சமுதாயத்திற்கு நன்மை செய்தவர். அவர் இறப்பு அந்தச் சமுதாயத்துக்கும் நாட்டுக்கும் பேரிழப்பாகும்.

இப்படி அம்பேத்கர் விழாவினை நீங்கள் கொண்டாடினால் மட்டும் போதாது. அவரது கொள்கையினைப் பின்பற்றவேண்டும்.

எனது லட்சியமே ஜாதியை ஒழிப்பதுதான். எனது இயக்கமும் அதுதான் எனது தொண்டும் அதுதான்.

**- 'விடுதலை', 22.5.1972**

■




# 56

# தாழ்த்தப்பட்டோருக்கான வீடுகள் ஊரின் நடுவே அமைத்திட வேண்டும்

- **ஒதுக்குப்புறமாக காலனி கட்டுவதை அவர்கள் ஏற்கக்கூடாது**
- **தந்தை பெரியார் உரிமை முழக்கம்**

23.6.1972 அன்று இரவு 7 மணி அளவில் நொய்யல் உயர் நிலைப்பள்ளி மைதானத்தில் டாக்டர் அம்பேத்கர் பிறந்த தின விழாவும், தாழ்த்தப்பட்டோர் மாணவர் நல முன்னேற்றக் கழக துவக்க விழாவும் மிக்க சீரும் சிறப்புடனும் நடைபெற்றது.

இறுதியாக தந்தை பெரியார் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

டாக்டர் அம்பேத்கர் பிறந்த தின விழாவில் டாக்டர் அம்பேத்கர் அவர்களை நாம் பாராட்டுவது மட்டும் போதாது; அவரின் தொண்டினை பாராட்ட வேண்டும் அவர் கொள்கையினை பின்பற்றவேண்டும்.

டாக்டர் அம்பேத்கர் பேரறிஞர் செயற்கு அரிய செய்தவர் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அவர் ஆற்றிய தொண்டு யாரும் செய்ய முடியாத தொண்டு ஆகும்.

தாழ்த்தப்பட்ட மக்களுடைய எண்ணிக்கை எத்தனையோ அத்தனை விகிதத்தில் கல்வி, உத்தியோகப் பதவிகளில் பெற்றுத் தந்தவர் ஆவார்.

உண்மையை உண்மையாக எடுத்துச் சொல்லுவதில் அவருக்கு ஈடு யாரும் இல்லை.

சிறந்த படிப்பாளி தமது மனதில் பட்ட கருத்துகளை துணிந்து கூறி வந்தவர் எதிர்ப்புக்காக தமது கொள்கையில் இருந்து பின் வாங்காதவர்.

சென்னை 3 7 72 6 விடுதலை வெளியூர் 4 7 72 3

# தாழ்த்தப்பட்டோருக்கான வீடுகள் ஊரின் நடுவே அமைத்திட வேண்டும்

## ஒதுக்குப்புறமாக காலனி கட்டுவதை அவர்கள் ஏற்கக்கூடாது

### தந்தை பெரியார் உரிமை முழக்கம்

நொய்யல், ஜூலை 3-

தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்கள் குடிசை வீட்டில் குடியிருந்தாலும் ஊரின் நடுவே இருக்க வேண்டும். அதுவே பெரிது. ஊருக்கு வெளியே கட்டித்தரும் வீடுகளை ஏற்கக்கூடாது என்று தந்தை பெரியார் அவர்கள் உரிமை முழக்கம் செய்திருக்கிறார்.

28-6-72 அன்று இரவு 7-மணி அளவில் நொய்யல் உயர்நிலைப்பள்ளி மைதானத்தில் டாக்டர் அம்பேத்கார் பிறந்தநாள் விழாவும், தாழ்த்தப்பட்டோர் மாணவர் நல முன்னேற்றக் கழக துவக்க விழாவும் மிக்க சிறப்புடனும் நடைபெற்றது.

...ருப்பு என்ன என்றால் "அரிஜன்" என்ற பெயரை நீங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடாது காந்தி வைத்தபெயர் இது "அரிஜனம்" என்றால் கடவுள் சாதி விஷ்ணுவின் ஜனங்கள் என்று பெயர் வைத்தார்.



கேட்டால் என்ன பயம்?

#### அம்பேத்கர் சேவையின் சிறப்பு

#### தந்தை பெரியார் அறிவுரை

#### ஒடுக்கக் காரியமாற்றுபவர்கள்

#### தாழ்ந்தவர்களா

#### கொள்கையிலிருந்து பின் வாங்காதவர்

#### காரணம் யார் கடவுள் தானே

#### கடவுள் முன்னேற்றுவாரா?

#### பார்ப்பனரல்லாதார் எப்படி நடப்பது

#### ஊருக்கு வெளியே புதிய சேரியா?

#### வீடுகளை ஏற்கக்கூடாது

#### கேரள-ஆந்திரநிலை சாட்சியா?

#### தீண்டாமைத் தொல்லை

## மத ஸ்தாபனங்களில் அரசு தலையிடகூடாதாம்

எதிர்ப்பியக்கம் நடத்த காமகோடிபீடம் தூபம்

#### மைசூருப் பார்க்கவாம்

## வட்டமடிக்கும் நகர பஸ்

## சிறுசேமிப்புப் பணியில் தமிழகம் பின்தங்கி விட்டதா?

முதல்வர் கலைஞர் பதில்

## மேட்டூரில் 80 அடி நீர்

#### எம்.எல்.ஏக்களுக்குப் பயிற்சி

## சஞ்சீவய்யா மனைவி எம்.எல்.சி.ஆனார்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

#### இலக்கு என்ன?

காஞ்சி பெரியவாளின் 'கல்கி' முகாரி

—சங்க மித்ரா—

#### காஞ்சிபுரம் "சிட்டர்ன்ட்"

#### 100 மில்லி போடவில்லையா?

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எண்ணிக்கைக்குத் தகுந்தாற் போல சலுகைகள் கிடைத்தது. அவரின் தொண்டு காரணமாக என்பதை மனதில் கொள்ளவேண்டும்.

இங்கு "அரிஜன" நல மாணவர் முன்னேற்றக் கழகம் என்று துவங்கியுள்ளார்கள்.



அதில் எனக்கு ஒரு அதிருப்தி என்ன என்றால் "அரிஜனம்" என்ற பெயரை நீங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடாது. காந்தி வைத்த பெயர் இது. "அரிஜனம்" என்றால் கடவுள் ஜாதி விஷ்ணுவின் ஜனங்கள் என்று பெயர் வைத்தார்.

அதற்கு முன் உங்களுக்கு சங்கரஜாதி என்று பெயர் இருந்தது. அது சிவனுக்கு சம்பந்தம் உள்ளதாக இருப்பதால் காந்தி விஷ்ணுவுக்கு சம்பந்தம் இருக்கவேண்டும் என்று "அரிஜனங்கள்" என்று பெயர் வைத்தார்,

நாங்கள் தான் கண்டித்து எழுதினோம் நீங்கள் தாழ்ந்தவர்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் உங்களை தாழ்த்தியது இந்த விஷ்ணு, சிவன் முதலிய கடவுள்கள் தான். எனவே இந்த பெயரை ஏற்கக்கூடாது என்று எழுதினேன்.

இதனை ஓர் சமுதாய முன்னேற்ற ஸ்தாபனமாக வைத்து பாடுபாட வேண்டும்.

இன்றைக்கு சமுதாய முன்னேற்றத்துக்கு பாடுபடுகின்றேன் என்று பலர் பல சங்கங்கள் வைத்து உள்ளார்கள். அதில் ஈடுபட்டு உள்ளவர்கள் தாங்கள் தாங்கள் முன்னேற பார்க்கின்றார்களே ஒழிய சமுதாய முன்னேற்றத்தில் அக்கரை அற்றவர்களாகவே இருக்கின்றார்கள்.

காரணம் அரசியலில் ஈடுபட்டவர்களாக இருக்கின்றதினால் ஓட்டுக்காக பதவிக்காக காரியம் ஆற்றுகின்றவர்களாக இருக்கின்றார்கள்.

எனவே நீங்கள் அரிஜன மாணவர் நல முன்னேற்றக் கழகம் என்பதை விட்டு விட்டு தாழ்த்தப்பட்டோர் மாணவர் நலமுன்னேற்றக் கழகம் என்று வைத்துக் கொள்ளவேண்டும் இந்த பேர்கூட நான் முயற்சி பண்ணி வந்தது;

அதற்கு முன்பு பின்தங்கிய வகுப்பார், தாழ்ந்த வகுப்பார் என்றுதான் இருந்தது. நான் தான் கூறினேன் எழுதினேன், எப்படி பின்தங்கிய வகுப்பார் என்பவர்களை பிற்படுத்தப்பட்டோர் என்று கூறப்படுகின்றதோ, அதுபோல தாழ்ந்த வகுப்பார்களை 'தாழ்த்தப்பட்டோர்' என்று அழைக்க வேண்டும் என்று நீங்களாக தாழ்ந்தவர்கள் அல்லவே மேல்ஜாதிக்காரர்களால் தாழ்த்தப்பட்டவர்கள் தானே, ஆகவே தாழ்த்தப்பட்டோர் என்றே நீங்கள் போடவேண்டுமே ஒழிய 'அரிசனங்கள்' என்பதை ஏற்றுக் கொள்ளக் கூடாது.

உங்களை தாழ்த்தப்பட்டவர்களாக இழிமக்களாக ஆக்கியது கடவுள் காரணமாகத்தானே நாங்கள் கடவுளின் ஜனங்கள் என்பதை ஒத்துக் கொண்டு நான் ஏன் இழிமகன், தாழ்த்தப்பட்ட மகள் என்று கேட்டால் என்ன நியாயம்?

இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதாகக் கூறிக் கொண்டு அரசாங்கம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டி தருகின்றேன் என்று கூறி ஊருக்கு வெளியே, ஒதுக்குப் புறத்தில் வீடுகள் கட்டிக் கொடுக்கின்றார்கள்.

முன்பு ஊருக்கு வெளியே சேரியில் குடி இருக்கின்றதற்கும் இதற்கும் என்ன வித்தியாசம் தாழ்த்கப்பட்ட மக்களை புதிய சேரியில் தனியாக குடி ஏற்றுவதாகத் தானே ஆகின்றது.

அரசாங்கம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கவேண்டுமானால் ஊருக்கு நடுவில் கட்டிக் கொடுக்க வேண்டும் மற்ற மக்களோடு கலந்து வாழச் செய்யவேண்டும்.

தாழ்த்தப்பட்ட மக்களாகிய நீங்கள் குடிசை வீட்டில் குடி இருந்தாலும் ஊருக்கு நடுவில் இருப்பதையே பெரிதாகக் கருத வேண்டுமே ஒழிய ஊருக்கு வெளியே கட்டிக்கொடுக்கக்கூடிய வீட்டினை ஏற்றுக் கொள்ளக்கூடாது.

காரணம் இந்தமுறை மேலும் உங்களை ஒதுக்கி வைக்கத்தானே உதவுகின்றது.

தோழர்களே இன்றைக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தமிழகத்தில் கூட தீண்டாமை, தொல்லைகள் இன்று முற்றிலும் இல்லை என்று கூற முடியாது.

தொல்லைகள் கொடுமைகள் நடந்துகொண்டுதான் வருகின்றது.

பார்ப்பான் மட்டும் அல்லவே பார்ப்பனர் அல்லாத மக்களும்கூட முட்டாள் தனமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சில இடங்களில் கொடுமை இழைக்கின்றார்கள்.

முட்டாள்தனமாக இப்படிச் செய்கின்றார்கள். பார்ப்பான் அவனை சூத்திரன் என்றால் நான் எப்படி சூத்திரன் என்று கேட்கின்றவன்; தாழ்த்தப்பட்ட மக்களை மட்டும் எப்படி தாழ்ந்தவர்களாக இருக்க



வேண்டும் என்று கூறமுடியும் ? தாழ்த்தப்பட்ட மக்கள் படித்துவிட்டு வெள்ளையும் சள்ளையுமாக வெளியே போவதைப் பார்த்து ஆத்திரப்படுவது முட்டாள் தனம் ஆகும்.

தாழ்த்தப்பட்ட மக்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

உங்களுக்கு கடவுள் நம்பிக்கையோ மத நம்பிக்கையோ இருக்கக் கூடாது. உங்களை இந்த தாழ்ந்த நிலைக்கு ஆக்கியது இந்துக் கடவுளும், மதமும்தான் என்பதை உணர வேண்டும்.

நீங்கள் உங்கள் அறிவையே பிரதானமாக நம்ப வேண்டும் உங்களை ஈடேற்றுவது உங்கள் அறிவே தவிர கடவுளும் மதமும் அல்ல.

உங்கள் முன்னேற்றத்திற்காக அரசாங்கம் பல நல்ல காரியங்களைச் செய்து வருகிறது. இவைகளை முழுமையும் பயன்படுத்திக் கொண்டு முன்னுக்கு வரவேண்டும். இந்த அரசாங்கம் தமிழர்கள் அரசாங்கமானபடியால் இதன் ஆட்சிக்காலத்திலேயே நீங்கள் வளர்ச்சி அடைந்தால்தான் உண்டு. மற்றவர் ஆட்சியில் இந்த அளவு உங்களுக்குச் சலுகை கிடைக்காது.

மேல்ஜாதி என்று கருதிக்கொண்டு இருக்கின்ற பார்ப்பனர் அல்லாத மக்களுக்கும் கூறுவேன். நீங்களும் தாழ்த்தப்பட்ட மக்களையும் மனிதர்கள் நமது இனத்தைச் சார்ந்தவர்கள் என்று கருதவேண்டும் அவர்களிடம் அன்பாக இருக்க வேண்டும் அவர்கள் முன்னேற உதவி செய்ய வேண்டும்,

அப்போது தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இருக்கின்ற ஜாதி இழிவு மட்டும் அல்ல உங்களுக்கும் இருக்கின்ற ஜாதி இழிவும் ஒழியும் ஜாதிகள் அற்ற சமுதாயம் ஏற்படவும் வழிபிறக்கும் என்று எடுத்துரைத்தார்கள்.

**– ‘விடுதலை’, 3.7.1972**

■


பதிவு எண்: 4789 டெலிஃபோன்: 34898

தமிழ்நாடு தமிழருக்கே

விடுதலை

VIDUTHALAI LEADING TAMIL DAILY

மலர் 35) சென்னை திங்கள் (1—1—73) வெளியூர் செவ்வாய் (2—1—73)

பரிதாபி ஆண்டு மார்கழி 18 4 பக்கங்கள் விலை 12 காசுகள் (இதழ் 208)

நாளை இதழில் - -

"மாணவர்கள் காலித்தனத் தனத்திற்கு காரணம் கல்வித் திட்டமே" என்ற தலைப்பில் தந்தை பெரியார் அவர்கள் எழுதும் கருத்துக் கருவூலமான தலையங்கம் நாளை இதழில் வெளிவருகிறது.

தந்தை பெரியா
புத்தாண்டு செய்

சென்னை, ஜன.

1972-ஆம் ஆண்டு முடிந்து, 1973-ம் ஆ
இன்று தொடங்குகிறது. தமிழினத் தலைவர் தந்
பெரியார் அவர்கள் விடுத்துள்ள புத்தாண்டு செ
வருமாறு:-

"1972-ல், மக்களுக்கு எவ்வித குறையும் இ
மல் உணவு, கல்வி, வாழ்க்கை வசதி ஆகியவ
நம்முடைய தமிழக அரசு செய்து கொடுத்தது, மக்
மன நிறைவோடு வாழ்கிறார்கள்,

ஆனால், நம் அரசின் மீது பொறாமை கொ

# 57

# டாக்டர் அம்பேத்கரே வெளியிட்ட உண்மை

- **இன்றைக்கு உள்ள அரசியல் சட்டமானது பார்ப்பனர்களின் பாதுகாப்புச் சட்டமே**
- **கரூர் நகரசபை விழாவில் தந்தை பெரியார் விளக்கம்**

டாக்டர் அம்பேத்கருக்கு இருந்த துணிவும் செயலாற்றும் திறமையும் யாருக்கும் கிடையாது. அவருக்கிருந்த ஆராய்ச்சி அறிவும் யாருக்கும் கிடையாது என்று டாக்டர் அம்பேத்கருடைய திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்துப் பேசுகையில் தந்தை பெரியார் கூறினார்.

5.6.1973 அன்று மாலை 6 மணியளவில் தந்தை பெரியார் அவர்களின் பொதுத் தொண்டினைப் பாராட்டி கரூர் நகர சபை சார்பாக வரவேற்பு இதழ் வாசித்து அளிக்கப்பட்டது.

நகரமன்றத் தலைவர் ஆர் கருப்பண்ணன் அவர்கள் தந்தை பெரியார் அவர்களை வரவேற்று பேசி வரவேற்பு இதழ் வாசித்து அளித்தார்.

அடுத்து தந்தை பெரியார் அவர்கள் காலஞ் சென்ற பேரறிஞர் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து உரை நிகழ்த்தினார்கள்.

இன்றைய தினம் கரூர் நகரசபையில் இணையற்ற சீர்திருத்த மாமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படத்தை திறந்து வைக்கப்பணித்துள்ளீர்கள். இந்த நகரசபையில் இதற்கு முன்பும் 2, 3 தடவை வரவேற்புப் பெற்று உள்ளேன். இன்றைக்கும் வரவேற்பு அளித்துள்ளீர்கள். இதற்கு எனது நன்றியை தெரிவித்துக்



சென்னை 14-6-73 விடுதலை வெளியூர்

# டாக்டர் அம்பேத்காரே வெளியிட்ட உண்மை

# இன்றைக்கு உள்ள அரசியல் சட்டமானது பார்ப்பனர்களின் பாதுகாப்புச் சட்டமே

## கரூர் நகரசபை விழாவில் தந்தை பெரியார் விளக்கம்

கரூர், ஜூன் 14- டாக்டர் அம்பேத்காருக்கு இருந்த துணிவும் செயலாற்றும் திறமையும் யாருக்கும் கிடையாது. அவருக்கிருந்த ஆராய்ச்சி அறிவும் யாருக்கும் கிடையாது என்று டாக்டர் அம்பேத்காருடைய திருஉருவப் படத்தினைத் திறந்து வைத்துப் பேசுகையில் தந்தை பெரியார் கூறினார்.

5—6—73 அன்று மாலை 6 மணியளவில் தந்தை பெரியார் அவர்களின் பொதுத் தொண்டினைப் பாராட்டி கரூர் நகரசபை சார்பாக வரவேற்பு இதழ் வாசித்து அளிக்கப்பட்டது.

நகரமன்றத் தலைவர் ஆர் கருப்பண்ணன் அவர்கள் தந்தை பெரியார் அவர்களை வரவேற்று பேசி வரவேற்பு இதழ் வாசித்து அளித்தார்.

அடுத்து தந்தை பெரியார் அவர்கள் காலஞ்சென்ற பேரறிஞர் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் திருஉருவப்படத்தைத் திறந்து வைத்து உரை நிகழ்த்தினார்கள்.

**தந்தை பெரியார்**

இன்றைய தினம் கரூர் நகரசபையில் இணையற்ற சீர்திருத்த மாமேதை டாக்டர் அம்பேத்கார் அவர்களின் திருஉருவப் படத்தை திறந்து வைக்கப் பணித்துள்ளீர்கள். இந்த நகரசபையில் இதற்கு முன்பும் 2, 3 தடவை வரவேற்புப் பெற்று உள்ளேன். இன்றைக்கும் வரவேற்பு அளித்துள்ளீர்கள். இதற்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன் உங்கள் வரவேற்பு, புகழ் உரைகளுக்கு அருகதை உடையவன் அல்ல என்றாலும் உங்கள் அன்புக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். சமுதாய அமைப்பிலே மனிதர்களுக்கு பொதுத் தொண்டு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டதாலும் அவர் அவர் பெண்டு பிள்ளை வாழ்க்கை இதுகளிலேயே வாழ்வுஇணைக்கப்பட்டு விட்டதாலும் பொதுத்தொண்டு செய்கின்றவர்கள் சுருங்கிவிட்டர்கள். உண்மையான



பொதுத்தொண்டுக்கு ஆளே இல்லாமல் போய் விட்டது.

**சமுதாயப் பிராணி**

மனிதன் என்றாலே பொதுத்தொண்டுக்கு அருகதை உடையவன் என்பதும் சமுதாயப் பிராணி என்பதும்தான் உண்மை. என்றாலும் அவனை பொதுத்தொண்டுக்கு லாயக்கு அற்றவனாக சுற்றுச் சார்பு ஏற்படுத்தி விடுகின்றது எப்படி 2000, 3000 ஆண்டுகளுக்கு முன்பு சாதிப் பிரிவுகளை ஏற்படுத்தி அதனை நசித்துவிடாமல் பாதுகாத்துவந்தார்களோ அதுபோல ஆணுக்கும் பெண்ணுக்கும் சேர்ந்து வாழவேண்டும் குட்டி போடவேண்டும் அதுகளை பாதுகாக்கவேண்டும் அதுதான் வாழ்க்கை என்று ஆக்கிவிட்டார்கள்.

மனிதன் இன்னும் 50 ஆண்டுகளில் 150 ஆண்டுகள் வாழப்போகிறவர்கள் ஆவார்கள். இப்படிப்பட்ட மனிதசமுதாயத்திற்கு தொண்டு செய்ய வகையற்றவர்களாக நமது மக்கள் இருக்கின்றார்கள்.

**குடும்பப்பிணைப்பு**

இப்படிப்பட்ட சமுதாயத்தில் யாராவது இப்படி பொதுத்தொண்டு செய்ய முன்வந்தால் அதிசயமாக உங்களுக்குத் தோன்றுகின்றது.

பொதுத்தொண்டுகாரர்களுக்கும்பெண்டு,பிள்ளை, குடும்பபாரம் ஏற்பட்டு விட்டால் அவர்களில்யோக்கியமாகவும் முழுமையாகவும், உண்மையாகவும் பொதுத் தொண்டு செய்ய முடியாது. இப்படிப்பட்ட மக்களுக்கு கடவுள், மதம் பற்றிய பற்று இருந்து விடுமானால் சுத்த சுத்தமாக பொதுத்தொண்டு செய்ய அவனுக்கு வாய்ப்பே இருக்காது.

**துணிவு தேவை**

நான் சமுதாயத் தொண்டு செய்கின்றேன். சாதி ஒழிக்க பாடுபடுகின்றேன் என்றால் இது என்ன அதிசயமானதும், அசாத்தியமானதும் ஆன காரியம் ஆகும்? சொந்த தொல்லையை குறைத்துக் கொண்டால் எல்லாராலும் முடியும், துணிவுதான் வேண்டும்.

நாட்டில் அரசியல்கட்சிகள் ஒழுக்கம், நாணயம் ஏற்பட வகை இல்லாமல் மக்கள் சமுதாயத்தைச் செய்து விட்டார்கள்.

எனது தொண்டு நான் அறிவாளி டாக்டர் அம்பேத்கார் அவர்களின் திருஉருவப்படத்தைத் திறந்து வைக்கும் பெருமைக்கு உரிய பணியை அளித்து உள்ளார்கள்.

இந்தியா முழுவதிலும் அம்பேத்கார் போல படித்தவர் அறிவாளி, துணிவுள்ளவர்சாதிக்கமுடியாத காரியத்தைச் சாதித்தவர் அம்பேத்கார் தவிர வேறு யாருமே இல்லை என்று கூறவேண்டும்.

சமுதாய முன்னேற்றத்திற்கு அவர் முயற்சி எடுத்துக்கொண்டுஆற்றிய பணியும், சாதனையும் யாரும் செய்யாத சாதனையாகும்.

அவர் சாதி ஒழிப்புக்காக வடநாட்டில் உண்மையாகப் பாடுபட்டவர்.

**காந்தியைக் கண்டித்தவர்**

அம்பேத்கார் காந்தியையே கடுமையாகக்கண்டித்தவர் ஆவார் ஒரு தடவை சீமையில் நடந்த மாநாட்டில் நான் இந்துக்களின் பிரதிநிதி என்று ஆரம்பித்தார். உடனே அம்பேத்கார் நீங்கள் இந்துக்களுக்கு பிரதிநிதியே தவிர எங்களுக்குப் பிரதிநிதி அல்ல என்று கண்டித்தார்.

காந்தியார் மேலும் பேசிக்கொண்டு வந்தபோது தாம் இந்துக்களின் பிரதிநிதி என்று மீண்டும் ஆரம்பித்தார். உடனே அம்பேத்கார் நீங்கள் இந்துக்களின் பிரதிநிதியே ஒழிய தாழ்த்தப்பட்டவர்கள் பிரதிநிதி அல்ல என்று பலதடவை கூறியும்நீங்கள் நான்தான் தாழ்த்தப்பட்டோர் பிரதிநிதிஎன்றுகூறுவது என்னநியாயம் என்று கேட்டார்.

**பைத்தியக்காரரின் உளறல்**

ஒரு தடவை அவர் மந்திரியாக இருக்கும் போதே சென்னைக்கு வந்துஇருந்த போது கீதை என்பது பைத்தியக்காரர்களின் உளறல் என்று கூறினார் பார்ப்பனர்களும் பத்திரிகைக்காரர்களும் கண்டித்தார்கள் தனிப்பட்ட அம்பேத்காராக இருந்து சொன்னால் பரவாயில்லை மந்திரியாக இருந்து கொண்டு இப்படிக்கூறலாமா என்று எல்லாம் கண்டித்தார்கள்.

அம்பேத்கார் மந்திரியாக இருப்பதினாலேயே அவரது கருத்துக்களை கூறக்கூடாது என்றால் எனக்கு அந்த பதவி பெரிதல்ல என்று கூறியவர் ஆவார்.

டாக்டர் அம்பேத்காருக்கு இருந்த தைரியம் யாருக்கும் கிடையாது. அவருக்கு இருந்த ஆராய்ச்சி அறிவு யாருக்கும் கிடையாது.

**சட்டத்தை எரிக்க வேண்டும்**

அரசியல் சட்டம் எழுதும் கமிட்டிக்கு இவரைத் தலைவராகப் போட்டார்கள். மொத்தம் 6 பேர்கள் அதில் இவரையும், ஒரு சாயபுவையும் தவிர மற்ற நான்கு மெம்பர்களும் பார்ப்பனர்கள். பார்ப்பனர்கள் மெஜாரிட்டியாக இருந்ததினால் தங் இஷ்டப்படி அரசியல் சட்டத்தை எழுதிக்கொண்டார்கள். அம்பேத்கார் அவர்களால் தடுக்க முடியவில்லை ஆனால் அதற்கு ஆட்சேபனை கூறியுள்ளார்.

அவர் ஒரு தடவை சென்னைக்கு வந்து இருந்தபோது கூறினார் நான்தான் அரசியல் சட்டத்தை எழுதியதாகவும் அதில் குறைபாடு இருக்கின்றதாகவும் கூறுகின்றார்கள் இப்படிப்பட்ட அரசியல் சட்டத்தை ஒழிக்கவேண்டும் எரிக்க எண்ணிக்கைக்குத் தக்கபடி கல்வி, உத்தியோகம், பதவி முதலியவைகளில் இடம் கிடைக்கச் செய்தவர்கள் என்று எடுத்துரைத்தார்.

நகர மன்ற உப தலைவர் திரு. சுப்பையாப்பிள்ளை அவர்கள் நன்றி கூறினார்.

---

ஆந்திரப் பிரச்னைக்கு

# பிரிவினைதான் ஒரே வழி

## மத்திய அமைச்சரிடம் வலியுறுத்தல்

ஐதராபாத், ஜூன் 14— ஆந்திரா பிரிவினைக் கருத்து நிராகரிக்கப்படவில்லை; பிரிவினை கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் மத்திய அமைச்சர் பந்தைச்சந்தித்த பிரிவினைக் குழுத் தலைவர் பாசிரெட்டி கூறினார்.

ஆந்திரப் பிரதேசத்தில் விரைவில் மீண்டும் அமைச்சரவை ஏற்படும் எண்ணத்தை மத்திய உள்விவகாரத் துணை அமைச்சர் பந்த் நேற்றுநிராகரித்தார். அத்தகைய அமைச்சரவையை ஏற்படுத்தும் தருணம் இன்னும் ஏற்படவில்லை என்று அவர் கூறினார்.

ஆந்திரப் பிரதேசத்தில் ஜனாதிபதி ஆட்சிக்கு முடிவுகாண மத்திய அரசாங்கம் ஆவலாக உள்ளது ஆனால் இதற்கு முன்னதாக அரசியல் சிக்கலுக்கு தீர்வுகாணவேண்டும். இந்தப் பெரும் பிரச்னைக்குத் தீர்வுகாணாமல் புதிய அமைச்சரவை ஏற்படுத்தி அதனிடம் பொறுப்பை ஒப்படைப்பது நியாயமற்றதாகும் என்று கூறினர்.

**[பிரி]வினையாளரின் [...]ம்**

[...]வரது ஐதராபாத் [...]ணம் தோல்வியாஎன்று [...]கப்பட்டது. பல்வேறு [...]துக்களை உடைய காங்கிரஸ்காரர்களை [...]று சேர்த்து நடை[...]றக்கு தீர்வு ஒன்று[...]ணுமாரேசெய்வதுதான் [...]து பணி என்று பந்த் [...]றிப்பிட்டார். சில காலத்[...]

மக்களின் உண்மையான நலனையும், உணர்ச்சிகளையும் அவர்கள் கருத்திற்கொள்ள வேண்டும். பெரிய இயக்கம் நடந்ததை நாம் மறந்து விடலாகாது என்றும் அவர் சொன்னார்.

முன்னாள் அமைச்சர்கள் நால்வர் உட்பட தெலுங்கானாவைச் சேர்ந்த 38 ஒருமைப்பாடு வாதிகள் பந்தைச்சந்தித்து மனு ஒன்றினைக் கொடுத்தார்கள். பிரதமரின் 5 அம்ச திட்டமே முல்கிப் பிரச்னைக்குச் சிறந்த முடிவு என்று அவர்கள் கூறினார்களாம்.

**பிரிவினை நிராகரிக்கப்படவில்லை**

ஆந்திராவில் அரசியல் பிரச்னைகளுக்கு நிரந்தரமான தீர்வு ஒன்றுகாணும் பொருட்டு இந்திய அரசாங்கத்துடனும், மத்திய தலைமையினருடனும் ஒத்துழைப்பதாக தனித் தெலுங்கானாவுக்கான காங்கிரஸ் கமிட்டித்தலைவர் சென்னாரெட்டி மத்திய அமைச்சரிடம் தெரிவித்தார்.

மத்திய அமைச்சருடன் அவர் ஒருமணிநேரம்பேச்சு நடத்தினார். தாறுமாறான, ஏற்பாடு எதுவும் மேலும் குழப்பத்தினையும், தொல்லையும் தான் உண்டு பண்ணும் என்று பந்திடம் அவர் கூறினாராம்.

இந்த விஷயத்தில் மத்திய தலைமையினர் திறந்த மனதுடன் இருக்கிறார்கள். கூடிய விரைவில் தீர்வுக்கான அவலாயிருக்[...]

---

# ரூ. 21 கோடிக் ரெடிமேட் ஆ[டை] ஏற்றுமதி உய[ர்வு]

புதுடில்லி, ஜூன் 14— ரெடிமேட் ஆடைகளின் ஏற்றுமதி விரைவாக அதிகரித்துள்ளது 1971-72- ஆம் ஆண்டில் 15 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஆடைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. 1972–73-ல் இது 21 கோடியே 24 லட்சம் ரூபாயாக உயர்ந்தது.

இந்தியாவில் ஏற்றுமதி செய்யப்படும் ரெடிமேட் ஆடைகள் உற்பத்தியில் 160 சிறுதொழில்நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. 1968–69-ஆம் ஆண்டில் ரூ 5 கோடியே 65 லட்சம் மதிப்புள்ள ஆடைகள் ஏற்றுமதிசெய்யப்பட்டன.

**அபிவிருத்திப் பொறுப்பு**

மாதிரி உற்பத்திக்கு குறிப்பிட்ட அளவு துணிகள் இறக்குமதி செய்யவும் ஏற்றுமதிக்கான ரெடிமேட் ஆடைகள் உற்பத்தி செய்வதற்காக செயற்கை துணிகள் இறக்குமதி செய்யவும் இந்த யூனிட்டுகளுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

ஆடை ஏற்றுமதியை அதிகரிக்க ஒருங்கிணைந்த முறை ஒன்றை அபிவிருத்திசெய்யும்பொறுப்பு பருத்தி ஜவுளி ஏற்றுமதி அபிவிருத்தி சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வர்த்தக அபிவிருத்தி சபையும் அமெரிக்காவில் அங்காடி ஆராய்ச்சிக்கான விஷயங்களில் ஒன்றாக ரெடிமேட் ஆடை ஏற்றுமதியை ஏற்றுக்கொண்டுள்ளது.

---

# கேரளமுதல்வரின் சுயமரியாதை உணர்வு

திருவனந்தபுரம், ஜூன் 14— அமெரிக்காவிலிருந்து தானியம் இறக்குவதற்குப் பதில் மக்கள் வயிற்றை இறுக்கி சிக்கனம் செய்து ரேஷன் வெட்டை சமாளிக்க முன்வரவேண்டும் என்று கேரள முதல்வர் அச்சுதமேனன் இங்கு கூறினார் பி எல்.480ஏற்பாட்டின் கீழ் உணவு தானியம்இறக்குமதி செய்வதை எல்லா ஜனநாயக முற்போக்குக் கட்சிகளும் எதிர்த்துள்ளன. சுயமரியாதையுள்ள யாரும் அந்த தானியத்தை வாங்கிக் கொள்ளமாட்டார்கள் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

# சுவரன்சிங்- இலங்கை அதிகாரிபேச்சு

புதுடில்லி, ஜூன் 14— இந்து மகாசமுத்திரத்[...]

---

# இலங்கை[...] புதிய தலை[...]

கொழும்பு[...] காமன்வெல்[...]

# [வ]ங்கதேச[...] ரயில்கட்[டண] உயர்வு

டாக்கா[...]

# இந்திய-பா[...] பேச்[சு]

# கேரளாவில் அரசியல் [...] அதிகாரிப்பு

திருவனந்தபுரம்[...] 1972 வரை[...]

கொள்கின்றேன், உங்கள் வரவேற்பு, புகழ் உரைகளுக்கு அருகதை உடையவன் அல்ல என்றாலும் உங்கள் அன்புக்கு, நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். சமுதாய அமைப்பிலே மனிதர்களுக்கு பொதுத் தொண்டு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டதாலும் அவர் அவர் பெண்டு பிள்ளை வாழ்க்கை இதுகளிலேயே வாழ்வு இணைக்கப்பட்டு விட்டதாலும் பொதுத்தொண்டு செய்கின்றவர்கள் சுருங்கிவிட்டார்கள். உண்மையான பொதுத் தொண்டுக்கு ஆளே இல்லாமல் போய் விட்டது,

மனிதன் என்றாலே பொதுத்தொண்டுக்கு அருகதை உடையவன் என்பதும் சமுதாயப் பிராணி என்பதும் தான் உண்மை என்றாலும் அவனை பொதுத் தொண்டுக்கு லாயக்கு அற்றவனாக சுற்றுச் சார்பு ஏற்படுத்தி விடுகின்றது எப்படி 2000, 3000 ஆண்டுகளுக்கு முன்பு ஜாதிப் பிரிவுகளை ஏற்படுத்தி அதனை நசித்துவிடாமல் பாதுகாத்து வந்தார்களோ அதுபோல ஆணுக்கும் பெண்ணுக்கும் சேர்ந்து வாழவேண்டும் குட்டி போடவேண்டும். அதுகளை பாதுகாக்க வேண்டும். அதுதான் வாழ்க்கை என்று ஆக்கிவிட்டார்கள் மனிதன் இன்னும் 50 ஆண்டுகளில் 150 ஆண்டுகள் வாழப்போகிறவர்கள் ஆவார்கள். இப்படிப்பட்ட மனித சமுதாயத்திற்கு தொண்டு செய்ய வகையற்றவர்களாக நமது மக்கள் இருக்கின்றார்கள்.

இப்படிப்பட்ட சமுதாயத்தில் யாராவது இப்படி பொதுத்தொண்டு செய்ய முன் வந்தால் அதிசயமாக உங்களுக்குத் தோன்றுகின்றது.

பொதுத் தொண்டுகாரர்களுக்கும் பெண்டு, பிள்ளை. குடும்பபாரம் ஏற்பட்டு விட்டால் அவர்களில் யோக்கியமாகவும் முழுமையாகவும், உண்மையாகவும் பொதுத் தொண்டு செய்ய முடியாது. இப்படிப்பட்ட மக்களுக்கு கடவுள், மதம் பற்றிய பற்று இருந்து விடுமானால் சுத்த சுத்தமாக பொதுத்தொண்டு செய்ய அவனுக்கு வாய்ப்பே இருக்காது

நான் சமுதாயத் தொண்டு செய்கின்றேன் ஜாதி ஒழிக்க பாடுபடுகின்றேன் என்றால் இது என்ன அதிசயமானதும், அசாத்தியமானதும் ஆன காரியம் ஆகும்? சொந்த தொல்லையை குறைத்துக் கொண்டால் எல்லாராலும் முடியும், துணிவுதான் வேண்டும்.

நாட்டில் அரசியல்கட்சிகள் ஒழுக்கம், நாணயம் ஏற்பட வகை இல்லாமல் மக்கள் சமுதாயத்தைச் செய்து விட்டார்கள்.



எனது தொண்டு நான் முன்பு கூறியது போல சமுதாயத் தொண்டு தான் ஆகும் சமுதாயத்தில் ஜாதிகள், மதம் அற்றமக்களாக மக்கள் ஒன்றுபட்டு வாழ வேண்டும். அறிவு தெளிவு உள்ள மக்களாக மூ டநம்பிக்கையற்று வாழ வேண்டும் என்பது தான் ஆகும்.

அடுத்து ஒப்பில்லாத அறிவாளி டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்து வைக்கும் பெருமைக்கு உரிய பணியை அளித்து உள்ளார்கள்.

இந்தியா முழுவதிலும் அம்பேத்கர் போல படித்தவர் அறிவாளி, துணிவுள்ளவர் சாதிக்க முடியாத காரியத்தைச் சாதித்தவர் அம்பேத்கர் தவிர வேறு யாருமே இல்லை என்று கூறவேண்டும். சமுதாய முன்னேற்றத்திற்கு அவர் முயற்சி எடுத்துக் கொண்டு ஆற்றிய பணியும், சாதனையும் யாரும் செய்யாத சாதனையாகும் அவர் ஜாதி ஒழிப்புக்காக வடநாட்டில் உண்மையாகப் பாடுபட்டவர்.

அம்பேத்கர் காந்தியையே கடுமையாகக் கண்டித்தவர் ஆவார். ஒரு தடவை சீமையில் நடந்த மாநாட்டில் நான் இந்துக்களின் பிரதிநிதி என்று ஆரம்பித்தார். உடனே அம்பேத்கர் நீங்கள் இந்துக்களுக்கு பிரதிநிதியே தவிர எங்களுக்குப் பிரதிநிதி அல்ல என்று கண்டித்தார்.

காந்தியார் மேலும், பேசிக்கொண்டு வந்த போது தாம் இந்துக்களின் பிரதிநிதி என்று மீண்டும் ஆரம்பித்தார். உடனே அம்பேத்கர் நீங்கள் இந்துக்களின் பிரதிநிதியே ஒழிய தாழ்த்தப்பட்டவர்கள் பிரதிநிதி அல்ல என்று பல தடவை கூறியும் நீங்கள் நான் தான் தாழ்த்தப்பட்டோர் பிரதிநிதி என்று கூறுவது என்ன நியாயம் என்று கேட்டார்.

ஒரு தடவை அவர் மந்திரியாக இருக்கும்போதே சென்னைக்கு வந்து இருந்தபோது கீதை என்பது பைத்தியக்காரர்களின் உளறல் என்று கூறினார். பார்ப்பனர்களும் பத்திகைக்காரர்களும் கண்டித்தார்கள். தனிப்பட்ட அம்பேத்காராக இருந்து சொன்னால் பரவாயில்லை மந்திரியாக இருந்து கொண்டு இப்படிக் கூறலாமா என்று எல்லாம் கண்டித்தார்கள்.

அம்பேத்கர் மந்திரியாக இருப்பதினாலேயே அவரது கருத்துகளை கூறக்கூடாது என்றால் எனக்கு அந்த பதவி பெரிதல்ல என்று கூறியவர் ஆவார்.

டாக்டர் அம்பேத்கருக்கு இருந்த தைரியம் யாருக்கும் கிடையாது. அவருக்கு இருந்த ஆராய்ச்சி அறிவு யாருக்கும் கிடையாது.

அரசியல் சட்டம் எழுதும் கமிட்டிக்கு இவரைத் தலைவராகப் போட்டார்கள். மொத்தம் 6 பேர்கள் அதில் இவரையும், ஒரு சாயபுவையும் தவிர மற்ற நான்கு மெம்பர்களும் பார்ப்பனர்கள். பார்ப்பனர்கள் மெஜாரிட்டியாக இருந்ததினால் தங்கள் இஷ்டப்படி அரசியல் சட்டத்தை எழுதிக் கொண்டார்கள். அம்பேத்கர் அவர்களால் தடுக்க முடியவில்லை. ஆனால் அதற்கு ஆட்சேபனை கூறியுள்ளார்.

அவர் ஒரு தடவை சென்னைக்கு வந்து. இருந்தபோது கூறினார். நான் தான் அரசியல் சட்டத்தை எழுதியதாகவும் அதில் குறைபாடு இருக்கின்றதாகவும் கூறுகின்றார்கள். இப்படிப்பட்ட அரசியல் சட்டத்தை ஒழிக்கவேண்டும், எரிக்க வேண்டும் என்கின்ற நிலை வருமானால் எரிக்கின்றதில் நான் தான் முதல் ஆளாக இருப்பேன் என்று துணிந்து சொன்னார்.

சாஸ்திரங்களை, வேதங்களை, பார்ப்பனர்களை மிக மிக வன்மையாகக் கண்டித்தவர்.

தாழ்த்தப்பட்ட மக்களின் எண்ணிக்கைக்குத் தக்கபடி கல்வி, உத்தியோகம், பதவி முதலியவைகளில் இடம் கிடைக்கச் செய்தவர்கள் என்று எடுத்துரைத்தார்.

**- 'விடுதலை', 14.06.1973**

■



பதிவு எண்: 4789 டெலிஃபோன்: 34898

தமிழ்நாடு தமிழருக்கே

விடுதலை

VIDUTHALAI LEADING TAMIL DAILY

மலர் 35) சென்னை திங்கள் (1—1—73) வெளியூர் செவ்வாய் (2—1—73)

பரிதாபி ஆண்டு மார்கழி 18 4 பக்கங்கள் விலை 12 காசுகள் (இதழ் 208)

நாளை இதழில் - -

"மாணவர்கள் காலித்தனத் தனத்திற்கு காரணம் கல்வித் திட்டமே" என்ற தலைப்பில் தந்தை பெரியார் அவர்கள் எழுதும் கருத்துக் கருவூலமான தலையங்கம் நாளை இதழில் வெளிவருகிறது.

தந்தை பெரியா
புத்தாண்டு செய்

சென்னை, ஜன.

1972-ஆம் ஆண்டு முடிந்து, 1973-ம்
இன்று தொடங்குகிறது. தமிழினத் தலைவர்
பெரியார் அவர்கள் விடுத்துள்ள புத்தாண்டு
வருமாறு:-

"1972-ல், மக்களுக்கு எவ்வித குறைவும்
மல் உணவு, கல்வி, வாழ்க்கை வசதி ஆகியவ
நம்முடைய தமிழக அரசு செய்து கொடுத்தது,
மன நிறைவோடு வாழ்கிறார்கள்,

ஆனால், நம் அரசின் மீது பொறாமை

# 58

# இழிவை ஒழிக்க கிளர்ச்சி செய்யாமல் பதவிக்குப் போகக் கிளர்ச்சி செய்வதா?

- **பூண்டி பகுத்தறிவாளர் கழக விழாவில் அரசியல் லாப வேட்டைக்காரர்களுக்கு தந்தை பெரியார் கேள்வி**

பெருமைக்குரிய தலைவர் அவர்களே! தாய்மார்களே! பெரியோர்களே!

இன்றைய தினம் எனது பிறந்த நாள் விழாவைப் பெருமைப்பட நடத்தியுள்ளீர்கள்.

கடந்த ஆண்டும் இங்கு நான் வந்து இருக்கிறேன், அந்த நிகழ்ச்சிகளை எல்லாம் படம் பிடித்து எனக்கு இன்று போட்டும் காட்டினார்கள்.

நல்ல முயற்சியோடு பகுத்தறிவாளர் கழகத்திற்கு ஓர் இடத்தையும் ஏற்பாடு செய்து அங்கு நூல் நிலையத்தையும் ஏற்படுத்தியுள்ளீர்கள்.

இங்கு **அம்பேத்கர் படமும், அண்ணா படமும்** திறந்து வைக்கப்பட்டன.

டாக்டர் அம்பேத்கர் அவர்கள் தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கு மரியாதையைத் தேடி தந்தவர் இருந்த போதிலும் தாழ்த்தப்பட்ட மக்கள் அவரது இலட்சியத்தை பின்பற்றினார்கள் என்று சொல்ல முடியாது.

அவருடைய கருத்தை பின்பற்றி இருந்தால் நாட்டில் ஒருவர் கூட மூடநம்பிக்கையாளனாக இருக்க முடியாது.

ஆதித் திராவிடர்களைப் போலவே மற்றவர்களும் மூடநம்பிக்கைகளில் மூழ்கிக் கிடக்கிறார்கள் ஆதித் திராவிட



சென்னை 13-10-73 விடுதலை வெள்ளியூர் 14-10-73

# இழிவை ஒழிக்க கிளர்ச்சி செய்யாமல் பதவிக்குப் போகக் கிளர்ச்சி செய்வதா?

பூண்டி பகுத்தறிவாளர் கழக விழாவில் அரசியல் லாபவேட்டைக்காரர்களுக்கு

## தந்தை பெரியார் கேள்வி

பூண்டி, அக். 13- சுதந்திரநாடாம் இது. இங்கே இன்னும் 'சூத்திரன்' இருந்து கொண்டிருக்கிறான். இந்த இழிவை ஒழிக்கக் கிளர்ச்சி செய்யாமல், பதவிக்குப் போகக் கிளர்ச்சி செய்து கொண்டிருப்பதா என்று தந்தை பெரியார் அவர்கள் கேட்டார்கள்.

அமைச்சர் மாண்புமிகு என் வி நடராசன் அனுப்பிவைத்த வாழ்த்துச் செய்தி

தபால் தலைக்கு பதில் கட்டணம்

தஞ்சைக் கோயில் பூஜை நிறுத்தப்பட்டது

தென்னாற்காட்டில் கால் நடை இன்சூரன்ஸ்

தந்தை பெரியார் அவர்களுக்கு புது வேன் அன்பளிப்பு

நன்கொடையாளர் பட்டியல்

மக்களுக்காவது மாற்றம் பெறுவதற்கு அதில் சமுதாய வாய்ப்புக்கள் கிடையாது. மற்றவர்களுக்கு எவ்வளவோ வாய்ப்பு இருந்தும் அதைப் பயன்படுத்திக் கொள்வது கிடையாது.

உலகத்திலேயே வேறு எங்கும் இல்லாத அளவு நாம் கடவுளாலும், மதத்தாலும், சாத்திரத்தாலும் இழிஜாதி மக்களாக இருக்கிறோம்.



நம் தாய்மார்கள் எல்லாம் விபசாரிகளாக இருக்கிறார். இதைவிட மானக்கேடு நமக்கு என்ன வேண்டும்?

இந்து என்ற வார்த்தைக்கே – இந்து என்று ஒப்புக்கொள்ளும் தன்மைக்கே என்ன அர்த்தம்? நாம் நாலாவது ஜாதி என்று நாமே ஒப்புக் கொள்கிறோம் என்று அர்த்தம். அது மட்டுமல்ல – நாம் இந்து அல்ல என்று சொல்லிக் கொண்டாலும் பகுத்தறிவுவாதி என்று சொல்லிக் கொண்டாலும், கடவுளை செருப்பாலடித்தவன் என்று சொல்லிக் கொண்டாலும் அவன் எல்லாம் சட்டப்படி இந்துதான். நம்முடைய அரசியல் சட்டத்தில் அப்படித்தான் எழுதி வைத்துள்ளார்கள்.

கிறித்தவன், முஸ்லீம் அல்லாதவன் அத்துணைப் பேரும் இந்துதான் இந்திய அரசியல் சட்டம் அப்படித்தான் கூறுகிறது.

ராஜாவாக ஆனாலும் சேரி பண்டார சன்னதியாக இருந்தாலும் சரி, கோயிலுக்குப் போகிறவன் அத்துணைப் பேரும் தன்னை 'இழி ஜாதி – பார்ப்பானின் வைப்பாட்டி மகன்' என்று தானே ஒப்புக் கொள்வதாக தான் அர்த்தம்?

வெள்ளைக்காரன் இருக்கிற வரைக்குமாவது நம்மை மனிதனாக நடத்தினான்.

இங்கு பாழாய்ப் போன சுயராஜ்யம் வந்ததுதான் வந்தது நம்மை எல்லாம் அசைக்க முடியாத சூத்திரனாக – இழிமக்களாக ஆக்கி விட்டான்.

சுதந்திர நாட்டில் சூத்திரன் என்றால் இதை விட வெட்கக்கேடு ஒன்று உண்டா?

இதைப் பற்றி எவன் சிந்திக்கிறான்? அவனவனுக்கு மந்திரி பதவிதானே குறி? எவனுக்கு உறுத்துகிறது?

நாலாயிரம் பேர், அய்யாயிரம் பேர் போராட்டம் நடத்தி ஜெயிலுக்குப் போனதாகப் பத்திரிகைகளில் இன்றைக்குச் செய்தி வந்துள்ளது?

என்ன தேவையான கிளர்ச்சி அது. மனிதன் இங்கு நாலாஞ்சாதி மகனாக இன்றைக்கும் இங்கு வாழ்கிறான் – இதைப் போக்கிக்கொள்ள





கிளர்ச்சி செய்ய எவனும் வரமாட்டேன் என்கிறான். அவனவனுக்குப் பதவிக்குப் போகும் நோக்கத்தோடு கிளர்ச்சி செய்கிறான்.

தன்னை இழிந்த ஜாதி என்று சொல்லிக்கொண்டு மந்திரியாக வேண்டுமா? பார்ப்பானுக்கு வைப்பாட்டி மகன் என்பதை ஒப்புக் கொண்டு பதவி சுகம் அனுபவிக்க வேண்டுமா?

நம்முடைய நாட்டின் கேவலம் எந்த அளவுக்குப்போய் இருக்கிறது பாருங்கள். திருப்பதிக்கு மூன்று லட்சம் நான்கு லட்சம் மக்கள் போனார்கள் என்று பத்திரிகையில் எழுதுகிறான்.

இது எவ்வளவு கேவலம்? அந்த மூன்று லட்சம் பேரும் தங்களை வைப்பாட்டி மக்கள் என்று ஒத்துக் கொண்டதாகத் தானே அர்த்தம்?

போகிறவன் தேங்காய், பழம் கொடுப்பதற்குப் பதிலாக விளக்குமாற்றால் அந்த சாமியை நாலு சாத்து சாத்தினால்தானே நமக்குப் புத்தி இருக்கிறது உணர்ச்சி இருக்கிறது என்று அர்த்தம்?

பகுத்தறிவாளர் கழகம் என்றால் என்ன? மனினுக்கு பகுத்தறிவையும் மான உணர்வையும் ஊட்டுவதுதானே!

பேருக்குப் பகுத்தறிவு கழகம் வைத்தால் போதாது. மக்களுக்கு அறிவு உண்டாகிற மாதிரி காரியங்கள் செய்ய வேண்டும்.

சேலத்திலும் மதுரையிலும் கடவுள் உருவங்களை செருப்பால் அடித்தோம். இருந்தாலும் நாம் எல்லாம் இந்துக்களாம். எவ்வளவு கேவலம்? எவ்வளவு இழிவு நிலை? எவ்வளவு காட்டுமிராண்டித்தனமான – கொடுமையான ஆட்சியின்கீழ் நாம் இருக்கிறோம்.

நமக்கு மந்திரி பதவியோ கவர்னர் பதவியோ தேவையில்லை. நமக்குத் தேவை எல்லாம் நமது இன இழிவு ஒழிப்பே.

இந்த ஆட்சியால் முடியாது என்றால் இந்த ஆட்சியை ஒழித்துக்கட்ட வேண்டியதுதான். ஒழித்து விட்டு என்ன செய்வாய்?

துலுக்கனையோ, ருசியக்காரனையோ, ஜெர்மன்காரனையோ, ஜப்பான்காரனையோ கூப்பிட்டுக் கொள்ள வேண்டியதுதான் நம்மை



இழி ஜாதி என்று சொல்லாதவன் எவனாவது ஆண்டு விட்டுப் போகட்டுமே!

நம்முடைய நாடு எந்த அளவுக்குக் கேவலமாக இருந்தது என்றால் பெற்ற அப்பன் மகளுக்கு ஆட்கொண்டு வந்து விடுவான். மகள் கொடுக்கிற கடுதாசியை எவனுக்கோ கொண்டு போய் கொடுப்பான். இவை எல்லாம் தேவதாசி என்ற முறையால் நம் நாட்டில் நடந்து வந்தது தானே?

சாத்திரப்படி மதத்தர்மப்படி இவை எல்லாம் அனுமதிக்கப்பட்டு நடைமுறையில் இருந்ததா இல்லையா? நாங்கள் தலை எடுத்துத் தானே அதை ஒழித்துக் கட்டினோம்? இல்லை என்று சொல்ல முடியுமா?

அதுமட்டுமல்ல. நமது இயக்கம் துவக்கம் வரை இந்த நாட்டில் கல்வி, உத்தியோகம் எல்லாம் பார்ப்பான் பக்கமே இருந்தது.

நாம் தலை எடுத்ததற்குப் பிறகு தலைகீழ் மாற்றம் ஏற்பட்டு இருக்கிறதா இல்லையா? இந்த மாற்றம் எதற்குப் பயன்பட்டது? அவனவன் உத்தியோகங்களை அனுபவிப்பது - பதவிகளை அனுவிப்பது என்றாகி விட்டதே தவிர இன இழிவு ஒழிய வேண்டும் என்ற உணர்ச்சி எத்துனைப் பேருக்கு வந்திருக்கிறது?

இன்றைக்கு இருக்கிற அரசாங்கம் திராவிடர் கழகத்தில் இருந்து முளைத்தது என்று பேரு, இவன்தான் என்ன செய்கிறான்? இலட்சக்கணக்கில் பணத்தைப் போட்டு இடித்து கிடந்த கோயில்களை எல்லாம் புதுப்பிக்கிறானே என்ன அர்த்தம்? கேட்டால் ஓட்டு என்கிறான். ஓட்டு வந்தால் போதுமா? இழிவு ஒழிய வேண்டாமா?

மனிதன் என்றாலே பகுத்தறிவு உள்ளவன் என்றுதான் பொருள். ஆனால் அந்த பகுத்தறிவை எல்லாவற்றிற்கும் பயன்படுத்துகிறானா?

சாப்பிடுவதில், உடை உடுத்துவதில் பதவிகளை அனுபவிப்பதில் எல்லாம் பகுத்தறிவை தாராளமாக உபயோகப்படுத்துகிறோம். ஆனால் கடவுள், மத விஷயங்களில் உபயோகப்படுத்துகிறோமா?

எதிலே பகுத்தறிவைப் பயன்படுத்தினாலும் கடவுள் மத விவகாரங்களில் அதைப் பிரயோகிக்கக் கூடாது என்று சாத்திரங்களில் எழுதி வைத்து இருக்கின்றான். அதை நம்பி நம்பிதான் இந்த அளவுக்கு இழி நிலை அடைந்து விட்டோம்.

நம்முடைய பகுத்தறிவாளர் கழகங்களின் வேலை எல்லாம் எதுவாக இருக்க வேண்டும் என்றால் எல்லாத் துறைகளிலும் எதிலுமே பகுத்தறிவைப் பயன்படுத்தும்படியாக மக்களைத் தூண்டச் செய்வதே ஆகும்.

கடவுளைத்தான் கற்பித்தானே – அதிலாவது ஏற்றத்தாழ்வு இல்லாமல் இருகிறதா?

ஒரே கல்லுதான் திருவண்ணாமலையிலும் – அதே கல்லுதான் பழனியிலும், அதே கல்லுதான் திருப்பதியிலும், அந்தக் கல்லுக்குள்ளேயே சக்தி வித்தியாசத்தைக் கற்பித்து இருக்கிறானே – அது என்ன நியாயமா?

கல்லையும் செதுக்கி வைத்து விட்டு அசற்கு ஆறு வேளை சோறு என்கிறான்? அது எல்லாம் எவன் வயிற்றை அடைக்க? அந்த பார்ப்பானின் பெண்டாட்டிப் பிள்ளைகளின் வயிற்றில் அடைக்கத் தானே!

கடவுள் உருவம் இல்லை என்கிறான். ஆனால் வீதி தோறும் கோயிலை கட்டி உருவத்தை செதுக்கி வைக்கிறானே!

இரக்கமே உருவானவன் என்கிறான் பின் என்னத்துக்கு அவன் கையில் அரிவாள், கொடுவாள், வேலாயுதம், கத்தி, வில், ஈட்டி இவையெல்லாம்? கருணையின் அடையாளங்களா?

ஒன்றும் வேண்டாதது என்கிறான். ஒன்றும் வேண்டாத சாமிக்குப் பெண்டாட்டி எதற்கு? அதுவும் வருசா வருடம் கல்யாணம் எதற்கு?

போன வருஷம் கட்டின பெண்டாட்டி என்னாயிற்று? எவன் அடித்து கொண்டு போனான்? என்ன சீக்கு வந்து செத்துப் போய் விட்டாள்? எந்த ஆற்றிலே குளத்திலே வீழ்ந்து செத்துப் போனாள்? கோயிலுக்குப்

போகிற மடப் பயல் இதை எல்லாம் கேட்க வேண்டாமா? கோயிலும் மடங்களும் உண்டானதே கடவுளைக் காப்பாற்றத்தானே.

எல்லாம் வல்லவன் கடவுள் என்றால் அவனால் பிரச்சாரம் செய்து தான் காப்பாற்ற வேண்டும் என்றால் என்ன கேவலம்?

இந்த நிறுவனங்கள் எல்லாம் இல்லை என்றால் கண்டிப்பாக ‘கடவுள்’ செத்துப்போய்விட்டது என்று அர்த்தம்.

இந்த கடவுள் சங்கதி எல்லாம் ஈராயிரம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே தோற்றுவிக்கப்பட்டது.

வந்த முட்டாள் ராஜா எல்லாம் அதைக் காப்பாற்றி வந்து விட்டான். மற்ற சங்கதிகள் எல்லாம் மாறுதல் அடைந்தும் கடவுள் சங்கதி மட்டும் மாற்றம் அடையாததற்கு இதுதான் காரணம். திட்டமிட்டு ‘கடவுளை’ காப்பாற்றி வந்து இருக்கிறான்.

மனித அறிவு பொதுவாக உலகில் வளர்ந்தே வருகிறது. கிறித்து பிறந்த ஆண்டில மனிதனின் சராசரி வயது அய்ந்தே அய்ந்துதான். இன்றைக்கு அது எப்படி அறுபது எழுபது என்று வளர்ந்தது? மனித அறிவு வளர்ச்சி தானே. இன்னும் மனிதன் சாகவேண்டிய அவசியமே இல்லை என்கிற நிலை கூட ஏற்படலாம்.

இன்றைக்கு இங்கு ஒரு கருவியை எனக்குக் காண்பித்தார்கள். சாதாரணமாக டேப்ரிக்கார்டு என்றால் பேச்சை மட்டும் தான் பதிவு செய்யும். இவர்கள் எனக்குக் காண்பித்த அந்த மெஷின் பேச்சோடு நடிப்பையும் உடல் அசைவுகளையும் படம் எடுக்கும். இவை எல்லாம் எவ்வளவு பெரிய அறிவு மலர்ச்சி - வளர்ச்சி.

இந்த யுகத்திலும் நாம் நாலாஞ்சாதி என்றால் என்ன கேவலம்? இதை மந்திரி பதவி பெறுவதனால் ஒழிக்க முடியாது?

உயிரைக் கொடுத்துப் போராடியாவது ஒழித்தாக வேண்டும். இந்த ஆட்சி இதற்கு எதிராக இருந்தால் அதை ஒழித்துத்தான் தீரவேண்டும்.

நம்முடைய இழிவுகளை ஒழிக்கும் ஆட்சி அந்நிய ஆட்சியாக இருந்தாலும் அதை வரவேற்க வேண்டும்.

இந்த ஆட்சியே ‘இங்கு பிராமணன் கிடையாது - சூத்திரன் கிடையாது’ என்று நாளைக்கே சட்டம் கொண்டு வந்தால் நமக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை ஆதரிக்கத் தயாராக இருக்கிறேன்.

கடைசியாக ஒன்று கேட்டுக் கொள்கிறேன்; நீங்கள் எவரும் கோயிலுக்குப் போகக்கூடாது. நெற்றியில் நாமமோ, சாம்பலோ பூசிக் கொள்ளக்கூடாது. பண்டிகைகள் கொண்டாடக் கூடாது. நமது கடவுள்கள் எல்லாம் ஒழுக்கக் கேடானவை நம்முடைய சாத்திரங்கள் எல்லாம் நம்மை இழிவு ஜாதி என்று கூறுபவை.

நம்முடைய புராணங்கள் எல்லாம் ஆபாசமானவை இவற்றை எல்லாம் நீங்கள் புறக்கணிக்க வேண்டும். நான் கூறுவது உங்களுக்கு சரி எனப்பட்டால் அவற்றை எல்லாம் உங்கள் குழந்தைகளுக்கும் எடுத்துக்கூறி திருத்த வேண்டும்” என்று எடுத்துரைத்தார்.

**- ‘விடுதலை’, 13.10.1973**

■.

பகுத்தறிவு,
சமூகநீதி,
வாழ்வியல்
அறிய
படியுங்கள்,
படியுங்கள்...

www.viduthalai.in



ஓராண்டுக்கான சந்தா நன்கொடை ...

| விடுதலை | உண்மை | பெரியார் பிஞ்சு | The Modern Rationalist |
|---|---|---|---|
| ரூ.1800 | ரூ.350 | ரூ.240 | Rs.300 |

இணையதளம் மூலமாகவும் சந்தாதாரர் ஆகலாம் ...

http://viduthalai.in/subscription என்ற இணையதளத்தில் Payment Gateway மூலம் Credit Card / Debit Card / Net Banking -அய் பயன்படுத்தி எளிதில் சந்தா செலுத்தலாம்.

நேரடியாக வங்கிக் கணக்குகளிலும் சந்தா செலுத்தலாம் ...

| | | | | |
|---|---|---|---|---|
| A/C Name | VIDUTHALAI | UNMAI | PERIYAR PINJU | THE MODERN RATIONALIST |
| Bank | INDIAN OVERSEAS BANK, Vepery | INDIAN OVERSEAS BANK, Vepery | INDIAN OVERSEAS BANK, Vepery | INDIAN BANK, Ethiraj Salai |
| Current A/C No. | 232002000000002 | 232002000000003 | 232002000000004 | 422157838 |
| IFS Code | IOBA0002320 | IOBA0002320 | IOBA0002320 | IDIB000C032 |

முக்கிய குறிப்பு : வங்கியில் சந்தாத்தொகை செலுத்தியவுடன் சென்னை 'விடுதலை' அலுவலகத்திற்கு **97109 44815** என்ற கைப்பேசி எண்ணுக்கு தொடர்புகொண்டு சந்தா விவரத்தினை சொல்லவும்.

மேலாளர், 'விடுதலை' பெரியார் திடல், 84/1(50), ஈ.வெ.கி.சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை-600 007. தொலைப்பேசி : 044-2661 8161, 62, 63
கைப்பேசி: 97109 44813, 97109 44842, 97109 44819 • மின்னஞ்சல் : circulation.viduthalai@gmail.com



டாக்டர் அம்பேத்கர் அவர்கள் இந்து மதக் கொடுமைகளைக் குறித்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"ஒடுக்கப்படுவதற்கும், உயர்வு - தாழ்வு கற்பிப்பதற்கும் பிறப்பிடமானது இந்து மதம். எனவே, அதைவிட்டு வெளியேறினேன்; இன்றுதான் நான் மறுபிறப்படைந்தேன்.

"எனக்கு அவதாரங்களில் நம்பிக்கையில்லை.

"புத்தர் விஷ்ணுவின் அவதாரம் என்று சொல்வது தவறு - விஷமத்தனமாகத் திருத்திக் கூறுவதாகும்,

"இனி நான் எந்த இந்துக் கடவுளையோ கடவுளச்சியையோ வணங்கப் போவதில்லை.

"நான் இனிமேல் 'சிரார்த்தம்' (இறந்தவர்களுக்கு என ஆண்டுதோறும் பார்ப்பனர்களுக்கு அரிசி, பருப்பு, காய்கறிகள் வழங்குதல்) செய்யமாட்டேன்.

"நான் ஜாதி வித்தியாசத்தை வெறுத்து மனித சமுதாயத்தின் சமத்துவத்திற்காகவே பாடுபடுவேன், புத்தரின் எட்டுக் கொள்கைகளை நான் கண்டிப்பாகப் பின்பற்றுவேன்."

**- 'விடுதலை', 16.10.1956**

9 997720 146846

நன்கொடை : ரூ.220/-